உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கோயில்

பதிப்பாசிரியர்

சோமலெ

சோமு நூலகம்

சாஸ்திரி நகர் அஞ்சலகக் கட்டடம்
சென்னை - 600 020

1979 டிசம்பரில் வெளியிடப் பெற்றது

விலை ரூ. 30

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
சென்னை-14.

33/2


அன்புக் காணிக்கை

கருமுத்து தியாகராசச் செட்டியார்

16—6—1893 ;: 29—7—1974

கலைத்தந்தை தியாகராசர்
கவிஞர்ந்த பண்பாளர்
நிலைத்தபுகழ்ச் சிவநெறியில்
நிகரற்ற பற்றுடையார்
தலைமகனுய்க் கல்விக்கும்
தமிழுக்கும் பணிபுரிந்தார்!
கலைநுட்பம் மிகவுடைய
கலைத்தந்தை புகழ்வாழ்க!

—கவிஞர் டாக்டர் தமிழண்ணல்



அம்மையும் அப்பனும் ஆடுகின்றதனால்
மன்னுயி ரெல்லாம் வாழ்கின்றனவே!
எங்கும் சிதம்பரம் எங்கும் சிவசக்தி
தங்குகின்றதனால் தரணி தழைக்குமே.

தருமையாதீனம்
26-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அவர்களின் வாழ்த்து

உ

குருபாதம்

"ஞாலம்நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

தில்லைப் பெருங்கோயில், பாடல்பெற்ற சிவத் தலங்களில் முதன்மை பெற்று இலங்குவது. இங்கு மூலவர் வீற்றிருக்கும் மூலட்டான ஈசுவரமே இப் பெருங்கோயிலின் மூலக் கோயிலாகும். புகழ்மிக்க இச் சிவாலயத்தைப் பெரும் பொருட் செலவில் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகமும் செய்திருப்பவர் நமது அன்பர் மதுரை கருமுத்து சொக்கலிங்கம் ஆவார்கள். இவ்விழாவைத் தொடர்ந்து கோயிலின் அருமை பெருமைகளையும் வரலாற்றையும் ஆதாரமாகவும் விரிவாகவும் வெளியிட இவர்கள் மேற்கொண்டிருக்கும் முயற்சியை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் மதுரைப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் நள ஆண்டு மார்கழித் திருவாதிரை நாள் தொடங்கிப் பிங்கள ஆண்டு

மார்கழித் திருவாதிரை நாள் முடிய நாடோறும் நீராடி அங்கயற் கண்ணி சமேத சொக்கலிங்கப் பெருமானை அர்ச்சித்து வழிபடும் நோன்பினைத் திருவிளையாடற் புராண வாக்கின்படி மேற்கொண்டு இனிது நிறைவேற்றியவர். உறுதியுடையாரானன்றி, மற்றவர் களால் இச்செயல் இயலாது.

நமது ஆசியுடன் சிவப்பணிகள் பலவற்றில் ஈடுபட்டுள்ள திரு. சொக்கலிங்கம் அவர்கள், திருமுறைகளைப் போற்றியும் தில்லைக் கோயிலில் ஈடுபாடு காட்டியும் தலங்கள் பலவற்றில் செம்மையாக வழிபட்டும் சைவ சமய அறிவு மிக்காரைப் பாராட்டியும் வருபவர். இளைஞர்கட்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர்.

பலவகைப் பண்புகளின் நிலைக்களமாக விளங்கும் அறப்பணிச் செல்வர் திரு. சொக்கலிங்கம் அவர்களது முயற்சியில் பூக்கும் மலர், புகழ் மணம் பரப்புக; அவர் நலம்பல பெற்று நீடு இனிது வாழ்க என நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

பதிப்புரை

1979 பிப்ரவரி ஏழாம் நாளில் தில்லை மூலட்டான ஈசுவரர் கோயில் குடமுழக்கு விழா இனிது நிகழ்ந்தது. மதுரை அன்பர் திரு. கருமுத்து சு. சொக்கலிங்கம் அவர்கள் அதைத் தம் செலவில் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

குடமுழுக்கு மலர் ஒன்றையும் வெளியிட வேண்டுமென்று தில்லைச் சபாநாயகர் கோயில் திருப்பணிக் குழுவின் செயலர் திரு. வாகீசம்பிள்ளை அவர்கள் மிகவும் விரும்பினுர்கள். அவ் விருப்பத்தை நிறைவேற்றுமாறு திரு. சொக்கலிங்கம் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கோயில் முழுவதையும் பற்றிய ஒரு பெருநூல் உருவாக வேண்டும் என்று தருமை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் அறிவுரை நல்கினுர்கள்.

இந்நிகழ்ச்சிகளின் விளைவாக ஓராயிரம் பக்கங்களுக்கு மேற் பட்ட தகவல்களையும் ஆராய்ச்சிக் குறிப்புகளையும் திரட்டி, அதில் ஒரு பகுதியை இப்போது வெளியிட்டிருக்கிறோம்.

> வரலாற்றில் சிதம்பரம், நகரத்தார்களும் சிதம்பரம் கோயிலும், கல்வெட்டு, இசை, நடனம், சிற்பம், தில்லை யிலுள்ள மடங்கள், தில்லையில் முத்திபெற்றோர், மகேசுர மூர்த்திகள், தமிழ் இலக்கியத்தில் தில்லை, நடராசர்—சிவகாமி அம்மை அஷ்டோத்ர சத நாமாவளி, சகஸ்ர நாமம், நடராசர் திருப்பெயர்கள் 200, திருவம்பலச் சக்கரம், சிதம்பர யந்திரம், சிவகாமி யந்திரம் ஆகியவை தனி நூலாக வெளிவரும்.

இத்தகைய நூலை உருவாக்க எத்தனை முயற்சியும் ஆராய்ச்சி யும் பயணமும் நேரமும் ஆர்வமும் தேவை என்பதை வாசகர் களின் சிந்தனைக்கு விட்டுவிடுகிறோம்.

சிறந்த கட்டுரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் எல்லா வகையிலும் எனக்கு உறுதுணையாக இருந்த இனிய நண்பர், சிதம்பரம் திரு இரத்தின சம்பந்தம் பிள்ளை அவர்களுக் கும், மதிப்பிற்குரிய திரு. வாகீசம் பிள்ளை அவர்களுக்கும் இன்னும் நூற்றுக்கும் மேற்பட்ட பழைய நண்பர்களுக்கும் மற்றும் தில்லை வாழ் அந்தணர்களுக்கும், டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கும்

என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சில படங்களைத் தந்துதவிய இந்தியத் தொல்பொருள் துறையினரின் உதவியையும் இங்குக் குறிப்பிடுவது என் கடமையாகும்.

கனவிலும் எதிர்பார்க்க இயலாத நிலையில் 25 ஆண்டுகட்குப் பின் இக்கோயிலுடன் மீண்டும் தொடர்பு படுத்தி என்னை இப் பணிக்கு ஆளாக்கிய திரு சொக்கலிங்கம் அவர்களுக்கு என் நன்றி உரியது. தில்லையில் ஆனந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான், அவர்க்கு அனைத்து நலங்களும் அருளுவாராக!

விளம்பரங்கள் ஈந்தவர்களையும் நன்றியுடன் நினைத்துப் பாராட்டுகிறோம்.

பொன்னம்பலத்துக்கு என்னை இடையிடையே வரவழைத்துக் கொள்ளும் ஆடவல்லான், தம் பொன்னார் திருவடிகளை யான் வழிபட வாய்ப்பாகப் 'பொற்' பணிகளில் என்னைப் பயன்படுத்தி வருவதை அனைவரும் அறிவர்.

ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே!

சாஸ்திரிநகர் அஞ்சலகக்கட்டடம்,
சென்னை-600020.
தீபாவளி 1979

'சோமலெ'

பொருளடக்கம்

1. சிதம்பரம் தேவாரத் திருப்பதிகங்கள்

2. தில்லை மூலட்டானேசுவரம்

3. பொதுக் கட்டுரைகள்

4. தில்லையும் ஏனைய தலங்களும்


5. தில்லைகண்ட சமயங்கள்

6. தில்லைச் சிற்றம்பலமும் ஈழநாடும்

7. சேக்கிழார்

8. ஆங்கிலப்பகுதி

தில்லைப் பெருங் கோயிலின் முழுமையான வரைபடம்



சிவமயம்

தில்லைப் பெருங்கோயில் வரைபடத்தின் விளக்கம்

1 பொன்னம்பலம் (சிற்சபை)
2 எதிர் அம்பலம் (கனகசபை)
3 கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி
4 பிர்மசண்டிஸ்வரர்
5 திருமூலநாதர் சந்நிதி
6 திருக்கல்யாண மண்டபம் (உற்சவமூர்த்திகள் புறப்படும் இடம்)
7 பேரம்பலம் (தேவசபை)
8 திருமடப்பள்ளி
9 நர்த்தனசபை (நிருத்த சபை)
10 லெக்ஷிமி அம்மன் கோவில் (தயார் சந்நிதி)
11 தெண்டாயுதபாணி சந்நிதி
12 மணி மண்டபம்
13 பெரிய பிள்ளையார் கோயில்
14 நூற்றுக்கால் மண்டபம் மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில்
15 சிவகாமி அம்மன் கோயில்
16 பாண்டிய நாயகர் கோயில்
17 சிவகங்கை தீர்த்தம்
18 ஆயிரக்கால் மண்டபம் (இராஜசபை)
19 நந்தி மண்டபம்
20 சபைப்பிரகார மண்டப சநிந்திகள்
21 நவலிங்கம் கோயில்
22 வெளிப்பிரகார மண்டபம் சந்நிதிகள்
23 நடவான மண்டபம்

இரண்டாம் தொகுதியில் இடம் பெற இருப்பவை

அ. நகரத்தார்களும் சிதம்பரமும்

1. தில்லைவாழ் அந்தணர்களும் நகரத்தார்களும்
2. மெ. செ. வேத பாடசாலை
3. இளமையாக்கினார் கோயில்
4. காரைக்குடி சொக்கலிங்க ஐயா
5. கோ. சித. மடாலயம்
6. திருநாளைப் போவார் நாயனார்கோயில்
7. கோயில் நான்மணிமாலையில் நகரத்தார்
8. சிதம்பரத்தில் நகரத்தார் செய்த அறச்செயல்கள் —பண்டிதமணி கதிரேசச் செட்டியார்
9. ,, —பேராசிரியர் லெ. ப. கரு.
10. ,, —டாக்டர் சுப. திண்ணப்பன்
11. ,, திரு. மு. அருணாசலம் பிள்ளை
12. ,, பேராசிரியர் வெள்ளைவாரணனார்
13. ,, சிவநேசன் இராமசாமிச் செட்டியார்
14. அரசர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு, தில்லைக் கோயில் பாராட்டுரை
15. எம். ஏ. எம். இராமசாமி அவர்களுக்கு திருப்பணிக் குழு வழங்கிய வரவேற்புரை
16. கருமுத்து சு. சொக்கலிங்கம்— டாக்டர் சுப. அண்ணாமலை

ஆ. மடாலயங்களும் சிதம்பரமும்

1. திருமடங்கள்
2. ஸ்ரீ காசிமடம்
3. அம்பலத்தாடும் சுவாமிகள் மடம்

4. குருநமசிவாய தேவர் மடம்
5. ஈசானிய பொன்னம்பல சுவாமிகள் மடம்
6. சேக்கிழார் மடம்
7. ஆத்திநாட்டார் மடம்
8. ஆர்நாட்டு வேளாளர் மடம்
9. குயவர் மடம்
10. அகோர சிவாச்சாரியார் மடம்
11. சுப்பையா சாமி மடம்
12. ரெட்டியார் துறையூர் மடம்
13. கேணி மடம்
14. இராமநாதசாமிகள் (தச்சக் குளத்து) மடம்
15. சற்குரு விலாச மடம்
16. மன்னார்குடி தெரு சபாபதி சுவாமிகள் மடம்
17. திங்கட்கிழமை மடம்
18. ஸ்ரீ மௌன சுவாமிகள் மடம்
19. கொழும்பு சாமி மடம்
20. நந்தனார் மடம்
21. ஆதீன மடம்
22. அம்பலவாணர் மடம்
23. கள்ளிக்காட்டு மடம்
24. உமாபதி சிவாசாரியார் மடம்
25. அறுபத்து மூவர் குரு பூசை மடம்
26, திருவாவடுதுறை ஆதீனம்
27. தருமபுர ஆதீனம்

இன்னும்

சிவனடியார்கள் பற்றி 16 கட்டுரைகள் மற்றும் வரலாறு, இலக்கியம், தமிழ்த் தொடர்புபற்றிய நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்
தேவாரத் திருப்பதிகங்கள்

ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்
திருப்பதிக வரலாறு

சீகாழியினின்றும் புகலிவேந்தர் அடியார்களும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், சிவபாத இருதயரும் உடன் வர, தில்லை சென்றார்கள். தில்லைவாழ் அந்தணர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க சிரபுரப் பிள்ளையாரை அழைத்துச் சென்றனர். பிள்ளையார் திருவீதியைத் தொழுது எழுநிலைக் கோபுரத்தையும் வணங்கி, திருமுன்றில் திருமாளிகையும் வலம் வந்து, திருஅணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். திருஅம்பலத்தையும் கூத்தப் பெருமானையும் கண்ணாரக் கண்டு கும்பிட்டு, தில்லைவாழ் அந்தணர்களை முன்னிட்டுப் பாடியருளியது இத் திருப்பதிகம்.

பண் – குறிஞ்சி

இராகம் - யதுகுல காம்போதி] **[தாளம் - திருபுடை**

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாடம் நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுள் சிற்றம் பலமேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லால் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி ஆகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே. 8

கோணு கணையானுங் குளிர்தா மரையானுங்
காணர் கழலேத்தக் கனலாய் ஓங்கினன்
சேணர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணு நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக வரலாறு

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருச்சிற்றம் பலத்தைப் பரவினர்; அங்கு உறைதலை அஞ்சித் திருவேட் களத்தை அடைந்து வணங்கினர். திருநெல்வாயிலையும் திருக்கழிப்பாலையையும் வழிபட்டு மீண்டு, திருவேட் களத்தைச் சேர்ந்தார். திருவுடை அந்தணர் மூவாயிரவர் இறைவரது திருவடிகட்கு அணுக்கராயிருக்கும் பெரு வாய்ப்பினை எண்ணி வியந்து மீண்டும் தில்லைக்கு எழுந் தருளினர். தில்லை வாழ் அந்தணர் எதிரே வந்து சண்பை யந்தணரை வணங்கினர். அவர் வணங்குமுன் அவர்களை ஆளுடைய பிள்ளையார் வணங்கினர். சிவபிரானருளால் அந்தணர் அனைவரும் சிவகணநாதராய்த் திகழ்ந்தனர். நாயனர் அத்திருவருட் காட்சியை நோக்கி உடனிருந்த யாழ்ப்பாணர்க்கும் அப்பரிசு காட்டியருளினர். பின்னர், திருக்கோயிலுக்கு ஏகினர். திருமுடிமேற் குவித்த செங்கை யுடன் திருவாயிலுள் புகுந்து வழிபட்டுப் போற்றிப் பாடியது இத் திருப்பதிகம்.

பண் – காந்தார பஞ்சமம்

இராகம் - கேதாரகௌளை] [தாளம் – *சாபு*

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர்வெண் திங்கள்
சூடினாயருளாய் சுருங்கவெம தொல்வினையே. 1

கொட்டமேகம ழுங்குழலாளொடு
கூடினாயெரு தேறினாய்நுதற்
பட்டமேபுனைவா யிசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவாய் இவைமேவிய தென்னைகொலோ. 2

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுனகாரணங் கூறுதுமே. 3

கொம்பலைத்தழ கெய்தியநுண்ணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறுகாளையர்
காதலாற்கழற் சேவடிகைதொழ
அம்பலத்துறை வானடியார்க் கடையாவினையே. 4

தொல்லையாரமு துண்ணநஞ்சுண்டதோர்
தூமணிமிட றுபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலியேற்றுழல் பண்டரங்கா
தில்லைபார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தானெரியம்மதி லெய்தவனே 5

ஆகந்தோயணி கொன்றையாயனல்
அங்கையாயம ரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய்பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாய்அழல்
நாகந்தோயரையாய் அடியாரை நண்ணாவினையே 6

சாதியார்பளிங் கின்னொடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர்தா விழவாரணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கிட மாயசிற்றம்பலம்
அங்கையால்தொழ வல்லடியார்களை
வாதியாதகலும் நலியாமலி தீவினையே. 7

வேயினார்பணைத் தோளியொடாடலை
வேண்டினாய்விகிர் தாவுயிர்கட்கமு
தாயினாயிடு காட்டெரி யாடலமர்ந்தவனே
தீயினார்கணையால் புரமூன்றெய்த
செம்மையாய்த்திக கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழ லேதொழு தெய்துதும்மேலுலகே. 8

தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவாநல்ல
தேரினார்மறுகில் திருவாரணி தில்லைதன்னுள்
சீரினால்வழி பாடொழியாததோர்
செம்மையாலழ காயசிற்றம்பலம்
ஏரினாலமர்ந்தாய் உனசீரடி யேத்துதுமே 9

வெற்றரையுழல் வார்துவராடைய
வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவருலகின் னவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்துசிற்றம்பலம்
காதலால்கழற் சேவடிகைதொழ
உற்றவருலகின் னுறுதிகொள வல்லவரே. 10

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின்றமிழால் உயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனையிசையால் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருப்பதிக வரலாறு

திருக்கழிப்பாலையை மண்ணோர் வாழ நண்ணி, மணவாள நம்பி கழல் பாடி, மீண்டும் நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டருளும் அம்பலத்து நிருத்தனாரைத் தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ எனப் பாடித், தில்லையைச் சார்ந்து, அடியவருக்கு எளியானை அரியானை என்று எடுத்துப் பெரிய திருத்தாண்டகச் செந்தமிழ் பாடி, எவ்வுலகும் விளங்கிய பொன்னம்பலத்து மேவி ஆடல்புரியா நின்றவரைப் பின்னும் அதிசயமாம் படி பாடிய அஞ்சொல்வளத் தமிழ்மாலை இத்திருப்பதிகம்.

திருநேரிசை, பண்—கொல்லி

இராகம்-நவரோஸ்] [தாளம்-ஆதி

திருச்சிற்றம்பலம்

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா எறிக்குஞ்சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறும்
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே. 1

ஏறனா ரேறுதம்பால் இளநிலா வெறிக்குஞ்சென்னி
ஆறனார் ஆறுசூடி ஆயிழை யாளோர்பாகம்
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே. 2

சடையனார் சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ்சென்னி
யுடையனார் உடைதலையில் உண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
அடிகழ லார்க்கநின்று அனலெரி யாடுமாறே. 3

பையர வசைத்தவல்குல் பனிநிலா வெறிக்குஞ்சென்னி
மையரிக் கண்ணினாளும் மாலுமோர் பாகமாகிச்
செய்யரி தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே. 4

ஓதினார் வேதம்வாயால் ஒளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பூதனார் பூதஞ்சூழப் புலியுரி யதளனார்தாம்
நாதனார் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகள்தாழக் கனலெரி யாடுமாறே. 5

ஓருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடந் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
பேரிடம் பெருகநின்று பிறங்கெரி யாடுமாறே. 6

முதற்றனிச் சடையை மூழ்க முகிழ்நிலா வெறிக்குஞ்சென்னி
மதக்களிற் றுரிவைபோர்த்த மைந்தரைக் காணலாகும்
மதத்துவண் டறையுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோர் அரவமாடக் கனலெரி யாடுமாறே. 7

மறையனுர் மழுவொன்றேந்தி மணிநிலா வெறிக்குஞ்சென்னி
இறைவனு ரெம்பிரானு ரேத்துவா ரிடர்கள் தீர்ப்பார்
சிறைகொள்நீர்த் தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
அறைகழல் ஆர்க்கநின்று அனலெரி யாடுமாறே. 8

விருத்தனுய்ப் பாலனுகி விரிநிலா வெறிக்குஞ்சென்னி
நிருத்தனுர் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகள்தாழக்
கருத்தனுர் தில்லைதன்னுள் கருதுசிற் றம்பலத்தே
அருத்தமாமேனிதன்னே டனலெரி யாடுமாறே. 9

பாலனுய் விருத்தனுகிப் பனிநிலா வெறிக்குஞ்சென்னிக்
காலனைக் காலாற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனுர்தாம் நீண்டெரி யாடுமாறே. 10

மதியிலா வரக்கனேடி மாமலை யெடுக்கநோக்கி
நெதியன்தோள் நெரியவூன்றி நீடிரும் பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுள் மல்குசிற் றம்பலத்தே
அதிசயம் போலநின்று அனலெரி யாடுமாறே. 11

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக வரலாறு

தில்லைத்திருநகர்க் குடதிசை மணிவாயிற்புறம் உற்று எதிர்கொண்ட அடியரொடும் சென்று வாயிலின் வழிபுக்கார் திருநாவின் மன்னவனுர். சிவமே நிலவிய திருவீதியை வாயுவும் வருணனும் தூய்மை செய்தவை போதா என்று, அடியார் திருவலகிட்டனர்; குளிர்புனல் விட்டனர். அத்திரு வீதியைப் பணிந்து, ஏழ்நிலைக் கோபுரத்தைத் தொழுது உள் புகுந்தார். திருமாளிகையை வலம் வந்தார். அளவிலாத ஆர்வத்தராய் அன்புநிறை கடலானுர். உடல் முழுதும் புளகம் உற்றுர். திருமலி பொற் கோபுரத்துள் புகுந்தார். நஞ்சுண்ட நாயனுர் நடமாடும் பொன்மன்றினைக் கண்ணெதிர் உற்றுர். சென்றடையாத திருவுடன் திகழும் ஒளிநிறை அம்பலம் நினைவுற, நேரே கூடும்படி வரும் அன்பால், இன்புறுகுணமும் பெறவரும் நிலைகூட, ஆடும் கழல்புரி அமுதத் திருநடம் ஆராவகை தொழுது ஆர்

கின்றார். தலைமேல் அஞ்சலிசெய் கையும், ஒழியாதே மழை பொழியுங் கண்ணும், பரிவின் உருகுங் கரணமும், நிலமிசை விழு மெய்யும், திருநடம் கும்பிடலில் அளவிலாது பெருகும் ஆர்வத்தைப் பிறர்க்குணர்த்தின. பலமுறை தொழுதார் பாவேந்தர். ''என்று எய்தினை'' என்றது, மன்றாடும் மன்னன் திருவருட் கருணை. ஆனந்தம் பாடலாக வெளி வந்தது. ஒன்றியிருந்து நினைந்து, திருக்குறிப்புணர்ந்து பாடியருளிய இன்றமிழ் மாலை இத்திருப்பதிகம்.

திருநேரிசை பண் - கொல்லி

இராகம்–நவரோஸ்] **[தாளம்-ஆதி**

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினால் பத்திசெய்கேன் என்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுரு வுடையசோதீ
திருத்தமாந் தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தம்நான் காணவேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினேன் நின்றன்பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயும் மல்குசிற் றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூடநீ யாடுமாறே. 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச்செய்யாய் யாதுநான் செய்வதென்னே
செந்தியார் வேள்வியோவாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அந்தியும் பகலுமாட அடியிணை யலசுங்கொல்லோ. 4

கண்டவா திரிந்துநாளுங் கருத்தினால் நின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோருமேத்த இறைவநீ யாடுமாறே. 5

பார்த்திருந் தடியனேனுன் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்பனுன்னை மூவரின் முதல்வனென்பன்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே. 6

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீ யருளிச்செய்யாய் ஆதியே யாதிமூர்த்தி
வையகந் தன்னின்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் னுடல்காண்பான் பரமநான் வந்தவாறே. 7

மனத்தினுர் திகைத்து நாளும் மாண்பலா நெறிகண் மேலே
கனைப்பரா லென்செய்கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றுத் தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் நிலயங்காண்பான் அடியனேன் வந்தவாறே 8

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
அஞ்சொலாள் காணநின்று அழகநீ யாடுமாறே 9

மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினுனும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினுர் காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக வரலாறு

நீடுந் திருப்பெருகொளி நிறையம்பலம் நினைந்து கூடும் அன்பால் இன்புறு குணமும் பெறவரும் நிலைகூட, ஆடுங் கழல் புரியும் அமுதத் திருநடம் ஆராவகை தொழுது ஆர்கின்ற திருநாவுக்கரசு நாயனுர், தலைமிசைப் புனையஞ் சலியும், விழிகள் ஒழிவறப் பொழியும் மழையும், பரிந்துருகும் அகக்கரணங்களும், நிலமிசை விழுமுன்பு எழும் திருமேனியும், பின்தாழ் சடையான் திருநடங் கும்பிடும் பேரார்வமும் கொண்டு, திருவருள் பொழியும் கருணை பெறவரும் ஆனந்த மெய்த்தன்மையிற் பாடியன கீழ்வருந் திருவிருத்தங்கள்.

திருவிருத்தம். பண்—கொல்லி

இராகம் - *நவரோஸ்*] [தாளம் - திருபுடை

திருச்சிற்றம்பலம்

பாளை யுடைக்கமு கோங்கிப்பன்
மாடம் நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயல் தில்லைதன்னுள்
ஆள வுடைக்கழல் சிற்றம்
பலத்தரன் ஆடல்கண்டால்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த்தொண்டர் காண்பதென்னே. 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை
மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 2

தொடுத்த மலரொடு தூபமுஞ்
சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடும்
மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய
தில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 3

வைச்ச பொருள்நமக் காகுமென்
றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தேன் அணிதில்லை
யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
யுந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே. 4

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற
 தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள்
 கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
 நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக்
 கண்கொண்டு காண்பதென்னே. 5

ஊனத்தை நீக்கி யுலகறிய
 என்னை யாட்கொண்டவன்
தேனைத் தெனக்கினி யான்தில்லைச்
 சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை
 யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக்
 கண்கொண்டு காண்பதென்னே. 6

தெரித்த கணையால் திரிபுர
 மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த இறைவன் இமையவர்
 கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற
 தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு
 மற்றினிக் காண்பதென்னே. 7

சுற்று மமரர் சுரபதி
 நின்திருப் பாதமல்லால்
பற்றொன் றிலோமென் றழைப்பப்
 பரவையுள் நஞ்சையுண்டான்
செற்றங் கநங்கனைத் தீவிழித்
 தான்தில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு
 மற்றினிக் காண்பதென்னே 8

சித்தத் தெழுந்த செழுங்கம
லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வைரமு மாணிக்கந்
தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 9

தருக்கு மிகுத்துத்தன் தோள்வலி
யுன்னித் தடவரையை
வரைக்கை களாலெடுத் தார்ப்ப
மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்தும்
அணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே. 10

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை. பண்—கொல்லி

இராகம் – நவரோஸ்] [தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை அண்டத்
தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல்
லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக்
கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர்
கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான் அடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு
மான்றன் திருக்குறிப்பே, 2

கன்மன வீர்கழி யுங்கருத்
தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவில் தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது
போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன்
போந்த சுவடில்லையே. 3

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோர்
பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள்
செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத்
தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன்
றேநந்தங் கூழைமையே. 5

பூத்தன பொற்சடை பொன்போல்
மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன
பல்குறட் பூதகணந்
தேத்தென என்றிசை வண்டுகள்
பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள
ரோவென்றன் கோல்வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணி
னேக்கும் முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே 7

படைக்கல மாகவுன் ஞமத்து
எழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்
பும்உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்தரனே. 8

பொன்னெத்த மேனிமேல் வெண்ணீ
றணிந்து புரிசடைகள்
மின்னெத் திலங்கப் பலிதேர்ந்
துழலும் விடங்கர்வேடச்
சின்னத்தி ஞல்மலி தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
என்னத்தன் ஆடல்கண் டின்புற்ற
தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன்
வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை
நாரண னான்முகனுங்
தேட வெடுத்தது தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன்றே
நம்மை யாட்கொண்டதே. 10

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக வரலாறு

திருமுதுகுன்றம் பணிந்து தில்லைத் திருநகர்க் குடதிசை மணி வாயிற்புறம் உற்றார் திருநாவுக்கரசர். எதிர்கொண்ட அடியரொடும் சென்று நஞ்சுண்ட நாயனார் நடமாடும் பொன் மன்றினைக் கண்ணெதிர் கண்டு, ஆடும் கழல்புரியும் அமுதத் திருநடம் ஆராவகை தொழுது ஆர்கின்றார். தலைமேல் அஞ்சலி செய் கையும், ஒழியாதே மழைபொழி கண்ணும், பரிவின் உருகுங் கரணமும், நிலமிசை விழும்மெய்யும், திருநடம் கும்பிடலில் அளவிலாது பெருகும் ஆர்வத்தைப் பிறர்க்குணர்த்தின. பலமுறை தொழுதார் பாவேந்தர். "என்று எய்தினை" என்றது மன்றாடும் மன்னன் திருவருட் கருணை. ஆநந்தம் பாடலாக வெளிவந்தது. ஒன்றியிருந்து நினைந்து திருக்குறிப்புணர்ந்து "பத்தனாய்ப்பாடமாட்டேன்" என்னும் இன்தமிழ் மாலைபாடி, தொண்டு செய்யுங் காதலிற் பணிந்து போந்து, மணியின் சோதி நிறை திருமுன்றின் மாடும், பொற்றேர் அணி திருவீதியுள்ளும் பணிகள்செய்து கும்பிடுந் தொழிலராகிப் புனித வாக்கின் பணிகளும் பயிலச் செய்வார் அருட்பெரு மகிழ்ச்சி பொங்கப் பாடியருளியது இத் திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

இராகம்- *நாதநாமக்கிரியை*] [தாளம்- *சாபு*

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 1

அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனந்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்லல் என்செயும் அருவினை என்செயுந்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூ ண் டேனுக்கே. 4

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னாருல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. 7

விண்ணி றைந்ததொர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணுக்
கண்ணி றைந்த கடிபொழில் அம்பலத்
துண்ணி றைந்துநின் ருடும் ஒருவனே. 8

வில்லைவட் டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கையொர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பதிக வரலாறு

திருத்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற வானுறு புடை பரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி, திருக்குறுந் தொகைகள் பாடித் திருவுழவாரங்கொண்டு பெருந்தொண்டு செய்து விளங்கும் நாள், திருவேட்களத்துச் சேவுயர் கொடியார் தம்மைச் சென்று வணங்கிப் பாடி, திருக்கழிப் பாலைதன்னில் மணவாள நம்பி கழல் சென்று தாழ்ந்து, அன்புறு வண்டமிழ் பாடி, நீடு திருப்புலியூரை நினைந்து மீள்வார், கழிப்பாலை மருங்கு நீங்கி, நனைச்சினை மென்குளிர் ஞாழற்பொழிலூடு வழிக்கொண்டு நண்ணும்போதில், பாடியருளியது இத்திருப்பதிகம்.

திருக்குறுந்தொகை

இராகம்—*நாதநாமக்கிரியை*] [தாளம்—*சாபு*

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே. 1

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய வொருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனே. 2

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனே. 3

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தஎன்
ஆணி யைச்செம்பொ னம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனே. 4

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொ னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனே. 5

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணுச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனின் அம்பலத்
தாதி யையடி யேன்மறந் துய்வனே. 6

மைகொள் கண்டன்எண் டோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனூர்
செய்ய மாதுறை சிற்றம் பலத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனே. 7

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙனம் உய்வனே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கைம ணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாவமு தைமறந் துய்வனே. 9

ஓங்கு மால்வரை ஏந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினன்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனே. 10

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனார் தில்லையிலிருந்து திருவேட்களம், திருக்கழிப்பாலை சென்று வணங்கி, மீண்டும் வந்து தில்லைக் கூத்தப் பெருமானைத் தொழுது பாடியருளியது இத்திருப்பதிகம்.

பெரிய திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பார் இல்லா தானை
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை யேந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாள்முகத்தாள் அமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள் புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணுந்
திருந்தொளிய தாரகையுந் திசைகள் எட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்கம்ஆயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னாரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கைமிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 6

வரும்பயனை யெழுநரம்பின்ஓசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செய் அவுணர்புரம் எரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைச்
சுரும்பமருங் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 7

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
 காமருபூங் கச்சியே கம்பன் றன்னை
ஆரேனும் அடியவர்கட் கணியான் றன்னை
 அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
 பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை யெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான்மதியஞ் சூடி னானை
 மூவுலகுந் தானாய முதல்வன் றன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் றன்னைத்
 திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் றன்னைக்
 கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
 கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
 திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
 ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 10

திருச்சிற்றம்பலம்

திருப்பதிக வரலாறு

நாயனார், முன் திருப்பதிகத்தை அருளிச்செய்த பின்பு, ''செஞ்சடைக் கற்றை முற்றத்து'' என்னும் திருநேரிசைத் திருப்பதிகத்தை அருளிச் செய்து, பின்னும் பலநாட்கள் தில்லையிலே தங்கித்திருப்பணி செய்திருந்தபொழுது, அருளிச் செய்த திருப்பதிகம் இது. இறைவன் ஏனைத்தலங்களினும் இதன்கண் சிறப்புற விளங்குதல் கருதிப் பாடல் தோறும் 'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே' என்றருளிச் செய்தமையால், இது, 'புக்க திருத்தாண்டகம்' என்னும் பெயர்பெற்றது.

36

புக்க திருத்தாண்டகம்

இராகம் - அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பில் உள்ளார் மருகல் உள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்ரு லத்தார்
குடமூக்கில் உள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்கும் இடமறியார் சால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 1

நாக மரைக்கசைத்த நம்ப ரிந்நாள்
நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர்த்தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னி ருநாள்
வேதமும் வேள்விப் புகையு மோவா
விரிநீர் மிழலை யெழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானூர்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 2

துறங்காட்டி எல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பும் உடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலும் எய்தார் போலும்
மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி அந்தணர்க்கன் றால நீழல்
அறமருளிச் செய்த அரனூர் இந்நாள்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 3

வாரேறு வனமுலையாள் பாக மாக
    மழுவாள் கையேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூழ் ஓத வேலித்
    திருவாஞ் சியத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
    கண்விளங்கு நெற்றியார் கடல்நஞ் சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 4

காரார் கமழ் கொன்றைக் கண்ணி சூடிக்
    கபாலங்கை யேந்திக் கணங்கள் பாட
ஊரா ரிடும்பிச் சைகொண் டுழலும்
    உத்தமராய் நின்ற ஒருவ னார்தாம்
சீரார் கழல்வணங்குந் தேவ தேவர்
    திருவாரூர்த் திருமூலட் டான மேயார்
போரார் விடையேறிப் பூதஞ் சூழப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 5

காதார் குழையினர் கட்டங் கத்தர்
    கயிலாய மாமலையார் காரோ ணத்தார்
மூதாயர் மூதாதை யில்லார் போலும்
    முதலும் இறுதியுந் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ வன்று
    வன்மதவேள் தன்னுடலங் காய்ந்தார் இந்நாள்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 6

இறந்தார்க்கும் என்றும் இறவா தார்க்கும்
    இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவா தார்க்கும்
    பெரியான்றன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்தென்றும் மருவார் போலும்
    மறைக்காட் டுறையு மழுவாட் செல்வர்
புறந்தார் சடைதாழப் பூதஞ் சூழப்
    புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 7

குலாவெண் டலைமாலை யென்பு பூண்டு
குளிர்கொன்றைத் தாரணிந்து கொல்லே றேறிக்
கலாவெங் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கையோ டனலேந்திக் காடு றைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்ட மாட
நிறைவயல்சூழ் நெய்த்தான மேயசெல்வர்
புலால்வெண் டலையேந்திப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 8

சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோம் இந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையில் என்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமும் எல்லாம்
அணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

பாதங்கள் நல்லார் பரவி யேத்தப்
பத்திமையால் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழுபிறப்பும் ஆளுடைய ஈச னார்தாம்
வேதங்கள் ஓதியோர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே 10

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோம் இந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூல் உண்டே
ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

39

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருப்பதிக வரலாறு

நாயனார் திருமுதுகுன்றம் பணிந்து, ''மெய்யை முற்றப் பொடிப்பூசி'' என்னும் திருப்பதிகம் பாடிப் பன்னிரண்டாயிரம் பொன்பெற்று, 'இப்பொன் எல்லாம் ஆரூரில் உள்ளார் எல்லோரும் வியக்குமாறுபெற அருள் செய்ய வேண்டும்' என்று விண்ணப்பித்தார். பெருமானும் 'மணிமுத்தாற்றிலிட்டு ஆரூர்க் குளத்தில் கொள்க' என்று அருளினார். நம்பியாரூரரும் அப்பொன்னில் மாற்றறிவதற்காகச் சிறிது வெட்டி எடுத்துக்கொண்டு ஆற்று நீரில் பொற்றிரளைப்போட்டு, 'அன்று என்னை வலிந்து ஆட்கொண்ட அருளை இதில் அறிவேன்' என்று சொல்லித் தில்லையை வணங்கும் விருப்பினராய்ப் பல பதிகளையும் வணங்கிக்கொண்டு, அத்தலத்தையடைந்து, கூத்தப் பெருமானைக் கண்டு, ஆடிய திருவடிகளை வணங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம். இதில் மேலைச் சிதம்பரமாகிய பேரூரை நினைந்து பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

பண்-குறிஞ்சி

இராகம்-யதுகுலகாம்போதி] **[தாளம்-திருபுடை**

திருச்சிற்றம்பலம்

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்ருற்போ
லன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவி ஞரை
ஓராது தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுஞ் சிந்தை யாரைத்
தரியாது தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே 3

கருமையார் தருமனுர் தமர்நம்மைக்
கட்டியகட் டறுப்பிப் பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை
மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 4

கருமானின் உரியாடை செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட
உதைத்துகந் துலவா இன்பந்
தருவானைத் தருமனுர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானுர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ரு மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே யுள்ளமே
ஒழிகண்டாய் ஊன்க ணோட்டம்
எத்தாலுங் குறைவில்லை யென்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடு மரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த இராவணனைத்
தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே
கருதுமா கருதுகிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை யென்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனூர் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரா னாரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே. 10

திருச்சிற்றம்பலம்

உ

திருப்பதிகங்களின் கருத்துரை

சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும் தலம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் வரலாற்றில், இத்தல தரிசனம் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெற்று விளங்கு கின்றது. இத்தலத்திற்குஉள்ள தேவாரத் திருப்பதி கங்கள் பதினொன்று. அவற்றில் காணப்பெறும் பொருட் சிறப்புக் களைத் தொகுத்துக் காண்போம்.

கற்ருங்கு எரியோம்பி:

திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்கள் எதிர் கொண்டழைக்கச் சிதம்பரம் சென்று, ஆனந்தக்கூத்தனின் அடிமலர்களைத் தொழுது பாடிய பதிகங்கள் இரண்டு. முதல் பதிகத்தில் தில்லைக் கூத்தனுக்கு உரிமையான தனிச் சிறப்புடைய தில்லைவாழ் அந்தணர்களை, வேதங்களைக் கற்றவாறு வேள்விகள் செய்து நாட்டில் வறுமை வாராமே செய்பவர் என்றும், 'பறப்பைப் படுத்தெங்கும் ஆன்ம போதத்தை வேள்விசெய்து எரியோம்பும் சிறப்பர்' என்றும் சிறப்பித்துப் போற்றி உள்ளார். தில்லைப் பெருமான் திருவடிகளைப் பற்றுவாரைப் பாவம் பற்ருது என்றும் அவனை மறவாதவர் அறியாமை நீங்கப் பெறுவர் என்றும், நாடோறும் ஏத்துவார் தீராநோய் தீரப் பெறுவர் என்றும், சிற்றம்பலந்தனைத் தலையால் வணங்குவார் தலையானவர் என்றும் அவ்விறைவன் கழல் ஏத்தும் இன்பமே உண்மை இன்பமும் செல்வமும் ஆம் என்றும் கூறுகிறுர்.

ஆடினுய் நறுநெய்யொடு பால் தயிர் :

ஞானசம்பந்தர் தில்லையில் தங்க அஞ்சித் திருவேட் களத்தில் தங்கி யிருந்துகொண்டே சிதம்பரம் வந்து தரிசித்துப் பதிகம் பாடினுர். அவ்வாறு வரும் நாட்களில்

ஒரு நாள் சபாநாயகர் திருவருளால் தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் சிவகணநாதராய்த் தோன்றக் கண்டு, அதனை, உடன் வந்த திருநீலகண்டர்க்கும் காட்டி, ''ஆடினாய்நறு நெய்யொடு பால் தயிர்''என்று தொடங்கும், இப்பதிகத்தைப் பாடினார். அதில் ''நீலத்தார் கரிய மிடற்றார்'' என்னும் பாட்டில் தில்லைவாழ் அந்தணர்களைத் தாம் கண்டபடி கூறி, அவர்கள் ''தொழுதேத்து சிற்றம்பலம்'' எனப் போற்றுகிறார். சிற்றம்பலவனைத் தொழுவார்க்கு ''வினை சுருங்கும்'' என்றும், அவன் அடியாரை ''வினை அடையா'' என்றும், ''வினை இல்லை யாம்'' என்றும், ''வினை நண்ணா'' என்றும், ''தீவினை வாதியாது அகலும்'' என்றும் ''அவனைத் தொழுவார் மேலுலகு எய்துவர்'' என்றும் கூறுகிறார்.

செஞ்சடைக் கற்றை :

திருநாவுக்கரசு சுவாமிகள் அடியவர் எதிர்கொள்ளத் தில்லையை அடைந்து, சிற்றம்பலவனைப் பாடிய பதிகங்கள் எட்டு. அவற்றுள் இப்பதிகத்தில் இறைவன் திருச்சிற்றம் பலத்தில் ஞானக்கினி நடுவில் ஆடல் செய்தருளும் அழகினை விரித்துரைக்கிறார். இறைவனது, 'இளநிலா எரிக்கும் சென்னி' பாடல் தோறும் குறிக்கப்படுகிறது. ஏத்துவார் இடர்கள் தீர்க்கும் அப்பெருமான் எரியாடுவதைத் தில்லைச் சிற்றம்பலத்தில் காணலாம் என்று ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிடுகிறார்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் :

அப்பரடிகள் இப்பதிகப் பாடல்தோறும் அடியேன் உன் ஆடல் காண வந்தேன் என்று குறிப்பிடுகிறார். 'பத்தனாய்ப் பாடமாட்டேன்' ஆனாலும், என்னை நீ இகழ வேண்டாம் என்றும், நின்றன் பாதம் நடுப்பட நெஞ்சி னுள்ளே நாட்டினேன் என்றும், 'பொய் தவிர்ந்து புறமலா அடிமை செய்ய, ஐய நீ அருளிச் செய்யாய்' என்றும் கூறுகிறார்.

பாளையுடைக் கமுகு :

இப்பதிகத்தில் அப்பரடிகள் பாதாதி கேசாந்தம் இறைவனது திருவடிகள், உடுத்த துகில், கச்சின் அழகு, கண்டத்து இலங்கும் ஏனத்து எயிறு, சிரித்தமுகம், நெற்றி யிற்கண், சூடிய ஊமத்த மலர் இராவணனை ஒடுக்கி மிதித்த விரல், இவற்றின் அழகிலும், ஆடலிலும் ஈடு பட்டுப் பாடுகிறார். புறச்சமயம் சார்ந்த தம்மை ஆண்ட அவன் தண்ணருளை, 'ஊனத்தை நீக்கி, உலகறிய என்னை ஆட்கொண்டவன்' என்று போற்றுகிறார்.

கருநட்ட கண்டனை :

இப்பதிகத்தில் மார்க்கண்டேயர்க்காகக் காலனைக் கடிந்த அப்பெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் நடமிடு கிறான். 'என்று வந்தாய்?' என்று பரிவோடு கேட்கும் குறிப் புடைய அத்திரு நடனத்தை ஏற்றியிருந்து நினைமின்; உங்கட்கு ஊனமில்லை என்று பாடுகிறார். அவனது குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, எடுத்த பொற்பாதம் முதலியவற்றின் அழகினைக் காணும் பேறு கிடைப்பதாயிருந்தால், இன்னும் மனிதப் பிறவி வேண்டும் என்றும் கூறுகிறார். 'இப்பிறவி கிடைத்தற் கரியது. இதனை மதித்திடுமின்; தில்லைக்கூத்தனுக்கு ஆட்படுதலே நம் கடமை' என்று பாடுகிறார். 'எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்வேன்' என்கிறார். அவன் பாதம் தட்சன், சந்திரன், காலன் ஆகியோரைச் சாட எடுத்தது; நாரண னும், நான்முகனும் தேட எடுத்தது. அதுவே நம்மை ஆட்கொள்வது என்று கூறுகிறார்.

அன்னம் பாலிக்கும் :

இப்பதிகத்தில் திருநாவுக்கரசர், 'தில்லைச் சிற்றம் பலத்தில் இறைவனைக் கண்டு இன்புறத்தக்க இப்பிறவி இன்னும் தமக்கு வாய்க்க வேண்டும் என்றும், இறப்பதற்கு முன் சிற்றம்பலம் சென்று, சேவடி தொழுது உய்தல் வேண்டும் என்றும், அவனது அடியவனாகிய என்னை

அல்லல், அருவினை, வல்வினை முதலியன துன்புறுத்தா என்றும், ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம் நான் அவனை நிலாவி இருப்பேன் என்றும், தில்லைவட்டம் திசை கைதொழுவார் வினை ஓடுதல் உண்மை என்றும் கூறுகிறார்.

பனைக்கை மும்மத வேழம் :

இப்பதிகத்தில் இறைவன் நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டவன் என்றும், சண்டேசர், பால் கறந்து ஆட்டி வழிபட, அவர்க்கு நீணுலகெலாம் ஆளக் கொடுத்தான் என்றும், பார்த்தனுக்கு அருள் செய்தவன் என்றும் கூறுகிறார். தேவர்களால் சிற்றம்பலம் பொன் வேயப் பெற்றது என்றும் குறிப்பிடுகிறார்.

அரியானை :

இப்பதிகத்தில் தில்லைப் பெருமான் புகழ் பேசாத நாட்கள் பிறவா நாட்கள் என்று ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிடுகிறார். "அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வான், அடியார்தம் அல்லல் நீக்கிடும் அருமருந்து", "தன்னை நினைய வல்லோர்க்கு அருந்துணை", "அருமறை யோடாறங்கம் ஆயினான்", "செங்கண்மாலும், கடிக்கமலத் திருந்தவனும் காணவண்ணம் தழற்பிழம்பாய் நின்றவன்" என்பன போன்ற தொடர்களால் இறைவனது முழுமுதல் தன்மைகளையும், இயல்புகளையும் விரித்துரைக்கிறார்.

மங்குல் மதி தவழும் :

இப்பதிகம் புக்க திருத்தாண்டகம் எனப்பெறும். எல்லாத் தலங்களிலும் இறைவன் எழுந்தருளி அருள் செய்தானாயினும், தில்லைச் சிற்றம்பலமே அவன் உறைவிட மாகப் புகுமிடம் எனக் கூறுகிறது. இப்பதிகத்தில் பல தலங்களையும் குறிப்பிட்டுப்பாடி, அத்தலங்களில் விளங்கும் இறைவர், பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலத்தே புக்கு விளங்குகிறார் என்கிறார். இறைவன் பாரில் பாதி நாளும், பரிதி நியமத்தில் பன்னிரு நாளும், திருவீழிமிழலையில் ஏழு

நாளும் தங்கி, முடிவில் தில்லை புக்கார் என்று கூறுகிறார். திருவாரூரில் திருவந்திக்காப்பும், தில்லையில் அர்த்த யாமமும் சிறப்புடையன. இதனைக் குறித்து ''அணியாரூர் நின்று கொள்ளப் புலியூர்ச் சிற்றம்பலம் புக்கார்'' என்கிறார். தில்லையில் அவனைக் காணவிரும்புவார்க்கு அடையாள மாகச் சூலம் உடைமை, வெண்ணூல் அணிந்தமை, வேத மோதுமியல்பு, வீணை உடைமை, கட்டங்கமுடைமையைக் குறித்தருள்கின்றார்.

மடித்தாடும் :

கொங்கு நாட்டுப் பேரூரில் இறைவன் சுந்தரர்க்குச் சிதம்பர தரிசனத்தைக் காட்டியருளினான். கொங்குநாட்டுத் தலயாத்திரை முடித்துச் சிதம்பரம் வந்த சுந்தரர் 'மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமானைப் புகலூர்ச் சிற்றம் பலத்தே பெற்றாமன்றே' என்று, அங்குத் தமக்குக் காட்சி கொடுத்தமையைக் கருத்தில் எண்ணி இப்பதிகம் பாடு கிறார். இறைவன் ஒருவனே, 'இயமதூதர்களிடமிருந்து நம்மைத் தடுத்தாட்கொள்ள வல்லவன்' என்று அருளிச் செய்கின்றார். தில்லை மூவாயிரவர்க்குத் தலைவனாய் விளங்குபவன்; பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக்குபவன் என்றும் குறிப்பிட்டுப் போற்றுகிறார்.

திருவாசகம்

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்.

இந்திரிய வயமயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே. 1

வினைப்பிறவி என்கின்ற
வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே. 2

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினல் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே. 3

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேனை
வல்லாள னுய்வந்து
வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன்
பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை
யம்பலத்தே கண்டேனே. 4

சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே. 5

பிறவிதனை யறமாற்றிப்
பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடு மொழியச்சென்
றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்
திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிட நான்கண்டேனே. 6

பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை
யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால்
திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே. 7

அளவிலாப் பாவகத்தால்
அமுக்குண்டிங் கறிவின்றி
வினையொன்றும் அறியாதே
வெறுவியனாய்க் கிடப்பேனைக்
களவிலா ஆனந்தம்
அளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந்
தொழுந்தில்லை கண்டேனே. 8

பாங்கினொடு பரிசொன்றும்
அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர
வுலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து
வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை
யம்பலத்தே கண்டேனே. 9

பூதங்க ளைந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

திருச்சிற்றம்பலம்

உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்
செவ்வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும்
போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல்
போல வளர்கின்றதே. 1

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே. 2

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை
பாண ரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கு மூதியமே. 3

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
 உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
 சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
 யம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
 இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
 தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
 அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் ருயைத்
 தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
 சாமகண்டா அண்ட வாணு
நற்பெரும் பொருளான் உரைகலந் துன்னை
 என்னுடை நாவினல் நவில்வான்
அற்பனென் னுள்ளத் தளவிலா வுன்னைத்
 தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமா யுலகா யல்லையா னுயைத்
 தொண்டனேன் கருதுமா கருதே. 3

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 2

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 3

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொன் திருமன்றுள் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே. 1

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே. 2

ஆதிபரன் ஆட அங்கைக் கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றுடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோடாடினன் நாதாந்த நட்டமே. 3

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. 4

கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே. 5

திருச்சிற்றம்பலம்.

பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் 1

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மான டஞ்செய் வரதர்பொற் றுள்தொழ. 2

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி. 3

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றோதி யாரருள் ஆதலின் அஞ்செழுத்
தோதி யேறினர் உய்ய உலகெலாம். 4

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம். 5

திருச்சிற்றம்பலம்,

திருப்புகழ்

நீல மாமுகில் போலும் வார்குழ
லார்கள் மாலைகு லாவ வேல்கணை
நீள வாள்விழி பார்வை காதிரு குழையாட

நீடு மார்பணி யாட வோடிய
கோடு போலிணை யாட நூலிடை
நேச பாளித சோலை மாமயில் எனவேகிக்

காலி னூபுர வோசை கோவென
ஆடி மால்கொடு நாணி யேவியர்
காய மோடணு பாகு பால்மொழி விலைமாதர்

காத லாயவ ரோடு பாழ்வினை
மூழ்கி யேழ்நர காழு மூடனை
காவ ரோதய மாசி வாபதம் அருள்வாயே

கோல மாமயி லேறி வார்குழை
யாட வேல்கொடு வீர வார்கழல்
கோடி கோடிடியோசைபோல்வட வரை தூளாய்க்

கோகொ கோவென ஆழி பாடுகள்
தீவு தாடசு ரார்கு ழாமொடு
கூள மாகவி ணோர்கள் வாழ்வுற விடும்வேலா

நாலு வேதமு டாடு வேதனை
யீண கேசவ ஞர்ச கோதரி
நாதர் பாகம்வி டாள்சி காமணி உமைபாலா

ஞான பூமிய தான பேர்புலி
யூரில் வாழ்தெய்வ யானை மாதோடு
நாலு கோபுர வாசல் மேவிய பெருமாளே

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

சீரார் திருச்சிற் றம்பலத்துள்
செம்பொன் மேலைக் கோபுரத்தே

திகழு மூவா யிரர்பூசை
செய்யு மாறு முகவேளைக்

காரார் கூந்தற் சிவகாமி
காண வருளா னந்தநடங்

காட்டும் பரம சிவனருளுங்
கருணை நிதியைத் தனிபுரக்க

நீரார் வெண்தா மரையாளும்
நெடியோன் செந்தாமரை யாளும்

நிறைவாஞ் சத்த மாதாவும்
நினைக்குந் துர்க்கை மாதாவும்

பாரார் தரிக்கு முகங் கரங்கள்
பரவா யிரமீ ராயிரமேற்

பகரு மூவா யிரம்வீர
பத்ர காளி யன்னையுமே.

பட்டினத்தார் இயற்றிய

கோயில் நான்மணிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்பா

பூமேல் அயன்அறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நடமாடி ஏழுலகும் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடுந்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே உமதருமை தேரா விட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடன்நிற்க இயல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருந்தீ நஞ்சுண் டீரே.

கட்டளைக் கலித்துறை

நாமத்தி னுல்என்றன் நாத்திருத் தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னுல்உன் சரண்பணி யேன்சார்வ தென்கொடுநான்
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னுல்உன் திருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே.

கட்டளைக் கலித்துறை

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம் வேர்ப்பஅம்
மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும் பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போநெஞ்ச மேஇனிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல் லோரும் பிணமென்னவே.

கட்டளைக் கலித்துறை

வாழ்வா கவுந்தங்கள் வைப்பா கவும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத் தாயுன்னை
யன்றியொன்றைத்
தாழ்வார் அறியாச் சடிலநஞ் சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றேதெய்வ மாக வணங்குவதே.

நேரிசையாசிரியப்பா

தாடு நாடகம் போற்றி யென்றுற்
கென்றும் போற்றினும் என்றனக் கிறைவ
ஆற்றல் இல்லை யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே.

தில்லை மூலட்டானேசுவரம்

எல்லை யற்ற இறைவனைக் காணத்
தில்லையி லேஒரு தேவத் தானம்
தொல்லை யுற்ற பிறவியைக் கடந்தே
தொழுது கரையேறும் மூலட் டானம் (எல்லை)

ஆதியில் அவனுக்கு ஏது உருவம்
அகண்ட வெளியில் அமைந்தது அருவம்
அருவை உருவாய் ஆக்கி வைத்தோம்
அன்பு மலரால் அருச்சனை செய்தோம் (எல்லை)

சோதியைக் காணத் துடித்தனர் இருவர்
தோன்றுக என்றே அழைத்தனர் முனிவர்
வானி லிருந்தே வந்தது தெய்வம்
ஆனந்த நடனம் அருந்தினர் அமுதம் (எல்லை)

பதஞ்சலி வியாக்ர பாதர் பணிந்த
சிதம்பர ரகசியம் தெரிந்தவர் உய்வார்
தினந்தினம் சிவனின் நாட்டியம் கண்டே
சிந்தையில் இன்பத் தேனினைப் பெய்வார் (எல்லை)

அண்ணு மலைமன்னர் முன்னேர் வழிவழி
அம்பலத் தரசர் அருட்பணி செய்தார்
அங்கயற் கண்ணி துணைவனை எண்ணி
அருமுத்து கருமுத்தும் அள்ளிக் கொடுத்தார் (எல்லை)

கோயி லென்றே கூறிடும் தலத்தில்
கோயிலூர் ஆதீன சேவைகள் பெரிது
மாமது ரையில்வாழ் சொக்க லிங்கம்
மனத்தையும் இழுத்தது கனக லிங்கம் (எல்லை)

திருப்பணி என்ருல் செட்டி நாட்டார்
விருப்புடன் விரைவார் பொருட்கொடை தருவார்
சிற்றம் பலத்தின் மூலட் டானம்
சீர்திருத் தியபின் கும்பாபி டேகம் (எல்லை)

சோமலெ என்பார் தொகுத்தார் மலரே
தொண்டுக் கென்றே பிறந்தவர் சிலரே
தேவ தெரிசனம் பாபவி மோசனம்
தெளிந்தவர் யாவரும் சிதம்பரம் வருக! (எல்லை)

பாடல்: கலைமாமணி, டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை
சண்முகம்.

இ.—4

பெருஞ்சாந்தி

ச. தண்டபாணி தேசிகர்

பெருஞ்சாந்தி என்பதை மகாகும்பாபிஷேகம் என வழங்கும் சிவாகமங்கள். பெருஞ்சாந்தி பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை இயற்றப் பெறுதல் வேண்டும். பன்னிரண்டு ஆண்டுக்காலமாக மறதியாலும், அறியாமையாலும், அரசியல் ஆட்சி—சூழ்ச்சிகளாலும், அன்புக் குறைவு—சிரத்தைக் குறைவுகளாலும் நேர்ந்த வழிபாட்டுக் குறைவு—மந்திரக் குறைவு—சாதனப் பொருள்களின் குறைவுகளாலும், விளைந்த குறைகளை நீக்கிப், பெருமான் என்றும் மணியின்கண் ஒளிபோல மூர்த்தியினிடம் விளங்கித் தோன்றுவதற்காகச் செய்யப்படும் சாந்தியாகும்.

மனிதவாழ்வில் கோள்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்கிக் கொள்ளச் சாந்திகள் செய்கின்ரேமே, அது தன்னலத்திற்காகச் செய்யப்பெறும் சாந்தி. அது, தான் வாழத் தன் பிள்ளைகுட்டிகள் வாழச் செய்யப்படுவது. உலக நன்மைக்காகப் பரம்பொருளின் வெளிப்பாடு என்றும் விளங்கச் செய்யப் பெறுவது பெருஞ்சாந்தி. சுருங்கச் சொன்னல் தன்னலத்திற்காகச் செய்யப்பெறுவது சாந்தி. பிறர் நலத்திற்காகவும் செய்யப் பெறுவது பெருஞ் சாந்தி.

பெருஞ்சாந்தியை மண்டப பூசை முதல் (மகாயாகம்) பெருவேள்வி, காலை மாலை யாக பூசைகள், பெருநீராட்டு (மகாபிஷேகம்), வீதியுலா வரை வழிபட்டால் சிவசிந்தனையுடன் திருவைந்தெழுத்து செபத்துடன் வழிபட்டால் பன்னிரண்டாண்டு வழிபட்ட பயன் கிடைக்கும் என்று சிவதருமோத்திரம் கூறுகிறது.

பெருஞ்சாந்தி பிரதிட்டை, தாபனம்,ஸ்திதிஸ்தாபனம், ஆஸ்தாபனம், உத்தாபனம் என ஐவகைப்படும். அவற்றுள் பிரதிட்டையாவது, பீட வடிவாகிய சக்தியையும் லிங்க வடிவாகிய சிவத்தையும், சிவசத்திக்குரிய மந்திரங்களை

எண்ணி இணைத்தலாம். அப்படி இணைக்கும்போது, என்றும் இதனிடமாகச் சிவம் விளங்கித் தோன்ற, மந்திரசித்தி பெற்றவர்களும், கற்று, ஆங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்ருர்களுமாகிய சிவ அந்தணர்கள் திருவைந்தெழுத்தை ஒலிவடிவமாகவும், மேலோங்கி எழும் ஒளிவடிவாகவும் (தியானித்து) எண்ணிக்கொண்டே அந்நிலையில் தளராமலும் தாழாமலும், உலகியற் பார்வையும் எண்ணமும் சிறிதும் இல்லாமலும் அட்டபந்தன மருந்தைச் சாத்துதலே பிரதிட்டையாம்.

(ஸ்தாபனம்) தாபனம் என்பது பாணலிங்கம், தாது லிங்கம், உலோகலிங்கம் முதலானவற்றை அது அதற்குரிய பீடங்களில் முன் கூறியவண்ணம் தியான மந்திரங்களுடன் சிவோகம் பாவனையிலிருந்து ஆசாரியன் தாபித்தலாம்.

'ஸ்திதி ஸ்தாபனம்' என்பது பீடமும் இலிங்கமும் ஒன்ருன பளிங்கு முதலானவற்ருல் ஆன இலிங்கத்தை நிலைபெறுத்துதலாம்.

'ஆஸ்தாபனம்' என்பது முதலில் பீடத்தைத் தாபித்துப் பின்பு லிங்கத்தைத் தாபித்து லிங்கத்தின் கண்டத்தில் முற்கூறிய மருந்தை மந்திரங்களைச் சொல்லி நிறுவுதலாம்.

உத்தாபனம் என்பது ஏற்கெனவே உள்ள சிவலிங்கம் செதிள் பெயருதல், சில்விழுதல் முதலான சேதங்களை உடையதாயிருந்தால், வேறு சிவலிங்கத்தை 'லிங்க நிர்மாண விதிப்படிச் செய்வித்து' முன்சொன்னவாறு விதிப்படித் தாபித்தலாம்.

இவ்வண்ணமே சிவலிங்கம் நீங்கலாக ஏனைய மூர்த்திகளை நிறுவும் செயல் 'ஆவர்த்தம், அனுவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம்' என நான்கு வகைப்படும்.

காடு மூடியும், சிதைந்தும், மண்மேடிட்டும், தீப்பிடித்துச் சிதைந்தும், பெருமழை, காற்று, பூகம்பம் இவற்ருல் சிதைந்தும் கிடக்கும் பழைய கோயில்களில் உள்ள மூர்த்திகளை அப்புறப்படுத்தி, வேறு கோயில் கட்டி அங்கே எழுந்தருளச் செய்தல் ஆவர்த்தமாம்.

அனுவர்த்தம் என்பது கோயில் இல்லாத ஊரில் புதிதாகக் கோயில் கட்டிச் சிவலிங்கத்தையும் பரிவார மூர்த்திகளையும் தாபித்தலாம்.

பழுதுபட்ட கோயிலைப் புதுப்பித்து, பூச்சுப் பொருள் களைப்பூசிப் பெருஞ்சாந்தி செய்தல் புனராவர்த்தமாகும்.

கோயிலுக்குள் யாராவது இறந்துபோனாலும், மாடு, நாய் முதலிய விலங்கினங்கள் இறந்தாலும், நாய், நரி, பன்றி, வீட்டுவிலக்கான பெண்கள், கள்ளர், பைத்தியங்கள், சமய உண்மையறியாதவர்கள், புறச்சமயத்தார் நுழைந் தாலும் செய்யப்படும் கழுவாய் (பிராயச்சித்தம்) அந்தரிதம் எனப்படும். இவை போலப் பலவகையான பிரதிட்டை முறைகளை ஆகமங்கள் விதிக்கின்றன.

பெருஞ்சாந்திக்கு மருந்து முக்கியமானது. அது சுக்கான் மூன்று பங்கும், குங்கிலியம் இருபங்கும், கொம் பரக்கு ஒரு பங்கும், தேன் மெழுகு, காவிக்கல், செம்பஞ்சு, வெண்ணெய் இவை வகைக்கு முக்காற் பங்கும், சாதி லிங்கம் காற்பங்குமாகக் கூட்டி இடித்துச்செய்யப் பெறுவது. இது சுவாமியை அசையாமல் பற்றிக் கொள்ளும். இத்தனை மருந்துகளும் உரலில் இட்டு இடிப்ப தால் உருகி ஒன்றுபடவேண்டும். இப்படி இடித்து ஒன்று பட்ட மருந்து அபக்குவம் எனப்படும். தீயிலிட்டுக் காய்ச்சியும் சேர்க்கலாம். அது பக்குவம் எனப்பெறும். அபக்குவமான மருந்தே சிறந்தது. இது தெய்வீகபந்தனம் எனவும் படும். ஆனால், பக்குவம் செய்யப்பட்ட மருந்தைச் சூட்டோடு சாத்துதல் கூடவே கூடாது. கைபொறுக்கும் சூட்டில் சாத்தலாம். பக்குவபந்தனம் மானுடபந்தனம் எனப்படும்.

பெருஞ்சாந்திக்குரிய கிரியைகள்

பெருஞ்சாந்திக்கு உரிய கிரியைகள் அறுபத்து நான்கு என்றும், ஐம்பத்தைந்து என்றும் ஆகமங்கள் கூறு கின்றன. பூர்வாங்கக் கிரியை எனப்படும் முதலிற் செய்யப் படும் செயல்கள் ஆசாரியவரணம் முதல் காலகர்ஷணம்

வரை பன்னிரண்டு செயல்கள் சிறந்தனவாம். இவற்றின் இலக்கணங்களையும், செய்ய வேண்டிய செயல் முறைகளையும், யாகக்கிரமங்களையும் ஆகமங்களும் கர்ஷணாதி பிரதிட்டாந்தம் வரை தெரிவிக்கும் பத்ததிகளும் விரிவாகக் கூறும்.

ஆசாரியன் காலங்கள் தோறும் வேள்வித்தீ முன் இருந்து சிவத்துவநிலையில் தாழாது செய்யப்படும் செப-ஓமப் பயன்கள் அருளொளிப் பிழம்பாகிய தீயினின்று கும்பத்திற்கும், கும்பத்திலிருந்து விம்பமாகிற மூர்த்தி பேதங்களுக்கும் நாடிச் சந்தானக் கிரமத்தால், செப்புக்கம்பி வழியாயும் மின் போலப் பரவிச் சென்று மூர்த்தியினிடம் நிலை பெறுகிறது. இதுவே மிகச் சிறந்த செயலாகும். அது போலவே யாக காலங்களில் ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ளத் தரிசிக்கும் சிவனடியார்களின் சிந்தனைத் தேக்கமே திருவருட்பொலிவு. இதற்காகச்செய்யப்பெறும் புனிதமான செயல்களே பெருஞ்சாந்தியின் வழிபாட்டு முறைகள்.

இத்தகைய பெருஞ்சாந்தியைத் தரிசித்தவர்கள் இம்மையில் சங்கநிதி பதுமநிதி யிரண்டும் பெற்றுத் தரணியை யாள்வர், பின்னர் வானும் ஆள்வர். நித்தியானந்த பரம சுகத்தையும் பெறுவார்கள் என்றால் பெருஞ்சாந்தியைச் செய்வித்த சிவபுண்ணிய சீலர்கள் எய்தும் பயன் எத்துணையது என்று அளவிட்டுச் சிந்திக்க முயற்சியுங்கள்.

தலங்களுள் தலையாயது சிதம்பரம். ஆகாயமே எல்லாப் பூதங்களையும் உள்ளடக்கி எல்லாப் பூதங்களும் தோன்றி நிலைக்க விரிந்து இடங்கொடுத்து நிற்பது. இது பூதாகாசத்தின் தன்மை. ஞானகாசமோ இதுபோல எத்தனையோ அண்டங்களையும் அடக்கி நிற்கின்ற அழியாத நுண்மையானது.

அதனை இடமாகக் கொண்டு ஐந்தொழில் அற்புத நடனம் செய்கின்றவர் ஆனந்த தாண்டவேசுரப் பெருமான். அத்தலத்தின் மூலமூர்த்தி திருமூலட்டானேசுரர்

திருமூலட்டானநாதர் திருமேனி பஞ்சசாதாக்கிய வடிவான சதாசிவமூர்த்தி உருவும் அருவும் ஆன திருமேனி. ஞானத்தால் அறியும் சிவஞானிகளுக்கு ஞான ஒளிவடிவாகவும், சிவயோகிகள் சிந்தனையில் சிவ-சக்திகளின் கூட்டாகிய அகார உகார மகாரக் கூட்டாகிய ஓங்காரத் திருமேனியாகவும், சரியை கிரியைகளில் நின்ற பக்குவான்மாக்களுக்குப் பீடலிங்கத் திருமேனியாகவும் வெளிப்பட்டு அருள் தருவர். இத்தலத்தின் மூலமூர்த்தி—மத்தியந்தனர், புலிக்கால் முனிவர், பதஞ்சலி முதலானோர் வழிபட உய்தியருளிய மூர்த்தி—இவரே. கல்லாலின்புடையமர்ந்த குருநாதர் போலப் பேரால மரத்தின் கீழிருந்த பெருமான் இவரே.

இவருடைய திருக்கோயில் பழுதுபார்க்கப் பெற்றது. பெருஞ்சாந்தி விழாவும் வேதாகம விதிப்படி நடைபெறுகின்றது. இதனைச் செய்விப்பதானால், புண்ணியனைப் பூசித்த புண்ணியமும் அதன்வழி வந்த செல்வமும், சிவசிந்தனையும்வேண்டும். அத்தனையும் பொருந்திய சிவநேயச் செல்வர் உயர்திரு கரு. முத்து. தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள். அவர்கள், பல பிறவிகளில் ஈட்டிய பதிபுண்ணியத்தோடு இப்போது ஈட்டும் சிவபுண்ணியத்தாலும் எல்லாச் செல்வங்களையும் என்றென்றும் பெற்று, இறவாத இன்ப அன்புடன் என்றும் வாழ்வார்களாக! சதா சிவசிந்தனையுடன் என்றும் விளங்குவார்களாக!

சிவமயம்

சிதம்பரம் மூலட்டான ஈசுவரர் கோயில் கும்பாபிஷேகங்கள்

(தெரிந்தவரை சில விவரங்கள்)

ஆங்கில ஆண்டு	தமிழ் ஆண்டு	கிழமை	லக்கினம்	நேரம்	நடத்திவைத்தவர்
1858	காளயுக்தி-ஆனி-24				நகரத்தார்களுடைய குரு ஸ்தானமாகிய கோவிலூர் ஆதீனம் மூன்றாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ கருணாநிதி சுவாமிகள் அவர்கள்
15—4—1891	கர-சித்திரை-4	புதன்	மிதுனம்	காலை 10-30—11-30	நகரத்தார்கள்
10—2—1922	துன்மதி-தை-28	வெள்ளி	மகரம்	காலை 6-30	திவான்பகதூர் சா. ராம. மு. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் (ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமையனார்)
11—5—1951	கர-சித்திரை-28	வெள்ளி	மிதுனம்	காலை 9-30	பொது தீட்சிதர்கள்
7—2—1979	காளயுக்தி—தை-25	புதன்	மீனம்	காலை 9 மணி	கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்

உ

ஸ்ரீமதே சித்ஸபேசாய மங்களம்

சிதம்பரம் ஸ்ரீசித்ஸபா சம்புரோக்ஷண சித்விலாஸ மகாகும்பாபிஷேகப் பத்திரிகை

ஸ்ரீமதகண்ட பரிபூரண சச்சிதானந்த சிதாகாசசின்மய தேஜோரூபியாயும், அகில அண்டபிண்ட சாரசரங்களுடைய சிருட்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோதான அனுக்கிரகமென்கிற பஞ்சகிருத்தியங்களுக்குக் காரணபூதராயும், ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திரத்தின் மத்தியில் விளங்காநின்ற ஸ்ரீ சித்ஸபா நடுவில் ஸ்ரீ பதஞ்சலி, வியாக்கிர பாதர்களினுலேயும், தில்லை வாழந்தணர்கள் என்று சொல்லுகிற தீக்ஷிதர்களினுலேயும், ஸதாகாலமும் பூஜ்பமானராயும், அகில லோகமாதாவும் ஸாக்ஷாத் பராசக்தியாகிய ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளோடு நிரந்தரம் ஆனந்த நடனஞ் செய்கிறவராயுமிருக்கிற ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தியின் மகிமை சுருதி, ஸ்மிருதி, புராணம், சிவரகசியம் முதலான இதிஹாஸம், ஆகமம், சிற்பம், மந்திர சாஸ்திரங்கள் இவைகளில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் இந்தச் சிதம்பர க்ஷேத்திர மாகாத்மியத்தைப் பற்றி இப்போது நாம் சொல்ல வேண்டியது யாதொன்று மில்லாதிருந்தபோதிலும், லோகத்தில் நடத்தப்படுகிற கும்பாபிஷேகங்களுக்குப் பிரசித்தப்படுத்துகிற பத்திரிகைகளில் அந்த க்ஷேத்திர மகிமைகளைக் கொஞ்சஞ் சொல்லுகிறது, பெரியோர்களுடைய வழக்கமாயிருப்பதினுலே இந்த மகாமகிமை தங்கிய சிதம்பர க்ஷேத்திரத்தில் நடத்தப்போகிற மகா கும்பாபிஷேகத்துக்கு அங்கங்கேயிருக்கிற பக்த ஜனங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு ஏற்படுத்தியிருக்கிற இந்த சித்ஸபா சம்புரோக்ஷண சித்விலாஸ பத்திரிகையிலும் இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்தின் மாகாத்மியங்களை கொஞ்சம் எழுதவேண்டியதாக இருக்கிறது.

அதர்வது:—

ஸ்ரீ ருத்திரம் முதலான வேதங்கள், தரிசஞேபநிஷத்து, கைவல்யோபநிஷத்து முதலான அனேக உபநிஷத்துக்கள் இவைகளிலும் மற்றைய சிவரகஸியம் முதலான கிரந்தங்களிலும், இந்தச் சிதம்பர க்ஷேத்திரம் ஸர்வ க்ஷேத்திர உத்தமமென்றும், ரகசியமென்று சொல்லப்பட்ட சிதானந்த மூர்த்தியே அத்விதிய பரப்பிரம்மமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் இந்தச் சிதம்பரக்ஷேத்திரத்திற்குள்ள சிதம்பர மாகாத்மியம் 1. புண்டரீகபுர மாகாத்மியம் 2. வியாக்கிரபுர மாகாத்மியம் 3. ஹேமஸபா மாகாத்மியம் 4. தில்லைவன மாகாத்மியம் 5. இவைகளிலும், சூதஸம்ஹிதை, ஸ்காந்தம், ஹாலாஸிய மாகாத்மியம், பேரூர் என்கிற ஆதிபுர மாகாத்மியம் பிலவன மாகாத்மியம், சுவேதாரணியமென்ற திருவெண்காட்டு மாகாத்மியம்,கமலாலயமென்றதிருவாரூர் மாகாத்மியம் இவை முதலான இதர ஸ்தல மாகாத்மியங்களிலும், சிவரகஸியம், சிவகதாமிர்த சாரசங்கிக முதலான இதிஹாஸ கிரந்தங்களிலும், பூமண்டலத்திலுள்ள ஸகல க்ஷேத்திரங்களிலும் இந்தச் சிதம்பர க்ஷேத்திரம் ஸர்வோத்தமம் என்றும், இதைப் பார்க்கிலும் இந்த க்ஷேத்திரத்திலிருக்கிற சிவகங்கை ஸர்வோத்தமம் என்றும் இதைப் பார்க்கிலும் இந்தச் சிதம்பர ஆலயம் ஸர்வோத்தமமென்றும், இதைப் பார்க்கிலும் சிந்தாமணி முதலிய சிதம்பரம் மகாமந்திரங்கள் ஸர்வோத்தமமென்றும் இதைப் பார்க்கிலும் ஸ்ரீ மூலநாதர் ஆலயம் ஸர்வோத்தமமென்றும் இதைப் பார்க்கிலும் சித்ஸபை கனகசபையின் மகிமையை வேத சாஸ்திர புராணங்களிலுலேகூடச் சொல்ல முடியாதென்றும், சித்சபையின் மத்தியிற் பிரகாசிக்கின்ற ரகசியமென்று சொல்லப்பட்ட சச்சிதானந்த மூர்த்தியாகிய ஸ்ரீமதானந்த நடராஜ மூர்த்தியே ஸர்வ தேவோத்தமரென்றும், இந்த மூர்த்திக்குச் சமானமாகவாவது உயர்ந்ததாகவாவது வேறே மூர்த்தி கிடையாதென்றும், இந்த மூர்த்தியை எந்தவிதமாகவாவது ஒருக்கால் தரிசனம் பண்ணினவர்கள் ஸகல பாபங்களிலிருந்தும் விலக்கப்பட்டு மோக்ஷத்தையடைவார்களென்றும், இந்த நடராஜமூர்த்தி

யைத் தரிசியாதவர்கள் பாபத்திலிருந்து விலகாமல் மறுபடியும் தாய் வயிற்றில் ஜனிக்கிறவர்களென்றுஞ் சொல்லப்படுகிறது.

பின்னும் இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்தின் மத்தியில் திருகூடபர்வதமென்று ஒரு மகாபர்வதமிருக்கிறதாகவும், அதினுடைய வடவண்டைச் சிகரத்தில் ஸ்ரீமூலஸ்தானமென்கிற ஸ்ரீ மூல ஆலயமிருப்பதாயும் தென்னண்டைச் சிகரத்தில் மகாமகிமை தங்கிய சித்ஸபை கனசபையென்கிற மகாசபையிருப்பதாகவும், அந்த மகிமையை வேத சாஸ்திரங்களினுலே சொல்ல முடியாதென்றும், பிரமா, ஆதிசேஷன், பிரகஸ்பதி, விக்கினேசுவரர், சுக்கிராச்சாரியர் இவர்களும் மேற்படி மகிமையைச் சொல்ல அசக்தர்களென்றும், மேற்படி பர்வதத்தின் மேலண்டைச் சிகரத்தில் நடன தரிசனத்துக்காக வந்த விஷ்ணு முதலான தேவர்கள் வாஸம் பண்ணுகிருர்களென்றுஞ் சொல்லுகிறது.

பின்னும், இந்தச் சித்சபை ஞானரூபமானதினுலே ஸ்வர்ணமென்கிற பதம் ஞானபரியாயமாக உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டிருப்பதினுலே ஞானிகள் இந்த ஞானரூபமான சித்ஸபையைச் சுவர்ண சபையென்று சொல்வதாயும் மேற்படி திருகூட பர்வதத்தின் தெக்ஷிண சிகரமாகிய சுவர்ண சிகரத்தில் இந்தச் சித்சபையிருப்பதால் இந்த ஸபையை ஸ்வர்ண சபையென்று ரிஷிகள் சொல்வதாயும, மகாதாண்டவ தரிசனமான பிற்பாடு பதஞ்சலி வியாக்கிர பாதர் முதலான ரிஷிகள் அந்தத் தாண்டபூமிக்கு நாலு பக்கத்திலும் தங்கப்பட்டங்களினுலே கவசம் போட்டு அலங்காரம் பண்ணினதாகச் சொல்லப்பட்டிருப்பதால் இந்த ஸபையை ஸ்வர்ண சபையென்று மனிதர்கள் சொல்வதாயுமிருக்கிறது.

பின்னும், இந்தச் சித்சபையே ஸ்ரீமந் நடராஜமூர்த்தி ஸ்வரூபமென்றும், ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் சித்சபைக்கும் கொஞ்சங்கூடப் பேதமில்லையென்றும் இந்தச் சித்சபை விராட்புருஷனுடைய ஹிருதய கமல ஸ்தானமென்றும், இந்தச் சித்சபைக்குக் கீழ்ப்பக்கம் பரமானந்தகூபமும், வடபக்கத்திற் சிவகங்கையுமிருப்பதால் இந்தச் சபை ஸர்வ

உத்தமமென்றும், இந்த ஸபையில் நடனஞ் செய்யும் ஸ்ரீ நட-ராஜமூர்த்தியை ஒரு தடவை தரிசனம் பண்ணினவர்களுக்கு ஸர்வாபீஷ்டமுங் கிடைக்கிறதென்றுஞ் சொல்லப்படுகிறது.

பின்னும் திருவாரூரிற் பிறந்தால் முத்தியென்றும் காசியில் இறந்தால் முத்தியென்றும் சிதம்பரத்தைத் தரிசித்தால் முத்தியென்றுஞ் சொல்லியிருப்பதில், இறப்பதும் பிறப்பதும் நமக்குச் சுவாதீனமில்லாததினுலும் நடராஜமூர்த்தியைத் தரிசிப்பது யாருக்குஞ் சுலபமாயிருப்பதாலும் இந்தச் சித்சபை விராட்புருஷனுக்கு ஹிருதய கமல ஸ்தானமாகவும், பூமண்டலத்திலுள்ள மற்றையஸ்தலங்கள் மற்றைய அவயவங்களாகவுஞ் சொல்லப்பட்டிருப்பதால் மற்றைய அவயவங்களைக் காட்டிலும் ஹிருதய ஸ்தானத்தில் ஜீவனுக்குப் பிரகாசம் அதிகமாயிருப்பது போலவே மற்றைய க்ஷேத்திரத்திற் பிரகாசம் அதிகமென்றும், ஸர்வ இந்திரியங்களும் ஸுஷுப்தி காலத்தில் ஹிருதயத்தில் லயத்தையடைவது போலவே ஸர்வ க்ஷேத்திர வாசிகளாயிருக்கிற ஸகல தேவதைகளும் அர்த்தஜாம பூஜாகாலத்தில் இந்தச் சிதம்பர ரகஸிய ஸ்தானத்தில் லயத்தையடைவதாயும், அந்தக் காலத்திற் பகவான் மிக விசேஷ பூரணும் சத்தோடிருப்பதால் அந்தக் காலத்தில் தரிசனம் மிக விசேஷமென்றும், இந்தச் சிதாகாச மூர்த்தியே ஒவ்வொரு அம்சத்தினுலே மற்ற க்ஷேத்திரங்களில் வசிப்பதாயும், இந்த க்ஷேத்திரத்திலே ஸார்வகாலமும் பரிபூரணமாய் வஸிப்பதாயும் சொல்லப்படுகிறது.

மேல் சொல்லிய மகாமகிமை பொருந்திய இந்தச் சித்ஸபையானது, முன் காலத்தில் கவுடதேசாதிபதியாகிய ஹிரணியவர்ம சக்கரவர்த்தி என்னும் ஒரு ராஜாவினுலே தேவசிற்பியாகிய விசுவகர்மாவைக் கொண்டு புதுப்பிக்கப்பட்டதென்றும், அந்த ராஜாவினுடைய பிரார்த்தனையின் பேரில் வைதிக க்ஷேத்திரமாகிய இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்துக்கு நித்திய நைமித்திக காமிய பூஜைகளை வைதிக மார்க்கமாய்ச் செய்யவேண்டிதற்கு மஹாபாஷிய கர்த்தாவாகிய பதஞ்சலி பகவான் பூஜாபாதஞ்சலமென்கிற வைதிக பூஜா சூத்திர முதலான கிரந்தங்களைச் செய்து கொடுத்த

தாயும், அதில் சொல்லியிருப்பதுபோல வைதிக உத்தமா ளாகிய திருஸஹஸ்ரமுனீசுவராளென்ற தீக்ஷிதாளாலே ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கு நித்திய நைமித்திக காமிய பூஜைகள் வைதிகமார்க்கமாகவே நடத்தப்படுவதாயுஞ் சொல்லப்பட்டிருப்பதால் இந்த க்ஷேத்திரம் எல்லா க்ஷேத் திரங்களையுங் காட்டிலும் ஸர்வோத்தமமென்று ஸர்வ ஜனங் களாலேயுஞ் சாதாரணமாக அறியத் தகுந்ததாயிருக்கிறது.

மேற்சொன்னபடி மகாமகிமையுள்ள சித்ஸபையில் ஸதாகாலமும் நடனஞ் செய்கிற ஸ்ரீமதானந்த நடராஜ மூர்த்தியானவர் இந்தச் சித்ஸபை கனகசபையின் மேல் பாகத்தில் நேரிட்டிருக்கும் ஜீர்ணத்தையும் கலி வைப வத்தாலுண்டாயிருக்கும் மாலின்யத்தையும் யோசித்து முன் காலத்தில் ஹிரண்யவர்ம சக்கிரவர்த்தி இந்த சித்சபைகளின் உபரிபாகத்தைப் புதிதாய்ச் செய்தது போல இக்காலத்தில் இந்தச் சபைகள் புதிதாய்ச் செய்து சம்புரோக்ஷணை கும்பாபிஷேகங்கள் செய்யத் தகுந்தவர் கள் யார் என்று யோசித்துக் கலிகாலத்தில் தக்ஷிண தேசம் தர்மதேசமாயிருப்பதாலும் அதிலேயும் ஜீர்ணால யங்களைப் புதுப்பிவித்துக் கும்பாபிஷேகம் பண்ணி வைப்பதில் பக்தி சிரத்தை நாட்டுக் கோட்டைச் செட்டிமார் களிடத்திலேயே யிருப்பதாலும் அவர்களே இந்தக்ஷேத்திரத் தில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகஞ் செய்யத் தகுந்தவர் களென்று உத்தேசித்து அவர்களை அந்தர்யா மிரூபமாய் ஏவுதல் செய்ய மாணிக்கவாசகர் ஹாலாஸிப்பதியினுடைய அனுக்கிரகம் பெற்று இந்தச் சிதம்பரத்துக்கு வந்ததுபோல மேற்படி நகரத்துச் செட்டிமார்களும் ஹாலாஸியபதியினு டைய அனுக்கிரகம் பெற்று இந்தச் சிதம்பர க்ஷேத்திரத் திற்கு வரவேணுமென்று அனுக்கிரகம் பெற நிச்சயித்து மேற்படி ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தை ஜீர்ணோத்தாரணமும் மகாகும்பாபிஷேகமுஞ் செய்வித்து ஸ்ரீசுந்தரேசுவரருடைய அனுக்கிரகத்தையும் அந்தக் காலத்தில் தில்லை வாழ்ந்தணர் கள் மூலமாகச் சிதம்பரம் ஸ்ரீமந்நடராஜமூர்த்தியின் கிருபையையும் பெற்று மேற்படி நகரத்துச் செட்டிமார்கள், பக்தி சிரத்தையோடு இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு வந்து ஸ்ரீமந்நடராஜமூர்த்தியைத் தரிசித்து அவர் கிருபை யையும் அடைந்து உடனே திருஸஹஸ்ர முனீசுவராள்சபை

கூடும் ஸ்தானமாகிய பேரம்பலமென்கிற தேவசபையில் வந்து பொது தீக்ஷிதாள் இவர்களுடைய அனுமதியும் பெற்று இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்தைச் சித்ஸபா சம்புரோக்ஷணத்திற்கு முந்தியும் பிந்தியும் ஜீர்ணோத்தாரணஞ் செய்து சித்ஸபை கனகசபையின்மேல் வேலைகளை மட்டும் பிரித்துப் புதுப்பித்து இப்போது இருப்பதுபோல் கொஞ்சங்கூடத் தாரதம்யமில்லாமல் சாஸ்திர விதிப்படி சித்ஸபைக்குத் தங்கமுலாம் போட்ட ஓடும் கனகசபைக்குத் தாமிரஓடும் போட்டு ஜீரணோத்தாரண மகாகும்பாபிஷேகஞ் செய்விப்பதாக நிச்சயித்தது.

அது முதல் இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்தில் நடந்திருக்கிறதும் நடக்கப் போகிறதுமான வேலைகளென்னவென்றால் மேற்படி சித்ஸபைக்குப் பால ஸ்தாபனஞ்செய்த பிறகு காலஹரணமில்லாமல் வேலைகள் முழுமையும் இப்போதிருக்கிற சபையின் மேல்கோப்புக்குச் சமமாகவே மேற்படி நகரத்துச் செட்டிமார்கள் செய்து முடித்து விட்டார்கள். தங்கமுலாம் பூசின ஓடுகளும் பூர்ணமாய் முடிந்துவிட்டது. ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்குச் சமானமாகச் சொல்லப்பட்டிருக்கிற நாலு கோபுரங்களும் ஜீர்ணோத்தாரணஞ் செய்து முடிந்துவிட்டது. முக்குறுணிப் பிள்ளையார் என்கிற மஹா விநாயகர் ஆலயமும் நகரத்தார்களால் முதன்மையாகப் புதிதாய்க் கட்டிக் கும்பாபிஷேகமும் முடிந்துவிட்டது. பரமானந்தகூபம், சிவகங்கை மண்டப முதலான அனேக மண்டபங்களும் அனேக பிரகாரங்களும் மதில்களும் புதுப்பிவித்துப் பரிஷ்காரஞ் செய்திருக்கிறது. விருஷப வாகன முதலான அனேக வெள்ளி வாகனங்களும் அவைகள் வைப்பதற்குப் புதுவாகன மண்டபமும் புதிதாகவே செய்திருக்கிறது.

நாளது வருஷம் வைகாசி மாதம் 2-ஆம் தேதியில் கனகசபைக்குப் பாலஸ்தாபனஞ் செய்து முன்போலவே பரிஷ்காரமாக மரவேலைகள் செய்து செப்போடும் போட்டிருக்கிறது. நிருத்த சபையிலும் தேவசபையிலும் அவசியமான மரவேலைகளும் விமானங்களுஞ் செய்து கும்பாபிஷேகம் முடிந்துவிட்டது. சித்ஸபை சந்நிதியிலும் சிவகாமி அம்பாள் சந்நிதியிலுமிருக்கிற 2-வது துவஜஸ்தம்பங்களின் பீடமுதல்

புதிதாய்ச் செய்வித்துத் தங்கமுலாம் பூசி முடிந்திருக்கிறது. சமீபத்திற் பிரதிஷ்டை செய்யப்படும் ஸ்ரீமூலஸ்தானத்தின் விமானம், உமையம்மன் விமானம், சிவகாம சுந்தரி அம்பாள் விமானம், சண்டிகேசுவரர் விமானம் இவைகள் முழுமையும் புதிதாகவே மரவேலை முதலானது செய்து ஓடுகள் போட்டுச் சித்தமாயிருக்கின்றன. பைரவர் விமானமும் புதுப்பிவித்து ஸ்வர்ண ஸ்தூபிகளும் வைத்துச் சித்ஸபா சம்புரோக்ஷணத்துக்கு முந்தி ஸ்ரீமூலநாதருக்கு ஸ்வர்ணபந்தன சகித கும்பாபிஷேகமும், மேற்படி விமானத்துக்கும் உமையம்மன் மேற்படி விமானம், சிவகாம சுந்தரி அம்பாள் மேற்படி விமானம் இவைகளுக்கும் மற்றைய பரிவார தேவதைகளுக்குங் கும்பாபிஷேகம் நடக்கப் போகிறது.

நாளது வருஷம், தை மாதம், 18-ஆம் தேதியில் சித்ஸபை ரகசியத்திற்கும் அதன் விமானத்துக்கும் பாலஸ்தாபனஞ் செய்து அதற்குப் பிற்பாடும் மகா கும்பாபிஷேகத்து முன்னுமுள்ள மத்திய காலத்தில் சித்ஸபையின் மேல் கோப்புகளை மட்டும் பிரித்துச் சாஸ்திர விதிப்படி மரவேலைகள் செய்து தங்கமுலாம் பூசின ஓடுகள் போட்டு ஷை ஸ்தூபிகளும் வைத்து கர வருஷம் சித்திரை மாதம் 4-ஆம் தேதி புதவாரம் திதியும் புனர்வசு நட்சத்திரமுங்கூடிய சுப தினத்தில் லக்கினுதிசராகிய புதன் லாபஸ்தானமாகிற மேஷத்தில் இருக்கக் குருவினுல் பூரணமாய்ப் பார்க்கப்பட்டிருக்கிற மிதுனலக்கினத்தில் சித்ஸபை ரஹஸிய ஸ்தானத்துக்கும் சித்ஸபை விமானத்துக்கும் கனக சபைக்கும் மகா கும்பாபிஷேகமும், அன்று இராத்திரி ஸோமாஸ்கந்த மூர்த்தி விருஷப வாகன காக்ஷியும், அதற்கு மறுநாள் குரு வாரமும் புஷிய நட்சத்திரமுங்கூடிய சுப தினத்தில் ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்குஞ் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் மஹா ரதோத்ஸவமும், அதற்கு மறுநாள் சுக்கிரவாரதினம் காலமே ஆயிரக்கால் மண்டபத்தில் ஆருத்திரா அபிஷேகம் போல் மகாபிஷேகமும், அன்று மத்தியான சமயத்தில் ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்திக்கும் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாளுக்கும் ஸ்ரீசித்ஸபா பிரவேசமும், அதே சமயத்தில் மகா மகிமை பொருந்திய ரகஸிய தேவதரிசனமும் நடப்பிவிக்க நிச்சயித்திருக்கிறபடியாலும், ஷை கும்பாபிஷேகத்துக்கு ஆசாரிய ரித்துவிக்குகளாக ஏற்படுத்தப்பட்ட தீக்ஷிதர்கள்

மேற்படி கும்பாபிஷேகத்துக்குப் பூர்வாங்கமாகவும் ஆத்ம சுத்தியின் பொருட்டும், நாளது வருஷம் தை, மாசி, பங்குனி மாதங்களில் அக்கினிஷ்டோமம் மஹாக்கினி சயனமென்ற கருடசயன முதலான அனேக யாகங்கள் செய்யப் போகிற படியாலும், அந்தக் காலங்களில் ஸ்ரீ நடராஜ பக்தியுள்ள சகல ஜனங்களும் குடும்ப சகிதமாய் இவ்விடத்தில் வந்தி ருந்து மேற்படி கும்பாபிஷேக முதலான மஹோத்ஸவங் களைத் தரிசித்து நேத்திரானந்தத்தையடைந்து தங்கள் தங்களுடைய மனோபீஷ்டங்களைப் பெற்றுக் கொள்ளும் படிக்குத் திரிஸஹஸ்ரமுனீசுவராள் என்கிற பொது தீக்ஷிதா ளாகிய நாங்கள் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தியையும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாளையும் பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு: தெய்வ பக்தியுள்ள புண்ணியவான்களு டைய திரவியங்களும் இந்தத் தருமத்தில் சேருவது உசித மென்று யோசித்து அப்படிச் சேர்ந்த பொருளையுஞ் சேரு கிற பொருளையும் மேற்படி நகரத்தார்கள் உபயோகித்து வருகிறார்கள்.

நடவடிக்கை முறை

விகிர்தி வருஷம் தை மாதம் 18உ சித்சபைக்கும் அதின் விமானத்துக்கும் பாலஸ்தாபனமும்.

விகிர்தி வருஷம் பங்குனி மாதம் 27உ	ஸ்ரீ மூலநாதேசுரருக்கும் அதன் விமானத்துக்கும் உமயாம்பிகைக்கும் அதின் விமானத்துக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அதின் விமானத்துக்கும் மற்ற பரிவாரங்களுக்கும் கெட ஸ்தாபனமும்,
கர வருஷம் சித்திரை மாதம் 1உ ஞாயிற்றுக் கிழமை மிதுன லக்கினத்தில்	ஸ்ரீ மூலநாதேசுரருக்கும் அதின் விமானத்துக்கும் உமயாம்பிகைக்கும் அதின் விமானத்துக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அதின் விமானத்துக்கும் மற்ற பரிவாரங்களுக்கும் சம்புரோக்ஷண கும்பாபிஷேகமும்

விகிர்தி வருஷம் பங்குனி மாதம் 28உ	சித்ஸபையில் சிதானந்தமூர்த்தி யென்று சொல்லப்பட்ட ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் பராசக்தி யாகிய சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் கனக சபைக்கும் சித்ஸபை விமானத்துக்கும் கெட ஸ்தாபனமும்,
கர வருஷம் சித்திரை மாதம் 4உ புதன் கிழமை மிதுன லக்கினத்தில்	சித்சபையில் சிதானந்த மூர்த்தி யென்று சொல்லப்பட்ட ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் பராசக்தி யாகிய சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் கனகசபைக்கும் சித்ஸபை விமானத்துக்கும் சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகமும்,
கர வருஷம் சித்திரை மாதம் 4உ இராத்திரியில்	சோமாஸ்கந்த மூர்த்தி முதலான பஞ்சமூர்த்திகளுக்கும் வெள்ளி வாகனங்கள் சகிதமாய் தெருவடைச்சான் உற்சவமும்,

மேற்படி 5உ குருவாரம் ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் மஹாரதோற்சவமும்,

ஷை 6உ சுக்கிரவாரம்	ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ ஆருத்திராபிஷேகம் பால மகாபிஷேகமும், அன்று மத்தியான சமயத்தில் சித்சபா பிரவேசமும், ரகசிய தேவ தரிசனமும் நடக்கப் போகிறது.

இங்ஙனம்,

(ஒப்பம்) தில்லை ஸ்தல திருஸஹஸ்ர முனீசுரர்
என்கிற பொது தீக்ஷிதர்களுக்காக,

பாண்டியராஜா தீக்ஷிதர்
ஸ. தங்கசாமி தீக்ஷிதர்
சந்திரசேகர தீக்ஷிதர்
சிதே-மணியம்-வெ-ஆபதோத்தாரண தீக்ஷிதர்
தொறஸாமி-விருஷபத்துவஜ தீக்ஷிதர்
செ. சந்திரசபாநடேச தீக்ஷிதர்
சிவ. ஜகநாத தீக்ஷிதர்
வ. சுப்பு தீக்ஷிதர்
அ. பாலசுப்பிரமணிய தீக்ஷிதர்
கு. சபாநாத தீக்ஷிதர்
மீனுக்ஷிசுந்தர தீக்ஷிதர்

அ. வெங்கடேச தீக்ஷிதர்
வெங்கடேச கணபதி தீக்ஷிதர்
பொன்னுசாமி தீக்ஷிதர்
நி. சிதம்பரேச தீக்ஷிதர்
சாம்பமூர்த்தி தீக்ஷிதர்
ந. வேங்குடுசாமு தீக்ஷிதர்
சிவ. தங்கசாமி தீக்ஷிதர்
வெங்கிடசுப்பு அப்பாசாமி தீக்ஷிதர்
ஐ. தங்கசுவாமி தீக்ஷிதர்
வெ. அப்பாசாமி தீக்ஷிதர்

விகிர்தி வருஷம் மார்கழி மாதம் உச-தேதி
ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிற்சபேசன் திருவடி வாழ்க.

சுபம்

சிதம்பரம் ஸ்ரீசித்ஸபா.சம்புரோக்ஷண சித்விலாஸ பத்திரிகை

முற்றிற்று.

இஃது சிதம்பரம் செங்கழுநீர்ப்பிள்ளையார் கோவில் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரம்மவித்தியா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் கர (1891) ஆண்டில் நகரத்தார்கள் செய்த கும்பாபிஷேகம்

கண்டனூர் நா. பெ. நா. மு. முத்துராமன் செட்டியார்
1891-இல் இயற்றியது

ஆயிரத்தோ டெண்ணூற்றுத் தொண்ணூற்றொ ராம்வருட
மேயகர வற்சரத்தின் மேடமா தந்தேதி
தூய நான் கினிற்புந்தி வாரமுநற் சுபமிதுன
நேயதிரு வாதிரைநாள் நேமமுள வணிகரெலாம்

தில்லைதனின் நடராச தேவர்முதற் றேவர்கட்கு
மெல்லையுள கும்பாபி டேகமுமங் கினிமையதாய்
வல்லமையாந் தீக்ஷிதர்கள் வைதீக மாகவுமே
நல்லதின் நடத்தினதை நான் கூற வெளிதாமோ.

உள்ளங் களிக்கும் பொன்னிநாட் டுயர்வாய் விளங்கும் புலியூரில்
வள்ள லாகு நடராசன் விமான மதற்கு வணிகரெலாங்
கொள்ளுஞ் சொன்ன வோடிருபத் தோரா யிரத்தி னறுநூறு
கள்ளமின்றிச் செய்ததைக்கண் கோடிகாணக் காணுமதோ.

சிற்சபையின் றூபியபி டேகமதைத் தெரிசிக்கச் சீவரெல்லா
மற்புதமண் டபங்களெல்லா மெறியுமவ் வசமேயா யகங் குளிர்ந்தே
நிற்புறுமெய் வாக்கு மொத்துக் கண்டுகளித் ததை யாவர் நிகழ்த்தக்
கூடும்

விற்பனனென் றுரையாதி சேடனுமா யிரநாவால் விளம்பொணுதே

சத்திரந்தா னமைத்நதொறு தவப்பேற்றுற் சாவன்ஞ வகையார் தாமு
முத்திதலஞ் சிதம்பரமென் றுணர்ந்தாங்கு தமமினத்தார் முழுதுங்கூடி
யத்தமது வேண்டு மட்டுஞ் செலவுகள்செய் தானந்த நடராசர்க்குப்
டத்தியாற் கும்பாபி டேகஞ்செய் திட்டதையார் பகர்வர் மாதோ.

மாயிருஞா லம்படைத்த பிரமனுர் வணிகர்தமை வகுத்நதற்குத்
தூயபலன கைமேலே தோன்றிடச்செய் தாரெதனுற் சொல்வா
யென்னிற்

கோயிலெனுந் தலத்திறைக்குக் கும்பாபி டேகமதைக்
குறிப்பாய்ச் செய்தே
யாயிரக்கால் மண்டபத்திற் றெரிசனமும் பெறச்செய்த
வடைவி னுலே. ★

உ

சிதம்பரம்

ஸ்ரீ ஸபாநாயகர் கோயிலில் அமைந்து இருக்கும்

ஸ்ரீ உமாபார்வதி

ஸமேத

ஸ்ரீ மூலநாத ஸ்வாமிக்கு

ஜீர்ணோத்தாரண, ஸ்வர்ணபந்தன,

அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேகம்

காளயுக்தி வருஷம் தை மாதம் 25-ஆம் தேதி (7-2-1979)

புதன்கிழமை

காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்

மீன லக்னத்தில் நடைபெறும்.

உ

கோயிற் புராணம்

ஞாலத்தாயிரங்கோடி நற்றான முளவவற்றின்
ஏலத்தானலமார விடங்கொண்ட வெழிற்றில்லை
மூலத்தா னத்தொளியாய் முளைத்தெழுந்த சிவலிங்கக்
கோலத்தா னின்பூசை கொள்வானென் றுரைசெய்து.
(வியாக்ரபாதச் சருக்கம், 7

சகளநிட் களமெமக்குத் தஞ்சமா மேனியாநீ
யுகளமு முணரிற்சத்தி யுபாதான மாகப்பாச
நிகள மதகற்றவன்பர் நேர்நிக ழுருவமொன்றான்
றகளமாய் ஞானமேயா யகண்டமா யமர்ந்ததன்றே
(பதஞ்சலிச் சருக்கம் 65)

திடமதன் முடிவுதில்லைத் திகழ்வன மாகும்வாய்தல்
விடவட பாலிலால மென்னிழ றன்னிலந்தத்
தடவதைக் கொழுந்துமூலத் தானமாங் குறியாயிந்தப்
புடவியி லமரர்போற்றும் பொற்பமர் அற்புதத்து.

(பதஞ்சலிச் சருக்கம் 76)

பூசையங் கியற்றிக்கூத்தும் புந்திசெய் தரும்புலிக்கால்
ஆசிலா முனியிருந்தானவனுட னமர்கநாமும்
ஓசைகொள் பூசம்பொன்னேடு றுதினம் பொருந்துமுச்சி
தேசுறு நடநீர்காணச் செய்துமென் றருளிச்செய்தான்.

(பதஞ்சலிச் சருக்கம் 77)

பொன்னி வடகரையிற் பொன்னம்பலக் கோயில்,
மன்னு சிவகாமி மகிழ்ந்தேத்த—நன்னடன
மாடுஞ் சபாபதியே யம்மையுமை கண்குளிர,
நாடுந் திருமூல நாயகா.........

—சிவநாமக் கலிவெண்பா

திருமந்திரம்

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்.
மானுட ராக்கை வடிவு சதாசிவம்.
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே.

அப்பர் ஸ்வாமிகள் திருக்கடவூர் (4ஆம் திருமுறை)

பாலனுக் காயன்று பாற்கடல் ஈந்து பணைத்தெழுந்த
ஆலினிற்கீழிருந் தாரணம்ஓதி அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமும்கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்த பிரான் கடவூருறை உத்தமனே.

அப்பர் ஸ்வாமிகள், திருத்தாண்டகம்

பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பாழியார் பெரும்பற்றப்
புலியூர்மூ லட்டானத்தார், இருப் புகலார் இரும்பூளை யுள்ளார்
ஏரார் இன்னம்ப ரார்சங்கோய் மலையார் இன்சொல்
கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார் கருப்பறிய
லூரார் கரவீ ரத்தார், விரும்பமரர் இரவுபகல் பரவி
யேத்த வீழி மிழலையே, மேவி னாரே

மணிவாசகர், திருவுந்தியார்

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற

உ

ஸ்ரீ மகா கணபதி துணை

ஐம்பதுகோடி யோஜனை சதுரச்ர விஸ்த்தீர்ணம் கொண்ட (ஒரு யோஜனை என்பது பத்து மைல்) விராட்புருஷ ரூபமான பூமியின் இருதய ரூபமாயும் முக்தி க்ஷேத்திரங்கள் நான்கினுள், ஒரு தடவை தெரிசித்த மாத்திரத்தில், கைவல்யம் அளிப்பதும், பஞ்ச பூதஸ்தலங்கள் ஐந்தினுள், ஆகாசதத்துவம்கொண்டதும், எல்லா க்ஷேத்திரங்களிலும், பூஜிக்கப்படும், சைவ, வைணவ சாக்த, வைநாயக, சௌர பைரவ, கிராம தேவதைகள் முதலான மூர்த்திகளின் ஜீவகலையை, இரவில் தன்னிடம் ஒடுக்கி பகலில் அவ்வுருவங்களில் பிரகாசிக்கும்படி செய்தும், திருச்சி, திருப்பதி, ஸ்ரீரங்கம், ஆஜ்மீர், அட்டவீரட்டம், ஆரூர், ஆவுடையார் கோயில், திருக்கோணமலை, விந்தியமலை, (விஜயவாடா) திருக்கழுக்குன்றம், திருவானைக்கா, ஆகிய பதினொரு ஸ்தலங்களையும், விநாயகர், ஸ்கந்தர், விஷ்ணு, பிர்மா, பைரவர், ஸோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, நந்தி, துர்க்கை, சண்டேசர், சூரியன் ஆகிய பரிவாரங்களாகக் கொண்டதும், கோகர்ணம், ஸ்ரீசைலம், திருவிடைமருதூர், காசி, மதுரை ஆகிய தலங்களில் பூஜிக்கப்படும் மூர்த்திகளை, ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்னும் பஞ்சமுகங்களாகக் கொண்டதும், சிதசபை, கேதாரம், திருவண்ணாமலை, காளஹஸ்தி, காஞ்சீபுரம், ராமேஸ்வரம், ஆகிய இத்தலங்களை, இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்த்ரம் என்ற ஆறு அங்கங்களாகக் கொண்டதும், பிர்மா, விஷ்ணு முதலான தேவர்களாலும் ஸ்ரீபதஞ்ஜலி. வியாக்ரபாதர், உபமன்யு, வியாஸர், ஜைமினி, சுகர், சௌனகர், முதலான முனிவர்களாலும், ஸ்ரீமூலர் கொங்கணர், போகர்முதலான சித்தயோகிகளாலும், சமய, சந்தான ஆசார்யர்களாலும் போற்றப்பட்டதும், ஆதிசங்கரர் அவதரித்து சன்யாஸம் பெற்று, வேதாந்த சாஸ்திரங்களை இவ்விடத்திலேயே இயற்றியும், அவ்விதமே, பாணினி, காத்தியாயனர், பதஞ்ஜலி இவர்களால் வியாகரண சூத்திரம், வார்த்திகம் மஹாபாஷ்யங்களை, பரமனது டமருகத்வனியில் இருந்து வெளிவந்த பதிநான்கு சூத்திரங்களைக் கொண்டு செய்ததும், மற்றும் பல முனிவர்கள் அச்சூத்திரங்களைக்கொண்டே பற்பல சாஸ்த்திரங்களை வெளியிட்டதும் சிவரகஸ்யத்தின் பேதமான சிதம்பர ரகஸ்யம் என்கின்ற இதிகாஸம் முதலானதுகளில் விசேஷ சரித்திரங்களால் உத்கர்ஷம் வாய்ந்ததுமான, இச்சிதம்பர க்ஷேத்திரத்தில், ஸ்ரீசித்ஸபையில் ஸ்ரீவித்யா, தஹரவித்யா, ஸம்மேளன ஸபாநட வித்யா யந்திர மத்யத்தில் (ரகஸ்யஸ்தானத்தில்)ஞானக் கண்ணால் அறியத் தகுந்த நிர்குணாத்மகமான, ஸ்ரீநடராஜரின்

தத்புருஷாத்மக விக்ஞானமயகோசரூப வடக்குப் பிரகாரத்தில் ஸகுணாத்மக லிங்கரூபம் கொண்டு, உமா ஸகாயாராய், ஸகல பரிவாரங்களோடு பிரகாசிக்கின்ற ஸ்ரீமூலநாதரின் பெருமை மனோ வாக்குக்கு எட்டாததே இவ் லிங்கமூர்த்தியைப் பூஜித்துத்தான் பதஞ்ஜலி முதலானோர்களும், ஸ்ரீமூலர் முதலான சித்தயோகிகளும் நித்ய-நிலையை பாரமேச்வர நடனத்தை-ஸதா தெரிசிக்கும் பதவியை அடைந்தவர்களானார்கள். ஞானசம்பந்தர் முதலான சமயாசார்யர்கள் நால்வரும் கனகஸபையில் திருமுறையால் துதித்ததும், நிஷ்கள, ஸகள ஸகளநிஷ்களாத்மகமான (ரகஸ்யம ஸ்ரீமூல நாதலிங்க மூர்த்தி. நடராஜ மூர்த்தி) இம்மூன்றையும் ஒன்றாகக் கருதியதாக ஆகும்.

மேலும் அப்பர் ஸ்வாமிகள் திருவீழிமிழலை திருத்தாண்டகத்தில் (பா 6) பெரும்பற்றப் புலியூர் மூலட்டானத்தார் என்று, இவ் விலிங்க மூர்த்தியைக் குறிப்பிடுகிறார் தில்லையில் அருளிச் செய்த அரியானை அந்தணர்தம் சிந்தையானை'' என்னும் திருத்தாண்டகம் இவ்விலிங்க மூர்த்தியைத்தான் குறிப்பிடுவதாக சைவ சமயிகள் அபிப்பிராயம். உமாபதி சிவமும் கோயிற்புராணம், வியாக்கரபாத சருக்கத்தில் இம் மூர்த்தியை, விசேஷித்துக் கூறுகிறார். மற்றைய சூதஸம்மிதை முதலான பல புராணங்கள் மிக விசேஷமாய்க் கூறுகிறது. இவ்விதம் பெருமை வாய்ந்த, ஸ்ரீ மூல ஸ்தானத்தில் விளங்குகிற ஸ்ரீமூலநாதர் என்கின்ற ஜோதிஸ்வரூபமான ஸ்வயம்புலிங்க மூர்த்திக்குப் பரிவாரங்களோடு,நாளது காளயுக்தி வருஷம் தைமாதம் 25 ௳ 7-2-1979 புதன்கிழமை மிருகசீரிஷ நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 7-45க்கு மேல் 9-30 நாழிகைக்குள் மணி காலை 9-00க்கு மேல் 10-00க்குள் மீன லக்னத்தில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதால் பக்திமான்கள் அனைவரும் வந்து தெரிசித்து பரமேச்வரனுடைய கிருபையை அடைய விரும்புகிறோம்.

குறிப்பு : நாட்டுக்கோட்டை நகரத்தில் விளங்குகிற ஆத்திக்காட்டு தெக்கூர், நகரத்தார், மாத்தூர் கோயில் சிவக்ஷேத்திரம் மதுரை ஸ்ரீ சிவகாமி மில் உரிமையாளர் ஸ்ரீகருமுத்து தியாகராஜ செட்டியார் பேரனும், கருமுத்து சுந்தரம் செட்டியார் குமாரனுமான கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் அவர்களால், ஏகதேசமாக இக்கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. மேலும் அவர்கள் மாதம்தோறும் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ருத்திராபிஷேகம், பஞ்ச முகார்ச்சனை நடத்தி வருகிறார்கள்,

இக்கும்பாபிஷேகத்தை எங்கள் பாதஞ்சல சூத்திரத்தில் சொல்லியபடி விரிவான அதாவது முப்பத்தி மூன்று குண்டங்கள் அறுபத்தி நாலு ஸ்தம்ப பூஜைகளுடன் கூடிய மஹாயாகத்துடன் நடத்தவும் இசைந்துள்ளார்கள்.

மேற்படி செட்டியாரவர்கள் இக்கோயிலில் உள்ள முக்கிய ரிபேர்களையும் சுதை வர்ண படம் முதலிய திருப்பணிகள் செய்துள்ளார்கள். பின்னும் ஸ்ரீ துர்கையம்மன் கோயில் முகப்பு கோபுரம் அமைத்தும்கர்ப்பகிரஹம், அர்த்தமண்டபம்முதலானஇடங்களுக்கு பாலீஷ் கல் பதிப்பித்தும். கும்பாபிஷேகமும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள்கோயில் வடக்கு பச்கம் மதில் திருப்பணி செய்து அதற்கும் அண்மையில் கும்பாபிஷேகம் செய்ய இசைந்துள்ளார்கள்.

இப்படிக்கு,

ஸ்ரீ ஸபாநாயகர் கோயில் பொது தீக்ஷிதர்கள்.

செகரெட்ரி : க. விவேகானந்த தீக்ஷிதர், B. Sc.

வை. செகரெட்ரி : எ ஞானஸ்கந்த தீக்ஷிதர்

கமிட்டி மெம்பர்கள் :

சி. வெங்குடுசுப்பு தீக்ஷிதர்
அ. தெ. நிர்த்தராஜ தீக்ஷிதர்
செ. ச. கல்யாண தீக்ஷிதர்
ந. அ. நடனகுஞ்சிதபாத தீக்ஷிதர்
ச. க. சதாசிவ தீக்ஷிதர்
சு. சுந்தரமூர்த்தி தீக்ஷிதர்
தா. மா. பரமேச்வர தீக்ஷிதர்

திருப்பணி கமிட்டி

தலைவர் : R. கனகசபை பிள்ளை

செயலாளர் : G. வாகீசம் பிள்ளை

பொருளாளர் : R. பாலசுப்பிரமணிய செட்டியார்

உபதலைவர்கள் :

N. M. பொன்னம்பலம் பிள்ளை
Dr. ரத்தினவேல் சுப்பிரமணியம்
Dr. K. ரங்கசாமி
Dr. M. நடராஜன்

துணைச் செயலாளர்கள் :

K. சாமிநாதன்
R. ராமலிங்கம்

நிகழ்ச்சி

காளயுக்தி-ஞு

தை-மீ 18-உ 31—1 -1979 புதன்கிழமை சதுர்த்தி

காலை மஹா கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம்

தை 19-உ 1—2—1979 வியாழக்கிழமை காலை

ஆசார்யர்கள் கூச்மாண்ட ஹோமம்

தன பூஜை, ஸ்ரீ நடராஜர் அனுக்ஞை

தை 20-உ 2—2—1979 வெள்ளிக்கிழமை

மஹா ஸங்கல்பம், ஆசார்ய வரணம், நாந்தி

தை 21-உ 3—2—1979 சனிக்கிழமை காலை

வாஸ்து சாந்திமாலை அங்குரம்&பிரதி ஸரம்

தை 22-உ 4—2—1979 ஞாயிற்றுக்கிழமை காலை

ஸ்ரீ ஸ்ரீமூலநாதருக்கும் பரிவாரங்களுக்கும் ஸ்னபன

ஹவனத்துடன் மஹாபிஷேகம்

மாலை 3 மணிக்கு கலா கர்ஷணம்

6 மணிக்கு மேல் யாகசாலாபிரவேசம் 1-வது காலம்

தை 23-உ 5—2—1979 திங்கட்கிழமை காலை

அஷ்டபந்தன ஸம்ஸ்காரம் 2-வது காலம்

மாலை மஹா வித்யாஜபம் 3-வது காலம்

தை 24-உ 6—2—1979 செவ்வாய்க்கிழமை காலை

அங்கன்யாஸார்ச்சனை, வஸோர்தாரை 4-வது காலம்

மாலை ஸ்பருசாகுதி 5-வது காலம்


தை 25-உ 7—2—1979 புதன்கிழமை காலை 6-வது காலம்

ஷை காலை 9-க்கு மேல் 10 மணிக்குள்

மீன லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம்

இரவு மஹாபிஷேகம்-மண்டலாபிஷேகம் ஆரம்பம்-லக்ஷார்ச்சனை ஆரம்பம்—பஞ்சமூர்த்திகள் வீதி உலா.

கும்பாபிஷேக காலத்தில் வேத பாராயணம், திருமுறை பாராயணம், இன்னிசை, சமயப் பிரசாரங்கள் முதலான விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறும்.



தில்லையெனப் பெயர்சொல்லும் மாட்சி மைக்குத்
திகழ்சான்றும் தில்லைச்செடி தன்னை யிங்குக்
கல்லில் உயர்எழிலாக்கி, மூலட் டானர்
கருவறைக்குப் பின்புறத்தில் அமைத்துள் ளார்கள்.



வல்லபை கணபதியின் சிற்பத் தோற்றம்
வடிவழகாய் நின்றருளும் அழகின் மாட்சி!

இதனருகே கூத்தாடும் விஞயகரும் உள்ளார்
எழிலார்ந்த பல்லீசர் தாமும் உள்ளார்.



கீழ்த்திசைக் கோபுரத்தின் தெற்குப் பக்கம்
திகழ்கின்ற தட்சிணு மூர்த்தி நம்மை
வாழ்த்திசைத்து, எந்நாளும் சிவநெறியின்
வளருண்மை எடுத்துரைக்கும் காட்சி காணீர் !!



சனகாதி முனிவரவர் நால்வ ருக்கும்
தட்சிணு மூர்த்தியவர் ஆலின் கீழே
மனமுணரக் கற்பிக்கும் மாட்சி காணீர் !
மாண்சுதையின் தோற்றமிது மூலட் டானர்
தனதுசுற்றில் தட்சிணு மூர்த்தி கோட்டம்
தனிலிருக்கும் வண்ணத்தின் சிறப்பும் உண்டு.

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்

மூலட்டாண ஈசுவரர்



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம் மூலட்டான ஈசுவரர் கோயில்



குடநீராட்டுப் பெருவிழாவில்

நிகழவிருக்கும்

பன்னிரு திருமுறைப் பாராயணப் பண்ணிசை அரங்குகள்

சிவஞான அனுபூதிச் செல்வர்களான சைவ சமயாசார்யர்களாலும் சித்தத்தைச் சிவன்பால் வைத்த திருவருட் செல்வர்களாலும் அருளப்பெற்றவை, ''திருநெறிய தெய்வத் தமிழ் மாலை'' யாகிய பன்னிரு திருமுறைகள். உயிர்க்கு உறுதுணை யாவதும், பிறவித் துயர் களைவதும், என்றும் இன்பம் பெருக்கும் இயல்பு உடையதும், மண்ணில் நல்ல வண்ணம் வாழச் செய்வதுமாகிய பன்னிரு திருமுறைகளை ஓதுதலும், ஓதக்கேட்டலும் சிவ புண்ணியம் சேர்ப்பிப்பதாகும்.

''மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன்வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ் மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந்
தடையாவே''

—திருஞானசம்பந்த சுவாமிகள்

''பல்லுயிர் வாழத்தெண்ணீர்ப் பழமண்ணிப்படிக் கரையை
அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல்வல்லார் அவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியும் நண்பகலும் இடர்கூருதல் இல்லையன்றே''

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

என்னும் அருள் வாக்குகளால் திருமுறைகளின் சிறப்பு பெரிதும் உணரத்தகும்.

தேவாரம் என்றாலே சிதம்பரம். தேவாரம் முழுவதுமே சிதம்பரத்தின் பெருமையைக் கூறுவது என்று சொல்லலாம்.

திருவாசகமும் இவ்வாறே சிதம்பரத் தலத்தோடு இணைந்ததே. தேவாரம் ஓதும்போது திருச்சிற்றம்பலம் என்று தொடங்கித் திருச்சிற்றம்பலம் என்று முடிப்பதே மரபு. கோயில் என்பது சிதம்பரத்தைக் குறிக்கும். அங்குள்ள சிவன் கோயில் மூலட்டான ஈசுவரர் கோயில். அதைச் சுற்றியமைந்து பிற் காலத்தில்வளர்ச்சி பெற்றதே இன்று நடராஜர் கோயில் என்றும் சபாநாயகர் கோயில் என்றும் குறிக்கப்படும் ஆலயம்.

காலத்தால் மிகப் பழமையான இந்தக்கோயிலின் திருக்குட நீராட்டு விழா நாளது காளயுக்தி தை 25-ஆம் நாள் புதன்கிழமை (7-2-1979) அன்று நடைபெறுவதை முன்னிட்டு 2-2-1979 முதல் 7-2-1979 காலை வரையில் பன்னிரு திருமுறைப் பாராயணமும் பண்ணிசையும் நடைபெறத் திருவருள் கூட்டுவித்துள்ளது. இப் பணியில் கீழ்க்கண்ட திருமுறைவாணர்கள் தக்க இசைக் கருவி யாளர்களுடன் பங்கு கொள்வர்.

1. தேவார இசைமணி, தேவார இசைலயஅரசு திருப்பனந்தாள் எஸ். முத்துக் கந்தசாமி அவர்கள்

2. ஸ்வர ராக திருமுறை இசைப் பேரரசு திருக்களர் டி. ரத்தின சபாபதி அவர்கள்

3. தமிழ் இசைமணி கலைச்சுடர் சென்னை பி. எஸ். ஏ ராஜசேகரன் அவர்கள்

4, 5. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திருவாவடுதுறை டி. எம். விசுவலிங்கம், டி. எம். சபாபதி அவர்கள்

6. சங்கீத பூஷணம் சு. ஞானப் பிரகாசம் அவர்கள் சென்னை

7. தேவார இசைமணி, பண்ணிசைமணி, சங்கீதபூஷணம் கலைமாமணி தருமபுரம் பி. சுவாமிநாதன் அவர்கள்

௮. மு. கனகசபைப் பிள்ளை அவர்கள், சிதம்பரம்

9 ஏ, சட்டையப்பன் அவர்கள், சிதம்பரம்

2-2-79 முதல் மாலை 4.30 மணி அளவில் திருக்கோயிலிலிருந்து பரமனையே பாடும் அடியார் குழாம் புடைசூழ, சைவ சமயாசாரியர்கள், பன்னிரு திருமுறைகள் திருவீதி உலா சிறப்பாக நடைபெறும்.

சிவநேயச் செல்வர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்துப் பயன் பெறுமாறு அழைக்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே

—திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மதுரை
காளயுக்தி
தை.க

கருமுத்து எஸ். சொக்கலிங்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நாட்டிய நிகழ்ச்சி அழைப்பு



நாட்டிய கலாநிதி கலைமாமணி

பந்தணைநல்லூர் சுப்பராயப்பிள்ளை அவர்களின் மாணவி

சிங்காரமணி நாட்டிய கலாபூஷணம்

குமாரி அலர்மேல் வள்ளி

உ

ஸ்ரீ நடராஜமூர்த்தி துணை

அன்புடையீர்,

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் ஸ்ரீ மூலநாதர் உமையபார்வதி மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆயிரங்கால் மண்டபத்தில் நிகழும் காளயுக்தி ஹூ தை மீ 25உ (7-2-1979) புதன்கிழமை இரவு 7 மணி அளவில் சிதம்பரம் "சாஹித்ய கர்த்தா", "கலைமாமணி", திரு வி. வி. ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர் அவர்கள் தலைமையில் சிங்காரமணி, நாட்டிய கலா பூஷணம் குமாரி அலர்மேல் வள்ளி அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வருக.

இப்படிக்கு,

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் பொது தீட்சிதர்கள்

கே. விவேகானந்த தீட்சிதர் பி. எஸ். ஸி
செயலர்

ஒய். ஞானஸ்கந்த தீட்சிதர்
துணைச் செயலர்

நிகழ்ச்சி நிரல்

1. பரத நாட்டியம்

2. குமாரி அலர்மேல் வள்ளி அவர்களுக்கு
தலைவர் கலைமாமணி தீட்சிதர் அவர்கள்
"பரத கலா தத்வ ப்ராகாசினீ"
என்ற பட்டத்தை வழங்கல்

3. வாழ்த்துரை :
செயலர் **K. விவேகானந்த தீட்சிதர் அவர்கள்**

4. பாராட்டுரைகள் :

ஆர். கனகசபைப் பிள்ளை அவர்கள்

டாக்டர் கே. அரங்கசாமி பிள்ளை அவர்கள்


திரு. ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள்

5. நன்றி நவிலல் :
திருப்பணிச் செல்வர்
கருமுத்து எஸ். சொக்கலிங்கம் அவர்கள்

அச்சிட்டோர் : மூவேந்தர் அச்சகம், சென்னை-14.



தில்லைவாழ் அந்தணர்கள் குடங்கள் ஏந்தித்
திகழ்கும்பத் திற்குச் செல்லும் தோற்றம்.



திங்கள் தோறும் திருவாதிரை யன்று
படிகலிங்கம் அபிஷேகமும், நடராஜர் வழிபாடும்
செய்கின்ற பேராளர் சொக்கலிங்கம் குடும்பத்தார்
தில்லை தீட்சிதர்பால் பிரசாதம் பெறும் காட்சி.

குட நீராட்டு விழா

குட நீராட்டு அழைப்பிதழிலும் நிகழ்ச்சி நிரலிலும் கண்ட வாறு, யாகசாலை குறிப்பிட்ட நாளில் தொடங்கி நடத்தப் பெற்றது. தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களும், கோவி லூர் ஆதீனகர்த்தர் அவர்களும், ஏராளமான பொது மக்களும் யாகசாலை நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்தனர்.

திருமுறை அரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமுறைச் செல்வர் மதுரை கிருஷ்ணு கார்ப்பரேசன் திரு. முத்துப் பழநியப்பச் செட்டியார் அவர்கள் வந்திருந்து உரிய ஏற்பாடுகளைக் கவனித்து உதவினார்கள்.

திருப்பணி வேலைகள் யாவற்றையும் செம்மையாகவும் திருத்தமாகவும் திரு கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டி யார் அவர்கள் தம் செலவில் இனிதாகவும் உரிய காலத்தி லும் செய்து முடித்தார்கள். சிதம்பரம் முறையில் அஷ்ட பந்தன மருந்துகள் தயாரிக்கப் பெற்றன. 6—2—1979 இரவு, திருப்பணிக் குழுத் தலைவர், செயலாளர் ஆகியோர், தருமபுரம் சந்நிதானம், திருப்பணிச் செல்வர் திரு கருமுத்து சு. சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மருந்துகள் சாத்தப் பெற்றன.

திரு. கருமுத்து சு. சொக்கலிங்கம் அவர்கள் திருப் பணிக் குழுத் தலைவருக்கும், செயலாளருக்கும், தருமபுரம் சந்நிதானம் அவர்களுக்கும், பொன்னுடை போர்த்தி மரியாதை செலுத்தினர்.

7—2—79 காலை 8 மணிக்கு கடங்கள் யாக சாலையி லிருந்து, பல்லியங்கள் முழங்க,எடுத்துச் செல்லப் பெற்றன. சரியாக 9 மணிக்கு, தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த திரளான மக்கள் கும்பங்களை வழிபட, இன்னிசை முழங்க, மூலட்டான ஈசுவரர், உமையபார்வதி அம்மன் கோயில்களின் கும்பங்கள்மீது புனித நீராட்டு விழா நடத்தப் பெற்றது.

அதன் பின்னர், இரு சந்நிதிகளிலும் அபிடேகம் செய்யப் பெற்றது. திருப்பணியையும் கும்பாபிடேகத்தையும் நடத்தி வைத்த திரு கருமுத்து சு. சொக்கலிங்கம் அவர்களுக்குக் கோயில் மரியாதைகள் செய்யப் பெற்றன. அதை யடுத்து, பேரம்பலத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் அவருக்குப் பொன்னுடை போர்த்தி மகிழ்ந்தனர். அவரும் அவர் குடும்பத்தாரும் மேளதாளங்களுடன் அவர்கள் தங்கியிருந்த இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பெற்றனர். அங்கு நடைபெற்ற விழாவிற்குத் தில்லைவாழ் அந்தணர்களும் திருப்பணிக் குழுவினரும் தேவார ஓதுவார்களும் இசைவாணர்களும் புலவர்களும் அறிஞர்களும் சிவநேயச் செல்வர்களும் திரளாக வந்திருந்தனர். திருப்பணிக் குழுவின் சார்பில், தலைவர் திரு ஆர். கனகசபைப் பிள்ளை அவர்கள், திரு கருமுத்து சு. சொக்கலிங்கத்தைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தி, ஓர் உரை நிகழ்த்தினார்.

திரு. சொக்கலிங்கம் அவர்களின் பாட்டனார் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களைத் தாம் நன்கு அறியும் பேறு பெற்றதாகவும் அவர்கள் கல்விக்கும் தமிழுக்கும் சமயத்துக்கும்செய்துள்ளதொண்டுகள் போற்றுதற்குரியன என்றும், அவருடைய தகப்பனார் திரு தி. சுந்தரம் செட்டியார் அவர்களையும் தமக்கு நன்றாகத் தெரியும் என்றும், திரு ஆர். கனகசபைப் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். எனினும், தாங்கள் அவரை அணுகவில்லை என்றும் திரு சொக்கலிங்கம் இந்தத் திருப்பணிகளைச் செய்யத் தாமாகவே முன்வந்ததாகவும் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:

"நகரத்தார்கள் இல்லாவிட்டால் தமிழ் நாட்டிற்குப் பெருமை தரும் கோயில்கள் இன்றைய நிலையில் இருக்க மாட்டா. அந்தப் பரம்பரையில் இளைய தலைமுறையினரிலும் நகரத்தார் சிலர் இருப்பதற்கு அடையாளமாகத் திரு. சொக்கலிங்கம் விளங்குகிறார். இக்காலத்தில் கல்விதான் சிறந்த அறம் என்று கருதப்படுகிறது; சிறந்த கல்லூரி ஒன்றை நடத்திவரும் திரு சொக்கலிங்கம், கோயில் பணியும் வேண்டியதுதான் என்று கருதுவது பாராட்டுக்கு

உரியது. எதையும், செய்வன திருந்தச் செய்யும் இயல்பு உள்ள திரு சொக்கலிங்கம், கும்பாபிஷேகத்தோடு திருப் பணியையும் சீருடனும் சிறப்புடனும் செய்திருக்கிறார். எனக்கு இளமை முதல் கடவுட்பற்று உண்டு என்றாலும் 60 வயதுக்குப் பிறகுதான், உண்மையான ஈடுபாடு ஏற்பட்டது. ஆனால், அத்தகைய அழுத்தமான சமய நம்பிக்கை, திரு. சொக்கலிங்கம் செட்டியாருக்கு இளமை யிலேயே ஏற்பட்டிருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நடராசப் பெருமான் எல்லா நலங்களையும், வளங் களையும் அவருக்கும், அவர் குடும்பத்தார்க்கும் வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.''

அடுத்து, திருப்பணிக் குழுச் செயலாளர் திரு. வாகீசம் பிள்ளை பேசினார். திருப்பணியாளரின் பாட்டனார் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களை வடலூரில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடன் பலமுறை சந்தித் திருப்பதாயும், தந்தையார் திரு. சுந்தரம் செட்டியாருடன் சென்னை காஸ்மோபாலிடன் கிளப்பில் அளவளாவி மகிழ்ந் திருப்பதாயும், எதிர்பாராத வகையில் இந்தக் குடும்பத்தின் மூன்றாவது தலைமுறையுடன் தில்லைத் திருப்பணியில் தொடர்பு ஏற்பட்டிருப்பதாயும் குறிப்பிட்டார். மதுரையி லேயே தருமங்களைச் செய்யலாம் என்று நினைத்துவிடாமல் அவர் தில்லையிலும் ஈடுபாடு காட்டுவதற்குக் காரணம், சிதம் பரம் நடராசர் கோயிலின் வழிபாட்டு முறைகள் அவரைக் கவர்ந்திருப்பதே என்றார். இக்கோயிலில் உள்ள துர்க்கை திருவுருவமும் திரு. சொக்கலிங்கத்தின் உள்ளத்தைப் பெரி தும் ஈர்த்திருப்பதாக திரு. வாகீசம் பிள்ளை அவர்கள் குறிப் பிட்டார்கள். திருப்பணிக் குழுவினர் சார்பாக அவர் ஒரு பாராட்டிதழைப் படித்துத் திரு. சொக்கலிங்கத்துக்கு வழங்கினார்.

தில்லைவாழ் அந்தணர்கள் சார்பாக, பொது தீட்சிதர் களின் செயலாளர் அவர்களும் புலவர் சிவசங்கர தீட்சிதர் அவர்களும் பேசினர். திரு. சொக்கலிங்கம் அவர்களின் பக்தியையும், ஒவ்வொரு திருவாதிரைக்கும் அவர் வந்தி ருந்து ஸ்படிக லிங்க அபிடேகம் செய்து வருவதையும் பலபடப் பாராட்டினர்.

பாராட்டுகளுக்கு திரு. சொக்கலிங்கம் நன்றி கூறிய போது,

''இத்திருப்பணிக் குழுவினர் செம்மையாகவும் பக்தி யுடனும் தங்கள் பணியைச் செய்து வருவதால் ஏற் பட்ட நம்பிக்கையால்தான், இந்தத் திருப்பணியில் பங்கு கொள்ள நான் முன் வந்தேன். நான் வாக்களித்துள்ளபடி எஞ்சிய பணிகளையும் செம்மையாகச் செய்வேன்''

என்று கூறினர்.

பின்னர் தில்லைவாழ் அந்தணர்களுக்கு அன்பளிப்புக் களையும் வந்திருந்த ஏனையோர்க்கு அறுசுவை உணவையும் திரு. சொக்கலிங்கம் குடும்பத்தார் வழங்கினர்.

மாலை 6-30 மணிக்கு, மகாபிஷேகம் நிகழ்ந்தது.

7-30 மணி அளவில் ஆயிரக்கால் மண்டபத்தில் குமாரி அலர்மேல் வள்ளி அவர்களின் நடனம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் கூடியிருந்து, நடனப்பள்ளியாக விளங்கும் தில்லைப் பெருங்கோயிலில் ஏற்பாடு செய்யப் பெற்ற இக்கலை நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறு பாராட்டு விழாவும் பட்டமளிப்பும் நிகழ்ந்தன.

அன்றிரவு பஞ்சமூர்த்திகள் வீதியுலா வந்தனர். ஆடை, ஆபரண அலங்காரங்கள் சிறப்பாக இருந்தன.

திருச்சிற்றம்பலம்



உ

திருச்சிற்றம்பலம்

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக.

சிதம்பரம் ஸ்ரீ ஸபாநாயகர் கோயில் ஸ்ரீ உமையபார்வதி சமேத ஸ்ரீமூலநாதர் திருக்கோயிலுக்கு 7-2-1979 புதன்கிழமையன்று திருக்குடமுழுக்கு விழா செய்வித்த

திரு. தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கு

திருப்பணிக் குழுவினர் சார்பில் அளித்த

பாராட்டிதழ்

உலகமெலாம் உய்யும் வண்ணம் ஒப்பரிய திருநடனம் ஆடும் பொன்னம்பலத்தில் உறையும் நடராஜர் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீமூலநாதருக்குக் குடமுழுக்குச் செய்வித்த பெருங்கொடைவள்ளல் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் பெயரர் திரு. கருமுத்து **S.** சொக்கலிங்கம் செட்டியார் அவர்களே!

திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணம் பாடப் பெற்றதும், தேவாரம் கண்டெடுக்கப் பெற்றதும், மணிவாசகரும் நந்தனரும் முத்தி பெற்றதும், பதஞ்சலி வியாக்கிரபாதர் இறைவன் திரு நடனத்தைக் கண்டு களித்ததும் ஆகிய பல சிறப்புக்களை உடைய இத் தில்லையம்பதிக்குக் கோயில் என்றே பெயர் வழங்கி வருவதை நாம் அறிவோம்.

தங்கள் குடும்பம் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வரும் குடும்பம். ஈத்துவக்கும் இன்பத்தைப் பெற்றுப் பெரும்புகழுடன் விளங்கி வருகின்ற குடும்பம். பல நூற் பாலைகளைத் தோற்றுவித்துப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்துத் தொழில் வளம் பெருகச் செய்து வரும் குடும்பம் என்பதைத் தமிழகம் நன்கறியும்.

தங்களின் பாட்டனுர் அவர்களின் பெயரையும் புகழையும் தந்தையார் திரு தி. சுந்தரம் செட்டியார் அவர்களின் பெயரையும், புகழையும் நிலைநாட்டும் வகையில்,

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னேற்முன் கொல்லெனும் சொல்"

என்ற குறளுக்கு இலக்கியமாய், திருமூலநாதர்க்குக் குடமுழுக்குச் செய்வித்தமைக்காகவும், சிவகாமி அம்மன் திருக்கோயில் திருமதில் திருப்பணிகளைச் செய்ய இசைந்தமைக்காகவும் திருப்பணிக் குழுவின் சார்பிலும் சைவசமயப் பெருமக்கள் சார்பிலும் மனமார்ந்த பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் குடும்பம் கல்விக்காகவும் தமிழுக்காகவும் சமயத்திற்காகவும் செய்துள்ள அறப்பணிகளுக்காகத் தமிழ்மக்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தங்களின் திருப்பணிச் சிறப்பால் தில்லைத் திருக்கோயிலிலும் தமிழ்மொழி ஏற்றம் பெற்றுச் சிறப்புறும் என நம்புகிறோம். சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தங்களின் திருப்பணி மேன்மேலும் தொடரத் தாங்கள் பல்வகைவளங்களையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டுமெனத் தில்லைக்கூத்தன் திருவடியை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

G. வாகீசன்	**R. கனகசபை**
திருப்பணிக்குழுச் செயலர்.	திருப்பணிக்குழுத் தலைவர்.

திருப்பணிக் குழுவினர்

அஷ்டபந்தன மருந்து இடிக்கும் முறை

சிதம்பரம் பந்ததி முறை

1.	கொம்பரக்கு	1,592	கிராம்
2.	கருங்குங்கிலியம்	4,287	,,
3.	சுக்கான்	13,300	,,
4.	காவிக்கல்	2,122	,,
5.	வெண்மெழுகு	1,487	,,
6.	செம்பஞ்சு	367	,,
7.	வெண்ணெய்	1,487	,,
8.	உலர்ந்த லிங்கம்	2,262	,,

மேற்கண்ட எட்டுப் பொருள்களின் அளவிலிருந்து கோயில் மூர்த்திகள் அளவிற்குக் கூட்டியும் குறைத்தும் கொள்ளலாம்; மூர்த்தியின் கீழ் ஒரு அங்குலத்திற்கு 26 கிராம் வீதம் மருந்து பூசவேண்டும்.

செய்முறை


சுக்காங்கல், கொம்பரக்கு, கருங்குங்கிலியம், காவிக்கல் இந்த நான்கையும் தனித்தனியாகக் கருங்கல் உரலில் இடித்து, தூயதுணியில் வடிகட்டித் தனித்தனியாக வைத்துக் கொள்க.

ஆந்திராவில் கிடைக்கும் செம்பஞ்சியைக் கைகளால் பிய்த்துக் கொள்க. வெண்மெழுகை மெல்லிய ஓலைபோல் சீவிக்கொள்ளவேண்டும். உலர்ந்த லிங்கத்தைக் கல்வத்தில் சிறிது சிறிதாக அறைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

வெண்ணெய்யை இரண்டு பங்குகளாக்கி ஒரு பங்கைப் பஞ்சைத் தவிர ஏனைய பொருள்களுடன் கலந்து நன்ருகப் பிசைந்து உருண்டைகளாக்கிக் கொள்ள வேண்டும். மர உரலில் சிறிது வெண்ணெய் தடவி உருண்டையைப் போட்டு மர உலக்கையால் இடையிடையே வெண்ணெய் சேர்த்துக் கொண்டே நன்ருக இடிக்கவேண்டும்.

இவ்வாறு 2, 3 நாட்களுக்கு ஒரு முறையாக ஏழு தடவை இடித்து, மருந்து சாத்தும் நாளில் எட்டாம் முறையும் இடித்த பிறகு, ஓர் அங்குலத்திற்கு 26 கிராம் வீதம் அழுத்தமாகச் சாத்த வேண்டும்.

48 நாட்கள் வரை எலுமிச்சை, தயிர் போன்ற புளிப்புச் சத்துக்களை அபிஷேகம் செய்யாமல் நிரம்பி வழியும்படி தூய எள்ளெண்ணெய் சாத்தி வந்தால் சாத்திய மருந்து பல்லாண்டுகளுக்கு உறுதியாக இருக்கும்.



கோயில் (சிதம்பரம்)

தமிழ்க்கடல் 'ராய சொ'

திருமூலநாதர்—உமையம்மை
சபாநாயகர்—சிவகாமியம்மை
சம்பந்தர் : 2, அப்பர் : 8, சுந்தரர் : 1

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர்களுக்குக் கோயில் சிதம்பரம்; வைணவர்களுக்குக் கோயில் திருவரங்கம். சிதம்பரத்துக்குப் பொன்னம்பலம் என்று பெயர். அம்பலம், அரங்கம் இரண்டுமே சபையைக் குறிக்கும்.

தில்லைப்பதி மூவர் தேவாரம் பெற்றதோடு திருவாசகத்தால் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றது. திருவாசகத்தில் சிதம்பரம் 65 இடங்களில் செப்பப் பெறுகிறது. திருவாசகம் அருளிய பெரியார் மணிவாசகப் பெருமான் திருவாசகத்தின் பொருள், 'கூத்தப்பெருமானே' என்று காட்டித் தில்லைத் தலத்திலேயே கூத்தப்பெருமான் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார் என்ப.

தேவார திருவாசகம் தவிர, பன்னிரு திருமுறைகளுள், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராம் திருமுறை, பெரியபுராணம் ஆகிய அனைத்திலும் தில்லைக்கூத்தன் பெருமை பெருகப் பேசப் பெற்றிருக்கின்றன.

திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் நாயனார், கூற்றுவநாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், கணம்புல்ல நாயனார் ஆகிய அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஐவரும் மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சந்தான குரவர் நால்வருள் இருவரும் வீடுபேறு அடைந்த பெருமைபெற்ற தலம் தில்லை.

மணிவாசகப் பெருமான், 'திருச்சிற்றம்பலக் கோவையார் பாடி அருளிய பதி. சேரமான் பெருமாள் நாயனார் "பொன் வண்ணத்து அந்தாதி" பாடிய புண்ணியப் பதி.

சேக்கிழார் அடிகள் "பெரியபுராணம்" பாடி, யானைமீது இவர்ந்து அநபாய சோழனால் சிறப்பிக்கப்பெற்று அரங்கேற்றிய அழகிய பதி.

நம்பியாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பெற்ற திருத்தலம். —திருத்தலப்பயணம் ★

பெரும்பற்றப்புலியூர்த் திருமூலட்டானம்

க. வெள்ளைவாரணன்

தமிழகத்திற் சிறப்புடன் திகழும் தொன்மைத் திருக்கோயில்கள் பலவற்றுள்ளும் பிறவாயாக்கைப் பெரியோனுகிய சிவபெருமானுக்கு உரிய திருக்கோயில்களே தலைமையும் பன்மையும் பெற்றுவிளங்குகின்றன. தமிழ்நாட்டில் நிகழும் தெய்வ வழிபாடுகள் பலவற்றுள்ளும் சிவ வழிபாடே முதன்மைபெற்றுத் திகழும் தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். பண்டைக்காலத்தில் ஊர்தோறும் 'பொது—இல்' எனப்படும் அம்பலத்திலே தெய்வம் உறையும் தறியாகிய தூண் ஒன்று நாட்டப்பெற்றிருந்தது. நீராடித் தூய்மையுடையராய மகளிரும் ஆடவரும் அம்பலத்தை மெழுகித் தூய்மைசெய்து விளக்கேற்றி நறுமலர் தூவிக் கடவுளை வழிபட்டுப் போற்றினர்கள். இவ்வாறு முற்காலத்தில் ஊர்தோறும் தெய்வம் உறையும் தறியாகிய கந்து நிறுவப் பெற்ற பொதியில் என்னும் அம்பலங்களே தேவார ஆசிரியர்கள் காலத்தில் சிவபெருமானது அருவுருவத் திருமேனியை வழிபடுதற்குரிய பெரிய திருக்கோயில்களாகத் திகழ்வனவாயின. பட்டினப்பாலையில் 'கந்து' எனக் குறிக்கப்பெறும் தெய்வம் உறையும் தூணும் சைவர்களால் வழிபடப் பெறும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருவும் முழுமுதற் கடவுள் ஒன்றே என எண்ணி வழிபாடு செய்தற்கேற்ற பொதுமைச் சிறப்பாலும் திருவுருவ அமைப்பாலும் ஒன்றேயென்பது,

> ''காதன்மையால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
> கன்ருப்பூர் நடுதறியைக் காணலாமே'' (6—61—1)

எனவரும் திருத்தாண்டகத் தொடரால் உய்த்துணரப்படும்.

தேவார ஆசிரியர்களாற் பாடப்பெற்ற திருக்கோயில்களுள் முதன்மைத் தலமாக வைத்து எண்ணப்பெறுவதும் அடைமொழியெதுவுமின்றிக் கோயில் எனப் போற்றப்பெறும் தனிச்சிறப்புடையதும் சிதம்பரம் என்னும் தில்லைப் பதியாகும். தில்லைப் பெருங்கோயிலாகிய இதன் கண் உலகுயிர்களை இயக்கியருளும் முழு

முதற் கடவுளாகிய இறைவன் அருவுருவாகிய சிவலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளிய திருமூலட்டானம் என்னும் சந்நிதியும் ஞானமயமாகிய அருள் வெளியிலே இடையீடின்றி ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருளும் தில்லைச் சிற்றம்பலம் என்னும் சந்நிதியும் அமைந்துள்ளன. இவையிரண்டும் சிவநெறிச் செல்வர்களால் பன்னூறாண்டுகளாகப் போற்றி வழிபடப் பெறும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.

தொன்மை வாய்ந்த இவ்விரு சந்நிதிகளிலும் மிகவும் பழமை வாய்ந்தது பெரும்பற்றப் புலியூர்த் திருமூலட்டானம் என்னும் திருக்கோயிலேயாகும். இறைவன் உயிர்களுக்கு அருள் செய்தற் பொருட்டு மேற்கொள்ளும் அருவம் உருவம் அருவுருவம் எனப்படும் எவ்வகைத் திருமேனிகளுக்கும் மூலகாரணமாய்த் திகழ்வது சிவலிங்கத் திருமேனியே என்பது,

"காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்"

எனவரும் சேக்கிழார் வாய்மொழியால் இனிது புலனாகும்.

திருக்கோயிலில் சிவலிங்கத் திருமேனி அமைக்கப்பெற்றுள்ள கருவறையினை மூலஸ்தானம் என வழங்குதல் வடமொழிமரபு. மூல + ஸ்தானம் என்னும் வடமொழித் தொடர் தமிழ் ஒலிக்கேற்ப மூலட்டானம் எனத் திருமுறையாசிரியர்களால் திரித்து வழங்கப்பெற்றது. இவ்வாறே வீர + ஸ்தானம் என்னும் வட சொற்றொடர் தமிழ் மரபுக் கேற்ப வீரட்டானம் எனத் திரு முறைகளில் வழங்கப் பெற்றுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். மூலம்—காரணம். ஸ்தானம்—இடம். உயிர்களுக்கு அருள் புரியும் குறிப்புடன் இறைவன் மேற்கொள்ளும் அருவமும் உருவமுமாகிய எல்லாத் திருமேனிகளுக்கும் மூலமாய் (காரணமாய்) அமைந்த சிவலிங்கத் திருமேனி நிலைபெற்றுள்ள கருவறை மூலட்டானம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இது தமிழில் உண்ணாழிகை என வழங்கப்பெற்ற தென்பது கோயில்களில் வரையப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுக்களாற் புலனாகின்றது. சிவபெருமானை வழிபடுதற்குரிய திருவருள் நிலையமாகத் திகழும் எல்லாத் திருக்கோயில்களிலும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கமே கருவறையில் நிலை பெற அமைக்கப் பெற்றிருத்தலால் திருக்கோயிலின் உள்ளத் தாமரையாகிய அகனை மூலத்தானம் எனவும், உண்ணாழிகை எனவும் வழங்குதல் மரபாயிற்று.

எல்லாத் திருக்கோயில்களிலும் சிவலிங்கத் திருவுருவம் அமைக்கப்பெற்றுள்ள கருவறை மூலத்தானம் என வழங்கப் பெற்று வருவதனை யாவரும் அறிவர். எனினும் உலக புருடனுக்கு

நெஞ்சத்தாமரையாக நினைந்து வழிபடப் பெறும் தில்லைப்பதியிலும் திருமகள்வழிபடும் சிறப்புடைய திருவாரூரிலும் சிவலிங்கத் திருமேனி நிலை பெற்றுள்ள கருவறையினையே திருமுறையாசிரியர்கள் திருமூலட்டானம் என்ற பெயரால் சிறப்பாகக் குறித்துப் போற்றியுள்ளார்கள்.

“பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழுய்யார்
பெரும்பற்றப் புலியூர்மூ லட்டா னத்தார்” (6—51—6)

எனத் தில்லைப் பெருங்கோயிலில் அமைந்துள்ள திருமூலட்டானத்தினையும், ‘திருவாரூர்த் திருமூலட்டானன்,(4–101–3), “திருவாரூர் திருமூலட்டானமேய கொற்றவனை” (6-69-8) எனத் திருவாரூர்த் திருக்கோயிலில் அமைந்துள்ள திருமூலட்டானத்தினையும் திருநாவுக்கரசர் தனித்தெடுத்துப் போற்றியுள்ளமை இங்குச் சிந்தனைக்குரிய செய்தியாகும். திருவாரூரில் அமைந்த திருமூலட்டானத்தில் உள்ள சிவலிங்கம் புற்றுருவமைந்த பெற்றியதாகலின் அத்திருவுருவின் இடங்கொண்ட பெருமான் ‘புற்றிடங் கொண்டான்’ எனப் போற்றப் பெறுகின்றார். “பொழிலாரூர் மூலட்டானம் புற்றிடங்கொண்டிருந்தானை” (6-33-3) எனவும், ‘புற்றிடங்கொண்டான்றன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே’ (4-101-2) எனவும் வரும் அப்பர் அருள் மொழிகள் இங்கு நினைக்கத்தக்கன. திருவாரூர்த் திருமூலட்டானமாகிய இந்நிலையம் ‘பூங்கோயில்’ எனவும் திருமுறைகளிற் போற்றப் பெறுகிறது.

எல்லாம்வல்ல இறைவன் யாண்டும் நீக்கமறக்கலந்துள்ளான் எனினும் மன்னுயிர்கள் தன்னைப் பூசனை செய்து உய்தல்வேண்டி ஒளியுருவாகிய சிவலிங்கத் திருமேனியிற் சிறப்பாக வீற்றிருந்து அருள்புரிகின்றான் எனவும், இறைவனை வழிபாடு செய்தற்குரிய தலங்கள் எல்லாவற்றுள்ளும் தலைமையுடையதாய்த் திகழ்வது தில்லைப்பதி எனவும் தந்தையார் மத்தியந்தன முனிவர் அறிவுறுத்த வுணர்ந்த வியாக்கிரபாத முனிவர் தம் தந்தையையும் தாயையும் வணங்கி விடைபெற்றுத் தென்னாட்டுத் திருத்தலங்களை வழிபட்டு நெஞ்சம் நெகிழ்ந்து கண்களில் நீர்மல்க வருபவர், தில்லைவனத்திற் புகுந்து அங்குள்ள சிவகங்கைத் தீர்த்தத்தினை வணங்கிய நிலையில், அதன் தென்கரையில் உள்ள ஓர் ஆலமரத்தின் நீழலில் சிவபெருமான் சிவலிங்க வுருவில் முனிவர்க்கு எதிரே வெளிப்பட்டுத் தோன்றினான் எனவும், முனிவர் நாள்தோறும் வைகறையில் எழுந்து வண்டுமொய்க்காத மொட்டலருமலர்களைப் பறித்து இறைவனை வழிபடுதல் வேண்டிப் புலிக்கால்களும் புலிக்கைகளும் பெற்று வியாக்கிரபாதர் (புலிக்காலர்) எனப் பெயர் பெற்றார் எனவும் கோயிற்புராணம் கூறும். புலிக்கால் முனிவ

ராகிய இவர் உலகப் பற்றுக்களை விட்டொழித்து எவ்வுயிர்க்குஞ் சார்பாகிய சிவபெருமானையே தமக்குரிய பெரும்பற்றாகக் கொண்டு வழிபாடு செய்யப்பெற்ற அழகிய திருத்தலமாதல் பற்றித் தில்லைவனமாகிய இப்பழம்பதி பெரும்பற்றப்புலியூர் என்னும் பெயர் பெறுவதாயிற்று.

சிவாகமநெறியில் நின்று இறைவனைப் பூசிக்கும் சைவமுனிவராகிய வியாக்கிர பாதர், எவ்வுயிர்களும் திருவருளைப் பெறுதற்கெனச் செய்யும் பரார்த்த பூசையினைத் தில்லைத் திருமூலட்டானத்திலும், நாள்தோறும் தாம் தவறாது செய்தற்குரிய ஆன்மார்த்த பூசையினைத் தில்லையின் மேற்றிசையில் தாம் அமைத்துள்ள திருப்புலீச்சரம் என்னும் திருக்கோயிலிலும் செய்துவந்தார். அந்நிலையில் திருப்பாற்கடலில் அறிதுயிலமர்ந்த திருமாலுக்குப் பாம்பணையாயிருந்து தொண்டுபுரிந்த ஆதிசேடன் சிவபெருமானது திருக்கூத்தினை நினைந்து உள்ளம்பூரித்த திருமாலின் உவகை நிலையினை உணர்ந்து, தானும் அத்தகைய பேரானந்தத்தில் திளைத்து மகிழ விரும்பித் திருமாலைப் பணிந்து தன் மகன் அனந்தன் என்பவனைத் திருமாலுக்குப் பாம்பணைப் பணிபுரிபவனாக அமர்த்தித் தவத்தினை மேற்கொண்டு பிலத்தின் வழியாகத் தில்லைவனத்தையடைந்தார் வியாக்கிரபாதருடன் தில்லைத் திருமூலட்டானரை இறைஞ்சித் தமக்குரிய ஆன்மார்த்த பூசைக்குரிய மூர்த்தியாக அனந்தீசர் என்னும் சிவலிங்கத் திருமேனியை வழிபட்டு வாழ்ந்தார். பதஞ்சலி முனிவர் செய்த தவத்தின் பயனாகச் சிவபெருமான் தில்லைப்பெருங்கோயிலிலே தை மாதத்திற் பூசமும் வியாழக்கிழமையும் கூடிய நன்னாளிலே நண்பகற் பொழுதிலே சிவகாமியம்மை கண்டுகளிக்கச் சிதாகாசப் பெருவெளியாகிய திருவம்பலத்திலே அற்புதத் தனிக்கூத்தியற்றும் ஆடல்வல்லானாகத் தோன்றிப் பதஞ்சலியும் புலிமுனியும் கண்டு போற்ற ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருளினான். அத் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்த பதஞ்சலி முனிவர் தாங்கள் கண்ட அருட்கூத்தினை உலகிலுள்ளோர் எல்லோரும் எல்லாக் காலத்திலும் கண்டு உய்தி பெறும்வண்ணம் இங்கு அனவரத தாண்டவம் புரிதல் வேண்டும் என இறைவனை வேண்டிக் கொண்டமையால் அம்பலக் கூத்தனாகிய பெருமான் அன்று முதல் என்றும் இடையீடின்றி அற்புதத் திருக்கூத்தினை நிகழ்த்தியருள்கின்றான் எனச் சிதம்பரத்திற்குரிய தலபுராணம் கூறுகின்றது. இத் தல நிகழ்ச்சியை, 'பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக' எனத் திருவாசகத்திலும், 'நாகம்தொழ எழில்அம்பலம் நண்ணிநடம் நவில்வோன்' (171) எனத் திருக்கோவையாரிலும் மணிவாசகப் பெருமான் குறித்துப் போற்றியுள்ளமை அறியத் தகுவதாகும்.

சைவமுனிவராகிய வியாக்கிரபாதர் பூசனைபுரிந்த பெரும் பற்றப்புலியூர்த் திருமூலட்டானமும், பதஞ்சலி முனிவர் பொருட்டு இறைவன் அற்புதக் கூத்தினை நிகழ்த்தியருளும் தில்லைத் திருச்சிற்றம்பலமும் என இரண்டு சந்நிதிகள் தில்லைப் பெருங்கோயிலில் ஒருசேர அமைந்திருத்தலால், தில்லையை வழி படுதற்கு வந்த அருளாசிரியர் அனைவரும், இவ்வருள் நிலையங்கள் இரண்டினையும் வழிபட்டுப் போற்றிப் பரவியுள்ளார்கள். தில்லைத் தலத்திற்கு உரியனவாகக் கிடைத்துள்ள தேவாரத் திருப்பதி கங்கள் யாவும் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல்புரிந்தருளும் கூத்தப்பெருமானைப் பரவிப் போற்றியனவாக அமைந்துள்ளன' எனினும் புலியூர்ச் சிற்றம்பலம் என்னும் குறிப்பினால் சிற்றம்பலத் திற்கு நிலைக்களமாக அமைந்த புலியூர்த் திருமூலட்டானத்தினை யும் அத்திருப்பாடல்கள் போற்றியனவாகவே கொள்ளுதல் வேண்டும். திருநாவுக்கரசர் அருளிச் செய்த ஆறுந்திருமுறையின் முதற்கண் அமைந்துள்ள 'அரியானை யந்தணர்தஞ்சிந்தையானை' • னத் தொடங்கும் பெரிய திருத்தாண்டகம் தில்லைச் சிற்றம்பலத் தில் ஆடல்புரியும் கூத்தப்பெருமானைப் போற்றுவதுடன் அம் முதல்வன் பெரும்பற்றப்புலியூர்த் திருமூலட்டானத்தில் எழுந் தருளியுள்ள தொன்மைநிலையினையும் உளங்கொண்டு போற்றிய திருப்பதிகமாக அமைந்துள்ளமை காணலாம்.

தமிழகத்தில் மிகவும் பழமைவாய்ந்த திருத்தலங்களாகிய திருவாரூர், பெரும்பற்றப்புலியூர் ஆகிய இரண்டு தலங்களிலும் மூலத்தானத்தில் எழுந்தருளிய சிவலிங்கத் திருமேனிக்கு அமைந்தது போலவே திருவீதிக்கு எழுந்தருளும் திருமேனிக்கும் தனிக்கோயில் அமைக்கப்பெற்று நெடுங்காலமாக வழிபாடு நிகழ்ந்து வருதல் இவ்விரு தலங்களுக்குமுரிய தனிச் சிறப்பாகும். பாடல்பெற்ற தலங்கள் எல்லாவற்றிலும் கருவறையில் உள்ள சிவலிங்கத் திருமேனியே பாடல்பெற்ற திருமேனியாகவும், திரு வீதிக்கு எழுந்தருளுந் திருமேனி அம்மூல இலிங்கத்தின் படிமைத் திருவுருவாகவும் அமைந்துள்ளன. தில்லையிலும் திருவாரூரிலும் திருமூலட்டானத்தில் எழுந்தருளிய மூலவராகிய சிவலிங்கத் திருமேனிக்கு ஒப்ப உற்சவராகத் திருவீதியில் எழுந்தருளுந் திருமேனிக்கும் திருக்கோயிலில் நாள்வழிபாடாகிய பூசனைக்குரிய முதன்மை அமைந்திருத்தல் நோக்கத் தகுவதாகும்.

தில்லையில் கூத்தப்பெருமான் தேருலாவிய கூத்தனாகத் திருவீதியில் எழுந்தருளி மன்னுயிர்களுக்கு அருள்வழங்குதல் போலவே, திருவாரூரிலும் வீதிவிடங்கப் பெருமானாகத் திருவீதிக்கு எழுந்தருளி ஆருயிர்கட்கு அருள்புரிகின்றான். வீதி விடங்கப் பெருமான் திருவுருவம் பாற்கடலிற் பாம்பணையிற்

பள்ளிகொண்டருளிய திருமாலால் வழிபடப் பெற்று அசைந் தாடிய நிலையில் திருமால் மார்பில் விளங்கியதாகும். இத்திருவுரு வினை இந்திரன் திருமாலிடம் வேண்டிப் பெற்றுப் பூசனை செய்து வந்தான். இந்திரனுக்குப் போர்க்காலத்தில் உதவிபுரிந்த சோழ மன்னனாகிய முசுகுந்தன் என்பான் இத்திருமேனியையே விரும்பிப் பெற்றுத் திருவாரூர்த் திருக்கோயிலில் அமைத்து வழி பாடு செய்தான் என்பது புராண வரலாறாகும். இவ்வாறு சோழ மன்னனாகிய முசுகுந்தனது வேண்டுகோட்கிசைந்து வான்பழித்து இம்மண்ணுலகிற் புகுந்து மனிதரை வாழ்விக்கும் வள்ளற் பிரானாக விளங்குகின்றார். ஆரூரில் எழுந்தருளியிருக்கும் வீதி விடங்கப் பெருமான் பாம்பணையிற் பள்ளி கொள்ளும் திருமாலால் பூசிக்கப்பெற்று அவரது நெஞ்சிடத்தே அசைந்தாடிய அழகர் என்பதனை,

"பையஞ்சுடர்விடு நாகப்பள்ளி கொள்வானுள்ளத் தானும்
கையஞ்சு நான்குடையா னைக் கால்விரலா லடர்த்தானும்
பொய்யஞ்சி வாய்மைகள்பேசிப் புகழ்புரிந்தார்க் கருள்செய்யு
ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூரமர்ந்த அம்மானே"

எனவரும் திருப்பாடலிற் குறித்துப் போற்றியுள்ளார். திருவாரூரில் திருவாதிரைத் திருநாளில் அடியார்களும் அமரர்களும் சூழ்ந்து போற்றத் திருவுலாப் போந்தருளிய வீதிவிடங்கப் பெருமானது திருவிழாச் சிறப்பினைத் திருஞானசம்பந்தப்பிள்ளையார்க்கு உவகையுடன் எடுத்துரைக்கும் நிலையில் திருநாவுக்கரசர் பாடி யருளிய திருப்பதிகம் 'முத்துவிதான மணிப்பொற்கவரி' என்னும் முதற்குறிப்புடைய திருவாதிரைத் திருப்பதிகமாகும்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய குறிப்புக்களால் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் எல்லாவற்றிலும் சிவலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளிய மூலத்தானமே நாள்தோறும் பூசனையினை ஏற்று அருள்வழங்கும் தலைமைச் சந்நிதியாகத் திகழ, எழுந்தருளுந் திருமேனியின் சந்நிதி மூலத்தானத்துள் அடங்கிய துணைச் சந்நிதியாகக் கொள்ளப்பெற்றன என்பதும், தில்லையில் நடராசர் ஆடல்புரியும் சிற்றம்பலமும் திருவாரூரில் வீதி விடங்கப்பெருமான் அமர்ந்தாடும் தியாகராசர் சந்நிதியும் மூலத் தானத்தைப் போன்றே நித்திய பூசையில் முதலிடம் பெற்று விளங்குதலால் அத்தலங்களில் உள்ள மூலத்தானமாகிய சந்நிதியைப் பெரும்பற்றப்புலியூர்த் திருமூலட்டானமெனவும் திருவாரூர்த் திருமூலட்டானமெனவும் தனியாக எடுத்துரைக்க வேண்டிய இன்றியமையாமை நேர்ந்ததென்பதும் இனிது புலனாதல் காணலாம்.

★

தில்லை ஸ்ரீ மூலஸ்தான நாயகர்

பெ. திருஞானசம்பந்தன்

தில்லை என்றதுமே நடராசப்பெருமானின் நினைவே அனைவருக்கும் வருவது இயல்பு. அவரைப் பற்றிய புராணங்கள், தோத்திரங்கள், பதிகங்கள் பல இருக்கின்றன. எனினும் இங்கு நாம் சிந்திக்க இருப்பது புலியூர் என்றும் வியாக்ரபுரி என்றும் புண்டரீக புரம் என்றும் வழங்கப்படும் தலத்தில் மிகப் பழங்காலத்தில் தில்லை வனமாக இருந்த நிலையில் வியாக்ரபாதரால் வழிபடப் பெற்ற திருமூலட்டானேசுவரரைப் பற்றிய செய்தியாகும். மூல ஸ்தானத்தில் உள்ள ஈசுவரரை தமிழில் மூலட்டானேசுவரர் என்று வழங்குகிறோம். இவ்வீசுவரர் திருமூலநாதர் என்றும் அழைக்கப்படுவார்.

திருமூலட்டானேசுவரர் இலிங்க வடிவில் இருக்கின்றவர். இது சுயம்பு மூர்த்தி. ஆலமர நிழலில் இருந்ததாகப் புராண வரலாறு.

ஸ்ரீ வியாக்கிராலயேச சதகம் என்ற ஒரு வடமொழி தோத்திர நூலில் இவ்வீசுவரனைப் பற்றிய குறிப்பு வருகிறது. அப்பாடலில் வியாக்கிரபாதரால் அவர் வழிப்படப்பட்டவர் என்ற கருத்தும் அடங்கியுள்ளது. அப்பாடலின் கருத்து வருமாறு.

'தில்லையில் ஒரு ஆலமரம் இருக்கின்றது. அதனடியில் அமர்ந்துள்ள பெருமானை விசுவாமித்திரரின் புகழையொத்த புகழ் படைத்த பகவான் வியாக்ரபாதர் பார்த்தார். மதியணிபூண்ட வெண்ணிறம் பொருந்திய அப்பெருமான் யாங்கணும் வியாபித்திருப்பவர்; பிரமன் முதலியோரால் தேடப்பட்டுவரும் பேருண்மைப் பொருள்; அனுதியே தூயவர்; என்றும் சாந்தராயிருப்பவர்; அரி, அரன், பிரமன் முதலான தேவர்கள் வாழும் அவ்வாலமரம் (அசுவத்த விருட்சம்) நமது பாவங்களைப் போக்கட்டும்' என்பது அப்பாடலின் பொருள்.

அதற்கருகில் ஒரு தடாகம் இருக்கிறது. அப் பொய்கையில் தினந்தோறும் நீறுபூசிய பக்தர் குழாம் நீராடுகின்றனர். அவர்கள்

திருமேனி பட்டு அத்தடாகம் தூய்மையடைகின்றது. அதில் நீராடி வியாக்ரபுரீசனுன பரமசிவனை வழிபடுவோர் சாருப்ய நிலையை அடைவதால் அவர்களுக்கு யமபயம் இல்லை. அவ்வுத்தம மான ஈசுவர சாந்நித்யம் பெற்ற தடாகத்தில் யானும் நீராடி உய்வேனுக என்று வேண்டுகிருர் இச்சதக ஆசிரியர்.

சிதம்பரேச ஸ்துதி என்ற தோத்திரத்தில், 'கயிலாசத்தில் உறைபவனுயும், மூவேழுலகங்களுக்கும் தலைவனுயும், நாராயண னின் தோழனுயும், இந்திரனுல் வணங்கப்படுபவனுயும், தேவர் களால் வழிபடப்படுகிறவனுயும், மகேசமூர்த்தியாயும் உள்ள சிதம்பரேசனை இதயத்தில் தியானிக்கிறேன்' என்கிருர் மற்ருேரா சிரியர்.

ஸ்ரீ சிதம்பர பஞ்சசாமர ஸ்தோத்திரம் என்ற நூலில் சிதாகாச ரூபமாக விளங்கும் சதாசிவனை ஆசிரியர் துதிக்கிருர். 'தூயமனம் படைத்த நன்மக்களின் பாவங்களைப் போக்குகின்றவனும், தான் என்ற ஆணவத்தால் உண்மையை அறிய இயலாத தீயோர்களை ஒறுக்கின்றவனும், சத்குரு வடிவில் எழுந்தருளியிருப்பவனும் சதாசிவமூர்த்தியாயும் இருக்கின்ற அவன் என்றும் பேரானந்த சொரூபியாய் விளங்குகிருன்' என்கிருர் ஆசிரியர்.

'இன்ன தன்மையன் என்றறியாச் சிவன் தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்ருன் உன்னருஞ்சீர் உபமன்னியுமுனி' என்று சேக்கிழாரால் போற்றப்பட்ட உபமன்னியுமுனி வியாக்கிர பாதரின் புதல்வர். கிருஷ்ணனுக்கு சிவதீட்சை செய்தருளியவர். இவ்வரலாறு சிவ மகாபுராணத்தில் உமா சம்கிதையில் கூறப் பட்டுள்ளது.

ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணன் தனக்குப் புத்திரப்பேறு வேண்டி கயிலாயத்திற்குச் சென்றதாகவும் அங்கே உபமன்னியுவைக் கண்டு இதற்குரிய உபாயத்தை வேண்டவும், உபமன்யு சிவபெரு மான் பல ஆயுதங்களைத் தாங்கி தேவர்குழாத்தால் சூழப்பட்டிருப் பதைக் கூறி, தான் அவரிடம் கொண்டுள்ள ஆராக் காதலால் முக்காலத்தையும் உணரும் ஞானத்தையும் அடியார் பக்தியையும் வேண்டிப் பெற்றதையும் இரண்ய கசிபு, வியாசர், யாக்ஞவல் கியர், கணுதர், கௌதமர் முதலிய பெரியோர்களும் சௌமினி என்ற சண்டாளியும், மகாகாலன் என்ற வேடனும் சிவபக்தியாலே அவரவர் வேண்டியதைப் பெற்றதையும் கூறினுர். பின்னர் உபமன்யு கிருஷ்ணனுக்கு நமச்சிவாய மந்திரத்தை உபதேசித் தார். இப்பஞ்சாட்சர மந்திரத்தைப் பதினுறு மாதங்கள் ஜபித்து சிவபெருமானிடமிருந்து வேண்டிய வரங்களைப் பெற்ருர் என்ற

செய்தி உமாசம்ஹிதையின் முதல் மூன்று அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாகக் கருதப் படும் மத்சிய புராணத்தில் வியாக்கிரபாதர், பதஞ்சலி, காத்தியா யனர் என்ற சம்ஸ்கிருத இலக்கணக்காரர்கள் குறிக்கப்படுவதால் வியாக்கிரபாதரால் வழிபடப்பெற்ற திருமூலநாதர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கோயில் கொண்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. இரணியவர்மன் என்ற அரசனைத் திருமூலநாதர் சந்நிதியில் அழைத்து வந்து வியாக்கிரபாதர் தரிசனம் செய்து வைத்தார் என்பது ஒரு வரலாறு. இங்குள்ள ஈசுவரர், லிங்க வடிவினர். லிங்கம் என்ற சொல் 'அனைத்தும் லயமாகு மிடம்' என்பது பொருள். சங்கார காலத்தில் மகேசுவரரிடத்தே அனைத்துப் பிரபஞ்சமும் ஒடுங்குதலால் 'லிங்கம்' என்று கூறப் பெறுவதாயிற்று. லிங்க பீடம் மகாதேவி என்றும் லிங்கம் மகேசுவரன் என்றும் சிவ மாபுராணம் கூறும். லிங்கத்தில் பிரதிட்டை கொண்டிருக்கும் சம்பு 'போகம் முத்தி' இரண்டை யும் அருளவல்லவர் என்றும் கூறுகிறது அப்புராணம். நான்கு வருணத்தாராலும் பூசிக்கத் தக்கவர் லிங்கத் திருமேனியுடை யார் சிவலிங்க பூசாவிதி சிவமகாபுராணத்தில் ருத்திரசம்கிதை யில் பதினோராம் அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

வடமொழி ஸ்கந்த புராணத்திலுள்ள ஆறு சம்கிதைகளில் சூதசம்கிதை முக்கியமான ஒன்று. அதில் மகாவிஷ்ணு வியாக்கிர புரம் சென்று சிவபெருமானிடம் உபதேசம் பெற்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. அவரே பிற தேவர்களையும் வியாக்கிர புரம் சென்று ஆனந்த மகா தாண்டவ பண்டிதனை சபாபதியை, அனைத்திற்கும் ஆதாரமாக உள்ள ஆலமர் பெருமானை வழிபடு மாறு அறிவுறுத்தினர். அவர்களும் அவ்வாறு அங்குச் சென்று பஞ்சாட்சரம் ஓதி வழிபட்டனர். ஈசுவரன் அவர்களுக்கு உப தேசம் செய்யும்போது வாராணசி காலஹஸ்தி, விருத்தாசலம், புண்டரீகபுரம், வன்மீகம், வேதாரண்யம் என்ற ஆறு தலங்களை முக்கியமாகக் குறிப்பிடுகிறார். வியாக்கிரபுரத்திற்கு புண்டரீக புரம் என்பது மற்றொரு பெயர். புண்டரீகபுர ஈசுவரனிடம் பக்தி செலுத்துவோர் போகம் முத்தி இரண்டிற்கும் உரியராகின்றனர்.

சூதசம்கிதையின் ஒன்பதாவது அத்தியாயத்தில் நந்திகேசு வரர் சௌனகருக்கு உபதேசம் செய்யும்போது பின்வருமாறு கூறுகிறார்: 'புண்டரீகபுரம் (தில்லை) சென்று திருவாதிரை நாளில் சூரியோதயத்திற்குமுன் சிவகங்கையில் நீராடி இயன்ற

அளவுதானம் செய்து நான் முழுதும் ஸ்ரீ மூலஸ்தான நாயகர் முன் உபவாசம் இருந்து பக்தியுடன் வலம் வந்து விழுந்து வணங்கி திருவைந்தெழுத்தை ஒதி ஒராண்டு வழிபட்டு வரவேண்டும். மீண்டும் சபாபதியை மும்முறை வலம் வந்து கீழே விழுந்து வணங்கி சிரத்தையுடன் திருவைந்தெழுத்தை ஒதி வழிபட்டால் இறைவன் திருவருள் கிட்டும்' என்கிருர். இதே முறையில் வேதவியாசரும் சீடர்கள் புடைசூழ மூலஸ்தானேசுவரரை ஒராண்டுக் காலமும் சபாபதியை ஒராண்டுக் காலமும். ஓம் நமச்சிவாய என்ற ஆறக்கர மகா மந்திரத்தை ஒதி வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. இதேபோல் தேவர்களும் அசுரர்களும் அவனருளால் அவன் தாளேப் போற்றி வீடுபேறு பெற்றனர் என்று வாயுசம்கிதையின் முத்தி கண்டத்தில் 'ஈசுவர நிருத்திய தர்சனம்' என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது. ★

சிவன் விரதங்கள்-8

1. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக்கொண்டு, பின் தொடர்ந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருப்பது; 2. மார்கழி திரு ஆதிரை நாளில் மேற்கொண்டு, பின் மாதந்தோறும் வரும் திரு ஆதிரை நாளில் இருப்பது; 3. உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது; 4. மாசி, தேய்பிறை சதுர்த்தசி (சிவராத்திரி)யில் தொடங்கி ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் மேற்கொள்வது; 5. கேதாரேஸ்வர விரதம்-புரட்டாசி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசைவரை இருப்பது; 6. பங்குனி உத்திரநாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது; 7. தை சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது; 8. வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.

உமை விரதங்கள்-3

1. சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருப்பது. 2. ஐப்பசி உத்திரநாளில் இருப்பது. 3 புரட்டாசி வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையில் இருப்பது.

ஸ்ரீ மூலநாதர்

சதுச் சாஸ்த்ர சிரோமணி,

பண்டித ராஜ ஸோமஸேது தீட்சிதர்,

ஆராய்ச்சி அறிஞர்,
ஸ்ரீ நடராஜர் கோயில் அறங்காவலர்,
சிதம்பரம்.

ஸ்தாவரமான அண்ட ஸ்ருஷ்டியும் ஜங்கமமான சரீர ஸ்ருஷ்டியும் (நிற்பன நடப்பன என்ற உடம்புப் படைப்புக்களின் நிலை) சமமாகும். ஆதலால் சரீரத்தில் இடைநாடி இடத்திலும், பிங்கலை நாடி வலத்திலும் சுழுமுனை நாடி நடுவிலும் போவது போல் இப்பூமிக்கு இடாநாடி இலங்கைக்கு நேரே போகும் (பிங்கலை நாடி இமயமலைக்கு நேர் போகும்.) இவைகள் இரண்டிற்கும் நடுவில் சுழுமுனை நாடி தில்லை வனத்தில் (சிதம்பரம்) நடுவில் தொடர்ச்சியாகச் செல்லுகிறது. புருஷ உருவமாகிய இந்த பூதலத்திற்குக் கைலாசமலை தலை, ஸ்ரீபர்வதம் முகம், கேதாரம் நெற்றி, காசி புருவமத்யம், குருக்ஷேத்திரம் ஸ்தனம், பிரயாகை தொப்புள், திருவாரூர் மூலாதாரம், சிதம்பரம் நெஞ்சின் மையம். சித்—ஞானம், அம்பரம்—ஆகாயம், ஞானவெளி என்று பொருள். தன்னையும் மற்றேனைய பொருளையும் பிரகாசிக்கச் செய்யும் பேரொளி. அப்பேரொளியே ஸ்ரீ நடராஜமூர்த்தியும் இரகசியமும் ஆகும். இத்தகைய சிதம்பரத்தில் பாதாளத்தை அடிவட்டமாகவும், சிதம்பரத்தை மேல் சிகரமாகவும் கொண்ட தெய்வமயமான மலையின் சிகர பிலத்தில் ஆலமரத்தின் அடியில் சுவயம்புவாக இருக்கும் மகாலிங்கமே ஸ்ரீ மூலநாதர் ஆவார் ஸ்ரீ என்றால் சம்பத்து எனப் பொருள். அதற்கு அடிமுதற் காரணமானவர் உலகம் அனைத்திற்கும் தலைவர். ஸ்ரீ—இலக்குமி. மூல—பதியான மஹாவிஷ்ணுவிற்கு, நாதர்—தலைவர் மஹாவிஷ்ணு இவரை ஆராதித்து இவருடைய அருளால் சிறப்புற்ற உபமன்யுவிடமிருந்து சிவதீட்சை பெற்றார் என்பது வரலாறு. கிழக்கு நோக்கியுள்ளது மூர்த்தி. வடபுறத்தில் தெற்கு நோக்கி அருள்பாலிக்கும் அம்பிகை உமா பார்வதி. ஸ்ரீ மூலநாதரின் பெருமை பலவாறாகப் புராணங்களில் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. அதில் முக்கியமானவற்றைக் கவனிப்போம். மத்யந்தன முனிவர் தன் மகனுக்கு வழிபடு தெய்வமாக இந்த ஸ்ரீ மூலநாதரைக் குறிப்பிட்டு இங்கு

அனுப்பிவைத்தார். அவரும் இங்கு வந்து முறைப்படி வழிபாடு செய்து கொண்டிருக்கும் நாளில் பூக்கள், புழுக்கள் அரித்தல், வாடுதல் முதலிய குற்றங்கள் மிகுந்து காணப்படுவதைக் கண்டு அஞ்சி மனம் வருந்தி கடும் தவம் இருந்து பரமசிவனை நேரில் கண்டு, விடி இருளில் கண் பிரகாசத்திற்காகவும் பனியால் நனைந்த மரங்கள் வழுக்காமல் இருக்கவும் கைகளும் கால்களும் புலியைப் போல் வலிமை வாய்ந்த நகப்பற்று உடையவைகளாக வும் ஒளி பொருந்திய கண்களோடு கூடியவைகளாகவும் அமைய அருள் பாலிக்கவேண்டி அவ்வாறே வரம் பெற்ருர். அதனுல் வியாக்கிரபாதரெனத் திருநாமம் பெற்று விடியும் முன்பே வண்டு கள் தேன் பருகாத நிலையிலேயே தூய்மையான வாடாத, புழுக்கள் அரிக்காத, மலர்ந்த நறுமணம் கொண்ட மலர்களால் மகிழ்ச்சி யுடன் வழிபட்டுக் கொண்டிருந்தார். தந்தையார் வந்து இவரது வழிபாட்டினைக் கண்டு மகிழ்ந்து வசிஷ்டரின் தங்கையை அன்னு ருக்கு மணம் முடித்துவைத்தார். இத் தம்பதிகளுக்கு உபமன்யு என்று ஒரு மகவு பிறந்தது. அதை அருந்ததி காமதேனுவின் பாலைக் கொடுத்து வளர்த்து வியாக்கிரபாதரின் ஆசிரமத்திற்குக் கொண்டு வந்துவிட்டுச் சென்ருள். இக்குழந்தை காமதேனுவின் பாலை நினைத்து அழுததைச் சமாதானம் செய்ய இயலாமல் ஸ்ரீமூல நாதர் சந்நிதியில் சேர்ப்பித்து இவரேதான் உனக்குக் கதி என்று துதித்து நின்ருர். அப்படியும் அழுகையை நிறுத்தாமல் இருக்கும் பொழுது ஸ்ரீமூலநாதர் பாற்கடலையே கொடுத்து அருள் பாலித் தார். இக் குழந்தையே ஸ்ரீமூலநாதரின் அருளால் சிறந்த சிவபக் தராக விளங்கி திருமாலிற்கு சிவதீட்சை செய்து வைக்கும் பெரும் பேற்றைப் பெற்றது.

ஆதிசேஷன் மஹாவிஷ்ணுவின் அருள் ஆசியுடன் பதஞ்சலி எனத் திருநாமம் பூண்டு சிதம்பரம் வந்து வியாக்கிரபாதருடன் சேர்ந்து கடுந்தவம் செய்துகொண்டு ஸ்ரீ மூலநாதரை வழிபட்டுக் கொண்டிருந்தார். இவர்களுக்குத் தை மாதத்தில் குருவாரம் கூடிய பூச நட்சத்திர நன்னுளில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி ஆனந்த தாண்டவம் ஆடி சிதம்பர இரகசியத்தையும் காண்பித்து, அதன் உட்கருத்தையும் உபதேசித்து அருளினுர். பகவான் ஸ்ரீ நடராஜர், வரம் வேண்டி அடையுங்கள் என்று சொல்ல, தான் செய்த பூஜை யும் இனி செய்யப் போகும் வழிபாடும் தங்களுக்கே உரியதாக வேண்டும் என்று வியாக்கிரபாதர் வேண்டினுர் உலகில் உள்ள எல்லா உயிர்களின் உள்ளம் உங்களது தியானத்தில் நிலைத்து நிற்கவேண்டும். ஆசை, கோபம் முதலிய தீயகுணங்கள் அறவே நீங்கவேண்டும். தங்களது தாண்டவத் திருவடிகளையே எக்காலத் திலும் வணங்கவேண்டும், எனக்கும் வியாக்கிரபாதருக்கும்

தில்லை மூவாயிர தீட்சிதர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் பிணியற்ற வாழ்வும் இடையறு மகிழ்ச்சியும் ஏற்பட்டு வாழ்ந்து பிறவிக் கடலைத் தாண்டி மறுபிறவி இல்லாதிருக் கவும் இந்த ஞானசபையில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுடன் ஆனந்தத் தாண்டவத் தரிசனத்தை எல்லோரும் எக்காலத்தும் கண்டு களிக்கும்படி இங்கேயே இருந்து அருள்பாலிக்கவேண்டும் எனப் பதஞ்சலி வேண்டி நின்றார். அவர்களுடைய வேண்டு கோளால்தான் நமக்கும் இவ் ஆனந்த நடனக்காட்சியைக் காணும்பேறு கிட்டுகின்றது.

ஸ்ரீ மூலநாதருடைய சந்நிதியில் பதஞ்சலி வியாக்கிரபாதர் விக்கிரகங்களைக் காணலாம். இந்த ஸ்ரீ மூல நாதருடைய வழிபாட் டால் திருமூலர் திருமந்திரம் செய்யும் திறமையைப் பெற்று இங்கேயே அரங்கேற்றினார் என்பது ஆன்றோர்களின் வழிமுறை யாக வந்த கதையாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீ மூல நாதரை வழிபட்டு இம்மையில் நல்வாழ்வையும் பரத்தில் பேரின்பப் பெருவாழ்வையும் பெற்று உய்வோமாக.

எல்லாம் ஸ்ரீ நடராஜர் கிருபை! ★

புருஷாமிருகம்

ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து ஆலயத்துக்குள் செல்லும் கீழ்ப்புறவாயில் இருமருங்கும் உட்பகுதியில் அமைந்துள்ள குடவரையில் ஆண், பெண் வடிவில் இரண்டு வடிவம் மனிதர்கள் முகமும் மிருகத்தின் உடலும் உடையதாய் அமைக்கப்பட்டு இருந்து வருகிறது இவை புருஷாமிருகம் என்று சொல்லப்படும்.

நாம் ஆலயத்திற்குச் செல்லும்போது குளித்து முழுகித் தூய ஆடை அணிந்து செல்லினும், நம்மையறி யாமல் நம்பால் எழும் தூய்மையின்மை இவற்றை வழிபட்டு உள்செல்லும்போது விலகிவிடுவதாகவும் அதனால் குற்றம் நம்மைச் சார்வது இல்லையென்றும் சொல்வது மரபு.

ஸ்ரீ மூலநாதர் துதி

ந. ந. ஸோமநாகதேவ தீக்ஷிதர்

கீழவீதி, சிதம்பரம்

மூலநாதன் அருள்இருந்தால் ஞாலமெல்லாம் புகழ்பரவும்
ஆலமுண்ட கண்டம் அதைச் காணும் போதுன் உளம் நெகிழும்
(ஸ்ரீமூலநாதன்)

பாலகன் முருகனுக்கும் மூத்தவன் கணபதிக்கும் காவலன்தான்
நம்மைக் காப்பவனும் அவன் தான்
பதஞ்சலி மாமுனியும் வியாக்ரபாதருமே தினம் வந்து
தொழுதேற்கும் தனிப்பெரும் தெய்வமன்றோ
(ஸ்ரீமூலநாதன்)

உமையாள் அருகிருக்க உமைநாடித் துபர்வருமோ
இமையாமல் நமைக்காப்பார் மறந்திட மனம் வருமோ
ஜோதியின் ஒளியில் உந்தன் பாதிதுபர் நீங்கிவிடும்
மீதியுள்ள சஞ்சலங்கள் அவன் பாதமதில் போய்ச்சேரும்
(ஸ்ரீமூலநாதன்)

பஞ்சமுகநாகம் வந்து பாசமாய் குடை பிடிக்க
தஞ்சமென்று நந்திதேவன் நேரிலே காவல்காக்க
மஞ்சள் வண்ண ஆநவன் போல்மாதேவன் பரிமளிக்க
மிஞ்சுதய்யா என்மனமும் மேலும் அவன் புகழுரைக்க
(ஸ்ரீமூலநாதன்)

வண்ணமலர் மாலை சூடி உள்ளமதை கொள்ளைகொண்டான்
பண்ணிசைகள் பாடவைத்து என்னையும்தான் ஆட்கொண்டான்
முன்ஜென்மம் தன்னில் என்னை எங்கெங் கோபிறக்க வைத்தான்
பின்ஜென் மமெல்லாம் இந்தத் தில்லையிலேயே வாழவைப்பான்
(ஸ்ரீமூலநாதன்)

ஸ்ரீ மூலநாதரைப் பணி மனமே

சிதம்பரம் ஸாஹித்யகர்த்தா, கலைமாமணி

ஸ்ரீ வி. வி ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர்

ராகம் : ஹிந்தோளம் தாளம் : மிச்ரஜம்பை

பல்லவி

ஸ்ரீமூல நாதரைப் பணிமனமே—(தில்லை)

க்ஷேமலாபம் பெருகும் தினமே (ஸ்ரீமூல)

அனுபல்லவி

காமாதியால் நொந்து கருத்துமிக வாடாமல்

கள்ள முள்ளோர் நட்புறவைக் கனவிலும் நீதேடாமல் (ஸ்ரீமூல)

சரணம்

புலிப்பாதர் பதஞ்ஜலியும்

பூஜித்த பலன் வரத்தால்

பூ கைலாஸமெனப் புகழும் சிதம்பரத்தில்

புகழும் சிதம்பரத்தில்

கலிநாசனம் செய்து

காண்பவர்க் கருளும் செய்து

கௌரிஉமை காணமன்றுள்

களிநடனம் ஆடும் திருவை (ஸ்ரீமூல)



நூற்றுண்டு முன்பாக மூலட் டானர்க்கு
நுவலரிய குடமுழுக்குப் பணிசெய் வித்த
கோவிலூர்ப் பரம்பரையார், நகரத் தார்க்குக்
குருவான இராமநாத ஞான தேசிகர்.



திரு. தி. சுந்தரம் செட்டியார்
(29 - 5 - 1915 — 28 - 10 - 1973)

பண்ணமைநல் தேவாரப் பாக்களிலே பற்றுடையார் தியாக ராசர்
கண்ணான தம்மகற்குச் சுந்தரரின் பெயரிட்டார் கருத்துள் கொண்டார்
எண்ணரிய நற்புகழ்சேர் கருமுத்து சுந்தரனார் இறைசேர் பற்றால்
வண்ணமுறு தேவாரத் தலம்பலவும் கண்டுவந்தார் போற்றி வாழ்வாம்.

— முத்தமிழ்மணி கதி. சுந்தரம்

சுயம்புலிங்கம்

ஐ. டி. ஆர். கணேச தீக்ஷிதர்

தெற்கு வீதி, சிதம்பரம்

சிதம்பரத்திலுள்ள முக்கியமான சிவபெருமானுக்கு ஸ்ரீ மூலநாதர் என்று பெயர். அதற்குப் பொருள், எல்லாவற்றிற்கும் காரணமாக உள்ளவர் என்பது.

நம் தேசத்தின் வடக்குப் பக்கத்தில் ரிஷிகள் வாழும் வனத்திலிருந்த மத்யந்தினர் என்ற ரிஷி தன்னுடைய குமாரனுக்கு சகல வேதாகமங்களையும் கற்பித்தார். மேற்படி குமாரனும் அவைகளைக் கசடறக் கற்றான். ஆனால் அதில் சொல்லிய கர்மாக்களைச் செய்து, இம்மைப் பயன்களை அனுபவிக்க மனமில்லாமல், பேரின்ப வாழ்வை அடைய விரும்பி, அதற்குகந்த மார்க்கத்தைச் சொல்லும்படி தன் தகப்பனாரைக் கேட்டான். அவரும் நன்றாக ஆலோசித்து, தெற்குப் பக்கத்தில் தில்லைவனத்தில் அங்கு ஒரு சிவலிங்கம், குளக்கரையின் மரத்தடியில் இருக்கிறது. அங்கு போய் பக்தியுடன் அவரைப் பூஜித்து வருவாயேயானால், அவருடைய அருளால், நீ விரும்பிய பேரானந்தப் பெருவாழ்வை அடையலாமென்று அங்கு போக வேண்டிய வழியையும் சொல்லியருளினார்.

குமாரனும் அப்படியே பல மலைகளையும் பல நதிகளையும் கடந்து விசாரித்து தில்லைவனத்தை யடைந்து, தகப்பனார் சொல்லியபடி, ஒரு குளக்கரையின் மரத்தடியில் தனித்திருக்கும் ஒரு சிவலிங்கத்தைக் கண்டு, தன் தகப்பனார் சொல்லிய மூர்த்தி இவரே என்று தீர்மானித்து, அந்தக் குளத்தில் குளித்து, பெருமானைத் தெரிசித்து, காட்டில் கிடைக்கும் பூ, பழம், கிழங்கு முதலியவைகளைக் கொண்டு பெருமானைப் பூஜித்தும், தானும் அவைகளையே உண்டும் வந்தார்.

காலக்கிரமத்தில் பெருமானின் அருளால் தனக்கும் புலிக் கால், புலிக்கையும், உபமன்யு என்ற அரிய புத்திரனும் கிடைக்கப் பெற்று, தனக்கு வியாக்கிரபாதர் என்ற பெயரும்

பெருமானுல் சூட்டப்பெற்று, கடைசியாக ஸ்ரீ பதஞ்சலி பகவானேடு, ஸ்ரீ ஆனந்தநடராஜ மூர்த்தியின் ஆனந்த நடனத்தைக் கண்டு தெரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்ருர் என்பது சரித்திரம்.

ஸ்ரீ பதஞ்சலி பகவான் ஸ்ரீ தில்லைவாழந்தணர்களைக் கொண்டு ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் நித்திய பூஜை, நைமித்திக பூஜை, விசேஷ உத்ஸவங்கள் முதலியவைகள் நடத்த பூஜாசூத்ரமென்னும் வைதிக பூஜை கிரமம் செய்து வைத்திருக்கிருர்கள். அதன்படிதான் இப்பொழுதும் நடந்து வருகின்றன. வேறு எந்த தலங்களிலும் இல்லாத பூஜை, இந்த சிதம்பரத்திற்கு உரியது. இந்தவிதமான பூஜை ஸ்ரீ நடராஜர் ஆனந்த நடனம் இந்தத் தலத்தில் செய்யத் துவங்கிய பிறகுதான் ஸ்ரீ தில்லைவாழந்தணர்கள் செய்து வருகிருர்கள்.

ஆனந்தநடனம் செய்வதற்கு முன் ஸ்ரீ மூலநாதரை வியாக்கிர பாதரும், பிறகு பதஞ்சலியும் சேர்ந்து பூஜை செய்துவந்தார்கள். ஆனுல் ஸ்ரீமூலநாதருக்கு எந்தவிதமான நியமபூஜையோ உத்ஸவமோ செய்துவரவில்லை. அப்படியே பிறகு பூஜை நியமங்கள் ஏற்படுத்திய பூஜாசூத்ரத்திலும் ஸ்ரீமூலநாதருக்கு, நித்திய பூஜை நியமமோ உத்ஸவமோ செய்யும்படி நியமிக்கவில்லை. உத்ஸவம் நியமிக்காதபடியால் கொடிமரமுமில்லை.

இதைப்பற்றி ஆராயும்பொழுது, மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளுக்கே நியமபூஜைகளும், உத்ஸவங்களும் நடக்கிறது. ஒருருவம், ஓர் நாமமில்லாத பெருமானுக்கு ஆயிரம் பெயர் சூட்டி வழிபடுகிருேம். ஸ்ரீமூலநாதர் சுயமாகவே உண்டானபடியால்தான், அவருக்கு நியமபூஜைகளும், உத்ஸவங்களும் நடக்கவில்லை. ஸ்ரீமூலநாதர் சுயமாகவே உண்டான படியால்தான், அவருக்கு நியமபூஜைகளும் உத்ஸவங்களும் நியமிக்கவில்லைபோலும்.

கயிலாசபதி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் இருவர்க்கும் ஆனந்த நடன தெரிசனம் காண்பிக்கத் தக்க இடத்தை தில்லை வனத்தில் கண்டுகொண்டு வரும்படி, ஸ்ரீநந்திகேஸ்வரரிடம் சொல்ல, அவர் தில்லைவனத்துக்கு வந்து சிவகங்கை என்னும் குளக்கரையில் மரத்தடியிலிருந்த ஸ்ரீமூலநாதரைப் பார்த்து ஸ்ரீ நந்திகேஸ்வரர் நினைத்தார். பெருமான் கயிலாயத்தில் இருப்ப

தாக எல்லோரும் நினைக்கிறார்கள். அவர் உண்மையில் தில்லை வனத்தில்தான் இருக்கிறார். அப்படியே ஸ்ரீ மூலநாதருக்கு தெற்குப் பக்கத்தில்தான் ஸ்ரீபெருமான் ஆனந்த நடனம் ஆடுவதற்குள்ள ஞானசபை சூட்சும ரூபமாக இருந்ததையும் அறிந்து போனார் என்றும், பிறகு பெருமான் அருளியபடி தைப்பூசத்தில் பகல் 12 மணிக்கு ஆனந்த நடனம் செய்யப் போவதாக பதஞ்சலி வியாக்கிரபாதர், இன்னும் மற்ற தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் பெருமான் வரவை எதிர்பார்த்திருக்க நந்திகேஸ்வரர் மாயையாகிற திரையை நீக்க, சூட்சமமான ஞானசபையில் இறைவனின் ஆனந்த நடனத்தைக் கண்டு தெரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு எய்தினார்கள். ★

பாற்கடல் ஈந்தபிரான்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்... எனத் திருப்பல்லாண்டு என்னும் நூலில் சேந்தனார் கூறுகின்றார். இவ்வரலாறு சிதம்பரதலத்தில் நிகழ்ந்தது. அதனைக் கீழே காண்க:

வியாக்கிரபாத முனிவர் தந்தையார் அநுமதிப்படி வசிஷ்ட முனிவருடைய தங்கையைத் திருமணம் செய்து கொண்டு உபமன்னியு என்னும் ஒரு நன்மகனைப் பெற்றார். அவரை வசிஷ்டமுனிவருடைய மனைவியாராகிய அருந்ததியார் தம்முடைய ஆச்சிரமத்துக்குக் கொண்டுபோய் காமதேனுவினுடைய பாலை யூட்டிவளர்த்து வரும் நாளில் வியாக்கிரபாத முனிவர் அக்குழவியைத் தமதிடத்துக்குக் கொணர்வித்து தாம் உண்ணும் கிழங்கு பழம் இவைகளையும் நீரில் கரைத்த மாவையும் உண்பிக்க, அவர் அவைகளை உண்ணாது உமிழ்ந்துவிட்டு காமதேனுவின் பால்வேண்டி அழுதார். தந்தையாகிய முனிவர் அக்குழந்தையை திருமூலட்டான முடையார் சந்நிதியில் கிடத்தியிட பசி மேலீட்டால் அழும்பொழுது இறைவன் திருவருளால் திருப்பாற்கடலை அரைப் பிடித்துக் கொடுக்க அதனைப் பருகி வளர்த்தார்.

இது இவ்வாலயத்தின் வடபால் திருப்பாற்கடல் என்னும் பெயரால் வழங்கப்பட்டு சிதம்பரத்திலுள்ள பத்துத் தீர்த்தங்களுள் ஒன்றாய் விளங்கிற்று

ஒருமனப்படுத்து

சங்கீத சாஹித்ய வித்வான், இசையமைப்பாளர்

சிதம்பரம் T. நடராஜ தீக்ஷிதர்

இராகம் : வசந்தா தாளம் : ஆதி

பல்லவி

மனதை ஒருமைப்படுத்திவை மதமனிதா சதாநிதானி
உனது எனதுஇரண்டும்பொய் என்பதே மெய் (மனதை)

அனுபல்லவி

தினமும் சிவனை எண்ணத்தீரும் கவலையெல்லாம்
சினமும் குறையும் நல்லகுணமும் விரையும் சொன்னேன்
(மனதை)

சரணம்


மானிடப் பிறவி இனியும் வருவதரிது அரிது அதிலும்
மாசிவனைப் புகழ்வதோ மிகவும் இனிது ஆகையால்
மாயையெனும் பேய்கையில்நீ மாட்டுவது மனிதன்தர
மோமதியின்திறமோ
தாயுதவிதர தாரமதுவர சேய்கள்தமைப் பெறவாஇதுவும்
துறவா
நாய்நன்றியினதும் நரியின் தந்திரமதும் ஆய்உனக்கு
வருமாஎட்டிக்
காய்கசக்கிறதும் கனியும் இனிக்கிறதும்வாய் மணக்கிறதும்
வார்த்தையிலா
நோய்நொடியுமுள்ள தேகமிதை வளர்த்துத்தீயில் இடுவது
முறைமுறையா
ஒருக்கால் உனதுஅருகாமை வரும் இறையருள்மெழு காய்உருகி
அழகாய்உனது. (மனதை) ★

உ

சிவமயம்

ஸ்ரீ மஹா கணபதி துணை

ஓம் சிவாய நம !



சிவலிங்கம்

க. பரமேஸ்வர தீக்ஷிதர்

85, தெற்கு வீதி, சிதம்பரம்

"தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும்—மெல்லியல் ஓர்
கூற்றனைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றனை நெஞ்சே நினை" —அம்மையார்.

சிவபெருமானர் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுய்யுமாறு கொண்ட நிர்குண சொருபத்தின் சகல வடிவமே இலிங்கமாம்.

அது சதாசிவ சொரூபம். கர்மஸாதாக்ய வடிவமாகிய அதிற் பீடம் சக்தியையும், இலிங்கபாகம் சிவத்தையும் உணர்த்தும். இச் சாதாக்யத் திருமேனி ஸர்வான்மாக்களையும், சர்வாண்டங்களையும் அடக்கியிருக்கும் பரம காரணனை விளக்கியுள்ளது.

ஆதலின் உலக மக்களனைவரும் எளிதிற்றியானித்து வழிபாடு புரிதற்குச் சிறந்த சின்னமாக உள்ளது. இதைக் காட்டினும் சிறந்ததொரு சின்னம் வேறில்லை.

இலிங்கமென்ற சொல்லே அடையாளம் என்னும் பொருள் பற்றி எழுந்ததேயாம். சிவலிங்கமெனும் சொல்லை ஏழுவேற்றுமைகளிலும் வைத்துப் பிரித்துப் பொருள் கொள்ளலாகும் முறையே முதல் வேற்றுமையில் சிவனே இலிங்க வடிவன். 2. சிவனை உருவாகக் கொண்டதே இலிங்கம். 3. சிவனோடே அச்சிவனாலேயே (உண்டான) இலிங்கம். 4. சிவனின் பொருட்டு (சிவபூஜைக்காகவே) இலிங்கம். 5. சிவனிடமிருந்து (இது முதலான சகல சின்னங்களும் உண்டானது) சிவலிங்கம். 6. சிவனுடைய வடிவே இலிங்கம். 7. சிவனிடத்திலேயே சகலமும் வியாப்தம்-இலிங்கம். இன்னும் இப்பதத்தின் விளக்கங்களை விரிவாக வடமொழி, தென்மொழி நூல்களில் கண்டு இன்புறலாகும்.

இச்சிவலிங்கம் பரார்த்தலிங்கம் என்றும், இஷ்டலிங்கம் என்றும் இருவகையாகும். இவற்றுள் பரார்த்தம் என்பது ஐவகைத்து. 1. சுயம்பு, 2. காணபம், 3. தெய்விகம், 4. ஆரிஷம், 5. மானுஷம் என்பன.

இஷ்டலிங்கமாவது அவ்வவரும் சுவார்த்தமாய்ப் பூஜித்தற் பொருட்டு தத்தம் குருவினிடத்திற் பெறுவதாகும். மற்றது பரார்த்தமாக இப்பூவுலகின் கண்ணே விசேடித்துக் கூறப்பட்ட 1008 சிவாலயங்களிலும் அப்பரார்த்த பூஜைக்குரியோரால் காலந் தவறாது பூஜிக்கப்பட்டு வருவதாகும். அவற்றுள், சுயம்பு—தானே தோன்றியது. காணபம்-கணங்களால் பூஜிக்கப் பெற்றவை. தெய்விகம்—விஷ்ணு, பிரம்மா, தேவேந்திரன் முதலாய தேவர்களால், அவர் தம் பூஜார்த்தமாக ஸ்தாபிக்கப் பெற்றனவாம். ஆரிஷலிங்கம் என்பது வியாக்ரபாதர், பதஞ்சலி, விபசித்து, வசிஷ்டர் முதலான இருஷிச்ரேஷ்டர்களினால் போற்றப் பெற்றனவாகும். மானுடர்களால் ஸ்தாபிக்கப் பெற்றவையே மானுஷலிங்கம் எனப்படும்.

இவ்வாறு வேறுபட்ட இலிங்கஸ்தாபனத்தைப் பற்றி "தைத்திரிய ஸ்ரீ கிருஷ்ண யஜுர் வேத உபநிஷத்" நாராயண வல்லியில்-"திவ்யலிங்கத்துக்கு நமற்காரம்" என்று தேவர்களால் ஸ்தாபிக்கப் பட்ட லிங்கத்தையும், 'பவலிங்கத்துக்கு நமற்காரம்" என்று மானுட லிங்கத்தையும், "ஆத்ம லிங்கத்துக்கு நமற்காரம்" என்று இருதய குகையில் விளங்கும் ஆன்மலிங்கத்தையும் (சலன லிங்கம்), "சர்வலிங்கமும் ஸ்தாபிற்கப்பாலது" என இதர வஸ்து

களாலாய லிங்க ஸ்தாபனத்தையும் எடுத்து மொழியப்பட்டு இருக்கின்றது.

இஷ்டலிங்கத்தில் கொள்ளற்பாலன 1. பச்சை மண்ணாலாயது, 2. சுட்ட மண்ணிலிங்கம், 3. மரத்தாலானது, 4. சிலாலிங்கம், 5. உலோகத்தினாலான வார்ப்புலிங்கம், 6. நவரத்தினங்களால் ஆன லிங்கம், 7. மணிலிங்கம், 8. இரசலிங்கம், 9. பாணலிங்கம், 10. சுயம்பு லிங்கம் ஆகியன.

இவற்றில் பச்சை மண்ணாலாய இலிங்க முதல் சிலா லிங்கம் வரை ஒன்றுக்கொன்று பப்பத்து மடங்கு உயர்ந்த புண்ணியத்தை நல்கும். அவற்றினும் வார்ப்பு லிங்கம் நூறு மடங்கு நன்று. அதனினும் ரத்தின லிங்கம் அனந்த மடங்கு உயர்வு. மணிலிங்கம் லட்சம் மடங்கு அதிக குணம் வாய்ந்தது. பாணலிங்கம் பூஜிக்கின் அதிற்கோடி மடங்கு புண்ணியந்தரும். இரசலிங்கமும், சுயம்பு லிங்கமும் அவற்றின் அதிகம் பயன் தருவன. இக்கருத்தை மறை ஞான சம்பந்ததேவனார் அருளிய,

''மண்சுட்ட மண்மரங்கல் வண்செம் பெழுவாயு
மொண்மை யிரத்தினந்தா னும்''

''மணிவான லிங்கமிர தஞ்சுயம்பு தானு
மெணிலிவையொன் றுக்கொன்றேற் றம்.''

என்னும் குறள்களாலறியலாம்.

இஷ்டலிங்க பூஜையில் பெரும் பகுதி பாணலிங்கமே எல்லா ராலும் பூஜிக்கப்பட்டு வருகின்றதொன்றாகும்.

கூத்தனுக்கு குடமுழா முழக்கும், வாணாசுரன் தனது ஆயிரங் கரங்களால் உளுந்து பிரமாண முதல் முழத்தளவினது வரை யிலான இலிங்கங்களை பூசித்து நதியிலிட்டவையே வாண லிங்க மெனவும், பாண லிங்கமெனவும் படும்.

இந்த பாண லிங்கம் பூசிக்கப்பட்டு வரும் ஸ்தானங்களில் இலிங்காத்ரியும். காளிகாவர்த்தமும், ஸ்ரீகிரியும், கன்யகாச்ரமமும் சன்யா தீர்த்தமும், நேபாளமும், மஹேந்திர பர்வதமும், அமரேசி வரமும் அடங்கும்.

இம்மாதிரியான பாண லிங்கத்தை துலையிட்டு நிறுக்கின் அதன் எடையில் ஒவ்வொரு முறையிலும் மாறுதல் உண்டாகும்.

பாண லிங்கத்தில் வெண்மை, செம்மை, கருமை என நிறம் வாய்ந்தவை முறையே அந்தணர் முதலாய நால் வருணத் தார்க்கும் பூசிக்க ஏற்றனவாம், கிடையாவிடத்து கருமை

எல்லார்க்கும் உரியனவாம். இவற்றுக்கு பீடம் அஷ்டகோண, ஷட் கோண, சதுஷ் கோண, விருத்தம் உடையதாக அவ்வவ் வருணத்தாரால் அமைத்துக் கொள்ளற் பாற்று. அன்றியும் விருத்தமென்கிற வட்டமான பீடம் எல்லார்க்கும் ஆம்.

இவ்வாறு பீடத்திலிருத்தி பூசிக்கின் "பாண லிங்கத்தில் நின்மல நிராமயராய் சுத்த ஷாட்குண்ய பரிபூரணம் வாய்ந்த சிவ பெருமான் மற்றைய மண்ணுதிலிங்கங்களிற் செய்யப் பெற வேண்டிய ஆவாஹன முதலியன இன்றியே அனவரதமும், அப் பாண லிங்கத்தினின்றும் நீங்காது இருப்பர்" என சைவ நூல்கள் இயம்புவதாலேயே பாண லிங்கம் எல்லாராலும் பூசிக்கப்பட்டு வருவதாயிற்று.

இப்பாண லிங்கத்தில் தூலமாயுள்ள பக்கத்தை முடியாயும், உன்னதமான பாகத்தை முகமெனவும், குவிந்திருக்கும் இடம் அடி பாகமாகவும் கொண்டு, பாண லிங்கத்தின் உயரத்தில் 5-ல் 2 பங்கை பீடத்துட் பதித்து அஷ்ட பந்தனஞ் சாத்திப் பூசித்து வர வேணும்.

இங்ஙனம் பிரதிட்டிக்கு முறைமையெல்லாம் சிவனிடத்து பக்தி மிக்கு அச்சதா சிவனொருவனையே நினைத்து அன்பு மீதுறப் பூசிக்க வேண்டி எழுந்தனவேயன்றி அன்பும், பக்தியுமின்றி, மந்திரமின்றி எவ்வளவு முறையோடு தாபித்து பூசிக்கினும் அது பயனுகா.

"நட்ட கல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே,
சுற்றிவந்து மொனமொனென்று சொல்லு மந்திரமேதடா,
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ"

எனுஞ் சிவ வாக்கியத்தில் நாதன் உள்ளிருக்கையில் நட்ட கல்லும் பேசும். சுட்ட சட்டி சட்டுவங் கறி சுவையறியும். இதற்கு சொல்லு மந்திரம் ஏது-காரணம் (ஹேது ஓ என்பது அசை.)

பின்னும் சிவலிங்கத்தில் அவ்யக்தமென்றும், வியக்தா வியக்த மென்றும், வியக்த லிங்கமெனவும், மூவகையாக அவ்வுருவமையும் பிரியும்.

அவ்யக்த மென்பதே அருவுருவம். கண்ணுக்கு சிவலிங்க வடிவு உருவமாய் தோற்றினும் கண், காது, மூக்கு முதலிய அவயவங்களால் முற்றுப் பெருமல் விளங்குஞ் சிவலிங்கமெல் லாமே அவ்யக்த லிங்கங்கள்தாம் ஆயின், பின்னை வியக்தா வியக்த லிங்கம் என்பதில் அவ்விலிங்க மத்தியில் ஒரு முகமோ

நாற்புறங்களிலும் முகத்துடனே, ஐம்முகங்களுடனே அமைந்து இருப்பது ஆகும்.

இவ்வியக்தா வியக்த லிங்கம் ஒரு முகத்துடன் சிதம்பர சபையில் இரகசியத்தின் முன்னர் வைத்து பூஜிக்கப்பெற்று வருகிறது காணலாம்.

பின்னும் காளஹஸ்தி, நேபாளம் முதலிய இடங்களிலும் இந்த வியக்தா வியக்த லிங்கம் பூசிக்கப்பட்டு வருகிறது.

அருவ உருவாக வழிபடும் இச்சிவலிங்கமே வியக்த லிங்கமாக வழிபடப்படும் இடத்து உருவம் கொண்டு-சர்வதோபத்ரம்-வர குத்தமானம்-சைவாதிகம்-ஸ்ரீராசிகம் என நான்காகவும், பின் அந்நான்கும் பதினறும், அவையே அறுபத்து நான்காயும் விரி வடையும்.

இவற்றுள் 25 வியக்த லிங்கங்கள் ஆவன.

1. சந்திரசேகரர், 2. உமாசேகர், 3. ரிஷபாரூடர், 4. சபாபதி 5. கல்யாணசுந்தரர் 6. பிக்ஷாடனர், 7. காமாரி, 8. காலாரி, 9. திரிபுராரி, 10. ஜலந்தராரி, 11. மாதங்காரி, 12. வீரபத்ரர், 13. ஹரிஹரர், 14. அர்த்தநாரி, 15 கிராதர், 16. கங்காளர், 17. சண்டேசானுக்ரகர், 18 நீலகண்டர், 19. சக்ரதானர், 20. கஜாமுகானுக்ரகர் 21. சோமாஸ்கந்தர், 22. திருஏகாபதர், 23. சுகாஸனர், 24. தக்ஷிணமூர்த்தி, 25. இலிங்கோத்பவர்.

அவ்வியக்த லிங்கத்தினின்றே வியக்த லிங்கம் உண்டானதற்கு காலாரியும், இலிங்கோத் பவருமே அறிகுறி.

இவ் வியக்தலிங்கங்களான இருபத்தைந்து மூர்த்தங்களுமே சிதம்பர ஸ்ரீமூலநாத கர்பகிரஹ சுற்று மதிலின் புறத்தில்மேல் பாகத்தில் தென்புறத்தில் தக்ஷிணாமூர்த்தி சன்னதியிற் தொடங்கி வடபாற் சண்டேசர் சன்னதி வரையிற் சித்திர ரூபமாக முற் காலத்தில் வரையப் பெற்றிருந்தவாறே சைவத் திருவாளர் நற்றிருப்பணிச்சீலர், ஸ்ரீ கருமுத்து எஸ். சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள் தமது மூலநாதற் கோயிற் திருப்பணியில் புதுக்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு ஆலயத்தினுள் சிதம்பர ஸ்ரீமூலநாதர் போன்று கருவறையில் பூசனையிலுள்ள சிவலிங்கம் சூக்குமலிங்கமெனவும், அவ்வக் கோயிலின், விமானம் கோபுரம் முதலியன தூலலிங்கமெனவும், நந்தி முதலியன காரணலிங்கமெனவும பலி பீடம் பத்ரலிங்கமெனவும் கொள்ளப்படும்,

சூக்குமலிங்கம் பதியையும். காரணலிங்கமாகிய நந்தியெம் பெருமான் பசுவையும், பத்ரலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும் உணர்த்துமென்பர். சிவபக்தியிற் சிறந்தோரால் இருதய கமலத்தினுள் தியானிக்கப்பட்டு கற்பிதமாய்ப் பூசிக்கப்படும் ஆத்தும சிவலிங்கம் "சலன லிங்கம்' எனப்படும். இவ்வகை ஆத்தும லிங்கத்தை திருமூலர் தமது திருமந்திரத்தில் பிண்ட லிங்கப் பகுதியில் ஒரு மந்திரத்தால் அறிவுறுத்துகின்றனர்.

"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே"

இம்மந்திரத்தில் சிதம்பரத்தைக் குறிப்பிட்டது என்னையெனில் இச்சிதம்பர சபையின் கண்ணே அனைத்துலகும் உய்யும் வண்ணம் உமாதேவியார் காண அனவரதமும் ஆனந்தக் கூத்தாடுகின்ற வியக்த லிங்கமாகிய சபாபதியும், அவர் முன்னர் "அழகிய திருச்சிற்றம்பலமுடையார்" எனும் திருநாமத்தோடு விளங்கும் சதா சிவ சொரூப சகல மூர்த்தியாகிய சந்திரமௌலீஸ்வரரும் (ஸ்படிக லிங்கமும்), நிர்குணமாய், வேதங்களிலுமறியப்படாத தாய்நிரதிசயானந்த நின்மலமாய் பரம ரகசியமாய் விளங்குகின்ற அருவமான ஆகாச லிங்கமெனவும், சிதம்பரமெனவும் படுகின்ற இரகசிய ஸ்தானமும், பதஞ்சலி வியாக்ரபாதராற் பூசிக்கப் பெற்ற சுயம்பு மூர்த்தியும், பாற்கடல் ஈந்த பிரானுமாகிய ஸ்ரீமூல நாத சிவலிங்கமும் ஒரு கருத்திற் கொள்ளற் பொருட்டே எனத் தோன்றுகின்றது.

திருக்கூத்து-சபாபதி, சதாசிவம்-சந்திரமௌலீசர், சிதம்பரம்-அருவமாகிய, ரகசியம் சிவலிங்கம்—ஸ்ரீமூலநாதர்.

இவ்வாறு இந்நான்கு லிங்கத்தினிடமும் ஒத்த கருத்துக் கொண்டே திருவாவடுதுறை யாதீனத்து சிவஞான சுவாமிகள் தாம் இயற்றிய சிவநாமக்கலி வெண்பாவில்.

"பொன்னி வடகரையிற் பொன்னம்பலக்கோயின்
மன்னு சிவகாமி மகிழ்ந்தேத்த—நன்னடன
மாடுஞ் சபாபதியே யம்மையுமை கண்குளிர
நாடுநீ திருமூல நாயகா..."

என உரைக்கின்றார்.

சிவலிங்கங்கள் பஞ்ச பூதலிங்கங்களாக (மண்-நீர்—தீ—வளி—வெளியாக) பஞ்ச பூதஸ்தலங்களில் ஆராதிக்கப்பட்டு வருவது யாவருமறிந்த ஒன்றே.

இங்ஙனமே சிவனது அட்டமூர்த்தமும் சிவலிங்க சொருபமே இதில் யஜமானனுகிய தானே இலிங்கவடிவாகின்முன்.

''எட்டுமூர்த்தியாய் நின்றியலுந்தொழி
லெட்டு வான் குணத் தீசனெம்மான்றனை
யெட்டு மூர்த்தியு மெமமிறை பெம்மிளே
யெட்டு மூர்த்தியு மெம்முளொடுங்குமே'

த. தி. குறுந்தொகை. அப்பமூர்த்தி.

இவ்யஜமானன் தாமியற்றும் வேள்வியிலும் ஓம குண்ட ரூப மாக இலிங்க பீடத்தை தாபித்து, அக்னிவடிவாகிய சிவலிங்கம் பிரதிஷ்டித்து தானேயபதுவாக பாவித்து. பூசிக்கின்றனமென்று ஆகமங்கள் விதந்து ஓதுகின்றன.

ஆகவேதான் கும்பாபிஷேக முதலான பெருஞ்சாந்திகளை ஆலயங்களில் நிகழ்த்துங்காலத்து அவ்வஷ்டலிங்க மூர்த்தி சொருபமாக எட்டு ஓம குண்டங்களும் ஸமஷ்டி சொருபமாக பிரதான குண்டமும் அமைத்து யாகம் புரிகின்றனர்.

இக்கருத்தை திருபதிகை மனவாசகங்கடந்தார் தாமருளிய உண்மை விளக்கம் என்னும் தமது நூலிற் காப்பும் முன்னுரையும் நீங்கிய முதற் செய்யுளில் வலியுறுத்துகின்ருர்.

''நாற்கோணம் பூமி-புனல் நண்ணுமதியின்பாதி,
ஏற்குமனல் முக்கோணமெப்போதும்—ஆர்க்கும்
அறுகோணங்கால்-வட்டமாகாய-மான்மா
வுறு காயமாமிவற்ருலுற்று.

ஓர் சிவலிங்கம் நிறுவப்பட வேண்டிய பீடத்திற்கு 'பிண்டிகை' என்று பெயர். இது வட்டமாகவோ, சதுரமாகவோ இருக்கும். அதன்மேல் 'உபானம்' 'ஜகதி' 'குமுதம்' பத்மம்' 'கம்பம்' எனவும், நடுவே 'கண்டம்' எனவும் அதே போல் கவிந்த மேற்பகுதி 'பட்டிகை' 'நிம்னம்' 'கிருதாவரி' என்னும் பாகங்களும் அமையும். இவற்றில் ஆவுடையாரினின்றும் சிவலிங்க பாணத்தின் உயரப் பிரமாணம் வெளிப்புறம் நீண்டிருக்கும் பகுதி 'நாளம்' எனப் படும்.

இப்பீடப் பகுதியை ஆதாரமாகக் கொண்டே வேள்வி குண்டமும் அமைவதாக ஆராய்ச்சியாளராகிய அறிஞர் கூறுவர்.

எங்ஙனமெனின் முற்கூறிய உபானம் முதல் கம்பம் வரையி லான பகுதிக்கு சமமாக வேள்விக் குண்டத்தின் கீழ்மேகலையும், குண்டத்துக்கு சமமாக நடு மேகலையும், பட்டிகை, நிம்னம், கிருதா வரி என்பனவற்றுக்கு இணையாக குண்டத்தினது மேல் மேகலையும்

கருதப்படும். குண்ட நாபியே இலிங்க 'நாள'மாகவும், ஹோம குண்டத்தின் யோனியே சிவலிங்கத்தின் இரத்தின நியாஸ த்வாரமாகவும், குண்டத்தினுட்பாகம் யாவும் சிவலிங்கத்தின் ஆவுடையாராகவும், மூண்டெழும் கனலே ஜோதிர் மயமான சிவலிங்கமாகவும் உணரப்படுகிறது.

இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட சிவாக்னி யாகத்தில் முன்னர் செய்யப் பெறும் பூர்வ தந்திரக் கிரியை யாவும் அங்ஙனம் பிரதிஷ்டித்த சிவனுக்குச் செய்யும் கர்பாதானுதி ஸம்ஸ்காரங் களுக்கு ஒப்பாகும் என்பர்.

இதனுல் சிவாக்னி தாபிக்கப்படுகின்ற சிவயாக சாலையில் குண்டங்களை நிறுவும்போது பிருதிவி முதலான தத்வத்தை உணர்த்துவதான ஈசானுதி பஞ்ச குண்டங்களாகவோ, அன்றி பவ சர்வாதி அஷ்டமூர்த்தி சொரூபத்தோடு சமஷ்டி லிங்க தத்து வத்துடனுய நவ குண்டங்களாகவோ, அவ்வஷ்டமூர்த்தி சொரூபமே முப்பத்து முக்கோடி தேவதாபேதமாக ஒவ்வொரு குண்டத்துக்கும் ஒரொரு கோடி தேவதா சொரூபமாக முப்பத்து மூன்று குண்டங்களை அமைத்து ஒவ்வொன்றும் சிவலிங்க சொரூப மாகக் கருதி வேள்வியியற்றி பூசிக்கப் பெறுகின்றது.

இங்ஙனம் முப்பத்து மூன்று குண்டங்களமையும்போது அவை முறையே சோம—சூர்ய—அக்னி குண்டங்களாக மூன்று பிராகாரமாக அமையும்.

சோம கலைகள் 16 குண்டங்களும், சூர்யாம்சம் 12 குண்டங் களும், அக்னியாத் மகமாக 5 குண்டங்களும் (விசேஷமாக இவ்வைந்தும் தக்ஷிணுக்னி, கார்ஹபத்யம், ஆஹவனியம், ஸப்யம், ஆவஸத்யம் எனும் யாக்ஞிக குண்டங்களாகும்) அமைக்கப் பெறும். இவ்வுத்தம பக்ஷமாகிய யாகசாலை இதுவரை நிகழாத தொரு அற்புதமாக அமைக்கப் பெற்று இச்சிதம்பரம் ஸ்ரீ மூல நாதருடைய மஹாகும்பாபிஷேகம் சைவபூஷணம் சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்களுக்குக் கிடைத்தது, அவர்களும் பரம்பரை முன்னேரும் செய்த பாக்யமே. இவ்வாறு 33 குண்டங்களை அமைத்துப் பூசிக்கும் முறைமையை எடுத்து இயம்பி தாமே முன்னின்று தில்லை வாழந்தணர்களாகிய பொது தீக்ஷிதாளின் பெரும் ஒத்துழைப்புடன் நடத்தித் தந்த எனது குருநாதரும், ஆசார்யவர்யருமாகிய பிரும்மஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷித ரவர்கள் விரும்பிக் கூறிய முறையே திரு செட்டியார் அவர்கள் மிகுந்த பொருட்செலவுடனும், பக்தியுடனும், காரணலிங்கமாக கருதற்பாலதாகிய துவாரபாலகரையும் புதிதாக நிர்மாணிக்கச்

செய்து பிரதிஷ்டிக்கச் செய்து ஆலயத்துக்குரிய அங்கத்தைப் பூர்த்தி செய்ய விரும்புவதால் மங்காத புகழுக்குரிய பெருமை அடைகிறார்கள்.

முன்னர் கூறிய சிவயாக சாலைக்கு அமையும் குண்டங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக சதுரச்ரம் எனப்படும் நாற் கோண குண்டமே கருதப்படும்

1. இது பிருதிவி தத்துவ லிங்கமாம்.
2. அர்த்த சந்திர குண்டம்-பாதிமதி வடிவம் கொண்ட இக்குண்டம் நீராகிய அப்பு தத்துவ லிங்கமாம்.
3. முக்கோண குண்டம்—தீ—தேஜஸ் தத்வலிங்கம்.
4. அறுகோண குண்டம்—வாயு தத்துவலிங்கம்.
5. வட்ட குண்டம்—ஆகாய தத்துவ லிங்கம்.
6. பத்ம குண்டம்—சந்திர தத்துவலிங்கம்.
7. எண் கோண குண்டம்—சூரிய தத்துவலிங்கம்.
8. யோனி குண்டம்—யஜமான தத்துவலிங்கம்.
9. விருத்த குண்டம் — பிரதானம் — ஸமஷ்டி (ஆன்ம) தத்துவலிங்கம்.

இதே பஞ்ச குண்டமாய் ஆகும் போது—

நாற்கோணம் — தத்புருஷலிங்கம் — கிழக்கு தெற்கில் அகோர லிங்காத்மக குண்டமும், வடக்கில் வாமதேவாத்மக குண்டமும், மேற்கில் சத்யோஜாத குண்டமும், ஈசானத்திக்கில் ஈசான குண்டம் விருத்த வடிவாக பிரதானமாக அமைக்கப் பெறும்.

சிவலிங்கத்தின் அடிப்பகுதி பிரம்ம பாகம் எனவும், மத்தியில் விஷ்ணு பாகம் எனவும், மேற்பரப்பு உருத்திர பாகம் எனவும் கருதி பூசித்தல் வேணும்.

இத்தகைய சிவலிங்கம் "சர்வதேசிகம், சர்வஸமம், வர்த்த மானம், ஸ்வஸ்திகம், த்ரைராசிகம், ஆட்யம் என பலவகை உள்ளதாக ஆகம நூல்களில் கூறப்பட்டு உள்ளனவற்றை விரி வஞ்சி விரிக்காது விடுத்தாம்.

தற்போது ஆலயங்களில் விசேஷமாகப் பூஜிக்கப் பெற்று வரும் சஹஸ்ரலிங்கம், தாராலிங்கம், முகலிங்கம் என்பனவற்றை யும், ஈசானுதி பஞ்சபிரம்மத்தையும் சிறிது நினைவு கூறச் செய்து அச்சிவனுக்கு நிகழ்த்தும் பூசனை உபசார முதலியவற்றின் உள் நோக்கையும் சிறிது விளங்கச் செய்து இக்கட்டுரையை ஈச னருட்டுணை கொண்டு நிறைக்கின்றேன்.

ஒரே சிவலிங்க பாணத்தில் சிறிது சிறிதாக ஆயிரம் லிங்கங்கள் அமைந்து இருப்பது ஸஹஸ்ர லிங்கமாகும். அத்தகைய லிங்கத்தை பூசிக்கின் ஆயிரம் லிங்கங்களை வழிபட்ட பலன் ஏற்படும் என்று சொல்லாமலே விளங்கும். வேதத்திற் கூறிய ஆயிரந்தலையுடைய புருஷனும் இச் சஹஸ்ரலிங்கமே.

தாராலிங்கமென்பது 5—7—9—12—16 ஆகிய பட்டைகளை லிங்க பாகத்தில் கொண்டு விளங்குவதாகும். இவ்வாறான தாரா லிங்கங்கள் நமது சிதம்பரம் கோயிலில் நவலிங்க சன்னிதியில் உள்ளன. நடுவேயுள்ள பாஸ்கரேசுவரர் எனும் சூரியலிங்கம் பல பட்டைகளுடன் பிரகாசித்துக் கொண்டு இருப்பது கண்டு மகிழலாம்.

அடுத்து முகலிங்கம் என்பது ஒரு வாசலுள்ள கர்பகிருகத்துடனாகிய கோவிலில் ஒரு முகமுள்ள சிவலிங்கமும், நான்கு வாசல்களுடனாகிய கர்பகிருஹமுள்ள கோவிலில் நான்கு முகங்களுடன் கூடிய முகலிங்கமும் அமைந்திருக்கும். நமது சிதம்பர ஸபையில் ஒரு முகமுள்ள முகலிங்கமும், நான்கு வாசல்களுடன் கூடிய நேபாளம், காளஹஸ்தி முதலிய கோவில்களில் நான்கு முக முகலிங்கமும் காணக்கிடப்பதாகும்.

ஒவ்வொரு அவ்யக்த சிவலிங்கமும் முகமில்லாது போல் தோன்றினும் ஐந்து முகங்கள் இருப்பதாகவே பாவனை செய்து பூஜிக்கப்படும். அவை ஊர்த்வமுகமாக வெண்மை நிறம் வாய்ந்த ஈசானமும், கிழக்கு நோக்கியதாக பொன்மை நிறம் பொருந்திய தத்புருஷ முகமும், தெற்கு நோக்கி கருமை நிறம் கொண்ட அகோரமும். வெண்ணிறமாய் சத்யோஜாதமெனும் முகம் மேற்கு நோக்கியதாகவும், வடக்கு நோக்கி செம்மையாய்ச் சமைந்த வாமதேவமுகமும் பாவிக்கப்படும். இம்முகங்கள் சத்யோஜாதாதி ஈசான மீருக பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென ஐம்பூத தத்வமுகங்களாகவும், ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஆற்றலனைத்தும் கொண்டதாயும், அவை நான்கு வேதங்களையும், ஆகமத்தையும் மொழிந்து வெளிப்படுத்தியவையாகவும் பெரியோர் கூறுவர்.

யாவும் பஞ்சபூதங்களாலமைத்து அங்ஙனமமைத்த சகல சராசர ஜீவராசிகளையும் மண்ணிற்றோற்றி, நீரிற்காத்து, நெருப்பிலழித்து, காற்றில் மறைத்து, ஆகாயத்திலருளும் ஆற்றல் படைத்த எம் சிவனார் அவ்வவரின் பக்குவ நிலைக்கேற்ப அருள வேண்டி தமது ஐந்து திரு முகங்களையும் அயன்—அரி—அரன்—மகேசன்—சதாசிவன் என பஞ்ச பிரம்மமாக விரிகிறான். இக்கருத்தை,

" மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்
பலந்தரு மைம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே"

எனும் திருமந்திரம் உணர்த்தும்.

இவ்வமைப்புக்கள் யாவும் ஒருங்கிணைந்த இச் சிவலிங்கத்தை பூசிக்க எழுந்த பஞ்சோபசாரங்களும் பிருதிவி முதலிய ஐம்பூத தத்துவங்களை உள்ளடக்கியவையே ஆம்.

சந்தனம் சமர்ப்பித்தல், நிவேதனம் முதலிய பிருதிவியிற் றோன்றியவற்றை அளிப்பதால் பார்த்திவ உபசாரமாம்.

அர்க்யம், பாத்யம் அளித்தல், ஆசமனம் கொடுத்தல், அபிஷேகம் செய்தல் முதலான நீருடனுகிய உபசாரங்களைச் செய்தல் ஆப்யோபசாரமாகும்.

தீபங்காட்டுதல், ஆபரணங்கள் சாத்துதல், கண்ணுடி காட்டுதல் முதலிய ஒளியுடன் சம்பாதித்த உபசாரங்கள் தைஜஸோபசாரமாகும்.

தூபமிடுதல், சாமரையிரட்டுதல், விசிறி வீசுதல், குடைபிடித்தல் முதலிய காற்றுடன் சம்பந்தப்பட்ட உபசாரங்கள் வாயவ்யோபசாரம்.

புஷ்பங்கள் சாத்துதல், அர்ச்சித்தல், தோத்தரித்தல், கீதமிசைத்தல், வேத மந்திரங்களை ஓதுதல், ஜபித்தல், மணிபடித்தல், வாத்யகோஷம் முதலிய ஒலி சம்பந்தமான உபசாரங்கள்—சப்தகுணகம் ஆகாசம் என்றதினுல் வைஹாயஸ உபசாரமாகும்.

இங்ஙனமாக கருத்தமைந்த இப்பஞ்சோபசாரத்தை அடிப்படையாக வைத்து விரித்து எழுந்த உபசாரங்களே ஷோடசோபசாரம் எனும் 16 உபசாரங்களும், சதுஷ்ஷஷ்டியுபசாரமென்ற 64 உபசாரங்களும் ஆகும்.

மேற்கூறிய உபசாரங்களையெல்லாம் அவ்வவற்றின் உணர்வுடன் இயற்றி அவ்வனைத்து தத்துவங்களுக்கும் அதிபதியும், தத்துவாதீதனுமான சிவனிடமிருந்தே உண்டாகி அவனிடமே ஒடுங்கும் தகைமை வாய்ந்ததாக எண்ணி, யாம் அனுபவிக்கும் இப்பிரபஞ்ச சிருஷ்டி யாவும் அவனருளியதாலன்றே என்னும் கிருதக்ஞையுடன் அவற்ருல் ஏற்படும் சுகங்களை அவனிடமே

அர்ப்பணித்து அவனருளுடன் மீண்டும் யாசித்து பெறுவ தொன்றே சிவலிங்க பூசையின் லக்ஷியமாகும்.

இச்சிவனைப் பூசிப்பவர் எத்தகையராயிருப்பினும் ஈசனிடத்து இடைவிடாத இயற்கை அன்பும், அதனுல் அவனிடத்துத் தோன்றிய குழந்தைப் பாசத்துடன் கூடிய பக்தியுணர்வும் மிக மிக முக்கியமானது என்பது எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டுவதாகும். எத்தனையோ கோடி பிறவிகளில் இயற்றிய சிவபுண்ணியம் ஒன்றினுல் மட்டுமே இத்தகைய அன்பும், பக்தியும் வாய்ந்து அரனடி போற்றி வீடுபேறு அடைவோம்.

" கற்று மனம் போற் கசிந்துகசிந் தேயுருகி
யுற்றுகான் லிங்க முயர் வேடம்—பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்"

எனும் சைவசமய நெறியும்

" உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவுமினிபமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரை கழற்கே,
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே"

எனும் திருவாசகமணிவாக்கும் உணர்த்துவதற்கிணங்க இயற்கை யாகவே சிவனிடத்து அன்பு மீதூர ஒருமித்த கருத்துடன் மனமும் மெய்யும் இயங்கச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துச் சிவலிங்க பூசை செய்யின் அஃது நிச்சயம் அச்சிவனையே சேருமாதலால் அவ்வழிபடுவோர் மும்மலமொழிந்து சிவமாவது திண்ணம்.
சிவம்

★

பதிப்பாசிரியர் குறிப்பு

1. பக்கம் 125-இல் கட்டுரையாளர் குறிக்கும் மூர்த்தங்கள் 'சிவரகசியம்' என்னும் நூலிற் கூறப்பெற்றுள. இவற்றை, மதுரைக்கோயிலில் சுவாமி சந்நிதிக்கு எதிரில் கம்பத்தடி மண்டபத்தில் நகரத்தார்கள் சிற்பக்கலை எழில் பொங்க 1877-இல் அமைத்துள்ளார்கள்.

2. மூலட்டான ஈசுவரர் கோயிலில் உள்ள இவை வண்ண ஓவியங்களாக உள்ளன. இம் மூர்த்தங்களைப்பற்றி மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் கட்டுரை இந்நூலில் பிறிதோரிடத்தில் இடம் பெறும். இடபாரூடர் பற்றியும் ஒரு கட்டுரையுளது.

பதஞ்சலி முனிவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ. சபாபதிசுவாமிகள்

பாம்புப் படுக்கையிலிருந்த திருமால், உறக்கம் விட்டெழுந்தார். தலையின்மீது கைகுவித்து, ஆனந்த அருவி பொழியச் சிவானந்த பரவசராய் இருந்தார். இவ்வாறு சிறிது நேரம் இருந்து பின் படுக்கையிலிருந்து எழுந்து வேண்டுவ முடித்து அரியணையில் வீற்றிருக்கும்போது, அனந்தன் ஒரு நாளும் இன்றி இன்று இவ்வாறு புதிய நிலை எய்தக் காரணம் யாதாகும் என அறியக் கருதித் திருமால் திருவடிகளிலே விழுந்து வணங்கினான். எம்பெருமானே! அடியேன் மீது பள்ளி கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? எனக் கேட்டான்.

அப்போது திருமாலானவர் கயிலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், ஐயமேற்கும் கோலத்துடனும், தாம் ஓர் அரிவை வடிவத்தோடும் தாருகாவனம் சென்று, அவ்வனத்து இருந்த முனிவர்களின் உள்ளக் கிடையை மாற்றும் பொருட்டு நிகழத்திய செயல்களையும், இறைவன் அவர்களுக்கு அருள் புரியத் திருக் கூத்தியற்றியதையும், நிருத்தானந்தத்தின் சிறப்பையும் கூறி அந்த நிருத்தானந்தத்தினாலே நான் உன்மீது சயனித்து இருந்தும் இடையே உறக்கம் விட்டு அவ்வானந்தத்தில் ஈடுபடலானேன் என்று கூறினார்.

திருமால் கூறிய வார்த்தைகளைக் கேட்ட அனந்தன் அத்திருக்கூத்தைக் காணவேண்டும் என்னும் அவாவுடையவனாய், திருமாலிடம் உடன்பாடு பெற்றுத் திருக்கயிலை மலைச்சாரலைச் சேர்ந்தான். இறைவனைக் குறித்து நெடுங்காலம் தவம்புரிந்தான். இறைவன் காளையூர்திமீது வெளிப்பட்டார். அவன் தவத்திற்கு மகிழ்ந்து தழுவி அவன் தலை

மீது திருக்கையை வைத்துத் திருவாய் மலர்ந்தருளுவாரானுர்.

நாம் இயற்றும் திருக்கூத்து ஐந்தொழிலேயாம். நாம் தாருகாவனத்திலே வெளிப்பட நின்று திருக்கூத்தியற்றிய பொழுது அவ்வனம் அதனைத் தாங்காது அசைந்தது. அதனுல் உடனே திருக்கூத்தை நிறுத்திவிட்டோம். நீ விரும்பிய வண்ணம் இவ்வனத்திலே திருக்கூத்தியற்றின் இவ்வனமும் தாங்கவல்லதன்று. நமது திருக்கூத்தினைத் தாங்கவல்லது தில்லைவனமே. அவ்வனத்திலே மூலலிங்கம் இருக்கின்றது. அதனருகில் தெற்கின்கண் ஒரு சபையுமிருக்கின்றது. அதன்கண் எக்காலமும் திருக்கூத்தியற்றுவம்.

அச்சபை ஞானுகாசமாகிய மெய்ப்பொருளாயிருத்தலால், மாயா காரியத் தன்மையுடைய மற்றைப் பொருள்களோடுகூட அழியாது என்றும் நிலை பெறுவதாம். எண்ணில்லாத நல்ல புண்ணியங்களைச் செய்து ஞானக் கண்ணைப் பெற்றவர் இதனைக்காண்பர். காணப் பெருதவர் பிறவியுட்பட்டுழலுவர். மிக்க ஒளியுடைய இவ்விழிகளுடனும் ஆயிரம் படங்களுடைய இவ்வடிவுடனும் ஆங்கு செல்லற்க. செல்லுவையேல் பூவுலகம் அஞ்சும். முன்னெரு காலத்திலே அத்திரி முனிவரும் அவர் மனைவியாகிய அநசூயையும் உன்னைப் பிள்ளையாகப் பெறத் திருமாலை நோக்கித் தவம் புரிந்தார்கள். திருமால் உன்னை அவர்களுக்குப் பிள்ளையாகக் கொடுத்தார். அன்று நீ கருப்பையுற்றுப் பிறத்தற்கு அஞ்சி அவ்வநசூயை இருதுமதியாய் இருந்து நீராடித் தூய்மையாய்க் கரையேறிய பொழுது, அவளுடைய கூப்பிய கரத்திலே, ஐந்துதலையுடைய ஒரு சிறு பாம்பு வடிவாக வரக்கண்டு, பயத்தினுல் கையை விடுதலும் கீழே விழுந்து* பதஞ்சலி என்னும் பெயர் பெற்ருய். அவ்வுருவத்தோடும் அப்பெயரோடும் நாகலோகம் சென்று அங்கு காணப்படும் மலையினுக்குத் தென்பக்கத்தில் உள்ள பிலத்தின் வழியே செல்லுவையாயின் அப்பிலத்துவார முடிவிலுள்ள தில்லைவனத்தையடையலாம்.

---

* **இரண்டு கைகளையும் சேர்த்துக் கூப்பின், அஞ்சலி எனப்படும். அஞ்சலியினின்றும் விழுந்தவர் பதஞ்சலி.**

அம்மலையின் முடி மூலலிங்கமாய் அத்தலத்திலிருக்கிறது. அவ்விலிங்கத்தைப் புலிக்கால் முனிவன் திருக்கூத்தைக் காண விரும்பிப் பூசித்துக் கொண்டிருக்கின்றான். நீயும் அங்கு சென்று பூசித்துக் கொண்டிருப்பாயாகில், தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடும் சித்தயோகத் தினத்திலே உச்சிப் போதிலே அனைவரும் காணத் திருக்கூத்தியற்றுவோம் எனக் கூறி மறைந்தருளினர்.

அனந்தனும் வணங்கி நாகலோகம் சென்றான். பாதலம் ஏழையும் ஊடுருவி நின்ற ஞானவடிவாம் அம்மலையின் தென்பாகத்தில் அமைந்த பிலத்தின் வழியே பூவுலகத்திற்கு வந்து தில்லைவனத்தையடைந்தான். ஆங்கமர்ந்த புலிக்கால் முனிவரைப் போற்றினான். தன் வரலாற்றைக் கூறினான். சிவகங்கையில் முழுகித் திருமூலநாதரையும், திருப்புலீச்சுவரமுடையாரையும் வழிபாடாற்றி வந்தான். சில நாட்கள் இவ்வாறிருக்கையில் இப்பகுதியின் மேற்றிசையில்* ஒரு குளம் கண்டு அதன் கீழ்க்கரையில் ஒரு சிவலிங்கம் தாபித்து மூன்று இலிங்கங்களையும் பூசித்து வரும் நாளில், இறைவன் திருக்கூத்தைக் காண எம்மருங்கிலுமுள்ள பலரும் புதிது புதிதாக வந்து அளவின்றிக் கூடினார்கள்.

"..........................
பூவாது பழுக்கும் சூலடிப்பனசம்
பார்கிழித் தோடிப் பணியுல களந்த
வேர்தொறும் வேர்தொறும் வெவ்வேறு பழுத்து
முட்புறக்கனிக நூக்குவ தொட்ப மொடு
பதஞ்சலி முனிவனைப் பார்கொளத் தந்த
பிலங்கொளக் கொடுக்கும் பலங்கள்பல நிகர்க்கும்
மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண......"

எனக் குமாரகுருபர சுவாமிகள் சிதம்பர மும்மணிக் கோவையில் பதஞ்சலி முனிவர் பாதலமிருந்து பூதலம் வந்த வரலாற்றை அமைத்து அழகுபடுத்தியுரைக்கும் பகுதி ஈண்டு கவனித்தற்குரியது. ★

---

* இக்குளம் நாகச்சேரி என்று பெயர் பெறும்.

வியாக்கிரபாத முனிவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சபாபதி சுவாமிகள்

இவர் மத்தியந்த முனிவருடைய புதல்வர். தம் தந்தையாருபதேசத்திஞல் எல்லாத் தலங்களிலும் சிறந்தது சிதம்பரம் என்றும், எல்லாச் சிவ புண்ணியங்களுள்ளும் சிறந்தது சிவலிங்க பூசை என்றும் அறிந்தார். அவை களிலே அவருக்கு அவாப் பெருகுகிறது. தந்தையாரிடம் அறிவித்து அவர் உடன்பாடு பெற்றுத் தில்லைவனம் அடைந்தார். அங்கே உள்ள சிவ கெங்கையில் மூழ்கி, அதற்குத் தெற்கே ஓராலமர நிழலிலிருந்த திருமூல நாதரை வணங்கிஞர். நாடோறும் அத்தீர்த்தத்திலே முழுகித் திருமூலநாதருக்குப் பூசை செய்துகொண்டு வரும் போது, மேற்கே சற்று தூரத்தில் ஒரு குளம் கண்டு அருகே பர்ணசாலை அமைத்து வசித்துவந்தார். அப்போது அக் குளக்கரைக்கு மேற்கே ஒரு சிவலிங்கம் தாபித்து இரண்டு சிவலிங்கங்களையும் பூசித்து வந்தார்.

விடியுமுன் பூக்கொய்து பூசித்துவந்த இவர் இருளிலே பூ எடுக்க வழி தெரியாது துன்பப்பட்டார். பூக்களில் உள்ள பழுதும் புலப்படவில்லை. பூக்களை விடிந்தபின் எடுக்கலாமெனின் வண்டுதும், ஆதலின் இருவழியும் மனம் வருந்தித் தளரும்போது, இறைவன் காளையூர்தி மேல் தோன்றி, அவருக்கருள் செய்து, அவர் விரும்பிய வண்ணம் மரங்களிலே வழுக்காமல் பற்றி ஏறுவதற்கு வலிய நகப்பற்றுடைய புலிக்கால்களையும், புலிக்கைகளை யும், வழிபார்த்து நடத்தற்கும், பழுதுபார்த்தெடுத்தற்கும் அவைகளில் கண்கள் பொருந்தும்படியும் அருள்செய்து மறைந்தருளிஞர்.

இதஞல் இவருக்கு வியாக்கிரபாத (புலிக்கால்) முனிவர் என்னும் பெயர் உண்டாயிற்று. இவர் நாடோறும்

விடியுமுன் எழுந்து,* நால்வகைப் பூக்களையும் கொண்டு முறைப்படி இறைவனை வழிபட்டு வந்தார். இவரது நிலைமையை நேரில் வந்து கண்ட தந்தையார் இவர் செயலுக்கு மகிழ்ந்தார். தாம் உடன் இருந்து, சிவகெங்கையில் மூழ்கி அவ்விரு சிவலிங்கங்களையும் வழிபட்டு வந்ததன்றித், தம் பெயரால் இத்தலத்தின் தென்பாகத்தில் ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டு வந்தார்.†

வியாக்கிரபாத முனிவராகிய தம் புதல்வருக்கு வசிட்ட முனிவரின் தங்கையாரை மணஞ்செய்து வைக்க விரும்பினர். அவரும் அவ்வாறே அவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்கள்பால் உபமன்னியு என்னும் நன்மகன் தோன்றினர். அக்குழந்தையை வசிட்ட முனிவரின் மனைவி அருந்ததி என்பார் தமதிருப்பிடம் கொண்டுபோய்க் காமதேனுவின் பாலை ஊட்டி வளர்த்து வந்தார். சில நாட்கள் சென்றபின் புலிக்கால் முனிவர், தம் புதல்வரைத் தம்மிடம் கொண்டுவரச் செய்தார். அப்போது தம்மிடம் கொண்டு உள்ள கிழங்குகளையும் நீரிற்கரைத்த மாவையும் உணவாகக் கொடுத்தார். அக்குழந்தை காமதேனுவின் பாலையுண்டு வளர்ந்துவந்தது ஆதலின், அதனையே விரும்பி இவைகளை உணாது உமிழ்ந்தது. புலிக்கால் முனிவரும் அப்புதல்வரைத் திருமூலநாதர் திருமுன் கிடத்தினர். அக்குழந்தை அழுது இறைவன்றிருவருளால் பாற்கடலைப் பெற்றுப் பருகிப் பசிதீர்ந்து வளர்ந்து வரலாயிற்று.

இவ்வுபமன்னியு முனிவர் கண்ணபிரானுக்குச் சிவதீட்சை பண்ணிச் சிவபூசை எழுந்தருளச் செய்து கொடுத்த பெருஞ் சிறப்புடையவராவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானை மீதேறித் திருக்கயிலை மலைக்குச் செல்லும் போது அம்மலைச்சாரலில் முனிபுங்கவர்கட்கு அருளுபதேசம் செய்துகொண்டிருந்த இம்முனிவர் பெருமானுக்குச் சோதிவடிவம் தோன்றுதலும், திருவருள்

---

* நால்வகைப் பூக்களாவன: (1) கோட்டுப்பூ, (2) கொடிப்பூ, (3) நிலப்பூ, (4) நீர்ப்பூ என்பவைகளாம்.

† புலிமேடு என்னும் தீர்த்தத்தருகில், இவ்வாலயம் மத்தியந்தனேச்சுரம் என்னும் பெயருடன் விளங்குகிறது.

வலத்தாலறிந்து, திக்கு நோக்கி வீழ்ந்து வணங்கினர். அருகிலிருந்த முனிவர்குழாம் முக்கண் இறையையன்றி எப்பெருந்தேவரையும் தொழாத பெற்றினராம் தேவரீர்! இன்று தொழும் செயற்குக் காரணம் யாதென்று வினவியது. உபமன்னியு முனிவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமையையும், அவர் வரலாற்றையும் வெள்ளை யானை மீது ஏறிச் செல்லும் சிறப்பையும், திருத் தொண்டத் தொகை பாடியதையும் பிறவற்றையும் கூறினர். பின்னரும் அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார்கள் சரித்திரங்களையும் விரித்துக் கூறினர் என்பது வரலாறு.

வியாக்கிரபாத முனிவர், திருமூலநாதருடைய பூசை முடித்துச் சிவயோகத் திலமர்ந்திருந்தபோது ஒருநாள் இறைவன் தாருகாவனத்தில் நாற்பத்தெண்ணுயிர முனிவர்கட்குத் திருக்கூத்தியற்றியருள்புரிந்தமையை அறிந்தார். அதுமுதல் தாமும் திருநடனம் காண வேண்டுமென்றும் ஆசை மிகுதியுடையவரானர். தில்லைப்பதியில் இறைவன் திருக்கூத்தியற்றுவர் என்பதை யுணர்ந்துகொண்டு அப்பதியிற்றனே நெடுங்காலமிருந்து இறைவனை விதிப்படி வழிபட்டுக்கொண்டு வந்தார்.

புலிக்கால் முனிவர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவர் வழிபட்ட காரணத்தால் சிதம்பரத்துக்கு, திருப்புலீச்சுரம் என்ற பெயரும் இருந்து வருகிறது. நடராசர் கோயிலுக்குள் அபிஷேகத்திற்குத் தீர்த்தம் எடுக்கும் 10 தீர்த்தங்களில் வியாக்கிரபாத தீர்த்தமும் ஒன்று.

வியாக்கிரபாத தீர்த்தம்: இது திருப்புலீச்சுரம் என்னும் இளமையாக்கினர் கோயிலுக்கு எதிரில் உள்ளது. இளமை நாயனர் குளம் எனவும் பெயர்பெறும். இத்தீர்த்தத்தில் திருநீலகண்ட நாயனரும் அவர் மனைவியாரும் முதுமைப் பருவத்தோடு மூழ்கி எழுந்த அளவில் இளமைப்பருவம் அடைந்தார்கள். தைமாத விசாகத்தன்று இவ்விழா நடைபெறுகின்றது. ★

இடபாரூடர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ. சபாபதிசுவாமிகள்

இடபாரூடர் என்பது விடையேறி என்னும் பொருள தாம். சந்திர சேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, கலந்தராரி, மாதங்காரி, வீர பத்திரர், ஹரியர்த்தர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், அர்த்தநாரீசுவரர், சக்கரப்ரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், நீலகண்டர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர் என்னும் இருபத்தைந்து வடிவங்களும் மகேசுர வடிவம் எனப்படும்.

இவ்விருபத்தைந்து மகேசுவர வடிவங்களில் ஏனையவை ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு ஒவ்வொருவருக்கு அருள்பாலித்தற் பொருட்டு மேற் கொள்ளப்பட்டவையாம். மூன்றாவதாயுள்ள இடபாரூட வடிவம் அன்றும் இன்றும் என்றும் அன்பர்கட்கு அருள் செய்யும்பொருட்டு மேற்கொள்ளப்படுவதாமாதலின் இது ஏனையவற்றினும் மிகவும் சிறப்புடைய வடிவமாகும்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தனக்கு இறைவன் வெளிப்பட்டுக் காட்சியளித்தமையை "தோடுடைய செவியன் 'விடை ஏறி' " என்றே கூறுகின்றார்.

"......அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல் விண்ணவர்கள் தொழ நின்றான்"

வீதிவிடங்கப் பெருமான் என்பதுபோன்று பெரிய புராணம் பலவிடங்களிலும் கூறுதலையும் காணலாம்.

இறைவன் இடபத்தை ஏன் வாகனமாகக் கொண்டார் என்னும் விவரம் நம்மவரிற் பலர் அறியார். ஆதலின் அதனை இங்கு குறிப்பிட்டெழுதுகின்றோம்.

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன நான்கு யுகங்களாம். இந்நான்கு யுகங்களும் சேர்ந்து ஒரு சதுர் யுகம் எனப்படும். இந்தச் சதுர்யுகம் இரண்டாயிரம் சென்றால் அது பிரமாவுக்கு ஒருநாளும், அந்த நாள் முப்பது கொண்டது ஒரு மாதமும், அவை பன்னிரண்டு கொண்டது ஒரு வருஷமும் ஆகும். இந்த வருடம் நூறு சென்றால், பிரமாவினுடைய ஆயுள் முடிவாகும்.

அது திருமாலுக்கு ஒரு நாளாம். இவ்வாறான கணக்கின்படி திருமாலுடைய ஆயுளுங்கழியும்போது உலகிலுள்ள உயிர்களும், அண்டங்களும் அழியும். எல்லா வுலகங்களையும் அக்கினி பரந்து உண்ணும். அப்போது உலகமெல்லாம் சுடலையாய், தூய்மை உடையதாய்த் தோன்றும். இந்த மகாஸ்மஸானத்திலே ஞானமுதல்வ ராகிய பரமசிவன் உமாதேவி காணும்படி நடனஞ் செய்துலாவுவார்.

இந்த அக்கினிப் பிரளயத்திலே தருமதேவதை அஞ்சி, யாம் இங்கே இறப்போம் இனி என் செய்தும் என்று நினைத்து "கங்காதரராகிய சிவபெருமானை அடைக்கலம் புகுந்தால் என்றும் அழிவில்லாத நிலையை எய்தலாம் என முடிவு செய்து இடபத்தினுருவை எடுத்துக்கொண்டு, சிவபெருமான் திருமுன்பெய்தி வணங்கி வாழ்த்தி, அடியேன் இப்பொழுது இறந்துபோகுந் தன்மையினன் ஆதலின் அதனை மாற்றுவதோடு, அடியேனுக்கு வலிமை யையும் தேவரீருக்கு ஊர்தியாகும் பேற்றையுந் தந்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டது.


அவ்வாறே இறைவன் அதற்கு இறவாத தன்மையும், ஊர்தியாய்த் தாங்கும் ஆற்றலையும், வலிமையையும், அன்பையும், மெய்யுணர்வையும் கொடுத்துத் தரும தேவதையை நோக்கி தருமத்தின் தன்மையை யாவரும்

உணர்ந்துகொள்ளும்படி கிருதயுகத்திலே நான்கு கால்களை யும் நிலத்தில் ஊன்றியும், திரேதா யுகத்திலே மூன்று கால்களைமட்டும் நிலத்தில் ஊன்றியும், துவாபர யுகத்திலே இரண்டு கால்களைமட்டும் நிலத்தில் ஊன்றியும், கலி யுகத்திலே ஒரு காலைமட்டும் நிலத்தில் ஊன்றியும் சஞ்சரிக்குதி. நீ யாவரினும் தலைமையை எய்தி உள்ளாய் நம்முடைய தொண்டர்கள் இயற்றுகின்ற பாவமும் புண்ணியமாம். தொண்டரல்லாதவர்கள் செய்யும் புண்ணியமும் பாவமாம். நம்மிடத்து மெய்யன்புடையவர் செய்யும் பாவம் புண்ணியமாவதும் அன்பில்லாதவர்கள் செய்யும் புண்ணியம் பாவமாவதும், யாம் உன்னிடத்தில் உடலில் உயிர்போல வியாபித்திருக்கும் தன்மையினுலாம். நீ எம்மிடத்து இடபவாகனமாய் இருக்குதி என்றருளிச் செய்து அதனை வாகனமாகக் கொண்டார். அந்த நாள் முதலாகப் பரமசிவன் தம்மை மெய்யன்போடு தியானிக்கும் அடியார்களுக்கு வரங்கொடுக்கும்படி அந்த இடப வாகனத்தின் மேற்கொண்டு வந்து தோன்றுவார்.

இவ்விடப வூர்திக்கே தன்னைத் தாங்கும் பேராற்றலைப் பரமசிவன் கொடுத்த செயலை அறிந்து முப்புர தகனம் செய்த காலத்து திருமால் இடபவுருத் தரித்து வந்து பெருமானைத் தாங்கினுர். இதனை,

"கடகரியும் பரிமாவும் தேரும் உகந்துஏருதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடி
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த வந்நாளில்
இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ"

எனத் திருவாசகமும் வலியுறுத்துதல் காண்க. ★



உமை

இரா. சீனிவாசன்
தமிழ்துறை, கேரளப் பல்கலைக்கழகம்

மலைமகளான இவள் இளம்பிராயத்தில் தவஞ்செய்யச் சென்றபொழுது பெற்ேறார்கள் ''உ (அம்மா) மா (வேண்டா)'' என்று கூறியது பற்றி இவளுக்கு இப்பெயர் வந்ததென வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கருதுகிறார்.[1] நந்திக்கலம்பகத்தில் 'பொருப்பரையன் மடப் பாவை'(3:1) என்று கூறப்பட்டுள்ளது உமையே என்பதும் உணரத்தக்கது.[2] இமயமலை அரசன் சிவசக்தி தனக்கு மகளாகப் பிறக்கவேண்டுமெனத் தவஞ்செய்தான். அப்படி அவன் தவம் செய்து கொண்டிருக்கையில், இமயமலைச் சாரலில் உள்ள ஒரு பொய்கையில் மலர்ந்த தாமரை மலர் ஒன்றின்மேல் அம்பிகை குழந்தையாக அமர்ந்திருந்தாள். இமயமலை அரசன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வந்து, தன் துணைவியாகிய மேனையிடம் கொடுத்து வளர்த்துப் பிறகு அப்பெண்ணைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது. பிருங்கி என்னும் முனிவர் நாடோறும் சிவபெருமானையே வழிபட்டு வந்தார். அவர் ஒருநாள் சிவபெருமானும் உமையுமாக வீற்றிருக் கையில் அவ்விருவருக்கும் இடையே புகுந்து சிவபெருமானை மட்டும் வலஞ்செய்து சென்றார். அது கண்டு உமை வருந்திச் சிவபெருமானை நோக்கி, ''நாம் இருவரும் ஒன்று என்பதை அறியாது இப்பக்தன் இவ்வாறு செய்தானே? நாம் ஒருருவமாக இருந்தால் அவன் அவ்வாறு செய்யான்; ஆகையால், உமது உடம்பில் ஒரு பாதியை எனக்குத் தர வேண்டும்'' என வேண்டச் சிவபெருமானும் அதற்கிசைந்து தமது திருமேனியின் இடப்பாதியைக் கொடுத்தார். மறு நாள் சிவதரிசனத்திற்கு வந்த பிருங்கி முனிவர் அவ்வுரு

---

1. பக்தி இலக்கியம்—டாக்டர் ப. அருணாசல தேசிகர், பக். 3.
2. Saivism in Tamilnad — Glimpses of Tamilology — V. Sp. MANICKAM.

வத்தைப் பார்த்து என் செய்வது என எண்ணி, வண் டுருவங்கொண்டு அவ்வுடலின் நடுவே வயிற்றிற்றுளைத்துச் சிவபெருமானை மட்டும் வலமாகச் சுற்றி வந்தார். அது கண்டு பார்வதி கோபமுற்று, முனிவரது உடம்பில் தனது பாகமான சதைப் பற்றுக்களை நீக்கியதாகக் கூறப்படு கிறது. அரிக்கும் உமைக்கும் வேறுபாடு இல்லாத நிலையினை,

> **'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'** (4556)
>
> **'சீரேறு திருமாலோர் பாகத்தான் காண்'** (6489)
>
> **'நாரணனை இடப்பாகத் தடைத்தார் போலும்'** (6774)
>
> **'காவியங் கண்ணளாகிக் கடல் வண்ணனாகி நின்ற**
> **தேவியைப் பாகம் வைத்தார்'** (4476)

என்ற தேவாரப் பாடலடிகள் வாயிலாக உணரலாம். சுந்தரர் காலத்தில் உமையொருபாகனாகவும் சங்கர நாராயணனாகவும் வழிபட்டு வந்த மூர்த்திகளையே,

'மங்கை பாகமும் மாலொர் பாகமும் தாமுடையவர்' (8110) எனச் சுந்தரரும்,

> **'பரிதியோர் மாதர் மாலுமோர் பாகர் பங்கயத்**
> **தயனுமோர் பாலர்'** (4684)

எனச் சம்பந்தரும் பாடுவது இவண் கருதத்தக்கது. கதிரவனிலிருந்த ஒளியையோ வெப்பத்தையோ எவ்வாறு பிரிக்க இயலாதோ அவ்வாறே சக்தியைச் சிவனிடமிருந்து பிரிக்கமுடியாது என்பது உணரத்தக்கது.

இந்து மக்களின் பல்வேறு பழக்கவழக்கங்களையும் அவர்கள் வணங்கும் தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றையும் நுணுகி ஆராய்ந்து விரிவான பயனு டைய தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி என்ற நூலைச் செருமானிய மொழியில் **சீகன் பால்கு**[3] என்பவர் கி.பி. 1713-ல் எழுதினார். அந்நூலில் உமைக்கு இருபத்தேழு பெயர்கள் இருப்பதாகப் பட்டியல் போட்டுத் தருகின்றார்.[4]

---

3. தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி—சீகன்பால்கு, செந்தமிழ்ச்செல்வி, சூலை 1974, சிலம்பு 48, பக்கம் 588.

4. பிங்கல நிகண்டு—பிங்கல முனிவர், பக்கம் 23.

அவற்றில் 'அரனிடத்தவள்' 'காமக்கோட்டத்தி' போன்ற சில பெயர்கள் சிறப்பாக அமைந்துள்ளமை எண்ணத் தக்கது.[5]

உமை கச்சி ஏகம்பம் (5696, 7848, 7856) கச்சிக்காமக் கோட்டம் (7271), தெளிச்சேரி என்ற திருப்பதிகளில் இறைவனை வழிபட்டதாகத் தேவாரம் கூறுகின்றது.

ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சத்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச்செல்வி, மலைமகள், சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, பார்ப்பதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மணி, சிவை, உமையம்மை, அரனிடத்தவள், சுகமீன்றவள், பவானி, அன்னை, புண்ணியமுதல்வி என முப்பத்தெட்டுப் பெயர்களை உமைக்குக் கூறுகின்றது பிங்கல நிகண்டு.[6]

உமை தக்கனின் புத்திரி எனப்பட்டமையால் தாட்சாயணி என்னும் பெயர் பெற்றாள். பிரமனின் கட்டளைக்கமையத் தக்கன் தன் புதல்வியைச் சிவனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான். பின்னொருகால் தக்கன் சிவனை மதிக்காது தான் நிகழ்த்தும் வேள்வியில் சிவனுக்கு அவி கொடுக்க மறுத்தான். தந்தை கணவனை நிந்திக்கும் நிலையினைப் பொறுக்கும் ஆற்றலற்றவளாய்த் தாட்சாயணி யோகாக்கினியால் தன்னுடலைத் தகித்தழித்துப் பர்வத ராசன் புதல்வியாகத் திரு அவதாரஞ் செய்து பார்வதி என்னும் பெயருடன் விளங்கினாள். சிறுபிராயம் முதலே கடுந்தவம் இயற்றி உரிய காலத்தில் சிவபெருமானைப் பதி யாகப் பெற்றாள் என்றும் கூறுவர்.[7] மக்களின் அறிவு பண் பட்ட காலத்தில் தாய்க்கடவுள் அன்புமயமான கடவுளாகக் கொள்ளப்பட்டுக் காடுகிழாள் உமாதேவியார் என்னும்

---

5. சேந்தன் திவாகரம்—திவாகர முனிவர், பக்கம் 6

6. சூடாமணி நிகண்டு (மூலமும் உரையும்) – ஆறுமுக நாவலர், பக்கம் 1–12.

7. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
—கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பக்கம் 263.

தெய்வமாகக் கருதப்பட்டதாக திரு. ந. சி. கந்தையா பிள்ளை கருதுகின்றார்.[8] ★

உமையவள்

ஒட்டிய காதல் உமையாள் ஒரு பாலாகக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டாலுங் கொண்டானே
விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி யுழி.

(பழமொழி நானூறு : 124)

பொருந்தடல்வெங் கயமுகனைக் குகனையளித்
    தவளை மலர் பொதுளுந் தூய
விருந்தடங்கண் மலியுமிம கிரிமகளை
    மிடற்றினிடத் திருண்டவால
மருந்தடங்க வயின்றபிரான் றிருநடங்கண்
    டுவகையினுன் மலர்ந்தநீலக்
கருந்தடங்கண் உமையவளை யடிதொழுது
    வினைகடமைக் கடிந்து வாழ்வாம்

—திருத்தினைநகர்ப் புராணம்



8. சைவசமய வரலாறு—ந.சி. கந்தையாபிள்ளை, பக்கம் 13-16.

ஸ்ரீ நந்திகேஸ்வரரும் காப்பரிசி நிவேதனமும்

புலவர் வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர்

ஒரு கல்பத்தில் சிலாதர் என்ற முனிவர் கயிலாயத்தில் வீற்றிருந்த பரமேஸ்வரனைக் குறித்துத் தவம் செய்தார். கடுந்தவத்தின் பயனாக ஈசன் முனிவன்முன் தோன்றினார்.

முனிவர் ஈசனைக் கண்டு, அன்புமேலீட்டால் பரவசமடைந்து துதித்து நிற்க, ஈசன் "சிலாதா! நீயியற்றிய தவத்தைக் கண்டு மிக மகிழ்ந்தோம்; நீ வேண்டும் வரம் யாது?" எனக் கேட்க,

"ஈசனே எனக்கு நீயே மகனாக வந்து அவதரிக்கவேண்டும்" எனக் கேட்க,

அதற்கு ஈசன் "என் அம்சம் கொண்ட ஒரு மகன் பிறப்பான்" என்று அருளினார்.

பிறகு ஈசன் அம்சம் கொண்ட பிள்ளை பிறக்க, வளர்ந்து கலைகள் யாவும் உணர்ந்தான். அவ்வாறு பிறந்த பிள்ளையே நந்தி என அழைக்கப்பட்டான்.

அவனும் தவம் செய்து, ஈசனிடம் அருள்பெற்றுக் கயிலாயத்துள் என்றும் வீற்றிருக்கும் பேறு பெற்றான் வாயிற்காவல் தொழிலையும் பெற்று, ஒரு கணத்துக்குத் தலைவனாகவும் ஈஸ்வரனால் நியமிக்கப் பட்டான்.

இவ்வாறு இருந்துவரும் நாளில், தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக் கடைந்தனர். அவண் மிக விரைந்து ஆலால விடம் தோன்றியது. அதனைக் கண்டஞ்சி யாவரும் ஓட்டமாய் ஓடினர். தேவர் யாவரும் சென்று கயிலையில் வீற்றிருக்கும் ஈசனிடம் முறை யிட்டுப் புலம்பினர்.

உடனே ஈசன் தன் அபயகரத்தால் அபயமளித்து, வாழ்த்துக் கூறித் தேற்றி, வந்தவர் வாய்மொழி கேட்டுச் சிரித்து, "நாம் அதன் தீயதன்மையை மாற்றுவோம்" என வாக்களித்து, எதிரில் உள்ள நந்திகேஸ்வரனை அழைத்து, அவ்வாலால விடத்தை உடன் எடுத்து வரப் பணித்தார்.

பணிந்து விடைபெற்ற நந்திகேசன், ஆலாலத்தைச் சமீபித்த போது அதன் வெம்மை மாறி மிகக் குளிர்ந்து, காட்சி நல்கிய விடத்தை எடுத்துவந்து ஈசனிடம் கொடுக்க, ஈசன் அதனை வாங்கி உண்ண அருகிருந்த ஈஸ்வரி அச்சமடைந்து, மிடறுதொட (உலகங்கள் அழிந்துவிடுமே) அவ் விடம் கருமையாய் மிடற்றிலேயே நின்று நீலகண்டமானது.

இதனைக் கண்டு நின்ற நந்திகேசன் எள்ளி நகைத்து, "இவ் விடம் அவ்வளவு கொடியதோ? மிகச் சாதாரணமாக யான் கொணர்ந்ததன்றோ? இதற்குக் கொல்லும் தன்மையுண்டோ?" எனக் கூறினான்.

கேட்டிருந்த ஈசன், தன்னருகே நந்திகேசனை அழைத்து, முன் விடம் வாங்கியுண்ட கையை விரித்து முகர்வித்தான்.

முகர்ந்த நந்திகேசன் தன் சுயநிலை இழந்து, பலவாறு பிதற்றி விழுந்து, அழுது, சிரித்துப் பலவித சேட்டைகளைச் செய்து திரியலானான். அதனைக் கண்ட ஈஸ்வரி ஈசனை நோக்கி "நாதா, தாங்கள் நம் நந்தியை இவ்வண்ணம் செய்ததேன்? தண்டனை போதும், மன்னித்து, முன்பிருந்த நிலைபெற அருளுங்கள்" என்று கேட்க,

அதற்கு ஈசன் "அவன் கர்வத்தை மாற்றவே அவ்வண்ணம் செய்தோம்; என் ஏவலால் முன்கொணர்ந்த அவனை அது ஏதும் செய்யாமல் நாமே தடுத்தோம்; அதனை உணராது தருக்குக் கொண்டான்; எளிதென இகழ்ந்தான்; அதன் மணத்தை நுகரவே இவ்வாறாயின், உண்டால் என்ன பாடுபடுவான் என்பதை உணரவே இது செய்தோம்; இந்நிலை மாற நீயே அரிசியைப் பொடித்து வெல்லத்துடன் சேர்த்து செய்த மருந்தை அவன் வாயில் போடு; உடன் இந் நிலை நீங்கும்" என்றார்.

உடனே ஈஸ்வரி வெல்லத்தையும், அரிசியையும் சேர்த்துச் செய்து ஒருமுறை கொடுக்க, அதனை வாங்கி நந்தி உண்டு முன்பிருந்த நிலையை அடைந்தான்.

அன்றுமுதல் நந்திக்குப் பிரியமான உணவு என்று பிரதோஷ தினத்தன்று நிவேதனம் செய்யப்படுகின்றது. இதுதான் காப்பரிசி என வழங்கப்படுகின்றது.

இதனை நினைக்கும்போது இன்றும் யானைக்கு அரிசியும் வெல்லமும் உணவாகக் கொடுப்பதன் நோக்கமும் மதம்அதிகரிக்காதநிலையை உண்டாக்கவென்பதே ஒருதலை.

கன்றீன்ற பசுவுக்கும் அரிசியும் வெல்லமும் கொடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

★

ஸ்ரீ பல்லீசுவரரும் ஸ்ரீ அர்த்தஜாம அழகரும்

புலவர் வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர்

கோதாவரி தீரத்தில் உள்ளவனுகிய, பொய் மிகப் பேசி சோதிடம் கூறி வந்த சோதிடன் ஒருவன், பூர்வ புண்ணிய வசத்தால் பல தலங்களை வழிபட்டுக் கொண்டு வந்தான். சிதம்பரத்தையும் தரிசித்துச் சென்று, சில நாளில் காலகதி யடைந்தான்.

பின்பு, வினைவசத்தால் பல்லியுருக்கொண்டு புண்ணிய பலத்தால், பொன்னம்பலத்துள் நடராஜப் பெருமானைச் சமீபிக்கும் பேறும் பெற்றான். தன் இழிபிறவியை நினைத்து வருந்தி, இடைவிடாது தோத்திரம் செய்து நின்றான்.

பக்தன் தோத்திரத்தைச் செவிமடுத்த பொன்னம்பல நாதன் தம் அருள் நோக்கால் நன்கு பார்த்து, 'அழகனே, வா' என்று அழைக்க, பல்லியுருமாறி அழகனுய் எதிரில் வந்து நின்றான். உடனே 'கதை' என்ற ஆயுதமருளி 'நீ இன்று முதல் க்ஷேத்திரபாலகனுய் இச்சிதம்பரத்தைக் காவல் புரிக' என்று கூறினர்.

அன்று முதல் அழகர் என்ற பெயருடன் சிதம்பர க்ஷேத்திர பாலகராக இருந்து வருகிறார், பல்லீசுவரர். இவர் அர்த்தஜாம வேளையில் கடைசிப் பூஜையைப் பெறுபவராக வும் மணப்பொருள் கூடின தாம்பூலப் பிரியராகவும் ஆனர். இன்றும் அம்முறையிலேயே அர்த்தஜாம வேளையில் இவருக்கு நறுமணத் தாம்பூல நிவேதனம் செய்யப் பெறு கிறது.

அச்சோதிடன் சித்சபேசனை நாளும் வழிபட்டிருந்தமை அறிய, சித்சபையின் கீழ்ப்புறம் கொடுங்கையில் பல்லி யுருவம் காணப்படுகின்றது. அப்பல்லிக்கு அருளீந்த

ஈசனே பல்லீசுவரராக மூலட்டானப் பிராகாரத்தில் தக்ஷிணு மூர்த்தி சந்நிதிக்குக் கீழ்ப்புறம் வீற்றிருந்து, பல்லியால் ஏற்படும் தோஷம் நீங்க அருள்பாலிக்கிறுர்.

அவரை வணங்க எல்லா நலங்களும் பெருகும். இவ் வரலாறு சிதம்பர ரகசியம் என்ற கிரந்தத்தில் கூறப் பெற்றுள்ளது.

இவ்வரலாற்றைத் தமதுநூலான "குஞ்சிதாங்கிரிஸ் தவம்" என்ற நூலில் உமாபதி சிவாசாரியார் அவர்கள் **191** ஆவது சுலோகமாக, "கோதாவர்யா தடஸ்தே" என்று தொடங்கும் அரிய துதியில் அமைத்துப் பாடியுள்ளார்.

ஒரு சமயம் கயிலாயத்தில் பரமேஸ்வரன் தமது சுந்தர ரூபத்தைக் கண்ணுடியில் பிரதிபலிக்கக் கண்டு, "சுந்தரா வருக" என்று அழைக்க, சுந்தரர் வந்தார். அவரே கயிலை நாதனுக்குத் தொண்டு செய்யும் தொண்டருள் ஒருவராஞர். பின் ஆலால விஷம் கடல் கடைந்த சமயம் தோன்ற அதனை எடுத்துவர இவரையே கயிலைநாதன் பணித்தான். அவ் வண்ணம் எடுத்து வந்த காரணத்தாலேயே ஆலாலசுந்தரர் என்று பெயர் அடைந்தார். அவரே பின் சாபம் எய்தி, புவியில் பிறந்து, நால்வருள் தம்பிரான் தோழராகும் பேறு பெற்றுத் தேவாரம் பாடிய பெருமையும் பெற்றுர். இவரது வரலாறும் ஸ்ரீஉமாபதிசிவம் அவர்கள் தனது "குஞ்சிதாங் கிரிஸ்தவம்" என்ற நூலில் 274ஆவது சுலோகமாக "ஸௌவர்ணம் விஷ்டரம்ய:" எனத் தொடங்குகிறது.

பதிப்பாசிரியர் குறிப்பு: இக்கட்டுரையில் குறிப்பிடப் பெறும் 'குஞ்சிதாங்கிரிஸ்தவம்' பற்றி, தனிக்கட்டுரையைப் பிறிதோரிடத்தில் காண்க.

★



தட்சிணுமூர்த்தி

மூலட்டான ஈசுவரர் கோயில் கருவறையில் வெளிப்புறம் தெற்குப் பக்கத்தில் தட்சிணுமூர்த்தி கோட்டம் உள்ளது. தட்சிணுமூர்த்தி தத்துவம் வருமாறு :

கல்லாலின் நிழலில் தட்சிணுமூர்த்தி வீற்றிருக்கிறுர். இவர் சிவபரம் பொருளின் பரமகுரு வடிவாகிய தோற்றம். அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்தார் என்று சம்பந்தர் திருமுதுகுன்றப் பதிகத்தில் பாடுகிறுர். முனிவர் நால்வர்க்கும் இவர் செய்த உபதேசத்தை வியந்து ஆதிசங்கரர் பாடுகிறுர். 'வட விருட்சத்தின் அடியில் விருத்தரான சீடர்கள். அவர்களுடைய குரு இளைஞர் (16 வயது) குருவின் உபதேசம் மௌனம். சீடர்களுக்கு இருந்த எல்லாச் சந்தேகங்களும் நீங்கிவிட்டன' என்று இந்த குரு தம வலது கையில் பிடித்த சின் முத்திரையால் மும்மலம் வேறுபட்டு ஒழிய மொயத்து உயிர் (ஆன்மா) சிவ பரம்பொருளின் தாள் நிழலில் அடங்கும் உண்மையைக் கட்புலனுகும் அடையாளமாகக் காட்டுவது இவ்வடிவம். கற்றேருக்கே அன்றி மற்றேருக்கு இது விளங்காது.

—அறிஞர் மு. அருணுசலம்

சொற்சுவை என்ற நூலில்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார் கணுல்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

— பரஞ்சோதி முனிவர்

தட்சிணாமூர்த்தியைத் தென்முகக் கடவுள் என்பர். 'ஆலமர் செல்வர்' என்று சங்க நூல்கள் இவரைக் குறிப்பிடுகின்றன. தட்சிணா மூர்த்தியே எல்லாக் கலைகளுக்கும் ஞானங்களுக்கும் உரிய தலைவராவர்.

''மனித குலத்தின் விழுமிய பெருஞ்செல்வமாக விளங்கும் சிந்தனைத்திறன், சிந்தித்து உணரவல்ல உரிமைச்சிறப்பு, சிந்தித்து உணர்வதனுல் விளையும் தெளிவு நலம், மோன வரம்பாகிய ஞானநலம் முதலிய, அரிய பல நுட்பக் குறிகோள்களைத் தட்சிணாமூர்த்தியுருவம் தக்காங்கு விளக்கிக்கொண்டு தனிப் பெருஞ்சிறப்புடன் திகழ்கிறது'' என்கிருர் தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன்.

எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் கருவறையின் தென்புறச் சுவரில் ஒரு மாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருப்பார். ஞான நன்னெறியில் வேட்கை உடையவர்கள் இவரை வழிபடு கடவுளாகக் கொண்டு போற்றுவர். வேதாந்த சித்தாந்த சமரச வித்தக ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள், ''சிரகிரி விளங்கவரும் தட்சிணாமூர்த்தியே சின்மயானந்த குருவே'' என இவரைப் போற்றித் துதித்திருக்கிருர்.

— தெய்வத் திருவுருவங்கள் என்ற நூலில்
'ஞானத் தமிழாகரர்' ந.ரா. முருகவேள்
(தணிகைப் பதிப்பக வெளியீடு) ★

சண்டிகேசுவரர்

சோமலெ

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்

—சுந்தரர் திருத்தொண்டத் தொகை

சிவாலயங்களில் எல்லாம் வட பிராகாரத்தில் கோமுகிக்கு அருகில் சண்டிகேசுவருக்குத் தனிக்கோயில் இருப்பதைப் பார்க்கிறோம். இறைவனுக்குச் சாத்தியெடுக்கப்படும் நிர்மாலியங்களெல்லாம் அவருக்கு அணியப்படும் முறை கோயில்களில் இன்றும் நடைபெற்று வருகின்றது. சிவன் கோயிலை வழிபடச் செல்பவர்கள் இவர் சந்நிதியையும் வழிபட வேண்டும். திருவிழாக் காலங்களில் (1) இறைவன், (2) தேவி, (3) கணபதி, (4) முருகன் ஆகியோர்களுடன் சண்டேசுரரும் எழுந்தருளுகின்றார். பஞ்ச மூர்த்திகளில் ஒருவராகும் பேறு பெற்ற இந்த நாயனாரின் பெருமை சொல்லுந்தகையதோ! 'தந்தை தாளொடும் பிறவித்தாள் எறிந்த சண்டேசர்' என்பர். பன்னிரண்டு திருமுறைகளையன்றியும் தலபுராணங்கள், மற்றும் பிற்கால நூல்கள் பலவற்றுள் இவர் பாடப் பெற்றிருக்கிறார். தாயுமான அடிகள்,

தந்தையிரு தாள் துணித்துத்
தம்பிரான் தாள்சேர்ந்த
எந்தையிரு தாளிணைக்கே
இனை புறுவ தெந்நாளோ

என்று பாடுகிறார்.

கடிசேர்ந்த போது மலரான
    கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டங்
    காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலே யறவெட்டிட
    முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணமறிவார்
    சொலக் கேட்டு மன்றே.

—திருஞானசம்பந்தர்.

தழைத்ததோ ராத்தியின் கீழ்த் தாயர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலேக் கறந்து கொணடாட்டக் கண்டு
பிழைத்ததன்தாதை தாளேப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கை வீரட்டனரே.

—திருஞானசம்பந்தர்.

இறைவனுடைய அருளேப்பெற, அவனுடைய அடியவர்களேயும் வழிபட வேண்டும். திருக்காளத்தியில் கண்ணப்ப நாயனருக்குச் சிறப்பான வழிபாடு நடப்பதை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இறைவனுடைய அடியார்களுள் தலேசிறந்தவர், முன்னணியில் இருப்பவர், சண்டேசுவரர். ஆதி சண்டேசுவரர் அருளிச் செய்தபடி, கோயில் கட்டளேகள், கிராமம், பூமி, நகை முதலியன யாவும் இவருடைய பொறுப்பில் இருந்து வருகின்றன. பள்ளியறையில் ஒவ்வொரு நாளும் சண்டிகேசுவரர், கோயிலின் அன்றையக் கணக்கைப் படித்துக் காட்டும் பழக்கமும் சில கோயில்களில் உண்டு.

சண்டிகேசுவரரை வழிபடும் முறை குறித்து நான் 1972-இல் ஆராய்ந்தேன். 18—2—1972-இல் சைவப் பேரறிஞர் மு. அருணுசலம் அவர்கள் திருச்சிற்றம்பலத்திலிருந்து பின் வருமாறு எனக்கு எழுதினர்கள்.

"சண்டேசர் வரலாற்றைப் பெரிய புராணம் 59 பாடல்களால் சொல்லுகிறது. அவர் சிவலிங்க வழிபாடு செய்தபோது, திருமஞ்சனப் பால் குடத்தைத்

தந்தை காலால் இடறினர். அவர் பக்கத்தில் கிடந்த கோல் எடுத்தார், அதுவே மழுவாயிற்று. தந்தையின் தாளை எறிந்தார். 'நம் பொருட்டால் ஈன்ற தந்தையை விழ எறிந்தாய். அடுத்த தந்தை இனி உனக்கு நாம்' என்று சிவபெருமான் கூறினர். அவருக்கு உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் சண்டீசன் என்ற பதமும் தந்தார். அவர் சிவனர் மகனர் ஆயினர். ஆனபின், எந்த நேரமும் வேறு சிந்தனை இன்றி, சிவ சந்நிதியில் நிட்டைகூடி, சிவத்தையே சிந்தித்து இருக்கிருர்.

திருவாய்ப்பாடியில் பிறந்த விசாரசருமர் ஒருவரே சண்டேசர் என்பதில்லை. சண்டேசர் என்பது சிவகணங்களில் ஒரு பதவி. அப்பதவிக்குச் சிவபிரான் இப்பிள்ளையை உயர்த்தினர். அப்பதவியில் உள்ளார், சிவாலயத்தில் வந்து வழிபடுவோருக்கு, வழிபாட்டின் பலனை ஊட்டுவிக்கும் அதிகாரமுடையவர்கள். இவருக்கும் அந்த அதிகாரம் உண்டு. ஆனல், இவர் எந்த நேரத்திலும் சிவத்தியானத்தில் தோய்ந்திருப்பவர். ஆதலால் சூழ்நிலை இவருக்கு நினைவிராது. நாம் போய் வழிபடும்போது, பயன்பெற வேண்டும் என்பது நமது கவலை. ஆகவே, இவரைத் தியானத்திலிருந்து சிறிது கலைத்து நம் வழிபாட்டை உணர்த்துகிருேம். கை தட்டுவது இவரை விழிப்படையச் செய்வதற்கே. மேலும் கோயிலில் சண்டேசருக்கும் சிவலிங்கத்துக்கும் குறுக்கே போகக் கூடாது என்பது ஒரு விதி. காரணம், இவருடைய மனம் சிவபெருமான் பால் சென்று கொண்டிருக்கிறது. அதை நாம் துண்டித்தல் தகாது என்பதே. இது பற்றியேதான் சண்டேசர் கோயிலில் வலப்புறம் வராமல் இடப்புறம் சுற்றி வந்து தரிசிக்கிருேம்.

மற்றப்படி இவரைச் செவிட்டுச்சாமி என்று கூறுவது, கூறுவோருடைய அஞ்ஞானத்தையே காட்டும். பாமர மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள்; அவர்கள் தவருகச் சொல்லுகின்ற ஒரு பொருளை

அறிவுடையவர்களும் தவருகவே கருதிக் கொள்வது பெரும் பிழை. சண்டேசர் செவிடரல்லர்; நிஷ்டாபரர். நம்முடைய கவலையினுல் இவருடைய நிஷ்டையைக் கலக்கிருேம்.''

கோயில்கள் பற்றியும் சைவசமய சம்பிரதாயங்கள் பற்றியும் நிறைந்த புலமை உடையவரும் 'தொண்டர் குல சேகரர்' என்று காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்களால் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவருமாகிய கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் இதைப்பற்றி 1972. இல் என்னிடம் கூறியதாவது:

"சண்டிகேசுவரர் செவிட்டுச்சாமி இல்லை. அவர், முற்றிலும் தியானத்தில் மூழ்கியிருக்கிருர். அந்தத் தியானத்தைக் கலக்கக் கூடாது. கையைத் தட்டுவது அல்லது ஆடையிலிருந்து நூல் பிரித்துப் போடுவது சமயநெறிக்கு முற்றிலும் முரண்பட்டது. சண்டி என்ற சொல்லுக்கு CUSTODIAN என்று பொருள். சிவன் கோயில்களுக்கு, சண்டிதான் டிரஸ்டி, அறங்காவல என்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.''

சிவபெருமான் தன் மாலையை எடுத்துச் சண்டிகேசுவரர் முடியில் சூட்டி, திருவடி தீட்சை கொடுத்து இன்று முதல் நீ சண்டி அல்ல, சண்டீசன் என்று அனுக்ரகித்தார். அந்த மூர்த்தத்துக்கு, சண்டீசானுக்ரக மூர்த்தி என்று பெயர். அந்த மூர்த்தியைத் தெளிவாக வழிபட விரும்புபவர்கள் கங்கை கொண்ட சோழேச்சரத்தில் ஞானசரசுவதிக்கு நேரே வடபுற வாயிலில் காணலாம். ★

மூலட்டான ஈசுவரர் கோயில் மதிலிலுள்ள வண்ண ஓவியங்கள்

வடக்குச் சுவர்

1. தட்சிணாமூர்த்தி
2. சுகாசனமூர்த்தி
3. ஏகபாதமூர்த்தி
4. சோமாஸ்கந்தமூர்த்தி
5. விக்கின பிரசாத மூர்த்தி
6. சக்கிரதான மூர்த்தி
7. விஷாபஹரண மூர்த்தி
8. சண்டேச அனுக்கிரக மூர்த்தி
9. கங்காளமூர்த்தி

மேற்குச் சுவர்

10. இளதகமூர்த்தி
11. அர்த்த நாரீஸ்வரர்
12. சங்கரநாராயணர்
13. வீரபத்திரர்
14. கஜசம்காரமூர்த்தி
15. ஜலந்தர ஆரமூர்த்தி
16. திரிபுராந்தகமூர்த்தி
17. காலசம்காரமூர்த்தி
18. காமதகனமூர்த்தி
19. பிச்சாண்டவர்.

தெற்குச் சுவர்

20. கல்யாணசுந்தரமூர்த்தி
21. ஸ்ரீ நடராஜர்
23. ரிஷபாருடமூர்த்தி
23. உமாசகாயமூர்த்தி
24. சந்திர சேகரமூர்த்தி

★

உ

ஸ்ரீ நடராஜர் துணை

ஸ்ரீ சபாநாயகர் கோயில்
ஸ்ரீ உமயபார்வதி சமேத ஸ்ரீ மூலநாத சுவாமிக்குக்
கும்பாபிஷேகம் செய்வித்த
மதுரை சிவகாமி மில் அதிபர்

ஸ்ரீ கருமுத்து சு. சொக்கலிங்கஞ் செட்டியார்
அவர்களுக்கு வாசித்தளித்த

வாழ்த்துப்பா

புலவர் வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர்

சீராரும் நகரத்தார் மாத்தூர் கோயில்
சிவகோத்ரம் தனிற்றோன்று செல்வ ராகி
பேரார்ந்த கருமுத்துத் தியாக ராஜர்
பேருமாய்க் கருமுத்துச் சுந்த ரத்தின்
பாரார்ந்த மகிழ்வெய்த மகனாய் வந்த
வணிககுல சொக்கலிங்கம் வாழ்க! வாழ்க! !
தாரார்ந்த தடாதகையாம் மீனாள் வாழும்
தனிமதுரைப் பதிவாழ்வோய் வாழ்க! வாழ்க! (1)

திருஆத்திக் காட்டு தெக்கூர் தன்னிற் றோன்றித்
தென்மதுரைப் பதிவாழும் செல்வவாழ்க!
பெருஞ்செல்வச் செழிப்போ டென்றும் வாழும்
பெருங்குணங்கள் நிறைந்திடுவோய்! வாழ்க!
என்றும்

கருமுத்து வெனும் பெயரால் சிறந்து தோன்றும்
கார்நிகரும் கொடைவள்ளால் கனிந்து வாழ்க!
பெருமுத்து வெனும்பொருளை யுன்னச் செய்யும்
பேரறஞ்செய் தென்னுளும் சிறக்க வாழி! (2)

வேறு

திங்கள்தொறும் திருவாதிரை உடையார்த்தொழு சீராய்
எங்கள்குல நடராஜனின் முதலாகு மம்மூல
லிங்கந்தனை மனதால்நினைந் துடனேவழி பாடு
கங்கைமுதல் பலநீர்கொளு கடமேகொடு செய்ய (3)

வேறு

காளயுத்தி யாண்டு தையில்
இருபத் தைந்தாம் நாளில்
மேளவாத்தி யத்தி னேடு
மேவு பொற்கு டத்தில்
ஏலமோடு நானம் சேர
இனியநீரை வேதம்
நாலினேடு யாரும் ஓத
நான மாட்டிக் காண (4)

வானைமுட்ட வேத நாதம்
வளருகின்ற ஓமம்,
ஆநெய்விட்டுப்போற்று கின்ற
அதிசயம் பிர மாதம்
தேனையொத்த பண்டம் பெய்து
தீயில் தேவைக் காண
கோனைமூல நாத வாவென்
றேது சொல்லும் கேட்கும். (5)

வேறு

சீர்வண்ண நிலைசேர்த்துச் சிறக்கச் செய்து
சிந்தைமகிழ் தம்மோடு புதுக்கி மேலும்,
பார்புகழ கும்பாபி ஷேகம் செய்யப்
பலஆயி ரம்செலவு செய்தோய் வாழி!

ஸ்ரீமூல நாதனவன் உமையாளோடு
திருக்கோயில் கொண்டருளும் கோயில் தம்மைப்
பேர்நீள நன்னுளில் குடநீ ராட்டிப்
பெருமையினை நீயடைந்தாய் பெரும வாழி! (6)

வேறு

நலம்பலவும் கொண்டாய் வாழி!
நானிலம் போற்ற வாழி!
குலப்புகழ் நிறைந்தோய் வாழி!
கோவினும் சிறக்க வாழி!
தலம்முதல் தில்லை மன்றில்
தலைவனின் அன்ப! வாழி!
வலம்பல பெற்று வாழி!
வாழி நீ டூழி வாழி! (7)

வேறு

ஏற்ற பணியை இனிதாகச் செய்தாய் இனியுமொரு
போற்றும் பணியான திப்பாரில் வேறுபுகலரிது
கீற்றுப் பிறை சேர்த்த கங்கை வழிந்தோடும்
செஞ்சடையோன்
நீற்றின் நிறைந்த அருளினுல் வாழிய நீணிலத்தே. (8)

சிவகாம கோட்ட சிவகாமித் தாய்க்குக் குடமுழுக்குப்
பவபாச நீங்கப் பரிவோடு செய்யப் படருமுளம்
தவமான செய்கை தனியாகக் கொண்ட தனமுடையோய்
சிவகாமி நல்கும் அருளோடு வாழி தழைத்தினிதே. (9)

★





சிதம்பரச் சிறப்பு

நமது தமிழகத்தில் மிகவும் சிறந்தது சோழ வளநாடு.

வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து
—பூழியார்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர்
வயல்தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து

என்பது ஔவையார் வாக்கு.

“சோழ வளநாடு சோறுடைத்து.” சோறுடைத்து என்ற சொல்லுக்கு சோற்றின் வளம் உடையது என்று மட்டும் பொருளன்று.

சோறு—மோட்சம். சோழ வளநாடு மோட்சத்தை உடையது என்பதுதான் இதற்குப் பொருள். சோறு—மோட்சம் என்ற பொருளில் மணிவாசகர் கூறுமாறு காண்க.

“பாதகமே சோறு பற்றியவா தோணோக்கம்”

—திருவாசகம்

இத்தகைய முத்திநாடாகிய சோழ வளநாட்டில்விளங்குவது தில்லை யம்பதி. தில்லையின் எல்லைக்கு ஒருவர் வந்தவுடன் பிறவி இல்லை இல்லை என்று தொல்லை மறைகள் கூறுகின்றன.

சித்—ஞானம்; அம்பரம்—ஆகாயம்.

ஞான ஆகாயமாக விளங்குவது சிதம்பரம்.

கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நமது உடம்பில் 26 எலும்புகட்கு இடையில் இதய கமலம் உளது. அந்த இதய கமலத்துக்கு நடுவே ஞான வெளியுள்ளது. அந்த ஞானவெளி மிகவும் சிறியது. அந்தத் தகராகாசத்தின் நடுவில் ஒரு ஞானவொளி இடையருது அசைந்துகொண்டு இருக்கின்றது. இதுதான் சிதம்பர ரகசியம்.

"அஸ்மிந் பிரஹ்ம புரேவேச்ம
தஹரம் யதிதம் முநே
புண்டரீகந்து தந்மத்யே
ஆகாசோ தஹரோஸ்திதத்
ஸசிவஸ் ஸச்சிதானந்தஸ்
லோஙவேஷ்டவ்யோ முமுக்ஷுபி!"

—பஞ்சப்ரஹ்மோபநிஷதம்.

இதன் பொருள் :—

"முனிவனே! பிரமபுரத்திலே தாமரை மலரனைய ஒரு வீடு உளது. அதன் நடுவிலே தகராகாசம் இருக்கின்றது. அது சச்சிதானந்த சிவன். அவன் முமுக்ஷுக்களால் நாடப்பட்டவன்.

இதனை நக்கீரர்,

"ஓவற இமைக்கும்
சேண் விளங்கு அவிரொளி"

என்கிருர். இந்தச் சிதம்பரத்தைச் சிவயோக நெறியில் உள்ளுக்குள் கண்டார், பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவர். இந்த அரிய பெரிய காட்சியைக் கண்ட சிவயோகிகள் பதஞ்சலியும் வியாக்ரபாதரும் ஆவர்.

இவர்கள் இதனைப் புறத்தேயுங் காண, சிதம்பரக் கோயிலை அமைத்தார்கள்.

"இனிய முதுபுலிபாதன் உடனரவு சதகோடி
இருடியர்கள் புகழ் ஞான பெருமானே"

என்று அருணகிரிநாதர் கூறுகின்ருர்.

சிதம்பரம் பரமஞானிகளால் உபாசிக்கும் உயர்வு டையது. இங்கு எல்லா மூர்த்திகளும் அர்த்த சாமத்தில் ஒடுங்குகின்றன.

தஹரம் விபாப் மம்பர வேச்மபூதம்
யத் புண்டரீகம் புரமத்ய ஸம்ஸ்தம்
தத்ராபி தஹரம் ககநம் விசோகத் தஸ்மிந்
யதந் தஸ்த துபாஸி தவயம்

—தைரித்யாருண சாகை

புரமத்தியிலே—சரீர நடுவிலே, தஹரம்—சிறிதாயும், பாவமிலதாயும், பரமா ஆன்மாவிற்குச் சிறந்த வீடாயும் இருக்கிற இதயகமலம் எதுவோ அதனில் சோகமிலதாய தகராகாசம் உளது. அதன் உள் உளது உபாசிக்கத் தக்கது.

சிதம்பரத்தின் சிறப்பு சிந்தைக்கு எட்டாத விந்தையுடையது. அது அகக்கண்ணுல் கண்டு களிக்கத்தக்கது.

இதன் பெருமை அளவுபடுத்த முடியாது. அது அற்புதமானது. இதனைத் தெய்வச் சேக்கிழார் துதி செய்யுந் திறத்தைக் காண்க.

கற்பனை கடந்த ஜோதி
கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி
அருமறைச்சிரத் தின்மேலாம்
சிற்பர வியோம மான
திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புற நடஞ் செய்கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.

★

மெய்கண்ட சாத்திரங்களும் தில்லையும்



க. சுந்தரமூர்த்தி

தில்லைப்பதி என நினைக்கும் பொழுதெல்லாம் அப்பதியில் இருந்தருளும் பெருமாளுகிய கூத்தப் பெருமானின் அருள் மணமே நினைவிற்கு வரும். அப்பெருமான், கலைக்கும் அருட்கும் இருப்பிடமானவன். ஆதலினுல்தான் போலும் அப்பதி இன்றும் கலைமணமும் அருள் மணமும் கமழ விளங்குகின்றது. நாட்டில் கோவில்கள் பல உள. எனினும் அவற்றை அவ்வவ்வூர்களுடன் சேர்த்துக்கூறும் பொழுதே இன்ன கோவில் என விளங்கும். ஆனல், கோவில் எனத் தனித்துக் கூறினும் அது தில்லைக் கோவிலையே குறிக்கும் சிறப்பு அதற்குள்ளது. அருளாளர்கள் பலரும் தம் ஊனும் உயிரும் குளிர வணங்கி மகிழ்ந்த சிறப்பு இத்திருக்கோவிலுக்கு உண்டு. 'தில்லையைத் தரிசிக்க முத்தி' என வரும் வழக்கு இன்றும் போற்றப் பெற்று வருகின்றது. இவ்வாறு பல்லாற்ருனும் மேம்பட்ட இத்திருப்பதியோடும், இங்கு எழுந்தருளியிருக்கும் கூத்தப் பெருமானேடும், சைவ சித்தாந்த நன்மணத்தைத் தம் நூல்கள் வாயிலாகப் பரப்பி அருளிய அருளாளர்கள், எவ்வாற்ருனெல்லாம் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அறிதல் சுவையும் பயனும் உடையதாகும்.

மெய்கண்ட நூல்கள்:

சைவ சித்தாந்த உண்மையை எடுத்துக்கூறும் நூல்கள் பலவேனும் அவற்றுள் பதினான்கு வழி வழியாகச் சிறப்

பித்துப் போற்றியுள்ளனர். அவை திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக் கவி, வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, நெஞ்சு விடு தூது, சங்கற்ப நிராகரணம், உண்மை விளக்கம், உண்மை நெறி விளக்கம் என்பனவாம். இவற்றை அருளிய ஆசிரியன்மார்கள் எழுவராவர். அவர் திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார், திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார், மெய்கண்டார், அருணந்திசிவம், உமாபதிசிவம், திருவதிகை மனவாசகங் கடந்தார், சீகாழி தத்துவநாதர் என்பர்.

திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் :—

இவர் திருக்கடவூரினர். தம் ஆசிரியர்பால் அருளுப தேசம் பெற்ற பின்னர் தில்லைப்பதியில் சில காலம் தங்கினார். அங்கு ஞான முதிர்ச்சி உடையார் ஒருவர் எதிர்ப்பட, அவருக்குத் தம் ஞானாசிரியர்பால் பெற்ற அருளுப தேசத்தை நூல் வடிவில் வழங்கியருளினர். அந்நூல் மிகச் சிறப்புடையது எனினும் அக்காலத்தார் அதனை உடன் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்நூலின் தரமறிந்த சிலர் அந் நூலைக் கூத்தப் பெருமானின் திருமுன்பு இருக்கும் பஞ்சாக் ரப்படியில் வைக்க, அதனகத்திருந்த கல்லால் செதுக்கப் பட்டிருந்த யானை திருவருட் குறிப்பால் உணர்வு பெற்றுத் தன் துதிக்கை கொண்டு எடுத்துக் கூத்தப் பெருமானின் திருவடியில் வைத்தது. அதன் பின்பு அந்நூலின் பெரு மையை அனைவரும் அறிந்தனர். இக்காரணத்தால் அது திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெற்றது. இந்நூல் சிவஞான போதத்திற்கு முந்தியதாகும். திருவுந்தியாருக் குப் பிந்தியதாகும். இந்நூல் முன்னும் பின்னும் அடை கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாரும் இத்தகையதென நினைவு கூர்தல் தக்கதாகும். இனி இந் நூலினகத்து தில்லைப்பதிக்குரிய இயைபைக் காணலாம்.

இவ்வாசிரியர் 'அம்பலத்து எம் கூத்தன்' எனப் பெருமானைத் தம்மோடு தொடர்பு படுத்திக் கூறுதல் காண்டற்குரியது ஆகும்.

அகளமயமாய் நின்ற அம்பலத்தெம் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி—நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து.[1]

என்பது அப்பாடல்.

திருச் சிலம்போசை:

யோகத்தின் மேலெல்லையான நிராதாரயோகம் என்பதை இந்நூல் விளக்குகின்றது. சிவயோகியர் தம் உடல் கரணம் முதலியவற்றின் நீர்மை ஒடுங்குமாறு இவ் யோகத்தைச் செய்வர். அதுபொழுது அவருக்குக் கிட்டும் பேரறிவால் அவர்தம் அறிவு இச்சை செயல்கள் நீங்கும். அந்நிலையில் தில்லைப் பெருமானின் திருவடிச் சிலம்போசை கேட்கும். அதன் வழிச் சென்ற அவ்யோகியர் உள்ளம் முடிவாக அப்பெருமானைக்கண்டு மகிழும். இக்கருத்தமைந்த பாடல்:

ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசை வழியேசென்று ஒத்தொடுங்கில்—ஓசையினின்
அந்தத்தான் அத்தான் அரிவையுடன் அம்பலததே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து.[2]

சேந்தனார்:

இவர் பட்டினத்தடிகளுக்குக் கணக்கராய் இருந்தவர். பட்டினத்தடிகள் பணித்தவண்ணம் தம் மனைவி மக்களுடன் தில்லைக்குச் சென்றார். வறுமை வர, விறகு விற்று வரும் ஊதியம் கொண்டு வாழ்ந்து வந்தனர். அந்நிலையிலும் அடியார் ஒருவருக்கு அமுதளித்து வந்தனர். மழை மிகுதியால் தாம் மேற்கொண்ட தொழிலும் இடையீடுபட வறுமை மிகுந்தது. அந்நிலையிலும் தமக்குக் கிடைத்த மாவினைக் களியாக்கி, வரும் அடியாருக்குக் கொடுக்க விரும்பினர். கூத்தப் பெருமானே அடியராக வந்து அக்களியினை உண்டு, அடுத்த வேளைக்கும் வேண்டுமென அதனை

1. திருக்களிற்றுப்படியார்—4.
2. திருக்களிற்றுப்படியார்—33.

எடுத்துச் சென்றனர். அவ்வாறு எடுத்துச் சென்றதைப் பலரும் அறிய அக்களியமுதைப் பொன்னம்பலத்தில் சிந்தவும் செய்தனர். அடியவர் இறைவன் மாட்டுச் செய்யும் அன்பிற்கும், இறைவன் அவ்வடியவர் மாட்டுச் செய்யும் அருளிற்கும் எடுத்துக் காட்டாக இக்கருத்துப் பேசப்படுகின்றது.

> **அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை**
> **அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க—அவிழ்ந்தசடை**
> **வேந்தனுர்க்கு இன்னமுதம் ஆயிற்றே மெய்யனபில்**
> **வேந்தனுர் செய்த செயல்.**[3]

என்பது அப்பாடல்.

சமயச் சிறப்பு:

இறைவன் அம்மையப்பராக இருந்து உயிர்களுக்கு அருள் வழங்கும் சமயம், இச்சைவ சமயமேயாகும். அத்தகைய சமய நெறியில் நின்று திருவருள் பெற்று எலும்பைப் பெண்ணுகச் செய்த அடியவரும் இச்சமயத்திலின்றி வேறு எச்சமயத்திலுளர்? என ஆசிரியர் பெருமிதத்தோடு வினுவும் நிலையில் கூத்தப் பெருமான் ஏத்தப் பெறுகின்ருர்.

> **இன்றுஇச் சமயத்தின் அல்லதுமற் றேழையுடன்**
> **ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்—இன்றிங்கே**
> **அங்கம் உயிர் பெறவே பாடும் அடியவரார்**
> **எங்குமிலை கண்டாய் இது.**[4]

என்பது அப்பாடல்.

அனைத்தும் வேடமாம் அம்பலக்கூத்தன்:

இவ்வாறு எண்ணி மகிழ்பவர் அப்பரடிகள். திருக்களிற்றுப் படியாரும் தில்லைப் பெருமானே மண்முதலாய ஐம்பெரும் பூதங்களாகவும் எண்வகை வடிவினனுகவும், பெண்ணுற நிற்பவனுகவும் உளன் என்று கூறுகின்றது.

---

3. திருக்களிற்றுப்படியார்—53
4. திருக்களிற்றுப்படியார்—65.

திருவருளால் சிவத்தோடு ஒன்றியவர்களே இவ்வுண்மையை உணர்வர் என்றும் கூறுகின்றது.

நின்றபடி நின்றவர்கட்கு அன்றி நிறந்தெரியா
மன்றினுள் ஆடல் மகிழ்ந்தானும்—சென்றுடனே
எண்ணுறும் ஐம்பூதமுதல் எட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின்று ஆடும் பிரான்[5]

என்பது அப்பாடல்.

அருள்நந்தி சிவாச்சாரியார்:

இவர் மெய்கண்டாரின் மாணுக்கர் ஆவர். சிவஞான சித்தியார், இருபா இருபஃது ஆகிய இரு நூல்களை அருளியவர்.

சிவஞான சித்தியார்:

இதன் தொடக்கத்தே இறை வணக்கப் பாடலாய் உள்ளதில் தில்லைப் பெருமானின் திருப்பெயர் உள்ளது.

ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒரு பாகத்து அடக்கி வானோர்
மகுட சூளாம ணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படரொளிஅம் பலத்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம்.[6]

இப்பாடல்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதிபா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.[7]

என்னும் சேக்கிழார் திருவாக்கோடு ஒருங்கெண்ணி மகிழற் குரியது.

---

5. திருக்களிற்றுப்படியார்—83.
6. சித்தியார் பரபக்கம் மங்கல வாழ்த்து—1.
7. பெரிய புராணம் தில்லைவாழ் அந்தணர் சருக்கம்—1

திருவதிகை மனவாசகங் கடந்தார்:

இவர் திருவதிகைப் பதியினர். மெய்கண்டாரின் மாணுக்கருள் ஒருவர். உண்மை விளக்கம் என்ற நூலை அருளியவர்.

உண்மை விளக்கம்:

இது மாணுக்கனெருவன் தன் ஞானுசிரியரிடத்துச் சில விஞக்களைக் கேட்பதாகவும், அவர் அவற்றிற்கு விடை தருவதாகவும் அமைந்துள்ளது. இவ்விஞக்களில் இரண்டு தில்லைப் பெருமானேடு இயைபுடையன. ஒன்று இறைவன் திருநடனத்தின் உண்மை யாது? என்பது. இரண்டாவது திருவைந்தெழுத்தின் உண்மை யாது? என்பது இவ்விஞக் களும் இவற்றிற்கு உரிய விடையும் 15 பாடல்களில் கூறப் பெற்றுள்ளன. அவற்றின் கருத்து வருமாறு:

மாணுக்கனின் விஞ:— மெய்கண்ட நாதனே! நற்றவ முடைய உயிர்கள் வழிபட்டு உய்தற்குரிய இறைவன், திருவைந்தெழுத்தையே உடலாகக் கொண்டு ஆடல் செய் கின்ற முறையை எனக்கு விளக்குவீராக?

> **நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத்(து) அஞ்செழுத்தால்**
> **உற்றுருவாய் நின்ருடல் உள்ளபடி—பெற்றிடநான்**
> **விண்ணூர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே**
> **தண்ணீர் அருளாலே சாற்று**[8]

என்பது அப்பாடல்.

ஆசிரியரின் விடை:— தமிழில் 10 என்னும் எண்ணைக் குறிக்கும் எழுத்து ய ஆகும். அது திருவைந்தெழுத்தில் இடை நிற்கும் எழுத்து ஆகும். அதுவே உயிரைக் குறிப்பதுமாகும். உயிர் பிறப்பறுத்து வீடு பெறுதற் பொருட்டு அதனகத்துஇருந்து ஆடும் ஆடலைக் குறிப்பதே இறைவனின் திருக்கூத்தாகும். திருவைந்தெழுத்து ஐந்தனுள் நகரம் கூத்தப் பெருமானின் திருவடியில் உள்ள தாகும். உந்தியில் மகரமும், திருத்தோள்களில் சிகரமும்,

---

8. உண்மை விளக்கம்—30.

திருமுகத்தில் வகரமும், திருமுடியில் யகரமும் உள்ளன. இது நகரத்தை முதலாகக் கொண்ட திருவைந்தெழுத்து திருமேனியில் நிற்கும் முறைமையாகும். இனிச் சிகரத்தை முதலாகக் கொண்டு நிற்கும் திருவைந்தெழுத்தும் அப் பெருமானின் திருமேனியில் அமைந்துள்ளது.

உடுக்கை இருக்கும் திருக்கையில் சிகரமும், வீசும் திருக் கையில் வகரமும் உயிர்களுக்குத் தஞ்சம் அளிக்கும்திருக் கையில் யகரமும், நெருப்பேந்திய திருக்கையில் நகரமும், முயலகனை மிதித்து நிற்கும் திருவடியில் மகரமும் உள்ளன. ஓங்காரமே திருவாசியின் வடிவாகும். அவ்வோங்காரத் தினின்றும் நீங்காது நிற்கும் திருவைந்தெழுத்தே நிறை சுடராக விளங்கும். பெருமானின் திருவுருவாகும். இதனைத் தன்முனைப் பற்றவரே அறிவர். அவ்வாறு அறிவர் பிறப் பற்றவராவர். இனிஇறைவன் செய்யும் ஐந்தொழிலும் திருக் கூத்தின் விளைவேயாகும். திருக்கூத்தியற்றும் பெரு மானின் துடியால் படைப்பும், உயிர்களுக்குத் தஞ்சம ளிக் கும் திருக்கையால் காப்பும், பிறிதொரு திருக்கையிலிருக்கும் நெருப்பால் அழிப்பும் ஊன்றிய திருவடியால் மறைப்பும், தூக்கிய திருவடியால் அருளும் நிகழுகின்றன. வினை வயப் பட்ட உயிரை அருள் வயப்படுமாறு செய்வதும் அத் திருக் கூத்தே ஆகும். பெருமானின் உடுக்கை ஒலியால் உயி ரொடு பொருந்தியிருக்கும் மாயை உதரப்படுகின்றது. பிறி தொரு கையிலுள்ள நெருப்பால் வல்வினை (கன்மம்) சுட் டொழிக்கப் படுகின்றது. முயலகன்மீது ஊன்றி நிற்கும் திருவடியால் ஆணவமலம் வறுத்தவித்தென வலிமை கெட்டு ஒழிகின்றது. தூக்கிய திருவடி உயிர்கள் பிறவிப் பிணியினின்றும் நீங்க அருள்புரிகின்றது. திருவடியைக் காட்டி நிற்கும் திருக்கரம் உயிர்களைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்கின்றது. இத்திருக்கூத்தின் மெய்ம்மை, மும்மலங்களும் தன்முனைப்பும் அற்ற முனிவர்களுக்கு நன்கு விளங்கும். அவர்கள் இறைவன் அருளும் பேரின்பத்தில் திளைக்குமாறு அக்கூத்து நிகழும். இவ்வாறு திருவைந் தெழுத்தால் அருளுருக்கொண்டு விளங்கும் இறைவன், அருட்சக்தியையே ஆடும் இடமாக (அம்பலமாக) அவ்வருட்சக்தி காணுமாறு ஆடுவன். இத்திருக்கூத்தி னைப் போற்றி வழிபடுவார்க்குப் பிறப்பில்லை.

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே
அவாயமற நின்ருடு வான்[9]

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்[10]

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான்[11]

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்—ஆங்காரம்
அற்ருர் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்ருர் பிறப்பற்ருர் பின்.[12]

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்பதத்தே நாடு[13]

மாயை தனைஉதறி வல்வினையைச் கட்டு மலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மானவத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்[14]

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆநந்தம்
மொண்டருந்தி நின்ருடல் காணும் அருள் மூர்த்தியாக்
கொண்ட திரு அம்பலத்தான் கூத்து[15]

---

9. உண்மை விளக்கம்—31
10. ,, 32
11. உண்மை விளக்கம் 33
12. ,, ,, 34
13. ,, ,, 35
14. ,, ,, 36
15. ,, ,, 37

உரைஉணர்வுக் கெட்டா ஒருவன் மிகுபஞ்சாக்
கரத்தால் வரைகள்தான் பாதி—பரையிடமாக்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க்கு உண்டோ பிறப்பு[16]

மாணவனின் வினா: தத்துவத்திற்கு அப்பாற்பட்டு நிற்கின்ற இறைவன் திருக்கூத்தின் மெய்ம்மையை இது காறும் அருளினீர். திருவைந்தெழுத்து ஏனைய எழுத்துக் களோடு ஒப்பக் கருதப்படின் அவையும் அழியாவோ? அதன் உண்மையையும் அருளுவீராக!

நாதாந்த நாடகத்தை நன்ருய் அருள்செய்தீர்
ஓதீர் எழுத்தஞ்சும் உள்ளபடி—தீதறவே
அஞ்செழுத்து ஈதாகில் அழியும்எழுத் தாய்விடுமோ
தஞ்ச அருட்குருவே சாற்று[17]

ஆசிரியரின் விடை: திருவைந்தெழுத்தில் உள்ள எழுத்துக்கள் எழுத்தாம் தன்மையில் பிற எழுத்துக்களோடு ஒப்ப அழியும் தன்மையவெனினும், அவற்ருல் உணர்த்தப் பெறும் பொருள் அழியாது. சிகரம் இறைவனையும் உகரம் அருளையும் யகரம் உயிரையும், நகரம் மறைப்பை யும் (திரோதம்), மகரம் ஆணவ மலத்தையும் குறிக்கும். மேற்கூறிய திருவைந்தெழுத்துக்களில் (சிவாயநம, நம சிவாய) நகரத்தை முன் வைத்து ஓதின் இம்மைப்பயனும். சிகரத்தை முன் வைத்து ஓதின் பேரின்பப் பயனும். இத்திருவைந்தெழுத்தை இடையருது நினைக்கில் திருவருள் உயிரோடு பொருந்தி அதனேடு இருக்கும் ஆணவ இருளை நீக்கும் தனிநிலை (கேவலம்) கலப்பு நிலை (சகலம்) ஆகும்- இருநிலையையும் கடந்த தூயநிலை (சுத்தம்) எய்துவிக் கும், அதனுல் உயிர் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று மகிழும். இத்திருவைந்தெழுத்தே வேதம், ஆகமம் புராணம், இறைவனின் திருக்கூத்து, வீடுபேறு ஆகிய அனைத்துமாம்.

உற்ற குறிஅழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது—மற்றதுகேள்

---

16. உண்மை விளக்கம் 38
17. ,, ,, 39

ஈசனருள் ஆவி எழிலார் திரோதமலம்
ஆசில் எழுத்து அஞ்சின்அடை வாம்[18]

சிவனருள்ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத்து அஞ்சின் அடைவாம் — இவனின்று
நம்முதலா ஓதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா ஓதுநீ சென்று[19]

அண்ணல் முதலா அழகார் எழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற்று இன்பத்தே—நண்ணி
அருளான துசிவத்தே ஆக்கும் அணுவை
இருளா னதுதீர இன்று[20]

ஆதி மலம்இரண்டும் ஆதியாய் ஓதினுல்
சேதியா மும்மலமும் தீர்வாகா—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படியோது அஞ்செழுத்துமே[21]

அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும்—அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்[22]

உமாபதி சிவம்

இவர் தில்லைவாழ் அந்தணரில் ஒருவர். தில்லைப் பெருமானைத் தீண்டி வழிபடப் பெறும் பேறுடையவர். மறைஞான சம்பந்தரின் மாணுக்கர். தம் ஞானுசிரியர் உண்ட கூழினை அவர்தம் கைவழியேற்று உண்டமையால் தில்லைவாழ் அந்தணர்கள் கூத்தப் பெருமானின் திருமேனியைத் தீண்டற்குத் தகுதியிலர் என விலக்கினர். அவரும் அத்தில்லையின் எல்லையில் உள்ள கொற்றவன் குடியில் வசிக்கலாயினர். பெருமானும் அம்பலத்தை விடுத்து அவர்தம் பூசைப் பெட்டகத்தில் எழுந்தருளி அவர்தம் சிறப்பை

---

18. உண்மை விளக்கம் 40
19. உண்மை விளக்கம் 41
20. உண்மை விளக்கம் 42.
21. ,, ,, 43
22. ,, ,, 44.

அனைவருக்கும் அறிவுறுத்தினர். இவர் அருளிய நூல்கள் ஏழாம்.

சிவப்பிரகாசம் : இந்நூலுள் கடவுள் வாழ்த்தாகக் காணப்படும் பாடல்கள் கூத்தப்பெருமானையும் சிவகாமி அம்மையையும் போற்றுவதாக உள்ளன.

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினுள் உறவணங்கிப் போற்றல் செய்வோம்.[23]

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்து
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னையருள் பாதமலர் சென்னி வைப்பாம்.[24]

போற்றிப் பஃறொடை:

இந்நூலின் கண் இறைவன் உயிருக்கு அணு அணுவாக ஒவ்வொரு நிலையிலும் செய்தருளும் உதவி பாராட்டப் பெறுகின்றது. உயிர்களுக்குற்ற பிறவிப்பிணி நீங்கவே இறைவன் மன்றுள் ஆடுகின்றான் எனப் போற்றப் பெறுகின்றது.

எவருந் தேறுவகை—மாமணி சூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலை போற்றி.[25]

என்பது அப்பகுதியாகும்.

---

23. சிவப்பிரகாசம்—1.
24. ,, —2.
25. போற்றிப் பஃறொடை—கண்ணி—3, 4.

ஒருமலம் உடையார், இருமலம் உடையார், மும்மலம் உடையார் என மனித இனத்தை மூவகையாகப் பிரிப்பர். இவர்களுள் மும்மலம் உடையார்க்கு இறைவனே குரு நாதனாக வந்து அருளுவன் என்னும் ஞானநூல். இவ் வகையில் உமாபதி சிவம் தமக்குக் குரு நாதனாக வந்த மறை ஞானசம்பந்தர் தில்லைப் பெருமானே எனக் குறித்துப் போற்றுகின்றார். யார் கொடுத்த பாலடிசில் எனக் கேட்ட தந்தையார்க்குப் பால் கொடுத்த பெருமானை அடையாளங் களுடன் சாற்றிக் கூறினார் திருஞான சம்பந்தர். அவரைப் போன்றே இவ்வாசிரியரும் மறைஞான சம்பந்தராக வந்த குருநாதன் தில்லைக் கூத்தனே எனக்கூறி அவர் தம் அடை யாளங்களையும் சாற்றுகின்றார்

பூவலயம்
தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன்னின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை—
அன்னவனுக்கு
ஆதிகுணம் ஆதலினால் ஆடும் திருத்தொழிலும்
சோதிமணி மிடற்றுச் சுந்தரமும்—பாதியாம்
பச்சை யிடமும் பவளத் திருச்சடைமேல்
வைச்ச நதியும் மதிக்கொழுந்தும்— அச்சமற
ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடுநவ வன்னி நெடுங்கண்ணும்—கேடிலயம்
கூட்டும் தமருகமும் கோல எரியகலும்
பூட்டரவக் கச்சும் புலியதளும்—வீட்டின்ப
வெள்ளத் தழுத்தி விடுமதாளினும் அடியார்
உள்ளத்தினும் பிரியா ஒண்சிலம்பும்—கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும் உருத் தோன்றாமல் உள்ளடக்கி —என்றும்
இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து —நறவாரும்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதன்ஒரு பேர்புனைந்து [26]

என வரும் பகுதி குருநாதனை அடையாளங்காட்டி நிற்ப தாகும்.

---

25. போற்றிப் பஃறொடை—கண்ணி 61 முதல் 71 முடிய.
26. கொடிக்கவி—2.

கொடிக்கவி:

தில்லைத் திருவிழாவின் கொடியேற்றத்தின் பொழுது கொடியேருதிருக்க அதனை ஏற்றுதற்காக இந்நூல் பாடப் பெற்றதென்ப. இதன் கண் உள்ள நான்கு பாடல்களிலும் கொடி என்னும் சொல் வந்துள்ளது. முதற்பாடலில் 'உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே' எனக் கூறு கின்றுர்.

நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசல் கொடி.[27]

என இரண்டாம் பாடலிலும்,

பிறித்தறிவு தம்மில் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கொடி.[28]

என மூன்ரும் பாடலிலும்,

நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.[29]

என நான்காம் பாடலிலும் கூறியிருப்பன உயிர் திருவருளில் கூடவும், அதனையறியவும், அதனகத்துப் பிரியாது இருக்க வும், அதற்கேதுவாகத் திருவைந்தெழுத்தை இடையருது ஓதி அதன் பயனைப் பெறவும் வேண்டும் என்னும் கருத் துடையனவாகும்.

சங்கற்ப நிராகரணம்:

தில்லைப் பெருமான் திருக்கோயிலில் ஆனித் திருவிழா ஆரும் நாளில் சமயவாதிகள் பலரும் தத்தம் மதங்களே அமைவதாகக் கூறி மலைந்த பொழுது, அம்மலைவு நீக்க இந்நூல் அருளப் பெற்றது எனக் கூறப்பெறுகின்றது

---

27. கொடிக்கவி—3.
28. ” —4.
29. சங்கற்ப நிராகரணம் 27 முதல் 30 முடிய.

மறைஞான சம்பந்தர்:

இவர் உமாபதி சிவத்தின் குருமூர்த்தியாவர். அருள் நந்தி சிவாச்சாரியரின் மாணுக்கர். இவர் பெண்ணுகடத் தில் தோன்றினும், தம் ஆசிரியர் காலத்திற்குப் பின்பு, தில்லைக்கு வடகிழக்கில் உள்ள திருக்களஞ் சேரியில் வாழ்ந்து வரலாயினர். அதுபொழுது நாளும் தில்லைக் கூத்தரை வழிபடும் பேறுடையராய் வாழ்ந்து வந்தார்.

எனவே சந்தான ஆசிரியர்களில் ஒருவராய உமாபதி சிவத்தின் பிறப்பிடமாயும், பிறிதொருவரான மறைஞான சம்பந்தரின் வாழ்விடமாயும் தில்லைப்பதி அமைந்திருந்தது என அறியலாம். இவர்களன்றி மெய்கண்ட நூல்களை அருளிய ஆசிரியர்களுள் ஒருவரான திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனுரின் வாழ்விடமாகவும் இத்தில்லைப்பதி அமைந்தமை அவர்தம் வரலாற்ருன் அறிய முடிகின்றது. மேலும் அவர் அருளிய நூற்பெயரும் தில்லைக் கூத்தரின் திருமுன்பு இருக்கும் பஞ்சாக்கரப்படியின் பெயரைப்பெற்று இலங்குகின்றது. உமாபதி சிவம் இத்திருப்பதியினர் ஆதலின் அவர் அருளிய ஏழு நூல்களும் இத்திருப்பதி யிலேயே அருளப்பட்டன என்பதில் ஐயமில்லை. தில்லைப் பெருமானின் ஆடல் மெய்மையை விளக்கும் நூலாக உண்மை விளக்கம் அமைந்திருப்பதும், ஆனித் திருவிழா வின் ஆரும் நாளன்று சங்கற்ப நிராகரணம் செய்யப் பெற்றிருப்பதும் தில்லைப்பதிக்குரிய தொடர்பு மேலும் பெரி தாகின்றது. மறைஞான சம்பந்தர் வீடுபேறு அடைந்த இடமும், உமாபதி சிவம் வாழ்ந்த இடமும் இன்றும் தில்லை யில் நினைவுச் சின்னங்களாக உள்ளன. இவை அனைத்தையும் ஒருங்கு நோக்குங்கால் மெய்கண்ட சாத்திரங்களுக்கும் தில்லைப்பதிக்கும் உள்ள தொடர்பு மிகப் பெரிதாகும் என்பது வெள்ளிடைமலை. தில்லைப்பெருமான் திருமுறை அருளிய ஆசிரியன்மார்களை ஈர்த்து ஆட்கொண்டது போலவே மெய்கண்ட நூல்களை அருளிய ஆசிரியன்மார் களையும் ஈர்த்து ஆட்கொண்டுள்ளார். இது தில்லைப் பதிக்குக் கிடைத்த பெரும்பேருகும். மன்னுக தில்லை! வளர்க நம் பத்தர்கள்!

★

சிவலிங்க போதனையும் சிந்தனையும்

எஸ்.டி.காசிராஜன்
ஐ.ஏ.எஸ்

பக்தி என்பது பக்குவப்பட்ட உள்ளத்தின் ஓர் உயர்ந்த நிலை. பக்தி முக்திக்கு வழி என்பது முன்னோர் உரைத்த வாக்கு. பாரத பூமி புனிதர்கள் அவதரித்த புண்ணிய பூமி. நமது கலாச்சாரங்களும் பண்பாடுகளும் பழைமை யானவை, தனித்தன்மை வாய்ந்தவை. வேத, இதிகாசங் கள் புராணங்கள், சாஸ்திரங்கள் போதிக்கும் தெய்வீகத் தத்துவங்கள் அதி அற்புதமானவை. கடலினும் ஆழமா னவை. அவைகளில் அடங்கியுள்ள ஆன்மிகத் தத்துவ விளக்கங்கள் மனித வாழ்க்கை நெறிக்கு வழிகாட்டுபவை.

அன்பு மனித வாழ்க்கை அமைப்பின் அடித்தளம். கோடானு கோடி மக்களை இணைக்கும் பிணைப்பு, அதுதான் அன்பு, எனும் கயிறு அறுந்தால் மானுடம் அழியும், இன் றைய உலகப் பூசல்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் அன்பு என்ற பண்பு குறைந்து வருவதே ஆகும். அன்பு டைமையில் வள்ளுவப் பெருந்தகை அன்பின் பெருமையை விரித்து உரைத்திருக்கிறார். அன்பு அழிந்தால் எல்லாமே அழியும். கூடிவாழும் மனித இனம் அன்பைத் துறந்தால் மிருக நிலை எய்தும். ஆதி சங்கரர் அருளிய சிவயோக சாஸ்திரம் அன்பையே போதிக்கின்றது. அன்பே சிவம். என்பார்கள். சிவம் அன்பு மயமானது. அன்பைப் பொழி பவன் சிவன். அன்பு காட்டுகின்றவர்களுக்கு அருள் பாலிப் பவன் சிவன். சிவ நேயச் செல்வர்களுக்கு அன்பே உயிர் மூச்சு. அன்பு உரையாடுவதே சிவார்ச்சனை. அன்பு நெறி

வழி நடப்பதே சிவாலய தரிசனம். பரமேஸ்வரன் கருணைக் கடல், அன்புருவானவன்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

—திருமூலர் திருமந்திரம். பாட்டு 257

சிவம் என்ற சொல்லுக்குப் பொருள் மங்களம் என்பதாகும். சிவனைச் சம்பு என்றும் சொல்லுவார்கள். சம் என்றால் மங்களம், மகிழ்ச்சி என்று பொருள் கொள்ளலாம். மகிழ்ச்சியை அளிக்கின்ற சம்கரனே பின்னர்ச் சங்கரனாக மருவினான். உருவாய் அருவாய் உள்ள இறைவனை வழிபட வழி முறைகளைப் போதிப்பதே சைவம் ஆகும். ஆதி சங்கரரின் சிவாகம விளக்கங்களே சைவம் ஆனது. சைவம் என்பது சிவ வழிபாட்டு முறைகளை உபதேசிக்கின்றது... ஆதியும் அந்தமும் இல்லாத பரமேஸ்வரனைத் தொழுதேத்த வழி காட்டுவதே சைவம்.

பிறப்பு, இறப்பு, இரண்டு; ஆரம்பம், முடிவு இரண்டு; பிறப்பது, இறப்பது உறுதி. ஒவ்வொரு ஆரம்பத்துக்கும் முடிவு உண்டு. அதே போல ஒவ்வொரு முடிவிலும் ஆரம்பம் உண்டு. அந்தச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. உலகம் இயங்கிக் கொண்டே இருக்கிறது. முடிவான முடிவை—மாறாத இறுதி நிலையை அடைந்துவிட்ட பொருளையே பரம் என்றும் பரம்பொருள் என்றும் சொல்லுகிறோம். அந்தப் பரம்பொருளே பரமசிவம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்தமாய் அருளோடு நிறைந்தது பரமசிவம் என்று தாயுமானவர் பாடுகிறார்.

பரமாத்மா அகண்டாகாரமானது. ஜீவாத்மா கண்டாகாரமானது. உயிர்கள் உய்யும் பொருட்டு பரமாத்மா உடற்கூட்டுக்குள் நுழைந்து கொள்ளுகிறது. அது தன் னிச்சையோடு வெளியே வந்து மீண்டும் உடற்கூட்டுக்குள் நுழைந்து கொள்ளுகின்ற திறனுடையது. அந்த நிலையிலிருந்து விடுபட்டுப் பிறப்பற்ற நிலையை அடைவதே சிவப் பேறு, சிவசித்தி என்று கூறப்படுகிறது.

எதை எரித்தாலும் சாம்பலாகிறது. அந்தச் சாம்பலை எத்தனை முறை எரித்தாலும் சாம்பலாகத்தான் இருக்கும். மாறுபடுவதில்லை. அது தனது இறுதி நிலையை அடைந்து விட்டது. அழியா நிலையை எய்திவிட்டது. அழிவில்லாத பரம்பொருளைக் குறிக்க அழியாப் பொருளான திருநீற்றை அணிவது சைவ சமயத்தினரின் மரபு ஆகும். பல்வேறு நலன்கள் பயக்கும் திருநீறு பலவாறாக வர்ணிக்கப்படு கிறது. அருட் செல்வமும் பொருட் செல்வமும் வழங்கு தலால் அது (வி)பூதி ஆனது. பாவங்களைச் சாம்பலாக்கி அழிப்பதால் பஸ்மம் என்றும் உள்ளொளியை வழங்குவ தால் பசிதம் என்றும் கூறப்படுகிறது. கஷ்டங்களிலிருந்து விடுவிப்பதால் ரக்ஷை என்றும் போற்றப்படுகிறது.

ஈஸ்வரன் லிங்க வடிவமாய் இருக்கிறான். லிங்கம் முத் தொழிலுக்கும் எடுத்துக் காட்டு. அதில் ஆக்கல், காத்தல், அழித்தல் எல்லாமே அடக்கம். அனைத்தும் லிங்கத்தி லிருந்தே உண்டாயின. எல்லாமே அதன் உள்ளடக்கம். மற்ற மூர்த்தங்களுக்கு உள்ளதுபோல அவயவங்கள் இல் லாததால் லிங்கம் அருவமாய் இருக்கிறது. தூண்போலத் தென்படுவதால் உருவமாய் இருக்கிறது. உருவும் அருவு மாய் ஈசன் இருக்கிறான் என்பதற்கு லிங்கம் எடுத்துக் காட்டு. பரமன் கருணையினால் லிங்க சொரூபனாகத் தோன் றினான். எல்லா ஆலயங்களிலும் மூர்த்தங்கள், மூலவர், உற்சவர் என்றுண்டு. ஆனால் உற்சவ லிங்கம் என்று தனியே இல்லை. அதே போன்று, தங்கம் வெள்ளி போன்ற உலோகங்களால் ஆன சிவலிங்கம் எந்த ஆலயத்திலும் கிடையாது.

கேரளத்தில் பரமேஸ்வரன் பல பல வேடங்களில் தோன்றுகிறான். விளக்குகளை ஏற்றி ஜோதி மயமானவன் எனக் காட்டுகின்றனர். லிங்கமாகவும் அம்மையாகவும் காணப்படுகிறான். வடநாட்டில் லிங்கத்தைத் தொட்டுத் தழுவிக் கட்டியணைத்து வழிபடுகிறார்கள். தென்னாடுடைய சிவனே என்று போற்றிப் பாடப்படும் இறைவன் வடநாட் டில் அவ்வாறு வணங்கப்படுகிறான்.

சிவாகமத்தில் லிங்க பூஜை பிரசித்தி பெற்றது. நாம் வழிபடும் பரம்பொருள் உருவம் அருவம் என்பதையே

லிங்க சொரூபம் எடுத்துக் காட்டுகிறது. நமது வேத இதிகாசங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள் அறிவுறுத்தும் யோக நிலையைத்தான் லிங்கம் அடையாளம் காட்டுகிறது. லிங்கம் என்ருலே அடையாளம் என்றுதான் அர்த்தம். தவத்தில் மூழ்கித் தனை மறந்து அமர்ந்துள்ள ஒரு யோகியின் பின்புறத் தோற்றத்தையே சிவலிங்கம் காட்டுகிறது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது. உலக இயக்கமே அவன் தந்த பிச்சைதான். எனினும் அவன் உருவ அருவமாய் லிங்கவடிவமாய் படோடோபம் இல்லாமல், உற்சவர் இல்லாமல், யோக நிலையில் காணப்படுகிருன்.

ஈசனைப் பசுபதி என்றும் சொல்லுகிருர்கள். உலகத்தைப் பாசம் என்றும் அதன்பால் ஈர்க்கப்பட்ட ஜீவனைப் பசு என்றும் பரம்பொருளான ஈசனைப் பதி என்றும் சைவம் கூறுகிறது. பந்த பாசத்தால் சிக்குண்டு அல்லலுறும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி ஈசனுன பதியிடம் ஈடுபடுத்துவது என்பதே பசுபதி என்ற பெயரில் உள்ள தத்துவமாகும். சீவனும் சிவனும் ஒன்று. அதை அறிதலே சிவனுதல். தான் தானுதல் என்று திருமந்திரம் கூறுகிறது. சிவ சமயத்தின் நோக்கம் யோகானுஷ்டானங்களில் மூழ்கித் திளைத்தோரின் தலைவனுன பரமசிவனை வணங்கித் தெளிவு பெறுவதேயாகும். தேவாசுரர்களின் வேண்டுகோளை ஏற்று ஆலகாலம் உண்டான் ஆலாலமூர்த்தி. எம்பெருமானின் ஆற்றலுக்கும் அன்புக்கும் அதுவே எடுத்துக் காட்டு.

மகேஸ்வரன் ஆலமரத்தடியில் தெற்கே பார்த்தபடி தட்சிணுமூர்த்தியாக அமர்ந்திருக்கிருன். கிருஷ்ணன் ஆல இலையில் படுத்திருந்தான். ஈஸ்வரன் எதற்காக ஆல விருட்சத்தின் கீழ் நிஷ்டையில் இருக்கவேண்டும்? ஆசைக்கு ஆட்பட்டு சம்சார மரம் ஏறி அல்லல்பட்டுக் கீழே விழுகிறவர்களைத் தடுத்தாட் கொள்ளப் பரமேஸ்வரன் ஆலமரத்தின் கீழ் யோக நிஷ்டையில் வீற்றிருக்கிருன். அதுவும் இளமைப் பூரிப்புடன் இருக்கலாம் என்பதையே அந்தத் தத்துவம் போதிக்கிறது.

கையிலே மான், மழு, தீ, பரந்து விரிந்த சடை முயலகன்மீது பதிந்த வலது பாதம், தூக்கிய இடது பாதம்

புலித்தோல் ஆடை ஆகியவற்றுடன் உடுக்கை அடித்து ஆடும் காட்சி பரம்பொருளின் யோக சாதனையைக் காட்டுகிறது. "மரணப் பெரும் பயத்தால் ஆட்பட்டோர் பாவ வினையை அழித்து மனத்தை ஒரு முகப்படுத்தி என் வயப் பட்டால் என் தரிசனம் கிடைக்கும். அதுவே பேரானந்தம், நித்யானந்தம், மரணமில்லாப் பெருவாழ்வு" என்று கூத்தரசன் உடுக்கை அடித்து அழைக்கிறான்.

கால தேச வர்த்தமானங்களுக்கு ஆட்படாத மெய்ப் பொருள் 'ஸத்' எனப்படுவது. அதுவே எல்லாம் அறிந்து தெரிந்து உணர்ந்த ஞானமாகிய "சித்" ஆகிறது. அந்த உண்மையை உணர்த்தவே சி(த்) தம்பரத்தில் நடராஜர் சிவகாமி சமேதராகக் காட்சி அளிக்கிறார்.

சிவ சொரூபங்களில் அற்புதமானது, அர்த்தநாரி மூர்த்தியாகும். சிவ சக்தி ஐக்கியத்தைத் திருச்செங்கோட்டு மலையில் அர்த்தநாரீஸ்வர கோலம் உணர்த்துகிறது. வட மொழிக்கவி காளிதாசன் அர்த்தநாரீஸ்வரன் பெருமையைச் சிறப்பாகப் பாடியிருக்கிறான்.

சிவ வழிபாட்டில் பஞ்சாட்சர மகா மந்திரம் உயிர் நாடியாக உள்ளது. யஜுர் வேதத்தில் நான்காவது காண்டம் ஸ்ரீருத்ரம். அதில் பதினேழாவது பஞ்சாதியில் நமசிவாய மந்திரம் இடம் பெற்றுள்ளது. கஷ்ட நஷ்டங்களைப் போக்கிச் சகல மக்களுக்கும் சுகமளிக்கக் கூடியது ஸ்ரீருத்ர பாராயணம். அந்த மந்திரத்தைச் சொல்லி ஈஸ்வரனை அபிஷேக ஆராதனைகள் செய்வதால் ஈஸ்வரன் பேரானந்தம் கொண்டு சகல வரங்களையும் அளிக்கத் தயாராக இருக்கிறான். 'சமகம்' என்ற ஒரு வேண்டுதல் இருக்கிறது, வேண்டுவதை எல்லாம் கேட்கும் பிரார்த்தனையாக அது இருக்கிறது. தான்ய வகைகள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேன் போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்கியருள வேண்டி வணங்குவதே "சமகம்" பிரார்த்தனையின் சாராம்சம். அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பதாலேயே அந்தப்

பாராயணத்தை முற்றும் துறந்த முனிவர்கள் மேற் கொள்வதில்லை.

ஸ்ரீ ருத்ரம் பாராயணம் செய்யப்பட்டவுடனேயே நன்மை பயப்பதால் சிவ வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. அது எல்லாவிதமான பூஜாபிஷேகங்களிலும் முதலிடம் பெறுகிறது. வீடுகளிலும் கோயில்களிலும் நடைபெறும் பூஜைகளில் ஸ்ரீருத்ரம் கட்டாயம் உண்டு. அதைப் பதினேரு முறை சொன்னுல் ஏகதச ருத்ர பாராயணம் என்று போற்றப்படுகிறது. ஸ்ரீ ருத்ரத்தைச் சொல்லி அர்ச்சனை ஆராதனைகள் செய்வதால் நல்ல பலன்கள் விளையும்.

சிவ பூஜையில் வில்வ இலைக்குச் சிறப்பான இடம் உண்டு. வில்வ மரத்தை உலுக்கிய குரங்கை முசுகுந்த சக்கரவர்த்தியாக ஆக்கியதாக ஈசனின் பெருமையை, கருணையைத் திருவருட்பா விரித்து உரைக்கிறது. பரமேஸ்வரன் கருணையே வடிவாக வேண்டியதைக் கொடுக்கும் கனிந்த கனி போன்ற உள்ளத்தை உடையவனுக இருக்கிருன்.

சிவலிங்கமே சிவ வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது. லிங்கத்தை நிஷ்களம் என்று கூறுகிருர்கள். சகள நிஷ்களம் என்று முகமுடைய லிங்கத்தைக் குறிப்பிடுகிருர்கள். மனித ரூபமாய் உள்ள நடராஜர், தட்சிணு மூர்த்தி ஆகிய மூர்த்தங்களைச் சகளம் என்று சொல்லுகிருர்கள்.

" ஆடும் படிகேள்நல் அம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார் "

(உண்மை விளக்கம்)

லிங்கத்தின் மேற்பகுதி வானம், கீழ்ப் பகுதி பூமி. வானம் ஞானசத்தியின் காரியம். பூமி கிரியா சத்தியின் காரியம். ஆகவே சிவலிங்கம் ஞானக்கிரியா ரூப மென்பதாயிற்று. ஆவிடையின் பொருளாவது ஆ...இருப்பு; இடை—இடம்

அதாவது பீடம் என்பதாகும். ''மானுடராக்கை வடிவு சிவலிங்கம்—மானுடராக்கை வடிவு சிதம்பரம்'' எனக் கூறும் திருமந்திரம். இந்த லிங்கங்களை ஆறுவகையாகப் பிரித்தும் உள்ளார்கள். சைலஜம், ரத்னஜம், லோஹஜம், ம்ருண்மயம், க்ஷணிகம் எனப்படுபவையே அவை. ஜோதி மயமான எம்பெருமான் ஜோதி லிங்கமாக இருக்கிருன். இந்தியாவில் பன்னிரண்டு இடங்களில் ஜோதி லிங்கங்கள் உள்ளன.

வேதம் நான்கினும் மெய்ப்பொருளவது நாதன் நாமம் நமச்சிவாயவே, என்று திருஞான சம்பந்தர் அருளியுள்ளார். சிவ என்ற சொல் சகல பாவங்களையும் கஷ்டங்களையும் போக்கவல்லது. நான்கு வேதங்களுக்கும் மூலமாக உள்ள பரம்பொருளைக் குறிக்கும் பெயராகச் சிவநாமம் இருந்து வருகிறது. ஒளிமயமாக இருக்கும் ஈசனைச் சிவ என்று சொன்ன மாத்திரத்தில் தீமைகள் அகலும் என்பதைத் திரு மூலர் வாக்கு நிதர்சனப்படுத்துகிறது. செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாததாலும் செய்யக்கூடாத காரியங் களைச் செய்வதாலும் உண்டாகும் பாவங்களைச் சிவ நாம உச்சரிப்பு நொடிப் பொழுதில் துடைத்து விடுகிறது. சைவத்தில் பன்னிரண்டு திருமுறைகள் மிகவும் முக்கிய மானவை.

சைவ சித்தாந்த சாஸ்திரங்களை அருணந்தி சிவம், உமாபதி சிவம், மறைஞான சம்பந்தர் போன்ற சிவநேயச் செல்வர்கள் அருளிச் செய்திருக்கின்றுர்கள். சைவ சித்தாந் தம் இறை, உயிர், தளை என்ற இலக்கணத்தைப் போதிக் கிறது. சிவ பக்தர்கள் போற்றி வணங்கும் பஞ்ச பூதத் தலங்கள் எல்லாம் தென்னுட்டிலேயே உள்ளன. ஏகாம்பர நாதர் பிருத்வி லிங்கமாகக் காட்சி தரும் காஞ்சிபுரம் பஞ்ச பூத ஸ்தலங்களுள் ஒன்ருகும். திருவானைக்கா. (அப்பு), திருவண்ணுமலை (தேயு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாயம்) ஆகியவை மற்ற பஞ்சபூத ஸ்தலங்களாகும்.

சிவபெருமான் கருணுமூர்த்தியாக யோக நிஷ்டையில் உள்ள கோலத்தில் இருக்கும்போது 'யமி' என்று குறிப் பிடப்படுகிருன். எல்லாவற்றையும் அடக்கி நிக்ரகம்

செய்தவன் என்று அதற்குப் பொருள். தவ சக்தியினுல் உள்ளார்ந்த நோக்கோடு யோக சாதனை புரியும் பரமேஸ்வரன் ஆனந்தப் பெருங்களிப்போடு நடனக் கோலத்தில் தோன்றுவதே சிதம்பர நடராஜ தத்துவ சாராம்சம்.

இரவும் பகலும் சந்திக்கும் காலத்தைப் பிரதோஷக் காலம் அல்லது சந்தியா காலம் என்பார்கள். மாசி மாதம் வரும் பிரதோஷம் மகா சிவராத்திரி ஆகிறது. சகலத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் சமயம், யோகிகளுக்கெல்லாம் தலைவனுக இருக்கிருன். இடது பாதம் தூக்கி நின்ருடும் பெருமானின் அமைப்பில் சிவயோக தத்துவத்தைக் காணலாம். இடது காலைத் தூக்கிச் சூரிய நாடியில் மூச்சு சஞ்சரித்தால் பிரம்ம நிலையை அடையலாம் என்பது யோகிகளின் கணிப்பு.

சிவாலயங்களில் முன்னே இருப்பது நந்தி. பரமேஸ்வரனையும், பரமேஸ்வரியையும் தரிசிக்க நந்திதேவனிடம் அனுமதி கேட்க வேண்டும். பரம் பொருளை வணங்கிக் கடைசியில் சண்டிகேஸ்வரப் பெருமானைக் கையொலி எழுப்பி வணங்குகிருேம். ''ஈஸ்வர தரிசனத்தின் பலனையும் பயனையும் எனக்கு அளி'' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். சண்டிகேஸ்வரர் போல் யோக தியான நிலையில் தன்னை மறந்து இருக்க வேண்டுமென்பதே சிவ வழிபாட்டின் முக்கிய அம்சமாகும்.

சிவ ஆலயங்களில் பைரவருக்குத் தனிச்சந்நிதி உண்டு. காசியில் கால பைரவருக்குத் தனிக் கோயில் இருக்கிறது. அர்த்தஜாம பூஜை முடிந்ததும் பைரவருக்குப் பூஜை நடக்கும். அதன் பிறகு கோயில்களைப் பூட்டிச் சாவியைப் பைரவர் அருகே வைப்பது வழக்கம். உடலை க்ஷேத்திரம் என்றும் சொல்லுவார்கள். எட்டு யோக நிலைகள் உடலைக் காவல் காக்கின்றன என்பது உள்ளார்ந்த தத்துவம்.

மட்டை, நார், ஓடு ஆகியவற்றை நீக்கினுல் வெண்மையான தேங்காய் இருக்கிறது. முழுத்தேங்காய் சுத்தமான இடத்தில் இருந்தாலும், அசுத்தமான இடத்தில் இருந்தாலும் எப்படி இருந்தாலும் உள்ளே இருக்கும் தேங்காய்

வெண்மையாகவே இருக்கிறது. ஜீவன் எந்த உடலில் இருந்தாலும் சுத்தமானது என்பதையே தேங்காய் உணர்த்துகிறது. மட்டை, நார், ஓடு நீக்கித் தேங்காயை ஈசனுக்கு அளிப்பது போல பந்தபாசம் நீக்கி ஈசன் வயப் படுதல் ஆத்ம ஒளி பிறக்கச் செய்யும் என்பதைத் தேங்காய் உடைக்கும் தத்துவம் உணர்த்துகிறது.

கண்ணுக்கு நிதர்சனமாகத் தெரியும் கற்பூரம் எரிந்த பின்னால் எதுவுமே மிஞ்சுவதில்லை. அதே போன்றுதான் இந்த ஆத்மா உருவமாகத் தெரிந்தாலும் அருவமே என்பதைக் கற்பூரம் உணர்த்துகிறது. உருவ அருவமாய் இருக்கின்ற ஈசனுக்கு அதே தன்மையுடைய கற்பூர தீபம் ஏற்றுவது பொருத்தமல்லவா?

அறம் காத்தல், அன்பு பேணுதல், அக்கிரமம் அழித்தல் ஆகிய தத்துவங்களைப் போதிக்கும் சிவம் எனும் சைவம் மானுடம் உய்ய வழி காட்டுகிறது.

★

சிதம்பர முழம்

அகண்ட பிராகாரங்களும், நீண்ட மதிற்சுவர்களும், வானளாவும் கோபுரங்களும், எழில் மிக்க விமானங்களும் கலைத்திறன் மிக்க பிரதிமைகளும் நிரம்பிய மாபெரும் சிதம்பரம் ஆலயம், சிதம்பர முழம் என்ற அளவு கோல் கொண்டு நமது பண்டைச் சிற்பிகளால் கட்டப்பட்டது.

சிதம்பர முழம் என்பது 25 விரல் நீளமுள்ள பிரஜாபத்ய முழம். இது ஆங்கில அங்குலம் $34\frac{3}{8}$க்குச் சமதையான அளவினதாகும்.

சிதம்பரத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலும் இந்த அளவுகோலே இன்றளாவும் பின்பற்றப் படுகிறது.

வை. கணபதி ஸ்தபதி

$34\frac{3}{8}$ அங்குலம் = 873·10 மில்லி மிட்டர்
அல்லது, ·87310 மீட்டர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம் நகரில் அமைந்துள்ள பிற கோயில்கள்

புலவர் வா. ச. சுந்தரேசம் பிள்ளை

1. சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலில் உள்ள முக்குறுணி விநாயகர்,

கற்பக விநாயகர், மாம்பழ விநாயகர் முதலிய பல விநாயகர் நீங்கலாக சிதம்பர நகரமெங்கும் உள்ள நர்த்தன விநாயகர், நரமுக விநாயகர், சிறைமீட்ட விநாயகர், திருப்பணி விநாயகர், இராஜவிநாயகர், தாகம் தீர்த்த விநாயகர் முதலிய விநாயகர் கோயில்கள் *108*

2. அஷ்டலிங்கக் கோயில்கள் ... **8**

(தேர்வீதி எட்டுத்திக்கிலும் உள்ளவை. சில கண்ணுக்குத் தென்படுகின்றன. சில சிலர் தோட்டத்தில் மறைந்துள்ளன. ஆண்டுக்கு ஒரு முறை பூசைக்கு ஏற்பாடாகி வருகிறது)

3. இளமையாக்கினர் கோயில் ... **1**

(வேறு பெயர் திருப்புலீச்சரக் கோயில். வியாக்கிர பாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்டது. திருநீலகண்டர் இளமை பெற்ற கோயில். தைத் திருவிழாவும், தெப்ப விழாவும், நவராத்திரி விழாவும் மிகச் சிறப்பு.)

4. அனந்தேஸ்வரர் கோயில் ... **1**

(அனந்தன், ஆதிசேடன் என வழங்கும். பதஞ்சலி வழிபட்டது. தேர்விழா நடந்த காலம் உண்டு. திருப்பணியும் குடமுழுக்கும் மிகச் சிறப்பாக நடந்த அழகிய கோயில்).

5. **திருக்களாஞ் செடியுடையார் என்னும் பிரமபுரீஸ்வரர் கோயில்** ... 1

(இரண்ய வன்மனை அழைக்க வந்த வசிட்ட முனிவர் தாபித்து வழிபட்டது. திருப்பணி நடை பெறுகிறது)

6. **தில்லைக் காளி எனப்படும் தில்லையம்மன் கோயில்** ... 1

(மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். இதற்கு உத்திரகாளியம்மன் கோயில் என்றும் பெயர். தில்லையம்மன் சதுர் முகச்சிறப்பு காணத்தக்கது. தில்லைக்காளிக்கு ஆண்டுக்கொரு முறை எண்ணெய்க் காப்பு மட்டும் உண்டு. வெள்ளாடை, குங்குமம், எலுமிச்சம்பழ மாலை சாத்துவர். இவ்வலங்காரம் காணத்தக்கது. வெற்றிக்கு ஏற்ற தெய்வம். தில்லை வாழ் அந்தணர் பூசை.)

7. **தெட்சிண காளியம்மன் கோயில்** ... 1

(தாருகன் என்ற அசுர குலத்தில் உதித்த ஸ்போடனை தில்லையின் தென்பகுதியில் சங்காரம் செய்த அம்மை.)

8. **நந்தனர் தனிக்கோயில்** ... 1

(திருப்பாட்டன் தெருவில் இடிந்தும் சிதைந்தும் விராட்டி தட்ட, கீற்று அடுக்க உதவும் இடமாக உள்ளது.)

9. **வியாக்கிரபாதர் கோயில்** ... 1

(புலீஸ்வரர் மடுவில் உள்ளது. இறுதிச் சடங்குகள் நடைபெறும் இடமாக விளங்குகிறது. கோயில் இடிந்துள்ளது.)

10. **காளியம்மன் கோயில்** ... 1

மாலை கட்டித்தெரு மேல்புறக் கோடியில் உள்ளது. சூலம், கபாலம் ஆகியவைகளுடன் வீராசனத்தில் இந்த அம்மை விளங்குகிருள்.

11. **கீழத்தெரு மகா மாரியம்மன் கோயில்** ... 1

(அக்கினிமாரி, சிவமாரி என்றும் பெயர். பதஞ்சலி வியாக்கிர பாதருடன் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷி-

களும் நடராஜ தெரிசனத்திற்கு வர அவர்களில் சிலருக்கு ஸ்போடகம் என்ற வெப்பு நோய் துன்புறுத்த அம்பிகை இவர்களுக்குச் சீதளாஷ்டகத்தை உபதேசித்து நோய் நீக்கினாள் என்பது இம்மாரியம்மனின் வரலாறு. இங்கு அக்கினி லிங்கேஸ்வரர் பூசையும் ஆடிவெள்ளி செடல், அக்கினி வழிபாடும் சிறப்பு.)

12. ஓமக்குள நந்தனார் கோயில் ... 1

(நந்தனார் மரபினரால் நிறுவப்பெற்றது நிலவருவாய் இருந்தும் ஏதோ பூசை நடைபெறுகிறது.)

13. சேக்கிழார் கோயில் ... 2

(1) கீழரத வீதியில் சேக்கிழார் தங்கிப் பெரிய புராணம் எழுதிய இடம். இங்கு இலிங்கமும், சேக்கிழார் உருவமும் உண்டு. இன்று வீடாக உள்ளது. சேக்கிழார் மரபினர் பொறுப்பில் கவனிப்பார் அற்று பூசையின்றி இருக்கிறது.
(2) ஞானப்பிரகாசம் திருக்குள வடகரையில் யாழ்ப்பாணத்தாரால் நித்திய பூசையுடன் சிறப்பாகத் திகழ்கிறது.

14. உமாபதி சிவம் கோயில் ... 1

(சைவசித்தாந்த சாத்திர நூல்கள் எட்டும், கோயிற் புராணமும், சேக்கிழார் புராணமும், மற்றும் பல நூல்களும் எழுதியவர். நடராசர் ஆணையின்படி பெற்றான் சாம்பானுக்கு முத்தியளித்தவர். திருமுதுகுன்ற துறையூர் பெரிய மடத்தாரால் பராமரிக்கப்படுகிறது. புகை வண்டி நிலயத்திற்குக் கிழக்கே உள்ளது.)

15 மறை ஞானசம்பந்தர் கோயில் ... 1

(இவர் உமாபதி சிவத்தின் ஞானோபதேச குரு. இக்கோயில் திருக்களாஞ் செடியுடையார் கோயிலின் அண்மையில் உள்ளது. திருவாவடுதுறை மடத்தார் பார்வை மட்டும் உள்ளது.)

16. **மெய்கண்ட தேவர் கோயில்** ... 1

(இதுவும் திருவாவடுதுறை மடத்தார் பார்வை—மாலைக் கட்டித் தெருவில் உள்ளது.)

17. **சப்தமாதாக் கோயில்** ... 1

(நாகச்சேரி குளவடகரையில் கற்றளியாக திருப்பணி முற்றுப் பெறுமல், கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. பதஞ்சலிக்காக வந்தவர்கள்.)

18. **பிரமராயர் கோயில்** ... 1

(தென்னவன் பிரமராயரான மாணிக்கவாசகர் தவம் புரிந்த இடம். திருப்பெருந்துறையைப் போல் இங்கும் உருவம் கிடையாது. தவமிருந்த பீடத்திற்குத்தான் இன்றும் பூசை. வழிபாடு, திங்கட்கிழமைகளில் குறிப்பிடத்தக்கது. திருட்டுப் பொருளைக் கண்டறிந்து தருதல் சிறப்பு. இன்று எப்படியோ உருவங்கள் புகுந்து விட்டன

19. **அங்காளம்மன் கோயில்** ... 1

(மாசி அமாவாசை மயானக் கொள்ளை விழாச் சிறப்பு. மூர்த்தி மிக அழகுடையது.)

20. **காமாட்சியம்மன் கோயில்** ... 1

(விஸ்வ கர்மாக்களால் விமரிசையான பூசை)

21. **செல்லியம்மன் கோயில்** ... 1

(சித்திரை விழாச் சிறப்பு)

22. **எல்லையம்மன் கோயில்** ... 1

(ஆடிவிழா செடல், காவடி விழாக்கள் சிறப்பு.)

23. **திரௌபதியம்மன் கோயில்** ... 1

(மிகப் பெரியது. 18 நாள் விழா நடந்த இடம். கோயில் இடிந்து வருகிறது. கவனிப்பாரில்லை.)

24. **காயத்ரியம்மன் கோயில்** ... 1

(தமிழ் நாட்டிலேயே இது ஒன்றுதான் என்பர். ஆடிச்செடல் விழாச் சிறப்பு. நீண்ட நாள் வழக்

கில் உள்ள கோயில், ஒட்டுவில்லைக் கோயில். மூர்த்தி மிக அழகுடையது.)

25. **வெள்ளந்தாங்கியம்மன் கோயில்** ... 1

(பெரு வெள்ளந் தவிர்க்கும் அற்புத சக்தியம்மை. வழிப்போவார் உதவியால் கற்றளியாக மாறி வருகிறது. உருவம் பெரியது, அழகியது.)

26. **விளங்கியம்மன் கோயில்** ... 1

(விளங்கி விநாயகர் கோயில் என்றும் சிலர் கூறுவர். சித்திரைக் கோயில் விழாவும் கலை விழாவும் சிறப்பு.)

27. **வீரபத்திரசாமி கோயில்** ... 1

(மிகப் பழமை வாய்ந்த சிறந்த கோயில். வீரசைவர்களால் நித்திய பூசை சிறப்பாக உள்ளது. கட்சிக் கூட்டம் நடத்துபவர்களால் ஏழையாகி வருங் கோயில்.)

28. **கமலீசுவரன் கோயில்** ... 1

இக்கோயில் பெயரால் உள்ள தெருவில் சுவாமி, அம்மன், சண்டேசுவார், பரிவார தெய்வங்களும் உள்ளன.

29. **மத்யந்தனேசுவரர் கோயில்** 1

வியாக்கிரபாதரின் தந்தை மத்யந்தன முனிவர் வழிபட்ட தலம்.

30. **அகத்தியர் கோயில்** ... 1

(கயிலையம்மன் ஆணைப்படி பொதிகைமலைக்கு வருகையில் தில்லை யம்பலவாணரை வந்து தரிசித்ததால் அவருக்குத் தனிக்கோயில் அழகாக எடுக்கப் பெற்றுளது. பூசை உண்டு மக்கள் செல்வது அரிது.)

31. **இராமர் கோயில்** ... 1

(மேலரத வீதியில் சிறை மீட்ட விநாயகர் கோயிலின் பக்கத்தே உள்ளது. சைவ—வைணவர்களால்

பெரிதும் போற்றப்படும் கோயில். திருமுட்டம் பூவராக மூர்த்தி மூன்று தினம் மாசி மகத்தின் போது எழுந்தருளி அருள் வழங்கும் சிறப்பு மிக்கது.)

32. கிழக்கில் **நடராசபுரம் கோயில்** மேற்கில் **அனந்தேஸ்வரபுரம் கோயில்** தெற்கில் **தண்டேஸ்வரர் கோயில்** வடக்கே **பரமேஸ்புரம் கோயில்** ஆக **நான்கு** சிவன் கோயில்கள் இருந்ததாகக் கூறுவர். ஊர்ப் பெயர் நகரைச் சுற்றிலும் இன்றும் வழங்கப் பெறுகிறது. ... 4

33. **மாணிக்கவாசகர் கோயில்** ... 1

(தில்லைமாகாளி கோயிலுக்குத் தென்பால் குகை நமச்சிவாயர் தங்கித் திருப்பணி செய்த கோயில். ஜீரணித்து இன்று பசுக்குலம் தங்கும் இடமாக உள்ளது.)

வரிசை எண் 33க்குக் கோயில்கள் ... 151

குறிப்பு :

(1) மேலே கண்ட கோயில்களின் குறிப்புக்கள் சில நூல்களைக் கண்டும், நேரில் கண்டும், சிலரைக் கேட்டும் எழுதியவை. பிழையிருப்பின் தெரிவிக்க. மேலும் இங்கு 1008 சிவலிங்கங்கள் இருந்ததற்குச் சான்றுகள் கூறுகின்றனர். வாரம் 7 நாள், மாதம் 12, நட்சத்திரம் 27, தருமவகை 32 இவைகளுக்கெல்லாம் சேர்த்து 78 திரு மடங்களும் மடாதிபதிகளும் இருந்ததற்கு இன்றும் பல நேர்ச் சான்றுகள் உண்டு. கோயில்களையும், மடங்களையும் அவற்றுக் குரிய சொத்துக்களையும் கண்டறிந்து சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் நன்மை செய்யவேண்டிய கடமை அரசுக்கும் கடவுள் பக்தருக்கும் உண்டு.

(2) நான்கு கோபுர வழிகளிலும் அப்பர் சம்பந்தர் முதலிய நால்வரும் வந்துள்ளனர். இதன் நினைவாக சோழ பாண்டியர் காலத்தில் கோபுரத்தின் அருகிலும் வீதியிலும் நால்வருக்கும் நால்வர் கோயில்கள் தோன்றியுள்ளன. சம்பந்தருக்குப் பொற் கோயிலும் மற்றையோருக்குக்

கற்கோயிலும் எழுப்பிய செய்தி கல்வெட்டால் அறியப்படு கிறது:

திருச்சிற்றம்பலம்

பதிப்பாசிரியர் குறிப்பு :*108* விநாயகர் கோயில்கள் விவரம் இவ் வெளியீட்டில் பிறிதோர் இடத்தில் கொடுக்கப் பெறும். ★

அஷ்ட நாகபந்தம்

மூலட்டானர் கோயிலின் மேற்குப் பிராகாரத்தின் மேல் தளத்தில் அஷ்ட நாகபந்தம் ஒன்று எழுதப் பெற்றிருக்கின்றது. அதில் பின்வரும் வெண்பா அடைக்கப் பெற்றுள்ளது.

''தில்லைத் திருமூலத் தேவர் அணியரவே
கல்வளைத்தே நீறுபடக் காத்தானையாய்—செல்வர்பணி
பூண்டு புகழ் கொண்டீர் பூனைப்பரனேனை
தீண்டு விடமேரு திரு''

கோயிலின் நிர்வாகம்

வி. எஸ். வைத்தியநாத தீட்சிதர்

டிரஸ்டி

ஸ்ரீ நடராஜர் கோயில், சிதம்பரம்

சிற்றம்பலத்தில் நடம் புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமானே ஆக்கவும் காக்கவும், அழிக்கவும் வல்ல இறைவன். உலகம் என்ற உடலுக்கு இருதயமாகும் சிதம்பரத்தின் பெருமையை விளக்கவே ஆயிரம் நா படைத்த ஆதிசேஷன் அவதாரமான பதஞ்சலிமுனிவரும் புலிக் கால் புலிக் கை வியாக்கிரபாத முனிவரும் செய்த பிரார்த்தனையினால் ஸ்ரீ நடராஜர் கயிலாயத்தில் இருந்து பூலோக கயிலாயமான இச் சிதம்பரம்வரும்பொழுது தன்னுடன் 3000 முனிபுங்கவர்களை யும் அழைத்துக் கொண்டு வந்ததாக ஐதிகம். அந்தப் பரம் பரையினரே தற்போதுள்ள தீட்சிதர்கள் என்ற தில்லைவாழ் அந்தணர் என்று போற்றக் கூடிய இச்சமூகத்தினர்கள். இவர்களை முதலில் வைத்தே பாடும்படி சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூரில் தியாகேசப் பெருமானே அடி எடுத்துக் கொடுத்ததாக (அசரீரி வாக்கு) திருத்தொண்டத் தொகையால் அறியப்படுகிறது.

இந்தக் கோயிலின் நிர்வாகமே மிகவும் புராதனமான தும் பரிபூர்ண ஜனநாயக, சோஷலிஸம் முதலானவை போன்றவை கலந்ததாகப் பரிணமிக்கிறது. இங்கு தாத்தா, மகன், பேரன் மூவருக்கும் சம அந்தஸ்தும், பொதுக் கூட்டத்தில் வாக்கு அளிக்கும் உரிமையும் பெற்றவர்கள். கோயில் காலங்கள் நடைபெறுவதிலும் நிர்வாகத்திலும் எந்த விதமான சலுகைகளையும் யாரும் பெற முடியாது. இந்தக் கோயிலுக்கு ஏராளமான மானியங்கள் நிலமாகவும் வீடாகவும் முன்னர் அரசர்களாலும், பின்னர் தனி நபர் களாலும் விடப்பட்டிருந்தாலும் கோயில் டிரஸ்டிகளான தில்லைவாழ் அந்தணர்கள் பொறுப்பில் யாதொரு சொத்தும்

இல்லை. அப்படி அவர்களே கொடுக்க வந்தாலும், அதைப் பெற்றுக் கொள்ளாமல், அவர்கள் மூலமே அதை நடத்த ஏற்பாடுகள் செய்துவிடுவார்கள். அதனுல்தான் இன்று வரை பழமைக்குக் கூடுமான வரையில் குறைவில்லாமல் கோயில் உபயங்கள் நடைபெற்று வருகின்றன. தர்ம சொத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் மனம் ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் ஒருதரமாவது தூய உண்மை நிலை பெற்று, அதன் காரணமாய் தங்கள் முன்னேர்களின் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் நடக்கிருர்கள். ஒருகால் மனத் தூய்மை படாமல் தானே தன் மனம்போல் செய்பவர் களின் அடுத்த தலைமுறையினரின் எண்ணத்திலாவது மன மாற்றம் வரும் என்ற நம்பிக்கை ஸ்ரீ நடராஜர் கோயில் அறங்காவலர்களான தீட்சிதர் பெருமக்களுக்கு உண்டு.

அவர்கள் தூய எண்ணம் போல், அரசாங்கம் சில ஆண்டுகளுக்கு முன் தீட்சிதர்கள் பெரும் சொத்துகளை வைத்துக் கொண்டிருக்கக் கூடும் என்ற சிலரின் எண்ணத்தை நம்பியோ எப்படியோ தனி தாசில்தார் ஒருவரை நியமித்தார்கள். அது இரண்டு ஆண்டுகளுக்கு முன் செயல் முறைக்கு வந்து, சுமார் 1000 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களைக் கண்டு பிடித்தும், பல நபர்களிட மிருந்து குத்தகைச் சீட்டு எழுதி வாங்கியும், எந்த எந்தக் கட்டளை யார்யார் மூலம் நடைபெற வேண்டும் என்பதை ஆதாரங்களில் கண்டபடி நடைபெறவும், சென்ற பசலி வரை சுமார் 40 ஆயிரம் ரூபாய் வரை வசூல் செய்து பேங்கில் டிபாஸிட் செய்தும், அவைகளில் இருந்து கோயிலின் மின்சாரக் கட்டணத்தில் ஓர் பகுதி ஓராண்டுக் காலமாகக் கட்டிக் கொண்டும் வரப்படுகிறது. மேலும், சிறிய பெரிய அநேக டிரஸ்டு சொத்துக்களின் பேரில் நல்ல நிலையில் பழைய தர்மங்கள் நடைபெற விவகார தசையிலும் விசேஷ முயற்சிகள் நடைபெற்றுவரச் செய்கிருர்கள்.

இதுபோல் இல்லாமல் முன்பே சொத்துக்கள் கோயில் அறங்காவலர்களான தீட்சிதர்கள் வசமே இருந்து வந்தால், இந்தக் கோயிலும் அந்தச் சொத்து நிலங்களும் நிலச்சீர் திருத்தங்கள் என்ற பெயரால் புது எஜமானர்களைத் தோற்றுவித்து முதாதையர்கள் எண்ணமோ, ஆரம்ப கால

அரசின் பாது காவலோ இல்லாமல் கோயில் உபயங்கள் நடைபெற பெரும் கஷ்டநஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். கூத்தரசன் அருளாலே, தீட்சிதர்களின் மூதாதையர்கள் தீர்க்க தரிசனத்துடன் கூடிய தெய்வ நம்பிக்கைதான் சொத்துக்களை மட்டும் விரும்பாமல் கோயில் நிர்வாகத்திற்கு இந்தியாவின் குடியரசுச் சட்டம் போல் ஸ்ரீ நடராஜர் கோயில் நிர்வாகத்திற்கும் தில்லைவாழ் அந்தணர்களுக்கும் பாது காவலாக சபாநாயகர் கோயில் சட்டம் என்று 1850-ல் சட்டமும் பிறகு 1900 வருஷத்தில் சில விசேஷ திருத்தங்களும் செய்து சுமார் 700 செக்ஷன் உள்ளதான சட்ட புத்தகம் தயார் செய்து அதன்படியே இன்றுவரை (தேவையான சில திருத்தங்களுடன்) நடைபெற்று வரவும் பெருமான் அனுக்கிரகம் ஏற்பட்டிருக்கிறது. ★

பதினோராம் திருமுறைப் பாடல்கள்

காரைக்கால் அம்மையார் அருளிய
அற்புதத் திருவந்தாதி

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்துஆடும் ஆற்ரு தரங்கு (செய்யுள்—77)

அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாரோ—கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க அனல்ஏந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு (செய்யுள்—98)

நடக்கிற் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும்—அடுக்கல்
பொரும்ஏரோ ஆன்ஏரோ பொன்னொப்பாய் நின்ஏ (று)
உரும்ஏரோ ஒன்ரு உரை. (செய்யுள்—100)


அபிடேகப் பலன்கள்

(தொகுப்பு : இரா, செ.)

சிவபெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் நிகழ்த்தப் பெறும் அபிடேகங்களால் வரும் இம்மை-மறுமைப் பயன்கள் மிகப் பலவாகும். முன்னோர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டு தெளிந்த அபிடேகப் பலன்களைக் கீழே காணலாம்.

1. பால் — நீண்ட ஆயுள் அமையும்.
2. தயிர் — நன்மக்கட்பேறு வாய்க்கும்.
3. நெய் — வீடுபேறு நல்கும்.
4. தேன் — குரல்இனிமைஉண்டாக்கும்.
5. பஞ்சாமிர்தம் — உடல் வலிமை தரும்.
6. இளநீர் — போகம் வழங்கும்.
7. எலுமிச்சம்பழம் — பகையை அழிக்கும்.
8. கரும்பின் சாறு — நோய் நீக்கும்.
9. திருமஞ்சனப் பொடி — கடன், நோய் தீர்க்கும்.
10. சந்தனத் தைலம் — சுகம் தரும்.
11. திருநீறு — போகம், மோட்சம் நல்கும்.
12. பன்னீர் கலந்த சந்தனக் குழம்பு — திருமகள் கடாட்சம் உண்டாகும்.
13. சொர்ணாபிஷேகம் — வியாபாரலாபம் தரும்.
14. வலம்புரிச்சங்கம் கலசாபிடேகம் — தீவினை நீங்கி நல்வினை நல்கும். நினைத்தவை நடக்கும்.


நன்றி : **திருப்பூர் குன்றுதோருடல் கூட்டு வழிபாட்டுக்குழு.**




பொன்வேய்ந்து பொலிவேந்தும் சிற்சபை

தோற்கருவி தனைத்தாங்கி ஏந்தி நின்றே
தும்துமிநல் தோம்துமி என்றே முழங்கும்
போற்றுபுகழ்க் காட்சியையும் சிற்பந் தன்னில்
பொலிவுறவே கண்டிடுவீர் ! இசையும் கேட்பீர் !

1



2



3



4







அருள்தரும் சிவகாமி அம்மன்

சிதம்பரம்

இன்று சிதம்பரம் என வழங்கும் சிற்றம்பலம் கி. மு. ஆறும் நூற்றுண்டுக்கு முன்னரே புகழ்பெற்று இன்றுவரை ஒளியோடு விளங்கும் கோயிலையுடையது.

கடற்கரையிலிருந்து 10 கி. மீ. தொலைவில் இந்நகர் இருக்கிறது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 5 மீட்டர் ஆகும். **1873** முதல் இது ஒரு வட்டத்தின் தலை நகராக இருந்து வருகிறது. சிதம்பரம், கடலூர் ஆகிய இரு வட்டங்களும் அடங்கிய ஒரு கோட்ட ஆட்சியின் தலை நகரமும் இதுவே. சிதம்பரம் நகராண்மைக் கழகம் 1886-இல் ஏற்பட்டது **1979**—இல் மக்கள் தொகை ஏறத்தாழ **60, 00**.

ஊர்ப்பெயர் : இந்நகர் தில்லை, சிற்றம்பலம் முதலிய பல பெயர்களால் வழங்கி வந்திருக்கிறது. சிதம்பரம் என்பது சிற்றம்பலம் என்பதன் மரூஉ என்பர். சிதம்பரம் என்பது கோயிலையும் தில்லை என்பது ஊரையும் குறிக்கும் சொற்களாக உள்ளன. இத்தலத்துக்கு வழங்கும் பெரும்பற்றப் புலியூர் என்னும் பெயர் 'இறைவனிடம் பெரும்பற்றை உண்டாக்கவல்ல தலம்' என்று பொருள்படும்.

ஊர் தில்லை எனவும், ஆலயம் கோயில் எனவும் இறைவன் அருவமாக இருப்பது சிதம்பர ரகசியம் எனவும் இறைவன் அருவுருவத் திருமேனியோடு சிவலிங்க மூர்த்தியாய் எழுந்தருளியிருக்குமிடம் திருமூலட்டானம் எனவும், அந்த இறைவன் உருவத் திருமேனி கொண்டு உமையம்மை காண ஐந்தொழில் நடனம் புரிந்தருளுமிடம் சித்சபை அல்லது திருச்சிற்றம்பலம் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன.

சோமலெ

இந்த ஆலயம் கோயில் எனப் பெறுவதால், தமிழ் நாட்டில் ஏற்பட்ட முதல் கோயிலாக இது இருத்தல் கூடும். இத்தலம் மிக்க தொன்மையானது என்பதைச் சிற்றம்பலமும் பொன்னம்பலமும் மரத்தாற் கட்டப் பெற்றுள்ளதால் அறியலாம். பல்லவர் கண்ட குகைக் கோயிலுக்கும் கற்கோயிலுக்கும் முற்பட்டது என்பதையும் இதிலிருந்து உணரலாம்.

சைவ சமயத்தார் இவ்வூர்க்குத் தில்லை, புலியூர், பெரும் பற்றப் புலியூர், சிற்றம்பலம் என்ற பெயர்களை வழங்கி யுள்ளனர். தில்லை மாநகர் என்று அப்பர் பாடியிருக்கிருர். பெயர் குறிப்பிடாது 'கோயில்' என்று மட்டுமே சொன்னுல், அச்சொல் சைவர்களுக்குச் சிதம்பரம் கோயிலையே நினை வூட்டும். சிவத்தலங்கள் எல்லாவற்றுள்ளும் சிதம்பரமே சிறந்தது என்பது இதிலிருந்து தெளிவாகும். பௌத்த சமணசமயங்கள் வளராது தடுக்கவும், சைவம் மறுமலர்ச்சி அடையவும் அடிகோலப்பட்ட இடம் சிதம்பரமேயாகும்.

தேவாரத் திருமுறைகள் கண்டது சிதம்பரம். திரு வாசகம் தந்த மாணிக்கவாசகரை வரவேற்றது சிதம்பரம். திருவிசைப்பா பாடிய சேந்தனுர், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், கண்டராதித்தர் முதலியவர்களை ஏற்றுக் கொண்டது சிதம்பரம். சைவ சித்தாந்த சாத்திரங்களில் பெரும் பகுதியை வரைந்த உமாபதி சிவத்தைத் தந்தது சிதம்பரம்.

இக்கோயிலில் தான் சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர் ஆகிய மூவர் கையடையாளங்களுடன் தேவாரத் திருமுறை கள் திருக்காப்பிடப் பெற்றன. நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு இராஜராஜ சோழன் அத் திருமுறைகளை வெளிப் படுத்திப் பல கோயில்களிலும் அவற்றை வழிபாட்டுக் காலங்களில் ஓதும்படிச் செய்தான். இதனை நினைப்பிக்கும் முறையிலேயே, எத்தலத்துத் தேவாரம் ஓதத் தொடங்கும் போதும் முடிக்கும் போதும், 'திருச்சிற்றம்பலம்' எனச் சொல்லுவது மரபாக இருக்கிறது.

வைணவ நூல்கள் இவ்வூரைத் தெற்றி அம்பலம் என்றும் திருச்சித்திரகூடம் என்றும் குறிப்பிடுகின்றன.

கோயிற் சிறப்பு : நடராசர் கோயிலால், சிதம்பரம் பல் தலைமுறைகளாகப் பெயரும் புகழும் பெற்றிருக்கிறது. பல நூற்றுண்டுகளாக இந்துக்களின் புண்ணியத்தலமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. சோழ மன்னர்கள் வழிபட்டதாலும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர் நால்வராலும் பாடப் பெற்றதாலும்' திருமூலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், நந்தன், இராமலிங்க அடிகளார் ஆகியோர் தொடர்பாலும் இக்கோயிலுக்குப் பெருமை உண்டு. 'அனைத்துலகும் தொழும் தில்லை' என்று மாணிக்கவாசகர் இக்கோயிலைச் சிறப்பித்துள்ளதும் நடராச வடிவம் அனைத்துலக மக்களையும் கவர்ந்திருப்பதும் சிந்திக்கத்தக்கன.

இந்தக் கோயிலில் ஆகாசலிங்கம் இருப்பதாக ஐதிகம். மண்ணுக்குக் காஞ்சிபுரமும், நீருக்குத் திரு ஆனைக்காவும், ஒளிக்குத் திருவண்ணாமலையும், வாயுவுக்குத் திருக்காளத்தியும் போல, ஆகாயத்திற்கு ஏற்பட்ட சிவலிங்கம் சிதம்பரத்திலிருக்கிறது என்பது சைவர்களின் நம்பிக்கை.

கோயிலின் மற்றொரு சிறப்பு இங்குச் சைவர், வைணவர் ஆகிய இரு சமயத்தினரும் ஒருங்கே வழிபடக் கூடியவாறு நடராசர் கோயிலும் கோவிந்தராசர் கோயிலும் அடுத்தடுத்து இருப்பதாகும். மாறுபட்ட சமயங்களுக்கு உரிய வழிபாட்டு இடங்கள் இவ்வாறு அமைவது அரிது. இங்குச் சிவபெருமானின் நடனக்கோலமும் திருமாலாகிய கோவிந்தராசப் பெருமாளின் கிடந்த கோலமும் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. ' அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு'' என்ற தத்துவத்தை இக்கோயில் தெரிவிக்கிறது.

குலசேகர ஆழ்வாரும் திருமங்கை ஆழ்வாரும் பாசுரம் அருளிய பதியாகவும் சிதம்பரம் சிறந்து விளங்குகிறது.

பூசைகள்

நடராசப் பெருமானுக்கு 1. (பால் நைவேத்தியம்) திருவனந்தல், 2. காலசந்தி, 3. இரண்டாங் காலம், 4. உச்சிக் காலம், 5. திருவந்திக்காப்பு, 6. (சாயரட்சை)

7. அர்த்தயாமம் என்று ஏழு காலப் பூசைகள் நடைபெறு கின்றன. ஏழாவது காலம், அர்த்தயாம வழிபாட்டோடு முடிவு பெறும்.

நடனச் சிறப்பு : நடனக் கலைக்கும் இக்கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நடனம் ஆடும் அரசராய் நடனத்துக்கெல்லாம் முதல்வராய் விளங்குபவர் நடராசர். அவர் பெயரைக் கேட்ட நிலையிலேயே தில்லை நடங் கண்டார், காணுதார் அனைவர் உள்ளங்களிலும் நடனக் கோலத்தின் தோற்றம் தோன்றுகிறது. நடராசரின் வெண்கலச் சிலைகளின் வேலைப்பாடும், கலையும் பொலிவும் பழந்தமிழரின் பெருமைக்குச் சான்ருகவும், அழியாத தத்துவங்களின் அறிகுறியாகவும் அமைந்துள்ளன. இவற்றின் பிரதிமைகளே உலகெங்குமுள்ள காட்சிக் கூடங் களில் உயரிடம் பெற்றுள்ளன. நாட்டிய நூலில் சொல்லப் பெற்ற 108 நடனங்களும், நாட்டியக் கலை பற்றிய செய்தி களும் இக்கோயிலில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைத்த பிற்காலச் சோழர்கள் இந்தோனேசியா வில் பிரம்பாஞன் நகரத்துத் திருமூர்த்திகள் கோயிலிலும் ஜாவாத் தீவிலும் இத்தகைய நாட்டிய முத்திரைகளைப் பொறித்துள்ளனர்.

அமைப்பு : கோயிலின் அமைப்பும் பாராட்டத்தக்கது. இதன் பரப்பளவு 40 ஏக்கர். எனவே, இது தமிழ் நாட்டின் பெரிய கோயில்களுள் ஒன்று. கோயிலைச் சுற்றி நான்கு புறங்களிலும் பலவீதிகள் அமைந்து, நகரம் உருவாகியிருக் கிறது. இச்சிறப்பு, வெள்ளியம்பலமாகிய மதுரைக்கும் பொன்னம்பலமாகிய சிதம்பரத்துக்கும் பொதுவானது. மேனுட்டறிஞர் பலரும் இதைப் போற்றியுள்ளனர்.

சிதம்பரம் வட்டத்தில் மருந்துக்குக்கூடக் கல் இல்லை. வெள்ளாற்றைக் கடந்து 70 கி. மீ. தொலைவிலிருந்து கருங் கல்லைக் கொண்டு வந்து, கோயில் கட்டியுள்ளனர்.

தமிழ் நாட்டிலுள்ள பெரிய கோயில்கள் வெவ்வேறு காலங்களில் கட்டடக்கலை வளர்ந்த நிலையைக் காட்டும் நிறு வனங்களாக விளங்குகின்றன. சிதம்பரம் கோயிலும்

இவ்வாறே சோழ, பல்லவ, பாண்டிய, நாயக்க, விசயநகர மன்னர்களும், சென்ற நூற்றுண்டில் பச்சையப்ப முதலியாரும் இந்த நூற்றுண்டில் நாட்டுக் கோட்டை நகரத்தார்களும் செய்த திருப்பணிகளை உடையது.

அம்பலங்கள் : கேரளத்தில் பெரிய கோயில்கள் யாவும் அம்பலம் என்று குறிப்பிடப்படுகின்றன. அம்பலங்கள் பல இக்கோயிலில் உள்ளன. நடராசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சபை **சிற்றம்பலம்;** அவர் திருமஞ்சனம் ஆடும் இடம் **பொன்னம்பலம்;** ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் கற்சிலையுள்ள இடம் **நடன அம்பலம்;** தீட்சிதர்களின் பொதுக் குழுகூடும் இடம் **பேரம்பலம்;** ஆயிரக்கால் மண்டபம் **ராஜசபை** எனப்படும்; **நிருத்த சபை** என்பது குதிரைகள் பூட்டித் தேர் இழுப்பது போலப் பின்னல் சக்கரங்களுள்ள மண்டபம். இவ்வாறு பல சபைகள் இருப்பதால் தில்லை நடாரசருக்குச் **சபாநாயகர், சபாபதி, அம்பலவாணன்** என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இந்தச் சபைகளின் அமைப்பு, கோயிற் கட்டடக்கலை ஆராய்ச்சியாளரான பெர்குசன் என்பவரால் பாராட்டப் பெற்றிருக்கிறது.

தத்துவங்கள் : பொன்னம்பலத்திலுள்ள பொன் ஓடுகள் 21,600 என்றும், அவை 72,000 ஆணிகளால் அறையப் பட்டுள என்றும் கூறுவர். மனிதன் நாள் தோறும் 21,600 மூச்சுவிடுவதாகவும் மனித உடலில் 72,000 நரம்புகள் இருப்பதாகவும் இவற்றைக் குறிக்கவே ஓடுகளும் ஆணிகளும் அதே எண்ணிக்கையில் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்றும் கூறுவர்.

சிதம்பரத்தின் மற்றுமொரு சிறப்பு சிதம்பர ரகசியமாகும். நடனம் ஆடியபோது, நடராசர் அணிந்திருந்த சடை கொன்றைமாலை சூடியிருந்தது. அந்தச் சடை பொன் வடிவத்தில் செய்து தொங்கவிடப் பெற்றிருந்தது கொன்றைச் சடை திரையிட்டு மூடப்பட்டிருக்கிறது. அதனுடைய பொன்னிறமான ஒளி நடராசரின் உண்மை உருவத்தை உணர்த்துகிறது; இதுவே 'சிதம்பர ரகசியம்' எனப்படும்.

இலக்கியத் தொடர்பு : இலக்கிய வரலாற்றிலும் இக் கோயில் உரிய இடம்பெற்றிருக்கிறது. தேவாரப்பாடல்கள் பலவும், மாணிக்கவாசகர் திருவாசகத்தின் பெரும்பகுதியும் திருக்கோவையாரும் இங்கே இயற்றப் பெற்றன. நெற்றி நிறையத் திருநீறு பூசி வாய் நிறையப் பெரிய புராணம் பாடிச் சேக்கிழார் அதை அரங்கேற்றியது இந்தத் தலத் திலேயே ஆகும். தேவாரச் சுவடிகள் பேணப்பட்டு இக் கோயிலில்தான் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. எனவே இக்காலத்தில் அரசாங்கத்தின் ஆதாரங்கள் சேமித்து வைக்கப்படும் தேசியக் கருவூலம், தேசிய நூலகம் (National Archives, National Library) போன்ற ஓர் அமைப்பாகவும் இக்கோயில் பயன்பட்டது. இராஜராஜ சோழன், நம்பியாண்டர் நம்பியின் துணை கொண்டு திரு முறைகளை ஏழாக வகுத்து வழங்கியது இங்கே நிகழ்ந்த செயலேயாகும்.

இத்தலத்தையொட்டி யெழுந்த கலம்பகம், புராணம், பள்ளு போன்ற இலக்கியங்களின் எண்ணிக்கை எண்ணி லடங்கா.

தத்துவத் துறையிலும் சிதம்பரம் சீரிய புகழ் பெற் றிருக்கிறது. மெய்கண்டாரின் சித்தாந்தமும் அத்வைதக் கொள்கைகளும் இங்கிருந்துதான் பரவின. உலக நாடு களெல்லாம் போற்றிய தமிழரின் கலைக்கும் சமயத்துக்கும் பெருமை தரும் நடராச தத்துவம் தோன்றிய இடமும் இதுவே.

'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிலை எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது இன்றைய கொள்கை. இதற்கு வித்தாக அமைந்து ஹரிஜனங்களுக்குச் சம உரிமை வழங்க வழி காட்டியது நந்தனுக்கு இறைவன் காட்சி தந்த நிகழ்ச்சியாகும். அது நடைபெற்ற பெருமையும் இத்தலத் தின் தனிச் சிறப்புக்களில் ஒன்று. நந்தனார் வாழ்ந்ததாகக் கருதப்படும் இடத்தில் நந்தனார் கல்விக் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது.

ஈழத்து உறவு : ஈழ நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் சிதம்பரம் ஒரு முக்கியமான கோயில். யாழ்ப்பாணத்தார்

பல்லாயிரம் பேர் ஆண்டுதோறும் தில்லைக்கூத்தனை வழி பட வருகின்றனர். இக்கோயிலுக்கு யாழ்ப்பாணப் பகுதி யில் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. நடராசருக்குரிய பல பெயர்களும் யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக வழங்கு கின்றன. வாழ்நாளில் ஒரு முறையேனும் தில்லைக்கு வந்து நடராசரை வணங்க வேண்டுமென்பது யாழ்ப்பாணத்த வரின் பெரு விருப்பம். மார்கழி மாதம் திருவாதிரை நட்சத் திரத்தில் நிகழும் "ஆருத்ரா தரிசன" விழாவுக்கு யாழ்ப் பாணத்தார் பலர் வருகின்றனர். திருவாதிரையைப் போல ஆனி மகமும் இங்கு 10 நாள் விழாவாகக் கொண்டாடப்படு கிறது.

ஞானப்பிரகாசர் என்ற இலங்கைப் பெருமகனார் பெய ரால் 1630 அளவில் அமைக்கப் பெற்ற ஞானப்பிரகாசம் என்னும் குளம் கனகசபை நகரில் உள்ளது; வரணி ஆதீனத் துக் கீழமடம், கங்காணை மடம், செவ்வாய்க்கிழமை மடம் என்ற யாழ்ப்பாணத்தார்க்குரிய மூன்று மடங்கள் இந் நகரில் இருந்து வருகின்றன; இங்கு வந்து குடியேறிய மகாவித்துவான் ஆறுமுக நாவலர் ஓர் உயர்நிலைப் பள்ளி யையும் சிவப்பிரகாச வித்தியாசாலையையும் நிறுவினார். நடராச தத்துவத்தின் பெருமையை நன்கு விளக்கிய உரிமை, கீழை நாடுகளின் கலையுலக வேந்தரான டாக்டர் ஆனந்த குமாரசாமி என்னும் யாழ்ப்பாணத்தாரைச் சேரும்.

தீக்ஷிதர்கள் : வழிபாடு நடத்துபவர்களாலும் இக் கோயில் சிறப்புப் பெற்றிருக்கிறது. தில்லை மூவாயிரவர் எனப்படும் தீக்ஷிதர்களே நடராசர் கோயிலில் பூசை செய் கின்றனர். எட்டாம் நூற்றாண்டு வரையில் கோவிந்த ராசர்க்கும் இவர்களே பூசை செய்து வந்தனர். தில்லை வாழ் அந்தணர்கள் ஆகிய இவர்கள் தம் உயிரைக் கொடுத்தும் நடராசரைக் காக்கும் தன்மையுடையவர்.

காலந்தொறும் நடத்த வேண்டிய பூசைகளை உரிய நேரத்தில் நடத்துவர். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கா கவோ செல்வர்களுக்காகவோ நேரம் தாழ்த்த மாட்டார்கள். வானொலி நேரம் தவறி ஒலி பரப்பியது உண்டு; தில்லை

தீக்ஷிதர் எவர் தயவையும் எதிர்பாராமலும் யாருக்கும் அஞ்சாமலும் உரிய நேரத்தில் கோயிலைப் பூட்டி விடுவர். எவ்வளவு பெரிய செல்வாக்கு உள்ள கட்டளைதாரராக இருந்தாலும் அவர் வருகையை எதிர்பார்த்துக் கட்டளைக்கு உரிய பூசை அல்லது உபய காரியங்கள் அல்லது அர்ச்சனையைச் சுணக்க மாட்டார்கள். ''முட்டாத முச்சந்தி மூவாயிரவர்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர்களைப் பாராட்டியுள்ளார்.

நடராசப் பெருமானுக்கு அரசர்களும் பெரு நிலக்கிழார் களும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களும் ஏனையோரும் விலைமிக்க ஆபரணங்களை வழங்கியுள்ளனர். ஆனி, மார்கழி உற்சவங்களில் மட்டும் இவை அணிவிக்கப்பெறும். விலை வரம்பு மதிக்க இயலாத மணிகளாலான பொற்கலன்களும் உள்ளன. இவையாவும் 4 நாட்களுக்கு ஒரு முறையும் 20 நாட்களுக்கு ஒரு முறையும் ஆறு திங்கட்கு ஒருமுறை யும் இன்னின்னவாறு சரி பார்க்கப்பட வேண்டும் என்ற வரையறை உள்ளது. தீக்ஷிதர் பலர் வறுமையாக இருந்த போதிலும், கணக்குகளைச் செம்மையாக வைத்துள்ளனர்.

இந்த இனத்தவர் தில்லையில் மட்டுமே வாழ்கின்றனர். தில்லை நடராசருக்குத் தொண்டு செய்வதற்கென்றே தாங்கள் வாழ்வதாகவும் அப்பணி தங்கள் தனியுரிமை என்றும் கருதுகின்றனர். சோழ அரசர்களால் இவர்கள் இங்கே குடியேற்றப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

தில்லைப் பெருங்கோயிலில் பூசை செய்யும் உரிமை இவர்களுக்கு மட்டுமே உண்டு. இக்கோயில் இவர்களு டைய சொந்தக் கோயிலாக இருந்து வருகிறது. கோயிற் பணி தவிர ஏனைய பணிகளை இரண்டு மூன்று பேர் மட்டுமே (தமிழாசிரியர்களாக) செய்து வருகின்றனர். எனினும் அவர்களும் தங்கள் முறைகளை விடவில்லை. இப்போது 240 குடும்பத்தினர் மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது. கோயி லின் அன்றாட வருவாய் அன்றைய முறைகாரரான 20 பேருக்கு உரியது.

திருமணமான ஒவ்வொரு ஆடவனுக்கும் கோயில் வேலைக்கு முறையும், கோயில் வருவாயில் பங்கும், தீக்ஷிதர்

களின் அவையில் சம உரிமையும் உண்டு. ஆகையால் சிறு வயதிலேயே மகனுக்குத் திருமணம் முடித்துக் கோயிலில் கூடுதலாகப் பங்கு பெற்றுக் கொள்ளும் பழக்கம் பரவி யிருக்கிறது.

இவர்கள் சிதம்பரத்துக்கு வெளியே வாழ்வதோ சம்பந்தம் செய்து கொள்ளுவதோ கிடையாது.

தீக்ஷிதர்களின் பொதுக் குழுவுக்கு **பொது தீக்ஷிதர்** என்று பெயர். இக்குழு, பேரம்பலத்தில் கூடும். மேலை நாட்டுச் சட்ட மன்றங்களுக்கு உரிய முறைகள் என்று நாம் கருதி வரும் சம்பிரதாயங்கள் பலவற்றை எத்தனை யோ நூற்றுண்டுகளாக இவர்கள் பின்பற்றிக் கூட்டங் களை நடத்தி வருகின்றனர் இக்குழுவினரே இக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்கள் ஆவர். பொது மக்களிட மிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு மட்டுமே, கோயில் செலவுகள் செய்யப் பெறுகின்றன.

தில்லைவாழ் அந்தணர்களின் கட்டுப்பாடுகளையும் மரபுகளையும் விளக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் எவ்வள வோ உண்டு. ஒன்றை மட்டும் கூறுவோம்.

சைவ நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஒருவர் கூற்றுவ நாயனுர். இவர் பிற்காலச் சோழர்களுக்குப் பிரதிநிதியாயிருந்து, தஞ்சை மாவட்டத்தில் திருக்களந்தை என்ற ஊரில் சிற்றரசராக இருந்தார். அந்தக் காலத்தில் சோழர்களுடைய பலம் குன்றிவந்ததால், ஆங்காங்கு இருந்த பிரதிநிதிகள் தங்களுடைய அதிகார பலத்தை வளர்த்துக் கொண்டனர். கூற்றுவரும் பல சிற்றரசர்களை வென்று பல நாடுகளுக்கு அதிபதியானுர். ஆனுல் அதிகாரமும் படை பலமும் இருந்த போதிலும் முடிமன்னராக முடிய வில்லை. அந்தக் காலத்தில் அரசர்கள் முடி சூட்டிக் கொள்ள, அந்த வைபவத்தை நடத்தி வைத்தவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள்தாம். கூற்றுவர் அவர்களிடம் சென்று, தமக்கு முடிசூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

"நாம் சோழ மன்னர்களுக்கன்றி மற்றவர்களுக்கு முடி சூட்ட மாட்டோம்" என்று சொல்லித் தில்லைவாழ் அந்தணர்கள் மறுத்து விட்டனர். கூற்றுவருடைய கோபத்துக்கு அஞ்சிய, தில்லைவாழ் அந்தணர்கள் தம்மில் ஒரேயொரு குடும்பத்தை மட்டும் சிதம்பரத்தில் நிறுத்தி, ராஜமுடியைக் காத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மற்றவர்கள் யாவரும் சேர நாட்டுக்கு ஓடி விட்டார்களாம். இது பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவர்களுடைய சிறப்பு, பின்வரும் கட்டளையிலிருந்து தெரிய வரும்.

சிதம்பரத்தில் தில்லை வாழ்ந்தணர் அன்னம்பாலிப்பு நிலம் பெறுமானம் ரூ. 1,50,000

'கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார். வாழ் தில்லைச் சிற்றம்பலமேய செல்வன் கழல் ஏத்தும் செல்வமே செல்வமாகவுடையவர்' என்று சம்பந்தராலும், 'சிட்டர், திருவுடையந்தணர்' என்று அப்பராலும், 'முட்டாத முச்சந்தி மூவாயிரவர்' எனச் சுந்தரராலும், 'செல்வ மூவாயிரம் செழுஞ்சோதியந்தணர், தெய்வ வாய்மொழியார். வேதவென்றி மாறாத மூவாயிரவர் ஓவா முத்தீயஞ்சு வேள்வியாறங்க நான்மறையோர், இளையாள் மொழி இன்தமிழால் ஏத்தும் மறைவல நாவலர்கள் என்று 9-ஆம் திருமுறையிலும், 'அங்கணர் கோயில் உள்ளா அகம் படித் தொண்டு செய்வார், உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ள மிக்கார், பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார், தம்மையே தமக்கொப்பான நிலைமையால் தலைமை சார்ந்தார், தென் தமிழ்ப் பயனுயுள்ள திருத் தொண்டத் தொகை முன்பாட அன்று சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குத் 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பெற்ற பெருமையுடையவர் என்று 12-ஆம் திருமுறையிலும் புகழப்பெற்றவரும்,இமய மலையில் அந்தர் வேதியில் நடந்த யாகத்திற்குப்

பிரமனால் அழைத்துச் செல்லப் பெற்றுத் திரும்பிக் கொண்டு வந்து விடப்பெற்றவர்களுள் ஒருவர் குறைந்தனராக 'மூவாயிரவருள் யாமும் ஒருவர்' என்று நடராஜப் பெருமானால் திருவாய் மலர்ந் தருளப் பெற்ற சிறப்பு வாய்ந்தவர்கள் இத் தில்லை வாழ் அந்தணர்கள்.



அவ்வந்நாட்களில் தில்லைக்கூத்தப் பெரு மானைப் பூஜை செய்யும் தீக்ஷிதர்களுள் 14 (பதினான்கு) பேருக்கு நாடோறும் நண்பகலில் ஒரு வேளை சிதம்பரத்தில் அன்னம் பாலித்தற் பொருட் டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீ ல ஸ்ரீ காசி வாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர் களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது 'தில்லை யில் (சிதம்பரத்தில்) தில்லை வாழந்தணர் அன்னம் பாலிப்பு' எனப் பெயர் பெறும்.

வரலாறு : வரலாற்றுத் துறையில் சிதம்பரம் பல சிறப்புக்களை உடையது. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் இரண்டாவது தலைநகராய்ச் சிதம்பரம் இருந்தது. முதலாம் குலோத்துங்கன் (1070—1122) இங்கு ஓர் அரண்மனை கட்டிக் கொண்டான். சோழ அரசர்கள் தங்களுடைய அளவைக் கருவிகளுக்கு ஆட வல்லான் கோல், ஆடவல்லான் மரக்கால் என்ற பெயர்களை இட்டு, ஆடற்கலை வல்லானாகிய நடராசர்க்குச் சிறப்புச் செய்தனர். முஸ்லிம் படையெடுப்புக்களின் போதும்

ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடைபெற்ற போர்களின் போதும், தில்லைக் கோயில் தாக்கப்பட்டது. ஹைதர் அலியின் படைகள் 35 ஆண்டுகள் இக்கோயிலில் தங்கியிருந்ததாக வரலாற்ருசிரியர் சிலர் கூறுகின்றனர்.

பெருமக்கள் தொடர்பு : வரலாற்றுக் காலந்தொட்டு, பல பெருமக்கள் இந்நகரில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள் அனைவர் பெயரும் உடைய பட்டியலைத் தருவது இயலாத ஒன்று. 19, 20-ஆம் நூற்ருண்டுகளில் வாழ்ந்த வர்களுள் வள்ளலார் இராமலிங்க அடிகள், அறச்செயல் களில் சிறந்து விளங்கிய வள்ளல் பச்சையப்ப முதலியார், நகராண்மைக் கழகத் தலைவராக இருந்து நலம் பல புரிந்த திவான்பகதூர் இராமசாமிச் செட்டியார், அவர் தம்பியும் பல்கலைக் கழகம் கண்ட வள்ளலுமாகிய ராஜா சர் அண்ணு மலைச் செட்டியார், தென்னிந்திய வரலாற்றை விரிவாக எழுதியுள்ள அறிஞர் சி எஸ். சீனிவாசாச்சாரி ஆகியோர் முக்கியமானவர்கள்.

கோயிலில் காணத்தக்கவை : ஆடும் பெருமானின் அழகிய திருவுருவம், பொன்னம்பலம் எனப்படும் கனசபை. கிழக்குக் கோபுரத்திலுள்ள அரிய சிற்பங்கள்; மேற்குக் கோபுரத்தி லுள்ள கல்வெட்டுக்கள், மூன்ரும் குலோத்துங்கன் கட்டிய நிருத்தசபை, பாண்டியன் சுந்தர வர்மன் கட்டிய பாண்டிய நாயகம் கோயிலிலுள்ள வண்ண ஓவியங்கள், சிவகாமி யம்மை கோயில் திருச்சுற்று மாளிகைக் கீழ்வரிசையில் பரத நாட்டியச் சிற்பங்கள், பச்சையப்பரின் உருவச்சிலை, சிதம்பர ரகசியம், 'பாவாடை' அமுது படைக்கும் காட்சி, மார்கழி திருவாதிரை திருவிழா, ஆயிரக்கால் மண்டபம், இம்மண்டபத்தின் தூண்களை எண்ணிப் பார்க்கலாகாது; அவை சற்றுக் குறைவாக இருக்கும்; அதற்குக் காரணங் காட்டப் பல கதைகள் கூறப்படுகின்றன. இது முதலாம் குலோத்துங்க சோழனின் சேனைத்தலைவனுக இருந்த நரலோகவீரன் செய்த திருப்பணி ஆகும்.

மேலும் சந்திவிநாயகர், மாம்பழ விநாயகர், பிரம சண்டீசர், ஆகாய சிற்சபை (பொன்னம்பலம்) கனகசபை (எதிரம்பலம்) தேவசபை (பேரம்பலம்) நிருத்தசபை (தேரம் பலம்) இராஜசபை (ஆயிரக்கால் மண்டபம்) ஒற்றைக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், சிவகங்கை தீர்த்தம்,

திருமூலட்டநாதர் சந்நிதி, நவலிங்கம் நவக்கிரகங்கள் சந்நிதி, தில்லை கோவிந்தராஜர் சந்நிதி, தில்லைத் திருச்சித்திர கூடம் என்பன காண வேண்டியவையாகும்.

உணவு வகைகள் : நைவேத்தியத்துக்குச் செய்யப்படும் சுவையான உணவு வகைகள் ஒவ்வொரு கோயிலுக்கும் சிறப்பாக உண்டு. தில்லையில் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை கற்கண்டுப் பொங்கலும், சம்பாக் கொஸ்தும் ஆகும். இவற்றை உண்டு மகிழ்ந்தால்தான் தில்லைப் பயணம் சுவைபடும்.

கற்கண்டுப் பொங்கல், தீக்ஷிதர்களால் செய்யப்படுகிறது; 'அல்வா' போன்று இன்சுவையுடையது. இதன் விலை பட்டணம்படி ஒன்றுக்கு நூறுரூபாய் ஆகும். இரண்டு படி வடிக்கக்கூடிய பானை அல்லது பாத்திரத்தில் திட்டமாகத் தண்ணீரைக் கொதிக்க வைத்து, பிறகு அரைப்படி அரிசியையும் பருப்பையும் கொதிக்க வைத்து, சேர்த்துக் கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். சோறு குழைந்து கெட்டியான பிறகு, சீனுக்கற்கண்டையும் குங்குமப் பூவையும் அதே பானை அல்லது பாத்திரத்தில் சேர்த்துச் சோற்றுடன் கிளறவேண்டும். இது கெட்டியான பிறகு ஏலப் பொடி, திராட்சை, முந்திரிப் பருப்பு, சாதிக்காய் முதலியவற்றைச் சேர்த்து நெய்யையும் விட்டுக் கலந்து அடுப்பிலிருந்து இறக்கவேண்டும்.

அரைப்படி அரிசிக்கு, 1/8 படி பயத்தம்பருப்பு, 2450 கிராம் சீனுக்கற்கண்டும், 840 கிராம் நெய்யும், 210 கிராம் முந்திரிப் பருப்பும், 810 கிராம் பாதாம் பருப்பும் சிறிதளவு குங்குமப்பூ, ஏலக்காய், திராட்சை, சாதிக்காய் (ஒரு காயில் பாதி) ஆகியவை வேண்டும்.

சம்பா கொஸ்து என்பது வெண்சோறு; நெய்யும் மிளகும் சேர்த்துச் சமைத்தது; இதைக் கத்தரிக்காய்த் துவையலுடன் உண்ணுவர்.

நகராட்சி : 12-ஆம் நூற்றாண்டிலேயே சிதம்பரம் ஒரு தனியூராக இருந்தது. தனியூர் என்பது இக்காலத்து நகராண்மைக் கழகம் போன்ற அமைப்பாகும், கொற்றவன் குடி, மினிக்குடி, உகப்பூர், மதுவக்கரை, திருவேட்களம்,

சிவபுரி, சிங்காரத்தோப்பு, ஆடூர் ஆகிய 23 சிற்றூர்கள் இத்தனியூரில் சேர்ந்திருந்தன. இன்றைய தெற்குவீதி, அந்நாளில் குலோத்துங்க சோழன் வீதி என்ற பெயர் பெற்றிருந்தது. இன்றைய மேற்குவீதி, முடித்தலை கொண்ட பெருமாள் திருவீதியாக இருந்தது.

1962-இல் சிதம்பரம் நகராண்மைக் கழகத்தின் பரப்பளவு 5 சதுர கி. மீ. ஆக இருந்தது.

பெயர்கள் : சிதம்பரத்தில் நடராசன், நடேசன், அம்பலவாணன், சபாபதி, சபாநாதன் சிற்சபேசன், குஞ்சிதபாதம், பொன்னம்பலம், கனகசபை, சிதம்பரம், சிவசிதம்பரம், கோவிந்தராசன் என்ற பெயர்களை உடையவர்கள் ஏராளமாக உள்ளனர். இந்நகரில் எந்தத் தெருவிலாவது நின்று இவற்றுள் ஒரு பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால், 10 பேராவது திரும்பிப் பார்ப்பார்கள். இது என் அனுபவம்.

சிதம்பரத்தில் இருப்பவை : பல மேல்நிலைப்பள்ளிகள், 69 சத்திரங்கள், 4 திரைப்பட மாளிகைகள், பெரிய அளவில் பஸ் போக்குவரத்து, அண்ணாமலை நகருக்குச் செல்ல டவுன் பஸ் வசதி, திவான்பகதூர் இராமசாமி செட்டியாரின் வள்ளன்மையால் ஏற்பட்ட குடிநீர் வசதி, இளமை யாக்கினூர் கோயில், பதஞ்சலியார் கோயில், நகரின் எல்லையிலுள்ள காளி கோயில். (நாட்டியப் போட்டியில் சிவபெருமானிடம் தோல்வியடைந்த காளி, ஊர் ஓரத்தே கோயில் கொண்டனள் என்பர்).

சிதம்பரத்தில் இல்லாதவை : சுத்தம், வளர்ச்சி, குறிப்பிடத்தக்க தொழில்.

சிதம்பரத்தில் உள்ள தொழில்கள் : சித்த வைத்திய சாலை, நெல் அரைக்கும் மாபெரும் இயந்திரங்கள், தையல் நூல் உற்பத்தித் தொழிற்சாலை.

சுற்றுப்புறம் : சிதம்பரத்தைச் சுற்றிப் பறங்கிப்பேட்டை, வடலூர், நெய்வேலி, கங்கைகொண்ட சோழபுரம், சீர்காழி, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய ஊர்கள் உள்ளன. முழுமதியைச் சுற்றி விண்மீன்கள் இருப்பவை போன்று இவை தில்லையின் பல திக்குகளில் அமைந்துள.

★

தரிசிக்க முக்தி தரும் தில்லைக் கோயில்

புலவர் ஆனந்த நடராச தீக்ஷிதர் எம். ஏ. பி. ஓ. எல்.
தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தில்லைக்கோயில் உலகத்திற்கே கோயில். கோயில் என்றாலே தில்லையைத்தான், சிதம்பரத்தைத்தான்குறிக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் விளங்கும் தில்லை, பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாயத்தின் வடிவான தாகும். அவற்றுள் சிதம்பரம் இதயமாகலின், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல், என்ற ஐந் தொழில்களும் நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்ட வத்தில் அமைந்துள்ளன. இந்தத் தாண்டவம் உலகம் தோன்றிய கால முதற்கொண்டு நடைபெறுகின்றது. இறைவனது முழுமையான விளக்கம் அமைந்துள்ள இடம் இத்தலமே. மொழிக்கெல்லாம் அடியாகிய ஒலித் தோற்றம் தோன்றியதும், சிலம்பொலியாகிய பரதநாதம் தோன்றி யதும் இத்தலத்திலே ஆகும். சைவத்திருமுறையைப் பாதுகாத்து அளித்த உயர்வாலும், இசையுலகிற்கே பிறப் பிடமாக இருப்பதாலும், அருள் விளக்கத்து அடித்தலமாக இருப்பதாலும் இன்றும் என்றும் திருமுறை ஓதுபவர்கள் திருச்சிற்றம்பலம் என்று தொடங்கி, முடிக்கும் போதும் இதையே கூறி முடிக்கின்றார்கள்.

கோயிலின் தொன்மை

தில்லைக் கோயில் உபநிஷத்துகளில் குறிக்கப் பட் டுள்ளது. பதஞ்சலியோடு உடனுறைந்த திருமூலர் கி. மு. 6-ஆம் நூற்றாண்டினர் என்று கூறப்படுவதால் அவரால் குறிக்கப்பெற்ற திருவம்பலம், திருக்கூத்து, சிதம்பரம் முதலியன கி. மு. 6-ஆம் நூற்றாண்டின் முன்னரே விளக்கம் பெற்றிருக்கலாம். சோழ மன்னர்கள் தங்கள் குல தெய்வ மாகத் தில்லைப் பெருமானை வழிபட்டு வந்தனர்.

தில்லையின் பெருமையைத் திருமந்திரம், சைவத்திரு முறை, அருணகிரிநாதர் திருப்புகழ், இராமலிங்க சுவாமிகள் அருட்பாக்கள், வடமொழியில் பல நூல்கள் முதலியன விரிவாகக் கூறுகின்றன. இங்கு இறைவனை உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று வகையாலும் காண்கின்றோம். ஸ்ரீ நடராசர் உருவம், ஸ்ரீ ஸ்படிகலிங்கம் அருவுருவம், ஸ்ரீ இரகசியம் அருவம். ஸ்ரீ நடராசரைத் தரிசித்து, ஸ்ரீஸ்படிகலிங்கத்தை உள்ளத்தில் அமைத்துக் கொண்டு ஸ்ரீ இரகசியத்தைத் தியானம் செய்யவேண்டுமென்ற குறிப்பு இவற்றால் தோன்றும். பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆக இம்மூவரும் ஒரே இடத்தில் கோயில் கொண்டுள்ள உயர்ந்த தலம் இதுவேயாகும்.

ஆடலின் பெருமை

தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ நடராஜப் பெருமான் தாருகாவனத்து ரிஷிகளது செருக்கை அடக்க ஒரு காலத்தில் ஆடினார். மீண்டும் இவ்வையத்தில் பதஞ்சலிக்கும், வியாக்கிரபாதருக்கும் காட்ட ஆடிய ஆனந்த தாண்டவத்தைத் தில்லையில் ஸ்ரீ நடராஜர் இன்றும் ஆடிக் கொண்டிருக்கின்றார்.

புலவர்கள் சொல்லோவியமாகக் கூறியிருக்கும் இத் தாண்டவத்தைக் கலைவல்ல சிற்பிகள் அழகுமிளிரும் சிற்ப உருவமாகச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். கூத்தப் பெருமானின் திருவருளே சிவகாம சுந்தரியாகும். இவள் அருட்சக்தியாம்.

சித்சபை

தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. ஆனந்த தாண்டவம் நடைபெறும் சபையே சித்சபையாகும். கனக சபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை என்பன மற்ற நான்கு சபைகளாகும். இக்கோயிலின் ஆதி அமைப்பு சிற்றம்பலமும், பேரம்பலமுமாகும். சித்சபை மரத்தால் கட்டப்பட்டு இன்றும் பல்லவர் கட்டிய குகைக் கோயிலுக்கும், கற்கோயிலுக்கும் முந்திய நிலையில் தோன்றுகிறது. இச்சபையைத் திருச்சிற்றம்பலம் என்பர். ஸ்ரீநடராசப்

பெருமானும், அவருடைய இடப்பாகத்தில் உள்ள சிவகாம சுந்தரி அம்மையும் இருக்கும் கருவறை இதுவேயாகும். இதை மாணிக்கவாசகர் "எழில்பெறும் இமயத்தில் புடை யம்பொற் பொலிதரு புலியூர்ப்பொது" என்று கூறு கின்றார். இது தங்க ஓடுகளால் வேயப்பெற்றிருக்கின்றது. இதன்மேல் தங்கக் கலசங்கள் ஒன்பது உள்ளன. அவை ஒன்பது சக்திகளாகும்.

மேலும் அதிலுள்ள கைமரங்கள் 64-ம் கலைகளாம். ஓடுகள் 21,600ம் மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவா. சங்களின் எண்ணிக்கையும், அதற்குப் பொருத்தப்பட்ட ஆணிகள் 72,000ம் நம்முடைய சுவாச சஞ்சார ஆதார மான நாடிகளின் கணக்கையும் கொண்டு நமது இருதயத் தில் இருக்கின்ற ஈசுவரனே இங்கும் இருக்கின்றார் என்பதை அறியவே நமது உடல்போல் அமைந்துள்ளது. இச்சபை யில் உள்ள ஒவ்வொரு பொன் ஓட்டிலும் "சிவாயநம" என்ற பஞ்சாட்சரம் எழுதப்பட்டுள்ளதாகத் தில்லையுலா கூறுகிறது. சித் சபையில் ஸ்ரீ நடராஜப் பெருமானது வலப்பக்கத்தில் சிதம்பர இரகசியம் அதாவது ஆகாய லிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டுக்கு ஒரு முறை புனுகுச் சட்டம் சார்த்தப்படுகின்றது. தங்க வில்வமாலை திருவம்பலச் சக்கரத்தின் முன்னே தொங்கவிடப்பட் டுள்ளது; இது திருவாசியுடன் அமைந்துள்ளது. ஸ்ரீ நடராஜரின் முன்னிலையில் ஸ்ரீ இரத்தினசபாபதியும், ஸ்ரீ ஸ்படிக லிங்கமும், இடது பக்கத்தில் ஸ்ரீ சுவர்ண கால பைரவரும், ஸ்ரீ நித்திய உத்சவரும் உள்ளனர்.

கனக சபை

கனகசபை சிற்றம்பலத்திற்கு எதிரேயுள்ள எதிரம்பல மாகும். இங்குப் பெருமான் தினமும் ஆறுகால பூஜைகளும், ஆண்டில் நான்கு முறை திருமஞ்சனமும் கொண்டருளு கின்றார்.

இங்குள்ள 18 தூண்களும் 18 புராணங்களைக் குறிப் பன. வெள்ளிப் பலகணிகள் 96. இவை தொண்ணூற்ரு று

தத்துவங்களாகவும், ஸ்ரீ சித் சபையிலுள்ள ஐந்து தூண் களும் ஐம்பொறிகளாகவும், பிரம பீடத்திலுள்ள பத்துத் தூண்களில் கீழ் ஆறும் சாத்திரங்களாகவும், மேலிருக்கும் நான்கும் வேதங்களாகவும் உள்ளன.

தேவ சபை

தேவசபை என்பது பேரம்பலம் என்றும் கூறப்படும். இங்கு உத்சவமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். அநபாய ஞன இரண்டாம் குலோத்துங்கன் தன் குல முன்னோர் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்து திருப்பணி செய்ததால் இச்சபைக்குத் திருப்பணி செய்தான் என்று பெரிய புராணம் கூறுகின்றது. இங்குத்தான் பொது தீக்ஷிதர்கள் கூட்டங் கள் கூடிப் பேசி முடிவெடுப்பர். கூட்டம் கூடும்போது ஒரு விளக்கில் ஸ்ரீ நடராஜரை ஆவாகனம் செய்து அவ்விளக் கின் முன்னிலையில்தான் தொடங்குவர்.

நிருத்த சபை

இது நடராஜப் பெருமான் திருமுன்னர்க் கொடி மரத் தின் தென்பால் உள்ளது. மிகவும் சித்திர வேலைப்பாடு அமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது; மண்டபம் பரிகள் பூட்டிய தேர் அமைப்புப் பெற்றது. இதில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியும், சரபமூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள்.

இராஜ சபை

இது ஆயிரக்கால் மண்டபமாகும். கோயிலின் வட கீழ்த்திசையில் உள்ளது. நடராசப் பெருமான் ஒவ்வொரு மார்கழியிலும், ஆனியிலும் இங்கு எழுந்தருளித் திருமஞ் சனம் கொண்டு அருளுகின்ஞர். ஆருத்திரா, ஆனித்திரு மஞ்சன தரிசனங்கள் கொடுப்பதும் இம்மண்டபத்தில்தான். கீழ்வரிசைப் பத்திகள் முழுவதிலும் நர்த்தன உருவங்கள். இசையாளர் உருவங்கள் மிகவும் வனப்புடன் செதுக்கப் பட்டுள்ளன.

தில்லையில் எல்லாம் ஐந்தாக இருக்கும். திருச்சுற்று, படி, சபை என்று எல்லாம் திருவைந்தெழுத்துக்கள்போல் ஐந்து என்னும் எண்ணில் அமையும்.

வழிபடும் முறை

கோயிலுக்கு நான்கு கோபுரங்களும், நான்கு வாயில்களும் உண்டு. தெற்குக் கோபுரம் வழியாக உள் நுழைந்ததும் ஸ்ரீ முக்குறுணி விநாயகர் சந்நிதி உண்டு. உருவம் மிகப் பெரிது, மிகுந்த சக்தி வாய்ந்தவர். பிறகு, கிழக்குப் பக்கத்திலுள்ள இராஜ சபையைக் கண்டு களித்துத் தெற்கு நோக்கி வந்தால் ஸ்ரீ நடராஜர் கோயிலின் உட்செல்லக் கிழக்குப் பக்கத்தில் உள்ள வாயில் வழியாகப் புகுந்தால் இருபக்கமும் புருஷா மிருகம் இருக்கின்றன. தெற்குப் பக்கமாக இரண்டாம் திருச்சுற்று வழியாகச் சென்றால் ஸ்ரீ கால சம்காரமூர்த்தியைத் தரிசித்து, நிருத்த சபையைக் கண்டு வணங்கலாம். கொடி மரம், ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள், ஸ்ரீ இலக்குமி அம்மன், ஸ்ரீ தண்டாயுதபாணி ஆகியோரைத் தரிசித்து இரண்டாம் திருச்சுற்றில் செல்லும்பொழுது ஸ்ரீ திருமுறை காட்டிய விநாயகர், ஸ்ரீ நால்வர், ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி, ஸ்ரீ பல்லிகேஸ்வரர், ஸ்ரீ வல்லப கணபதி இவர்களைத் தரிசித்துக் கொண்டு திருச்சுற்று நடுவிலே உள்ள வழியில் சென்றால் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீபஞ்சபூத ஸ்தலமூர்த்திகள், தில்லை மரம், ஸ்ரீ அறுபத்து மூன்று நாயன்மார்கள், ஸ்ரீ சண்டேசுரர் இவர்களைத் தரிசித்துக் கொண்டு கிழக்கே திரும்ப ஸ்ரீ அருணசலேசுவரர் சந்நிதி உள்ளது. திருவண்ணமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனையே ஒத்து விளங்கும் மூர்த்தியைத் தரிசித்து மகிழ்ந்து தில்லைக் கோயிலுக்கு மூலவரான, சுயம்புலிங்கமான ஸ்ரீ மூலநாதரையும், ஸ்ரீ உமைய பார்வதியையும் தரிசித்த பின் செல்லும் வழியில் கனகசபையின் இருமருங்கும் வாயில்கள் உள. அவ்வாயில் வழியே உள் செல்ல ஸ்ரீ நடராஜ மூர்த்தி, ஸ்ரீ சிவகாமி அம்பாள், ஸ்ரீ இரகசியம், ஸ்ரீ சுவர்ணகால பைரவர், ஸ்ரீ நித்யோத்சவர். ஸ்ரீ ஸ்படிக லிங்கம், ஸ்ரீ இரத்தினசபாபதி ஆகியவர்களை உளம் ஒன்றத் தரிசனம் செய்யலாம். இங்குச் சென்றாலே புலன்கள் தாமாகவே இறைவனை நோக்கிச் சென்று விடும்.

''எல்லையில் தனிப் பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்''

என்று சுந்தரர் தம் புலன்களும், கரணங்களும் ஒன்றிய நிலையில் வழிபட்டதைச் சேக்கிழார் கூறுவது போல் எல்லோரும் மனம் ஒன்றி வழிபட்டு அம் மகிழ்ச்சியை அடைந்து இஷ்ட சித்தி பெறலாம்

சிற்பக்;கலை

குதிரை பூட்டப் பெற்று, அருங்கலைத்திறன் அமைந்த சக்கரம் அமைக்கப் பெற்று மிகவும் சித்திரவேலைப்பா டமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றுப் புதுப் புது உத்திகளைப் பயன்படுத்தி அமைந்த சிற்பத் திறனை நிருத்த சபையில் கண்டு மகிழலாம். இராஜ சபையின் கீழ் வரிசைப் பத்திகள் முழுவதிலும் நடனம்புரியும் மங்கையர் களை அமைத்திருக்கும் அழகு, இசையாளர் உருவங்கள், சிவகாமி அம்மை கோயிலில் பெரிய திருச்சுற்று மண்டபத் தின்கீழ் வரிசையில் உள்ள நடனம் புரியும் பெண்கள், பல்வகை இசைக்.கருவிகள், பரத நாட்டியத்தின் பல்வகைக், கோலங்கள் கண்டு, மகிழ்தற்குரியன. பரத சாத்திரத்தை விளக்கும் சிற்பங்கள் கிழக்குக் கோபுர வாயிலிலும் உள்ளன. சிவகாமி அம்மை கோயிலில் இரட்டைத் தூண் கள் அமைந்துள்ள இடத்தில் தொங்கும் கல் சங்கிலித் தொடர் மிகுந்த சிற்ப நுட்பத்தைக் காட்டும்.

ஓவியக் கலை

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கு எதிரில் ஸ்ரீ சிவனுடைய 25 மூர்த்தங்களும், ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ தேவியின் அம்சமும் ஓவியமாக வரைந்துள்ள பழைய ஓவியம் ஆகும். சிவகாமி அம்மையின் கோயிலில் முன் மண்டபத்தில் உள்ள இருபக்கத்திலும் மிகவும் பழமையான ஓவியத்தைக் காண லாம். இது மிகவும் நுட்பமிக்க ஓவியமாகும்.

பாண்டிய நாயகத்தில் கந்தபுராணத்தையே தொடர்ச்சி யாக ஓவியமாக வரைந்திருப்பது மிகவும் அழகுடையது. இராஜசபையிலும் நவதாண்டவம் ஓவியக்கலைக்கே அழகு ஊட்டுவதாக அமைந்துள்ளது. பழமையும், புதுமையும் கொண்டுள்ள ஓவியக்கலை இங்கு ஏற்றம் பெற்றுள்ளது.

ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள்

முதற் குலோத்துங்கன், முதல் விக்கிரமன் இவர்களின் முயற்சியால் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி அமைந்தது. தில்லைவாழ் அந்தணர்கள் ஸ்ரீ கோவிந்த ராஜப் பெருமாளுக்குப் பூசை செய்துவந்தார்கள் என்று திரு மங்கையாழ்வார் கூறுகின்றார். சைவ, வைணவ வேற்று மையின்றி இன்றும் ஸ்ரீ கோவிந்தராஜருக்குப் பூசைகள் உரிய முறையில் நடந்து வருகின்றன.

சோழர் திருப்பணி

விஜயாலயன் மகனான ஆதித்தன் (கி. பி. 870—907) திருமூலட்டானப் பெருமானடிகளுக்கு நந்தா விளக்கு அளித் தான். ஆதித்தனும், பராந்தகனும் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்துள்ளனர். இவன் பின்வந்த முதல் இராஜ ராஜன் (கி. பி. 985—1013) தில்லையில் பல திருப்பணி செய் தான். தில்லையில் பொதிந்திருந்த தேவாரப் பாக்களை எடுத்து நம்பியைக் கொண்டு ஏழு திருமுறைகளாக வகுத் தான். தில்லை மூவாயிரவர் அவனுக்கு "சிவபாத சேகரன்" எனப்பட்டம் சூட்டினர். சோழர்கள் தொடர்ச்சியாக, பரம் பரையாகத் தில்லையில் திருப்பணி செய்து வந்துள்ளனர். கடைசியாக மூன்றும் இராஜேந்திரன் (கி. பி. 1246—1279) திருப்பணி செய்தான்.

பாண்டியர் திருப்பணி

பாண்டியர்களில் தலைசிறந்த ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1251—1271) தன் வெற்றிகள் காரண மாகத் திருச்சிற்றம்பலவனை வணங்கிக் கோயிலில் துலா பார தானம் வழங்கினான்.

இவன் தில்லையில் மேற்கு இராஜகோபுரத்தை அமைத் தான். இவனுக்குப்பின் வந்த பாண்டியர்கள் நந்தவனங்கள் அமைத்தும், விழாக்கள் நடத்த உதவியும் ஆடூரில் 116 வேலி நிலங்களை 108 அந்தணர்களின் பராமரிப்புக்காக விட்டும், அவர்களை வேலிக்கு நான்கு கல நெல்லாகத் தில்லை நடராஜப் பெருமானுக்குக் கொடுக்கச் செய்தும்

இந்தக் கோயிலுக்குப் பலவகையில் திருப்பணி புரிந்துள்ளனர்.

விஜயநகர அரசர் திருப்பணி

பதினைந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் விஜயநகர வமிச அரசர்கள் ஆளத் தலைப்பட்டனர். அவர்களில் தலையாயவர் கிருஷ்ண தேவராயர். அவர் கி பி. 1516–இல் கோயிலின் வடக்கு இராஜகோபுரத்தைக் கட்டினுர். மதுரை வீரப்ப நாயக்கன் (கி. பி. 1572—1595) திருக்கோயிலின் வெளிச்சுற்று, இரண்டாவது மதிலான வீரப்ப நாயக்கன் மதிலை எடுப்பித்தான்.

சேரர் திருப்பணி

சேரமான் பெருமாள் நாயனுர் வழிவந்த கொச்சி மன்னர் மகாராஜா ராமவர்மா என்பவர் தம் நாட்டில் ஐந்து கிராமங்களையும், சிதம்பரம் கோயிலுக்கு முன்னரே விடப்பட்ட நிலங்களையும் இறையிலியாக்கி நடராஜரின் நிவேதனத்திற்காக விட்டதையும், சேரர் பலரும் பல திருப்பணிகள் செய்ததையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

18, 19-ஆம் நூற்றுண்டுகளில் பிற நாட்டாராலும் பிற மதத்தாராலும் கோயிலுக்கு இடையூறு நேர்ந்தது. காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் (கி. பி. 1754—1794) தமது பெரும் பொருளைக் கொண்டு இங்குத் திருப்பணி செய்தார். அவருடைய தமக்கையார் சுப்பம்மாள் என்பவரும் அரிய பல பணிகள் செய்தார். இருவருடைய திருவுருவங்களும் கிழக்குக் கோபுர வாயிலில் உள.

நகரத்தார் திருப்பணி

தில்லைப்பெருமானுக்குச் செட்டிநாட்டு அரசர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களும், அவர்களுக்கு முன்னர், அவர்களுடைய தமையனுர் சிதம்பரம் செட்டியார் அவர்களும், திவான் பகதூர் ராமசாமி செட்டியார் அவர்களும், அவர்களுடைய முன்னேர்களும் அரும்பணிகள் செய்துள்ளனர். இராஜகோபுரங்கள் பழுதுபட்டவை யாவும் இவர்களால் திருத்தமுற்றன. கனகசபை பொன்முலாம் பூசப்பெற்றது. அகளங்கன் திருமாளிகையும், குலோத்

துங்கன் திருமாளிகையும் அவற்றின் உள்ளடங்கிய திரு வீதிகளும் புதுப்பிக்கப்பட்டன. முக்குறுணிப் பிள்ளையார் கோயில் சுற்று மண்டபத்துடன் அமைக்கப்பட்டது. சிவ கங்கைக் குளத்தின் படிகள் அகலமும், திருத்தமும் பெற்றன. இரண்டாம் பிராகாரத்திலுள்ள அழகிய திருச் சுற்று மாளிகைகளும் ஆக்கப்பெற்றன. குடமுழுக்கு 1891-இல் செய்யப்பட்டது. இப்பெருங் குடும்பத்தினர் தில்லைப்பெரு மானுக்குப் பலப்பல திருப்பணிகள் செய்துள்ளனர்; செய்து வருகின்றனர். இவற்றைத் தொடர்ந்து இவர்கள் தில்லைப் பெருமானுக்கு நாள்தோறும் அன்னப்பாவாடையும், வெவ் வேறு திருப்பணிகளையும் செய்து கொண்டிருக்கின்றார்கள். சிவகாமி அம்மையின் கோயில் திருப்பணிக்காக மிகுந்த பொருள் கொடுத்து 1972-இல் குடமுழுக்கு நடைபெற ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் உதவி செய்தார்கள். அவர்கள் செய்யும் திருப்பணிகள் மிகப் பலவாகும். இப்போது கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் விரிவான முறையில் சிவகாமி அம்மன் கோயிலைப் பழுது பார்த்தும் புதுப்பித்தும் வருகிறார்கள்.

ஸ்ரீ நடராஜரின் இரண்டாவது குடமுழுக்கு

ஆடூர் பெருநிலக்கிழார் திரு. எம். இரத்தின சபாபதி பிள்ளையவர்களது பெருங்கொடையாலும், தருமபூஷணம் திரு. செ. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள் போன்ற செல்வர்களின் பேருதவியாலும் சிற்றம்பலத்தில் திருப்பணி கள் நிறைவேறி மிகவும் போற்றும் வகையில் 7—7—1955 -இல் குடமுழுக்கு நடந்தது.

மதில் திருப்பணியும், இராஜகோபுரத் திருப்பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீ நடராஜர் நட மாடும் பந்தல் திருப்பணியும் மேல் மண்டப தள வரிசையும் கொடி மரத்தின் மேல் புதுமண்டபமும் முடிக்கப் பெற் றுள்ளன. இவையாவும் பல வள்ளல்களுடைய முயற்சி யாலும், கொடையாலும் நடைபெறுகின்றன. சைவ அன்பர்களும், கலை அன்பர்களும் யாவரும் இக்கோயில் திருப்பணிக்குத் தம்மால் இயன்றதைக் கொடுத்து ஒல்லும் வகையால் உதவி ஸ்ரீ நடராஜரின் இன்னருள் பெற்று நீடு இனிது வாழவேண்டும். ★

உ

ஸ்ரீ நடராஜர் துணை

ஸ்ரீ ஸபா நாயகர் கோயில் எனப்படும் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் அமைப்பும் பொது தீக்ஷிதர்கள் நிர்வாகமும்

உலகம் எல்லாம் இறைவன் உண்மையைப் பிரதி பலிக்கும் கண்ணுடியை ஒக்கும். இவ்வுண்மையை நம் முன்னோர் கண்டறிந்து தம் காட்சி, நூல், அனுமான அறிவை நிலை நிறுத்தப் பல்லாயிரக் கணக்கான நூல்களின் வாயிலாகவும், செவி வழிச் செய்தியாகும் கதைகளினுலும் நவின்றுள்ளனர். வேதங்களும், இதிகாஸங்களும் இவற்றையே வலிந்துரைக்கின்றன.

சான்ருக,

"ஆகாச் வாயு: வாயோர் அக்னி:
அக்னே ராப: அப்யப்பிருத்வீ
பிருதுவ்யா மோஷதய; ஓஷதீப்யோன்னம்.
அன்னுத் புருஷ:"

என உபநிஷதம் கூறுகிறது உணரற்பாற்று.

இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் நிலை நிற்கும் இடம் என்று ஒன்று உண்டு. அவ்வாறு நிலைத்து நிற்கும் இடம் தில்லையே என்பது இங்கு நின்று, நிதானித்து, நினைத்தற்பாலது.

புலவர் வெ. வை. சிவசங்கர தீக்ஷிதர்

மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த சிறப்புடைய தில்லையைப் பற்றி ஈண்டு நோக்கு வோம்.

மூர்த்தி : ஸ்ரீநடராஜ ராஜர்—ஸ்ரீசிவகாமி.

தீர்த்தம் : சிவகங்கை.

தலம் : சிதம்பரம். (பூலோக கயிலாயம்)

சித்+அம்பரம்; அறிவு மயமான ஆகாயம். ஞான ஆகாயப் பரவெளியில் ஆனந்த நிர்த்தமிட்டு, உலக உயிர்களை ஆட்டும் அணுவாட்ட வல்லமை பெற்றோன் சித் ஸபேசனேயாவன். அணுவுள் அசையும் பொருளும் அவனே என்பது இன்று விஞ்ஞானம் தெரிவிக்கும் அணுவிலிருந்து தான் அண்டம் தோன்றிபது என்பதையும் இவ்விடம் நோக்கற்பாலதே.

"அணுவினுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்" என்றனர்.

ஆனந்த நிர்த்தமிடும் ஸபேசன் ஆயிர நாமாக்களில் 'விராட்ரிதய பத்மஸ்தாய நம:' என்ற நாமாவினுல், விராட் புருஷனின் ஆயிர இதழ் இதய தாமரையில் ஈசன் நடமிடும் பாங்கு உரைக்கப்படுகிறது. உலகமே விராட் புருஷ வடிவமாக, இதயத்தானம் தில்லையாக, நடமிடும் சித்ஸபை ஆயிர இதழ் கொண்ட கமலமாக நடுவண் ஆனந்தத் தாண்டவம் செய்கின்ருன் என,

"உலகே உடலாக வுள்ள விராடன்
உலேவில் உளமாஞ்சம் மேளனத் துள்ளே
நடமாடும் அம்மையொடு அப்பன் வனேதாள்
இடமா யென் நெஞ்சுள் ளூறும்"

என்ற 'தூக்கிய பாதத்துதி" உணர்த்தும். (ஸ்ரீகுஞ்சி தாங்கிரிஸ்தவம் என்ற உமாபதி சிவம் எழுதிய வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு.)

தலம் : பஞ்சபூத தலங்களில் பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனக் கூறப்படும் ஐந்தில் ஆகாயத்தானம்

இத்தலமே. ஆகாயலிங்கமாகவும், ஸ்ரீநடராஜர் சிவகாமி சேர்ந்த சம்மேளனமாகவும் அருவமாகவும் இங்கு மூலத் தானம் (ஸ்ரீநடராஜருக்குப் பின்புறம் திரையிட்ட பகுதி) உளது. இவணிருந்துதான் எல்லாத்தலங்களுக்கும் எவ் விடத்தும் ஜீவகலைகள் சென்று வியாபிக்கின்றன என்ப தும் மீண்டும் இரவு அர்த்தஜாம வேளையில் வந்து ஒடுங்கு கின்றன என்பதும்,

" ஓர்கலை யெங்கும் உலவி அர்த்த ஜாமத்தில்
பூரணமாயொடுங்கும் புலியூரே"

என்பதால் விளங்கும்.

இவ்வண்ணம் இறைவன் உயிர்களுக்கு அருள் நல்க அருவ, உருவ, அருவுருவ நிலைகளில் எழுந்தருளிக் காட்சி நல்கும் இடம் தில்லையே ஆதலால் மூன்று நிலையிலும் இருக் கும் கர்ப்பக்கிரகம் வேறெங்கும் காண்டல் அரிது. ஆதலால் இதுவே கோயில் எனப்பட்டது. அப்பெயரே ஊருக்கும் ஆயிற்று. கோ— தலைவன்; இல்—குடிகொள்ளும் வீடு. மற்றைய கோயில்கள் அந்தந்த வேறுபாட்டுடன் கூடிய மூர்த்தியின் திருநாமங்களுடனோ, அரிய பெரிய நபங்களு டனோ சேர்த்துக் கோயில் என அழைக்கப்படுவது இவண் கூர்ந்து நோக்கற்பாலது. வைத்தீஸ்வரன் கோயில், ஆவுடையார்கோயில், திருவண்ணாமலைக் கோயில் என்றும் வழங்குதல் புலனாகும்.

அருவம் = ஸ்ரீ ரகஸ்யம்.

உருவம் = ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ சிவகாமி.

அருவுருவம் = ஸ்ரீசந்திர மௌலீஸ்வரர் (ஸ்படிகலிங்கம்)

பூலோக கயிலாயம், புலியூர், பெரும்பற்றப் புலியூர், தில்வாரண்யம், சிதம்பரம், கோயில், தில்லை, புண்டரிகபுரம் என்பன போன்ற பெயர்கள் இத்தலத்தைக் குறிக்கும். இங்கே, தலவிருக்ஷம் தில்லை என்ற செடியே யாகும். இன்றும் தில்லைக்குச் சுமார் 4 அல்லது 5 மைல் தொலைவில் உள்ள கிள்ளை என்ற கடற்கரை ஊர்ப்பகுதிகளில் இது காணப்படுகிறது.

தீர்த்தம் : இத்தலத்துத் தீர்த்தம் சிவகங்கையே யாகும். இந்தத் தீர்த்தம் ஸ்ரீபரமேஸ்வரனுலே உண்டாக்கப் பட்டது. சிரஸில் உள்ள கங்கையை இங்கு எடுத்துவிட்டு இங்கேயே தங்கி உயிர்ப் பாசத்தை நீக்கி, பாவத்தையும் போக்கி நிறைந்த இன்ப அருளை அடைய உறுதுணையாக இருக்கச் செய்த நிகழ்ச்சியைச் சிதம்பர புராணம் கூறும். மேலும், இத்தீர்த்தத்தில் மூழ்கியே சிம்மவர்மன் என்ற பல்லவ மன்னன் தன் நோய் நீங்கி, இரணிய வர்மன் எனப் பேர் பெற்று தில்லை யம்பலத்துக்குப் பொன் வேய்ந்தமை யும், பின் வாழ்வாங்கு வாழ்ந்து வீடு பேறடைந்தமை யும் புராணம் கூறும்.

இறைவன் முடியிலிருந்து வந்த கங்கை என்பதை இன்றும் அனுமானித்தறியலாம். ஸ்ரீநடராஜர் சார்பாக ஸ்ரீசந்திரமௌலீஸ்வரருக்கும் அபிஷேகம் நடை பெறுகிறது. அவ்வபிஷேக நீர் இன்றும் இச்சிவகங்கையையே சென்றடை கிறது. ஸ்ரீநடராஜர் அபிஷேக நீரும் இங்கு வந்து சேர் கிறது.

மூர்த்தி : இத்தில்லைப்பதியின் சிறப்பு சொல்லரும் தன் மையுடையது. மூலத்து முளைத்தெழுந்து முழு முதல் ஸ்ரீமூலநாதர் என்று போற்றலுறும் லிங்கத்தை ஆதி நாளில் ஸ்ரீபதஞ்சலி, வியாக்ரபாதர் என்ற மகரிஷிகள் பூசித்து, ஸ்ரீநடராஜரின் ஆனந்தத் தாண்டவ தரிசனத்தைக் கண்ணு ரக் கண்டு வீடு பேறுற்றதாகக் கோயிற்புராணம் கூறும்.

அந்நாளில்தான் தில்லை வாழ்ந்தணர்கள், பிரமன் அந்தர் வேதியாக ''ரித்விக்''குகளாகச் சென்றனர் என்றும் வருங்கால் மூவாயிரத்துள் ஒன்று குறைய ஸ்ரீநடராஜ மூர்த்தியே தானும் ''அவருள் ஒன்று'' என்று கூறியதும், சேர்த்து எண்ண 3000 நிறைந்த நிகழ்ச்சியும் கூறப்பட் டுள்ளது.

இவ்வண்ணமே ஆதிமூலவரின் பூஜையில் ஈடுபட்டு இறைவன் நடங்காண முனைந்த ஸ்ரீபதஞ்சலி, வியாக்கிர பாதர் முன்னிட்டு வந்து தங்கிய ஸ்ரீநடராஜ ராஜர் தைப் புஷ்யம், பௌர்ணமி சேர்ந்த குருவாரம் முதல் என்றும்

நிலைத்துத் தங்கி மூவாயிரவராகவும், அவருடன் அளையா விளையாடும் அலகிலா விளையாட்டுடையானுகவும், உலகம் யாவையும் உளவாக்கியும், நிலை பெறுத்தியும், நீக்கியும், மறைத்தும், அருள்பவனுக பஞ்ச கிருத்திய பரமானந்தத் தாண்டவம் செய்து எழுந்தருளியுள்ளான்.

ஸபை என்பது ஸ்ரீநடராஜர் நடனம் ஆடும் ஸபையே யாகும். யாவரும் காணும்படிக்குத் தோற்றமளிக்கும் பாங்கு உணரற்பாலது.

அத்தகைய சபைகள் ஐந்துள்ளன.

சித்ஸபை.

கனகஸபை

தேவஸபை

ராஜஸபை

நிருத்தஸபை

சித்ஸபை :—ஸ்ரீநடராஜர் ஸ்ரீசிவகாமி எழுந்தருளிய இடம். முதலில் பஞ்சாக்ஷரப்படிகள் ஐந்து. அதனைக் கடந்து பிரமன், விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் என்ற பஞ்ச பீடங்கள். ஐந்தாவது சதாசிவ பீடத்தின்மேல் ஸ்ரீநடராஜர் ஸ்ரீசிவகாமியுடன் ஆனந்த நடனம் இயற்று கிருர். இவர்களுக்குப் பின்புறத்து, அருவத்திருமேனி கொண்டு ரகஸ்யமாகவும், பிரகாசிக்கின்றனர்.

இந்தசித்ஸபையே இறைவன் மூன்று நிலைகளில்உள்ள நிலையை நமக்கு நன்கு எடுத்து விளக்குவதாகும். அருவ ரகஸ்யமாகவும், உருவ நடராஜர் வடிவிலும், அருவுருவ சந்திரமௌலீஸ்வரர் லிங்க உருவிலும் காட்சி நல்குகிருர். இங்கு மட்டும் நெய்தீபமொன்றுதான் இடப்படுகிறது. தில்லை வாழந்தணர்கள் மாத்தியானீக பூஜை செய்ய வேள்வியில் இருந்து வந்த ஸ்ரீரத்தினஸபாபதி நடராஜர் இங்குத்தான் சிறு பெட்டியில் வீற்றிருந்து அருள் நல்கு கின்ருர்.

அருவமான ஸ்ரீரகஸ்யத்திற்கு தினந்தோறும் இரவு 4½ மணிக்கு பூஜை நடை பெறுகின்றது. ஆண்டிற்கு 2 முறை விசேஷமாக ஆனி, மார்கழி தரிசனத்தன்று காலையில் பூஜை நடைபெறுகிறது. இதன்றி விசேஷமாகப் பூஜை செய்ய நினைத்தால் அதற்கான முறையோடு பூஜை செய்யப் படுகிறது. இங்குத் தீபம், நெய் ஒன்றால் மட்டும் ஏற்றப் படுகிறது.

இங்குத்தான் நந்தனார், மணிவாசகர் ஆகியோர் ஜோதி ஸ்வரூபமாக இரண்டறக் கலந்தனர் என்றும் கூறப்படு கிறது. இங்கு நடராஜரும் ஸ்ரீசிவகாமியும் சம்மேளனச் சக்ரத்தில் (யந்திரம்) எழுந்தருளியதால் அதனை மறைத் துத் திரை இடப்பட்டுள்ளது. அதனை நமது மலமாயைத் திரைகள் எனக் கூறினும் ஒக்கும். திரையை நீக்கினால் ஞானாகாசப் பரவெளியில் ஈசன் ஒளிவடிவில் தோன்றுதல் போல "சுவர்ணஜ்யோதி"யாகத் தோன்றுகிறான். இதுவே ரகஸ்யம் எனக் கூறப்படுகிறது. அவ்விடத்து ஸ்ரீநடராஜர் சிவகாமியை மனத்தால் நாம் காண வேண்டும். நம் கண் காண, தங்க வில்வ மாலை இடப்பட்டுளது. அந்த இடத்தில் புனுகு, ஜவ்வாது, சாம்பிராணித் தைலம் அபிஷேகம் செய் யப்பட்டுளது.

இங்கு பூஜைசெய்யும் பூஜைகாரர் அன்றைய "பேசும் நடராஜர்" என்று கருதப்படுகின்றார். அவர் கையால் கொடுக்கப்படும் விபூதி மிக விசேஷமுடையது. தில்லை வாழந்தணர்களாய நாங்களும் அன்றன்றைய பூஜைகாரர் கொடுக்கும் விபூதியை வாங்கியணிந்து மனநிறைவைப் பெறுகிறோம். இத்தகைய காட்சி இங்கு ஒரு இடத்தில் மட்டும் காணப்படுங் காட்சியாகும். இந்நிகழ்ச்சியைக் கூறும்போது பழைய நிகழ்ச்சி ஒன்று நினைவில் வந்து நிற்கின்றது.

முற்காலத்து ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஸ்வாமிகள் தில்லைப்பதியில் ஸபைக்கு வந்து வலம்வரும் போது, முதல் முறையில் அந்தணர் கூடிய ஸபையில் ஸ்ரீ நடராஜரைக் கண்ட ஸ்வாமிகள், தில்லைவாழந்தணரை ஸாதாரணமாக நினைத்து வலம் வர, இரண்டாவது முறை வலம்வரும்

போது, ஸாதாரண அந்தண வடிவமுடையவரெல்லாம் ஈசனுடைய வடிவமுடையவராகக் காட்சி நல்க உடனே அவ்வண்ணமே பாடியதாகப் பாடல் கூறும். அவர்தம் மனக்குறையும் நீக்கியருளினுர் என்பதும் அறியலாம்.

"நீலத்தார் கரிய மிடற்றுர் நல்ல
நெற்றி மேலுற்ற கண்ணினுர் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகை தொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங் கூறுதுமே"

(ஞான—3-ஆம்பாடல் 3-ஆம் திருமுறை)

இச் சபையில் எழுந்தருளிய ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ நடராஜ ராஜர் என அழைக்கப்படுகிருர்.

ஸ்ரீ நடராஜர் தத்துவம்:

பாணபானு கம்பன் குடமுழாந் தாளம் ஆர்க்க
நாண வொலியாழி நட்டமே—காண
விரித்த துவனியாம் வீசு சுடரான்
விரித்த மலர்த்தாள் விரும்பு. (9. தூக்கிய பாதத் துதி)

தீயும் துடியும் திருமலர்த்தாள் சுட்டுகரம்
நோயுருவண்ணம் அபயந்தம்—தாயுமுயிர்க்
கீதுங்கட் கற்பேற்றை நல்கும் எனத்தூக்கும்
வேதசிகை போற்றுந்தாள் வேண்டு.

(64 தூக்கிய பாதத் துதி)

முக்கண் நகைமுகம் நீறணிந்த நெற்றியும்
தக்கன் மருகற் றரித்தானும்—செக்கருடல்
சீவன் நடுவண் அமைவானும் சித்ஸபையான்
மாலயன் தாதைதாள் வாழ்த்து

(66 தூக்கிய பாதத் துதி)

சிலம்பணி தாள் பூதத்தின் மேலூன்றி வேதன்
பலதேவர் பூசித்த வாம—நிலைபெற்ற
கால்தூக்கி யாடிக் கழிமகிழ்வை நல்குமந்
நூல் தூக்கும் மார்பன்தாள் நோக்கு.

(70 தூக்கிய பாதத்துதி)

தூக்கியபாதத்துதி என்பது ஸ்ரீ உமாபதி சிவம் எழுதிய "குஞ்சிதாங்கிரிஸ்தவம்" என்ற வடமொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூலாகும். இப்பாடல்களால் ஸ்ரீ நடராஜர் திருவுருவம் காட்டப்படுகின்றது.

உடுக்கைக்கரம் சிகரமும், வீசியகரம் வகரமும், அபயத்தில் யகரமும், எரியில் நகரமும், ஊன்றிய திருவடியின் கீழ் மகரமும் கொண்டு ஓங்காரத் திருவாசியின் நடுவில் நிறை சுடராக ஸ்ரீ நடராஜர் ஆனந்த நடனம் செய்கிறார்.

கண் பெற்ற பயன் அவன் திருக்கோலம் காணவே எனப்பாடுதலும் ஈண்டுணரற்பாலது. ஈசன் நடத்தை ஈசன் அருகில் உள்ள ஈஸ்வரியே மகிழ்ந்து நோக்கி, ஆன்மாக்களுக்கு அருள் வழங்கி நிற்கின்றனர் என்னில், தாய் தந்தைப் பாசம் எத்துணை வலிமையுடையது என்பதும் நன்கு புலனாகும்.

பாசத்தை நீக்கிப் பசுக்களுக்குப் பதி அருள் நல்கும் திறம் என்னே! என்னே!

"உலகமே உருவமாக
யோனிகள் உறுப்பதாக
இலகுபே ரிச்சா ஞானக்
கிரியையுட் கரணம் ஆக
அலகிலா உயிர்ப்புலன்கட்
கறிவினை ஆக்கி ஐந்து
நலமிகு தொழில்களோடும்
நாடகம் நடிப்பன் நாதன்"

எனச் சிவஞான சித்தியார்—அருள்நந்தி சிவாச்சாரியார் கூறுவதுபோல, ஞானநாடகம் ஆடும் நடராஜப் பெருமானை மாணிக்கவாசகரும் மகிழ்ந்து போற்றுகின்றார் என்பதை நோக்க, உள்ளம் நெகிழ்கின்றது.

புக்க திருத்தாண்டகம்

"மங்குல் மதி தவழும் மாடவீதி
மயிலாப்பிலுள்ளார் மருகலுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்ருலத்தார்
குடமூக்கில்உள்ளார் போய்க் கொள்ளம்புதூர்த்
தங்குமிடமறியார் சால நாளரர்
தருமபுரத்துள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ்சூழப்
புலியூர்ச் சிற்றம்பலத்தே புக்கார் தாமே."

என்று திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடிய புக்க திருத்தாண்டகம் ஜீவகலைகள் யாவும் ஸ்ரீ நடராஜரிடம் இருந்து பிரிந்து சென்று பூரணமாய் ஒடுங்கும் பூலோக கயிலாயம் என்பதை உணர்த்துவதாய் நிற்கின்றது.

கனகசபை : ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ சிவகாமி, ஆண்டில் நான்கு முறைகள் (சித்திரை, ஆவணி, புரட்டாசி, மாசி) திருமஞ்சனங்கொள்ளும் சபையாகும். (சித்சபைக்கு முன் உள்ள சபை, அதாவது நந்திகேஸ்வரர் அமர்ந்துள்ள சபை) இவ்விடமே னு சந்திரமௌலீஸ்வரர் நாள்தோறும் திருமஞ்சனம் கொள்ளும் சபையாகும்.

இவ்விரு சபைகளும் சேர்ந்து இதயத்தானம் அமைப்புடையது என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

"சபைக்கற்கள் அக்கரமாம் ஐவருமே பீடம்
அவைமேலே யோங்கும் அருவத்—தமைகின்ற
பூதம் மறையோடு சாத்திரமும் நுண்தூணுய்
ஓதும் மலர்த்தாளே யோது"

என்றும்,

நாதன் வதிகின்ற நாற்புறமும் பொற்சபையின்
போதம் தருகம்பம் ஆகமமே—வேதனையே
பாடித் துதித்துப் பரமன் அருள் வேண்டும்
ஆடி மகிழ்வோன்தாள் அண்டு.

என்றும்,

ஆடும் அரனே ஐய விஜயக் காவலரால்
நாடும் சபையில் நடம்பயில்வோய்—தேடிவரும்
பஞ்சாக்ஷ ரப்படிமேல் தொண்ணூற் றறுதத்வம்
பஞ்சவரும் போற்றுந்தாள் பாடு.

(பஞ்சவர்—பிர்மா, விஷ்ணு, ருத்ரன், மகேசன், சதாசிவம்)

என்றும்

நவசத்தி தூவியா ஆணியே ரோமம்
அவச முயிர்ப்பாகும் ஓடே—புவனமும்
நாடியும் நுண்கலையும் நாப்பண் உளமரமும்
தேடிப் பணிதாள் தெளி

என்றும்

குஞ்சிதபாதத் துதிமாலை கூறுவதைக் காணலாம்.

ராஜசபை :—இந்தச்சபை ஆயிரந்தூண்களுடன் கூடிய ஸபையாகும். அரசன் நாளோலக்கம் பிரவேசிக்கும் பாங்கினது. ஆண்டுக்கு இருமுறை (ஆனி, மார்கழி) இங்கு ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ சிவகாமி எழுந்தருளி அபிஷேகம்கொண்டு ஆனந்தக்காட்சி நல்கி அருள்பாலிக்கின்றனர்.

ஆறு அபிஷேகங்களும் முறையே தேவமானப்படி ஒரு நாளெனக் கணக்கிட்டு நிகழ்த்துவதேயாகும். மனித நாள் ஒன்றுக்கு ஸ்ரீ நடராஜர் சார்பாக ஸ்ரீசந்திர மௌலீஸ்வரருக்கு ஆறு அபிஷேகம் நடைபெறுகிறது.

ஸ்ரீ நடராஜருக்கு ஓராண்டுக்கு 6 அபிஷேகம். அதாவது விடியலான மார்கழி முதல் அபிஷேகமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் மாலை.அபிஷேகம் ஆனி அபிஷேகமாக ஆகிறது. பகல் இரவு இரண்டு வேளைக்கும் இரண்டு அபிஷேகத்தைக் கொள்ளும் ஸ்ரீ நடராஜர் விடியலில் ஏற்று மறுநாள் ஆனந்த நிர்த்தனம் செய்து ஆன்மாக்கள் உய்ய எழுந்தருளுகின்றார். இரண்டு மட்டும் ஏன் ஆயிரக்கால மண்டபத்தில் கொள்ள வேண்டும் என்னில் ஆன்மாக்களுக்கு ராஜ ராஜராகிய நடராஜ ராஜர் அருள் நல்க ஒரு நாளில் காலை மாலை இருவேளைகளிலும் அருள்தர எழுந்தருளி இனிய நல்லருள் நல்குகின்றார்.என்பதே கருத்து. அந்நாளே திருநாளாகவும் கொண்டாடப்படுகின்றது. நாள்தோறும் திருவிழா என்பது இவ்விடம் மட்டுமே பொருந்தும் கூற்று.

இதனை நன்கு கூர்ந்து நோக்கவே புலனும். தேவ நாள் என் பதும் ;இன்று விஞ்ஞானம் கண்ட ஒன்றே. (உதாரணம்: சந்திரனில் 15 நாள் பகல்—15 நாள் இரவு.)

இச்சபையே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் எழுதிய சபை; ஸ்ரீ பதஞ்சலி வியாகர்ண மாபாஷ்யம் உப தேசித்தஇடம்; மணிவாசகர் ஈழநாட்டு ஊமைப் பெண்ணைப் பேச வைத்தது; பரதமுனி பரத சாஸ்திரத்தை எழுதியதும் இவ்விடமே.

நிருத்தஸபை :—காளியுடன் ஸ்ரீநடராஜர் ஊர்த்துவ நடனமாடி வென்ற இடம், சிற்றம்பலத்தின் எதிரில் 'துவஜஸ்தம்பத்தின் தெற்குப்புறத்தில் உள்ளது.

தேவஸபை :—தேவர்கள் யாவரும் கூடியுள்ள ஸபை உத்ஸவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ள ஸபை இதுவே.

இவண்தான் திக்ஷிதர் ஸபைகூடும். இவ்விடத்துத் தான் திருவாபரணங்கள் 20 பூட்டிட்ட பெட்டகங்களில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

இக்கோயில் நான்கு ராஜகோபுரங்களால் சூழப்பெற்றுச் சிறப்புற்றுக் காட்சியளிக்கின்றது. பரதருடைய வட மொழிநூல் நாட்டிய சாஸ்திர செய்யுட்களுக்கு உருவக மான 108 காரணங்களைக் காணலாம்.

கிழக்கு கோபுரம் :—விக்ரமசோழன் எழுப்பியது. காஞ்சி புரம் பச்சையப்ப முதலியார் புதுப் பித்து வைத்தார்.

தெற்கு கோபுரம் :—ஒரிஸா வெற்றிச் சின்னமாக கோப் பெருஞ்சிங்க பல்லவன் எழுப் பியது.

மேற்கு கோபுரம் :—கி.பி. 1258 சடையவர்மன் சுந்தர பாண்டியன் எழுப்பியது.

வடக்கு கோபுரம் :—கி.பி. 1509 விஜயநகர கிருஷ்ணதேவ ராயர் எழுப்பியது.

இக்கோயிலின் சிறப்பு எல்லையற்றநிலையில்அமைந்தது என்பது யாவரும் அறிந்த ஒன்றேயாம்.

தீர்த்தம் : ஹிரண்யவர்மன் நோய் தீர்ந்தது என்று கூறப்பெறும் சிவகங்கையே.

விருக்ஷம்: தில்லை

கோயில் நிர்வாகம் : இக்கோயில் நிர்வாகம் தில்லை மூவாயிரவர் எனப்படும் திக்ஷிதர்களின் நுணுக்க சட்ட திட்டங்களினால் நடந்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

ஆதி நாள் முதல் தீக்ஷிதர்களின் சமுதாயம் வேத சாஸ்திர சம்பிரதாயங்களுடன் இன்றியமையாச் சட்ட திட்டங்களை இயற்றிக் கோயில் பராமரிப்புடன் புராதனப் பழக்க வழக்கங்களில் வழுவாது நிலைக்கும் சிறப்பு தில்லை யம்பதி சபைக்கே உரியது என்னில் மிகையாகாது.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு செந்தலைக்கல்வெட்டு கூறும் செய்தியை நோக்கவும் இது விளங்கும்.

சோழ நாட்டில் விளங்கிய கோயில்கட்கெல்லாம் முதன்மையானதாகப் புலியூர்ச்சிற்றம்பலம் விளங்கியதால் கோயில் தேவகாரியங்களைக் கண்காணிப்பவர்களே நாட்டி லுள்ள ஏனைய சிவஸ்தலங்களின் வழிபாட்டு முறைகளையும் கண்காணித்து வந்துள்ளனர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இதுவன்றி ஆதி நாளில் திருநீலகண்டத்துக் குயவனார் தம்மனைவியைத் தீண்டேன் என்று சபதம் செய்திருந்த நாளில் திருவோடு தந்து பின்வாங்கிச்செல்வேன் என்ன பின் வாங்க வந்தக்கால் ஓடு மறைந்துவிட சொல்லிய வார்த்தைப் படி நடவாது விட அடியார் காணாமைக்குக் காரணம் யாது என்ன, தெரியேன் என்று குயவனார் கூற நம்பாது வாதிட வழக்கு தில்லை மன்றில் குழுமியுள்ள தில்லைவாழ் அந்தணர் பொதுவிற்குத்தான் வந்தது.

அந்தணர்தீர்ப்புக் கூறும்கால், முறை பிசகாது யாவரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் செய்த தீர்ப்பு ஈண்டு கூர்ந்து

நோக்கத்தக்கது. இன்றும் அத்தகைய வழக்கம் நிலவி வருகின்றது.

கணவனைப் பலரும் காணும் இடத்துத் தொடாது தர்ப்பைப் புல்கொண்டு தொடும் வழக்கம் சடங்குகளில் நிலவுகிறது. அத்தகைய முறையைப் பின்பற்றித் தில்லை வாழ் அந்தணர்கள் பொதுவில் தடியைப் பிடித்துச் சத்தியம் செய்யக் குளத்து மூழ்க உத்திரவு இட்டனர். மறுக்க இயல வில்லை: அதுபோல கூரியமதி கொண்டு ஆலோசனைகூறும் பாங்கு இன்றி யாவரும் அறிந்த ஒன்ருக அன்று முதல் கருதப்பட்டு வருகின்றது.

இன்னும் இராமாயணம் அரங்கேற்ற, முதலில் தில்லை யம்பதிக்குத்தான் கம்பர் வந்தார் என்பது தில்லைவாழ் அந்தணர் நிர்வாக நேர்மையுடையவர் என்பதைப் பறை சாற்றி நிற்கும் நிகழ்ச்சியாகும். அக்காலம் முதல் இக் காலம் வரை இனி எக்காலத்திற்கும் ஏற்ற வண்ணம் அமைந்துள்ள சட்டதிட்டங்கள், முறைகள், அமைப்பு முதலியனவும், வைதிகம் சம்பிரதாயம். பழக்க வழக்கங்கள் ஆகியவைகளும் இங்கு மட்டும்தான் கடைப்பிடிக்கப்படு கின்றன.

சட்டம்:—இங்கு இப்போது தில்லைவாழ் அந்தணர்கள் சுமார் 300 பேர் இருக்கின்றனர். இவர்கள், ஸ்ரீ நடராஜரை அர்ச்சித்து பூஜைசெய்பவர் திருமணமானவர். குழந்தைகள், தாய்மார்கள் பெண்கள் ஆகியோரை இதில் சேர்க்க வில்லை. இவர்கள் தனி. தில்லை 3000 என்றல்லவா சொல்வர். 300 தானேயுள்ளது? மீதி எங்கே என்பர். குறைந்தவர் எல்லாம் ஸ்ரீ நடராஜரே என்று கொள்ள வேணும். ஏனெனில் முன் அந்தர்வேதியாகத்தில், ரித்விக்கில் ஒன்று குறைய குறைந்த ஒன்று நானே என்றனர். நடராஜர் மீதியும் அவரே என்பது தெளிவுறும். ஏனென்ருல் யுகத் துக்கு யுகம் குறைந்த நபர்களுக்கு நானே ஈடாவேன் என் றும் கூறினர் என்பர்.

அவ்வண்ணம் ஆகிய 300 பேரும் திருமணப்பேற்றின் பின்புதான் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை அர்ச்சிக்கும் உரிமை

யுடன் கோயில் நிர்வாகப் பொறுப்பின் உரிமை உடையவர் களாகவும் கருதப்படுகின்றுர்கள்.

அவ்வண்ணம் உரிமை உடையவராகத் திருமணம் செய்து கொண்டவுடன், கருதப்படும் அந்த தீக்ஷிதர் ஒரு விண்ணப்பத்தின் மூலம் ஓர் ஓலையில் தனது பெயரை எழுதிக் கோயில் வட்டம் (கோயில் மாதம்–20 நாள்) 20-வது நாளில் கோயில் பொதுச் சபையினர் முன்னர்க்கொடுத்துத் தன்னைக் கோயில் நிர்வாகத் துறையில் ஒரு பங்குதாரராக ஏற்றுக்கொண்டு ஏக மனதாக உத்திரவு செய்யவேணும் என்று நமஸ்கரித்துக் கேடடுக்கொண்டதன் பேரில் சம உரிமை படைத்த தீக்ஷிதராக ஆகிறுர். இவ்வாறு பங்குடைய தீக்ஷிதர் வயது, கல்வி, திறமை, பொருளாதாரம் இவைகளினுல் எந்த வேறுபாடும் உடையவராகக் கருதப் படமாட்டார் என்பதும் சட்டம்.

இச்சட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவென்பது மிக மிக நுணுக்கமாக ஆராயத்தக்கது. நிர்வாகத் துறையில் முதன் முதலில் தகராறுகள் வருவது வயது, கல்வி, பொருளாதாரம், திறமை, என்பதில் ஏதேனும் ஒன்று கருதப்பட்டு விட்டால் மீதிஎல்லாம் அடிபட்டு நீதி குலையும், நேர்மை அழியும், பாரபக்ஷம் வளரும், நிர்வாகம் கோணும், சீர் குலையும்.

ஆதலால் (ஜெனரல் பாடி மீட்டிங்) பொதுவில் ஒரே மதிப்புடையவர் தெரிந்த விஷயங்களில் யாரும் கருத்துத் தெரிவிக்கலாம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பது இல்லை என்ற நிலை உள்ளதால் பெரியோராய் உள்ளவர் ஒரு பிழை செய்துவிட்டால் பெரியவராயிற்றே அவரை மன்னித்துவிடு என்றும், இவன் ஒன்றும் தெரியாதவன் ஏன் கேட்டுச் செய்யவில்லை, ஆதலால் இவனுக்கு மட்டும் தண்டனை கொடு என்றும் கூறும் வழக்கம் இங்கு மட்டும் (பொதுவில்) இல்லை. ஏனெனில் முன் கூறிய வண்ணம் குறையும் தீக்ஷிதர்களை நடராஜரே நிரப்புகிறுர். ஆதலால் தீப வடிவில் (ஸபையில் உள்ள பொதுவார் வெள்ளி விளக்கு) ஸபைக்கு எழுந்தருள வைத்துக் கூடிப் பேசி முடிவெடுப்பர். அந்த முடிவும் நடராஜர் செய்த

ஆக்ஞையே என்று கூறும் வழக்கம் இக்கோயில் நிர்வாகத்தில் இருக்கின்றது.

சிறிய நாட்டுச் சபையே இது. இச்சபை முறைகளை ஒட்டியே இன்று நாட்டின் ஸபைகள் ஒரு சில சட்ட திட்ட கட்டுப்பாட்டுடன் நடக்கிறது எனலாம். இங்குத் தோன்றிய முறைகள் தான் நாட்டில் உலகில் வியாபிக்கின்றன என்று கூறினும் ஏற்புடைத்தே.

இத்தகைய உரிமை தொடக்கம் ஆரம்பமாகிறது. அந்த தீக்ஷிதரின் இறுதி நாள் இறந்த பிறகும் 10-ஆம் நாள் முடியும் வரை தொடர்கிறது என்னில் சாஸ்திர சம்பிர தாயங்களுடன் சேர்ந்த சட்டமாகும்.

முறைகள் : அவ்வாறு சேர்ந்த உரிமை உடைய தீக்ஷிதர் கள் 300 பேருக்கும் எவ்வாறு முறைவருகின்றது எனில்,

1. கோயில் மாதம் (வட்டம்) 20 நாட்கள் கொண்டது தவலை வாடகை-வாகன மண்டபம்.

2. மணியம்—1 மாதம்—30 முறைகாரர்—4 பேர் (நகை பாதுகாக்கும் முறைகாரன்.)

3. அ. கங்காணம்—6 மாதம்
 முறைகாரர் 20 பேர்.
 முறைகள்—20 நாட்கள் (வட்டம்)
 முறைகாரர்—20 பேர்.

 அர்ச்சனைமுறை—20 நாட்கள் (வட்டம்)
 முறைகாரர்—20 பேர்.

4. கோயில் நிர்வாக கமிட்டி—1 வருடம்
 முறைகாரர்கள்—9 பேர்.

அந்த ஒன்பது பேருள் ஒருவரை தங்கள் முழுமனத் துடன், செயலராகவும் ஒருவரை துணைச்செயலராகவும் தேர்ந்தெடுக்கின்றனர். அவரே அந்த ஆண்டு ஏப்ரல் மீ முதல் தேதி முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதி

வரை கோயில் நிர்வாகங்களைக் கண்காணிக்கவும் முறைப் படியும், சட்டப்படியும், சம்பிரதாயப்படியும், எல்லாக் காரியங்களையும் நடைபெறச் செய்தும் வருகிறுர்.

ஸபை, அம்மன் கோயில், மூலஸ்தானம், தேவஸபை. பாண்டிய நாயகம் என்ற கோயில்களில் 20 பேர் வரிசைப்படி நான்கு நபர் வீதம் முறையை அடுத்தடுத்து பார்த்து வருகிறுர்கள். 20-வதுநாள் முடிவில்மறு இருபதுநபர்ப்பட்டியல் படி முறை முதலானவை தொடர்கிறது. முதல் நாள் தொடக்கத்தில் அந்த ஐந்து கோயில்களிலும் புதிய நபர் நான்கு பேர் கையெழுத்திட்ட ரசீது கொடுத்து நகை முதலாகப் பித்தளை பாத்திரம் பூட்டு சாவி வரை எல்லாச் சாமான்களையும் ஒப்புக் கொள்கிறுர்கள். ஸபை தவிர நான்கு கோயில்களில் மட்டும் நாள் தோறும் அடுத்தடுத்த முறைகாரர்கள் ஜாபிதாப்படி சாமான்களை ஒப்புக் கொண்டு தனி ரசீது கொடுக்கும் பழக்கம் இன்றும் இருந்து வருகின்றது.

ஸபையில் மட்டும் நான்கு நாட்களுக்கும் நான்கு முறை காரர்களும் சேர்ந்திருந்து: தங்களுள் "முறைப்படி" பூட்டு திறப்பு சாவி எடுத்துச் செல்லுதல். பள்ளியறை திறப்பது நடராஜர் சிவகாமி ஆபரணங்களை சார்த்துதல், கழித்தல், ஆகிய வேலைகளைச் செய்து காவல் முறைகளையும் பார்த்து வருகின்றனர்.

இரவு 12 மணி முதல் காலை 4 மணி வரை காவல் முறையைக் கணித்து ரசீது வாங்கிச் செல்கின்றனர்.

அதே ஸபையில் அர்ச்சனை முறை ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை ஐந்து பேர் சேர்ந்து தீக்ஷிதரை தெரியாத (கட்டளை இல்லாத) வெளியூர் வாசிகளான தரிசனர்த்திகளுக்கு அர்ச்சனை செய்து, வரும் பக்தர்கள் திருப்தியுடன் செல்லப் பராமரிக்கின்றனர்.

ஸ்ரீ நடராஜருக்கு ஒரு காணி நிலம் கூட இல்லை. அவ்வாறிருந்தும் எல்லாம் முறைப்படியே இங்கு நடைபெறுவதால் கோயில் வேறு நாங்கள் வேறு என்று பாராமல்

கோயில் நலமே எங்கள் நலம் என்று எண்ணும் எண்ணம் இங்கு என்றும் நிறைந்துள்ளது.

ஆதலால்தான் தீக்ஷிதர்கள் ஏழ்மையான நிலையில் இருந்த போதும் வறுமையிலும் பெருமிதம், வறுமையிலும் செம்மை உடையவர்களாக இருக்கின்றனர் என்பதும், ஸ்ரீ நடராஜர் அருள் துணையொடு இணைந்துள்ளது எங்கள் வாழ்வு என்பதும், தீக்ஷிதர்களோடு பேசினாலும், பார்த்தாலும், பழகினாலும், தெரியவரும் கருத்தாகும். இந்த நான்கு விதமான முறையோடுகூட எல்லாமே, அந்தப் பெயர்ப்பட்டியலில் உள்ள நபர் வரிசையே பின்பற்றப்படுகிறது.

சட்ட அமைப்பில் ஒன்று கூர்ந்து நோக்க தக்கது. பெயர்ப் பட்டியல் பெயர்சேர்ப்பு குறித்த தீக்ஷிதர் மெம்பராகச் சேரும்போது நடக்கும் வட்ட நபர்களில் முன்னவர் பின்னவராக வேண்டிய நபர் இருக்க இடையில் சேர்ந்து விட்டால் திரும்ப மாறுதல் சாதாரணமாக இயலாது. காரணம்— ஒரு வட்டத்தில் ஒரே வீட்டில் உள்ளவர் இருவர் முறை வந்தால்தான் மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்பது சட்டம். அங்ஙனம் இல்லையேல் மாற்றவே இயலாது. அந்த வரிசையும் மாறாது. அவ்வண்ணமேதான் சுழன்று வருகின்றது.

அந்தப் பொது மீட்டிங்கில் வரும் விஷயங்களை ஏக மனதாகத்தான் நிறைவேற்றுவது வழக்கம். இவ்வண்ணமே எல்லாக் கூட்டமும் தலைவர் ஒருவரை முதலில் தேர்ந்தெடுத்துப் பின் பிரச்சனைகள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்த மீட்டிங் கூடுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன் ஆள் மூலம் வீடுதோறும் தெரிவிக்கப்படுகிறது. கங்காண முறை. மீட்டிங் முதலானவை "முறை தெரிவிப்பு தாக்கீது"களில் கையொப்பம் வாங்கப்படுகிறது.

கையெழுத்து இடும் வழக்கம் ஆஜர்பட்டி—ரசீது, ஆகியவைகளில் இடப்படும் கையெழுத்து தாமதிக்கப்

பட்டால் அபராதம் என்ற முறை இன்றும் இருந்து வரு கிறது. **குறித்த நேரம் கடைப்பிடிக்கப்படுகிறது.**

வைதிகம் : வைதிக பூஜையென்பது தில்லையில் சிறப் பாக நடை பெறுவது குறிப்பிடத்தக்கது. எல்லாக் கோயில் களிலும் நடைபெறும் முறையிலிருந்து மாறுபட்டு, எல்லாச் செயல்களும் வேதங்களையே பிரதானமாக வைத்து இங்கு அனுஷ்டிக்கப்படுகிறது. தந்திரங்கள் (முத்திரைகள்) இன்றி எல்லாம் மந்திர வாக்கியங்களைக் கொண்டே நடை பெறுகிறது. வேதரிக்குகள் மூலம் பூஜை; ஹோமம் முதலி யன இயற்றி நடை பெறச் செய்வதால் இங்கு வைதிக பூஜை நடைபெறுகிறது என்பது புலனுகும்.

தந்திரம் :—பழங்காலந் தொட்டுக்காட்டப்படும் முத்திரை கள் வைதிக பூஜையில் தந்திரங்கள் அதிகம் உபயோகிக்கப் படுவதில்லை.

நியாசங்கள் நிறைய உண்டு. அவற்றைச் செய்யும் போது அந்த அந்த தெய்வங்களுக்கு உள்ள காயத்ரியும், தியான ஸ்லோகங்களும் உபயோகிக்கப்படுகின்றன என்பது வரை கூறலாம். இந்தப் பூஜாவிதிகள் பதஞ்சலி பூஜாசூத்ரத்தில் உள்ளன. இந்த முறைகளைக் குரு மூலமா கத்தான் அறிய இயலும்.

ஆதிநாள் தொட்டு இவ்வண்ணமே நடந்து வருகின் றது. ஹோம கர்மாக்கள் (கோயில்) போதாயன மகரிஷி யால் அமைத்த விதானப்படி விரிவான முறை கடைப்பிடிக் கப்படுகிறது.

ஸ்ரீபதஞ்சலி முனிவர் காலந்தொட்டு பூஜை முறைகள் நடைபெற்று வருகின்றன. இங்குச் சில வேறுபாடுகளை உண்டாக்க வேண்டும் என்றே சிலர் முனைகின்றனர்.

உதாரணமாக ஸ்ரீ நடராஜரே தமது சந்திர கலையிலி ருந்து ஒழுகிய அமுததாரையை எடுத்து லிங்க வடிவில் தீக்ஷிதர்கள் நித்ய பூஜை செய்யத் தந்தனர் என்று இருக்க, அந்த வரலாற்றை மாற்றி, ஆதிசங்கரர் ஸ்ரீசந்திர மௌலீஸ்வரா தாபித்தார என்கின்றனர் இது பெருங்

தாக் கூற்ருகும். ஏனெனில் ஆதிசங்கரருக்கு முன்னரே சிதம்பரம் உள்ளது என்பதும், பிரமன் அந்தர் வேதியாகம் செய்தஞான்று ஸ்ரீரத்னஸபாபதி (ஸ்ரீநடராஜர் உருவில் மாணிக்க மூர்த்தி யாகத் தீயில் உதித்தவர்) வந்தனர் என்றும், பூஜை புரிய தீக்ஷிதர்கள் ஏக்கமுற உடன் ஸ்ரீநடராஜர் நித்திய பூஜைக்குத் தன்னை ஆவாஹித்து மேற் படி லிங்கத்தைத் தந்தனர் என்பதே அங்குள்ள உண்மை வரலாரும். இது பற்றிப் பல முறையும் எழுதப்பட்டுள்ளது. வைதிக பூஜை நடைபெறுகிறது எனக் கூறப்படுவதி லிருந்து, ஈண்டு இதுபோல அந்த அந்தக் காலத்துப் பெருமையுற்ருேர் பலர் பல கதைகளைக் கட்டி உள்ளத்தை நோக வைக்கின்றனர். காலவரை காண முடியாதவற்றை எளிதாக்க நினைக்கின்றனர் புனித தத்துவத்துக்குப் புறம்பு பேசுகின்றனர். பேதையர் நினைத்துச் சூரியன், சந்திரன் நேற்றுத் தோன்றினர் என்ருல், நம்பும் பாங்கினர் யாருளர்? இருப்பினும் இவ்வண்ணமே பலரும் நம்பும் வகையில் ஏதேனும் பொய் புரட்டுகளைக் கூறுவோர் பக்கம் தான் பலரும் நிற்கின்றனர்.

"பலரும் விடங்கண்டு நன்றென்ன
நல்லவர் அமுதொழீஇ உண்ணுமே நஞ்சு"

என்றனர்.

ஆனுல், இன்று காணும் உலகில் இந்தப் பாடலும் பொய்யாகும் வண்ணம் செயல்கள் நிகழ்கின்றன என் பதைப் பார்க்கும்போது மக்கள் உள்ளங்கண்டு, மயங்க, பயப்படத் தோன்றுகிறது.

விடம் என்று தெரிந்தே உண்டு மடிதலைத்தான் இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். ஆதலால் ஒவ்வாத கருத் துக்களை உலவவிட்டு உலகினரைத் திணரச் செய்யும் பாங்கை அறவே கண்டிக்கின்ற நிலை வந்தே தீரவேண்டும் என்பதுதான் என் ஆவல்.

ஸ்ரீநடராஜர் தேர் அன்று செய்யப்படும் காலைக் காலங் கள் முதல் நாள் இரவே இரண்டாங் காலம் வரை நடை பெற்று முடிந்து, உச்சிக்கால தீபாராதனை தேரில் மத்தி யானம் நடைபெறுகிறது.

சில விதிகளைக் கால தேச வர்த்தமானங்களுக்கிடையே ஸௌகரியமாக அமைத்துக் கொள்ளும் முறை ஆதிநாள் தொட்டு நடந்து வருவதாகும்.

கோயில் எல்லையான கோபுரங்களைத் தாண்டி எந்த ஸ்வாமியும் வெளியில் புறப்பாடு செய்யப்படுமாயின் முக்கிய காலங்கள் செய்யப்படுவதில்லை. அந்த மூர்த்தி உள்ளே வந்த பின்தான் இயற்றப்படுகின்றது.

சம்பிரதாயம்: பழக்க வழக்கங்கள்:

1. பல சம்பிரதாயங்கள் இங்குக் கடைப் பிடிக்கப்படு கின்றன. நித்திய பூஜைகாரரும், விசேஷ பூஜைகாரரும் உண்டு. உற்ஸவ (விசேஷ) பூஜைகாரர் விக்னேஸ்வரர் பூஜை அனுக்ஞை என்பன ஸபையில் வந்து செய்வர். ஸபை பூஜைகாரர் அங்கேயே இருப்பார்.

2. கார்த்திகை தீபம் ஏற்றுதல் ஸபையில் தனி ஆச்சாரியர். அன்றைய பூஜைகாரர் ஸ்ரீநடராஜருக்கு தீபாராதனை செய்வார்.

3. 6-காலங்கள் ஆகுநேரங்களில்தான் ஸ்ரீஸ்வர்ண கால பைரவர் கொள்ளுதல்.

4. ஆண்டு அபிஷேகங்கள் 6-ல், நான்கு அபிஷே கங்கள் மாலை வேளையில் செய்யப்படுதல்.

5. வீதியுலாப் போந்து ஆயிரக் கால் மண்டபம் விட்டு ஸ்ரீசிவகாமசுந்தரி ஸமேதராய் ஸ்ரீநடராஜர் சித்ஸபா (இருப் பிடம்) சேர்தல் நேரம் பார்ப்பதில்லை.

6. பிரம்மோத்ஸவம் நடைபெறும் பொழுது, சிறிய உத்ஸவாதிகள் வந்தால் செய்வதில்லை. (பிரதோஷம், மாதப் பிறப்பு.)

1. கங்காண நபர் 20 பேரும் ஸ்ரீநடராஜர் ஸ்ரீ சிவகாமி ஸபைவிட்டு ஆனி மார்கழி உத்ஸவங்களின் போதும் மீதி நான்கு அபிஷேகத்தன்றும் புறப்படும்போது, ஸ்ரீபாதம் தூக்கக் கடமைப்பட்டவர்கள் என்பது சட்டம். தூக்க

வரவில்லை எனின் தண்டனையும் உண்டு. இந்த 6 சமயங்களிலும் ஸ்ரீ பாதம் தூக்கப் பலரும் (தீக்ஷிதர் முறையில்லாதவர்) முன் வருகின்றனர். சித்ஸபைக்கு ஸ்ரீநடராஜர் சென்று சேர்ந்த பின்தான் உணவு கொள்வதும் நியமப் பழக்கமாக இருந்து வருகின்றது.

2. நாள் 1-க்கு ஒருவர்தான் முறை. அவர்தான் பூஜை செய்யும் உரிமை உடையவர். ஆனால் பூஜை எடுத்துக் கொள்ளாதவரானால் தன் உறவினரையோ நண்பரையோ பூஜை செய்யச் சொல்லலாம். இதனால் ஒருவரே பல நாள் தொடர்ந்து பூஜை செய்யும் வாய்ப்பு உண்டு.

3. சரஸ்வதி பூஜை, ஊஞ்சல் உற்ஸவம், பிரதோஷம், காவடி அபிஷேகம், ஆகிய விசேஷங்களில் ஸபை பூஜைக்காரர் வந்து தீபாராதனை செய்வதும் இதன் பாற்பட்டதே.

4. கட்டளைக்காரர் தவிர, புதிதாக தரிசனார்த்திகள் வந்தால் அர்ச்சனை முறைகாரர் ஐவர்தான் அவர்களுக்கு அர்ச்சனை முதலானவை செய்ய வேண்டும் என்பது சட்டம். ஆனால் கட்டளைக்காரருக்குத் தெரிந்த, சொந்தக்காரர் வந்தாலும், ஒரு தனித்த தீக்ஷிதர் பரிச்சயமானவர் வந்தாலும், கட்டளைக்காரரே விரும்பினால் தனி தீக்ஷிதர் அர்ச்சனை செய்யலாம் என்பது பழக்க வழக்கத்தால் வரும் முறையாகும். இதனால் ஒரு கட்டளைக்காரருக்கு அர்ச்சனை செய்ய பல தீக்ஷிதர்கள் இருப்பது புலனாகும். சட்டப் புறம்பல்ல.

5. முறையில் அலங்காரம் செய்யும் முறைகாரர் பழக்க வழக்க முறையில் அலங்காரம் செய்யச் செய்யும் முறையும் இதன்பால் அடங்கும்.

இவ்வாறு சட்ட திட்ட சம்பிரதாய வைதிக முறைகளைக் கடைப் பிடிப்பதால் கட்டுக்குலையாது நன்கு நடக்கின்றது. கோப்புச் சிதையா நிலையை என்றும் உடையதாய் இருக்கும்படியாகச் செய்த பெருமை ஆதிநாள் பெரியோரையே சாரும். அந்தப் பெரியோர்களின் பொன்னார் திருவடிகட்கு எந்நாளும் போற்றி செய்யக் கடமைப் பட்டுள்ளேன்.

★

காளமேகம் கண்ட நடராசர்

ஆஸ்தான கவிஞர் கண்ணதாசன்

"ஏ, சிதம்பரத்து நடராஜா! நாட்டிலே ஆட்டுக் கெல்லாம் நாலுகால். உன்னுடைய ஆட்டுக்கு (ஆட்டத்துக்கு) இரண்டே கால். அதனுல்தான் வியாக்ரபாதர் என்ற புலி இந்த ஆட்டைவிட்டுப் போகவே மாட்டேன் என்கிறது. ஆனுல் ஒரு வேடிக்கை பார்த்தாயா நடராஜா? அந்தப் புலியை இந்த ஆடு அடக்கி வைத்திருக்கிறது. அதாவது, உன் ஆட்டம் அடக்கி வைத்திருக்கிறது. உன் ஆட்டத்தைக் கண்டு. மயங்கி நிற்கிறது!" என்கிருன் காளமேகம்.

இதிலே தமிழ் வார்த்தைகளைப் பகுத்து நாமும் ஒரு வேடிக்கை பண்ணிப் பார்க்கலாமா?

"போமோ சொல் லாயப் புலி" என்பது வெண்பாவின் கடைசி அடி

இதனைப் பிரித்தால், போமோ சொல்லாய் அப் புலி, என்றுதான் வரும்; இதை நாம் வேடிக்கை செய்தால் 'போமோசொல் லாயப்புலி' என்றும் பிரிக்கலாம். 'உன் லாயத்தில் மாட்டிக் கொண்ட புலி போகுமா?'

நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லையாவின்
ஆட்டுக்கு இரண்டுகா லானுலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி.

★

மன்றம்

முத்தமிழ்

'முத்தமிழ்' என்னும் சிறப்புப் பெயர் தமிழ்மொழிக்கு உண்டு. இயல் தமிழ், இசைத் தமிழ், கூத்துத் தமிழ் என்பன தமிழின் மூன்று பிரிவுகள். இலக்கண-இலக்கியம் சார்பானவை இயல் தமிழ் என்றும், இசைத் தொடர்பானவை இசைத் தமிழ் என்றும் இயம்பப்படுகின்றன. கூத்துத் தமிழோ நாட்டியம், நாடகம் என இரு வகையினதாகக் கூறப்படுகிறது.

கூத்துத் தமிழ்

உள்ளத்து உணர்ச்சிகளை—கருத்துக்களை உடல் உறுப்புக்களால் (ஒலியுடன்) நடித்துக் காட்டுவதில் நாட்டியமும் நாடகமும் ஒப்புடையன. இவற்றிடையே வேறுபாடாவது; ஒருவரே உடல் உறுப்புக்களால் நடிப்பது நாட்டியம்; பலர் உரையாடலுடன் நடிப்பது நாடகம். நாட்டியத்திலும் ஒருவர்க்கு மேல் சிலர் அல்லது பலர் பங்கு பெறுவதும் நடை முறையில் உள்ளது. இது "நாட்டிய நாடகம்" எனப்படும். எனவே, இப்போது கூத்துத் தமிழை நாட்டியம், நாடகம், நாட்டிய நாடகம் என மூவகையாகப் பிரிக்கலாம் போலும்!

இஃதிருக்க, முதலில் தோன்றியது நாட்டியமா? நாடகமா? என்பதைத் தெளியவேண்டும். சிலரை வைத்துச் சிறிய நாடகம் பழக்குவதே முதலில் இயல்பாயுள்ளது. பின்னரே, பலரை வைத்துப் பெரிய நாடகம் பயிற்றப்படுகிறது. இதிலிருந்து, முதலில் ஆள் குறைவாயிருப்பதே எளிது என்பது தெளிவாகிறது. இந்த அடிப்படை விதியுடன் பொருத்திப் பார்க்குங்கால், நாடகத்தினும் நாட்டியமே முற்பட்டது என்பது தெளிவாகும். மகிழ்ச்சியால்

புலவர் சுந்தர சண்முகனார்

பலர் குதிக்கும் இடங்களிலும், முதலில் ஒருவரே குதிக்கத் தொடங்கியிருப்பர்; பின்னரே அவரைத் தொடர்ந்து பலரும் குதித்திருப்பர்.

கூத்துத் தமிழ் நூல்கள்

நாட்டியத்தையும் நாடகத்தையும் தன்னுட் கொண்ட கூத்துத் தமிழ் தொடர்பான நூல்கள் பல தமிழில் இருந்தன. இதன் சான்றுக்குத் தமிழில் 'முத்தமிழ்' என வழங்கப்படுகின்ற ஒன்றே போதும். ஆனால் கூத்துத் தமிழ் நூல்கள் அழிந்து போயின — அழிக்கப்பட்டுவிட்டன. ஆடல்கலை தொடர்பான சில செய்திகளையும் அவற்றைக் கூறும் சில நூல்களையும் பற்றிச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களாலும், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களின் உரைகளாலும் நாம் ஓரளவே இன்று அறிய முடிகின்றது.

பயிலிடம்

"முத்தமிழ்" என்னும் பெயர் அமைப்பைக் கொண்டு, இம்மூன்று கலைகளும் தமிழகத்தில் பலவிடங்களிலும் பயிற்றப்பட்டன—பலராலும் பயிலப்பட்டன என்னும் உண்மை விளங்கும். இக்காலத்தில் 'பல்கலைக்கழகம்' என்னும் பெயருடைய பல்வேறு வகை நிறுவனங்கள் பல்வேறு கலைகளைப் பயிற்றுகின்றன. இவ்வாறே அக் காலத்திலும் பல நிறுவனங்களால் பல கலைகளும் பயிற்றப் பட்டிருக்க வேண்டும். அன்று, இயற்றமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், இசைத் தமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், கூத்துத் தமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், முத்தமிழையும் பயிற்றிய நிறுவனங்கள் சிலவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்திருக்க வேண்டும்.

சிற்சில கலைகளைப் பயிற்றச் சிற்சில இடங்கள்—ஊர்கள் சிறப்புடையனவாக இருந்திருக்க வேண்டும். இயல் தமிழுக்குச் சில இடங்களும், இசைத்தமிழுக்குச் சில இடங்களும், கூத்துத் தமிழுக்குச் சில இடங்களும் சிறந்தனவாய்த் திகழ்ந்திருக்கவேண்டும்.

முத்தமிழுள் கூத்துத் தமிழ் பயிற்றிய இடங்களுள் சிதம்பரமும் ஒன்று. ஆனால், "பத்தோடு பதினொன்று— அத்தோடு இஃது ஒன்று" என்றாற்போல் சிதம்பரத்தைக் கூறிவிடுவதற்கில்லை. கூத்துத் தமிழ் பயிற்றிய இடங்களுள் சிறந்தது சிதம்பரம்—தலையாயது சிதம்பரம். இதற்குச் சான்று வேண்டுமா?

நடராசர்

சிவபெருமானின் தெய்வக் கூறுகளுள்—தெய்வத் திருமேனிகளுள் ஒன்றாகிய நடராசர் திருவுருவத்தை அறியாதார் இலர். நடராசர் என்றால், நடனம் (நாட்டியம்) ஆடுவதில் மன்னர் என்பது பொருள். எனவே, நாட்டியக் கலையின் தந்தை—தலைவர் நடராசர் என்பது பெற்றாம். நடராசரது நாட்டியத்தின் வாயிலாகவே ஐந்தொழில்கள் (பஞ்ச கிருத்தியங்கள்) நடைபெறுகின்றன என்பது போன்ற மெய்யுணர்வுக் கருத்துக்களை ஈண்டு விரிக்காமல் விடுப்போம். இந்தக் கருத்து, நாட்டியக்கலையின் பெருஞ்சிறப்புக்குத் தக்க சான்றாகும் என்ற அளவோடு அமைவோம்.

அம்பலம்

எல்லா ஊர்ச் சிவன் கோயில்களிலும் நடராசர் திருமேனியிருப்பினும், ஆங்கெல்லாம், சிவலிங்க உருவமே முதன்மையுடையது; நடராசர் திருஉருவமோ, 'பத்தோடு பதினொன்று—அத்தோடு இது ஒன்று' என்ற அளவினதேயாம். சிதம்பரத்துப் பொன்னம்பலமும், மதுரை வெள்ளியம்பலமும், திருவாலங்காட்டு இரத்தின அம்பலமும், திருநெல்வேலித் தாமிர அம்பலமும், குற்றாலத்துச் சித்திர அம்பலமும் ஆகிய ஐந்தும் மற்ற ஊர்களிலும் சிறப்பாக நடராசர் நடம்புரியும் இடங்களாகும் என்ற கருத்தும் நாம் அறிந்ததே. ஆயினும், இந்த ஐந்து ஊர்களுக்குள் சிதம்பரம் தவிர மற்ற நான்கு ஊர்களிலும் சிவலிங்க உருவமே பெரும்பாலும் முதன்மைபெற்றுள்ளன. சிதம்பரத்தில் மட்டுமே சிவலிங்க உருவமின்றி நடராசர் உருவம் முதன்மை பெற்றுள்ளது. சிதம்பரத்தில் முதன்மையிடமாகிய மூலத்தானம் நடராசர் திருவுருவம் கொலு வீற்றிருக்கும் அம்பலமேயாகும். இதனை ஞானசபை, சிற்சபை,

பொற்சபை, கனகசபை, சிற்றம்பலம், பொன்னம்பலம் என்றெல்லாம் அன்பர்கள் போற்றி மகிழ்வர். சிதம்பரம் என்னும் ஊர்ப் பெயரே இந்த அம்பலத்தின் பெயரிலிருந்து வந்ததுதான் அம்பலத்திற்குச் சிதம்பரம் என்ற பெயரும் உண்டு. சித்+அம்பலம்=சிதம்பரம்: சித் = ஞானம், அறிவு; அம்பரம்—ஆகாசம், வெளி; எனவே, சிதம்பரம் என்றால் ஞானகாசம், அறிவுவெளி என்று பொருளாம்.

மன்று

அம்பலம், சபை என வழங்குதல்போலவே, மன்று, மன்றம் என வழங்குதலும் இலக்கியங்களில் பெரு வழக்காகும். நடராசர் மன்றுள் ஆடுவதால் 'மன்றாடி', 'மன்றுளாடி' என்றெல்லாம் வழங்கப்பெறுகிறார். இறைவன் இவ்வாறு சிதம்பரத்தில் மன்றுள் ஆடும் நடராசராக ஆன வரலாறு யாதாக இருக்கலாம்?

புராணங்களில்—மெய்யுணர்வு நூல்களில் சிதம்பரம் பற்றியும் நடராசர் பற்றியும் எத்தனையோ கதைகள், வரலாறுகள் பேசப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் ஈண்டு நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் இருந்திருக்கக் கூடிய இயற்கை நெறி நின்றே ஆராயத் தொடங்குவோம்.

பண்டு கூத்துத் தமிழின்—ஆடற்கலையின் தலைமையிடமாக நம் சிதம்பரம் திகழ்ந்திருந்தது. ஆடற்கலைக்கு ஒரு பல்கலைக்கழகமாகவும் இஃது இருந்திருக்கலாம். பல்வேறிடங்களிலிருந்து இங்கு வந்து கலைஞர்கள் ஆடல்கலை பயின்றிருக்கலாம். ஆடல்கலையில் தேர்ந்தவர்கள் இங்கே வந்து அரங்கேற்றமும் செய்து கொண்டிருக்கலாம். ஆடல்கலை பயிலும் இடம் 'மன்றம்' என்னும் பெயரால் பண்டு வழங்கப்பட்டிருக்கவேண்டும். "இறைவன் மக்களைப் படைத்தான்; இறைவன் உருவங்களை மக்கள் படைத்தனர்" என்பதில் எவரும் கருத்து வேறுபாடு கொள்வதற்கில்லை. மன்றத்தில் ஆடல் பயின்ற மக்கள், இறைவனது ஓவியத்தை எழுதி முதலில் மன்றத்தில்

வைத்திருப்பர். இன்னும் இறையோவியங்கள் மன்றங்களில் இருப்பதைக் காண்கிறோம் அல்லவா? இறைவனது ஓவியத்தை எழுதிய மக்கள் நாட்டியம் ஆடும் தோற்றத்திலேயே எழுதி வைத்திருப்பர். பின்னர் அந்த ஓவியத்தைச் சிற்பமாக வடித்து வைத்திருப்பர். சிதம்பரத்து மன்றத்தில் தொடக்கத்தில் நடராசர் விக்கிரகம் ஏற்பட்ட வரலாறு இப்படியாக இருந்திருக்கலாம் என்பது ஒருவகை நுனித்த உய்த்துணர்வேயாகும். கருத்து வேறுபாடு உடையவர்கள் அருள் கூர்ந்து பொறுத்துக்கொள்க.

மன்றுடுதல்

அழகிய நடராசர் திருவுருவை அமைத்து வைத்துக் கொண்டு அதன் எதிரிலே ஆடல் கலை பயின்றனர். பயிற்றினர். வளர்த்தனர். வேறிடங்களில் ஆடல்கலை பயின்றவர்களும் இந்த அம்பலத்தில் வந்து அரங்கேற்றம் செய்துகொண்டனர். இதனை, "அறையில் ஆடிப் பழகிய பின்னரே அம்பலத்தில் ஆடவேண்டும்" என்னும் பழமொழியாலும் உய்த்துணரலாம். அரங்கேற்றத்தோடு நின்றுவிட்டதா? ஆடல் கலைஞர்கட்குள்ளே மன்றத்தில் ஆடல் போட்டிகளும் நடைபெறலாயின. இஃது இயற்கைதானே! சிவனுக்கும் காளிக்குமே நடனப் போட்டி நடந்ததாமே. தோல்வி காளிக்குத்தானும். மன்றில் நடைபெறும் ஆடல் போட்டி உயர்கட்டம் அடைவதுண்டு. வெற்றிதோல்வி பற்றிய முடிவு பரபரப்புத் தருவதுண்டு. சொற்போர், விற்போர், மற்போர் என்பனபோல, மன்றங்களில் போராட்டம் நடைபெற்றது. இதிலிருந்துதான் "மன்றுடுதல்" என்னும் தொடர் "போராடுதல்" என்னும் பொருளுக்கு மாறியிருக்கவேண்டும்.

மன்றம் சிதம்பரம்

நாளடைவில், கலைநிகழ்ச்சி நடைபெறும் இடங்களும் வழக்காடும் இடங்களும் மன்றங்கள் எனப்பட்டன. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருந்த முதலிடம் ஆடல் கலையரங்கு நடைபெற்ற மன்றம் என்னும் பெயருடைய இடமேயாகும். இந்த மன்றம் முதன் முதலில்

சிதம்பரத்திலேயே சிறப்புற்றிருந்தது. அந்தக் காலத்தில் மன்றத்திற்குச் செல்கிறேன் என்ருல், சிதம்பரம் செல்கிறேன் என்று பொருளாம்; இன்று பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறேன் என்ருல், அண்ணுமலை நகருக்குச் செல்கிறேன் என்று பொருள்படுவது போன்றதே அது.

பதினும் நூற்ருண்டில் மண்டல புருடரால் இயற்றப் பெற்ற சூடாமணி நிகண்டு சிதம்பரத்தின் வேறு பெயர்கள் புலியூர், தில்லை என்பன என்று கூறுகிறது.

'புலியூர் தில்லை கதிதரு சிதம்பரப் பேர்'

என்பது சூடாமணி நிகண்டு நூற்பா. புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) வழிபட்ட இடமாதலின் சிதம்பரம் புலியூர் எனப்பட்டது என்பது புராணக் கதை. பண்டு தில்லை என்னும் மரம் காடாக இருந்ததால், சிதம்பரம் தில்லை, தில்லைவனம் என்றும் வழங்கப்பட்டதாம். இஃதிருக்க எட்டாம் நூற்ருண்டில் இயற்றப்பட்ட சேந்தன் திவாகர நிகண்டு சிதம்பரத்தின் பழைய பெயர் 'மன்றம்' என்று கூறுகிறது.

'கூடல் மதுரை; மன்றம் சிதம்பரம்' என்பது திவாகர நிகண்டு நூற்பா. திவாகர நிகண்டு காலத்தைச் சேர்ந்த பிங்கல நிகண்டும் இவ்வாறு கூறுகிறது

இதுகாறும் கூறியவற்ருல், சிதம்பரத்தின் உண்மையான பழம் பெரும் பெயர் மன்றம் என்பதும், அப்பெயர் ஏற்பட்ட இயற்கை வரலாறும் தெள்ளிதின் விளங்கும். மன்றம் வாழ்க! ★

சிதம்பர ரகசியம்

ஸ்ரீ மத் ஸ்வயம் ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வதி
அவதூத ஸ்வாமிகள்

இப்பெரிய பூமண்டலத்துள்ளே, எல்லாவிதத்தாலும் மிகச் சிறப்புற்றோங்கி விளங்கும் நம் பரத கண்டத்தில் அநேக சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், வேறு பல தேவர் ஆலயங்களும் இருக்கின்றன. அவைகள் அனைத்தினுங் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தூபி, விமானம், பிராகாரம், கோபுர மென்னும் இவைகள் ஒரு தன்மையாகவே காணப்படு கின்றன. இவையன்றி ஒவ்வோர் ஆலயத்திலும் அவ்வாலயத்தின் பிரதான தேவதா பீடம் கர்ப்பக் கிருகத்திலேயே இருக்கிறது. இங்ஙனம் ஒன்று போல் எல்லா ஆலயங்களும் கட்டப்படுவதற்குச் சில முக்கிய காரணங்கள் உள்ளன. இங்கே சிலவற்றை விளக்கிக் காட்டுவாம்:

ஆலயங்களின் வகை

உலகத்திலுள்ள மாந்தர் அனைவரும் உண்மைக்காக அகப்பொருளை அறிந்து உய்யும் ஆற்றல் பெற்றிலராத லால், யாவருக்குந் தத்தம் சரீரஇயல்பு ஆலயங்களில் வெளி நோக்காகக் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்கள் ஹ்ருதய கமலப்பிரஸ்தாரம் (ஹ்ருதயகமலத்தை விரித்துக் குறிப்பது)எனவும், சரீரப் பிரஸ்தாரம் (சரீரத்தை விரித்துக் குறிப்பது) எனவும் இருவகைப் படுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இவற்றுள், ஹ்ருதய கமலப்பிரஸ்தாரத் தாற் சிதம்பரம் முதலிய சிவஸ்தலங்களும் சரீர பிரஸ்தாரத் தால் வேறு பல ஸ்தலங்களும் அமைக்கப்பட்டிருக் கின்றன. மனிதருள்ளத்தே சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு வஸ்துவும் ஹ்ருதய கமலப்

பிரஸ்தார ஆலயங்களாலும், யோகிகள் அறிய வேண்டிய எழுவகைத் தாதுக்களின் நிலைமை சரீரப்பிரஸ்தார ஆலயங்களாலும் குறிப்பித்துக் காட்டப்படும்.

பிராகாரங்கள்

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்து ஒவ்வோரெழுத்தின் பொருளென ஆகமங்களில் ஒவ்வோரிடத்தில் குறிக்கப்பட்ட அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் பஞ்சகோசங்கள் சிவாலயங்களிலே ஐந்து பிராகாரங்களாகவுள்ளன. பிரணவமொழிந்த ஸ்ரீ அஷ்டாக்ஷரப்பொருளெனப் பாஞ்சராத்திரத்தின் ஓரிடத்திற் கூறப்படும் சரீரத்திலடங்கிய சர்மம், மாமிசம், இரத்தம், மேதை, நரம்பு, எலும்பு, சுக்கிலம் என்னும் சப்ததாதுக்கள் விஷ்ணுவாலயங்களிலே ஏழு பிராகாரங்களாய் இருக்கின்றன. பிரணவத்தைக் கூட்டினல் சிவமந்திரம் ஆறெழுத்தும், நாராயண மந்திரம் எட்டெழுத்துமாகும்.

சிலவிடங்களிலே ஆலயங்கட்டுவதற்கு இடம் பொருள் குறைவுபடின், அங்கு ஸ்தூல ஸூக்ஷ்மகாரண சரீரங்களைக் குறிக்கும் மூன்று பிராகாரங்களேனும், அனைத்திற்கும் பொதுவாக ஒரு பிராகாரமேனும் அமைப்பதுண்டு.

ஒவ்வொருசரீரத்திலும் யோகிகள் அறியவேண்டிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறுதாரங்கள் இங்கே முறையே கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபமெனக் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கர்ப்பக் கிருகத்திலும் கமலமுகை போன்ற விமானம் ஒன்றிருக்கும். அதன் உட்புறத்திற்குள் கடவுளுடைய திருவுருவம் அமைக்கப்படும்.

இனி, ஹ்ருதய கமலப்பிரஸ்தார ஆலயங்களிலே ஹ்ருதயத்திலுள்ள விஷயங்கள் விரித்துக் குறிக்கப்படு

மென்று முன்னே கூறியதற்குச் சிதம்பராலயத்தையே திருஷ்டாந்தமாக எடுத்து நிரூபிப்பாம்.

சிதம்பரம் ஹ்ருதய கமலம்

இச்சிதம்பர க்ஷேத்திர மகிமை புராணங்களிலே மாத்திரம் புகழப்படுவதன்று; வேதத்திலுள்ள தர்சஞேபநிஷத்திலே, "சிதம்பரம் ஹ்ருதய மத்தியிலுள்ளது," என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனுல் இது விராட் புருஷனுடைய ஹ்ருதய ஸ்தானமென்பது துணிபாம். அது பற்றியே புராணங்கள், "இவ்வாலயங்கட்டும்பொழுது யோக முதல்வராகிய ஸ்ரீபதஞ்சலி முனிவர் சிதம்பர ரகசியம் அறிந்து அதை விச்வகர்மாவுக்கு அனுக்கிரஹிக்க அவன் அவராணையைச் சிரமேற்கொண்டு ஆலயஞ் சமைத்தனன்" என்று கூறுகின்றன. ஓர் மஹாயோகியின் சரீரத்தை வடக்கே தலையும் தெற்கே பாதமுமாக வைத்து நோக்கினுல் அங்கிலையும் இவ்வாலய அமைப்பும் ஒத்திருக்கும்.

சிதம்பரம் ஆலயத்தின் உண்மை

இவ்வாலயத்துள்ளே ஆயிரக்கால் மண்டபம், தலையின் புறத்திருக்கும் ஆயிரவிதழுள்ள கமலமென்னப்படும் மூளையைக் குறிக்கும். சிவகங்கை அம்மூளையின் மேற்புறத்துள்ள சந்திர புஷ்கரிணியெனப்படும் அமிர்தவாவியைக் குறிக்கும். ஜாக்ராவஸ்தையிலே ஆத்மா (ஜீவன்)வினுடைய அறிவு மூளையிலே விளங்குவது இயல்பாதலால், தேவமானத்திலே விடியற்காலமும் பிரதோஷ காலமுமாகிய மார்கழி ஆனி மாதங்களிலே ஆயிரக்கால் மண்டபத்தில் ஆநந்த நடராஜ மூர்த்திக்கு மஹாபிஷேகம் நடந்து வருகின்றது. இவற்றின் தென்புறத்திலே ஸ்ரீ குருமூர்த்தியும், ஜ்யோதிர்லிங்கமும் எழுந்தருளியிருக்குமிடம் விசுத்தி ஸ்தானமாகப் பாவிக்கப்படும். அதற்குத் தெற்கே 'திருச்சிற்றம்பலம்' என்னும் மகாசபை இருக்கிறது. அங்கே பிரம்ம விஷ்ணு ருத்ர மகேசுவர ஸதாசிவர்களுக்கென ஐந்து பீடங்கள் இருக்கின்றன. ஸ்ரீபஞ்சாக்ஷர எழுத்துக்கள்

ஐந்தும், ஐந்து படிகளாக இருக்கின்றன. அவ்விடத்துள்ள கதவு அவித்தை அல்லது ஆவரணமெனப்படும். தத்துவங்களாகிய தொண்ணூற்ருறும் தொண்ணூற்ருறு பலகணிகளாயிருக்கின்றன நடுவிலிருக்கும் நான்கு பொற் கம்பங்கள் நான்கு வேதங்களும், சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களும் ஆம். இவைகளுள்ளே அடங்கிய இடம் சுத்தவித்தையெனவும், இரகசிய முதலாக ஸ்ரீநடராஜ மூர்த்தி யெழுந்தருளியிருக்குமிடம் வரையிலுள்ள பீடம் பிரணவ பீடமெனவும் சொல்லப்படும். அப்பிரணவ பீடத்தின் கண்ணே சகளத் திருமேனியையுடைய ஸ்ரீ ஆநந்த நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ருர். அதன் பின்னே ஆரண ஆகமங்களும் அறிந்தோத அரியதும், குறைவரம்பு கடந்ததும், 'திருச்சிற்றம்பலம்' என உயர்ந்தோராற் புகழ்ந்து போற்றப்படுவதுமாகிய அழியாப் பரஞ்சுடர்ச் சிவவொளிச் சிதாகாச வடிவம் விளங்கா நிற்கும். இச்சிதாகாச வடிவினையே ஊனக் கண்ணுற் கண்டோர் இரகசியமென்பர்.

கர்ப்பக்கிருகமான இவ்விடத்தே, அகில லோகமாதவாகிய சிவகாம சுந்தரியென்னும் பராசக்தியோடு ஸ்தூ நடராஜமூர்த்தியும், ரத்தின மயமான சூக்ஷ்ம நடராஜ மூர்த்தியும், சூக்ஷ்மதரமான மற்ருேர் இலிங்கமும் உண்டு. இரகசியத்தை நிஷ்களமென்றும், வயக்தாவ்யக்த லிங்கத்தைச் சகள நிஷ்களமென்றும், ஸ்ரீஆனந்த நடராஜமூர்த்தியைச் சகள வடிவமென்றும் உரைப்பர்.

இன்னும் கீழ்ப்புறத்திலே சண்டேசுவர ஸ்தானத்தில் பிரம்மதேவரும், தென்புறத்தில் விஷ்ணுமூர்த்தியும், வடபுறத்திற் பைரவமூர்த்தியென்னும் ஸம்ஹாரா ருத்திரரும் இருக்கின்ருர்கள் விமானத்தின் மேலேயுள்ள ஒன்பது கும்பங்களும் வாமை முதலிய நவசக்திகளாம். அவ்விமானத்திலுள்ள கைமரங்கள் 64 கலைகளையும் செப்போடுகள் 21600-ம் மனிதனுல் ஒவ்வொரு தினமும் விடப்படுகின்ற சுவாசங்களையும், ஆணிகள் எழுபத்தீராயிரமும், அச்சுவாச சஞ்சார ஆதாரமான 72,000 நாடிகளையும் குறிக்கின்றன.

இச்சபையின் தென்புறத்தேயுள்ள கனகசபை முற் கூறிய சபையின் அனேக பாகங்களைப் பெற்றுப் பதினெண்

புராணங்களைப் பதினெண் கம்பங்களாய்ப் பெற்று மணி பூரகஸ்தானமாய் விளங்குகின்றது. இங்குள்ள சபைகள் ஐந்தும் ஐவகைக் கோசங்களை உணர்த்துகின்றன. சான்ருக, ராஜசபை (ஆயிரக்கால் மண்டபம்) அன்னமய கோசமும், தேவசபை (பேரம்பலம்) பிராணமயகோசமும், நிருத்த சபை மனோமயகோசமுமாம். அன்றியும், திரிபுரா தந்திரத்திற்கூறிய மூன்று கூடங்களும், மூல கூடம், தேவ கூடம், ரகசியமென இங்கே குறிக்கப்பட்டன. மனிதனுடைய ஹ்ருதயம், சரீரத்தின் நடுவில் சிறிது இடப்புறத்தே விலகியிருத்தலால், இங்கும் ஆலயத்தின் சரிநடுவுக்குச் சிறிது இடப்புறத்தே கர்ப்பக்கிருகம் அமைந் திருக்கின்றது. ஹ்ருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரிலன்றிப் பக்கங்களில் இருப்பதால், இங்கும் வழிகள் கர்ப்பக்கிருகத்தின் பக்கங்களில் அமைந்திருக் கின்றன.

இச்சிற்சபையின் தென்புறத்தே மஹாவிஷ்ணு ஸ்தான மும், அதற்குத் தெற்கே ஸம்ஹார நிருத்த மூர்த்தி ஸ்தான மும், அதற்குத் தெற்கே கணபதி ஸ்தானமும், தர்மவடி வாகிய ரிஷபதேவஸ்தானமும், கோபுரமும் இருக்கின்றன. ஐந்து ஆவரணமதில்களும் ஒரேவித அளவில் அமைந்தன. சரீரத்தினும் பிராணன் பன்னிரண்டங்குலம் அதிக மென் னும் யோகநூற் பிரமாணங்கொண்டே இரண்டாவது மதிலிற் கோபுரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய மகா மேன்மை பொருந்தியது சிதம்பரா லயம். இவ்வாலயத்தில் சாஸ்திர விதிப்படி மெய்யன் போடு சுவாமி தரிசனஞ் செய்யின் ஞானம் உதிக்கும்; பந்தம் நீங்கும்; பூரணத்வமுண்டாம்; ஆனந்தம் விளையும்; ஆன்மநிலை விளங்கும்; அத்வைத முக்தி ஸித்திக்கும்.

இவ்வுண்மைகளை அறியும் அறிவு சிறிதேனும் இல்லாத வேதபாஹ்யர்களின் புன்மொழிகளைக் கேட்டு, "இதென்ன கல், மண், செங்கல்தானே!" என்று எண்ணலாகாது. ஒருவன் பூகோளத்தைப் படித்தறிய விரும்பி, அதற்குத் துணைக்கருவியாய்க் கொண்ட பூகோள படத்தை, "இது ஏதோ கோடு; பூமியன்று" என்று நினைப்பானுயின் அவன்

கருத்து முற்றுப் பெறுவது எவ்வாறு? அப்படத்தைப் பூமியென்று நினைத்தாலல்லவோ முற்றுப்பெறும்? அது போல, இவ்வாலயத்தைக் கண்டவுடனே வேறொன்றும் நினையாமல் ஏதோ ஒரு மகா யோகியின் ஹ்ருதயகமல மென்றும், கடவுளுடைய திருவருள் இவ்விடத்திலே நிறைந்திருக்கிறதென்றும், இவ்வித நிலயே முக்திக்கு வழியென்றும் அறிந்து அவ்வழியைச் சிறிது சிறிதாகப் பற்றுதல் வேண்டும். ★

ஆடு கின்றிலை; கூத்துடை
யான் கழற்கு அன்பிலை; என்புருகிப்
பாடு கின்றிலை; பதைப்பதும்
செய்கிலை; பணிகிலை; பாதமலர்
சூடு கின்றிலை; சூட்டுகின்
றதுமிலை; துணையிலி பிணநெஞ்சே!
தேடு கின்றிலை; தெருவுதோறு
அலறிலை; செய்வதொன்று அறியேனே!

—திருவாசகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை;
சங்கரா, போற்றி! வான
விருத்தனே; போற்றி! எங்கள்
விடலையே, போற்றி! ஒப்பில்
ஒருத்தனே, போற்றி! உம்பர்
தம்பிரான், போற்றி! தில்லை
நிருத்தனே, போற்றி! எங்கள்
நின்மலா, போற்றி! போற்றி!

—திருவாசகம்

ஸ்ரீ நடராஜமூர்த்தியின் சிறப்பு

ஸ்ரீமத் ஸ்வயம் ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்

" துறந்த குறுமுனியாதி தவத்தினர் தூயகுணம்
செறிந்த பதஞ்சலி நற்புலி யாதிய சித்தர்களும்
சிறந்த வொருநிலை யாகிய வீட்டினிற் சேர்ந்துறைய
அறிந்திடும் முத்தரு மேத்துஞ் சபேச னலர்ப்பதமே"

" நானற்ற நீயே யதுவென் றுரைத்தொரு நால்வருக்கு
வானுற்ற தேவருந் தேடற் கரியதோர் வாழ்வளித்தாய்
தேனுற்ற சோலைத் திருப்புலி யூருறை செஞ்சடையாய்
ஊனுற்ற வாழ்க்கை யொழித்தெனக் குன்னரு
ளூட்டுவையே"

ஸர்வதுக்க நிவிர்த்தியும் பரமாநந்த ப்ராப்தியும் வடிவமாகவுள்ள மோக்ஷத்தை அடைவதற்கு முறையே சாதனமாயிருப்பன கர்மம், பக்தி, ஞான மென்பனவாம். அவற்றுள், பக்தி கர்மத்தை நிஷ்காம்யமாகச் செய்தற்கும் ஞானத்தைச் சித்த சுத்தி வாயிலாக எளிதில் உண்டாக்குவதற்கும் சாதனமாயிருப்பதாம். அது, பொருளானது அறத்தையும் இன்பத்தையும் உண்டாக்குவதற்குச் சாதனமாயிருத்தல் போன்றது. பக்தியோ, குருபக்தி, ஈச்வர பக்தியெனச் சிறப்பு வகையால் இருவகையாயிருப்பதாம். அவற்றுள், ஈசுவரபக்தி குருபக்தியை மேன்மேலும் பெருகச் செய்வதற்கும், அவரை (குருவை) ஈசுவர ஸ்வரூபமாகப் பாவிப்பதற்கும் தக்க ஸாதனமாயிருத்தலின், நம் முன்னோர்க்கு மிக முக்கிய ஸாதனமாயிருப்பது அவ்வீசுவர பக்தியேயாம். அஃது அவர் கொண்டருளிய பல அவதார விசேஷங்களாற் பலவகைத்தாம். ஈசுவரனது அவதார விசேஷங்களுள், ஸ்ரீ நடராஜமூர்த்தி அவதாரம் எஞ்ஞான்றும் பரம சாந்த ஸ்வரூபமாகவே யிருப்பதாதலின், அம்மூர்த்தியின் பக்தி ஈசுவரபக்தியுள் மிகச் சிறந்ததாம்.

ஸ்ரீ நடராஜபக்தி அல்லது தியானம் நம் முன்னோர்க்கு மிகச் சிறந்ததாமென்பதை விளக்குதற் பொருட்டன்றோ சாந்தோக்யோபநிஷத் முதலியன அதனை வியந்து கூறுகின்றன? ஈசுவர தியானங்களுள் மிகச் சிறந்ததாயுள்ள ஸ்ரீநடராஜ மூர்த்தித் தியானத்தைத் தேசிக மூர்த்தியின் வாயிலாகக் கேட்டுணர்ந்து செய்வாராயின், சமையலுக்கு நெருப்புப் போல, மோக்ஷத்திற்கு நேர் ஸாதனமாயுள்ள தத்துவஞானம், அவருக்கு எளிதில் உண்டாகுமென்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ நடராஜ ஸேவை

இந்நடராஜமூர்த்தி பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலான மகாத்மாக்கள் பரமாநந்த மயமாய் விளங்கும்படி பூலோகத்தின்கண் ஆநந்த நடனஞ் செய்தருளுகின்றாராதலின் இம் மூர்த்தியினது பாதஸேவையே நாம் பரமானந்த மடைவதற்குத் தக்க ஹேதுவாம். கரண வியாபாரமுடைய ஒவ்வொரு பிராணியும் துக்க நீக்கத்தினையுஞ் சுகப்பேற்றினையும் விரும்புவது இயல்பு. மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்புலவுணர்வோடு மனவுணர்வையுமுடைய மக்கள் துக்க நீக்கத்தினையும் சுகப்பேற்றினையும் விரும்பாதிரார். இது நமதனுபவத்தினால் விளங்குதலின், துக்க நீக்கத்தினையுஞ் சுகப்பேற்றினையுங் கருதி, ஸ்ரீநடராஜ மூர்த்தியினது திருவடிகளைத் தஞ்சமாக அடைந்து அன்பு மிக்குச் சேவித்தலே நமது முக்கிய கடமையாகும்.

பெருந்துன்பமுற்ற ஒருவன், தன் துன்பத்தை ஒழித்து இன்பத்தையடையப் பேராற்றலும் பெருங்கருணையுமுடைய ஒருவனை ஆதாரமாக அடைந்து அவனது திருவடியில் விழுந்து பிரார்த்திப்பது போல, பிறப்பென்னும் பெருந்துன்பமுடைய நாம் அத்துன்பத்தினை யொழித்து முக்தியென்னும் இன்பத்தினை அடையுமாறு, முடிவிலாற்றலும் பொருளுமுடைய ஸ்ரீநடராஜ மூர்த்தியைத் தஞ்சமாக அடைந்து, அம்மூர்த்தியின் இன்பமணங் கமழும் பொற்பாத கமலங்களில் விழுந்து பிரார்த்தித்தல் வேண்டும். இதுவே நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியான

துணையாகும். பாதஸேவையே பரமாநந்தம் பெறுதற்குத் தக்க ஸாதனமாயிருப்பது பற்றியன்றோ, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர், "கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவன், நற்ருள் தொழாஅ ரெனின்," "மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார்", "வேண்டுதல்வேண் டாமையிலானடி சேர்ந்தார்க், கியாண்டு மிடும்பை யில", "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" என்று திருவாய் மலர்ந் தருளினர்?

பஞ்ச நடன சபைகள்

இந் நடராஜமூர்த்தி நடனஞ் செய்யும் ஸ்தலங்கள் பலவற்றுள் சிறப்புடையன ஐந்தாம். அவை திருவாலங் காடு, சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருக்குற்ருலம் என்பனவாம். இவற்றிலுள்ள நடன சபைகள் முறையே இரத்தின சபை, பொற் சபை, இரசித (வெள்ளி) சபை, தாமிர (செம்பு) சபை, சித்திர சபை யென்பனவாம். இவ் வைந்து சபையிலும் அன்புடன் சென்று அருள் நடனங் கண்டு இன்புருவானவரே இனிப் பிறவாநிலையை அடைவ ரென்க.

நடராஜ வடிவமே ஸ்ரீ பஞ்சாக்ஷரம்

அன்பரெல்லாம் என்புருகிப் பரவசமாகும் வண்ணம் ஸ்ரீ சந்திரசேகரன், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரமென்றும் ஒரு தலை மாணிக்கமென்றுஞ் சொல்லப்படும் 'சிவாயநம;' என்னும் திருவஞ்செழுத்தின் திருவுருக்கொண்டு உயிர்களுக்கு நேர்ந்துள்ள பிறவிப்பணி யென்னும் அபாயமற, ஆநந்த நிருத்தஞ் செய்தலை அறிந்தவர்களுக்கன்றோ அநாதியாய்த் தொடர்ந்து வந்துள்ள பிறப்பு மூப்புப் பிணியோடாஞ் சாக்காடு ஒழியும்? இதுபற்றி யன்றோ ஔவைப் பிராட்டி யார், "சிவாய நம வென்று சிந்தித் திருப்போர்க், கபாய மொரு நாளுமில்லை" என்றருளிச் செய்தனர்? மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமைப்பாடு பெற்றவிடத்துத் தான் சுவாநந்த (பிரமானந்த) நிலை

யுண்டாதலின் அதற்குரிய ஸாதனம் மேற்கூறியவாறு பஞ்சாக்ஷர வடிவமாய் மலைமகள் காண மகிழ்வுடனாடும் ஸ்ரீ நடராஜ வடிவ தரிசனமேயாம். வாக்காற் பஞ்சாக்ஷர ஜபமும் மனத்தாற் பஞ்சாக்ஷர தியானமும் செய்யுமிடத்துக் கண்ணுற் காணும் பஞ்சாக்ஷரம், ஸ்ரீநடராஜ விக்கிரகமன்றி வேறென்றின்மையின் அம்மூர்த்தியைத் தரிசித்தல் அத்தியாவசியமாம்.

அந்நடராஜப் பெருமான் திருவடி நகாரமாகவும், திருவுந்தி மகாரமாகவும், திருத்தோள் சிகாரமாகவும், திருமுகம் வகாரமாகவும், திருமுடி யகாரமாகவுங்கொண்டு ஹ்ருதய குகையாகிய தஹராகாசமென்னுஞ் சிதம்பரத்தின்கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்தலை ஸத்குரு மூலமாய்ச் சந்தேக விபரீதங்களற அறிந்து, இந்நடனத்தின் உண்மையை ஆராய்ந்து அறிபவர்க்கே இனிப் பிறவா நிலை யுண்டாம்.

நடன ஸேவைகளின் வகை

ஆகாசமானது பூதாகாசமென்றும், மனாகாசமென்றும், சிதாகாசமென்றும் மூவகைப்படும். இம்மூன்று ஆகாசங்களிலும் ஸச்சிதாநந்தப் பரம்பொருள் நடித்து ஜீவர்களுக்கு இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் அருளிச் செய்கின்றாரென்பது வேதாகமங்களின் சித்தாந்தமாம். பூதாகாச நடனஸேவையாவது, ஆங்காங்குள்ள சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளுஞ் சென்று குறிப்பிட்ட நாட்களில் ஆகம விதிப்படி ஸ்ரீ நடராஜப் பெருமானது திருக்கூத்தைத் தரிசித்தலேயாம். மனாகாச நடன ஸேவையாவது, பஞ்சாக்ஷர வடிவமாய் விளங்கும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை மனத்தால் நன்கு தியானித்தலேயாம்; இஃது ஒருமுகப்பட்ட மனத்தினருக்கே ஸாத்தியமாம். சிதாகாச நடன ஸேவையாவது, பஞ்சாக்ஷரத்தின் வாக்கியார்த்தமாகிய 'சிவமே நான்' என்று ஸோஹம் பாவனை செய்வதாம். இதுவே சிவயோகமெனப் படும். பூதாகாச நடன சேவையால் இம்மைப் பயனும், மனாகாச நடன ஸேவையால் மறுமைப் பயனும், சிதாகாச நடன ஸேவையால் மோக்ஷமும் சித்திக்கின்றன. ஆதலின்,

இம்மூன்று சேவையும், அவ்வவ்வதிகாரிகளுக்குத் தக்க வண்ணம் அவரவர்கட்கு அத்தியாவசியமாம்.

அநந்தத் தாண்டவத்தின் தத்துவம்

மாயாமலத்தினுல் உண்டான கர்மபாசத்தாற் கட்டுண்டு சுகதுக்காதிகளால் மொத்துண்டு உழலும் ஜீவர்கள் தங்களுக்கு இயல்பாயுள்ள சச்சிதாநந்த நிலையையடைவதற்குப் பரமசிவத்தின் ஆநந்தத் தாண்டவ தரிசனமே சிறந்த சாதனமாம். ஈசனது பஞ்ச கிருத்தியங்களாகிய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம் (மறைப்பு), அனுக்கிரஹம் (அருள் புரிதல்) ஆகிய ஐந்தொழிலும் அவரது நடனமேயாம். அப்பஞ்ச கிருத்தியங்களைச் செவ்வனே உணர்ந்தோர்க்கே, "எமக்கென இவ்வுலகத்திலொரு செயலுமில்லை; எல்லாம் ஈசனுடையதே" என்னுந் திடம் உண்டாகும்; சுகம் துக்கம், லாபம் நஷ்டம், ஜயம் அபஜயம், நன்மை தீமை முதலிய இருமைகளிற் சிக்கிச் சுழலும் மனமானது பதைப்பற்று உபசாந்தி நிலையை அடையும். ஆதலின் பஞ்ச கிருத்தியங்களின் தத்துவ ஆராய்ச்சி அவசியஞ் செய்யத்தக்கது.

பஞ்ச கிருத்திய தத்துவம்

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரஹமென்பன பஞ்ச கிருத்தியங்களாம். இவை பரமசிவத்தின் தாண்டவ ஸ்வரூபமேயாம். தாண்டவமென்பது ஒரு வகைக் கூத்து, இஃது அசைதல் வடிவினது. இது பரமசிவத்தின் அபின்ன சக்தியான சிற்சக்தியின் வியாபகத்தாலன்றிக் கூடாது. இந்தச் சிவாபின்ன சக்தியே, தான் செய்யும் தொழிலுக்கு இணங்க, பராசக்தியென்றும், ஆதி சக்தி யென்றும், இச்சாசக்தி யென்றும், ஞானசக்தியென்றும், கிரியா சக்தி யென்றும் ஐவகையாகக் கூறப்படும்.

இவற்றுள், பராசக்தி பரமசிவம் போல் எங்கும் வியாபித்துப் பக்குவமான ஜீவ கோடிகளுக்கு அனுக்கிரஹம் செய்வதாம். இதுவே அனுக்கிரஹ கிருத்தியஞ் செய்யும் அருட்சத்தியாம்.

ஆதி சக்தி:—இது திரோதான சக்தியாம். இது ஸ்வ ரூபத்தை மறைப்பதாம்; ஆன்மாக்களுக்கு ஆணவமலம் பக்குவமாகும்படி போகத்தைக் கொடுப்பதாம்.

இச்சா சக்தி:— இதுவே ஸம்ஹார சக்தியெனப்படும். உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவானுபவங் தரும் பொருட்டு ஏற்பட்டதாம். இதுவும் கருணை வடிவமேயாம்.

ஞான சக்தி:— இது ஸ்திதித்தொழிலைச் செய்யுஞ் சக்தி யாம். உயிர்களின் மலத்தை நீக்கி அவர்கள் சிவானுபவத் தைப் பெறும் பொருட்டுச் செய்ய வேண்டிய உபாயங்களை உணர்த்துவது இது.

கிரியா சக்தி:— இது கர்மத்துக்கு ஈடாக ஆன்மாக் களுக்குத் தேகாதிகளை (தனு கரண புவன போகாதிகளை) உண்டாக்கும் சக்தியாம்.

பரமசிவம் இவ்வைந்து தொழில்களையும் திருவருளின் விளையாட்டாகவும், ஜீவாத்மாக்களின் துன்ப காரணமான ஜனனமரண சாகரத்தினின்றும் அவர்களை எடுத்து அருள் புரிவதற்காகவும் செய்கின்றனர். எங்ஙனமெனில், அழித்தல் ஆன்மாக்களின் இளைப்பை ஒழிப்பதற்கும், படைத்தல் மலபரிபாகம் வருவித்தற் பொருட்டும், காத்தல் இருவினைப் போகங்களை உண்பித்து அவ்வினைகளை ஒழித்தற் பொருட்டும் மறைத்தல் அவ்வினைப் போகங்களில் அழுத் துதற் பொருட்டும், அருளல் மலத்தைநீக்கி அத்வைத சிவத் துவத்தை அளித்தற்பொருட்டுமாம். ஆதலின், அருளைப் போலவே மற்றைத் தொழில்களும் அவருக்குத் துணையா யுள்ளமையால் அருட்டொழில்களேயாமெனக் கூறத்தகும்.

இங்ஙனம் பதியேயான ஸ்ரீ நடராஜப் பெருமான் ஐந்தொழிலைச் செய்யினும் விகாரப் படுவதில்லை. அஃது எங்ஙனமெனின், ஆகாயத்தில் விளங்கும் ஆதித்யனது ஸன்னிதியிலே தாமரைகளில் ஒன்று அலரும்; ஒன்று அலர் தற்குப் பக்குவமான மொட்டாயிருக்கும்; மற்றொன்று வாடி உலரும். இங்ஙனம் அலர்தல், அரும்புதல், உலர்தல் ஆகிய முத்தொழிலும் சூரியனின் ஸன்னிதான விசேஷத் தால் நிகழினும் சூரியன் விகாரப்படாததே போல, பதியின்

ஸன்னிதான விசேஷத்தால் ஜட சேதனப் பிரபஞ்சமெல்லாம் ஐந்தொழிலின்பாற் படிந்துஞ் சிவம் நிர்விகாரியாகவே யிருக்கும். இது பற்றியன்றோ தாயுமானவப் பெருந் தகையாரும், ''ஆக்கி யளித்துத்துடைக்குந் தொழிலத்தனை வைத்தும் எள்ளத்தனையேனும், தாக்கற நிற்குஞ் சமர்த்தன்'' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இங்ஙனம் பஞ்ச கிருத்தியங்களின் ஸ்வரூபத்தை நன்குணர்ந்து, ''உலகத்தில் நிகழும் யாவும் அவனுடை யனவே; நாமொன்றுஞ் செய்வதற்குச் சுதந்தர முடைய வரல்லேம்'' என்று, பரமசிவத்தின் பாதாரவிந்தங்களில் தஞ்சம் அடைவதே நாம் பரமானந்தமுறுதற்குச் செய்ய வேண்டிய காரியமாகும்.

ஆலயங்களில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் உற்சவ காலங் களில் மேற்கூறிய பஞ்சகிருத்தியங்கள் கீழ்க்கண்ட ஐதிகங்களாற் குறிப்பாகக் காட்டப்படுகின்றன. அவை யாவன:

1. சிருஷ்டி: ஸ்ரீ நடராஜமூர்த்தி சிற்சபையினின்று அபிஷேக மண்டபத்துக் கெழுந்தருளுதல்;

2. ஸ்திதி: ஸ்ரீ நடராஜமுர்த்திக்கு (அபய) ஹஸ்தத்திற் கங்கணம் (காப்பு) சார்த்துதல் (இரக்ஷாபந்தனம்);

3. ஸம்ஹாரம்: மேற்படி மூர்த்திக்குத் திருச்சாந்து சார்த்துதல்;

4. திரோபவம்: பச்சைக் கர்ப்பூரஞ் சார்த்துதல்' தற்காலத்தில் வெள்ளைச் சார்த்துப்படியென்று இது வழங்கப்படுகின்றது;

5. அனுக்கிரஹம்: தரிசனம்.

இவ்வாறு குறிப்பாயுணர்ந்து ஐதிகங்களின் உண் மையை ஆய்ந்து பரமசிவத்தின் பஞ்சகிருத்தியங்களை மனத்திற் பாவனை செய்து ''எல்லாம் அவனுடைய தொழிலே'' என அகந்தை மமதைகளை அறவேயொழித்துப் பரமானந்தமாய் விளங்க நாம் ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும்.

★

சிதம்பர மகிமை

ஸ்ரீமத் ஸ்வயம் ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்

எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரஹமும் உடைய முழுமுதற் கடவுள் தாம் ஒருவரேயாகி விளங்குகின்ருர். பசுக்களாகிய ஆன்மாக்களெல்லாம் அவருக்கு என்றும் உடைமைப் பொருள்களாக வுள்ளன. தாம் என்றும் உடையவராகியே நிற்கும் பசுபதி யெனப்படும் சிவபெருமான், பிரபஞ்சம் எங்குமாகி நீக்கமற வியாபித்து நிற்பர், ஆயினும் அவ்வுண்மை யாவருக்கும் விளங்குவதன்று. ஆதலினுலே முக்தியடைதல் எளிதன்று. இதனைச் சிவபெருமானே திருவுள்ளங்கொண்டு, தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு எண்ணில்லாத முக்கிய ஸ்தலங்களைப் பூமியில் அமைத்தருளினுர். அவைகளுள்ளே, 68 ஸ்தலங்கள் சிறந்தன. அந்த 68 ஸ்தலங்களுக்குள்ளே 6 ஸ்தலங்கள் சிறந்தன. அந்த ஆறு ஸ்தலங்களுக்குள்ளே திருவாரூர், காசி, சிதம்பரமென்னும் மூன்று ஸ்தலங்கள் சிறந்தன. திருவாரூரிலே பிறந்தவர்களும், காசியிலே இறந்தவர்களும், சிதம்பரத்திலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தவர்களும் முக்தியை அடைவார்கள்.

ஸ்தல மகிமை

திருவாரூரிலே பிறத்தல், முன் செய்த புண்ணிய மிகுதியினுலே தானே நேர்படினல்லது செயற்கையால் அடையத் தக்கதன்று. காசியில் இறக்கலாமெனில், பிறர் பொருள் கொள்ளாது பாபத்துக்குப் பயந்து தர்ம நெறியினுலே சம்பாதித்த பொருளைக்கொண்டு ஜன்மதேசத்தை விடுத்து

வழியிலே இறவாது உயிர் தாங்கிச் சென்று காசியை அடைந்து இறக்கும் வரையில் நல்லொழுக்கத்தோடும் அத்திருப்பதியில் இருந்து இறப்பது எளிதில் முடிவதன்று. சிதம்பரத்திலோவெனின் சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்த மாத்திரத்தே முக்தி ஸித்திக்கும் இன்னும் தக்ஷிண தேசத்தார் சிதம்பரத்தை நீங்கி முத்தியைத் தேடிக் காசிக்குச் சென்றால் அது முத்தியைக் கொடுப்பதில்லை. உத்தர தேசத்தார், "சிதம்பரம் முத்தி தரும்" என்று வந்து சேர்ந்தால் இது முக்தியைக் கொடுக்கும். ஆதலின், சிதம்பரமே எல்லா ஸ்தலங்களினுஞ் சிறந்தது.

பிண்டமும் பிரம்மாண்டமும் ஸமம், பிண்டமாகிய சரீரத்தில் இடப்பக்க நாடியாகிய இடைகலைக்கும், வலப்பக்க நாடியாகிய பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனை நாடியும், பிரம்மாண்டத்திலுள்ள இப்பரத கண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லையும் சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்யும் ஸ்தானங்களாம்.

சரீரம் பிரம்மபுரம். சரீரத்தினுள்ளே இருக்கும் ஹ்ருதய ஸ்தானம் தகரமாகிய புண்டரீக வீடு. இருதய ஸ்தானத்தினுள்ளே இருக்கும் பிரம்மமாகிய சிவம் ஆகாசம். புறத்திலும் இப்படியே :— பிரம்மாண்டம் பிரம்மபுரம்; பிரம்மாண்டத்தினுள்ளே இருக்குந் தில்லைவனம் புண்டரீக வீடு; தில்லைவனத்தில் நிருத்தஞ் செய்யும் சிவம் ஆகாசம். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம். ஆதலாற் சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எக்காலமும் நீக்கமின்றி விளங்கும் ஸ்தானமானதால் இத்தில்லையும் சிதம்பரம் எனப் பெயர் பெறும்.

மூர்த்தி மகிமை

சிதம்பரத்திலே ஞானசபையிலே சிவபெருமான் சிவகாமி அம்மையார் காண, ஆன்மாக்களின் பொருட்டு அனவரதமும் ஆனந்த நிருந்தஞ் செய்தருளுவர். சபாநாயகர், கோடி சூரியருடைய ஒளிபோன்ற ஒளியும், திருப்புன் முறுவலையுடைய ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்ணும், கங்கையும் பிறையும், கொன்றை மாலையும்

தாங்கிப் பின் தொங்காநிற்கும் திருச்சடையும், சங்க குண்டலம் பொருந்திய வலத்திருச் செவியும், திருநீலகண்டமும், டமருகம் பொருந்திய திருக்கரம், அபயகரமென்னும் வலத்திருக்கரம் இரண்டும், அக்கினி யகல் பொருந்திய திருக்கரம், உடுக்கை பொருந்திய கரமென்னும் இடத்திருக்கரம் இரண்டும், புலித்தோலை ஆடையாகக்கொண்டு கச்சையுடைத்தாய் நெறிப்புப் பொருந்தி விளங்குந் திருவரையும், முயலகன் மேல் ஊன்றிய வலத்திருப்பாதமும் தூக்கி வளைத்த இடத்திருப்பாதமும் உடையவர். சிவகாமியம்மையார பச்சைநிறத் திருமேனியும், திருக்கழுத்திலே பொருந்திய திருமாங்கல்ய ஸூத்ரமும், செங்கழுநீர்மலர் பிடித்த வலத் திருக்கையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடத்திருக்கையும், மிகவொடுங்கிய திருநிலையும் உடையவர்.

சபாநாயகருடைய வடிவம் ஸ்ரீ பஞ்சாக்ஷர வடிவம். வாச்சிய மந்திரமாகிய சிவசக்தி அவருக்கு உண்மை வடிவம். வாசக மந்திரம் அவருக்குக் கற்பித வடிவம். அவருடைய ஆநந்த நிருத்தம் பஞ்சகிருத்தியம்: சிருஷ்டி கிருத்தியம் டமருகத்தினும், ஸ்திதி கிருத்தியம் அபயகரத்தினும், ஸம்ஹார கிருத்தியம் அக்கினியினும், திரோபவ கிருத்தியம் ஊன்றிய பாதத்தினும், அநுக்கிரஹ கிருத்தியம் குஞ்சித பாதத்தினும் தோன்றும் அவ்வாநந்த நிருத்தத்துக்கு நிலைக்களமாகிய சபை சிவ சக்தியால் அதிஷ்டிக்கப்பட்ட சுத்த மாயாமயம். சிவசக்தியே அக்கினியிலுள்ள சூடுபோலச் சிவத்தோடு நீக்கமின்றியுள்ள திருவருள்.

வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்யு முனிவர், திருவுடையந்தணர்கள், வியாசமுனிவர், சுகமுனிவர் சௌனகமுனிவர், ஜைமினி முனிவர் முதலாய எண்ணிறந்தோர் சிதம்பரத்திலே வசித்து நியமமாகச் சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து நடேசப் பெருமானுடைய ஆநந்த நிருத்தத்தைத் தரிசித்து வணங்கித் துதித்துச் சிவானந்தப் பெருவாழ்வு அடைந்தார்கள். உபமன்யு முனிவர் கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்து சிவபூஜை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த சைவாசாரியர். ஜைமினி முனிவர் நடேசப்பெருமானை வேத பாத ஸ்தவத்தினுலே துதித்தவர். வேதபாத

ஸ்தவமாவது முதல் மூன்று பாதமும் தமது வாக்காகவும், நான்காம் பாதம் வேதமாகவும் சொல்லப்பட்ட ஸ்தோத்திரம்.

பரங்கருணைத் தடங்கடலாகிய நடேசப்பெருமானுடைய இலக்கணங்களை உண்மை நூல் வாயிலாக அறிந்து; நல்லொழுக்கத்தினின்றும் வழுவாது நிலை கொண்டு அவருடைய விளக்கத்துக் கிடமாகிய திருவுருவை விராட் புருஷனாகிய பிரம்மாவினது பிரம்மாண்ட சரீரத்தின் ஹ்ருதய கமலமாகிய தில்லையிலே நாடோறும் விதிப்படி அன்போடு தரிசித்துக் கொண்டு வந்தவர், அந் நடேசப் பெருமானைத் தமது பிண்ட சரீரத்தினது ஹ்ருதய கமலமாகிய தகரத்திலே தியானித்துத் தரிசித்துப் பாசம் நீங்கி முக்தியடைவர். இதுவே தகரவித்தை; இது சாந்தோக்யோபநிஷதத்திலும், கைவல் யோபநிஷதத்திலும் கூறப்பட்டது.

தீர்த்த மகிமை

சிதம்பரத்திலே பத்துத் தீர்த்தங்களுள்ளன. அவையாவன:—

1. சிவகங்கை
2. குஹ்ய தீர்த்தம்
3. புலிமடு
4. வியாக்ரபாத தீர்த்தம்
5. அனந்த தீர்த்தம்
6. நாகசேரி
7. பிரம்ம தீர்த்தம்
8. சிவப்பிரியை
9. திருப்பாற்கடல்
10. பரமானந்த கூபம்

சிவகங்கை சிவ வடிவம்; அது கோடி ஜன்மார்ஜிதமான பாபஸமூகங்களைத் தனது மாகாத்மிய புண்ய சிரவணத்தினுற் போக்கும் வல்லமையுள்ளது. அச் சிவகங்கையின் தென்கரையிற் சிவபெருமான் ஆனந்த தாண்டவஞ் செய்து வருகிருர். அத் தீர்த்தம் உலகின் கண்ணுள்ள எல்லாப் புனித தீர்த்தங்களிலும் மிகப் புனிதமுடையது; புண்ணியத்தை விருத்தி செய்வதற்குப் பெரிய காரணமானது. தங்க மயமான பங்கஜம் மலர்ந்து எங்கும் மணம் வீசும் அத்தீர்த்தத்தில் பக்தியில்லாது விளையாட்டாகவாயினும் அருந்தல், குளித்தல், ஸ்நானம் முதலியவைகள் செய்தவரைப் பார்த்த எமனுடைய ஹ்ருதயம் நடுங்கும். அவர்களுடைய வரவை நினைத்துச் சிவலோகம் விசாலத்தை அபேக்ஷிக்கும். புண்ணியம் நிறைந்த அத்தீர்த்தத்தில் ஒரு தடவை ஸ்நானஞ் செய்தவன் பிறகு எத்தலத்தில் எவ்விதமாயிருப்பினும் சிவலோகத்தை அடைவான். அதில் ஸ்நானஞ் செய்து சிற்றம்பலத்தில் நர்த்தனஞ் செய்யும் சிவபெருமானைத் தரிசித்துச் சிவ பஞ்சாக்ஷரத்தை 1008 உரு ஜபித்தவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டுச் சிவசாரூபத்தை அடைவான்.

மேஷ ஸங்கிரமணத்தில் அதில் ஸ்நானஞ் செய்தவர்கள் அளவிறந்த சிவ புண்ணியங்களை அடைவார்கள். துலா மாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் ஜனன மரணத்தினின்றும் நீங்குவார்கள். தை மாசத்தில் புஷ்ய நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் தேவர்களுக்கெல்லாம் தலைவராவார்கள். பங்குனி மாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் சிவபெருமானது ஸாரூப்யத்தை அடைவார்கள். சுக்கிர வாரத்தில் ஸநானஞ் செய்பவர்களின் புண்ய விசேஷம் சொல்லி முடியாது. மாசி மாசம் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமியில் ஸ்நானஞ் செய்தவர்கள் பிதுர்லோகங்களிலுள்ள நூறு குலங்களை மோக்ஷத்திற் சேர்ப்பார்கள். ஆவணி மாசத்தில் ஸ்நானஞ் செய்து தர்ப்பணஞ் செய்தவர்கள் இருபத்தொரு குலங்களைத் திருப்தி செய்விப்பார்கள். மார்கழி மாசஞ் சுக்கில பக்ஷத்திலாவது கிருஷ்ணபக்ஷத்திலாவது பிதுர்க்களை உத்தேசித்து அச் சிவகங்கைக் கரையிற் சிராார்த்தம் செய்பவர்கள் ஏழு குலங்களை உத்தாரணஞ் செய்வித்தவர்

ஆவார்கள். சந்திர சூரிய கிரகண காலங்களிலும் திருவாதிரை நக்ஷத்திரத்திலும் ஸ்நானஞ் செய்து சிரார்த்தம் புரிபவர்கள், கதியற்றவர்களாய்ப் பசியாலும் தாகத்தாலும் வருந்துகிறவர்களான தம் குலப் பிதுருக்களைப் பிரம்ம கல்பம் வரையில் நித்திய திருப்தர்களாகச் செய்வார்கள். அப்புண்ணிய தடாகக்கரையில் பிராமண போஜனஞ் செய்துவைப்பவர்கள் தம் வம்சங்களுடன் சிவ ஸாயுஜ்யத்தை அடைவார்கள்.

பரமானந்த கூபம் சிவசக்தி வடிவம். அதிலே சுக்கிர வாரம் நவமி யென்பவைகளில் ஸ்நானஞ்செய்வது விசேஷம். ஐப்பசி மாசச் சுக்கிலபக்ஷ நவமி, மாசி மாசச் சுக்கிலபக்ஷ சதுர்த்தசி, சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்பவைகளில் ஸ்நானஞ் செய்வது மகா விசேஷம். பரமாநந்த கூபத்தில் ஐப்பசி மாசம் சுக்கிலபக்ஷ நவமியிலே ஸ்நானஞ் செய்து அன்று முதல் ஒரு வருஷ காலம் இடைவிடாது நாடோறும் அத்தீர்த்தத்தில் உழுந்தளவு உட்கொண்டு வருவது உத்தமோத்தம புண்ணியம்.

தை அமாவாசை தோறுஞ் சிவபெருமான் சிவகங்கை முதற் பரமானந்தகூபம் இறுதியாகிய பத்துத் தீர்த்தத்திலும் எழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருள்வர். அத்தினத்தில் இப்பத்துத் தீர்த்தத்திலுஞ் சிவபெருமானை சேவித்துக் கொண்டு உடன் சென்று சிரத்தையோடு ஸ்நானஞ் செய்வது மகா புண்ணியம். ★

எம்பிரான் போற்றி! வானத்து
அவரவர் ஏறு போற்றி!
கொம்பரார் மருங்குல் மங்கை
கூற, வெண் நீற போற்றி!
செம்பிரான் போற்றி! தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி!
உம்பரா போற்றி! என்னை
ஆள்உடை ஒருவ போற்றி!

—திருவாசகம்

ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் தத்துவார்த்தம்

நடராஜ குரு

ஸ்ரீமத் ஸ்வயம் ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்

நடராஜன் என்ருல நடன ஸபைக்கு அதிபதி என்பது அர்த்தம். இவ்வுலகமே நடனமாடும் ஸ்தலம். நாடகத்தில் பற்பல வேஷங்கள் வருகின்றன. அதுபோல, இவ்வுலகத்திலே பற்பல ஜீவராசிகள் தோன்றி நடித்து மறைந்து போகின்றன. இப்படி இளையர், விருத்தர், ஆண் பெண், மநுஷ்யன், மிருகம், புற்பூண்டு முதலிய பொம்மைகள் உலகமாகிய நாடக ஸ்தலத்தில் தோன்றி யாடுவதெல்லாம் பரமாத்மாவாகிய கடவுளின் சக்தியாலேயன்றி வேறல்ல. பொம்மையை ஆட்டினுல் அஃது ஆடாமலிருக்குமா? வீணையை மீட்டினுல் அது பாடாமலிருக்குமா? அது போல் நம்மை ஆட்டி வைக்கும் பரமாத்மாவுக்கே நடராஜனென்று பெயர். அந்தப் பரமாத்மாவொன்று இல்லையானுல், இவ்வுலகமெல்லாம் ஜடமாயன்ருே இருக்கும்?

மனிதனுடைய மனத்துக்கு ஆத்மாவே உண்மையான உபாத்தியாயர். ஆதலின் நடராஜனே நம்முடைய குரு. உலகத்தில் இரண்டு விதமான ஆசார்யர்கள் உண்டு. பெயருக்கு ஆசார்ய ரொருவர்; உண்மையான ஆசார்ய ரொருவர். முன்னுற் கூறப்பட்டவர் சிஷ்யனுக்கு எல்லா வற்றையும் கற்பித்து அவனைத் தம் வழியில் நடத்துகிருர்; இப்படிச் செய்பவரைத்தான் நாம் குருவென்கிருேம். ஆனுல் உண்மையாகவே நாம் கற்றுக்கொண்ட விஷயங்களெல்

லாம் நமக்குள்ளிருந்தே வந்தன. செடிகள் பூமியிலிருந்து தாமே உண்டாகின்றன. நாம் கொட்டும் தண்ணீரும் போடும் எருக்களும் அவைகள் வளருவதற்கு அனுகூலமே யன்றி வேறல்ல. இம்மாதிரியே நமக்குள்ளிருக்கும் மனம், தானே விருத்தியாக வேண்டும். அப்படியானுல் நடராஜனே ரூபத்தோடு கூடிய உண்மையான குரு. குருவின் முக்கிய மான கடமை யென்ன? பிறருக்குப் போதிப்பதைப் போல் தாம் நடப்பது; அதாவது தாம் நடந்து காட்டுவதால் பிறருக்குத் தாம் போதிப்பதை விளக்குவது.

நடராஜ ஸ்வரூப உண்மை

நடராஜ மூர்த்தியின் வலக்கை யொன்றில் உடுக்கை யென்ற ஒரு வாத்தியம் இருக்கின்றதே, அஃது என்ன? அஃது இவ்வுலகத்துக்கான காரணத்தைக் கருதிக்கொண் டிருக்கிருரென்பதைக் குறிப்பிடுவதற்குள்ளது. சப்தத் திஞலே இவ்வுலகம் நிலைபெற்றதென்பது சாஸ்திரம். சப்தத்தை உண்டாக்கும் உடுக்கையை ஸ்ரீ நடராஜமூர்த்தி கையில் வைத்திருப்பதால் அவர் தம்முடைய இஷ்டப்படி உலகத்தை எப்படி வேண்டுமாஞலும் ஆட்டலாமென்று ஏற்படுகிறது. ஞானிகளுக்கு, வேண்டுமாஞல் இவ்வுலக மிருக்கும்; வேண்டா விட்டால் உலகமில்லை.

நடராஜ மூர்த்தியின் ஓர் பக்கத்திலிலுள்ள மான், மனத்தைக் குறிக்கிறது. ஏனெனில், மானைப்போல் மனம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தாவுகிறதல்லவா? மானைப் போல் தாவும் மனத்தையுடைய மனிதர்களுக்கு ஆத்மாவின் தரிசனம் அகப்படுவது அருமை.

நடராஜர் தாம் கொன்ற புலியின் தோலைத் தரித்துக் கொண்டிருக்கிருர். அகங்காரந்தான் அப்புலி. அகங்கார மென்னும் புலி, யாரைக் கண்டாலும் எதிர்க்கிறது. அதைக் கொல்வதற்கு நடராஜ மூர்த்தியே தக்கவர்.

நடராஜர் தம் தலையில் கங்கையைத் தரித்துக் கொண் டிருக்கிருர். கங்கைதான் சித்சக்தி. அதுதான் ஞானம்; வெகு குளிர்ச்சியும் பரிசுத்தமும் பொருந்தியது அவர்

சிரஸிலிருக்கும் சந்திரன் சீதளமாயும், ப்ரகாசமாயும் இருக்கிறது; அஃது ஆத்மாவின் ப்ரகாசத்தைக் காட்டுகிறது.

ஸ்ரீ நடராஜமூர்த்தி ஒரு காலின் அடியில் முயலகனைப் போட்டு மிதிக்கிருர். அந்த முயலகன்தான் மகாமாயை. இந்த மாயை பிறப்பிற்கும் இறப்பிற்கும் காரணம். இன்னும் ஒரு பாதத்தை மேலே தூக்கிக் கொண்டிருப்பது துரியத்தின் நிலைமையை உணர்த்துகிறது. இது ஜாக்கிர சொப்பன சுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளையும் கடந்து அப்பாலுள்ள ஸ்திதி, அதற்குப் பின்னுல், மனசு, மாயை உலகம் இவைகள் கிடக்கின்றன. ஒரு வலக்கை ஸமாதானத்தைக் காட்டுகிறது; அதாவது ஞானி அனுபவிக்கும் மௌனமாகிய ஆனந்தத்தைக் குறிக்கிறது. நடராஜரது இடக்கையொன்றில் இருக்கும் மழு (அதாவது நெருப்பு) அவர் ஆத்மாவின் சொரூபமாகிய ஜ்யோதியைச் சிஷ்யர்களுக்கு நேரில் காட்டி உபதேசிப்பதை உணர்த்துகிறது.

தில்லைவனம்

இவ்வாறு ஸ்ரீ நடராஜர் நடனமாடும் ஸ்தலம் தில்லைவனம் மானிடசரீரத்தையும் இப்பேருலகத்தையும் வனத்துக்கு உவமையிடுவதுண்டு. வனத்திற் பற்பல மரங்களும் செடிகளும் விலங்குகளும் இருப்பதுபோல, மனிதனுடைய சரீரத்திலும் அநேக வஸ்துக்கள் இருக்கின்றன. நாடக ஸ்தலத்தின் உயர்ந்த மேடை ஸ்மசானம். இந்த ஸ்மசானத்தில் ஆசாபாசங்களும், நாம ரூபங்களும், உலகமாகிய மாயையின் தோற்றமும் அழிந்து பஸ்மீகரமாகின்றன.

மேற்கூறிய நடராஜ மூர்த்தியின் சில லக்ஷணங்களால் நாம் அறிந்து கொண்ட விஷயங்களாவன : நடராஜர் என்னும் குரு மாயையைத் தொலைத்து உலகத்தை நம்முள் அடக்கி நாம் அதில் அகப்பட்டு விழிக்காமல் சலன மனத்தைப் பின்னுற்றொலைத்து அகங்காரத்தை அழித்து எவ்வகையான ஆசையும் பாசமுமின்றி ஆத்மாவின் சொந்த ஸ்தானமாகிய சிதாகாசத்தை அடைந்து பிரம்மானந்தத்தை அனுபவிக்கும்படி நமக்குப் போதிக்கிருர் என்பனவாம்,

இப்படிப்பட்ட நடராஜ விக்ரஹத்தைக் கேவலமாக நினைக்கும் மாந்தர்கள் பிறவிக் குருடர்களல்லரோ? இத்தகைய மூர்த்தியையும், இம்மூர்த்தி யெழுந்தருளிய சிதம்பரத்தையும் தரிசிப்பது நமது முக்கிய கடமையாம்.

சிதம்பர க்ஷேத்திரம், மற்றெல்லா க்ஷேத்திரங்களிலும் சிறந்து விளங்குவது. அஃது எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவான ஒரு குறிப்பைக் காட்டுகிறது. "நமது தேகமாகிய கோயிலில் ஆண்டவன் வசிக்கிறார்; நமது உள்ளத்தில் ஆண்டவன் நடனம் புரிந்து கொண்டிருக்கிறார்" என்ற குறிப்பே அது.

ஒரு மனிதன் தெற்கே பாதமும் வடக்கே சிரஸும் வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்திருந்தால் அவன் தேக அங்கங்கள் எவ்வாறு அமைந்து நிற்குமோ, அவ்வாறே எல்லா அங்கங்களையும் விளக்கிக் காட்டும் குறிகளோடு அக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. எவற்றைக் காட்டி விளக்கக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றனவோ, அவை யாவற்றிற்குங் குறிகள் பூரணமாய் அங்கே அமைக்கப் பட்டிருக்கின்றன. கோயில்களில் தலைமையுடைய கோயில் அது. அதனாற்றான் 'கோயில்' என்றாலே சிதம்பர க்ஷேத்திரத்தைக் குறிக்கும்.

அதில் அமைந்துள்ள கடவுளும் சமயாதீதக் கடவுளே. அவர் உருவத்திலடங்கிய அங்கங்கள் முதலிய யாவும், அவர் ஸ்வரூபத்தை விவரமாக விளக்கிக்காட்டுங் குறிகளேயாகும். அவர் நடிக்கும் இடம் பொன்னம்பலமென்றும் சிதாகாசமென்றும், சுடலையென்றும் கூறப்படும். அம்பலமெனில், ஆகாயம், வெறுவெளியென்று பொருள். சிதாகாசமென்றால் சித்தத்திலுள்ள ஆகாசம். நமது மனம் பஞ்சபூதங்களால் படைக்கப்பட்டதால் அதற்கு ஐந்துவித குணங்களும் ஐந்து பெயர்களுமுண்டு. அவையே, உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்றும், அந்தக் கரணங்கள் ஐந்து என்றும் கூறுவர். இவற்றுள் உள்ளமென்பதே ஆகாசாம்சம்; சத்துவமானது; களங்கமற்ற ஆகாசம்போற் பரிசுத்தமாகச் சலனமின்றியுள்ளது. அதனால் அதற்குச் சிதாகாசமென்று பெயர். மனத்திலுள்ள

அகங்காரம், காமக் குரோதம், லோபம், மோகம் முதலிய எல்லாப் பேய்களும் ஞானக்கினியால் சாம்பலாய் எரிக்கப் பட்ட பிறகே, உள்ளம் தன் ஸ்வரூப மட்டுமாய்த் தனித்து நிற்கிறது. மேற்கண்ட பேய்களெல்லாம் அங்கே தகனஞ் செய்யப்படுவதால் அதற்கு மயானமென்றும் சுடலையென் றும் பெயர்கள் வந்தன. அதில் நடனஞ் செய்யும் பக வானுக்குச் சுடலையாடியெனப் பெயர் வந்தது. அப்பேய்கள் தகனஞ் செய்யப்பட்டபிறகு ஏற்படும் ஞானநிலையில் அங்கே நடிக்கும் பகவான், அவை தகனமாவதற்கு முன் இருக்கும் அஞ்ஞானதசையிலும் அங்கு நடித்துக் கொண்டுதான் இருக்கிறார். ஆகாசம் மற்றெல்லாவற்றிற்கும் இடங் கொடுத்துக் கொண்டிருப்பது போல், உள்ளமே மற்றெல் லாக் குணங்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டிருக் கிறது.

அஞ்ஞான காலத்தில் ஆண்டவன் அங்கு நடிக்கும் போது இப்பேய்களும் இருப்பதால் அவருக்குப் பேயோடாடி என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இவ்வுண்மையை யறியாமூடர்கள், 'அசுத்தமான சுடுகாட்டிற் பேய் பிசாசு களோடு கூத்தாடுவோனுந் தேவனுவனோ?' என்று உளறு கின்றனர்.

ஸ்ரீ நடராஜரின் விஸ்வ ஸ்வரூபம்

ஸ்ரீ நடராஜருடைய ஸ்வரூபம் அவர் உண்மை நிலை யையே காட்டுகிறது. இப்பிரம்மாண்டமான சொரூபமே அவர். ஆகையால் அண்டமுகடே அவருடைய சிரம். மின்னலும் ஜலமும் சந்திரனும் அண்டமுகட்டிலேயே இருக்கின்றன. மின்னற் கூட்டங்களே அவருடைய ஜடைகள். அதனால்தான் அச்சடைகள் ஜோதிர்மயமான பொன்னிறமுடையவையென்று கூறப்பட்டிருக்கின்றன கங்கையும் சந்திரனும் அவர் ஜடாபாரத்தில் இருக்கின்றன வென்றுங் கூறப்படும். நாகம் குண்டலினி சக்தியைக் குறிக்கிறது;

"மின்னிய மின்னலின் பிரகாசம் நின் சடையே" என்ற னர் பட்டினத்தடிகள். பூலோகமே அவர் தேகம். காற்றே

இப்படிப்பட்ட நடராஜ விக்ரஹத்தைக் கேவலமாக நினைக்கும் மாந்தர்கள் பிறவிக் குருடர்களல்லரோ? இத்தகைய மூர்த்தியையும், இம்மூர்த்தி யெழுந்தருளிய சிதம்பரத்தையும் தரிசிப்பது நமது முக்கிய கடமையாம்.

சிதம்பர க்ஷேத்திரம், மற்றெல்லா க்ஷேத்திரங்களிலும் சிறந்து விளங்குவது. அஃது எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவான ஒரு குறிப்பைக் காட்டுகிறது. "நமது தேகமாகிய கோயிலில் ஆண்டவன் வசிக்கிறார்; நமது உள்ளத்தில் ஆண்டவன் நடனம் புரிந்து கொண்டிருக்கிறார்" என்ற குறிப்பே அது.

ஒரு மனிதன் தெற்கே பாதமும் வடக்கே சிரஸும் வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்திருந்தால் அவன் தேக அங்கங்கள் எவ்வாறு அமைந்து நிற்குமோ, அவ்வாறே எல்லா அங்கங்களையும் விளக்கிக் காட்டும் குறிகளோடு அக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. எவற்றைக் காட்டி விளக்கக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றனவோ, அவை யாவற்றிற்குங் குறிகள் பூரணமாய் அங்கே அமைக்கப் பட்டிருக்கின்றன. கோயில்களில் தலைமையுடைய கோயில் அது. அதனாற்றான் 'கோயில்' என்றாலே சிதம்பர க்ஷேத்திரத்தைக் குறிக்கும்.

அதில் அமைந்துள்ள கடவுளும் சமயாதீதக் கடவுளே. அவர் உருவத்திலடங்கிய அங்கங்கள் முதலிய யாவும், அவர் ஸ்வரூபத்தை விவரமாக விளக்கிக்காட்டுங் குறிகளேயாகும். அவர் நடிக்கும் இடம் பொன்னம்பலமென்றும் சிதாகாசமென்றும், சுடலையென்றும் கூறப்படும். அம்பலமெனில், ஆகாயம், வெறுவெளியென்று பொருள். சிதாகாசமென்றால் சித்தத்திலுள்ள ஆகாசம். நமது மனம் பஞ்சபூதங்களால் படைக்கப்பட்டதால் அதற்கு ஐந்துவித குணங்களும் ஐந்து பெயர்களுமுண்டு. அவையே, உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்றும், அந்தக் கரணங்கள் ஐந்து என்றும் கூறுவர். இவற்றுள் உள்ளமென்பதே ஆகாசாம்சம்; சத்துவமானது; களங்கமற்ற ஆகாசம்போற் பரிசுத்தமாகச் சலனமின்றியுள்ளது. அதனால் அதற்குச் சிதாகாசமென்று பெயர். மனத்திலுள்ள

அகங்காரம், காமக் குரோதம், லோபம், மோகம் முதலிய எல்லாப் பேய்களும் ஞானுக்கினியால் சாம்பலாய் எரிக்கப் பட்ட பிறகே, உள்ளம் தன் ஸ்வரூப மட்டுமாய்த் தனித்து நிற்கிறது. மேற்கண்ட பேய்களெல்லாம் அங்கே தகனஞ் செய்யப்படுவதால் அதற்கு மயானமென்றும் சுடலையென் றும் பெயர்கள் வந்தன. அதில் நடனஞ் செய்யும் பக வானுக்குச் சுடலையாடியெனப் பெயர் வந்தது. அப்பேய்கள் தகனஞ் செய்யப்பட்டபிறகு ஏற்படும் ஞானநிலையில் அங்கே நடிக்கும் பகவான், அவை தகனமாவதற்கு முன் இருக்கும் அஞ்ஞானதசையிலும் அங்கு நடித்துக் கொண்டுதான் இருக்கிருர். ஆகாசம் மற்றெல்லாவற்றிற்கும் இடங் கொடுத்துக் கொண்டிருப்பது போல், உள்ளமே மற்றெல் லாக் குணங்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டிருக் கிறது.

அஞ்ஞான காலத்தில் ஆண்டவன் அங்கு நடிக்கும் போது இப்பேய்களும் இருப்பதால் அவருக்குப் பேயோடாடி என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இவ்வுண்மையை யறியாமூடர்கள், 'அசுத்தமான சுடுகாட்டிற் பேய் பிசாசு களோடு கூத்தாடுவோனுந் தேவனுவனே?' என்று உளறு கின்றனர்.

ஸ்ரீ நடராஜரின் விஸ்வ ஸ்வரூபம்

ஸ்ரீ நடராஜருடைய ஸ்வரூபம் அவர் உண்மை நிலை யையே காட்டுகிறது. இப்பிரம்மாண்டமான சொரூபமே அவர். ஆகையால் அண்டமுகடே அவருடைய சிரம். மின்னலும் ஜலமும் சந்திரனும் அண்டமுகட்டிலேயே இருக்கின்றன. மின்னற் கூட்டங்களே அவருடைய ஜடைகள். அதனுல்தான் அச்சடைகள் ஜோதிர்மயமான பொன்னிறமுடையவையென்று கூறப்பட்டிருக்கின்றன கங்கையும் சந்திரனும் அவர் ஜடாபாரத்தில் இருக்கின்றன வென்றுங் கூறப்படும். நாகம் குண்டலினி சக்தியைக் குறிக்கிறது;

"மின்னிய மின்னலின் பிரகாசம் நின் சடையே" என்றனர் பட்டினத்தடிகள். பூலோகமே அவர் தேகம். காற்றே

அவர் சுவாசம், பாதாளமே அவர் பாதங்கள், தேகமுழுதும் விபூதி தூளனம் அவர் சத்துவ சொரூபமான ஞானரூபி யென்பதைக் குறிக்கிறது. கையிற்றரித்த முத்தலைச் சூலம் மூவுருவும் ஒருருவே என்பதைக் குறிக்கிறது.

சிதம்பர க்ஷேத்திரம் இவ்விதமாக. "ஆண்டவன் உன் உள்ளத்தில் நடனஞ்செய்து கொண்டிருக்கிறார். இங்குக் காண்பதுபோல் உன்னுள்ளத்திற் கண்டு தரிசி" என்கிற சமயப்பொதுவான குறிப்பையே காட்டுகிறது. இதனால் நடராஜர் சமயாதீதக்கடவுளென்பது விளங்கும். இது பற்றியே தாயுமானவர். "எல்லாம் வெளியேயென்ன எச் சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்" என்றார். தாயுமானவர் அருளிய "விளங்க வெண்ணிறுபூசி" என்று தொடங்கும் பாட்டையும், அதற்கடுத்தபாட்டையும் "சிதம்பர இரகசியம்" என்ற பக்கத்திலுள்ள "சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு" என்று தொடங்கும் பாட்டையும், அதற்கடுத்த பாட்டையும் பார்க்க இது நன்கு விளங்கும்.

★

காதுஆர் குழைஆட,
பைம்பூண் கலன்ஆட,
கோதை குழல்ஆட
வண்டின் குழாம்ஆட,
சீதப் புனல்ஆடி,
சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி,
அப்பொருள்ஆ மாபாடி,
சோதி திறம்பாடி,
சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி,
அந்தம்ஆம் ஆபாடி
பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம் பாடி
ஆடேலோர் எம்பாவாய்

—திருவாசகம்

திருவடி ஓம் சரண்

டாக்டர் அழகப்ப அழகப்பன்

யாவற்றிற்கும்—பல கோடி கோடி உலகங்கள், தெய் வங்கள், உயிர்கள்—உறைவிடம் அம்பலநாதர்தாம். அவர் நாடக மேடையில் தாண்டவமாடிக் கொண்டே இருக்கிறூர். நமது நாடகங்களையும் கடைக்கண்ணுல் பார்த்துக் கொண்டே இருக்கிறூர்.

சிருஷ்டியில் ஏற்படும் விடத்தைத் தமது கண்டத்தில் அடக்கி அண்டங்களையெல்லாம் வாழ விடுகிறூர் நீல கண்டப் பெருமான். தமது திருத்தாண்டவம் நின்ருல் உருண்டோடும் உலகங்களெல்லாம் நின்றுவிடும். அத்துடன் அவர் புது சிருஷ்டிக்கு இருப்பவற்றை மாற்றிக் கொண்டே இருக்கவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலான பஞ்சாட்சரத்திற்குரிய பெருமான் நடராசர். பிரணவத்திலிருந்து தொடங்கும் இம்மந்திரம் சிவ குடும்பத்துடன் பிரம்மா விஷ்ணுமூர்த்தி களையும் அவர்களுடன் இணைந்த தேவியரையும் சேர்த்துக் கொள்கிறது. இம்மந்திரம் தக்க சத்குருவிடமிருந்து பெற்று உச்சாடனம் செய்யச் செய்ய சக்கரங்கள் திறக்கப் பெற்று நம் உள்ளேயிருக்கும் தெய்வங்களையும் பேரின் பத்தைத் தரும் நடராசர் பாதங்களையும் அறியும் அறிவை யும் அருளையும் பெறுகின்ருேம்.

நடராசரை வழிபட்டு எல்லாக் கலைகளுக்கும் மூலமாய்ப் பிரகாசிக்கும் அவரதருளைப் பெறலாம். கலைகளை, தெய் வீகத்தைப் போற்றவும் பரப்பவும் தொண்டு செய்ய உப யோகப்படுத்திஞல் பெருமை பெறும்.

எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கும் பெருமானைப் பற்றி நம் சிற்றறிவு கொண்டு எப்படிப் புரிந்து கொள்ள இயலும்? நம்மை அவரது திரு மலரடிப் பாதங்களில் அர்ப் பணித்து அவரது அருளைப் பெறப் பிரயத்தனப்பட்டால் அதுவே பிறவியின் பேருகும்.

*

தில்லைப் பெருங்கோயில் திருநந்தவனம்

ஆயிரக்கால் மண்டபத்திற்கு வடக்கே, திரு. வாகீசம் பிள்ளை அவர்களின் முயற்சியால் ஒரு நந்தவனம் அமைக்கப் பெற்றுள்ளது. இதில் ஆயிரக்கணக்கில் வில்வக்கன்றுகள் உண்டாக்கப் பெற்றுள்ளன.

8000 வில்வக் கன்றுகள் மண் சட்டியில் பயிர் செய்து, தமிழ்நாடு முழுவதும் வழங்கப் பெற்றுள்ளன. மேலும் தயாரித்து வழங்க ஏற்பாடாகியிருக்கிறது.

10,000க்கு மேற்பட்ட நெல்லிக் கன்றுகளும் பயிர் செய்து வழங்கப் பெற்றுள்ளன.

வில்வத்தின் இலை, பட்டை, வேர், பழம் யாவும் நம் உடலுக்கு மிகவும் நலன் தருபவைகளாகும். குறைந்தது 25 நாளோ அல்லது 48 நாளோ காலை தோறும் மூவிலை யுடைய மும்மூன்று வில்வதளத்தை மூன்று மிளகுடன் உட்கொண்டு வந்தால் சகல நோய்களும் நீங்கும். மழைக் கால, பனிக்கால, வெயில்கால நோய்கள் அணுகா. மார்பு, தலை சம்பந்தமான நோய்கள் அணுகவொட்டாத தனி ஆற்றல் உள்ளது. ஆண்-பெண் இளையோர்-முதியோர் யாவரும் உட்கொள்ளத்தக்கது.

கசப்பு-சாதா என இருவகை வில்வமுண்டு மண முடைய சாதாரண சிறிய வில்வம் மிகவும் ஏற்றது. கொழுந்து அதனினும் மேலானது. பெருமாள் கோயிலில் துளசியும் நீரும் கொடுத்துவரும் வழக்கம்போல், சிவாலயங் களிலும் பழங்காலத்தில் வில்வமும் நீரும் தந்திருக் கிறார்கள். கால மாறுபாட்டால் சில ஆலயங்களில் மட்டும் திருநீற்றுடன் வில்வத்தைத் தருகிறார்கள். நாம் அதைக்

கூட உண்பதில்லை. சிவனுக்குகந்தது, “யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை” என்ற திருமந்திரம் சிறப்பாக வில்வத்தைக் குறிக்கும்.

பட்டை : மேக சம்பந்த மருந்துப் பொருளுடன் வில்வப் பட்டை பயன்படுவதுண்டு. குன்ம நோய் நீக்கும்.

வேர் : வைப்பு மருந்தை எடுக்கவும், ஏவல் சூனியம் தடுக்கவும், பயம், மாந்தம் நீங்கவும் வேர் பயன்படு கிறது. வடக்குத் திசையோடும் வேரும் ஆணிவேரும் மிகவும் சக்தி வாய்ந்தது. வேர்க்கியாழம் வயிற்றுப் புண் வலி, உப்புசம் நீக்கவல்லது.

பழம் : வில்வப் பழத்தின் உட்பாகத்தைத் தலையில் தேய்த்து ஒரு நாழிகை கழித்து குளிர்ந்த நீரில் (மாதம் ஒரு முறை) மூழ்கிவர சிரோரோகம் (தலைநோய்) அணுகாமல் காக்கலாம்; குளிர்ச்சி உண்டுபண்ணும். கண்ணெரிவு நீங்கும். சீதள உடல்காரர் வெந்நீரில் உடனே முழுகிவர வேண்டும். வில்வப் பழத்தினை ஓட்டுடன் உடைத்துக் காயவைத்து இடித்து நல்ல எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி தைலம் செய்து நாள்தோறும் ஒரு ஸ்பூன் தலையில் இட்டுக் குளித்து வரலாம். உடல் நிலைக்கேற்ப மருத்துவரிடமும் ஆலோசனை பெறுக.

பலகை : பலகையில் அமர்ந்து பூசனை புரிவோர் ஞான சாரம் பெறுவர். பகை, வைப்பு, சூனியம் அணுகாது. மந்திரம் பலிதமுறும்.

பொதுப் பலன் : ஆயுள் நீடிக்கும். ஆரோக்கியம் தரும். உடலை உறுதியும் அழகும் படுத்தும், எக்காலமும் ஏற்றது. வெண்குட்டம், ஆரம்ப குட்டம் முதலியவற்றை நீக்க வல்லது.

வில்வச் சிறப்புக் குறித்துத் திருவிளையாடற் புராணத் தில் இரு பாடல்கள் உள்ளன. அவை:

புரகரன்[1] இச்சாஞானக் கிரியையாய்ப் போந்த வில்வ(ம்)
மரமுத லடைந்து மூன்று வைகலூ ணுறக்க மின்றி
அரகர முழக்கஞ் செய்வோ ரைம்பெரும் பாதகங்கள்
விரகில்செய் கொலைகள் தீரும் ஆதலால் விசேடம் வில்வம்.

மடங்கிதழ் சுருங்கல், வாடி யுலர்ந்தது, மயிர்ச்சிக்
குண்டல்,
முடங்குகால் சிலம்பிக் கூடு, புழுக்கடி முதலாங் குற்றம்
அடங்கினும் குற்றமில்லை உத்தம மாகும் வில்வம்
தடங்கைகொண்(டு) ஈசன் நாமம் ஆயிரம் சாற்றிச்
சாத்தல்.

வில்வ பத்திரம் : வெள்ளைத்துளசி 12 மாதமும், வில்வம் 6 மாதமும் (நிழற்பாடம் செய்து) வைத்துக் கொண்டு, பூசிக்கலாம். வில்வம் கிடைக்காதபோது பூசை செய்த வில்வத்தை அலம்பி எடுத்து மறுமுறை பூசிக்கவும் விதி யுண்டு.

மூவிதழ்கள் இச்சா, ஞான, கிரியா சக்திகளைக் குறிக்கும் **சிவனுக்கு மேல் தெய்வமில்லை. வில்வத்திற்கு மேல் [2]பத்திரமில்லை.** திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசை நாட்களில் வில்வம் எடுக்கலாகாது. பூசிக்கலாம்.

வில்வம் பயிர் செய்யும் முறை : 1. பழுத்து விழுந்ததை எடுத்து நசுங்காமல் விதையெடுத்து நன்கு உலர்த்திப் பாத்தியிலோ, மண் சட்டியிலோ மணல், எரு, நீர் இட்டு பயிர் செய்து ஓரடி வந்தபின் நடவும்.

2. முள் இல்லாத வில்வமரமாக வளர்ப்பதற்குப் பழத்தின் விதைகளை முதலில் கழுவி உலர்த்தி, அதனைப் பசுஞ் சாணத்தை இறுகல்பதமாகக் கரைத்த பாலில் போட்டு ஒரு மணி நேரம் ஊறவைத்து, பிறகு கையால் நன்கு பிசைந்து சொணை போக்கிய பிறகு, மீண்டும் வெயிலில் நன்றாகக் காயவைத்து முன் கூறியபடி பயிரிட்டு நட்டால் முள் இல்லாத வில்வ மரமாக வளரும். *

---

1. புரகரன் = சிவபெருமான். 2. பத்திரம் = இலை.

திருச்சிற்றம்பலம்

மீ. ப. சோமசுந்தரம்

சிதம்பரம் என்ற அழகான சொல்லிலே இசை ஒலிக்கிறது.

சிற்றம்பலம் என்றும் திருச்சிற்றம்பலம் என்றும் உச்சரிக்கும்போது நடராஜ மூர்த்தியின் பாதச் சிலம்பு ஒலி அந்த மந்திரச் சொல்லிலே ஒலிக்கிறது.

ஏட்டிலே எழுதும்போதும், பேச்சுக்களைத் தொடங்கும் போதும் "திருச்சிற்றம்பலம்" என்னும் மந்திர ஒலியை எழுப்புகிற ஒரு பக்தி மரபு, தமிழ் நாட்டுச் சைவ உலகிலே பல நூறு ஆண்டுகளாகப் பயின்று வந்திருக்கிறது.

என்னுடைய பழைய தமிழ் ஆசிரியரும் வடமொழியும் தென்மொழியும் ஆழ்ந்து கற்றுத் தெளிந்த மூதறிஞரும் பண்டித மகாவித்துவ சிரோமணியுமாகிய காலஞ்சென்ற வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை அவர்கள், திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலும், பின்னர்த் திருவாவடுதுறை ஆதீன வித்துவானுகச் சென்று பணிபுரிந்த காலத்திலும், தமது பழக்க வழக்கங்களில் எல்லாம் திருச்சிற்றம்பல மந்திர ஒலியையே இணைத்துப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள். அதோடு அந்தக் காலத்தில் திருச்சி அகில இந்திய ரேடியோவில் அவர்கள் எந்தச் சொற்பொழிவு நிகழ்த்தினுலும் தொடக்கத்திலும் முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லத் தவறியதில்லை!

ஒலியின் இசை எழிலும், ஆன்மீக மந்திர ஆற்றலும் ஒருங்கே இணைந்த 'திருச்சிற்றம்பலம்' என்னும் இந்த அற்புதச் சொல்லுக்குரிய நாயகனுன மூர்த்தி எப்படிப்

பட்டவன்? திருச்சிற்றம்பலம் என்ற சொல்லாகிய ஒலியின் ஆடரங்கத்திலே, குதித்துக் குதித்து நடனம் ஆடுகிற பரம்பொருள் அவன்! ஒலி என்ற தத்துவ நுட்பத்திலே நின்று, அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தையும் பிணைத்து, நாதமாகிய ஓசை வடிவத்திலே அதன் ஆதார சுருதியைப் பிடித்துக் கொண்டு ஆனந்தக்கூத்து ஆடுகிருன்!

"நாதம் கொண்டு ஆடினன் ஞானனந்தக் கூத்தே!"

என்று அந்த ஞானமயமான இசை நிகழ்ச்சியை, ஓய்வு ஒழிவு இன்றி என்றென்றும் நடைபெறுகிற அந்த ஒலி ஆட்டத்தைப் பாடுகிறர் திருமூலர்!

இசையும் ஆடலும் கலைஞர்களுக்கு உரிய கலைத் தொழில்! இறைவனுக்கு உரிய தொழிலும் ஆடல்பாடலே என்ற சிருஷ்டி ரகசியத்தைக் கண்டுகொண்ட நாடு நமது தமிழ்நாடு; கடவுளுக்கு இப்படி ஒரு நடனப்புலவனுகக் கலை உருவம் தந்து வழிபட்டுக் கூத்தாடுகிற நாகரிகம் உலகிலேயே தமிழ்நாட்டைப்போல வேறு எங்கு உண்டு?

நடராஜருடைய படிமங்கள் உலக மக்களைக் கவர்ந்தது போல் வேறு எந்த உருவமும் கவர்ந்ததில்லை! எந்தப் பெண்மை வடிவத்துக்கும் இல்லாத ஒரு கவர்ச்சி இந்தத் தெய்வத் திருவுருவத்துக்கு உலகம் முழுதும் பரவியிருப்பதை மேனுடுகளில் பல காட்சிக்கூடங்களிலும் இன்றைக்கும் பார்க்கலாம். தமிழ் மக்களுடைய வழிபாட்டுக்கு உரிய நடராஜமூர்த்தி நமது சமயத்தைச் சாராது முற்றிலும் வேறுபட்டுள்ள மக்களையும் கவர்ந்து, திருவடியை யாவது கொண்டு போய் விடவேண்டும் என்கிற அளவுக்கு உலக நாடுகள் பலவற்றையும் ஆட்கொண்டு பைத்தியமாக அடித்திருக்கிறது என்பதைப் பல தேசங்களிலும் நான் கண்டபோது, "உள்ளம் கவர் கள்வன்" என்ற சொற்களுக்கு ஒரு நூதனமான பொருள் ஒலித்தது! சிதம்பரத்திலே நடம் ஆடுகிற எங்கள் கூத்தப்பிரான் உலக அரங்கம் முழுவதிலும் அல்லவா நடம் ஆடுகிருன் என்று தமிழனுடைய தோள் பூரிக்கும்படி கலைப் பொக்கிஷமாகவும், இசைத்தமிழ்ப் படிமமாகவும் நடராஜ விக்கிரகம் உலகெங்குமே திகழ்கிறது!

சங்கீதத்தில் இறைவனைக் காணுவதும், இசையின் மூலம் இறைவனை வழிபடுவதும், மனித நாகரிகத்தின் வளர்ச்சியிலே மேம்பட்ட பக்தி முறையாகும். கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துநிற்கிற புண்ணியமூர்த்தியை ஆடலாகவும் பாடலாகவும் கண்டு கைகூப்பித் தொழுகிற பக்தி மார்க்கம் ஒருபுறம் இருக்க, பரம்பொருளின் நிலையை ஒளியாகவும் ஒலியாகவும் கண்டும் கேட்டும் அனுபவிக்கிற பழைய சித்தர் முறையும் இருக்கிறது. இது ஆன்ம யோகத்தின் ஒரு பெரிய இரகசியப் பயிற்சி முறையாகும். இசைப்புலவனுகவும் நாட்டியப் புலவனுகவும் கடவுளுக்கு வடிவம் தந்து, பற்பல புராணக்கதைகளை வழங்கி, அழகான பல துதிப்பாடல்களினுல் அவனை ஏத்தி வழிபடுகிற தமிழ் மக்களின் இந்த எழில் மிக்க ஆனந்தத் துதிமுறை, சித்தர்களின் இரகசிய நுட்பத்தையும் தன்னுள் அடக்கியிருக்கிறது! சாதாரண மனிதர்களும் தங்கள் கண்ணினுல் கண்டும் காதினுல் கேட்டும் இன்புறுகிற ஆடலும் பாடலும் ஞானிகளுடைய மானச பூஜையிலும் நுட்பமான முறையிலே இடம் பெற்றுச் 'சித்தர் மரபு' என்று பயின்று வருகிறது.

திருமூலர் பாடுகிருர்:

ஐந்து பூதங்களாகிய (Magnifying glass) பெரிதுபடுத்தும் கண்ணுடியில், கடவுளின் உருவம் தெரிகிறதா நமக்கு? இல்லை!

'பூதக் கண்ணுடி புகுந்திலன்"

அதுமட்டுமில்லை. நம்முடைய உடம்பில் பொருத்தப்பட்டுள்ள ஊனக் கண்ணுகிய பூதக்கண்ணுடிக்கு அவன் புலப்படுவதில்லை.

"பூதக் கண்ணுடி புகுந்திலன்; போதுஉளன்"

போது என்பது தாமரை. இந்த உடம்புக்குள்ளே ஆதார நிலைகளாகிய இரகசிய (தாமரைகள்) உள்ளன. மூலாதாரம் ஒரு தாமரை. மேலேயும் சகஸ்ரதளம் என்று ஒரு தாமரை இருக்கிறது. ஐந்து பூதங்களிலும் நமது ஊனக் கண்ணிலும் புலகை மாட்டாத கடவுள் இந்தத் தாமரைக்குள்ளே இருக்கிருன்! போதுளன்!

"நீதிக் கண்ணுடி நினேவார் மனத்துளன்"

இந்த உலக இயக்கத்தை ஒரு பெரிய ஒளிச்சட்டம், இராகங்களின் ஆரோகண அவரோகணச் சட்டத்தைப் போன்ற ஒரு வரையறை, தன்னுள் அடக்கிச் சுழற்றி வருகிறது. ஏற்றமும் இறக்கமும், 'இராக சஞ்சாரம்' என்று சங்கீத வித்துவான்கள் அழைக்கிற நெறிமுறையும், எல்லாமும், இந்தச் சட்டமாகிய நீதிக்குக் கட்டுப்பட்டவை! அந்த ஒளி நீதி, எழுதாத நீதி. பிரிட்டிஷ் பாராளுமன்ற நியதிகளேப் போல அது! தியானத்திலே, நினேவிலே, நிலவு கிற நீதி அது. 'மனந்தான் அந்தச் சட்டத்தை வரைந் துள்ள ஏடு.

"நீதிக்கண் ணுடி நினேவார் மனத்துளன்"

நம்முடைய மனித அறிவு வேதித்து வேதித்து, அறிவி னுக்கு அறிவாய் உள்ள இரகசியங்களேக் கண்டுபிடிக்கக் கண்டுபிடிக்க மேலும் புதிதுபுதிதாக வெளிவந்து கொண் டிருக்கிற விஞ்ஞான உண்மைகள் எல்லாம் எதை உணர்த்துகின்றன? இத்தனேக்கும் வேருக இன்னென்று இருக்கிறது என்ற பேருண்மையைத்தான், வளர்கிற பகுத்தறிவு நமக்கு வெளிப்படுத்திக் கொண்டே மேலும் மேலும் தொடர்கிறது!

"வேதக்கண் ணுடியில் வேறே வெளிப்படும்"

அப்படிப்பட்ட எம்பெருமானே நான் என்ன செய்து அனுபவித்து ஆனந்தம் பெற்றேன் தெரியுமா?

"கீதக்கண் ணுடியில் கேட்டுநின் றேனே!"

சங்கீதமாகிய ஒலியிலே, ஆடலும் பாடலுமாகி இயங்குகிற அந்த நடராஜ இயக்க மூர்த்தியைப் பிடித்து விட்டேன் என்கிருர் திருமூலர்!

'நாத உபாசனே' என்று சாதாரணக் கலேஞர்களும் சங்கீதத்தைப் போற்றிச் சொல்வதைக் கேட்டிருக்கிருேம் அல்லவா? இறைவனுடைய பாதச் சிலம்பின் ஒலியையும் இந்த உலகம் முழுவதையும் ஒலிச் சட்டத்துக்குள்ளே

கட்டுப்படுத்தி ஒரு பெரிய இராகக் கிரமத்திற்குள்ளே இயக்கி வருகிற நடராஜ நடனத்தையும், மகான்களுமே தமது ஆன்மப் புலனுகிய செவியும் கண்ணும் இணைந்த அகச் செவியிலே கேட்டும் அதே நிலையில் கண்டும் அனுபவித்தும், அந்தப் பேரானந்தத்தைப் பாடல்களிலே கொட்டியிருக்கிருர்கள். அத்தகைய பாடல்கள் எல்லாம் நடராஜப் பெருமான் நடனமாடுகிற சொல் அரங்குகள்; அந்தப் பாடல்கள் எல்லாம் சிலம்பை ஒலிக்கிற இசை மேடைகள்! திருச்சிற்றம்பலங்கள்! அவற்றை அருளிய கவிஞர்கள் எப்படித் தங்கள் கவிதையிலே நடராஜமூர்த்தியின் தாண்டவத்தை அனுபவித்தார்களோ அப்படியே நாமும் அந்தப் பாடல்களைப் பாடிப்பாடி அதே ஆனந்த நிலையை அடையலாம்! கீதக் கண்ணாடியாகிய ஒலிக் கருவி நமக்குச் சிதம்பரமாக நின்று, சித்சபேச நடனத்தைக் காட்டுகிறது. சொல்லின் மூலம் நமக்குக் கிடைக்கிற மூலட்டமும், திருச்சிற்றம்பலமும், பொன்னரங்கமும், மன்றமும், கோயிலும் எல்லாம் திருமந்திரத்திலே ஒலிக்கக் கேட்கிருேம், காண்கிருேம். பக்தன், யோகி, ஞானி மூவருக்கும் இந்தத் திருச்சிற்றம்பலம் ஒரு கவிதையின் வடிவத்தில் மனமாகிய மன்றத்திலே, சொல் என்ற வே தாங்கி, இசையின் தாள இயலிலே நடனமாடக் காணு கிருேம். கீதக்கண்ணுடி ஒன்றைக் கையிலே கொடுத்து, நடராஜ மூர்த்தியைப் பாருங்கள் என்கிருர் திருமூலர்:

"பூதக்கண் ணடி
புகுந்திலன் போதுளன்
நீதிக்கண் ணடி
நினைவார் மனத்துளன்
வேதக்கண் ணடியில்
வேறே வெளிப்படும்
கீதக்கண் ணடியில்
கேட்டுநின் றேனே!"

ஆனந்தத் தாண்டவம்

ஆ. குருமூர்த்தி

நாட்டியக்கலை ஐந்தாவது வேதமென்று பரத சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இது எல்லா வகையான புண்ணியங்களை விளக்குவது என்றும், வேத சாஸ்திர ஆகம இதிகாசங்களுக்கு ஒத்தது என்றும் பிரம்மா கூறுகிறார். பிரம்மா இருக்கு வேதத்திலிருந்து நாட்டியத்தையும் சாம வேதத்திலிருந்து கீதத்தையும், யஜுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், அதர்வண வேதத்திலிருந்து சுவைகளையும் எடுத்துக்கூட்டி நாட்டிய சாஸ்திரமாகிய ஐந்தாம் வேதத்தைப் படைத்தார். பரத சாஸ்திரத்தை எழுதிய பரத முனிவர் நர்த்தனக்கலையை நந்திகேசுவரரிடமிருந்தும், லாஸ்யம் என்ற நடனத்தை உமாதேவியாரிடமிருந்தும் தாம் கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார். நிருத்தக்கலைக்குக் கடவுளாகிய சிவபெருமான் ஆனந்த பரவசராய் எழுந்தருளியிருந்தபோது இக்கலையை அருளிச் செய்தார். அதன் பிறகு பரத முனிவர் நிருத்தாட்டியங்களை ஒன்றாக இணைத்து நூல் இயற்றினார்.

சகோதரிகள்

இத்தகைய நாட்டியக்கலை உடலசைவு, நிலை, கையமைப்பு, கண் சுழற்சி முதலிய எல்லாங் கூடியது. உடல் சடம்; அது அசைய வேண்டுமானால் நரம்பு அசையவேண்டும். நரம்பு அசைய மனம் அசையவேண்டும். மனம் அசைய உணர்வு அவசியம். உணர்வோ உயிரின் தன்மை. உயிர் இறைவனுக்கு அடிமை. இறைவன் இசை வடிவினன். ஏழிசையாய் இசைப்பலனாய் இருப்பவன். இறைவன் அசைகிறான்; இசை அசைகிறது. இசைக்கு ஏற்ப ஜதியாகக் கால் அசைகிறது. முத்திரையுடன் கை அசைகிறது. ஆகவே நாதமயமான

இசையே நாட்டியக் கலாதேவியின் சகோதரி. சகோதரிகள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியமாட்டார்கள். இணைந்தே இருப்பவர்கள். அது போல இசையும் நாட்டியமும் இணைந்தே இருப்பன. இறைவன் திரு வுருவிலும் இவையிரண்டும் இணைந்தே இயங்குகின்றன.

ஆடலின் தத்துவம்

இறைவனது ஆடல்களில் சிறப்புடையது ஆனந்தத்தாண்டவம்; ஐந்தொழில்களையும் ஒரு சேர இயற்றுகின்ற ஆடல் இது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்— ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு."

இக்கூத்தால் வரும் பயனை அறிவிக்கும் பாடல் :

"மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும்—ஆனந்தம்
மொண்டருந்தி நின்றாடல் காணும் அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து."

பெருமான் ஐந்தெழுத்து வடிவினன். திருவடியில் 'ந', உதரத்தில் 'ம' தோள் 'சி', முகம் 'வா', முடி 'ய', பாதாதிகேசமாக எண்ணும் போது கூத்தனுருவம் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தாம். துடி சி வீசிய திருக்கரம் வா, அபயகரம் ய, நெருப்பு ந, முயலகன் ம, இங்ஙனம் பார்க்கும்போது இறைவனின் வலப்பக்கம் சிவாய எனவும் இடப்பக்கம் நம எனவும் காணப்பெற்ற இறைவனின் வடிவம் சிவாய நம என்ற ஐந்தெழுத்தாம்.

ஆனந்தத் தாண்டவம்

இந்த ஆனந்தத் தாண்டவம் தில்லையில் நிகழ்ந்த வரலாற்றை புராணங்களும் சாஸ்திரங்களும் பெருமைபடக் கூறுகின்றன. உலகமே விராட்புருடன். அவனுடைய வடிவாக சிவத்தலங்கள் அமைந்துள்ளன. திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; காளத்தி கண்டம்; காசி புருவமத்திமம்; சிதம்பரம் இதய மாதலின் இறைவனது இயக்கமாகின்ற படைத்தல், காத்தல்,

அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களும் நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தில் அமைந்திருப்பது வியப் பன்றே. இந்தத் தாண்டவம் உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டு நடைபெறுவது. ஒரு காலத்தில் தேவர்களது வேண்டுகோளுக் கிணங்கி இறைவன் தாருகா வனத்து ரிஷிகளது செருக்கை அடக்க ஆடினர். அப்போது அவர் பிட்சாண்ட கோலத்தைக் கொண்டார். விஷ்ணு மோகினியாகப் பின்வர, பூதகணங்கள் பிட்சை பாத்திரம் தாங்கிவரச் செல்லலானர். அவர்கள் வனத்தை அடையவும் அவர் களது வனப்பைக் கண்ட ரிஷிகள் மோகினியைப் பின்தொடர, ரிஷி பத்தினிகள் பிட்சாண்டவரைத் தொடரலாயினர். சிறிது நேரத்தில் ரிஷிகள் வந்தவர்களின் உண்மையை உணர்ந்து மனம் கொதித்து வெட்கினர். பின்னர் அவர்களை எவ்விதம் கொல்வது என்பதைக் கருதி, வேள்வி ஹோமத்தினின்று எழுந்த புலியைச் சிவனர்மீது ஏவினர். பாய்ந்த புலியின் தோலைச் சிவனர் தம் நகத்தால் உரித்துத் தமது இடையில் கட்டிக் கொண்டார். பின்னர் அவர்கள் ஏவிய பாம்பைக் கழுத்தில் மாலையாக அணிந்துகொண்டார். பின் நடன மாடத் தொடங்கினர். அதுகண்ட ரிஷிகள் கோபம் கொண்டு முயலகன் என்ற அபஸ்மார ராட்சசனை அவர்மீது ஏவினர். சிவன் அவனைக் காலின்கீழ்மிதித்து அடக்கி நாதாந்தநடனமாடினர். ரிஷிகள் தங்கள் வலியிழந்து இறைவனது மன்னிப்பைப் பெற்றார்கள். ★

திருப்பெரும்புலியூர்

இது திருவையாற்றிற்கு வட மேற்கே சுமார் 2கல் தொலைவிலுள்ளது. இத்தலத்திற் புலிக்கால் முனிவர் இறைவனைப் பூசித்து அருள் பெற்றனர். ஆதலின் இப்பெயர் பெற்றது. 'புலியூர்' என்னும் பெயருடைய தலங்கள் பல தமிழ் நாட்டில் இருப்பதனால், வேறுபாடு அறிதற்பொருட்டு இது பெரும்புலியூர் என வழங்கப் பெற்றது. பெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்) எருக் கத்தம் புலியூர் (இராசேந்திரப் பட்டினம்) ஓமாம்புலியூர் திருப்பாதிரிப்புலியூர் எனப் பிறதலங்களும் வேறுபாடு தெரியும் வகையில் வழங்கப்படுதல் காணலாம். இறைவன் புலியூர் நாதர் (வியாக்கிரபுரீசுரர்), இறைவி சௌந்தர்ய நாயகி.

திருமூலர் கண்ட குருபர நடனம்

பா. நடராஜன்

வேத நெறி, ஆகம நெறி என்னும் இருபெரும் பிரவாகங்கள் இறைவனிடமிருந்து தோன்றி, இந்து சமயமென்னும் ஜீவநதியாகச் சங்கமித்து, தொன்று தொட்டு இடையீடின்றி ஆன்ம வாழ்வு தழைக்க ஓடிக் கொண்டே யிருக்கிறது.

திருமூலர் இரண்டையும் சமமெனக் கொண்டு, ஆகமநெறியின் சிறப்பியல்புகளை ஒன்பது தந்திரங் களில், மூவாயிரம் மந்திரங்களில் விளக்கிப் போயுள்ளார்.

ஆகமநெறிக்குக் கண் போன்றிருப்பது திருக் கோயில் வழிபாடு. திருக்கோயில்களைப் பழுதின்றிக் காத்தல், தவறின்றி அங்கு வழிபாடுகளை நடத்தல் ஆகியவை அரசின் கடமை என்று வலியுறுத்துகின்றார் திருமூலர். அந்தக் கடமையிலிருந்து அரசு தவறு மானால், நாட்டுக்குக் கொடும் துன்பங்கள் விளையு மென்று எச்சரிக்கை செய்கிறார். வாரி வளங்குன்றும்; நோய்கள் மிகும்; மன்னன் வலிகுன்றும் என்பார்.

"ஆற்றரு நோய்மிக்கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்று தைத்தான் திருக்கோயில் களெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

வழிபாடுகள் தவறினால் வரும் தீங்குகளையும் குறிப் பிடுகின்றார்:

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங்களற மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே"

இங்ஙனமாகிய முன்னவனுர் கோயில்களுக்குள்ளே தென் திசையில் அமைந்துள்ள தில்லைச் சிற்றம்பலமே சாலச் சிறப்புடையது. தென் திசையே வையத்தில் சிறந்தது என்கிருர் திருமூலர்:

"ஈருன கன்னி குமரியே காவிரி
வேரு நவதீர்த்த மிக்குள வெற்பேழுள்
பேருன வேதாகமமே பிறந்தவான்
மாருத தென்திசை வையகஞ் சுத்தமே"

தென் திசையில்தான் ஆகமமே தோன்றியது. இதையே மணிவாசகரும்,

"மன்னுமா மாலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்று வித்தருளியும்"

என்று எடுத்தோதுகிருர்.

பிண்டத்திலுள்ளவை அனைத்தும் அண்டத்திலுண்டு என்பதே யோகியர் கருத்து. மூலாதாரம் தொடங்கி ஆருதாரங்களும், இடைபிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகளும், நடுவே நிலைபெறும் மேருதண்டமும் யோகம் பயில் நிலையில் உடலுக்கு எவ்வளவு முக்கியமோ, சமாதி நிலை பெற்று சீவன் சிவமாதற்கு எவ்வளவு அந்த அமைப்பு அடிப்படையோ, அதுபோல் உலகுக்கு தில்லை அமைந்துள்ளது என்கிருர்:

"இடை பிங்கலையிம வானேடி லங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுமுனை
கடவுந்தி லைவனங்கசை கட்டமூலம்
படர் வென்றியென்னும் பரமாம் பரமே"

இங்ஙனமாகச் சிறப்புப் பெற்ற தில்லையில் ஆடும் "பொற்றில்லைக் கூத்து," ஆருதாரங்களிலே ஆஞ்ஞையில் நின்று குருபரனுய் ஆடும் இறைவன் நிலை என்கிருர் திருமூலர்:

"குரானந்த ரேகையாய்" என்று ஆஞ்ஞையை அடைந்த சீவன் மேலும் சகஸ்ரதளத்தை நோக்கிச் செல்ல குருவழி காட்டுவதைக் குறிப்பிட்டு விட்டு,

" ஆறுமுகத்தில் அதிபதி நானென்றுங்
கூறுசமயக் குருபரன் நானென்றுந்
தேறினர் எதற்குத் திருஅம்பலத் துளே
வேறின்றி அண்ணல் விளங்க நின்ருனே"

என்று திருமூலர் விரிக்கின்ருர். எனவே பொற்றிலைக் கூத்தை ஆஞ்ஞைக் கூத்தென்றும், சமயக்குருபரன் கூத்தென்றும் திருமூலர் கொள்கிருர்.

இத்தகைய தில்லையம்பதியில் மூலட்டான ஈசுவரர் கோயில்போன்ற இடங்களில் திருப்பணிகளைப் பெரும் பொருளில் திரு கருமுத்து தியாகராசச் செட்டியார் பேரன் திரு. சொக்கலிங்கம் செட்டியார் மேற்கொண்டு, 7-2-1979-ல் குடமுழுக்கு விழா எடுத்ததை அறிந்து தமிழகம்—ஏன் ஞாலம் அனைத்துமே—பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. சிவநெறிச் செல்வராம் சொக்கலிங்கம் செட்டியாருக்கு எல்லா நலனும் இறைவன் அருள வேண்டுவோமாக!

"நயனெடு நன்றிபுரிந்த பயன் உடையார்
பண்பு பாராட்டும் உலகு"

நடராசப் பெருமானின் பாதம்

ஆடிய பாதம், மன்ருடிய பாதம்
பாடிய வேதங்கள் தேடிய பாதம்
தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்கள் எல்லாம் தெரிசிக்கும் பாதம்

—வடலூர் வள்ளலார்

நடராஜர் தத்துவம்



(வினாவும் விடையும்)

1. நடராஜர் நடனமாடிக் கொண்டிருப்பதேன்?

அணுக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் "அணுக்களெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றன" என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்துக் காரணம் காண முடியாது கலங்கினர். அதன்பின் நமது தெய்வம் நடனமாடிக் கொண்டிருக்கின்றது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ்ஞானிகள் இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள்ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடனமூர்த்தியாயிருக்க வேண்டும். ஆதலினாலேயே நடராஜர் விக்ரகம் நடனமாடும் ரூபமாக விளங்குகிறது. மனிதர்களுடைய நோக்கம் துக்கம் நீங்கிச் சுகம் அடைய வேண்டும் என்பதேயாகும். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம் புரிவதால் எப்பொழுதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பது தெரிகிறது.

2. நடராஜர் திருவுருவத்தின் அமைப்புகள் யாவை?

இவ்விக்ரகம் ஒரு மனிதன் நடனமாடும் ரூபமாக அமைந்திருக்கிறது. வலக்காலைக் கீழே ஒரு அரக்கன் மேல் மிதித்து இடக்காலை மேலே உயர்த்தி, ஓர் இடக்கையால் தூக்கிய பாதத்தைக் காட்டி, மற்றைய இடக்கையில் அக்கினி தாங்கி, ஒரு வலக் கையில் அபய ஹஸ்தம் பிடித்து, மற்றொரு வலக்கையில் உடுக்கினைப் பிடித்து நிற்பதாக இத்திருவுருவம் அமைந்துளது.

3. இவரது ஒருவலக்கையில் உடுக்கு இருப்பதேன்?

உடுக்கிலிருந்து வரும் ஒலியால் அண்ட பிண்ட சரா சரங்கள் எல்லாம், பெரிய தீயிலிருந்து பொறிகளும் ஊற்று நீரிலிருந்து குமிழிகளும் வருவன போன்று, இறைவனிட மிருந்து தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும். ஆகவே, இது சிருஷ்டி அல்லது ஆக்கத்தை உணர்த்துகின்றது. ''உலகம் சப்தத்தில் பிறந்து அதிலேயே நிலை பெற்றி ருப்பது'' என வேதம் கூறுகின்றது.

4. அபயஹஸ்தத்தின் கருத்தென்ன?

இது அமைதிக் குறியைக் காட்டுகிறது. ''அங்ஙனமே யாகுக'' என்பதைக் காட்டி உலக முழுவதும் மாறுமலும் தவறுமலும் ஒழுங்காய்ப் பரிபாலனம் செய்யப்படுவதை இது குறிக்கின்றது. ''இறைவன் திருவடியே தஞ்சமென வந்தடைந்தார்களைக் காப்பாற்றுவேன்'' எனக் கூறுவது போல் அமைந்திருக்கிறது. ஆகவே, இது ஸ்திதி அல்லது காத்தலைக் குறிக்கின்றது.

5. இடக்கையில் தாங்கியிருக்கும் தீ எதை உணர்த்துகின்றது?

எல்லா வுலகங்களையும் இறுதியில் அநித்தியமாக்கும் சம்ஹார சக்தியை அல்லது அழித்தலை உணர்த்து கின்றது.

6. ஊன்றிய வலக்கால் எதை உணர்த்துகின்றது?

படைத்தல் முதலிய விஷயங்களை எவர்க்கும் விளங்க வொட்டாமல் மறைக்கும் மாயா சக்தியை உணர்த்து கின்றது. உயிர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கவாறு அவை இன்ப துன்பங்களை நுகரும்படி செய்த லாகிய ''திரோபவம்'' அல்லது ''மறைத்தலை'' இது உணர்த்துகின்றது.

7. தூக்கிய பாதம் எதை உணர்த்துகின்றது?

குஞ்சித பாதமாகிய தூக்கியிருக்கும் இடக்கால் எல்லோரையும் மயக்கும்படியானதும் அநாதியும், அநந்த

மாயுமுள்ள சிருஷ்டியாதி நாடகத்திலிருந்து உயிர் விடுபட்டு ஒய்வடையும்படி செய்யும் நிழல் போன்ற கடவுளின் கருணையைக் குறிக்கின்றது. இப் பாதத்தை ஓர் இடக் கை சுட்டிக் காட்டி, நமக்குபதேசிக்கும் குருவே போல் "ஆண்டவன் திருவடியன்றி உயிர்களுக்குக் கதியில்லை. ஆதலால் அதனை அடைய முயலுங்கள்" என உபதேசிப்பதுபோல் இருக்கின்றது. ஆகவே, தூக்கிய பாதம் அனுக்ரகம் அல்லது அருளலைக் குறிக்கின்றது.

ஆகவே, நடராஜரது ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்தியத் தாண்டவம் என மதிக்கப்படும். இது கடவுளது ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்ரகம் ஆகிய ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை நன்கு விளக்குகின்றது.

'தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னும் பாட்டும் இதனை விளக்கும். மேலும் இப்பெருமானது திருநடனம்,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து —நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்"

என்றபடி மாயையை அகற்றி, வினைகளைத் தொலைத்து மலங்களை நீக்கி, மோட்சத்தைத் தருகின்றது என்பதைக் காட்டுகிறது. ஆதலால் நாம் நடராஜப் பெருமானின், திருவுருவச் சிறப்பினை நினைந்து வழிபட்டுய்வோமாக.

[நன்றி : *தமிழ் நாடு தெய்விகப்பேரவை வெளியீடு—இந்து மத பாலபாடம்*]

கூத்து

அன்புக்குரிய டி. கே. சி. அவர்களுக்கு, நமஸ்காரம்.

'கூத்து' என்பது தமிழில் எவ்வளவு அழகாகப் பதிந்திருக்கிறது.

இந்தக் கூத்து முயலகன் மேல் நடைபெறுகிறது. அவ்வளவு பாரத்திலுைம் வேகத்திலுைம் காலின் கீழ் கிடக்கும் தேகத்துக்கு ஒரு சேதமும் இல்லாமல் சிற்பி செய்திருக்கிருன். சிருஷ்டி சம்ஹாரமும் உயிர்களின் நடைமுறையும் எவ்வளவு பெரிய கூத்தாயினும் முயலகன் மேல் கால் எவ்வளவு லாகவமாக நிற்கிறது! 'லாகவம்' என்பது 'லகு' (பாரம் அற்றது) என்பதன் பண்புப் பெயர். ஆண்டவனுடைய கூத்து எதன் பேரிலும் தாங்காமல் கூத்தனுடைய நிராலம்ப நிலையை நாம் உணரும்படி சிற்பி நன்ருக நிர்மாணித்துக் காட்டியிருக்கிருன். St. George அரக்கனைக் குத்திக் கொல்லுவதும் கிருஷ்ணன் பாம்பை நசுக்கித் தாண்டவமாடுவதும் வேறு. நடராஜன் கூத்து வேறு. இது விசுவரூபத் தாண்டவம். அதற்குத் தகுந்த கீழ் ஆதரவு எவ்வாறு நிருமாணித்தல் என்பது சிற்பிக்குப் பெருஞ் சங்கடமாகவே இருந்திருக்கும். அந்தச் சிக்கலை, காலின் கீழ் ஒரு சிறு பிராணியை வைத்து அதற்கு எள்ளளவு பாதையும் உண்டாகாமல் அமைத்து முடித்துவிட்டான். நிராலம்ப நிலை எவ்வளவு வியக்தமாக சிற்பப் பொருளில் ஏறிவிட்டது! தாங்கிப் படுத்துக் கிடக்கும் ஜீவனின் முகத்தில் ஏதாவது கஷ்டக் குறிகள் தோன்றுகிறதா...? இல்லை. மிகவும் சாமர்த்தியமான கற்பனை. பின்னுல் வந்த சிற்பிகள் பொருளை அறியாமல் முயலகனை மாற்றிக் கொண்டே போனுர்கள். காளிங்க நர்த்தனம், நரசிம்மாவதாரம், St. George and Dragon இந்த வகையில் ஒன்ருக வைத்துக்கொண்டு, கற்பனையைக் கீழ்ரகமாகச் செய்து விட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். இதை உங்களுக்குச் சொன்னுல் ஒருவிதமாக சோதித்துப் பார்ப்பீர்கள் என்று எழுதினேன். உலகத்துக்கு ஒரு பெரும் புதுமையான விஷயம் நம்ம நடராஜ பெருமான் விக்கிரகம். அதன் பொருளுக்குக் குறைவு ஏற்படாமல் காப்பாற்ற வேண்டும்.

புது டில்லி
15-9-1949

அன்புடன்,
இராஜகோபாலாச்சாரி.

நாதனுர் ஆடும் நடம்

ந. ரா. முருகவேள்

முன்னுரை :

நடராச வடிவம் நலங்கள் பலவும் நிறைந்தது; பழமையும் பெருமையும் வாய்ந்தது; தமிழ் நாட்டின் தனிப்பெரும் கலையியற் செல்வமாகக் கவினுற்றுப் புகழோங்கிப் பொலிவது! நடராசத் திருவுருவம் இடம் பெருத கோயில் எதுவும் இல்லை. எல்லாச் சைவக் கோயில்களிலும் நடராசத் திருவுருவம் சிறப்புற வைத்துப் போற்றி வழிபடப் பெற்று வருகின்றது.

நடராசப் பெருமானிடத்தும், அப்பெருமானின் திருவுருவச் சிறப்பிலும், சைவத் தமிழ்ச் சான்ருேர்கள் எல்லோருமே மிகவும் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுகின்றனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகள் போன்ற சான்ருேர்கள் அனைவரும், நடராசப் பெருமானிடத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பரவித் திளைத்து மகிழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பழம்பெரும் சங்க காலப் பனுவல்களிலும், நடராசப் பெருமானைப் பற்றிய புகழுரைகள் காணப்பெறுகின்றன.

தத்துவ நுட்பங்கள் :

நடராச வடிவம் கலைநலம் சிறந்தது; கவர்ச்சி மிக்குத் திகழ்வது! அதன் ஒவ்வொரு பகுதியும் கவின்மிக்குப் பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு விளங்குகின்றது.

1. **பரந்த திருமுக மண்டலம் :** இறைவனின் தலைமை நிலையும் எல்லையில்லா அழகும், இனிய தண்ணளித் திறனும் உணர்த்துகின்றது.

2. பனித்த சடை : 'நுண்சிகை ஞானமாம்' எனத் திருமூலர் திருமந்திரம் கூறுமாறு ஞானச் சிறப்பையும், 'சைவம் விட்டிட்ட சடைகளும்' எனத் திருவிசைப்பாப் பாடல் கூறுதற்கேற்பச் சிவநெறிக்குரிய தவவொழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது.

3. கங்கையைத் தரிசித்தல் : 'நில்லாக நீர் சடைமேல் நிற்பித்தான்' என அப்பர் பாடுதல் போல, இறைவனது பேராற்றலையும், வேகங் கெடுத்தாளும் வித்தகத்தையும் விளக்குகின்றது.

4. பிறையணிதல் : தன்னைச் சரண் அடைந்தவர்களைத் தாங்கித் தாழ்வு நீக்கிப் பாதுகாக்கும் வள்ளல் என்று அறிவிக்கின்றது.

5. குனித்த புருவம் : புருவத்தை வளைத்தல் நெறித்தல் முதலியன, பரதக் கலையில் வல்லவர்கள் தம் குறிப்புக்களை உணர்த்தும் மெய்ப்பாட்டு வகைகள் ஆகும். தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கி ஊன்றிக் கேட்டருளும் கருணைத்திறம் காட்டும்.

6. குமிண் சிரிப்பு : தன்பக்கல் போந்து, அடைக்கலம் புகுபவர்களை அருளுடன் வரவேற்று, அவர்கள் செய்த பிழைகளை மன்னித்து, அவர்களுக்கு வாழ்வளித்து மகிழ்ச்சி விளைவிக்கும் மாட்சிமை யுணர்த்தும்.

> **"சென்று தொழுமின்கள் தில்லையுள்**
> **சிற்றம்பலத்து நட்டம்,**
> **என்று வந்தாய்? என்னும்**
> **எம்பெருமான்றன் திருக்குறிப்பே"**

7. பவளமேனி : பவளம்போற் சிவந்த மேனி, தீவண்ணன் ஆகிய இறைவன் நெருப்புப் போல்பவன் என்று நினைப்பிக்கும். நெருப்பானது தன்பால் எய்தும் பொருள்களை எல்லாம் தூய்மைப்படுத்திப் புனிதம் உறுவிக்கும். அதுபோல இறைவனும் தன்பால் அன்பு செய்வார் மாசுகளையெல்லாம் போக்கித் தூய்மையாக்கி அருள்புரிதலைப் புலப்படுத்தும்.

8. பால் வெண் நீறு : எல்லாப் பொருள்களும் அழிந்து, இறுதியில் நீறு ஆகும். நீறு மற்றொன்றாக மாறி அழியாது. ஆதலின், திருநீறு அழிவிலாத் தன்மையையும், தூய இயல் பினையும் காட்டும். இறைவன் "தொழுதெழுவார் வினை வளம் நீறெழ நீறு அணிகின்றான்". அவன் "செந்நிற மேனி யில் வெண்ணீறு" அணியும் கோலம், எவர் நெஞ்சையும் கவர்ந்து பிணிக்கவல்ல பெற்றிமையினைத் தெற்றெனத் தெருட்டும்.

9. நெற்றிக் கண் : "நுகல்விழி நாட்டத்து இறை யோன்" "நெற்றித் தனிக்கண் ஒருத்தன்" "மத்தகஞ் சேர்தனி நோக்கினன்" "கண்ணுநுதலான்" என்று சான்றோர் கள் போற்றும் நிலையிற் சிவபிரானுக்குரிய சிறப்பு அடை யாளம்.

10. நீலகண்டம் : விண்ணோர் அமுது உண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும், இருந்து அருள் செய் யும் பெருந்தகை ஆகிய, இறைவனின் நயத்தக்க நனி நாகரிக நலனைப் புலப்படுத்தும்.

11. உடுக்கை : 'எண்டோள் வீசி நின்றாடும் பிரான்' என்றவாறு நடராச வடிவத்திற்கு எட்டும், அதற்கும் மேற் பட்டும் கைகள் அமைக்கப்படுதல் உண்டு. எனினும் பொதுவாக நான்கு கைகள் எங்கும் காணப்படும். அவற்றில் வலக்கை ஒன்றில் உடுக்கை (டமருகம்) ஏந்தியிருப்பது, ஒலியை எழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருள்களைப் படைக்கும் நோக்குடன், இறைவன் பர நாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையினைத் தெளிவிப்பது.

12. நெருப்பு : உலகுயிர்களைப் படைத்த இறைவன், அவைகள் பிறந்தும் இறந்தும் துயருற்று வருந்தும் இளைப் பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் அழித்தற் றொழிலுக்கு அடையாளம். "அழிப்பு இளைப்பு ஆற்றல்" என்பது சித்தியார். இடக்கை ஒன்றில் நெருப்பு இருக்கும்.

13. அமைத்த கை : இதனை 'அபயகரம்' எனவும் வழங்குவர். 'நீவிர் அஞ்சற்க! யாம் நும்மைக் காக் கின்றோம்' எனத் தன் அடியவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் நிலை ஆதலின், இவ்வலக்கை காத்தற்றொழிலைக் காட்டும்.

14. வீசிய கரம்: இவ் இடக்கை யானையின் துதிக்கையினைப் போன்று நீண்டு வளைந்து திகழ்தலின் 'கஜஹஸ்தம்' எனவும் வழங்கும். இக் கையின் ஒரு விரல் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கும்.

15. எடுத்த திருவடி : இ∴து இறைவனின் திருவடியாகும். எனவே இ∴து அம்மையின் பகுதிக்கு உரியது. அம்மை அருளே உருவமாகத் திகழ்பவள். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" என்பது சாத்திரம். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பண்டு தொண்டர் தம்மை இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தன" என அப்பர் தேவாரம் அறிவிக்குமாறு போல, பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் உயிர்களை அக்கடலினின்று எடுத்து மீட்டுக் காப்பாற்றும் அருளற்றொழிலுக்கு உரியது.

16. ஊன்றிய திருவடி : இ∴து இறைவனின் வலக்கால் ஆண் பகுதிக்கு உரியது. இது முயலகன் என்பவனை மிதித்து அடக்கும் வகையில், அவன்மீது ஊன்றிய நிலையில் அமைந்திருக்கும். நன்கு மிதித்து நசுக்கி விடாமலும், மிதியாமலே விட்டு விடாமலும், மெல்லென இறைவன் முயலகன் மீது நிற்கின்றான். இந்த நிலைமை மலத்தை முழுதாக அழித்து விடாமலும், மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகரச் செய்ய இறைவன் இயற்றும் மறைத்தற்றொழிலைக் குறிக்கும்.

17. முயலகன் : இவனைப் பூதம் குறள் அசுரன் அபஸ்மாரன் முதலிய பெயர்களால் நூல்கள் வழங்கும். முயலகன் ஆணவமலத்திற்கு அறிகுறி. ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அதுபோலவே முயலகனும் இறைவன் திருவடிக்கீழ் என்றும் விளங்குகின்றான். இறைவனுக்குப்படிநிலையாய் அமைந்து உதவுதல் போல, முயலகன் காணப்படுகின்றான். அதுபோல ஆணவமலமும் உயிர்களின் இறையின்பநுகர்ச்சிக்கு ஓராற்றாற் காரணமாகின்றது. "இத்தை விளைவித்தல் மலம்" என்பது காண்க. "மாயாதே தன் சத்தி மாய்ந்து" முத்திநிலையில் உயிர்களின்பால் ஆணவமலம் அடங்கிக் கிடப்பதுபோல, முயலகனும் இறைவனின் திருவடிக்கீழ்" "மாயாதே தன் சத்திமாய்ந்து" கிடக்கின்றான் என்க.

18. தெற்கு நோக்குதல்: எல்லாத் திருக்கோயில்களிலும் நடராசப் பெருமானின் திருவுருவம் தெற்கு நோக்கியே அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். 'நம்பினவர்க்கு நடராசன் நம்பாதவர்க்கு எமராசன்' என வழங்கும் பழமொழிக்கு ஏற்ப, இறைவன் தன்னை வழிபடும் அடியவர்கட்குத் தெற்கே யிருந்துவரும் எமராசனுல் யாதொரு துன்பமும் நேராமற் காத்தற் பொருட்டே, தெற்கு நோக்கி ஆடுகின்றான் என்பர் பெரியோர். திருவிளையாடற் புராணம் இயற்றியருளிய பரஞ்சோதி முனிவர், செந்தமிழ்மொழியின்மீதும், தென்றற் காற்றின் மீதும் உள்ள விருப்பம் காரணமாகத் தெற்கு நோக்கி இறைவன் நடனம் புரிகின்றான் என்று குறிப்பிட்டுள்ளார்.

19. மாதொரு பாகம் நோக்குதல்: நடராச வடிவம் அமைக்கும் சிற்பக் கலைஞர்கள், அதன் முகமானது சற்றுச் சாய்ந்து நிற்கும் சிவகாமி அம்மையை நோக்கி ஆடுவது போலத் திருவுருவம் அமைப்பார்கள். இங்ஙனம் அம்பிகையை நோக்கியே இறைவன் திருநடம் புரியும் இயல்பு குறித்துக் குமரகுருபரர் அழகுற விளக்கி அருள்கின்றார். குழந்தையின் குடர், மருந்தைச் செறிக்கும் ஆற்றல் உடையதன்று என உணர்ந்து, ஒரு தாயானவள் அம் மருந்தினைத் தான் உண்டு, அம் மருந்தின் பயனைத் தன் பாலின் வழியாக அக்குழந்தை பெறும்படி செய்து, அதன் நோய் நீங்குமாறு செய்வித்தல் போல, அம்பிகை நடராசப் பெருமானின் திருநடனத்தைத் தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் அடையும்படி செய்விக்கின்றாள்.

திருநடனச் சிறப்பு:

இறைவன் கலைகளின்முதல்வன்; கலையுருவினன். கலைகள் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. இறைவன் ஒருசிறந்த பெருங் கலைஞன் என்பதையே நடராச வடிவம் நலமுற உணர்த்துகின்றது. "மனிதன் பேசத் தொடங்கும் முன்னரே ஆடக் கற்றுக் கொண்டுவிட்டான்" என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம்முறையில் நோக்கினால், எல்லா வகைக் கலைகளுக்கும் முற்பட்டுப் பழமையும் பெருமையும் முதன்மையும் மிக்கதாக விளங்கும் கலை, நடனக் கலையே என்பது தெளிவாம்.

இத்தகைய நடனக் கலையின் தெய்வமாக அமைந்து, அண்ட வெளியினையே நடன மேடையாகக் கொண்டு, தானே காண்பவனும் நடிப்பவனுமாக நின்று, பலவேறு வகையான, நடனத் திறங்களை இறைவன் செய்தருளு கின்றான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றபடி, வானவெளியில் சுழலும் கோள்களும், (Planets) விண்மீன்களும் (Stars) முதலிய அண்டகோடிகள் யாவும், அசைவுற்று இயங்கும் பொருட்டு, இறைவன் தான் அசைந்து யாவற்றையும் ஒருங்கே இயக்குவிக்கின்றான்.

மேலும், தில்லைச் சிதம்பரத்தில் இறைவன் இத் திரு நடனம் இயற்றுதற்குக் காரணம், அஃது இவ்வுலகின் நடு விடமாக இருத்தலேயாம்.

விண்ணுக்கும் மேல், வியன்
பாத லக்கீழ், விரிநீர் உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து,
தென் தில்லை நின்றோன்

—திருக்கோவை ர்

என மாணிக்கவாசகர் கூறுகின்றார். இவ்வாறே திரு மந்திரம், கோயிற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் கூறுதல் காணலாம். ★

பேயினும் பெரியேன் செய்த
பிழைகளுக்கு எல்லை இல்லை;
ஆயினும் பொறுத்தாட் கொண்டாய்;
அம்பலத்து அரசே! என்தன்
தாயினும் இனிய! உன்தன்
தண்அருள் பெருமை தன்னை
நாயினும் கடையேன் எந்த
நலமறிந்து உரைப்பேன் அந்தோ!

—இராமலிங்க சுவாமிகள்

சிதம்பரம் சிவகாமியம்மை திருக்கோயில்

க. வெள்ளைவாரணன்

மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகை போற்றி
ஒன்றின் மங்கலநாணின் ஒளிபோற்றி யுலகும்பர்
சென்று தொழ வருள் சுரக்குஞ் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி.

சிவநெறிச் செல்வர்களால் பூலோக கயிலாயம் எனவும், கோயில் எனவும் போற்றப் பெறுவது பெரும்பற்றப்புலியூர் என்னும் சிதம்பரமாகும். இத்தலம் உலக புருடனுக்கு நெஞ்சத் தாமரையாக விளங்குவது. இதன் கண் ஞான மாகிய நுண்ணிய ஆகாயமாகிய திருச்சிற்றம்பலத்திலே சிவபெருமான் ஆனந்தத் திருக்கூத்தினை எக்காலத்திலும் நிகழ்த்தியருளுகின்றார்.

இமயம் முதல் குமரி வரையுள்ள இந்தியப் பெரு நிலத்திலும் கடல் கடந்து, இலங்கையிலும், உலகின் பல்வேறிடங்களிலும் வாழும் எல்லா மக்களையும், தன் பால் ஈர்க்க வல்ல தெய்வத்தன்மை வாய்ந்த திருத்தலங்களுள் தலைமை வாய்ந்தது சிதம்பரம். அழியுந்தன்மையானவாகிய உலகப் பற்றுகளை அறவே அகற்றி எவ்வகைப் பொருள்களுக்கும் சார்பாகிய இறைவன் திருவடிகளைப் பற்றி வழிபட்டு மகிழ்வதனையே பெரும் பற்றாகக் கொண்டவர் புலிக்கால் முனிவர். வியாக்கிர பாதராகிய அவர், உலக உயிர்கள் நலம் பெறுதல் வேண்டித்தில்லை வனமாக இருந்த இத்தலத்தில் திருமூலநாதராகிய சிவலிங்கத் திருவுருவினைப் பூசித்துப் போற்றினார். அதனால் இத்தலம் 'பெரும் பற்றப் புலியூர்' என வழங்கப் பெறுவதாயிற்று. இத்தில்லையில் சிவபெருமான் பதஞ்சலி முனிவர் செய்த வழிபாட்டிற்குத் திருவுள மகிழ்ந்து அம்முனிவர் வேண்டிய வண்ணம் நடராசப் பெருமானாக வெளிப்பட்டு அருளி உலகமீன்ற

அன்னையாகிய சிவகாமியம்மை காண ஆனந்தத் தாண்டவமாகிய அருட் கூத்தினை இடைவிடாது இயற்றி அருள்கின்ருன் என அருள் நூல்கள் கூறுகின்றன.

முற்காலத்தில் சிம்மவர்மன் என்னும் வேந்தன் தில்லையை அடைந்து வேந்தன் வியாக்கிரபாதரை இறைஞ்சிச் சிவகங்கையில் நீராடித் தனது உடல் நோய் நீங்கிப் பொன்மேனி பெற்றமையால் இரணியவர்மன் என்னும் சிறப்புப் பெயர் பெற்று, நடராசப் பெருமானுக்கு நாள் வழிபாடும் திருவிழாக்களும் நிகழ நிபந்தம் வழங்கினுன். இச்செய்தி கோயிற்புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருமந்திர மாலையினை அருளிய சிவயோகியாகிய திருமூலர் முதல் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனுர் ஈருகவுள்ள சைவத் திருமுறையாசிரியர் அனைவரும் தில்லைச் சிதம்பரத்தில் (சிற்றம்பலத்தில்) திருக்கூத்தியற்றியருளும் இறைவனது திருநடனத்தை இறைஞ்சிப் போற்றியுள்ளார்கள். கோச்செங்கோட் சோழன் முதலிய சோழ மன்னர்கள் அனைவரும் தில்லையம்பலவாணனைத் தமது குலதெய்வமாக வழிபட்டுத் தில்லைக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். சோழ மன்னர்களும் அவர்தம் அரசியலதிகாரிகளும், தில்லைக் கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். கி. பி. ஐந்தாம் நூற்ருண்டில் ஆட்சிபுரிந்த பல்லவவேந்தன் சிம்மவர்மன் என்பான் கூத்தப் பெருமானை வழிபட்டுத் தில்லையில் பொன் வேய்ந்தனன் என்பர். திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் இங்குக் கூத்தப் பெருமானை இறைஞ்சிப் போற்றிய காலத்தில் இத்திருக்கோயில் தூய செம்பொன்னினுல் எழுதி வேய்ந்த சிற்றம்பலமாக விளங்கியுள்ளது என்பது அவர்கள் பாடிய திருப்பதிகங்களால் நன்கு விளங்கும். வரகுண பாண்டியன் தில்லையை வழிபட்ட செய்தியை மணிவாசகர் குறித்துள்ளார். கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஆட்சி புரிந்த முதல் ஆதித்த சோழன் கொங்கு நாட்டினை வென்று அங்குப் பெற்ற பொன்னைக் கொண்டு தில்லையம்பலத்தை மீளவும் பொன் வேய்ந்தனன் என நம்பியாண்டார் நம்பி குறித்துள்ளார்.

முதற் குலோத்துங்கனது 44-ஆம் ஆட்சியாண்டில் இராசராசன் குந்தவையார், தில்லைநாயகர்தம் கோயிலெல்லாம் செம்பொன் வேய்ந்துள்ளார். மூன்றாங் குலோத்துங்க சோழன் நடராசப் பெருமான் திருநடம்புரியும் திருச்சிற்றம்பலத்தின் முகப்பிலுள்ள முன் மண்டபமாகிய எதிரம்பலத்தைச் செம்பொன் வேய்ந்தான். சிவகாமியம்மையின் திருக்கோபுரத்திற்கும் செம்பொன் வேய்ந்தான். இச்செய்தி,

> **"எத்தரையும் தொழும் இறைவற்கு எதிரம்பலஞ் செம்பொன் வேய்ந்து சித்திரை விழா அமைத்து, இறைவி திருக்கோபுரஞ் செம்பொன் வேய்ந்து"**

என வரும் அவனது மெய்க்கீர்த்தியிற் கூறப்பட்டுள்ளது. இவ்வாறே பாண்டியர், பல்லவர் முதலிய பேரரசர்களும் பிற குறுநில மன்னர்களும், அன்பிற் சிறந்த அடியார்களும் தில்லையில் நடராசப் பெருமான் திருக்கோயிலிற் காலந் தோறும் புதிய புதிய திருப்பணிகளைச் செய்து, நாள் வழிபாட்டிற்கும், திருவிழாக்களுக்கும், நந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகளுக்கும் வேண்டிய நிபந்தங்களை நிலமாகவும், பொருளாகவும் வழங்கியுள்ளமை இத்திருக்கோயிலில் வரையப் பெற்றுள்ள 270க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களால் இனிது விளங்கும்.

கி. பி. 1239 முதல் 1251 வரை ஆட்சிபுரிந்த இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தில்லையிற் கூத்தப் பெருமானை வணங்கித் துலாபார தானஞ் செய்ததுடன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தும் மேலைக் கோபுரம் கட்டியும் திருப்பணி புரிந்துள்ளான். பல்லவ மரபினனாகிய கோப்பெருஞ்சிங்கன் என்பான் சொக்கசீயன் என்ற பெயரால் தில்லையில் தெற்குக் கோபுரத்தைக் கட்டியதுடன் ஆண்டுதோறும் அதனைச் சீர்திருத்தற்கு வேண்டும் செலவுக்காகச் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஆற்றூர் என்ற ஊரை நிபந்தமாக வழங்கியுள்ளான். விசயநகர வேந்தர் கிருஷ்ண தேவராயர் பொட்டனூரில் வெற்றித்தூண் நாட்டித் தில்லையிற் பொன்னம்பல நாதனைச் சேவித்துச் சிதம்பரம் வடக்குக் கோபுரத்தைக் கட்டியுள்ளார்.

இவ்வாறு தமிழ் வேந்தர்களாலும் குறுநில மன்னர்களாலும் படைத்தலைவர்களாலும் நாட்டு மக்களாலும் பல்வகைத் திருப்பணிகளைப் புரிந்து போற்றப் பெற்று வரும் தில்லைப் பெருங்கோயிலில் நடுநாயகமாகத் திகழ்வது நடராசப் பெருமான் ஆனந்தத் திருக்கூத்தியற்றும் பொன்னம்பலமாகிய திருச் சிற்றம்பலத் திருக்கோயிலாகும். இதனைச் சூழத் திருமூலட்டானம் முதலாகப் பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மூன்றும் திருச்சுற்றில் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல் கரையில் அமைந்துள்ள சிவகாமியம்மை திருக்கோயில் மிகவும் சிறப்புடையதாகும். இத் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவகாமியம்மையைத் **"திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்"** எனக் கல்வெட்டுக்கள் போற்றுகின்றன.

நடராசப் பெருமான் நிகழ்த்தியருளும் திருக்கூத்தினை உள்ளவாறு கண்டு மகிழும் மெய்யுணர்வு வாய்க்கப் பெறாத நம்மனோர் பொருட்டு அம்முதல்வனை விட்டுப் பிரிவிலாத திருவருளின் வடிவாகிய சிவகாமியம்மையார் அப்பெருமானது ஆனந்தக்கூத்தினை உடனிருந்து கண்டு அதன் பயனை உலக உயிர்களுக்கு அளித்தருளுகின்றார் என அருள் நூல்கள் கூறுகின்றன. தாய்ப்பாலையே உணவாகக் கொண்டு வளரும் கைக்குழந்தைக்கு நோய் வந்தால் அந்நோயினைத் தீர்க்கும் மருந்தினைப் பிள்ளைக்குக் கொடுப்பதில்லை. மருந்தின் வேகத்தைக் குழந்தையின் மென்மையான குடர் தாங்காதென்று கருதிக் குழந்தையின் நோய் தீர்க்கும் மருந்தினைத் தானேயுட் கொண்டு அதன் பயனைத் தாய்ப்பால் வழியாகக் குழந்தைகள் பெற்று நோய் நீங்க உதவுவது பால் நினைந்தூட்டும் தாயின் செயலாகும். அதுபோலவே உலக அன்னையாகிய சிவகாமியம்மையும் மன்னுயிர்த் தொகுதியாகிய நம்மனோரின் தீராத பிறவி நோய் நம்மைவிட்டு நீங்குமாறு இறைவன் திருக்கூத்தினைத் தாம் இடைவிடாது கண்டு அதன் பயனை நமக்கு அளித்தருள்கின்றார் என்பது அருளாளர் கண்டுணர்ந்த அனுபவ உண்மையாகும். இறைவனது திருக்கூத்தின் பயனை உயிர்கள் பெற உதவும் அருளன்னையாகிய சிவகாமசுந்தரிக்கு, தில்லைப் பெருங்கோயிலில் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல் கரையில் தனிக்கோயில் அமைத்து நாள்

வழிபாடும், திருவிழாக்களும் நிகழ்த்தும் வழக்கம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது.

கி.பி. 1118-1136 வரை ஆட்சி புரிந்த விக்கிரம சோழன் காலத்தில் சிவகாமியம்மை திருக்கோயில் கருங்கற்றளியாக அமைக்கப்பெற்றது. அவ்வேந்தனது படைத்தலைவன் மணலிற் கூத்தன் காலிங்கராயன் என்பான் சிவகாமியம்மை திருக்கோயிலைச் சூழ்ந்த திருச்சுற்றும்திருமாளிகைப் பத்தியும், அமைத்து அம்மைக்கு அபிடேகத்திற்குரிய பாற்பசுவும் அம்மைக்குச் சாத்தப் பீதாம்பரமும் அளித்துள்ளான்.

சிவகாமியம்மை திருவிழா நாட்களில் திருவோலக்கமாக எழுந்தருளியிருத்தற்கும் தேவாரத் திருப்பதிகம் பாராயணம் செய்வதற்கும் ஏற்றவாறு சிவகாமியம்மை திருக்கோயிலுக்குத் தென்புறத்தில் விக்கிரமசோழன் திருமண்டபம் என்ற பெயருடன் நூற்றுக்கால் மண்டபத்தை அமைத்துள்ளான். இவ்வாறு விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கப்பெற்று நிகழ்ந்த சிவகாமியம்மைத்திருக்கோயில் திருப்பணி இவன் மகன் இரண்டாங் குலோத்துங்கன் ஆட்சியில் மிகச் சிறப்பாக நிறைவேறியது. தில்லையில் பேரம்பலத்தையும், உட்கோபுரத்தையும், திருச்சுற்று மாளிகையையும் அமைத்துத் தில்லைச் சிற்றம்பலத்தை மிகவும் விரிவுடையதாகச் செய்த இரண்டாங் குலோத்துங்க சோழன் உமாதேவியார் தாம் பிறந்த இமயவெற்பையும் மறக்கும்படி சிவகாமியம்மை திருக்கோயிலை மிகப் பெரியதாக அமைத்தான். திருவிழா நாட்களில் சிவகாமியம்மை உலா வருவதற்குப் பொன்னாலும் மணியாலும் புனையப் பெற்ற அழகிய தேரினைச் செய்தளித்தான். பொன்னாலாகிய கற்பகதருக்களை அமைத்தான். திருக்குளத்தைச் செம்மைப் படுத்தினன். கோயிலுக்குப் பசுநிரைகளும் களிற்றினங்களும் மிகுதியாக வழங்கினான் என்று அவனது அவைக்களப் புலவர் ஒட்டக்கூத்தர் தம் நூல்களிற் குறித்துள்ளார். இவன் செய்த தில்லைத் திருப்பணிகளுள் சிவகாமியம்மை திருக்கோயிற் பணி மிகவும் சிறப்புடையதாதலின் அது பற்றி இவ்விரண்டாங் குலோத்துங்கனை "ஸ்ரீபீடங்கண்ட பெரிய பெருமாள்" என மக்கள் பாராட்டிப் போற்றுவாராயினர். இச்செய்தி,

'நீடிய வெண்டிசை நீடில் வாய்ப்ப
நீடிய தெக்கினை மேருவென்னப்
பீடிகை தில்லை வனத்த மைத்த
பெரிய பெருமானை வாழ்த்தினவே'

எனவரும் தக்கயாகப் பரணியாலும் அதன் பழைய உரையாலும் இனிது விளங்கும்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என மணிவாசகப் பெருமான் அருளியவாறு கூத்தப் பெருமானது அருளினீர்மையதாய்த் திகழும் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல்கரையில் அருள்வடிவாகிய சிவகாமியம்மையின் திருக்கோயில், நம் முன்னோர்களது சிவபக்திக்கும் சோழமன்னர்கள் காலத்துக் கட்டடக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் ஓவியக்கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இக்கோயிலின் திருச்சுற்றிலே இரண்டடுக்கு அறைகளையுடையதாயமைந்த திருமாளிகைப் பத்தியும் அதன் கீழ்க் குறட்டிற் பரதநாட்டிய நுட்பங்களையும் அக்கால இசைக்கருவிகளையும் தெளிவாகப் புலப்படுத்தும் நிலையில் அமைக்கப்பெற்றுள்ள கருங்கற் சிற்பங்களும் பிறநாட்டு நுண்கலைஞர்களால் வியந்து பாராட்டும் முறையில் விளங்குகின்றன. சிவகாமியம்மை கோயிலின் உள்ளே முன்னர் அமைந்துள்ள முன்மண்டபமும் அதன் தென்பகுதியிலும் வடபகுதியிலுமாக மேலே எழுதப்பெற்றுள்ள பழங்கால ஓவியங்களும் ஓவியக்கலை வல்லுநர்களால் வியந்து போற்றத் தகுவனவாகும்.

சிதம்பரத் திருக்கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களில் இக் கோயிலுக்கு முன்னோர் செய்துள்ள அறக்கட்டளைகள் பல குறிக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் திருநந்தவனம் அமைத்தற்கும் அந்நந்தவனங்களிற் பணிபுரிவோர்க்கு நிலம் கொடுத்தற்கும் என அளிக்கப்பெற்ற நிபந்தங்கள் விரிவாக இடம்பெற்றுள்ளன. கோப்பெருஞ்சிங்கனது ஆட்சியின் ஆருவது ஆண்டில் திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார்க்குச் சிறப்பாகச் சாத்தியருளத் திருப்பூ மண்டபத்துக்கு முதலாகத் திருநிலை அழகியாள் திருநந்தவனமும் நந்தவனப் பணி செய்வார்க்கு உணவளிக்கத் திருப்பாவாடைப் புறமும் ஆக நிலமளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இவனது ஆட்சியின் ஏழாம்

ஆண்டுக் கல்வெட்டில் சிதம்பரத்தின் எல்லையிலுள்ள கடவாச்சேரியிலும் சண்டேசுவரநல்லூரிலும் இளநாங்கூரிலும் சிவகாமசுந்தரி யம்மைக்குத் திருநந்தவனங்கள் அமைக்க நிலமளித்த செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. எட்டாமாண்டுக் கல்வெட்டில் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்குச் சாத்தும் பரிசட்டம் (புடவை) நெய்துகொடுக்கும் சாலிகர் குடியிருக்கத் திருவம்பலப் பெருமாள்புரம் என்னும் பெயரால் கடவாச்சேரியான தில்லைநாயகநல்லூரில் நாலுவேலியும் ஆறு மாவும் நிலமளித்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் கொற்றங்குடியான பவித்திர மாணிக்க நல்லூரிலும் மடந்தையர் மாணிக்க நல்லூர் முதலிய ஊர்களிலும் சிவகாமியம்மை திருநந்தவனத்திற்கும் நந்தவனக்குடிகட்கும் நிலமளித்தமை கூறப்பெற்றுளது. இவ்வாறே இவ்வேந்தனது ஆட்சியின் 10-ஆம் ஆண்டிலும் 11-ஆம் ஆண்டிலும் வரையப் பெற்ற கல்வெட்டுக்களில் இக்கோயில் திருநந்தவனத்திற்கும் திருப்பள்ளித்தாமம் பறித்து மாலை தொடுப்பார்க்கும் என சிதம்பரத்தை யடுத்த விக்கிரமசோழ நல்லூரிலும் அளக்குடியிலும் எருக்காட்டாஞ்சேரியான திருநந்தவனப் புறமாகவும் திருப்பாவடைப் புறமாகவும் நிலமளித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இதுகாறும் எடுத்துக்காட்டிய வரலாற்றுக் குறிப்புக்களால் தில்லையில் திருக்காமக் கோட்டமுடைய பெரியநாச்சியாரான சிவகாமியம்மையார்க்குச் சிறந்த முறையில் திருப்பணிகளும் பூசனைகளும் திருவிழாக்களும் வேந்தர்களாலும் நாட்டு மக்களாலும் நிகழ்த்தப்பெற்று வந்தமையும் அம்மை திருக்கோயிலின் கலைநலமும் இனிது புலனாதல் காணலாம்.

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே!
அணிதில்லை நகர்ஆளீ!
சிலந்தி யை அரசு ஆள்கஎன்று அருள்செய்த
தேவ! தே வீசனே!
உலந்த மார்க்கண்டிக்கு ஆகிஅக் காலனை
உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல்ஒற்ற
வந்து அருள் செய்யாயே. [திருவாலியமுதனார்

துர்க்கை

கே. எம். வெங்கட்ராமையா

தெய்வம் உண்டென்றிரு; இது முதற்படி.

தெய்வம் ஒன்றென்றிரு—இஃது அடுத்து அறிய வேண்டுவது.

அது சிவமே என்றறிவது சாலச் சிறப்புடையது; இது படிப்படியாக அறியப் பெறுவது.

அச்சிவத்தின் பிரிவில் ஆற்றலே சக்தி.

சக்தி வேறு—சிவம் வேறு அன்று. சக்திதான் சிவத்தை ஈன்றும் சிவம் சக்தி தன்னையீன்றும், உவந்து இருவரும் புணர்ந்து உலகுயிர் எல்லாம் ஈன்றும், உயிர்களைப் புரப்பர்.

சக்தி பேதங்கள் பல. அவற்றுள் ஒன்று துர்க்கை என்பது.

சிலப்பதிகாரம்—மதுரைக் காண்டம்—(12) வேட்டுவ வரியில் வரி 54 முதல் 73 முடிய துர்க்கை பின்வருமாறு விவரிக்கப்பெறுகிறாள்:-

மதியின் வெண்கோடு சூடுஞ் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி; தவளவாள் நகைச்சி;
நஞ்சுண்டு கறுத்த கண்டி; வெஞ்சினத்து
அரவு நாண்பூட்டி நெடுமலை வளைத்தோள்;
துளையெயிற்று உரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூல மேந்தி;

கரியின் உரிவை போர்த்து அணங்காகிய
வரியின் உரிவை மேகலை யாட்டி;
சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை;
இரண்டு வேறுருவின் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்; பலர்தொழும்
அமரி; குமரி; கவுரி; சமரி;
சூலி; நீலி; மாலவற் கிளங்கிளை;
ஐயை; செய்யவள்; வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை; பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை; அருங்கலப் பாவை
தமர்தொடி வந்த குமரிக் கோலத்து
அமரிளங் குமரி.

இவற்றினின்று 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்ற சிவஞான சித்தியாருக்கு ஏற்ப, இறைவி திகழ்தலை யறியலாம். அவ்விறைவிதான் மகிஷாசுரனை அழித்து அவன்றன் தலைமிசை நின்றவள் என்று கூறியமையும் மேலே காணப்பெறும்.

கண்ணுதற் பாகம் உடையவளும், திருமாற் கிளைய வளும் ஆகிய அம்மைதான் மகிடன் தலைமிசை நின்றவள். என்பதை இளங்கோவடிகள் மேலும் வேட்டுவ வரியில் முன்னிலைப் பரவலில் பின்வருமாறு கூறுவர்:—

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்"
—என்பதுடன்,

"வரிவ ளைக்கை வாள் ஏந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்"

என்பன அவை.

இவற்றினின்று இவளுடைய ஊர்தி (வாகனம்) முறுக் குண்ட கோட்டையுடைய மான் என்றும் அறியப்பெறும்.

மயிடன் **விக்கிரமாசுரன்** என்ற பெயர் உடையவன் என்பது அடியார்க்கு நல்லார் கூறிய உரையானும், திருவாதவூரர் புராணம், திருவம்பலச் சருக்கம் 39-ஆம் பாடல் "மேதிச் சென்னி விக்கிரமன்" என்றமையானும் தெரியவரும்.

மேலும் (20) வழக்குரை காதை 34-36 வரிகளிலும் கண்ணகி வந்திருந்த நிலையைப் பாண்டியனிடம் கூற வந்த வாயிலோன்,

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை யல்லள்

என்று கூறு நின்றான். இதன்கண் மயிடனது பிடர்த்தலை யாகிய பீடத்தின்கண் ஏறியவள் கொற்றவை என்று கூறி யிருத்தல் காணப்பெறும்.

மயிடன் தலைமேல் நிற்கும் அம்மையையே துர்க்கை என்பர்; துர்க்கையைப் பற்றி மேலும் சிலம்பினின்று அறிவனவற்றைக் காண்பதும் நன்று.

பதினொரு வகை ஆடல்களுள் மரக்கால் என்பது ஒன்று. இதனைச் சிலம்பு-புகார்க்காண்டம் (6) கடலாடுகாதை வரி 58–59 பின்வருமாறு பகரும்:

காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவள் ஆடிய மரக்கால் ஆடல்

இதன்கண் மாயவள் என்பது துர்க்கை என்று அடியார்க்கு நல்லார் கூறுவர். அவுணர் உண்மையாகப் போர் செய்து வெல்லமாட்டாமையின் பாம்பு, தேள் முதலியவற்றையே ஏவினர். அவற்றை உழக்கி யழித்தற்கு மரக்கால் மேல் நின்று ஆடினள் என்பது கதை. அவள் மரக்கால் மேனின்று வாளையெடுத்து நின்றாடினள்.

இனி துர்க்கையே கண்ணன் செய்த செயல்களைச் செய்தவளாகப் பிற்கண்ட வரிகள் கூறும்:

மருதின் நடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளும் சகடம் உதைத்தருள் செய்குவாய்,

இதுகாறும் கூறியவற்றால் சிவபெருமானுடைய பிரிவி லாற்றலாகிய சக்தியே பல்வேறு திருப்பெயர்களால் குறிப் பிடப்பெற்றனள் என்று அறியப்பெறும்.

பிள்ளைத்தமிழ் நூல்களில் துர்க்கை கூறப்பெறுமாற்றைச் சிறிது காணலாம். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களுள் ஒன்று ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

அதன்கண் காப்புப் பருவத்தில் 9 ஆவது பாடல் துர்க்கையைப்பற்றியது; அப்பாடற் பகுதி பின்வருமாறு:

வடிபட்ட முக்குடுமி வடிவேல் திரித்திட்டு
 வளைகருங் கோட்டு மோட்டு
மயிடம் கவிழ்த்துக் கடாம்கவிழ்க்கும் சிறுகண்
 மால்யானை வீங்க வாங்கும்
துடிபட்ட கொடிநுண் நுசுப்பிற்கு உடைந்த தெனச்
 சுடுகடைக் கனலி தூண்டும்
சுழல்கண் முடங்குளை மடங்கலை உகைத்தேறும்
 சூர்அரிப் பிணவு காக்க.

(வடிபட்ட—வடிக்கப் பெற்ற. முக்குடுமி வடிவேல்—முத்தலைச் சூலம்; படி—கூர்மை. மோட்டுமயிடம்—பெரிய உடம்பை உடைய மகிடாசுரனை. கனலி—தீ. முடங்கு உளை—வளைந்த பிடரி. மடங்கல்—சிங்கம். சூர்அரிப் பிணவு—அச்சம் தரும் பெண் சிங்கம்; துர்க்கை.)

இவ்வரிகளினின்று துர்க்காதேவி மகிஷாசுரனைச் செற்றவள் என்றும், அவட்கு வாகனம் சிங்கம் என்றும் அறியப்பெறும்.

சிவஞான முனிவர் யாத்தருளிய நூல்களுள் ஒன்று அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ். இதன் கண் காப்புப் பருவம் 9 ஆவது பாடல் துர்க்கையைப் பற்றியது; அப்பாடற்பகுதி பின்வருமாறு:

துளிக்கும் பசுந்தேன் உவட்டு எடுத்துச்
 சொரியும் செழுந்தா மரைப்பொகுட்டுத்
தோன்றற் பெருமான் முதற்கடவுட்
 டொகுதிப் பைங்கூழ் களைக்கருக்கிக்
களிக்கும் மகிடாசுரக் களையைக்
 களைந்து சிரமேல் பாசடையில்
கமல மெனத்தாள் பதித்திவர்ந்த
 கன்னி யெனும்தெய் வதம்காக்க.

(பெருமான்—பிரமன்; பைங்கூழ்—பசுமையான பயிர். பிரமன் முதலாய கடவுளரை வருந்தியமையால் அக்கடவுளரைப் பயிராகவும், மகிடாசுரனைக் களையாகவும் கூறினர். பாசடை—பச்சையிலை. கன்னி—துர்க்கை)

இதன்கண்ணும் மகிடாசுரனைச் செற்றவளாகவே துர்க்கை கூறப்பெற்ருள்.

சிவஞான முனிவர் பாடிய பிறிதொரு பிள்ளைத் தமிழ் நூல் திருக்கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ். இதில் காப்புப் பருவம் ஏழாவது பாடல், வைரவக் கடவுள் பிரமதேவர் தேவேந்திரன் இலக்குமி கலைமகள் துர்க்கை சத்த மாதர் முப்பத்து முக்கோடி தேவர் ஆகிய யாவர்க்கு மாக அமைந்த ஒரு பாடல் ஆகும். இதன்கண் துர்க்கை, 'உருத்துஇடி எனக் குரல் உரப்பும் மகிடன் திறல் ஓவும் சயத்தி' **என்ற** வரியால் குறிக்கப் பெற்றனள்.

பகழிக் கூத்தர் என்பார் இயற்றியது **திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்;** இதில் ஏழாவது காப்புப் பருவப்பாடல் பகவதியைப் பற்றியது; அவ்வரிகள் பின்வருமாறு:

விளையும் செழுந்தேன் உடைந்துமுகை விண்டொழுகு
வெண்டாமரைப் பொகுட்டு
வேதா முடித்தலை முடிக்கும் சடாடவியள்
வெண்சொலை மடங்கல்ஏறி
வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்கண்நெடு
மயிடாசுரன் சிரத்தில்
வலியநட மிடுகுமரி பகவதி சரோருக
மலர்த்தாள் வணக்கமுறுவாம்

(வேதா—பிரமன்; சடாடவி—சடைக்காடு; மடங்கல்—சிங்கம்; சிரம்—தலை; சரோருகம்—தாமரை)

இதில் பகவதி மகிடாசுரன் தலையில் நடனம் இடுவள் என்றும், சிங்கவாகனம் உடையவள் என்றும் அறியலாம்.

குலசேகரப்பட்டினத்தவராகிய தெய்வசிகாமணிக் கவி ராயர் பாடிய **அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ்** காப்புப் பருவத்தில் துர்க்கைக்கு ஒரு பாடலுண்டு. அப்பாடற் பகுதி பின்வருமாறு:

முத்தலை வேற்படை நீலி கலாதரி
முரிதி ரைக்கடல் வளைநி லத்தொடு
முச்சக மேற்கொடி தாமகி டாசுரன்
முடியி னிற்சர ணுறமி தித்தவள்
முக்கணி ஞற்புய மானத பூரணி
முளைமு றுக்குள பிறையெ யிற்றினள்.

உத்தியி னுற்பல ஆகம மெய்யறி
வுடைய வித்தகர் உளமி ருப்பவள்
ஒத்த நிலாச்சடை யார்தமை ஆடல்செய்
உரிமை முற்றிய பெருமை பெற்றவள்
உத்தர வாய்ச்செல்வி வீரம னோகரி
உபய பொற்பத மலர்வ ழுத்துதும்

இதனின்று துர்க்கை மூவிலைவேல் உடையவள் என்றும், நீலி எனப்பெறுவள் என்றும், கலைகளைத் தரித்த வள் என்றும், மகிடன் தலையில் தன் திருவடிகளை மிதித்து இருப்பவள் என்றும், முக்கண் நாற்புயம் உடையவள் என்றும், பிறைபோலும் பற்களையுடையவள் என்றும், மெய்யடியார்களின் மனத்தில் இருப்பவள் என்றும், சிவ பெருமான் ஆனந்த நடனம் செய்யுங்கால் பார்த்திருக்கும் உரிமையுடையவள் என்றும், வீரம்பொருந்தியவள் என்றும் அறியப்பெறும்.

பெருங்கதை என்பது கொங்குவேளிர் என்பவரால் யாக்கப் பெற்ற ஒரு தொடர் நிலைச் செய்யுள். இதில் உதயணன் என்பானுடைய கதை விரிவாக காவிய நயங் களுடன் கூறியிருக்கிறது. பாலை நிலத்துக்குத் தெய்வம் கொற்றவை அல்லது துர்க்கையாதலின், துர்க்கை வருணனை இந்நூலில் உஞ்சைக் காண்டம், 52 பாலைநிலங் கடந்தது என்ற பகுதியில் 19—25 வரை கொடுக்கப் பெற்றுள்ளது. அது வருமாறு:—

.... திகழ்மதி முகத்தி
எண்வகைப் பொலிந்த ஒண்படைத் தடக்கைக்
கச்சார் வனமுலைக் கண்மணிக் கொடும்பூண்
பச்சைப்பாற் கிளி பவழச் செவ்வாய்
முத்தேர் முறுவல் முயங்குகயல் தடங்கண்
சிலையேர் புருவச் செங்கட் செல்வி
கலை காமுறுவி நிலை காமுற்ற
கற்சிறைக் கோட்டத்து நற்சிறை........

என்பனவாம்.

இதில் கலைகாமுறுவி அதாவது கலைமானை ஊர்தியாக விரும்புபவள் என்றமையான் துர்க்கை யாதல் வெளிப்படை.

சிலப்பதிகாரமும் 'கரிபதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்ருயால்' என்றமை மேலே கூறப்பட்டது.

அன்றியும் இத்தேவி எண்வகைப் படையுடையவள் என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. எண் வகைப் படைகள் இன்னவை என்பதை அரிச்சந்திரபுராணப் பாடல் கூறும். அப்பாடல் பின்வருமாறு:

பட்டய மெடுத்தொருகை பத்திர மெடுத்தொருகை
பற்று மழுவும்
சொட்டையும் எடுத்திருகை சக்கர மெடுத்தொருகை
சுற்று மயிலும்
வட்டமும் எடுத்திருகை வச்சிர மெடுத்தொருகை
மற்கர தவம்
எட்டினும் விதிர்ப்பன சுழற்றுவன வெந்தழல்
எழுந்தெரி யவே.

சங்கமருவிய பத்துப் பாட்டுள் முதலாவதாக இருப்பது **திருமுருகாற்றுப்படை.** இது 11-ம் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளது. இவ்வாற்றுப் படையில் வரி 257—58-ல் முருகப் பெருமான், மால்வரை மலைமகள் மகன் என்றும் மாற்ருேர் கூற்று என்றும் வெற்றி வெல்போர்க்கொற்றவை சிறுவன் என்றும் விளிக்கப் பெறுகிருர். வெற்றி வெல் போர்க்கொற்றவை சிறுவன் என்பதற்கு உரை கூறுங்கால் நச்சினர்க்கினியர், "உலகத்திற்கு வெற்றியைத் தரும்படி யான வனதுர்க்கையினுடைய புதல்வர்; வெல்லும் போரைச் செய்யும் கொற்றவை; என்றது மகிடனைச் செற்றதனை" என்று கூறியுள்ளார். இதனுல் கொற்றவையும் துர்க்கையும் ஒருவரே என்பது பெறப்படும்.

தக்கயாகப்பரணியில்

தக்கயாகப்பரணியில்—மழுவார் நெடுமங்கல மகள் (321), பிரமற்கும் அம்மனை (77), பாகன் அகம் குழைவித்த பவித்ரபயோதரி (74), பொங்கு அமளிப் புணரித் துயில் வல்லி (73), சாத்துவன கோசிகம் (117), அடிச்சூட்டு நூபுரமோ ஆரணங்கள் அனைத்துமே (119), சோதிபடல சூடிகாகோடி பணிமதாணி மார்பாள் (105), தருணவாணிலா வீசு சடில மோவி மாகாளி (107), திரிபுரபயிரவி, யோகயா

மளத்தினுள் (113), என்றின்னோரன்ன முறைகளில் அம்பிகை குறிப்பிடப் பெறுகிருள்.

திருப்புகழில்

பலிகொள்கபாலி, ஆயி சுந்தரிநீலி பிங்கலை, வெகுரூபி நித்ய கல்யாணி, திரிபுரை, செம்பட்டுக்கட்டு நுசுப்பின் திரு, நாகபூஷணத்தி, அண்டமுண்ட நாயகி, மாதங்கி, வேதம் சொல் பேதை, நெடுநீலி, மால்தங்கைச் சிகனிகையுமை, நாரணி, அறத்தின்நாயகி, ஆறுசமயத்தி, நீடுபஞ்சமி சூலினி மாலினி, கவுரி பஞ்சமி, ஆயீமாயீ, ஆத்தாள் மால் தங்கைச்சி.

அபிராமி அந்தாதி

அந்தரி, ஆத்தாள், ஆனந்தவல்லி, இறைவி, கலா வயிரவி மண்டலி, கன்னி, காளி, கோமளயாமளை, சண்டி, சாம்பவி, சாமளை, சூலினி, செங்கண்மாலி தங்கைச்சி, திரிபுரை, நாராயணி நான்முகி நீலி, பஞ்சநாயகி, பஞ்சமி, பயிரவி, பிங்கலை, மங்கலை, மண்டலி, மனோன்மணி, மாதங்கி, மாலினி, முப்புரை, வாராகி, வேதப்பரிபுரை; இமவானுக்கு மகள்; பிரமகபாலம் தரிப்பவள்; முகுந்தற்கு இளையவள்; கறைக்கண்டனுக்கு மூத்தவள்; இவளே மகிடன் தலைமேல் நிற்பவள்; இதனைப் பின்வரும் அபிராமி அந்தாதி 8-ஆம் செய்யுள் கூறும்:

சுந்தரி, எந்தை, துணைவி,என் பாசத் தொடரை எல்லாம்
வந்துஅரி சிந்துர வண்ணத்தி னுள், மகி டன்தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை ஆரணத் தோன்
கம்தரி கைத்தலத் தாள் மலர்த் தாள்என் கருத்தனவே.

இதுகாறும் கூறிய செய்திகளால் ஒருண்மை புலனு கிறது; பராசக்தி இறைவனுக்கு போகசக்தியாக இருக்குங் கால் பவானியாகவும், மணமங்கலம் ஆகுங்கால் நாராயணி யாகவும், கோபத்துக்குரியவளாகுங்கால் காளியாகவும், போருக்குரியவள் ஆகுங்கால் துர்க்கை யாகவும் திகழ்கின்ருள் என்று தெரிய வருகிறது. இதனைப் பின்வரும் வடமொழிச் சுலோகம் விளக்கும்:

போகே பவானி, அவனேஷு விஷ்ணு,
கோபேஷுகாளி, மைரேச துர்க்கா,
ஏகாபி சக்தி;, பரமேசுவரஸய,
பின்னு சதுர்த்தா வினியோக காலே.

சிதம்பரம் பெருங்கோயிலில் துர்க்கை கோயில்

"எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழிலழியாச்
செவ்வியாள்"

என்று மணவில்கூத்தன் காலிங்கராயன் வெட்டுவித்த வெண்பாச் சாஸனத்தில் புகழப்பெறும் பராசக்தி (அம்மன்) கோயிலின் கிழக்குத் திருச்சுற்றின் வட பக்கத்தில், அதாவது அம்பாள் திருக்கோயில் வாயில் கோபுரத்தின் வடபக்கத்தில் சிறிது தூரத்தில் துர்க்கையின் கோயில் அமைந்திருக்கிறது. இப்பொழுது துர்க்கைக் கோயிலில் சிறு விமானமும் முன்புறம் ஒரு மண்டபமும் இருக்கிறது. முன்மண்டபம் 1941-ல் கட்டப்பெற்றது. துர்க்கா பரமேசுவரி உயரமான திருமேனி; எட்டு ஸ்ரீஹஸ்தம் உடையவள்; மகிடன் தலைமேல் வீற்றிருக்கிருள்.

எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலும் துர்க்கையின் படிவம் சுவாமி திருக்கோயில் கருவறையின் வடக்குப் புறச்சுவரில் இருக்கும். ஆனுல் சிதம்பரத்தில் திருமூலநாதராகிய சிவலிங்கப் பெருமான் கருவறையின் புறச்சுவரில் இல்லை; இது குறித்துச் சிந்திக்கையில் ஒருண்மையை ஊகித்தறியலாம். தில்லைப் பெருங்கோயில் முழுவதையும் ஒரே கோயிலாக மனத்தில் கொள்ளின், வடபாரிசத்தில் துர்க்கை அமைந்திருத்தல் பொருத்தமாக இருத்தலைக் காணலாம்.

தில்லைப் பொது தீட்சிதர்களின் பூசை முறைகளில் இத் திருக்கோயில் அமைந்திருந்தும் இதற்குப் பூசை முறை தனிப்பட்டதாகவுள்ளது. இதற்கு இரண்டு கால பூசையுண்டு. 20 நாட்கள் கொண்ட காலப்பகுதி ஒரு வட்டம் என்று சொல்கிருர்கள். அந்தக் காலப்பகுதிக்குத் துர்க்கை கோயில் பூசை முறை ஏலம் விடப்பெறுகிறது. அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர் அந்த வட்டம் ஆகிய காலப்

பகுதியில் பூசை செய்பவர் ஆவர்; அந்த நாட்களில் வரும் வருமானம் முழுவதும் அவரைச் சாரும்.

மற்றக் கோயில்களில் இருப்பதுபோலவே இத் துர்க்கைக்கு விழாக்கள் உண்டு. "சக்ரவாரத்தினில் கண்டு தெரிசித்தவர்கள் துன்பத்தை நீக்குபவள்" பராசக்தி. ஆகவே நாடோறும் மக்கள் துர்க்கையை வழிபடுவதுடன் வெள்ளிக்கிழமைகள் தோறும் சிறப்பாக வழிபடுகின்றனர். நவராத்திரி நாட்களில் ஒன்பது நாட்களும் சிறப்பு வழிபாடு நடப்பது யாவரும் அறிந்ததே. இங்ஙனம் வழிபடுவர், அபிராமியந்தாதி கூறுவதுபோல, எழுபாருக்கும் அதிபர் ஆவர் (96); பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடுரும் இந்திர பதவி அடைவர் (91); அயிராபதமும் பகீரதியும் குலிசமும் கற்பகக்காவும் உடைய இந்திரர் ஆவர் (83); சீரடிக்கே சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே (68).

தேவியை முற்பிறவியில் வழிபட்டவர் இப்பிறவியில் அரசருக்குரிய பெருமைகளுடன் விளங்குவர் என்பதைப் பின்வரும் அபிராமி அந்தாதி 52-ம் செய்யுள் கூறும்:

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குஉள வாகிய சின்னங்களே

(வையம்-தேர்; துரகம்-குதிரை; கரி-யானை; கனகம்-பொன்; சிவிகை-பல்லக்கு)

அம்பாள் கோயில் கோபுரச் சுதை வேலை

அம்பாள் கோயில் கோபுரத்தின மேற்பகுதி தெற்குப் பக்கத்தில் ஒரு சுதை வேலைப்பாடு காணப்படுகிறது. துர்க்கை பத்து ஸ்ரீஹஸ்தங்களுடன் நின்ற கோலம்; மயிடனைக் கொல்வது போன்று காட்சியளிக்கிருள். அம்பாள் கோயில் முன்மண்டபத்திலுள்ள ஒரு தூணில் 16 திருக்கைகளுடன் மயிடனைக் கொல்லும் கோலத்தில் செதுக்கப் பட்டிருப்பது இங்குக் குறித்தல தகும்.

தில்லைக்காளி கோயில்

இது சிதம்பரத்தின் வடவெல்லையில் இருக்கிறது. தாரகனை அழித்தற் பொருட்டுத் தோன்றிய காளிதேவி அசுரனை அழித்த பின்பும் கோபம் தணியாமல் உலகத்தை அழிக்கத் தொடங்கினள். பெருமான் ஊர்த்துவதாண்டவம் செய்து காளியின் கோபத்தை அடக்கினார்; 'தில்லையின் வட எல்லையில் இருப்பாயாக' என ஆணையிட்டார். (சிதம்பரம், பக்கம் 14-தருமையாதீன வெளியீடு) இக் கோயிலுக்கும், தில்லை நடராசப் பெருமான் திருக்கோயில் நிர்வாகம் செய்தருளும் பொது தீட்சிதர்களுக்கும் மேற்படி நிர்வாகத் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. அத்திருக் கோயில் தனியாக ஒரு தீக்ஷிதருடைய பொறுப்பில் இருந்து வருகிறது என்று தெரிகிறது. தில்லைவனமுடைய பரமேசுவரி என்றும் திருச்சிற்றம்பலமுடைய மகாகாளி யார் என்றும் இத் தேவி சிலாசாசனங்களில் குறிக்கப் பெறுகிறாள்.

பல்லவர் காலத்தில்

பல்லவ அரசருள் ஒருவன் நரசிம்மவர்மன். அவன் காலத்தில் மாமல்லபுரம் சிறந்த ஓவியச் சிற்பக்கலைக் கூடமாக மாற்றியமைக்கப்பட்டது. அவன்காலத்திய வேலைப்பாடுகள் குகைக் கோயில்களாகவும் தேர்களாகவும் கற்சிலைகளாகவும் அமைந்தன. பஞ்சபாண்டவர் தேர் என்றால் யாவருக்கும் விளங்கும். அங்ஙனமே சில மண்டபங்களும் உண்டு. அவற்றுள் ஒன்று மகிடாசுரமண்டபம் என்பது. இது குறித்துப் பல்லவர் வரலாறு பக்கம் 125-ல் டாக்டர் இராசமாணிக்கனார்,

'மகிடாசுரனை வெல்லுதலைக் குறிக்கும் சிற்பவேலை பல்லவர்க்கேயுரியது...துர்க்கை தன் ஊர்தியான சிங்கத்தின்மீதமர்ந்து எருமைத் தலைகொண்ட அரசன்மீது அம்புகளைப் பொழிகிறாள். அவளைச் சுற்றிலும் அவள் படைகள் இருக்கின்றன. அசுரனைச் சுற்றிலும் அவன் படைகள் இருக்கின்றன. இப்படைகளைப் பொறித்ததால் இக்காட்சி சிறப்புடையதாகின்றது" என்று எழுதி இருக்கிறார்.

மகிஷாசுரனைச் செற்ற கதை

ரம்பன் என்றொரு அரக்கன் இருந்தனன்; அவனுக்கு எருமையின் வயிற்றில் தோன்றியவன் மகிஷன். இவன்

பல அசுரர்களைத் தனக்குத் துணையாகக் கொண்டு போர் செய்யப் புறப்பட்டு அவர்களையெல்லாம் தேவியொடு போர் செய்யுமாறு ஏவினன். அவர்கள் யாவரும் மாய்ந்தனர். தான் போருக்கு எழுந்தான்; உண்மையுருவை மறைத்துக் கொண்டான்; மன்மதனையொத்த அழகுவாய்ந்தவனாகி வந்தான்; பின் சிங்க உருவம் பூண்டு தேவியேறியிருந்த சிங்கத்தை அடிக்க, அதனால் அடிபட்டான்; பின் யானையுருக்கொண்டு தேவியொடு பொருதான். தேவியின் வாகனமும் யானையுருக்கொண்டு போரிட்டது. பின்னர் மகிடன் பாம்புருக்கொண்டு போரிட்டான். தேவி இவனை வாளால் வெட்டினாள். உடனே அசுரன் மயிடவுருக் கொண்டான். தேவி சண்டிகை உருவுக்கொண்டு போரிட்டுச் சக்கரத்தை எரிந்தாள். அசுரனும் இறந்தனன் (அபிதான சிந்தாமணி, பக்-1232).

நிசும்பசூதனி

பிற்காலச் சோழர்களில் முதல்வன் விஜயாலயசோழன் (846-881). இவன் பல போர்களில் வெற்றி கண்டவன். இவனை விக்கிரமசோழனுலா 'மீதெல்லாம், புண் கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று, புண்கொண்ட வென்றிப்புரவலன்' என்று புகழும். இங்ஙனம் பல புண்கள் பெற்று வெற்றி கொண்டமையால் தஞ்சையில் துர்க்கைக்கு ஒரு கோயில் கட்டி, நிசும்ப சூதனி என்று பெயரிட்டனன். இங்ஙனம் துர்க்கைக்கு விஜயாலயம் ஒரு கோயில் கட்டியதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்துகின்றன (S.I.I. Vol III எண் 205, பாடல் 46.)

வெற்றிக்குரிய தெய்வம் கொற்றவை. கொற்றவை சக்திபேதங்களுள் ஒன்று, போர் செய்யச் செல்வோர் வெற்றிக்குப் பரவுக் கடன் பூண்வர். வென்ற பின்னரும் அக் கொற்றவையைப் பரவுவர். ஆகவே எல்லாக் கோயில்களிலும் பராசக்தியின் கூறுகளுள் ஒன்றாகிய கொற்றவையை—மகிடற்செற்றவளை வணங்குவதற்கு வழிகோலினர். இந்நாளிலும் எல்லாக் கோயில்களிலும் துர்க்கையைக் கருவறைப் புறச்சுவரில் அமைத்திருத்தலைக் காண்கிறோம்.

தோத்திரப் பாடல்கள்

1. திருமூலர் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில்- சத்திபேதம்—திரிபுரைசக்கரம்—ஆதார ஆதேயம் முதலாகிய பகுதிகளில் சக்தியைப் பற்றிய பாடல்கள் பலவும் பிரார்த்தனைப் பாடலாகவும் கொள்ளலாம். அவற்றுள் சில:

1. திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வறுபல வாய்நிற்கும் மாமாது தானே.

2. தானு அமைந்த அம் முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு ஓருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்நிறத் தாள்கல் வி
தானான போகமும் முத்தியும் நல்குமே.

3. கொம்பனை யானைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே.

4. ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

5. முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரிசகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி என்உள்ளம் மேனி நின்றாளே.

6. வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடும் மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே.

2. அபிராமி அந்தாதி -

1. சென்னியது உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றுமுன் தன்பர மாகம பத்ததியே.

2. நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆய கியாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

3. வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்குஅன்பு பூண்டுகொண் டேன்நின்
புகழ்ச்சிஅன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

3. தாயுமானவர் பாடல்

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரயம்பகி எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனேதீத நாயகி குணதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடும்அடியார் நாமமே
நான்உச்ச ரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ்
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே! பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே!
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே!

4. சிலப்பதிகாரம்

1. ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்ருயால்
வானேர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

2. வரிவளைக்கை வாள்ஏந்தி மாமயிடன் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்ருயால்
அரி அரன்பூமேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர் அஞ்சோதி விளக்காகிய நிற்பாய்!

5. தியான சுலோகம்

மாதர்மே மதுகைட பக்நி
மஹிஷப்ரஹ்ணப ஹாரோத்யமே
ஹேலா நிர்மித தூம்ர லோசநவதே
ஹே சண்டமுண்டார்தினி
நிச்சே ஷாக்ருத ரக்தபீஜ தநுஜே
நித்யே நிஸும்பா பஹே
ஸும் பத்வம்ஸிநி ஸம்ஹராசு துரிதம்
துர்கே நமஸ்தேம்பிகே.

இத்தியான சுலோகத்தினின்று துர்க்கை மதுகைட பரையும், மகிஷனையும், தூம்ரலோசனனையும், சண்ட முண்டரையும், இரத்தபீஜனையும், நிசும்பசும்பரையும் அழித்தமை பெறப்படுகிறது. அக்கதைகளின் சுருக்கம்:—

மதுகைடபர் : இவர்கள் விஷ்ணுவின் காதினின்று தோன்றியவர்; மூக்கினின்று தோன்றியவராகவும் கூறுவதுண்டு. இவ்விருவரும் பிரமனை வருத்தினர். பிரமன் விஷ்ணுவின் உதவியை நாடினார். விஷ்ணு இவர்களை நோக்கி நுமக்கு வேண்டிய வரம் யாது' என்று வினவினார். இவர்கள் திருமாலை நோக்கி. 'உமக்கு வேண்டும் வரம் விரும்புக' என்று கேட்டனர். உடனே திருமால், 'நீவிர் என்னால் இறக்கவேண்டும்' என்று கேட்டார். அவர்கள் 'அங்ஙனமே ஆகுக' என்றனர். உடனே அவ்விருவரையும் திருமால் அழித்தார். இவ்வரலாறு துர்க்கைக்கு ஏற்றப் பட்டது.

தூம்ரலோசனன் : ஓர் அசுரன்; காளியால் அழிக்கப் பட்டவன்.

சண்ட முண்டர்: சும்ப நிசும்பருக்குச் சகோதரர் ஆகிய அரக்கர். பார்வதி தேவியாரின் அழகு கண்டு அருகில் வந்து காளியால் கொல்லப்பட்டவர்.

இரத்தபீஜன்: சும்ப நிசும்பருக்கு மருமகனாகிய அருக்கன். இவன் தன் உதிரம் எவ்வளவு பூமியில் விழுமோ அவ்வளவு கோடி அரக்கர்கள் பிறந்து பகைவரைக் கொல்லும்படி வரம் பெற்றவன். இவனைக் காளி ஒரு துளி உதிரமும் பூமியில் விழாமல் உதிரத்தையுண்டு கொன்றார்.

சும்ப நிசும்பர்: இவர்கள் சகோதரர்கள். நிசும்பனுக்கு அவன் தம்பி இரையாகப் பிரத்யும்னன் என்பானைக் கொடுத்தான். நிசும்பன் அவனை ஆகாயமார்க்கமாக நெடுந்தூரம் போகுமாறு எறிந்தான். தெய்வ நியதியால் சும்பனுடைய பட்டணத்திலே பிரத்யும்னன் போய்ச் சேர்ந்தான். அங்கே ஒரு மலை; அம்மலையில் ஒரு சோலை; அங்கு சும்பனின் மகள் லக்ஷ்மி என்பவளைக் கண்டான்; அவளைக் காந்தர்வ மணம் செய்து கொண்டான். இதனை அறிந்த சும்பன் வஜ்ர பஞ்சரத்தில் காவலிட்டான். பிரத்யும்னன் தேவியை உபாசித்தான். தேவி கிளி உருக்கொண்டு உள் நுழைந்து, பஞ்சரத்தை உடைத் தெறிந்தாள். சும்ப நிசும்பர் போர்க்கு வந்தனர்; பிராட்டியைக் கண்டு மோகித்தனர்; ஒருவர் மற்றவரிடம் போரிட்டனர்; தாமே இறந்தனர்.

சிதம்பரம் துர்க்கை கோயில் திருப்பணி

சிதம்பரம் பெருங்கோயிலில் உள்ள துர்க்கை திருக்கோயில் கருவறையும் முன் மண்டபமும் கொண்டதாக உள்ளது. முன் மண்டபம் 1941-ல்தான் முதன் முதலில் அமைக்கப் பெற்றது. இத்திருக் கோயிலுக்கும் பெரும் பொருட் செலவில் விமானம் அமைத்துக் குடமுழுக்குவிழாச் செய்ய ஏற்றுக் கொண்டுள்ள அன்பர் திருவாளர் தி. சு. சொக்கலிங்கம் அவர்கள் ஆவர். அவர்கட்கு எல்லா நலன்களும் பெருகுவன வாகுக. துர்க்காம்பிகையின் அருள் பெற்றவர் மண்ணினல்ல வண்ணம் வாழ்வர்; அபிராமி பட்டர் அபிராமியந்தாதி 68ஆம் பாடலில்,

> **"பாரும்புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்**
> **ஊரும் முருகும் சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்**
> **சேரும்தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே**
> **சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே"**

என்ற வண்ணம் எல்லா நலன்களும் பெறுவர்.

வாழ்க சீர் அடியாரெல்லாம்!

★

சிவகாம ஸுந்தரீ பரிணய நாடகம்

முன்னுரை

கி. பி. 18-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் தஞ்சையில் நாயக மன்னர் ஆட்சியானது முடிவுற்றது. அதைத் தொடர்ந்து கி. பி. 1676-ல் முதலாம் ஏகோஜியானவர் தஞ்சையில் மராத்திய அரசை நிறுவினுர். இலக்கிய, கலாசார சமயத்துறைகளில் மராத்திய அரசர்கள் புரிந்திருக்கும் பல அரிய நற்பணிகளைப் பார்க்குங்கால், இவர்களது ஆட்சி பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது புலனுகும். இலக்கண இலக்கியத் துறைகளிலும் கலாசாரத் துறையிலும், கலைகளையும் கற்றறிந்த கலைஞர் பெருமக்களை ஆதரித்துப் போற்றுவதிலும், தமக்கு முந்திய நாயக சோழ அரசர்களைக் காட்டிலும் தாம் எவ்விதத்திலும் பின் தங்கியவர்கள் இல்லை என்பதை மராத்திய அரசர்கள் சொல்லளவிலின்றிச் செயலிலும் காட்டி, தஞ்சையை நெஞ்சை விட்டகலா ஓர் கலைக்களஞ்சியமாக்கினர். ஏகோஜி மன்னருக்கு மூன்ருவது மகனுய் பிறந்தவர் ''சிவகாம சுந்தரி பரிணய நாடகம்'' என்ற இச்சிறந்த உருவகக் காவியத்தை நமக்குத் தந்த திரு துளஜா மன்னர் ஆவர். இவர் ''ஸங்கீத ஸாரம்ருதம்'' என்கிற இசை இலக்கண நூலை இயற்றி தென்னிந்திய இசையில் ஓர் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இசையைத் தவிர ஆயுர்வேதம், சோதிடம், தர்மஸாஸ்திரம் இவற்றில் தேர்ச்சிபெற்று விளங்கியவர் திரு துளஜா அவர்கள். மிக முக்கியமாக மனதில் கொள்ள வேண்டிய ஒன்று, இவர் ஓர் அத்வைதி. ஆனுல் பிற மதங்களை போற்றும் பண்பாளர், மதவெறியற்றவர், தில்லையிலே நடம் பயிலும் நடராஜப் பெருமானையே தம் நாடகத்தில் நாயகனுக்கி மஹாதேவப் பட்டணத்தில் ஸ்ரீ ஆதிவராஹ ஸ்வாமிக்குக் கோயில் எழுப்பி, அங்கு பிரதிஷ்டை செய்த அத்திருநாளிலே தம்முடைய

டாக்டர் எஸ். சீதா

சும்ப நிசும்பர்: இவர்கள் சகோதரர்கள். நிசும்பனுக்கு அவன் தம்பி இரையாகப் பிரத்யும்னன் என்பானைக் கொடுத்தான். நிசும்பன் அவனை ஆகாயமார்க்கமாக நெடுந்தூரம் போகுமாறு எறிந்தான். தெய்வ நியதியால் சும்பனுடைய பட்டணத்திலே பிரத்யும்னன் போய்ச் சேர்ந்தான். அங்கே ஒரு மலை; அம்மலையில் ஒரு சோலை; அங்கு சும்பனின் மகள் லக்ஷ்மி என்பவளைக் கண்டான்; அவளைக் காந்தர்வ மணம் செய்து கொண்டான். இதனை அறிந்த சும்பன் வஜ்ர பஞ்சரத்தில் காவலிட்டான். பிரத்யும்னன் தேவியை உபாசித்தான். தேவி கிளி உருக்கொண்டு உள் நுழைந்து, பஞ்சரத்தை உடைத் தெறிந்தாள். சும்ப நிசும்பர் போர்க்கு வந்தனர்; பிராட்டியைக் கண்டு மோகித்தனர்; ஒருவர் மற்றவரிடம் போரிட்டனர்; தாமே இறந்தனர்.

சிதம்பரம் துர்க்கை கோயில் திருப்பணி

சிதம்பரம் பெருங்கோயிலில் உள்ள துர்க்கை திருக்கோயில் கருவறையும் முன் மண்டபமும் கொண்டதாக உள்ளது. முன் மண்டபம் 1941-ல்தான் முதன் முதலில் அமைக்கப் பெற்றது. இத்திருக் கோயிலுக்கும் பெரும் பொருட் செலவில் விமானம் அமைத்துக் குடமுழுக்குவிழாச் செய்ய ஏற்றுக் கொண்டுள்ள அன்பர் திருவாளர் தி. சு. சொக்கலிங்கம் அவர்கள் ஆவர். அவர்கட்கு எல்லா நலன்களும் பெருகுவன வாகுக. துர்க்காம்பிகையின் அருள் பெற்றவர் மண்ணினல்ல வண்ணம் வாழ்வர்; அபிராமி பட்டர் அபிராமியந்தாதி 68ஆம் பாடலில்,

> **"பாரும்புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்**
> **ஊரும் முருகும் சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்**
> **சேரும்தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே**
> **சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே"**

என்ற வண்ணம் எல்லா நலன்களும் பெறுவர்.

வாழ்க சீர் அடியாரெல்லாம்! ★

சிவகாம ஸுந்தரீ
பரிணய நாடகம்

முன்னுரை

கி. பி. 18-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் தஞ்சையில் நாயக மன்னர் ஆட்சியானது முடிவுற்றது. அதைத் தொடர்ந்து கி. பி. 1676-ல் முதலாம் ஏகோஜியானவர் தஞ்சையில் மராத்திய அரசை நிறுவினுர். இலக்கிய, கலாசார சமயத்துறைகளில் மராத்திய அரசர்கள் புரிந்திருக்கும் பல அரிய நற்பணிகளைப் பார்க்குங்கால், இவர்களது ஆட்சி பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது புலனுகும். இலக்கண இலக்கியத் துறைகளிலும் கலாசாரத் துறையிலும், கலைகளையும் கற்றறிந்த கலைஞர் பெருமக்களை ஆதரித்துப் போற்றுவதிலும், தமக்கு முந்திய நாயக சோழ அரசர்களைக் காட்டிலும் தாம் எவ்விதத்திலும் பின் தங்கியவர்கள் இல்லை என்பதை மராத்திய அரசர்கள் சொல்லளவிலின்றிச் செயலிலும் காட்டி, தஞ்சையை நெஞ்சை விட்டகலா ஓர் கலைக்களஞ்சியமாக்கினர். ஏகோஜி மன்னருக்கு மூன்றுவது மகனுய் பிறந்தவர் "சிவகாம சுந்தரி பரிணய நாடகம்" என்ற இச்சிறந்த உருவகக் காவியத்தை நமக்குத் தந்த திரு துளஜா மன்னர் ஆவர். இவர் "ஸங்கீத ஸாரம்ருதம்" என்கிற இசை இலக்கண நூலை இயற்றி தென்னிந்திய இசையில் ஓர் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இசையைத் தவிர ஆயுர்வேதம், சோதிடம், தர்மஸாஸ்திரம் இவற்றில் தேர்ச்சிபெற்று விளங்கியவர் திரு துளஜா அவர்கள். மிக முக்கியமாக மனதில் கொள்ள வேண்டிய ஒன்று, இவர் ஓர் அத்வைதி. ஆனுல் பிற மதங்களை போற்றும் பண்பாளர், மதவெறியற்றவர், தில்லையிலே நடம் பயிலும் நடராஜப் பெருமானையே தம் நாடகத்தில் நாயகனுக்கி மஹாதேவப் பட்டணத்தில் ஸ்ரீ ஆதிவராஹ ஸ்வாமிக்குக் கோயில் எழுப்பி, அங்கு பிரதிஷ்டை செய்த அத்திருநாளிலே தம்முடைய

ஸ்ரீ எஸ். சீதா

நாயகனும் அம்பலவாணனுக்கும் ஸ்ரீ சிவாமசுந்தரிக்கும் திருமணஞ் செய்வித்து முடித்துள்ளமை, இவர் சிவ விஷ்ணு பேதத்திற்கப்பாற் பட்டவர் என்பதை தெள்ளத் தெளிவாக்கும். ஏட்டுச்சுவடிகளில் அமைந்த இவ்வரிய பொக்கிஷத்தைப் போற்றிப் பாதுகாத்து இன்று நாம் புத்தக வடிவில் படித்து இன்புற வழிவகுத்துத் தந்த தஞ்சை* சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தாரை எங்ஙனம் பாராட்டினலும் தகும்.

பரமசிவனுடைய இருபத்தைந்து லீலைகளில் 22-ம் லீலையானது மஹா நடன லீலை என்று வழங்கப்படும் திருஞான சம்பந்தர் முதலாம் திருவருட்குரவர்களும் ஆழ்வார் பெருமக்களும் போற்றுந் திருத்தலமாய் விளங்கும். அடியார்க்கெளியன் அம்பலவாணனும் அரவினனையாறும் ஒருங்கிணைந்து அருள்பாலிக்கும் 'கோயிலாய்' திகழும் தில்லையம்பதியாகும். இச்சிறந்த நாடகத்தில் அத்திருப் பதியினையே மூலமாய் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது, போற்றித் துதிக்கத்தக்கது. "கற்பனை கற்பித்த கடவுளை" என்ற சுந்தரத் தமிழுக்கொப்ப, அடியார் பெருமக்கள் தம்முடைய இஷ்ட தெய்வங் களுக்கு கோயில் எழுப்பி, திருவிழாக்கண்டு, இறைவனுக்கு திருக் கல்யாணம் செய்வித்து; இவ்வனைத்தையும் தம் அருட்பாக்களில் புகுத்தி தம்முடைய அந்தரத்தின் நாயகனாய் விளங்கும் இறை வனுக்கு அர்ப்பணித்து அவனேடு இரண்டறக் கலந்தனர். திருக் கைலாயநாதர், பார்வதி அம்மை இவர்களது திருக்கல்யாணத்தைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட காவியம் மஹாகவி காளிதாஸ ருடைய குமாரஸம்பவம் இதே கருத்தைக் கொண்டு பிற்காலத்தில் பார்வதி பரிணயம், மீனுக்ஷிகல்யாணம், பல்லவி ஸேவா பிரபந்தம், பார்வதி கல்யாணம், வள்ளிகல்யாணம் எழுந்தன இந்தத் தொடரில் நமக்குக்கிடைத்துள்ள பொக்கிஷம் துளஜா மன்னர் அருளிய ஸ்ரீ சிவகாம சுந்தரி பரிணய நாடகமாகும். சிவகாம சுந்தரி பரிணய நாடகம் ஓர் தெலுங்கு யக்ஷ கானமாகும். இது தோடயம் 61 தருக் களையும் 11 த்விபதைகளையும் 9 கத்த பத்யங்களையும், தவளம் மங்களம், ஆகியவற்றினையும் கொண்டமைந்தது. வடமொழி சுலோகங்கள் தெலுங்கு விருத்தங்களுடன் இசை நயம் சொல்நயம் மற்றும் பொருட்சுவைச் செறிவும் கருத்துக்களையும் நிறைந்திருக் கிறது.

கதை

துளஜா மஹாராஜா மஹாதேவப்பட்டணத்தில் ஸ்ரீ ஆதி (ச்வேத) வராஹ ஸ்வாமிக்குக் கோயில் எடுத்து அந்த மூர்த்தியைப்

---

* *தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு* : 156 1961

விலை ரூ. 13/-

பிரதிஷ்டை செய்து, பெரியதொரு உத்ஸவத்தை நடத்துகிருர் ஸ்ரீ நாரத மஹா முனிவர் இவ்விழாவினைக்கண்டு ஸ்ரீ ஆதிவராஹ விஷ்ணுவையும் தரிசனம் செய்ய நினைத்து மஹாதேவப்பட்டணத் திற்கு விரைகிருர் ஸ்ரீ மஹா விஷ்ணு. தன் சகோதரியாகிய பார்வதி தேவியைக் காணும் பொருட்டு ஹிமாலயத்திற்குச் சென்று விட்ட தால், நாரதருக்கு அவரை அங்கு காணும் பேறு கிடைக்கவில்லை. உடனே நாரத முனிவர் ஹிமவானுடைய இருப்பிடத்தை அடைகிருர். அங்கே ஹிமவான் பூரணச்சந்திரனுக்கு நிகரான ஒளியோடு ஆறு ருதுக்களும் புடை சூழ வஸந்தனுல் உபசரிக்கப்பட்டு கம்பீரமாக கொலுவிற்கு எழுந்தருளுகிருர். இதன் பிறகு வனமாலைகள் அசைய ஸ்ரீ மஹா விஷ்ணு இலக்குமியுடன் கருடன் மீதேறி அங்கு வந்து சேருகிருர். நாரதர் ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்து தோத்திரம் செய்கிருர். போஸல குலத்திற்கு சந்திரன் போன்று விளங்கும் துளஜா மஹா ராஜா பக்தியுடன் மஹாதேவப் பட்டணத்தில் பூவராஹ ஸ்வாமிக்கு ஓர் உத்ஸவத்தை அற்புதமாகச் செய்து கொண்டிருக்கும் விஷயத்தை தெரிவிக்கிருர். துளஜா மஹா ராஜா சிவாம்ஸம் ஆனதால் அவர் தம்முடைய அம்சமாகிய ஸ்ரீ ஆதிவராஹ சுவாமிக்கு உத்ஸவம் செய்வதைக் காண ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆவல் கொண்டவராய் மற்ற தேவர்களையும் இதில பங்கு பெற அழைக்கு மாறு ஹிமவானைப் பார்த்துச் சொல்லுகிருர். விஷ்ணுவின் வார்த்தையின்படி ஹிமவான் தன்னைச் சேர்ந்த ஏனைய தேவர்களையும் ஒவ்வொருவராக அழைக்க அவர்கள் எல்லோரும் ஹிமவான் கொலுவின்கண் வந்து சேருகிருர்கள். பிறகு மஹாவிஷ்ணு லக்ஷ்மி, ஹிமவான், மாயாதேவி தேவேந்திரன், மன்மதன், ரதிதேவி வருணன், கங்கை, சந்திரன், மைனுகன், ஸ்ரீ தேவி ப்ருஹஸ்பதி, ஐயை பார்வதி, அவளுடைய தாயார் மேனகை உபேந்திரன் இவர்கள் கூடிய குழுவானது மஹாதேவப் பட்டணத்தில் எழுந்துள்ள ஆதி வராஹ ஸ்வாமி கோவில் உத்ஸவ மண்டபத்தில் வந்து சேருகிறது. அவர்கள் அங்கு ஆதிவராஹ ஸ்வாமியைத் தரிசித்து வணங்கித் துதிக்கிருர்கள். பிறகு ஸபா மண்டபத்தில் எல்லோரும் அமரு கிருர்கள்.

இதற்குள் சிதம்பரத்தில் நடன சபையில் நந்திகேஸ்வரர் பொற் சபைக்குச் சிதம்பரேசர் எழுந்தருளுவதை முன்கூட்டித் தெரிவித்துக் கொண்டிருக்கிருர். பரமசிவன் வருகைக்கு முன்னுரை போன்று பல அரிய வேதாந்தக் கருத்துக்கள் பொதிந்த ஓர் சிறிய பாடலைப் பாடுகிருர். (பெட்டலேகருகதாசி—24-ஆம் பாடல்) இந்த உலகம் ஓர் மாயை கானல் நீர் போன்றது. சிறிது ஆராய்ந்து பார்த்தால், வீடு வாசல் மற்ற எல்லா உலக பாசங்களுக்கும் அர்த்தமே யில்லையடா, இந்த உடல் நீர்க்குமிழி போன்றதடா, அது நிச்சயமாக அழியக்

கூடியது. இது என்னுடையது என்று கூறுவது பைத்தியக்காரத்தன மானது. வாழ்க்கை சந்தைக்காரர்கள் கூடுமிடமாகும். மக்கள் இச் சந்தையில் நல்லது கெட்டது போன்ற சாமான்களை வாங்குகிறார்கள். இந்த உடலான உடைந்த வீட்டை நிலையானதாக அறிவீனர்கள் நம்பு கிறார்கள். இந்த சரீரத்தில் நிலையாக காமம், க்ரோதம், மோகம், மதம் மாச்சரியம் என்ற ஆறு மிக்க கெடுதலான ஆசைகளான திருடர்கள் வசித்து வருகிறார்கள். கடும் விரோதிகளான அவர்களைப் பிடித்து அடக்கி ஆள முடியவில்லை அதற்குப் பதிலாக ஓட்டைகள் நிரம்பிய கிழிந்த தோலை உடைய இந்த உடலை மிக்க அழகானது என்று பார்த்து மோகம் கொள்கிறார்கள். பரமசிவனைத் தவிர இவ் வுலகத்தின் கண் எல்லாம் மின்னலைப் போன்று நிலையற்றது என்பதே அப்பாடலின் கருத்து. உடனே கோடி சூரியப்ரகாசனான சித்ஸபேசர், ருத்ராஷமாலைகள் விளங்க சிறிய சந்திரகலை சடையில் ஆட, கங்கை பிரகாசிக்க உடலில் திருநீறு மிளிர ஒயிலாக கனகசபைக்கு எழுந் தருளினார்.

அப்பொழுது ப்ரம்மதேவா, ஸரஸ்வதி, வித்யை, அவித்யை, வாயு, ஆகாசம், சூரியன், சுகமுனிவர், வியாக்ரபாதர், பதஞ்சலி, குபேரன், தேஜஸ், கணபதி முதலியவர்கள் பரமசிவனை வணங்கிப் போற்றுகிறார்கள்.

சிதம்பரம் எனப்படும் தலத்திற்குத் தில்லை, வியாக்ரபுரி புண்டரீகபுரி, என்ற பெயர்களும் உண்டு. ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற புகழ்பெற்ற பஞ்சலிங்கத் தலங்களில் இது ஐந்தாவதாகும் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராசப் பெருமான் எழுந்தருளி யிருக்கிறார். அந்த ஈசனை ஆகாசலிங்கவடிவமாக இங்கு தொழுது வணங்குகிறார்கள். மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷதர் பஞ்சலிங்க ஸ்தலக் கீர்த்தனங்களை இயற்றியுள்ளார் அவை :

1. ப்ருதவி காஞ்சிபுரம் "சிந்தயமா" பைரவி ரூபகம்
2. அப்பு ஜம்புகேச்வரம் "ஜம்பூபதே" யமுனாகல்யாணி திச்ர ஏகம்
3. தேயு திருவண்ணாமலை "அருணாசலநாதர்" ஸாரங்க ரூபகம்
4. வாயு காளஹஸ்தி "ஸ்ரீ காளஹஸ்தீஸ" ஹீசேனி ஜம்ப
5. ஆகாசம் சிதம்பரம் "ஆனந்த நடன ப்ரகாசம்" கேதாரம் சாப்பு

அச்சமயம் நாரதர் அவ்விடத்து வந்து சித்ஸபேசனை வணங்கிய பின், துளஜா ஆதிவாரஹஸ்வாமிக்கு உத்ஸவம் செய்யும் செய்தியை

தெரிவிக்கிறுர். பர்வதராஜனின் அழகிய புத்ரியான பார்வதி தேவி உட்பட, மற்ற எல்லா தேவர்களும் அவ்விழாவினைக் காண முன்பே சென்றுவிட்டதைப் பற்றியும் கூறுகிறுர் பிறகு நாரதர் பார்வதியினுடைய எல்லையற்ற அழகைப் பற்றி கலிகிசக்கதனமு நாதரமா என்ற புன்னுகவராளிப் பாடலில் பரமசிவனுக்கு எடுத்துரைக்கிறுர். சித்ஸசபையில் கூடியிருந்து எல்லாத் தேவர்களும் அதனைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறுர்கள். ஆதிவராஹ ஸ்வாமி விழாவினில் கலந்து கொள்ள பரமசிவன். மற்ற தேவர்களும் விருப்பம் கொண்டு மஹா தேவப்பட்டணத்தை நோக்கிப் புறப்படுகிறுர்கள்.

இதற்குள் மஹாதேவப்பட்டணம் திருவிழாவினை முன்னிட்டு மிகவும் கம்பீரமாகவும் அழகாகவும் தேவலோகப் பட்டணம் போல் தோற்றமளிக்கிறது. வானளாவிய மடங்களும் பசுங்கனிகளோடு விளங்கும் பழமரங்களும் வாசனையை அள்ளி வீசும் மலர்கள் நிறைந்து அழகாகவும், குளிர்ச்சியூட்டும் வண்ணமுடன் விளங்கும் செடிகளும் அப்பட்டணத்திற்கு ஓர் தனிச் சிறப்பையூட்டுகின்றன. நந்திகேஸ்வரர் பரமசிவனிடம்; மஹாதேவப்பட்டணத்தின் கவர்ச்சியான அழகை "பூலோக கைலாசமென்ன" என்ற குறஞ்சி ராக தருவில் வருணிக்கிறுர்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு பரமசிவனையும் மற்ற தேவர்களையும் எதிர்கொண்டு அழைக்கிறுர். பிறகு, இருவரும் ஒருவரையொருவர் யோக க்ஷேமங்களை அன்புடன் விசாரித்துக்கொளளுகிறுர்கள். அச்சமயத்தில் பார்வதி தேவியானவள் பரமசிவனிடம் காதல் கொள்கிறுள். இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் நோக்கிக் கொள்கிறுர்கள். இவர்களுடைய காதல் பார்வைகளை ப்ரும்ம தேவரும், பார்வதியின் தோழியான ஜயையும் கண்டு கொள்கிறுர்கள். ஸ்ரீ நடராசப் பெருமான் மீது அடங்காக் காதல் கொண்டு அதன் வயப்பட்ட சிவகாமசுந்தரி ச்ருங்காரவனம் என்ற பூங்காவை அடைகிறுள். அங்கு விரஹதாபம் அவளை மிகவும் வாட்டுகிறது. மலய மாருதத்தையும். நிலவையும், குயில் கூவுவதையும் அவள் அறவே வெறுதது ஒதுக்குகிறுள். பரமசிவன்பால் தான கொண்டுள்ள தீராக் காதலையெண்ணி அதனைத் தன் தோழியான ஜயையிடம் முறையிடுகிறுள். தன் இஷ்ட நாயகனை பரமசிவனை கணவனுக அடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கிறுள் உடனே ஜயை சிவகாம ஸுந்தரியின் விரஹ வேதனையைக் பிரமம தேவரிடம எடுத்துரைத்து பரமசிவன் பார்வதி இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்விக்குமபடியாக இறைஞ்சுகிறுர்கள. மேலும் இவ்வுலகத்தின்கண் கல்யாணங்கள் நடைபெற ப்ரமமாவின் உதவி மிகவும் இனறியமையாதது என்று ஜயை குறிபபிடுகிறுள். இதனைக்

கேட்ட சுகமுனிவர் பரப்பிரம்மமான அச்சிவனுடைய அருள் இன்றி ஓர் அணுவும் அசையாது சித்ஸ்வரூபனுன, அந்த நிர்க்குண வடிவோடு கூடிய பரமசிவன் திருமணப் பேச்சிற்கு ஒருபொழுது என்று இசையமாட்டார். மறுமொழி அளிக்கிருர். இந்தவார்த்தையைக் கேட்ட மன்மதன் கோபம் கொண்டவனுய் அழகுள்ள ஸ்த்ரீகள் ஸங்கமே உயர்ந்த ஆனந்தத்தைக் கொடுக்கிறது என்று கூறுகிருன்.

அப்பொழுது ஆத்மஞானத்தின் அதிதேவதையான வித்யாதேவி யானவள் ஓர் அழகான கந்தபத்தில் கீழ்கண்டவாறு சொல்கிருள். இவ்வுலகமே ஓர் மாம். காமத்தின் வசப்பட்டு மக்கள் சொல் லொணுத் துயரங்களை அடைந்து கஷ்டப்படுகிருர்கள். வித்யாதேவி மொழிந்தவற்றைக் கேட்ட மாயாதேவி (அஞ்ஞானத்தின் தேவதை) வெகு கோபங்கொண்டு வைராக்கியம், அறிவு கடவுள்பால் அன்பு, காமத்திலிருந்து விடுபட்டிருத்தல் போன்ற நற்குணங்களைக் கூறி வெறுத்துப் பேசுகிருள். வித்யாதேவிக்கும், மாயாதேவிக்கும் மாயை, உண்மை, ஞானம், அஞ்ஞானம், நல்லது கெட்டது போன்று முக்கிய மான தத்துவங்களைப் பற்றி மிகவும் தீவிரமான வாக்குவாதம் நிகழ் கிறது. வித்யா, உலகத்தின் விளையும் எல்லாத் துயர்களும் கேடுகளும் மாயாதேவிதான் அடிப்படைக் காரணம் என்று அடித்துக் கூறுகிருள். ''பாமருராலவு மாயா'' என்ற தன்யாசிராகத் தருவில் வித்யா மாயா தேவியை விளித்துக் கூறுவது. ''ஓ மாயா உனக்கு கொஞ்சங்கூட அறிவு இல்லை. மக்களையெல்லாம் உலக பாசங்களுக்கு உட்படுத்தி பயித்தியமாக்குகிருய். பேராசை, காமம், மாயை, தற்பெருமை, அகங் காரம் போன்ற குணங்களை விருத்தி செய்து மக்களைக் குழப்பியும் அறிவீனர்களாகச் செய்துவிடுகிருய். படித்தவர்களும், அறிவாளி களும் உன் மாய வலையில் சிக்கி கர்வம் அடைந்து அகங்காரத்திற் காளாகி மனைவி, மக்கள், சொத்து ஆகியவற்றையே நிலையானதாகக் கருதுகிருர்கள். முட்டாள்கள் ஆன இவர்கள், கனவு போன்று நிலை யற்றதாகிய இக்குடும்ப வாழக்கையை நிலையானதென்று, உன் தவருன உபதேசத்தால் கருதுகிருர்கள். நீ நிச்சயமாய் ஸமஸாரம் (பிறவி, மரணம்) என்ற நரகத்தில கேடு விளைவிக்கும் ஆசைகள் என்ற கயிற்றினுல் அவர்களை நனகு பிணைத்துத் தள்ளி விடுகிருய்''.

மாயாதேவி மிகுந்த ஆத்திரத்துடன் வித்யா தேவியைக் கடின மான மொழிகளால் தாக்கிப் பேசுகிருள். அவள் சொல்லுகிருள்: ''நல்ல அன்புடன் வளர்ந்த குடும்பங்களை நீ ஞானம் அல்லது ஆத்ம அறிவின் வயத்தில் சிக்கிய மககள் தாம் செய்யவேண்டிய தான தருமங்கள் யாகங்கள் முதலியவற்றில் நமபிக்கையிழந்து அந்த ஆத்ம ஞானத்தை மட்டும் உலகத்தின் உண்மையென்றும் ஸாரம் என்றும் கருதுகிருர்கள்.''

இவ்வாருக இருவருக்குமிடையே வாக்குவாதம் மிகவும் சூடேறி உச்ச நிலையை அடைந்து விடுகிறது. வித்யா தேவியானவள் அப்பரப் பிரம்மனின் நிர்குண நிலையும். ஞான வழியுமே சிறந்த மார்க்கம் என்று அறிவுறுத்துகிருள். மாயாதேவியோ, இவ்வுலகம் மாயை யன்று அதிலுள்ள எல்லா உயிரினங்களும் மற்றும் காணப்படுபவை, உணரப்படுபவை யாவும் உண்மையே என்றும், அப்பரம்மனின் ஸகுணநிலையை எடுத்துக் காட்டுகிருள்.

அச்சமயம் கலைவாணியாகிய, வாக தேவதை ஸரஸ்வதி தேவி. வித்யா, மாயா இருவருக்குமிடையே சமரஸத்தை ஏற்படுத்துகிருள். அவள் வெகு சாதுரியமாக இவ்வாறு எடுத்துரைக்கிருள் ''தாமரை முகத்தினையுடைய மாயாவோ, சந்திரனை போன்ற முகத்தினையுடைய வித்யாவோ நிறுத்துங்கள உங்கள் வாதங்களை இவ்வுலகத்தை இறைவன் படைத்தான் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. எவ்வாறு தண்ணீர்மேல் காணப்படும் நீர்க் குமிழிகள், அந்த தண்ணீருக்குள்ளேயே மறைந்து விடுகின்றனவோ அதேபோல் அவனுல் உண்டாக்கப்பட்ட இப்பரந்த உலகமானது அப்பரம்பொருள் இடத்தே தான் அடைக்கலமாக ஆகிவிடுகிறது. ஆகையால் அப்பரமமே இப்புவியில் எங்கும் நீக்கமற நிலவியிருக்கிருன். அவன் ஒருவனே ஸர்வஸ்வதந்திரன். அப்பரம்மம் நிர்க்குணரூபமாகவும், ஸகுண ரூபமாகவும் தன்னை வெளிக்காட்டிக் கொள்கிருன். மாயையுடன் சேர்ந்து ஸகுணனாகி விளங்க இப்புவி உண்டாவதற்குக் காரணமாகிருன். சித்சக்தியுடன் சேர்ந்து சுத்தஞான வடிவாகி[2] நிர்குணரூபனுக காட்சியளிக்கிருன்.

ஸரஸவதி இவ்வாறு கூறி, வித்யா, மாயா இருவருக்குமிடையே சமரஸத்தை ஏற்படுத்திய பிறகு ப்ரம்மாவும், ஐயையும் பரமசிவனை மெதுவாக அணுகி சிவகாமசுந்தரியை மனமுவந்து திருமணம் புரிந்து கொண்டு ஸகுண வடிவோடு விளங்க இசையும்படி பரம சிவனை வேண்டிக் கொள்கிருர்கள், சிதம்பரேசர் சக்தியுடன்தான் ஒன்று சேருவதற்கு ஒப்புதல் தெரிவிக்கிருர். தேவர்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியோடு அவரைத் துதித்து வணங்குகிருர்கள்.

---

1. *புரந்தரதாஸரியற்றிய 'கெரெயநீரனு' என்ற மலகரி ராக கீதம் அதே கருத்தைத் தெரிவிக்கிறது.*
2. *பரமசிவனுடைய பத்தினியான பாரசக்தியின் மேலான தொரு தன்மையை ஆதி சங்கரருடைய சௌந்தர்ய லஹரியில் ''சிவா சகதஸ்யாயுக்த, யதி பவதி சக்த: ரபவிதும் றடியிளன்டுக்கிதுறபவிப்,*

இதனைத் தொடர்ந்து ஸ்ரீமந்நாராயணன் தன் சகோதரியான சிவகாமசுந்தரிக்கும் சிவபெருமானுக்கும் நடக்கவிருக்கும் திருமண வைபவத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சரிவர நடத்தும் பொருட்டு வருணன் மன்மதன் குபேரன் மாயாதேவி இவர்களுக்குக்கட்டளைகள் பிறப்பிக்கிறார்.

ஸரஸ்வதி தேவியும், ரதியும் மற்ற மங்களப் பெண்மணிகளுடன் கைகளில் நவரத்தினங்கள் பதித்த தங்கத் தட்டுகளில் ஆரதிகளையும் வாஸனைத் திரவியங்களையும், குங்குமம் முதலிய மங்கலப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு இணையில்லாத வனப்போடு விளங்கும் சிவகாம சுந்தரியைவெகு நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்ட மணமேடைக்கு அழைத்துவருகிறார்கள். இமவான் உவகையோடு சிவகாமசுந்தரியை கனகசபாபதிக்குத் தாரைவார்த்துக் கன்னிகாதானம் செய்ய திவ்ய மங்கள சொருபியான சபாபதி, சிவகாமஸுந்தரிக்கு சுபமுகூர்த்தத்தில் மங்கள நாண் கட்டுகிறார். அந்த வேளையில் சுமங்கலிப்பெண்கள் ''ஜெய ஜெய சைல குமாரி'' என்று மங்கள கீதத்தை இசைத்து அவர்களை வாழ்த்துகின்றனர்.

அரைசே! பொன்னம் பலத்தாடும்
அமுதே! என்றுஉன் அருள்நோக்கி,
இரைதேர் கொக்குஒத்து இரவுபகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்;
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துஉன் அடியேன்பால்
பிரைசேர் பாலில் நெய் போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ.

சிரிப்பார்; களிப்பார்; தேனிப்பார்;
திரண்டு திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார்; கேட்பார்; மெச்சுவார்;
வெவ்வேறு இருந்துஉன் திருநாமம்
தரிப்பார்; பொன்அம் பலத்துஆடும்
தலைவா! என்பார்; அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?
நம்பி! இனித்தான் நல்காயே!

—திருவாசகம்

கால பைரவர்

ஸ்ரீநடராஜர் இருக்கும் இடத்திற்குக் கீழ்புறம் சிற்சபையில் உள்ள மூர்த்தி. முன்னாளில் இந்த மூர்த்தி நாள் தோறும் பூசை செய்பவர்கட்கு பொன்னாலாய காசு (படிக் காசு) வழங்கியதனால் இந்த மூர்த்திக்குச் சுவர்ண கால பைரவர் என்றும் பெயர் சொல்லுவர். இப்போது பொற் காசு வழங்கி வருவது இல்லையெனினும் பெயர் வழக்கம் தொடர்ந்து நிலவி வருகிறது.

இந்த மூர்த்திக்கு தனிப்பட வேண்டுதல் செய்து கொண்டு அன்பர்கள் அபிஷேகம் செய்து வடை மாலை சாத்தி விசேஷ வழிபாடுகள் செய்வர். சந்திரமௌலீசுர ஸ்படிகலிங்கத்துக்கு ஆறுகால அபிஷேகம் நடக்கும்போது மட்டுமே இதற்கு அபிஷேகம் செய்வர்—மற்ற நேரங் களில் செய்யும் வழக்கம் இல்லை.

காசியில் இறந்தவர்களுக்கு எமவாதனை இல்லை என்றும் அங்குள்ள காலபைரவருடைய சூலத்தின் நுனி யிலே எண்ணில் காலம் நரகங்களில் கிடந்து அனுபவிக்கும் துன்பங்களைச் சிறிது நேரத்தில் அனுபவித்து வீடுபேறெய் தும் நிலை எய்துவர் என்பது வழக்கம்.

அதனையொட்டித் சிதம்பரத்திலுள்ள ஆன்மாக்கள் எண்ணில் காலம் அனுபவிக்கும் நரகவேதனைகளை இந்தக் காலபைரவருடைய சூலநுனியில் நொடிப் பொழுதில் அனுப வித்த பின்பு வீடுபேறெய்துவர் என்று புராணம் கூறு கிறது.

துவார பாலகர்

புலவர் வெ. வை. சிவசங்கர தீட்சிதர்

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் பல நாட்கள் தொடர்ந்து நடந்து, இறுதியில், அசுரர்கள் மாண்டனர். தேவர்கள் வெற்றியடைந்து, பெருமிதம் கொண்டு, தருக்கிப் பலவாறு தங்களுக்குள் வீண் வாதம் செய்து திரிந்தனர்.

அச்சமயம் வாயும், அக்னியும், இந்திரனும் தங்களுக்குள் வாதமிடும்போது, திடீர் என ஒரு ''யக்ஷஸ்'' தோன்றி, பெரு நெருப்புருவாய் நின்று, தனித்தனியாய் மூவரையும் நோக்கிப் பேசத் தொடங்கியது.

''ஏ வாயு, நீ இந்தத் துரும்பை அசைக்க வல்லாயோ?'' என்று கேட்க,

உடனே பெருங்காற்றாக உருவெடுத்து அசைக்க முயற்சிக்க, முடியாது மிக வருந்தி, வெட்கி, தலைகுனிந்து போக,

அக்கினியை நோக்கி, ''நீ இந்தத் துரும்பை எரிக்க வல்லாயோ?'' என்று கேட்க.

உடனே ஊழித்தீயென வந்த அக்கினி எரிக்க முயற்சிக்க அதற்கும் அத்துரும்பு யாதொரு மாற்றமும் அடையாதிருக்க, அக்னியும் மிக வருந்தி வெட்கித் தலைகுனிந்து போக,

இந்திரனை நோக்கி ''தேவர்த் தலைவனே யாது நினைத்தாய் உன் வல்லமையால் இத்துரும்பை சிறிது அசை'' எனக் கூற,

இந்திரனும் அசைக்க முயன்று முடியாது போய், மிக மிக வருந்தி, வெட்கித் தலைகுனிந்து தாம் செய்த குற்றத்தினைப் பொறுத்து ரட்சிக்கவேண்டும் என்றுகூறி வேண்ட,

"நீங்கள் சிதம்பரத்தை அடுத்து, தனித்தனியே சிவ பூஜை செய்ய உங்கள் பாபம் அகலும்" என்று கூறி யக்ஷஸ் மறைய,

அவ்வண்ணமே மூவரும் இந்திரலிங்கம், அக்னிலிங்கம், வாயுலிங்கம் என்ற லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து பூசித்துக் குற்றம் நீங்கிப் பேறு பெற்றனர்.

(இந்திரலிங்கம்—தேரடியில் விநாயகர் தேருக்கு கிழக்கேயுளது. அக்னிலிங்கம்—கீழவீதி, தெற்கு வீதி கூடும் மூலையில் மாலைக்கட்டித் தெரு முனையில்மால் கிலமாகி கோயில் காணப்படுகிறது. வாயுலிங்கம்—வாயு மூலையில் உளது.)

கீழே கிடந்த துரும்பு மகாவீர புருஷனாக உருமாற யக்ஷஸ் செய்து, கயிலாயத்தில் துவாரபாலகனாக இருக்கக் கட்டளை இட்டது.

இவ்வாறு இருந்து வரும் சமயத்தில் 'தீவ்ரன்' என்ற அரக்கன் தேவர்களை ஜெயித்து, பூமியிலும் பல இன்னல்களைச் செய்து, சிவ க்ஷேத்திரங்களையும், நற்காரியங்களையும் கெடுத்து அட்டகாசங்கள் செய்து வந்தான்.

துவாரபாலகனான ஜயன்; பிரமதன் என்ற பெயரை உடைய திரணனை பரமேஸ்வரன் அருகழைத்து, தங்கப் பூண் கட்டிய கதையைக் கொடுத்து, அஸ்த்திரம் பலவற்றையும் கொடுத்து, அடாத செயல் புரியும் தீவ்ரனை அடக்குக என விடுக்க, பிரமதன் ஈசன் அருள் பெற்றுச் சென்று, கதாயுத்தத்தால் அவனை அடக்கி, சரணம் அடைந்த தீவ்ரனை பாரி பார்ச்வனாக அமைத்துக் கொண்டு, சிவக்ஷேத்திர பாலகரானார்.

அவ்விருவருக்கும் ஜயன், விஜயன், என்றும்; அகுண்டன் ஆரிய கண்டன் என்றும்; ஆட்கொண்டார், ஐயாக் கொண்டார் என்றும் பெயர் வழங்கி வந்தன.

திரணத்தில் உண்டாக விஸ்வரூபன் என்ற அகுண்டனுக்கு ஆட்கொண்டார் என்ற பெயர் பிரசித்தமாக வழங்கி வருகிறது. ஆட்கொண்டாருக்கு மந்திரம், எந்திரம், ஸகஸ்ர நாமம், அஷ்டோத்தரம் ஆகியவை இருக்கின்றன.

இம்மூர்த்தியை, வாயுபகவான் கட்டளைப்படி கிருத யுகத்தில் ஆஞ்சநேயர் வழிபட்டு, திரேதாயுகத்தில் வரப் போகிற ராமாவதாரத்தில் ராமருக்கு சகாயம் செய்து, ராவணனோடும் அரக்கர்களோடும் போர் புரிந்து வெற்றி பெற்றார்.

அவ்வண்ணமே, துவாபராந்தத்தில் பலராமன், பீமசேனன் முதலியோர் இம்மூர்த்தியை உபாசித்து அருள் பெற்று கதாயுத்தத்தில் தேர்ச்சி அடைந்தனர் என்று சிதம்பர ரகசியம் என்னும் கிரந்தம் கூறும்.

ஆட்கொண்டாரை உபாசித்தவர் வழி நடைப் பயணம் செய்யும்போது பில்லி சூன்ய, பேய், பூதசேட்டை தீண்டப் பெறார். தமது செல்வத்துக்கும் தக்க பாதுகாப்பை பெறு வர் என்றும் மேற்படி கிரந்தத்தில் விரிவாகக் கூறப்பட் டுள்ளது.

பதிப்பாசிரியர் குறிப்பு

தில்லைப் பெருங்கோயிலில் துவாரபாலகர்க்குத் தனிச் சிறப்பு உண்டு. இவர்கள் ஆட்கொண்டார், ஐயாக் கொண் டார் என்ற தமிழ்ப் பெயர்களால் வழங்கப் பெறுகின்றனர். தெற்குக் கோபுரத்திற்கு அருகேயுள்ள இந்தத் திருவுருவங் களுக்குப் பூசை நிகழ்த்த ஜெயங்கொண்ட பட்டினம் என்ற கிராமம் மானியமாக விடப்பட்டிருக்கிறது. கவரப்பட்டு என்னும் ஊர் மக்களுக்கு ஆட்கொண்டாரும் ஐயாக்கொண் டாரும் குலதெய்வங்களாக உள்ளனர். மொட்டை அடித் தும் பிரார்த்தனை செய்தும் மக்கள் உடல் நலம் பெறுகின் றனர்.

அல்லிஅம் பூம்பழனத்து
ஆமூர்நா வுக்குஅரசைச்
செல்ல நெறிவகுத்த
சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடைஏறி
கூத்துஆடு அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற்
றம்பலமே சேர்ந்தனையே.

பூந்துருத்தி நம்பி காடநம்பி

நவலிங்கக் கோயில்

வா. ச. சுந்தரேசம்பிள்ளை

நேசம் நிறைந்த உள்ளத்தால் நிலம்நிறைந்த மணிகண்டத்(து)
ஈசன்அடியார் பெருமையினை எல்லாஉயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர்மென் கழல்வணங்க வந்தபிறப்பை வணங்குவாம்.

—சண்டேசர் புராணம் சுந்தரர் துதி.

முன்னுரை

திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பாடி சைவம் பிரப்பிய நால்வரில் ஒருவர் சுந்தரர். இவர் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தவர். தம் நாளிலும் தமக்கு முன்னும் இருந்த சிவன் அடியார்களை சிவனருளால் "திருத்தொண்டத் தொகை" பாடித் துதித்தார். எல்லோர் நெஞ்சிலும் அப்பாடலைப் பதித்தார். அன்று முதல் அளவிலாப் பெருமைகளும் அற்புத நிகழ்ச்சிகளும் நிறைந்த அடியார்கள் சமயம் வாய்த்த போதெல்லாம் விழா எடுத்து வழிபடத் தொடங்கினர். சைவமுந் தமிழும் தழையச் செய்த சோழ மன்னராட்சிக் காலத்தில் நாரையூர் நம்பியாண்டார் நம்பியால் **"திருத்தொண்டர் திருவந்தாதியும்,"** சேக்கிழார் பெருமானால் **"திருத்தொண்டர் புராணமும்"** நமக்குக் கிடைத்தன. சிவாலயமெங்கும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் உருவ வழிபாடும் பெருவிழாவுந் தோன்றின. இல்லங்கள் தோறும் அறுபத்து மூவர் விழா எடுத்தனர். திருமடமும் தனியாக அமைத்தனர். அனைத்துலகும் தொழும் தில்லையிலே எல்லையிலா அன்பு வைத்த சோழவரசர்கள் நான்கு கோபுரங்களின் அருகிலும், வீதிகளிலும் சம்பந்தருக்குப் பொற்கோயிலும் மற்றவர்கட்குக் கற்கோயிலும் எடுத்தார்கள். அறுபத்து மூவர் உருவங்களை அமைத்து விழா எடுத்தார்கள். ஆனால், இவர்களுடன் தில்லைவாழ் அந்தணர்கள் முதல் அப்பாலும்

அடிச்சார்ந்தார் வரையுள்ள ஒன்பது அடியார்கட்கும் உருவ மில்லாமையால், ஊர், பேர், நாள், நட்சத்திரம் இல்லாமையால் சிவனையே வழிபடும் இத்தகையோர் நினைவாக ஒன்பது இலிங்கங்களை அமைத்து ''தொகையடியார்'' எனப் பேர் அறிந்துச் சிறப்பித்தார்கள். இதுவே இன்று சிதம்பரம் சிவகங்கையின் வடகரையில் அழகுடன் விளங்கும் நவலிங்க ஆலயமாகும். இதுகுறித்து வழங்கும் கதைகளையும், உண்மைகளையும் சான்றுடன் இக் கட்டுரையில் சுருக்கமாகக் காண்போம்.

தொகையடியார்கள்

பெரியபுராணம் எனப் போற்றப்பெறும் திருத் தொண்டர் புராணத்தில் பேசப்பெறும் சிவனடியார்கள் அறுபத்துமூவர். இவர்கள் தனியடியார்கள். இவர்களே யன்றி ஒன்பது அடியார்களும் பேசப்பெறுகின்றனர். ஊர், பேர், முதலியவைகளோடு கூடியவை அறுபத்துமூவர் வரலாறு, இவர்களுக்குள் அடங்காமல் பல தகுதிகள் செயல்கள் அமைந்த அடியார்களையும் பொதுவாகத் தொகுத்துச் சுந்தரரே பாடியுள்ளமையால் அவர்களைத் தொகையடியார்கள் என்றனர். அவர்கள்,

1. **தில்லைவாழந்தணர் (சிதம்பரம் தீட்சிதர்கள்)**
2. **பொய்யடிமையில்லாத புலவர் (தம் புலமைகளைச் சிவனுக்கே செலவிட்ட நக்கீரர் முதலானோர்)**
3. **பத்தராய்ப் பணிவார் (அரனையும் பிற உயிர்களையும் வழிபடுவோர்)**
4. **பரமனையே பாடுவார் (சிவனையே இயலிசையால் பாடுவோர்)**
5. **சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் (நாதாந்தத்திலே சித்தம் வைத்து சிவனைச் சேர்பவர்)**
6. **திருவாரூர்ப் பிறந்தார் (கயிலை சிவகணத்தோர் ஆரூரில் பிறந்தவர்)**
7. **முப்போதுந் திருமேனி தீண்டுவார் (சிவனை அருச்சிக்கும் குருக்கள்)**

8. முழுநீறு பூசிய முனிவர் (விதிப்படி எடுத்த நீற்றைப் பூசி விரிசடையானை வழிபடுவோர்)

9 அப்பாலும் அடிச்சார்ந்தார் (தாயுமானுர் இராமலிங்கர் முதலானோர். தமிழ்நாடு அயல்நாட்டில் பிறந்த சிவனடியார் என்போராவர்.)

தொகையடியார் தனிச்சிறப்பு

''உலகெலாம்'' என்று நடராசர் சேக்கிழாருக்கு அடியெடுத்துக் கொடுத்த முதற்பாடலில் உள்ள எழுத்துக்கள் 72. தனியடியார்கள் 63. தொகையடியார் 9. ஆக 72. என்னே அருட்செயலின் பொருத்தம்! இதுமட்டுமா?

அகரம் — படைத்தல் எழுத்து
உகரம் — காத்தல் எழுத்து
மகரம் — அழித்தல் எழுத்து
} இம்மூன்று சேர்ந்ததே ஓம் என்ற பிரணவம்

இதில் உகரம் என்ற ''உ'' எழுத்து ''உலகெலாம்'' என்ற பாடடில் ஒன்பது வருகிறது. நம்மையெல்லாம் காக்கும் தெய்வங்களாக இந்த ஒன்பது தொகையடியார்களும் எக்காலமும் உள்ளனர் என்று எண்ணும்போது எந்த சைவர் பெருமை கொள்ளாது இருப்பர்? இம்மட்டோ? ''உலகெலாம்'' என்ற சொல்லைச் சொக்கிப் பாடிய சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தின் பதினைந்து இடங்களில் குறிப்பிடுகிருர்.

1. பாயிரம் முதற் பாட்டு (1)
2. தில்லைவாழந்தணர் புராணம் (7-ஆம் பாட்டு)
3. இளையான்குடிமாற நாயனுர் புராணம் (15-ஆம் பாட்டு)
4. மானக்கஞ்சாரர் புராணம் (36-ஆம் பாட்டு)
5. திருநாவுக்கரசர் புராணம் (37-ஆம் பாட்டு)
6. திருக்குறிப்புத் தொண்டர் புராணம் (48-ஆம் பாட்டு)
7. காரைக்காலம்மை புராணம் (51-ஆம் பாட்டு)
8. திருஞானசம்பந்தர் புராணம் (216-ஆம் பாட்டு)
9. ,, ,, (643-ஆம் பாட்டு)
10. ,, ,, (859-ஆம் பாட்டு)

11. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (88ஆம் பாட்டு)
12. அதிபத்த நாயனார் புராணம் (16-ஆம் பாட்டு)
13. திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணம் (7-ஆம் பாட்டு)
14. வெள்ளானைச் சருக்கம் (40-ஆம் பாட்டு)
15. ,, ,, (53-ஆம் பாட்டு)

இவ்வாறு நடராசப் பெருமான் சொல்லைப் பலவிடங்களில் போற்றியது போன்றே ஊரிலான் பேரிலான் முன்னிலான் பின்னிலானாகிய சிவபெருமானைப் போன்ற தொகையடியார்களும் விளங்குவதால் அவர்களைச் சுந்தரர், நம்பியாண்டார், சேக்கிழார் முதலானோர் பாமலரால் போற்றினர். பா மலரும் பூ மலருங் கொண்டு போற்றவும், "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று ஆரூரர் பெருமான் தில்லைவாழந்தணர்கள் முதல் அடியாராக சுந்தரருக்கு எடுத்துக் கொடுத்ததால் அவர்களுக்குக் கோயில் அமைக்கவும், திருத்தொண்டத் தொகை முழுதும் நாள்தோறும் பாராயணம் பண்ணவும் பெரு விருப்பங் கொண்ட சோழமன்னன் தொகையடியார்கட்குத் தில்லையில் தனிக்கோயில் அமைத்தான். தில்லைவாழ்ந்தணரை நடுநாயகமாகவும் மற்றைய எண்மரைச் சுற்றிலும் இலிங்க வடிவில் அமைத்தான்.

திருத்தொண்டைத் தொகையீச்சரம்

பரமன் உறையும் ஊரைப் பல்லவனீச்சரம் என்று சொல்வதுபோல் பரமன் அடியார்கட்கு எடுத்த நவலிங்கம் கோயிலைத் "திருத்தொண்டத் தொகையீச்சரம்" என்று சிறப்புப் பெயரிட்டான். இனி, இதற்குரிய கல்லெழுத்துச் சான்றையும் வழிபாட்டுச் சிறப்பையுங் காண்போம்.

இந்த நவலிங்கம் கோயிலில் சுந்தரமூர்த்தி நாயனார் திருவுருவமும் அமைக்கப்பெற்று இருந்தது. ("சிதம்பரம்" என்ற தருமையாதீன வெளியீடு பக்கம் 44 காண்க.) இக்கோயிலை வேறு கதையாக மாற்றியபோது சுந்தரர் திருவுருவம் அகற்றப்பெற்றிருக்கலாம்.

மூன்றாங் குலோத்துங்க சோழனது இரண்டாம் ஆட்ம யாண்டு கல்வெட்டு (262-1913) இதன் உண்மைசிகைய

கூறுகிறது. மேலும் இராசேந்திர சோழருடைய 24-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு "தில்லையில் திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பஞ் செய்வார்க்குக் காசு ஐஞ்சு" நிபந்தமாக அளித்த செய்தி கூறுகிறது.

தில்லையில் தொகையடியார்கட்குத் தனிக் கோயில் எடுத்தது போன்றே "திருத்தொண்டத் தொகையான் குகை" என்று திருவிடைவாயிலிலும், "திருத்தொண்டத் தொகையான் திருமடம்" என்று திருச்சி மாவட்டம் கோவந்தப் புத்தூரிலும் உள்ள உண்மைகளை இங்குள்ள மூன்றும் இராசேந்திர சோழனுடைய நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் கூறுகின்றன. (கி.பி. 1240-1248, 10-1918) 192 1929 காண்க.)

இவ்வரசர்கள் காலம் முதல் இந்த நவலிங்க ஆலயமான திருத்தொண்டத் தொகையீச்சரத்தில் காலை, மாலை திருத்தொண்டத்தொகை பாராயணம் செய்யும் ஒதுவா மூர்த்திகள் இருந்தார்கள் என்பதையும் அவர்கள் தகுந்த ஊதியம் ஆகப் பொற்காசாகவும், நெல்லாகவும் பெற்று வந்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது. அவர்கள் தங்குவதற்கு வடக்குக் கோபுர அருகிலேயே இல்லம் அமைத்துத் தந்திருக்கிருர்கள் என்பதையும் அறிகிறோம்.

இதுகாறும் அறிந்தவற்ருல் பெரியபுராணத்தில் வரும் தொகையடியார்களே இந்த நவலிங்கம் கோயில் என்பது நன்குபுலனுகிறது. காலவெள்ளத்தாலும், கவனிப்பாரின்மையாலும், தமிழ் வேதமான தேவாரம் முதலிய திருமுறைகளைப் போற்றிப் பாதுகாப்போர் குறைந்தமையாலும் இன்று இக்கோயில் வேறு கதைகளால் வழங்கப்பெறுகிறது. அதைத் தெரிவதும் அறிவதும் நம் கடமை.

நவலிங்கம் கோயிலுக்கு வழங்கும் கதைகள்:

1. அடியார்கள் அறுபத்து மூவரல்லாமல், தொகையடியார்கள் ஒன்பது பேருக்கும் ஊர், பேர், உருவமின்மையால்—ஒன்பது சிவலிங்கம் நிறுவி வழிபாட்டாற்றினர். இதுதான் முந்தைய கதை. மூதாதையர் வழங்கிய உண்மைக்கதை.

2. சிவபெருமான் நவந்தரு பேதமாய் நாடகம் நடிக்கின்றார். ஆதலால், நவபேதமாய் நவலிங்கம் அமைந்தது. இது அடுத்து வழங்கும் கதை.

3. நவசக்திகளோடு சிவபெருமான் கூடி விளங்குகிறார் என்பதால், நவலிங்கம் அமைந்தது. இது அதையடுத்து வழங்கும் கதை (அப்படியானால் நவசக்திகளையும் நிறுவி இருக்க வேண்டுமே)

4. நவயூகத்தால் நவலோகத்தையும் படைத்தவர் சிவபெருமான். ஆதலால் நவலிங்கம் அமைந்தது. இதுவும் அதையடுத்து வழங்கும் கதை.

5. நவகோள்களும் (நவக்கிரகம்) தத்தம் தொழிலைக் குறைவில்லாமல் செய்ய அவர்களால் நவலிங்கம் அமைந்தது. இதுவும் அதையடுத்து வழங்கும் கதை. இக்கதைக்குச் சான்றாக இக்கோயிலின் வெளிப்புறச் சுவரில் வண்ண ஓவியங்களை (1965-க்கும் 70-க்கும் இடையில்) வரைந்துள்ளனர்.

6. பானுலிங்கத்தை (சூரிய லிங்கத்தை) நடுவிலும் மற்றைய எட்டுக் கோள்களையும் சுற்றிலும் பிரணவ வடிவில் முன்னோர்கள் அமைத்துள்ளனர். ஆதலால் இது நவகோள் இலிங்கம் கோயில். இதுவும் மேற்கண்டவற்றை வலியுறுத்துங் கதை.

இப்படிப் பலப்பல கதைகள் இதற்குத் தோன்றிய வண்ணம் உள்ளன. எது எப்படி இருப்பினும் இதன் நடுவிலுள்ள இலிங்கம் பதினாறு கலைகளுடன், (பதினாறு பட்டையில்) அமைந்திருப்பது மிகமிக அற்புதலிங்கமாகும். இதன் ஆழம் காண முடியாது. சுயம்பு என்கின்றனர். தொகையடியாரில் தில்லைவாழ்ந்தணர் முதலில் வருவதால் தில்லையில் தான் இக்கோயில் சிறப்பு.

ஒன்றில் ஒன்பது

மிகவும் பழுதடைந்த இக்கோயிலை ஐம்பத்தைந்து (55) ஆண்டுகட்கு முன் (1924ல்) இராமசாமிப் பரதேசி என்பவர்

கைப்பிச்சை எடுத்து கருத்துடன் புதுப்பித்திருக்கிருர். அப்போது,

"சிதம்பராலய நவலிங்க மான்மியம்"

என்ற நூல் சோமயாஜி அப்பாசாமி தீட்சிதர் அவர்களால் தந்த வடமொழிச் சாரத்தை அ. தங்கவேல் பிள்ளை தமிழ் மொழியில் எழுதித்தர, சிதம்பர சண்முகசுந்தர் விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பாகி வெளியிட்டுள்ளார்கள். பதினெட்டுப் பக்கத்திற்கண்ட செய்தி, இங்கு சுருக்கித் தரப் பெற்றுள்ளது. படித்தறிவது பகுத்தறிவிற்குப் பெருவிருந் தாகும்.

சூத முனிவர் சொன்ன கதை

பிரமதேவன் குமாரர்களான சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை வணங்கிவரவேற்று சிவபெருமானின் இரண்டு கண்களான சூரியன் சந்திரனுக்கு மட்டும் சிம்மராசியும் கடக ராசியுமாக ஒவ்வொன்று இருக்க மற்றைய கிரகங்களுக்கு ஏன் இரண்டிரண்டு ராசிகள்? என்று ஐயம் கேட்க, சூரியன் சிதம்பரம் வந்து தங்கி இலிங்கபூசை செய்து தவமிருக்க, ஸ்ரீநடராசர் காட்சி தர, அவரிடம் சூரியன், "நான் சதா காலமும் வானில் சஞ்சரித்துக் கொண்டே இருக்கிறேனே! எனக்கு நிலையான ஒரு இடமில்லையா? இடந்தர வேண்டும்" என்று வேண்ட, ஸ்ரீநடராஜர் பூலோகத்தைப் பன்னிரண்டு கூருக்கி மேஷம், ரிஷபம், மிதுனம் ஆகிய பன்னிரண்டு ராசிப் பெயரிட்டு, இப்பன்னிரண்டிலும் நீ தங்குக" என்று வரம் அருளினர் என்ருர் சூதமுனிவர். மற்றைய கோள் களும் சிதம்பரம் வந்து தங்கள் தங்களுக்குத் தங்கும் இடம் வேண்டி ஸ்ரீநடராசரிடம் வரம் பெற்றனர். இதுவே இன்று நவலிங்கம் கோயில் என்கிறது இந்த நவலிங்க மான்மிய நூல்.

காசியே கோத்திரம்—சூரியன்
ஆத்தியே கோத்திரம்—சந்திரன்
காசிப கோத்திரம் – சனி
ஆங்கிர கோத்திரம்—பிரகஸ்பதி
பாரத்வாச கோத்திரம்—பௌமன்
பார்க்கவ கோத்திரம்— சுக்கிரன்

அத்திரி கோத்திரம்—சௌமியன்
பைடீசை கோத்திரம்—இராகு
சைமினி கோத்திரம்—கேது

இவ்வாறு நவக்கிரகங்களுக்கும் கோத்திரங்கள் கூறி ஒரு ஜாதிக்காரனுக்கி கூறுகிறது. இந்நூல். பாவம்! சூத முனிவருக்கு ஒரு கால எல்லையே கிடையாதா? அவரைக் கொண்டுவந்து இக் கலிகாலத்தில் அதுவும் இருபதாம் நூற்றுண்டிலா நிறுத்துவது? இப்படி நிறுத்தியவர்கள் உண்மையிலேயே நவயுகப் பிரமாவாகத்தான் இருக்க முடியும். உண்மையை மறைக்க ஒன்பது பொய் வேண்டு மென்பதற்கு இந்த நவலிங்கம் கோயிலுக்காக நவகோள் கதை கிடைத்தது போலும்!

இந்த நூலிலேயே மலையாள தேசக் கதை ஒன்றும் அச்சாகியுள்ளது. இது, முன்கூறியதைவிட சுவைமிக்கது காண்போம்:

மலையாள தேசக் கதை

மலையாளம் எனப்படும் கேரளநாட்டை ஒரு காலத்தில் கேசவன் என்ற மன்னன் ஆண்டான். இவனுக்குப் பா காரியத்தை தவிர வேறு காரியமே தெரியாது. இவனுக்கு,

1. கிரகசர்மன்	4. வாமனன்	7. தீர்க்கபாதன்
2. தூலசர்மன்	5. தீர்க்கநாசி	8. சுவேதவர்மன்
3. பிரகத்குட்சி	6. கும்சபானி	9. கிருஷ்ணவர்மன்

என்று ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்கள் செய்த முற்பிறவிப் பாபத்தால் முறையே 1. திராவியர் தியான தொழுநோய், 2. புத்திரன் இன்மை, 3. கண்குருடு, 4. முடன், 5. தரித்திரன், 6. மனைவி தங்காமை, 7. பகைவரால் துன்பம், 8. கை ஊனம், 9. கால் ஊனம் இவற்றுல் அள விலாத் துன்பத்திற்கும் பழிக்கும் ஆளாகி வருந்திஞர்கள்.

சூதமுனிமர் பரசுராமர் காலம் எங்கே? சந்தரர் காலம் எங்கே? சிந்தித்துச் சிவன் அடியார்களைப் போற்று வோமாக!

வாழி திருநாவலூர் வன்ருெண்டர் பதம் போற்றி!

திருச்சிற்றம்பலம்.

★

தில்லையம்மன் திருக்கோயில்

புலவர் தாமரைக்கண்ணன்

முன்னுரை :

உலக உயிரினங்களை உருவாக்குவதும், வளர்ச்சியுறச் செய்வதும், வாழ்விக்க வைப்பதும், இறுதியில் அவற்றை அழிப்பதும், அழித்த பின் அவற்றை வேறொரு உருவமாக இவ்வுலகில் மறுபடியும் தோன்றச் செய்வதும் காலமே ஆகும். காலத்தின் சக்தி பரந்தது; விரிந்தது; எல்லையற்றது.

அத்தகைய சக்தி படைத்த கோடிக் கணக்கான...யுக யுகாந்திரங்களுக்கு அப்பாற்பட்ட...எல்லையற்ற காலத்தையே எடுத்து, விழுங்கித் தன்னுள்ளே அடக்கி, அதனை இயக்குகின்ற ஆற்றலைப் பெற்றதால் அன்னை பராசக்தி 'காலீ' என்றும் 'காலிகா' என்றும் அழைக்கப் பெறுகிறாள். 'காலி' எனும் வடமொழிச் சொல்லின் திரிபே 'காளி' என்னும் தமிழ்ச் சொல்.

எங்கும் எப்போதும் எதிலும் நிறைந்தவள் ஆகையால், அவளைப் பூரணி என்கிறோம்; முத்தொழிலையும் செய்யும் போது அவளை பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி என்கிறோம்; ஈசுவரனுக்குச் சமமாகும்போது அவளைத் துர்க்கை என்கிறோம்; காலத்தையே வடிவாகக் கொள்ளும்போது அவளை, காளி என்கிறோம்.

காலத்தின் வடிவமே, பராசக்தி! பராசக்தியின் வடிவமே, காலம்!

பராசக்தியைக் காஷ்மீரத்தில் அம்பாள் என்றும், ராஜபுதனத்தில் பவானி என்றும், மிதிலையில் உமை என்றும்,

பல்வேறு இடங்களில் மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, சரசுவதி, சாமுண்டி, துர்க்கை, கொற்றவை, பகவதி என்றும் அழைக்கிறார்கள்.

அம்பிகை, பல்வேறு பெயர்களிலும் வடிவங்களிலும் தோன்றி அகில மாந்தரிடம் இருந்து அன்னை வழிபாட்டை ஏற்றுக் கொள்கிறாள்

இருப்பிடம் :

இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு, அம்பலத் தரசனிடம் தோற்ற பின்பு, தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத சீற்றத்துடனும், உக்கிரத்துடனும் சூருடைக் கானகம் உகந்த காளியாக மாறி, தில்லையின் எல்லையில் வந்து அமர்ந்தாள்!

அவ்வாறு, அவள் வந்து அமர்ந்த கோயிலே, தில்லை யம்மன் திருக்கோயிலாகத் திகழ்கிறது.

தில்லை நடராசப் பெருமான் கோயிலுக்கு வடக்கில் அமைந்திருக்கிறது, அழகு கொழிக்கும் தில்லையம்மன் கோயில்.

தென்னைத் திரு வீதியில்...

தென் ஆர்க்காடு மாவட்டம், சேந்த மங்கலத்தை (செயந்த மங்கலத்தை) தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்த கோப்பெருஞ்சிங்கனின் பத்தாவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 1243+10 அதாவது கி.பி 1253) இக்கோயில் தெங்கு (தென்னை) திருவீதியின் தென் பக்கத்தில் அமைந்து இருந்ததைப் பின்வரும் கல்வெட்டு தெளிவாகக் கூறு கிறது:

> ஸ்ரீவஸ்திஸ்ரீ சகல புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அவனி ஆளப் பிறந்தாரான கோப்பெருங்சிங்க தேவற்கு யாண்டு பத்தாவது சோழகோன் ஓலை தென்னவன் பிரம்ஹ மாராயரும், ஜய துங்கப் பல்லவரையரும், தில்லை அம்பலப் பல்லவரையரும், உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் ஸ்ரீ மாஹேஸ்வரி கண்காணி செய்வார்களும்,

ஸ்ரீ காரியஞ் செய்வார்களும் சாமுதாயஞ் செய்வார்களும், கோயில் நாயகம் செய்வார்களும், திருமாளிகைக் கூறு செய்வார்களும், கணக்கரும் கண்டு விடு தந்ததாவது, நாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும்,

விக்கிரம சோழன் தெங்குத் திருவீதித் தென் பக்கத்து எழுந்தருளிவித்த **பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும்,**

திருமட விளாகத்திலும் அகப்பட்ட பள்ளிப் படையான விக்கிரம சோழ நல்லூரில் சுந்தர சோழவதிக்குக் கிழக்கு; கண்டராதித்த வாகய் காலுக்குத் தெற்கு......

(ஏ. ஆர். எண். 312/1913 தென் இந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 12 பக்கம் 86)

தில்லையம்மன் திருக்கோயில்

கோயில் மேற்குத்திசை நோக்கி இருக்கிறது. கோபுரத் தின் வழியாக உள்ளே சென்றதும் நேராக 'பிரம்ம சாமுண்டி' என்று அழைக்கப் பெறும் நான்முக நாயகியின் கருவறையையும், அம்பாள் மேற்கு நோக்கி அமர்ந்திருப் பதையும் பார்க்கிறோம்.

தெற்கில் ஐங்கரனாகிய விநாயகர் கோயிலும், வடக்கில் வள்ளி தெய்வயானையுடன் கூடிய ஆறுமுகப் பெருமான் கோயிலும், கருவறையின் வடமேற்கில் தில்லைக் காளியின் சிறு கோயிலும் வட கிழக்கில் தனியாக அமைக்கப் பெற்ற பைரவர் கோயிலும், சண்டீசுவரர் கோயிலும் கம்பீரமாக அமைந்துள்ளன.

தெற்கே நோக்கியுள்ள உற்சவ மூர்த்திகளுக்கு அருகில், அகோர வீரபத்திரர் உருவமும், வணக்கம் செலுத்துகின்ற வீரர் மூவரின் உருவங்களும் உள்ளன.

இந்த மூன்று சிற்பங்களில் ஒன்று, இக்கோயிலுக்கு ஏராளமான திருப்பணிகளைச் செய்துள்ள கோப்பெருஞ் சிங்கனின் உருவமாகவும் மற்றொன்று இந்தக் கோயிலுக்கென நிறைய் நிலபுலன்களைப் பலரிட மிருந்து பெற்று அவற்றின் மூலம் கோயிற் காரியங்கள் நடை பெறப்

பெரிதும் உதவி செய்தவனாகிய கவுணியன் சிவன் திருச்சிற்றம்பல முடையான் என்பவன் உருவமாகவும், இன்னொன்று கோப்பெருஞ் சிங்கனின் அணுக்க அமைச்சன் உருவமாகவும் இருக்கலாம்,

கருவறையின் வடக்குச் சுவரில் மகிஷன் தலைமீது இருக்கும் துர்க்கை, கடிஹஸ்தம் அபயஹஸ்தங்களுடன் வில், அம்பு, சங்கு, சக்கரதாரிணியாக ஆறு கரங்களுடன் காட்சியளிக்கிறாள்.

அடுத்து......

மூன்றுமுகங்களை யுடைய பிராமி; கிழக்கில் வைஷ்ணவி! தென்னண்டை பால கோட்டங்கள் ஒன்றில் மாகேசுவரி அழகிய திருக்கோலம் கொண்டிருக்கிறாள். அவள் அருகில் இருபுறமும் சனத் குமாரர்கள் இருப்பதால் 'தட்சணாமூர்த்தினி' என்று கோயிலில் இருப்போர் கூறுகிறார்கள். இதன் அருகில் ஏழு திருக்கரங்களுடைய விநாயகர் கூத்தாடும் வடிவத்தில் அமைந்துள்ளார்.

இன்னொரு பால கோஷ்டத்தில் பிரபை கூடிய வீணை வாசிக்கும் சரசுவதியின் சிலை கலை அழகுடன் மிளிர்கிறது. சோழர் காலத்தியதான இந்தச் சிலையின் வலக்காதில் மகர குண்டலமும், இடக்காதில் பத்திர குண்டலமும் அழகு செய்கின்றன.

கருவறை நுழை வாயிலின் இருபுறமும் நாயக்க மன்னர் காலத்திற்குச் சற்று முந்திய இரு துவார பாலகியர் சிலைகள், ஒரு கரத்தில் பாம்புடனும் இன்னொரு கரத்தில் கபாலத்துடனும் இருக்கின்றன.

நான்முக நாயகி:

கருவறையில் உலகத்து அழகெல்லாம் ஒன்று திரண்டு ஓர் உருப்பெற்று அமைந்திருப்பது போல், தில்லைவன முடைய பரமேசுவரி அமர்ந்திருக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். அம்பாள், நான்கு வேதங்களையும் நான்கு முகங்களாகப் பெற்று இருக்கிறாள். பிரம்மாவால் பூசிக்கப்பட்டதால், இந்த நான்முக நாயகி 'பிரம்ம சாமுண்டி' என்று அழைக்கப் பெறுகிறாள்.

மேல் வலக்கையில் ஜபமாலையும், இடக்கையில் சூலமும் கீழ் வலக்கையில் கபாலமும் இடக்கையில் நீலோத்பலமலரும் தாங்கி...தலையில் எழில் நிறைந்த சடா மகுடம் தரித்து... காதுகளின் பத்திர குண்டலங்கள் குலுங்க...மதர்த்த கொங்கை இணைக் குவடுகளில் அழகிய அரவுக் கச்சு அணிந்து...உலக மாயைகளைக் கீழே பிரேதமாக ஆக்கிய பிரேதாசனத்தின்மீது தாமரைப் பீடம் அமைத்து...அதன் மேல் வலக்காலைத் தொங்கவிட்டு,இடக்காலை மடித்து ஞானாசனமாக நிமிர்ந்து அமர்ந்து...நமக்கு அருள் பாலிக்கும் பரமேசுவரியின் அழகை வருணிக்க யாரால் முடியும்?

சோழர் காலத்திய சிற்பத்திறன் அணு அணுவாக இழையோடும் அம்பாளின் கண்களின் கடைக்கூடுகளும், கனி இதழின் ஓரங்களும், கன்னத்துச் சரிவுகளும், எடுப்பான மூக்கும், மணிக்கழுத்தும், மாதுளங்கனி மார்பகங்களும், அண்டங்களைத் தன்னுள் அடக்கியுள்ள ஆலிலை வயிறும், இடை வனப்பும் கண்டு கண்டு, உணர்ந்து உணர்ந்து, நினைந்து நினைந்து சுவைக்கத்தக்க எழிலார் தோற்றமாகும்.

இந்தக் காலாந்தகக் கன்னி, கைபுனைந்து, இயற்றாக் கவின் பெருவனப்பைத் தனக்குத்தானே பெற்று, அமைதியே ஒரு வடிவாய் அமர்ந்து அடியவர் துயர் தீர்க்கின்றாள்.

தில்லைமாகாளி:

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக் கொடியாகிய வெற்றி வேற்றடக்கை...கொற்றவை, நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துடன் மேற்கு நோக்கி அமைந்துள்ளாள்.

நடுங்கா மனம் உடையவரையும் நடுங்க வைக்கும் பயங்கரத் தோற்றம் உடையவள், இவள். கரிய திருமேனியுடைய காளி குங்கும அபிஷேகத்தால் செக்கச் சிவந்த மேனியில் நீண்ட வெள்ளை ஆடை அணிந்து, கருவளைக் கண்களுடன்...கையில் திரிசூலத்துடனும் வீரமும் ஆங்காரமும் உக்கிரமும் கொப்பளிக்கக் காட்சி அளிக்கிறாள்!

இவள் எல்லேயில் கால் வைத்தாலே போதும்...எப்படிப் பட்ட பில்லி சூனியமும் ஏவல் வினைகளும், பைத்தியங் களும் பஞ்சாய்ப் பறந்து போகின்றன.

தங்கள் குறைகளைச் சொல்லி இவள் முன் கண்ணீர் சிந்தினால் போதும்...அந்தக் கண்ணீரோடே நம் குறைகளை யும் கரைத்து நமக்குக் கழுவாய்த் தேடித்தரும் பெற்றிமை பெற்றவள், இவள்!

சீற்றமும் சினமும் உடைய இவளுடைய வேகம் தணிய எண்ணெய் அபிஷேகம் செய்யப் படுகிறது ஐந்து லிட்டர் எள் எண்ணெய் முழுக்குச் செய்தபின் (4 கிலோ) குங்கும அபிஷேகம் செய்கிறார்கள். எட்டேகால் மீட்டர் நீளமுடைய வெள்ளை மல்துணி அணிவிக்கப்படுகிறது.

பிரார்த்தனைக்காரர்கள், செலவைப் பார்க்காமல் அவர் கள் செலவிலேயே அபிஷேகம் செய்கிறார்கள். ஒரே நாளில் மூன்று நான்கு அபிஷேகங்கள்கூட அன்னைக்கு நடை பெறுகின்றன.

எதிரில் அகோர வீரபத்திரரின் சிறிய திருவுருவம் ஒன்று இருக்கிறது.

சாவான் சிலைகள்;

மண்டபத்தில் உள்ளே காளி சந்நிதிக்குப் பக்கத்தில், கிழக்கு நோக்கி ஒரு வீரன் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பம் இருக்கிறது. அவ்வீரன், தன் கழுத்திற்குப் பின்னால் கூர்மையான வாளை வைத்து, அதன் அடியை வலக்கரத் தாலும் முனையை இடக்கரத்தாலும் பற்றித் தன் கழுத்தைத் தானே அரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறான். அவன் அருகில் ஏழு சாவான் சிலைகள் வரிசையாக நின்ற நிலையில் உள்ளன. முதல் வீரன் இடக்கையால் தன் தலையைப் பற்றிக்கொண்டு வலக்கையால் வாள் பற்றித் தலையை அரிந்து கொள்கிறான் மீதியுள்ள ஆறு பேரும் இடக்கை களில் வாள்களைத் தரையில் ஊன்றி, வலக்கைகளில் வாள் பற்றித் தலையின் பின்புறம் அரிந்து கொள்கின்றனர்.

நஞ்சுண்டு கறுத்த கண்டியாகிய கொற்றவைக்கு வீரர்கள் யாதேனும் வேண்டுதல் குறித்துத் தங்கள் தலை

களைத் தாங்களே அறுத்துப் பலியாகத் தருவது பண்டைய மரபு.

"அடிக் கழுத்தின் நெடுஞ்
சிரத்தை அரிவராலோ
அரித்த சிரம் அணங்கின்
கைக் கொடுப்பராலோ
கொடுத்த சிரம் கொற்ற
வையைப் பரவுமாலோ
குறையுடம்பு கும்பிட்டு
நிற்குமாலோ?"

என்று இத் தலைப்பலியைப்பற்றிக் கலிங்கத்துப் பரணி வியந்து விளக்குகிறது.

கல்வெட்டுகள் :

பதின்மூன்றும் நூற்றுண்டில் அவனியாளப் பிறந்தவன் என்றும் தமிழ் வாழப் பிறந்த காடவர்கோன் என்றும் பாராட்டுகளைப் பெற்று, பேரரசன் போல் வாழ்ந்த சிற்றரசன், வாள்நிலை கண்ட பல்லவர் குலத் தோன்றல், கோப்பெருஞ்சிங்கன் ஆட்சியில் இக் கோயிலுக்குச் செய்யப் பெற்ற திருப்பணிகளும், நிலக் கொடைகளும், விழாக் களும், விரிவாகப் பன்னிரண்டு கல்வெட்டுகளில் குறிக்கப் பட்டுள்ளன.

அவற்றுள்...

யாண்டு 14-வது (கி.பி. 1243+14=கி.பி. 1257) இராஜ திவாகரப் பெருந் தெருவில் நகரத்தோர் நியோகம் தில்லை வனமுடைய பரமேசுவரிக்குச் சாத்தி அருளும் மஞ்சள் காப்பு, நெல்லி காப்பு உள்ளிட்டனவயிற்றுக்கும், அமுது செய்தருளும் அடைக்காயமுது பாக்கு வெற்றிலை உள்ளிட்டன வற்றுக்கும் நாங்கள் உடமையாக வைத்துக் குடுத்த, இவர் திருவாசலில் கடை(ய்) பரிமாறுங் கடை ஒன்றுக்கு, ஆயபழம் தரகும் கொள்ளாது, வெற்றிலை பாக்கு மஞ்சளாக இ. நெல்லி, தான்றி,

முதிரை வற்கம் உள்ளிட்டன விற்று ஆயத்தா லுள்ளதும் தரகால்உள்ளதும் இவர் பண்டாரத்தே இவ்வாட்டை தை(ம்) மாதத்து இருபத்து நாலாம் தியதியான நாள் இரு நூற்று முப்பத்தெட்டு முதல் ஒடுக்குவித்துக் கொள்ளக் கடவதாகவும் இப்படி ஸம்மதித்தோம் இந்நகரத்தோம். இப்படி செய்யுமிடத்து இ(ந்த) கடை ஒன்றுக்கு வேண்டுஞ் சரக்குகள் இக் கடையில் இருந்தவன் தான் வேண்டிய இடங்களிலே கொண்டு பரிமாறி, ஆயத் தால் உள்ளது இவர் பண்டாரத்தே ஒடுக்கக் கடவனாகவும் இப்படி ஸம்மதித்தோம் இந்நகரத் தோம். இது நகரப் பணியால் நகரக் கணக்கு, நந்தி மங்கலமுடையதான் எழுத்து, இப்படிக்கு இவை புதுவூர் உடையான் எழுத்து, இப்படிக்கு அனல் ஊர் கிழவன் எழுத்து, இப்படிக்கு இவை பட்டம் உடையான் எழுத்து, இப்படிக்கு இவை அளகைக் கோன் எழுத்து (உ)' (A-R. No. 396 of 1903; S.I.I. Vol. XII)

...என்று வரும் கல்வெட்டில் விளக்கமாகவும் எளிமை யாகவும் செய்திகள் கூறப்பட்டுள்ளதைப் போலவே, எல்லாக் கல்வெட்டுகளிலும் செய்திகள் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

செவ்வையாய் தென்னை வைத்த அழகும் சேவகரு ஆயிரம் காசு கொடுத்த செய்தியும் :

கி. பி. *1251*-ல் இப்பகுதியில், தென்னையைச் செவ்வை யாக வைத்து வளர்த்ததையும், கோயிலுக்கு நிலத்தை விற்று ஆயிரம் காசு கொடுத்த கொடையையும் விளக்கமாக பின்வரும் கல்வெட்டு கூறுகிறது :

'ஸ்வஸ்திஸ்ரீ சகல புவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 8-வது (கி.பி. *1243 + 8* = கி. பி. *1251*) கற்கடஞாயற்று தியதி பத்தினால் தனியூர் பெரும்பற்றப் புலியூர் வடபிடாகை மதுராந்தகப் பேரிளமை நாட்டுப் பள்ளிப் படையான விக்கிரம சோழ நல்லூரில்

விக்கிரம சோழன் தெங்குத் திருவீதியில் தென் பக்கத்து எழுந்தருளி இருந்து பூசை கொண்டருளு கிற நாயனார் வாரணவாசி மாதேவர் கோயில் ஆதி சண்டேசுவர தேவர் திருவருளால்,

இக்கோயில் ஸ்ரீ மகேஸ்வரக் கண்காணி செய் வார்களும் தேவகன்மி கோயில் கணக்கரும் இவ் வனைவோம்,

பிள்ளை அரசூருடையார் பெருமாள்ப் பிள்ளை யான சோழகோனுக்கு நாங்கள் விலைப் பிரமாணத் திட்டுக் குடுத்த பரிசாவது,

விக்கிரம சோழன் தெங்குத்திருவீதியில் தென் பக்கத்து எழுந்தருளுவிக்கிற பிடாரியார்க்கு ஸ்ரீ கோயிலும் திருமுற்றமுமாக விற்றுக் குடுத்த நிலம்,

விக்கிரம சோழ நல்லூர் பால், ஸ்ரீ சுந்தர சோழவதிக்கு மேற்கு. கண்டராதித்த வாய்க் காலுக்கு தெற்கு, நாலாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்து விற்றுக் குடும், ஸ்ரீகோயிலும் திருமுற்ற முமான நிலத்துக் கெல்லை,

இன்னாயனார் திருநாமத்துக் காணியான நிலத்துக்கு கிழக்கு, விக்கிரம சோழன் தெங்கு திருவீதிக்கு தெற்குப்பட்ட அம்பலவனாதன் வாய்க் கால், செவ்வையாய் தெங்கு வைத்த திருவீதித் தெற் கும், இந்த வாரணவாசி நாயனார் மேலைத் திருமடைவிளாகத்து வாய் நீளத்துக்கு மேற்கும் இன்னாயனார் திருநாமத்துக் காணியான நிலத் துக்கு வடக்கும் ஆக இசைந்த இன்னான் கெல்லையிலும் உட்பட்ட,

நிலம் குழி ஐம்பதினால் நிலம் காணி அரைக் காணிக் கீழ்க்காலுக்கு, விலைப்படி காசு ஆயிரம். இவ்விலை கல்வெட்டித்து உ.'

[A.R. No. 401 of 1903., S.I.I. Vol. VIII Page - 370]

நிலத்தின் மூலம் கிடைத்த முப்பத்தேழாயிரம் காசு:

அடுத்து ஒரு கல்வெட்டு, திருச்சிற்றம்பலமுடையான் என்பவர், நிலத்தின் மூலம் வந்த முப்பத்தேழாயிரம் காசைப் பண்டாரக் காசிலே சேர்த்துத் தன் பேரால் கொண்டமையை விளக்குகிறது :

'ஸ்ரீ கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு ஆண்டு 3-வது (கி.பி. 1243+3=கி.பி 1246) மிதுன நாயற்று தியதி இரண்டாம் நாள், தனியூர் பெரும் பற்றப் புலியூர் கவுணியன் சிவன் திருச்சிற்றம்பல முடையான் **தில்லைவனமுடைய பரமேஸ்வரி** திரு வருளால் இக்கோயிலுக்கு, முப்பத்தேழாயிரம் காசுக்கு நிலத்தின் மூலம் வந்த வருவாயைப் பண்டாரக் காசிலே இட்டுத் தன் பேரால் கொண் டமையால் இந்நிலங்கள் **நாச்சியார்க்குத்** திரு நாமத்துக் காணியாகக் கொடுத்தேன், தேவகன்மி கோயில் கணக்கரும் கவிணியன் சிவன் திருச் சிற்றம்பலமுடையனேன்—இது இவர்கள் சொல்ல எழுதினேன்—புலியூருடையானேன் எழுத்து,.'

[A.R. No 390 of 1903 S.I.I. Vol VIII Page 356]

பெண்களும் அளித்த கொடை:

கோப்பெருசிங்க தேவனின் 3-வது ஆட்சி (கி பி. 1246) ஆண்டில், மூன்று கல்வெட்டுகள், அந்நாளில் பெண்களும் நிலக்கொடை அளித்த பெருமையைக் கூறுகிறது.

'......குளங்களும், மல்லிகைக் கொல்லைகளும் உள்பட்ட நிலங்களை,

தனியூர் பெரும்பற்றப் புலியூர் பெருங்கவிசி யன் **திருககழிப் பாலை உடையான்** இரவியும், இவரையே முதுகண்ணாக உடைய (முதுகள் = அந்தப்புரப் பெண்களுக்கு அறிவூட்டும் முதியவர்) இவன் பிராமணி (பிராமணப் பெண்) **அம்பலத்தமுது கொத்தலர் குழலியும்,** இவரையே முதுகண்ணாக உடைய இவர் மகன் **இரவி திருககழிப்பாலை உடையானும்,**

பெருங்கவிசியன் இரவி திருநட்டமாடியை முது கண்ணுக உடைய இவன் பிராமணி அனந்தீசுரன் கிழக்கடைய நின்றளும் பெருங்கவுசியன் இரவி அம் பலத்தமுதை முதுகண்ணுக உடைய இவன் பிராமணி திருக்கழிப்பாலை உடையான் சிவகாம சுந்தரியும்,

பெருங்கவுசியன் இரவி சிரிமூலத் தானமுடை யானும், உமைச்சாணன் விஞயகன் பசுபதியை முது கண்ணுக உடைய இவன் மாதா திருக்கழிப்பாலை உடையான் தத்தையும், இவனை முதுகண்ணுக உடைய இவன் பிராமணி திருக்கழிப்பாலை உடையான் கொண்டாளும்,

இவ்வனைவோம்,

கவுசியன் கவுசியன் சிவன் திருச்சிற்றம்பல முடையானுக்கு நாங்கள் நிலவிலைப் பிராமணத் திட்டுக் குடுத்த பரிசாவது......

[A.R.No 391, 392, 393 of 1903 S.I.I. Vol. VIII]

சிறப்பான செய்திகள்:

இந்தக் கோயில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் கட்டப்பட்டதாகப் பரவலாகக் கருதப்படுகிறது. உள் மண்டபமும் கோபுரமும் பிற்காலத்தவை.

ஆயினும், அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோளி யாகிய காளி, வளையுடைக் கையில் சூலம் ஏந்திய வாறு, கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் கோயில் மிக மிகப் பழமையானதான இருக்க வேண்டும்.

பின்னர், வந்தவர்கள், அதை உள்ளடக்கி சாந்த சொரூபிணியாகிய நான்முக நாயகியைப் பிரதிஷ்டை செய் திருத்தல் வேண்டும். மற்றும் பரிவார தேவதைகளின் கோயிலகள், மதிற்சுவர் கோபுரம், நிலபுலன்கள் முதலி யவை படிப்படியாகத் தோன்றி வளர்ச்சியுற கோப்பெருஞ் சிங்கனின் காலம் பயன்பட்டிருக்கும். எனவே இது 13-ம் நூற்றுண்டுக்கும் முற்பட்ட பழமைக் கோயில் என்பதை நன்கு உணரலாம்.

'தில்லையிலே நீ அமர்ந்தாய், திரு நடனம் காவு கொண்டாய்; ஆடாத பேய்களெல்லாம் ஆட்டி வைக்கும் காளியோடி......' என்னும் மிகப் பழைய பாடல்; ஆதிநாளி லிருந்தே பாடப்பட்டு வருவது கவனத்திற்குரியது.

அடுத்து, பிரேதாசனமும்...நான் முகமும்... பசுங் கொங்கைகட்குப் பைந்நாகக் கச்சும் பெற்றிருப்பது அம்மனின் தனிச்சிறப்புகளாகும்.

கோயிலின் தெற்குப் புறத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் தங்கி இருந்த திருமடம் இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும், மாசித் திங்கள் அமாவாசைக்குப் பிறகு பௌர்ணமிக்கு முன் (சிலநாள்) மாலை 5-45க்கு 6-15க் குள் மாலைச் சூரியனின் பொற்கதிர்கள் கருவறை அம் பாளின் திருமேனிமீது படுகின்றன. சூரியன் ஒளி மழை யால் முழுக்காட்டி அம்பாளைப் பொன் மயமாக்கும் காட்சி வாழ்க்கையில் நாம் காண வேண்டிய கண் கொள்ளாக் காட்சியாகும். கதிரவனே, தன் ஒளிக்கையால் அகிலாண்ட நாயகியை அபிஷேகம் செய்யும் அரிய காட்சியை வேறு எங்காவது காண முடியுமா?

சிதம்பரத்தில் உள்ள பத்துத் தீர்த்தங்களில், எட்டா வது தீர்த்தம் சிவப்ரியை தீர்த்தம், இக்கோயிலுக்கு உரி யது. பைத்தியம் பிடித்தவர்களும் ஏனையோரும் இதில் முழுகிச் சென்று காளிமுன் நின்று, கசிந்து உருகி உடனே பலன் பெறுகிறார்கள்.

இக்கோயிலுக்குக் கொடி மரமோ தல விருட்சமோ இல்லாதது குறிப்பிடத்தக்கது.

சேனைக்கு உடைய செட்டியார்கள்:

இங்குள்ள சாவான் *சிலைகளைப்பற்றி* ஒரு செய்தி சொல்கிறார்கள்.

சேனை உடைய செட்டியார் வகையறுக்கள், இக் கோயிலில் தேர் ஓடாத போது தங்கள் தலையை அரிந்து கொடுத்ததால் தேர் ஓடியதாக, செவி வழிச் செய்தியாகக் கூறப்படுகிறது.

இப்போதும், : அவர்கள் இக்கோயிலின் பிரம்மோற்சவ காலத்தில் ஆறுவது நாள் காமதேனு வாகன உற்சவம் செய்கிறார்கள்; சிவப்ரியை தீர்த்தவாரி உற்சவத்தையும் சேனைக்குடைய செட்டியார்களே செய்கிறார்கள்.

அவர்களில் யார் தவறினாலும், கருவறை அம்பாள் ஆடையிலிருந்து ஒரு சிறு பகுதி கிழித்துத் தர வேண்டும்; அம்மனுக்கு அபிஷேகம் செய்து அபிஷேகம் ஆன பொருள்களையும் மாலை மரியாதைகளையும் கோயிலிலிருந்து வாங்கிக் கொண்டு சென்று பிரேதத்திற்குப் பயன்படுத்திய பிறகே எடுக்கிறார்கள்.

இந்த உரிமையையும் வழக்கத்தையும் இன்றுவரை அவர்கள் விடாமல் போற்றி வருவது குறிப்பிடத்தக்கது

நகரத்தார் திருப்பணிகள் :

பல்லவரும் சோழரும் பாண்டியரும் இந்நாட்டில் செய்துள்ள மாபெரும் கோயில் திருப்பணிகளைத் தொடர்ந்து, பிற்காலத்தில் அவனியாளப் பிறந்த கோப் பெருஞ்சிங்கன் ராஜநாராயண சம்புவராயன், கண்டர் சூரியன் சம்புவராயன் போன்ற சிற்றரசர்கள் கோயில் திருப்பணிகளைச் செய்தனர்.

அவர்களை அடி ஒற்றி, விஜயநகர மன்னர்கள் தெலுங்கர்களாயினும் அவர்கள் தமிழகக் கோயில்களுக்கு ஆற்றிய தொண்டினையும் சிற்பக்கலைக்கு உயிர் அளித்தமையையும் யாரும் மறுக்க முடியாது.

இப்படிப் பேரரசர்களும் சிற்றரசர்களுமே செய்ய முடிந்த கோயில் திருப்பணிகளை, இந்நாளில் நகரத்தார் என்னும் பெரும் பெருமைக்குரிய நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், தாங்களாகவே முன் உவந்து செய்து வருகிறார்கள்.

உண்மையைச் சொல்லவேண்டுமானால்......

நகரத்தார் திருப்பணிகளை ஏற்றுச் சிறப்படையாத முக்கியமான கோயில்களே தமிழகத்தில் இல்லை.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில், திருவொற்றியூர் கோயில், சிதம்பரம் நடராசர் கோயில், மதுரை மீனுட்சி அம்மன் கோயில் போன்ற மிகப் பெரிய கோயில்கள் முதல் தொன்மைச் சிறப்பு வாய்ந்த சிறிய கோயில்கள் வரை நகரத்தார் திருப்பணிகளால் சீர் செய்யப் பெற்று புதுப் பொலிவு அடைந்துள்ளன.

அத்தகைய புதுப் பொலிவையும், அழகு கொழிக்கும் தோற்றத்தையும் நகரத்தாரால், தில்லையம்மன் கோயில் பெற்றுள்ளது.

நான்முக நாயகியை வேண்டுவோம்:

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுஉன் அருகிருந்து
'நீமுத்தம் தா'என்(று) அவர் கொஞ்சும்
வேளையில் நித்தம் நித்தம்
வேய்முத்த ரோடு என் குறைகள்
எல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்,
வாய்முத்தம் சிந்திவிடுமோ?
நெல்வேலி வடிவம்மையே......

என்று, திருநெல்வேலி வடிவம்மையைக் கவிஞர் ஒருவர் வேண்டுகிறார்.

நாமும், 'நான்முக நாயகியே! நீயும் எங்கள் குறைகளைக் களைவாய்! அம்பலத்தரசனிடமும் எங்கள் குறைகளைக் களையச் சொல்லி பரிந்துரை செய்வாய்' என்று வேண்டிக் கொள்வோமாக!

தில்லையம்மன் புகழ் நானிலம் எங்கணும் பரவுக!

அவள் அரவணைப்பு எந்நாளும் நமக்குக் கிட்டுக!!

சிதம்பரம் பாண்டிய நாயகம் முருகன் கோயில்

க. வெள்ளைவாரணன்

தில்லைப் பெருங்கோயிலாகிய சபாநாயகர் திருக்கோயிலினுள்ளே வடமேற்குத் திசையில் சிவகாமியம்மை திருக்கோயிலையொட்டியும் வடக்குக் கோபுரத்தை யொட்டியும் அமைந்தது பாண்டிய நாயகம் என வழங்கும் முருகன் திருக்கோயிலாகும். இதன்கண் செந்தமிழ்க் கடவுளாகிய ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானையாகிய தேவியர் இருமருங்கும் நிற்ப, மயிலின் மேல் அமர்ந்தருளியுள்ளார். மயிலும் திருவாசியும் கூடிய ஆறுமுகப் பெருமானது பேருருவம் ஒரே கல்லினாலாயது. முருகப் பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளினும் அகன்று விரிந்த திருவோலக்க மண்டபத்தினைப் பெற்று, உயர்ந்ததோற்றமும் சிற்பங்களின் வனப்பும் ஒருங்கமையப் பெற்றது பாண்டியநாயகம் திருக்கோயிலேயாகும்.

முருகப் பெருமான் எழுந்தருளிய இத்திருக்கோயில் யானைகளும் பரிகளும் பூட்டி யீர்க்கப்பெறும் தேர் போன்று அமைந்துள்ளது. இதன் தோற்றத்தையும் முகப்பிலும் குறடுகளிலும் தூண்களிலும் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்களின் வனப்பினையும் கூர்ந்துநோக்கின் சிவகாமியம்மை திருக்கோயிலைக் கட்டிய விக்கிரம சோழன் இரண்டாங் குலோத்துங்கன் ஆகிய சோழ மன்னர்களின் காலத்திற்கும் தில்லைப் பெருங்கோயில் கூத்தப்பெருமான் சந்நிதியிலுள்ள தேர் மண்டபமாகிய நிருத்த சபையைக் கட்டிய மூன்றாங் குலோத்துங்கன் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப் பெற்றிருத்தல் கூடும் எனக்

கருத வேண்டியுளது. இக்கோயில் சிவகாமியம்மை திருக் கோயிற் சிற்பங்களை ஒத்த சிற்பங்களையும் நிருத்த சபை யினை ஒத்த அமைப்பினையும் பெற்றிருத்தலால் இது சோழர் காலத்தில் கட்டப்பெற்றதென்றே கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

இத்திருக்கோயில் வழிபாட்டுக் கட்டளையும் இதனைச் சுற்றியுள்ள திருநந்தவனப் பாதுகாப்பும் அறுபதாண்டு களுக்கு முன்னே திருவாவடுதுறை யாதீனத் தம்பிரான் களின் பொறுப்பில் இருந்தனவென்றும், இப்பொறுப்பில் அப் பொழுதிருந்தவர் பாண்டிநாயகத் தம்பிரான் என்ற பெய ரினர் என்றும் அது பற்றியே இம் முருகன் கோயில் பாண்டிநாயகம் என வழங்கப் பெறுகிறதென்றும் பழைய ஓதுவாரொருவர் சொல்லக் கேள்வியுற்றதுண்டு.

இக்கோயில் தேரமைப்பில் அமைந்திருத்தலால் இங்கு எழுந்தருளிய முருகன் பாண்டிய நாயகம் பாண்டிநாயகம் எனப் போற்றப் பெறுகின்றான் எனக் கற்பித்துரைத்தலும் உண்டு. பாண்டிய மன்னர்களாற் கட்டப் பெற்றது என்னும் கருத்தில் பாண்டிய நாயகம் எனப் பெயர் பெற்றது எனக் கருதுவதற்கும் இடமுண்டு. கட்டிட அமைப்பினை நோக்கின் இது சோழர் காலத் திருப்பணியே என்பது நன்கு புலனாகும்.

சிதம்பரம் தரும பூஷணம் செ. இரத்தினசாமிச் செட்டியாரவர்கள் இப்பாண்டிநாயகம் திருக்கோயிலைப் புதுப்பித்து இதன் திருவோலக்க மண்டபத்தின் மேற் கில் கந்த புராண வரலாறுகளை ஓவியக் காட்சியாக யாவரும் கண்டு மகிழும் முறையில், கந்தபுராண வர லாற்று ஓவியங்களை வரையச் செய்து இத்திருக்கோயிலை இருமுறை கும்பாபிஷேகம் செய்துள்ளமை இங்குச் சிறப் பாகக் குறிப்பிடத்தக்க திருப்பணியாகும்.

ஆறுபடை வீடுகளுள் முதலாவதாகவுள்ள திருப்பரங் குன்றத்தில் இத்தகைய புராண ஓவியங்கள் எழுதப் பெற்ற எழுதெழில் அம்பலம் இருந்ததாகச் சங்கத் தொகை நூலாகிய பரிபாடலால் அறிகின்றோம். அத்தகைய எழுதெழில் அம்பலத்தினை இப்பாண்டிநாயகம் திருக்கோயிலிலும் அமைத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இரு பெரும் விழாக்கள்

விழாவின் இன்றியமையாமை

ஞானமே வடிவான கூத்தன் இதயத்தானம் எனப்படும் சிதம்பரத்தில் ஞானசபையாகிய சிற்சபையில் அம்மை காண ஆன்மாக்கள் பொருட்டு அல்லும் பகலும் ஆனந்தத் தாண்டவம் செய்கிறார். ஆனந்தக் கூத்தனைத் தரிசித்தாலே முத்தி கிடைக்கும் என்பது நம் முன்னோரின் துணிபாகும். தினமும் வழிபடுதலைக் காட்டிலும் திருவிழாக்களில் வழிபடுதல் பேருவகை தரும். மனிதப்பிறவியின் பயன் இரண்டென்பர் சேக்கிழார். ஒன்று அண்ணலார் அடியார் தமக்கு அமுது செய்வித்தல். மற்றொன்று நல்விழாப் பொலிவு கண்டு மகிழ்தல். இதனை

> **''மண்ணினிற்......................**
> **.....................................**
> **கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்**
> **உண்மையாம்...........................''**

என்ற பாடலால் அறிய முடிகிறது. பெருவிழாக்கள் நடைபெறுதல் மிகப் பழைய முறை என்பதனை

> **''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
> **வறக்குமேல் வானோர்க்கு மீண்டு''**

என்ற குறள் விளக்கி நிற்கிறது. சிறப்பு என்பது பெருவிழாவைக் குறிக்கும். பூசனை என்பது தினப்படி நடைபெறும் பூசையைக் குறிக்கும். இதனை வடநூலார் முறையே நைமித்

ஶ்ரீ. சிதம்பரராசன்

திகம், நித்தியம் என்பர். பெருவிழாக்களே சிறப்புடையன எனக் கருதிய வள்ளுவர் அதற்கே முதலிடம் தந்தார். தினப்பூசையில் ஏற்படும் குறைகளை நீக்கவே பெருவிழாக்கள் தோன்றின. ஓரிடத்தில் குவிந்த செல்வம் பலரிடமும் பரவ வழி செய்வதனு லும் மக்களிடையே கவலை நீங்கி மன மகிழ்வு வளர ஏதுவாக அமைவதனுலும் மக்களிடையே ஒற்றுமைப் பண்பு வளர வழி ஏற்படுவதனுலும் விழாக்களின் இன்றியமையாமையை நன்கு உணரலாம்.

தில்லை விழாக்களின் பழமை

பல ஊர்களிலும் தினப்படி நடைபெற வேண்டிய பூசைகளே பொருளாதாரச் சீர் குலைவு காரணமாக நடைபெற முடியாமல் இருக்க சிதம்பரத்தில் அனைத்துப் பூசைகளும் காலம் தவருமல் நடைபெறுதல் குறிப்பிடத்தக்கதாகும். அற்புதக் கூத்தனுக்கு ஆண்டில் ஆனி, மார்கழி, மாசி ஆகிய மாதங்கள் மூன்றிலும் திருவிழாக்கள் நடைபெற்றதாக அறிய முடிகிறது. இதனை உமாபதி சிவாச்சாரியார் எழுதிய "ஸ்ரீ குஞ்சிதாங்கிரிஸ்தவம்" என்ற வடமொழி நூலின் 23, 24 எண்களுள்ள நூற்பாக்களால் அறிய முடிகிறது. ஆனுல் இது போழ்து மாசிமாதத் திருவிழா நடைபெறவில்லை. ஆனிமாதத்து உத்திர நட்சத்திரத்துற்குப் பத்து நாள் முன்னதாகவும் மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்திற்குப் பத்து நாள் முன்னதாகவும் இரு பெரு விழாக்கள் நடைபெறுகின்றன. இறைவனுடைய ஐம்பெரும் தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் ஆகியவைகளை அறிவுறுத்தலே இத்திருவிழாக்களின் உட்பொருளாகும். சிவானந்தக் கூத்தனுக்கு நடைபெறுகின்ற விழாக்கள் மிகப் பழமையானவை. அதன் தொடக்க ஆண்டினை நம்மால் வரையறுக்க இயலாது

> **"தாரினுர்................தேரினுர் மறுகிற்றிரு வாரணி**
> **தில்லைதன்னுள்"**

என்ற சம்பந்தர் பாடலாலும்

> **"காருலாமலர்.........தேருலாவிய தில்லையுட் கூத்தனை"**

என்ற அப்பர் பாடலாலும்

> **"ஆரார் வந்தார்............தேரார் வீதியில்..."**

என்ற சேந்தனரது திருப்பல்லாண்டுப் பாடலாலும் பிற பாடல்களாலும் இவ்விழாக்களின் பழமையை ஒருவாறு உணரமுடிகிறது.

தில்லை விழாக்களின் சிறப்பு

இக்காலக் கட்டத்தில் ஒரு பெருவிழா நடத்தவே மிகத்துன்ப மாயிருக்க, நேரடியாக எவ்விதவருவாய் வருதற்கும் வழிஇல்லாத அம்பல வாணர்க்கு ஆண்டு தோறும் இருபெருவிழாக்கள் நடை பெறுதல் என்பது வியப்பல்லவோ! இங்கு நடத்தப்பெறும் பூசனைகள் அனைத்தும் வைதீக முறையின் பாற்படும். பிற தலங் களில் நடைபெறும் விழாக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தில்லைத் திருவிழாக்களின் வேறுபாடுகள் இனிது புலனாகும். சிறப்பாகக் குறிக்கத் தக்கதும் எங்கும் காண இயலாதது மானது யாதெனில், திருவிழாவின் ஒன்பது பத்து ஆகிய இரு திருவிழா நாட்களிலும் மூலவராகிய திருச்சிற்றம்பலமுடையானே எழுந் தருளுதலாகும். மற்ற எட்டு நாட்களிலும் நடைபெறும் திரு விழாக்களுக்குப் புறப்பாட்டின் போது எழுந்தருளச் செய்யத் தனியான ஐந்து மூர்த்திகளின் திருவுருவங்கள் உள்ளன. திரு விழாக் காலங்களில் காலை இரவு ஆகிய இருவேளைகளிலும் பஞ்ச மூர்த்திகள் வீதிவலம் வருதல் தனிச் சிறப்பாகும். சிவானந்தக் கூத்தன் புறப்பட்டுத் தேரிற்கு எழுந்தருளும் காட்சி, இரவு தேரிலிருந்து ஆயிரக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளும் காட்சி, பத்தாம் நாள் தரிசனக் காட்சியாக பொன்னம்பலத்திற்குத் திரும்பும் காட்சி ஆகிய மூன்றும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். யாவராயினும் இக்காட்சிகளைக் கண்டு மகிழ வேண்டியது இன்றி யமையாததாகும். இக்காட்சிகளைக் கண்டோர் அனைவரும் மாணிக்கவாசகர் கூறியவாறு போல ''அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்'' என மகிழ்தல் உறுதி. ஆனி, மார்கழி ஆகிய இரு மாதங்களில் நடைபெறும் விழாக்கள் பெரிதும் ஒத்திருப்பினும் மார்கழியில் மாணிக்கவாசகருக்கும் சேர்த்து விழா நடைபெறுவது சிறப்பான ஒன்றாகும்.

முன் ஏற்பாடுகள்

விழா தொடங்க இரு நாட்களுக்கு முன்பாக சில தொடக்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தில்லைவாழ் அந்தணர்களில் திருவிழாவிற்கென ஒரு ஆச்சாரியர் இருப்பார். முதல் நாளில் விழாவின் ஆச்சாரியர் பொன்னம்பலத்தின் அருகிலுள்ள விநாயகரிடம் வழிபாடு செய்து விழா இனிதே நடைபெற்று முடிய உத்திரவு (அனுக்ஞை) பெற்றுப் பின்பு நடராசரிடம் சென்று உத்திரவு பெறுவார். இடத்தூய்மையின் பொருட்டுப் பின்பு வாஸ்து சாந்தி செய்வர். திருவிழா நாட்களில் வீதிகளில் யாரேனும் இறந்துவிடின் இச்சாந்தி செய்தபின்பே பஞ்ச

மூர்த்திகள் வீதிகட்குக் கொண்டு வரப்படும். இரண்டாம் நாள் சண்டிகேசுரரை எழுந்தருளச் செய்து கோயில் தோட்டத்தில் புற்றுமண் எடுத்து வந்து (மிருத் சங்கிரஹணம்) அம்மண்ணைப் பாலிகைகளில் வைத்து நவதானியங்களை முளைக்கச் செய்வர். (அங்குரார்ப்பணம்) இதனையாக சாலையில் வைத்திருந்து விழா முடிவுற்ற பின்னர் நீரில் கொண்டு விட்டுவிடுதல் மரபு. அன்றே ஆச்சாரியருக்குக் கையில் காப்பணிதல் (ரக்ஷாபந்தனம்) என்ற சடங்கு நடைபெறும்.

முதல் நாள் விழா

முதல் நாளில் கொடியேற்றுவிழா நடைபெறும். ஏற்றப்பட வேண்டிய கொடி காலையில் பல்லாக்கு ஒன்றில் வீதியில் வலமாக எடுத்து வரப் பெறும். கொடியில் காளை வரையப் பட்டிருக்கும். கொடியினைக் கூத்தன் முன் உள்ள காளை முன் வைத்து அக்காளை யைக் கொடியில் இருப்பதாக பாவனை செய்து நந்தியெம் பெரு மானை அதனிடத்து எழுந்தருளச் செய்வர் (ஆவாஹனம்). சோமாஸ்கந்தர் மட்டும் நடராசர் முன் சென்று திருவிழா தொடக்கத்திற்கான உத்திரவு (அனுக்ஞை) பெறுவதற்காக எழுந்தருளச் செய்வர். பின்பு பஞ்ச மூர்த்திகளைக் கொடிக் கம்பத்திடம் கொண்டு வந்து நிறுத்துவர். கொடி மரத்தின் கீழ் அஸ்திர ராஜர் என்ற சூலத்தில் சகல தேவதைகளையும் எழுந் தருளச் செய்வர் (தேவதா ஆவாஹனம்). கொடி மரத்தின் கீழ் கும்ப பூசைகள் முடிவுற்றதும் நல்ல நேரத்தில் கொடி ஏற்றப் படும். கொடியேற்றுவதற்கும் கூத்தன் சிற்சபையிலிருந்து புறப் படுவதற்கு மட்டுமே கால நேரம் வரையறுப்பர். மற்ற எதற்கும் காலம் நேரம் பாரார். ஏற்றப்படும் கொடி தூயவெள்ளை நிறம் பொருந்தியதாய் இருக்கும். அக்கொடியில் காளையும் அதன் மேல் திரிசூலமும் அமையுமாறு வரையப்பட்டிருக்கும். கொடி ஏற்றம் தர்மத்தையும் உயிர்களையும் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு உயர்த்தலையே உணர்த்துவதாய் அமைந்துளது. கொடி ஏற்றம் மும்மலங்களாலும் (ஆணவம், கன்மம், மாயை) உழலும் உயிர்களைக் கீழ்நிலையிலிருந்து பரமன் மேல் நிலைக்கு ஏற்றுகிறான் என்பதனையே உணர்த்தும் எனத் தான் பாடிய கொடிக்கவியில் உமாபதி சிவாச்சாரியார் கூறியுள்ளார்.

> **''திரிமலத்தே குளிக்கும் உயர் அருள் கூடும்படிக்**
> **கொடி கட்டின னே''**

என்ற வரிகள் விளக்கி நிற்கின்றன. பஞ்சமூர்த்திகள் பின்பு கோயிலின் உள்ளேயே வலம் வருதல் வழக்கத்தில் உள்ளது.

மற்ற நாட்களில் காலைவேளையில் பஞ்ச மூர்த்திகள் வீதி வலம் வருவர். இரவு வேளையில் மட்டும் வாகனங்களில் வீதி வலம் வருதல் வழக்கமாயுள்ளது. அன்றிரவு கொடிமரத்தின் கீழ் தினமும் வாசிக்கப்படும் சுத்து மத்தளம் பிர்மதாளம் முதலிய வற்றை வைத்து பூசனை செய்து அவைகளை ஆச்சாரியரே தட்டித் தொடங்கி வைப்பார் (பேரீதாடனம்). அஸ்திர ராஜர் தினமும் இருவேளைகளிலும் முன் வீதிக்கு வலம் சென்று பலியிடல் நிகழ்ச்சி நடைபெறும். இரவு வீதி வலத்தில் எண்டிசைக்குரிய தேவதை களையும் வழிபட்டு பலியிடல் குறிப்பிடத்தக்கது. இதனைத் திக்கு பந்தனம் என்பர். திசைத் தேவதைகளை விழா இனிது முடிவுற வேண்டுகின்ற விண்ணப்பமே இச்சடங்கு. முதல் எட்டு நாள் களிலும் வீதிகளில் பலியிடுகின்ற காரணத்திஞல் தினப்படி கால சந்திக்குப் பிறகு நடைபெற வேண்டிய ஸ்ரீ பலியிடல் நிறுத்தி வைக்கப்படுகிறது, பஞ்சமூர்த்திகளின் வீதி வலம் முடிந்த பின்பு மூர்த்தங்களுக்குக் காப்புக் கட்டுதலும் யாக சாலை கும்பங்கள் நிறுவுதலும் நடைபெறுகின்றன.

இரண்டாம் நாள்:

இரண்டாம் நாள் முதலாகக் காலை இரவு இரு வேளைகளிலும் பஞ்ச மூர்த்திகளின் புறப்பாட்டின் போது யாகசாலை தீபாராதனை கள் நடைபெறும். இன்றிரவு சோமாஸ் கந்தர் சந்திரவாகனத்தில் எழுந்தருளுவர். சந்திரன் இன்பத்தை நல்குபவன். சந்திர மண்டலத்தின் நடுவில் இறைவனை எண்ணி வழிபடின் ஞானம் பெறலாம் என்பது இதன் உட்கிடக்கையாகும். சிவானந்தவல்லி அன்ன வாகனத்தில் எழுந்தருளுதல், அன்னம் நீரை நீக்கிப் பாலை உண்ணுமாறு போல அடியார்களின் உண்மையை ஏற்றுப் பொய்மையை நீக்குவதே உட் பொருளாகும். முருகன் மயில் வாகனத்திலும் விஞயகர் பெருச்சாளி வாகனத்திலும் சண்டி கேசுரர் காளை வாகனத்திலும் எழுந்தருளுதல் உரிமையும் மரபும் ஆகும்.

மூன்ரும் நாள்:

சோமாஸ்கந்தர் சூரிய வாகனத்தில் எழுந்தருள மற்ற மூர்த்திகளெல்லாம் முன்ஞல் போலவே தங்களுக்குரிய வாகனங் களில் எழுந்தருளுவர். உலகைக் காப்பது கதிரவன் தொழி லாகும். சூரியனே உலகத்திற்கு ஒளி வழங்குபவன். எனவே சூரியனின் மத்தியில் இறைவனை வைத்து வழிபடுவோர் கண் ஒளி பெறுவர். சூரிய சந்திர வாகனங்களில் எழுந்தருளுதல் பரமனின் ஐந்தொழில்களில் 'அருளல்' ஆகிய தொழிலைக் குறிப்பதாகும்.

நான்காம் நாள்:

சோமாஸ்கந்தரை பூத வாகனத்தில் எழுந்தருளச் செய்தல் வழக்கம். ஐம்பூதங்களையும் இயக்குபவனும் விளங்குகிருன் இறைவன் என்பதனை இது நன்கு உணர்த்துவதுடன் வழிபடுவோர் பூதம்போன்ற கொடிய உயிர்களினுல் ஏற்படும் பயம் நீங்கப்பெறுவர் என்பதனையும் உணர்த்துகிறது. இது ஐந்தொழில்களில் 'அழித்தல்' தொழிலை உணர்த்துவதாய் அமைந்துளது.

ஐந்தாம் நாள்:

தில்லைக் கோயில் வாகனங்களின் அழகு அனைவரையும் தன் வயப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அனைத்தும் வெள்ளியால் ஆனவை. ஐந்தாம் நாளில் சோமாஸ்கந்தரும் சிவானந்தவல்லியும் தனித்தனியே காளை வாகனத்தில் எழுந்தருளுவர். ஊழிக் காலத்துத் தன் அழிவைக் கண்டு கலங்கிய தர்மதேவதை தன் வேண்டுகோளின்படி .காளை உருவத்தில் பரமனைத் தாங்கும் பேறு பெற்றது என்பது புராண வரலாறு. மேலும் திரிபுரத்தை அழிக்கப் பரமன் புறப்பட்டபோது திருமாலையே காளையாகக் கொண்டு புறப்பட்டான் எனச் சைவ நூல்கள் கூறுகின்றன.

"இடபமாய்த் தாங்கினுன் திருமால் காண் சாழலோ" என்ற மாணிக்கவாசகரின் மணி வார்த்தை ஈண்டு ஒப்பு நோக்கத் தக்தது. காளை தூய வெள்ளை நிறம் உடையது. சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கம் என்ற நான்கு குணங்களே காளையின் நான்கு கால்கள் என்பது தத்துவப் பொருள். இந்நான்கு குணங்களால் ஆன்மாக்கள் பரிசுத்தமடைய வாய்ப்பு ஏற்படும். பரிசுத்தமடைவதால் இறையருள் கிட்டும் என்ற அருளை இது உணர்த்துகிறது. சோமாஸ்கந்தரும் சிவானந்த வல்லியும் சுப்பிரமணியரும் வாகனங்களுடன் சப்பரம் அல்லது தெருவடைத்தான் என்ற தாற்காலிகத் தேரில் எழுந்தருளி வீதி வலம் வருதல் சிறப்பாகக் காணத் தக்கதாகும். மற்ற இரு மூர்த்திகள் சகடையில் (நான்கு சக்கர வண்டி) எழுந்தருளுவர். சப்பரத்தின் முன் முகப்பு கோபுரம் போன்று அமைந்திருக்கும். மேல் பகுதி சத்துவகுணத்தையும் மற்ற இருபக்கங்களும் முறையே ராஜசம், தாமதம் ஆகிய இரு குணங்களையும் குறிக்கும். சத்துவ குணத்திற்கு மற்ற இரு குணங்களும் அடக்கமாயுள்ளது என்பதனை முன் முகப்பில் உள்ள கோபுரம் போன்ற தட்டி உணர்த்துகிறது. இந்த முன் முகப்பு தென்னை, பனை ஓலைகளால் கவினுற அமைக்கப்படும் திறனைக் கண்டால் அனைவரும் வியப்பும் மகிழ்வும் அடைதல் திண்ணம். இரவு கொடி மரத்திடம்

அஸ்திர ராஜரை எழுந்தருளச் செய்து விசேட பலியிடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இறைவனின் இடபவாகனக் காட்சியை காண்பதற்குத் தில்லையில் பலரும் கூடி, கண்டு அருள் பெற முற்படுவர்.

ஆறும் நாள்:

சோமாஸ்கந்தரை யானைமீது எழுந்தருளச் செய்தல் வழக்கம். பரமபதி, கஜாசூரனைக் கொன்று தோலை உடுத்திக் கொண்டதுடன் அவனுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு அவனை உயிர்ப்பெழச் செய்து தன்வாகனமாகக் கொண்டார் என்பது புராண வரலாறு. இறைவன் யானைமீது எழுந்தரும் காட்சி யானையின் கருப்பு நிறமாகிய அஞ்ஞானத்தை அடக்கி வழிபடுவோருக்கு அறிவே வழங்கும் வள்ளல் என்ற தத்துவப் பொருளை விளக்குவதாய் அமைந்துளது.

ஏழாம் நாள்:

இந்நாளில் யாகசாலையில் விசேட ஹோமங்கள் நடைபெறும். இரவு பெருமான் கைலாய வாகனத்தில் எழுந்தருள அம்மையும், சுப்பிரமணியரும் காளை வாகனங்களில் எழுந்தருளி வீதி வலம் வருவர். சுப்பிரமணியர் காளை வாகனத்தில் எழுந்தருளுவதை இங்குதான் காண முடியும். இதற்கான பொருத்தமும் விளங்குமாறில்லை. ஆணவமே உருவாய இலங்கை வேந்தன் பரம்பொருள் வீற்றிருக்கும் கயிலை மலையைத் தூக்க முற்பட அருந்துணைவனும் கயிலைநாதன் தன் மெல்விரலால் மலையை ஊன்ற கதறி பின்பு சாம கானம்பாடி பேறு பெற்ற புராணச் செய்தியைக் கண் முன் கொணர்வது இந் நாள் வாகனத்தின் சிறப்பாகும். ஆணவம் நீங்கப் பெற்ற உயிர் இறையருள் பெறுதல் உறுதி என்ற தத்துவத்தை இது உணர்த்தி நிற்கிறது. இந்த நாளில் வியக்கத்தக்க பாங்கில் வாண வேடிக்கைகள் நடைபெறும். இரவு மூலவராகிய கூத்தப்பிரானுக்கும் அம்மைக்கும் தேர்தரிசன விழாவிற்கு அணிவிக்க வேண்டிய விலைமதிக்க முடியாத அணிகலன்களை அணிவித்து பட்டுத் துணியினுல் முகம் மட்டும் தெரியுமாறு மூடிவிடுவர். மறுநாள் முழுவதும் நடைபெறும் கற்பூர தீபாராதனையின் புகை, நகைகளில் படியாமல் இருக்கவே இவ்வாறு மூடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

எட்டாம் நாள் :

ஆனி மாதத்து எட்டாம் திருவிழா மக நட்சத்திரத்தில் வரும். அந்நாள் மாணிக்கவாசகர் கூத்தனுடன் ஐக்கியமான நாளாத

லின் காலையில் பஞ்ச மூர்த்திகள் உலாவரும்போது மாணிக்க வாசகரும் உடன் வீதிவலம் வந்து கோயிலினுள் சென்றதும் கூத்தனுடன் ஐக்கியமாகும் காட்சி நடைபெறும். இது போன்று மற்ற மூன்று நாயன்மார்கட்கும் அவரவர் ஐக்கியமான நாட்களில் சிறப்பான பூசனைகள் நடைபெறுகின்றன. எட்டாம் நாள் இரவு பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு இல்லை. மாலையில் பிட்சாடண மூர்த்தியைத் தங்கத்தேரில் எழுந்தருளச் செய்து வீதி வலம் கொண்டு வருதல் அழகிய காட்சியாகும். ஆணவ மிகுதியால் அலைப்புண்ட தாருகாவன முனிவர்களும் பத்தினிகளும் முறையே திருமாலின் மோகினி வடிவத்திலும் சிவனின் பிட்சாடண வடிவத்திலும் தங்களை மறந்து காமவயப்பட்டனர். இவர்கட்குப் பரமன் உண்மையை உணர்த்துவான் வேண்டி இக்கோலம் கொண்டார். இக்காட்சி 'அருளல்' தொழிலை உணர்த்துவதுடன், இதனைக் கண்டு வழிபட்டோர் மன உறுதிப் பாட்டைப் பெறுவர் என்பதனையும் உணரலாம். தாருகாவனத்தர் மயங்கும் அளவிற்கு இம் மூர்த்தி இருந்தாரா என்றால் அதனை இங்கு புறப்பாட்டின் போது காண்போர் அனைவரும் நன்கு உணர்வர். தங்கத் தேரில் கவினுற செய்யப்பட்டுள்ள மரவேலைப்பாடுகள் மேற்கூறிய புராணக் கதையினைத் தெளிவாக விளக்கும் பாங்கில் அமைந்துள்ளன. மேலும் அன்றிரவு சோமாஸ் கந்தர் மட்டும் வெட்டும் குதிரை வாகனத்தில் ஏறி வீதி வலம் வருவார். திரிபுரம் அழித்த போது வேதங்களே குதிரைகளாக நின்று சிவபெருமானைத் தாங்கி நின்றன என்பதனையும் மாணிக்கவாசகருக்காக சோமசுந்தரக் கடவுள் நரிகளைப் பரிகளாக்கித் தானே வீரராகத் தோன்றிய அற்புதக் காட்சியினையும் இஃது எண்ணச் செய்கிறது.

ஒன்பதாம் நாள் :

இந்நாளில் மட்டும் விநாயகர், சுப்பிரமணியர் இருவரும் தேரிற்கு முன்னாலேயே எழுந்தருளுவர். அதிகாலையில் குறித்த நல்ல வேளையில் அம்மையையும் அப்பனையும் மூடியிருந்த பட்டு நீக்கி புறப்பாட்டிற்கான தீபாராதனை முடித்து மூலவரை முன் மண்டபமாகிய கனகசபைக்குக் கொண்டு வருவர். இதனை 'யாத்ரா தானம்' என்பது சொல் வழக்கு. பின்பு மலர் மாலைகளால் அழகுபடுத்தி மஞ்சங்களில் கட்டி கிழக்குப் பக்கத்து வழியாக வெளியே உள்ள மரப்பந்தலில் சேர்த்துவிடுவர். அதன் பிறகு பக்தர்களே ஆர்வம் மீதூர போட்டியிட்டுக் கொண்டு அம்மையையும் அப்பனையும் தோளில் தூக்குவதற்கு முற்படுவர். எங்கும் காணமுடியாத வகையில் கூலி ஆட்களை நிறுவாமல் பக்தர்களே தாங்கிச் செல்லுதலை தில்லையில் மட்டுமேதான் காண

முடியும். பெருமானும் பெருமாட்டியும் உட்சுற்று வெளிச்சுற்று களில் வலமாக வந்து நடனப் பந்தல் வழியாக தேரிற்கு எழுந் தருளும் காட்சியைக் கண்ட ஒவ்வொருவரும் அப்பரடிகள் வேண்டிய "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்ற விருப்பத்தின் உண்மையை உணர்வர்.

நடராசர் புறப்பட்டுத் தன் இருப்பிடம் வந்து சேரும்வரை ஆங்காங்கு தீபாராதனைகள் நடந்தபடியே இருக்கும். இதனை 'மண்டகப்படி' என்ற சொற்றொடரால் வழங்குவர். மூர்த்திகள் தேர்க்கண் எழுந்தருளியபின் தீபாராதானைகள் முடிவுற்று தேர் புறப்படும். இவ்வூரில் தேர்வடம் 'இழுத்தல்' என்று கூறாது தேர்வடம் 'பிடித்தல்' என்று கூறுவது மரபாயுள்ளது. எவ்வித வேறுபாடுமின்றி பொது மக்களே தேர் வடம் பிடித்து வலம் கொண்டுவர கூலியாட்களையும் மின் இயந்திரங் களையும் பயன்படுத்துவது இதுநாள் வரை இல்லை. ஐந்து மூர்த்திகட்கும் ஐந்து தேர்கள் வருடத்தில் இருமுறை ஓடுதல் தில்லைக்கே உரிய சிறப்பாகும். மேலும் தேர்கள் ஐந்தும் மாலை ஆறுமணிக்கெல்லாம் நிலைக்கு வந்து சேர்தல் குறிப்பிடத்தக்க தாகும். தேரோடும் வீதிகளிலெல்லாம் மக்கள் அலைகடலெனத் திரண்டு ஆர்வம் மிக்கவராய்த் திளைத்து நிற்பர். சிவபெருமான் முப்புரம் செற்றபோது பூமியையே தேராகக் கொண்டு சென்று நகைத்தெரித்தார் என்ற புராண வரலாற்றைத் தேர் விழா காட்டுவதுடன் அல்லோரை அழித்து நல்லோரைக் காப்பவன் பரமன் என்ற உட்கருத்தையும் தேர்த் திருவிழா விளக்கி நிற்கிறது. இவ்விழா 'காத்தல்' தொழிலை உணர்த்துகிறது. இரவு எட்டு மணிக்கெல்லாம் ஆடலரசனும் அம்பிகையும் ஆயிரக்கால் மண்ட பத்திற்கு அழகாகவும் அமைதியாகவும் சென்று சேர்தலைக் கண்டு மகிழலாம். மூலவர் புறப்பாட்டின் போது வாசிக்கப்படுகின்ற இசைக் கருவிகளின் ஒலி நம்மையெல்லாம் உவகைக் கடலில் திளைக்கச் செய்யும். மூர்த்திகள் ராஜசபை சேர்ந்தவுடன் அம்மை அப்பனிடத்து வாழ்த்துப் பெறுவர் தில்லைவாழந்தணர்கள் (மந்திரா க்ஷதை). பின்னர் உடனே ஏககால லட்சார்ச்சனை நடைபெறுகிறது.

பத்தாம் நாள்:

விடியற் காலை மூன்று மணிக்கெல்லாம் ஆயிரக்கால் மண்ட பத்தின் முன் முகப்பிலேயே அனைவரும் காணத்தக்க வகையில் அம்மைக்கும் அப்பனுக்கும் சீரிய முறையில் நீராட்டு நடைபெறும். பக்தர்கள் கொடுத்துதவிய பொருள்களைக் கொண்டு நடைபெறும் இந்நீராட்டினைக் கண்டோர் உள்ளங்கள் யாவும் மனக் கலக்கம்

நீங்கப் பெற்றுத் தண்மை அடைதலைக் காணலாம். பின்னர் மூர்த்திகளை உள்மண்டபத்தில் கொண்டு சேர்த்து நகைகள், மாலைகள் அணிவித்து காலை ஒன்பது மணிக்கு மேலாகப் பக்தர் களின் வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்வர். காலை பத்து மணிக்கு மேலாக பஞ்ச மூர்த்திகள் வாகனங்களில் எழுந்தருளி வீதிவலம் வந்து ஆயிரக்கால் மண்டபத்தின் கிழக்குப் பக்கத்தே உள்ள பந்தலில் வந்து வரிசையாக நிற்பதைக் காணலாம். அதன் பின்பு தீபாராதனை முடிவுற்றதும் சிவகாம சுந்தரி உடனுறையும் நடராசப் பெருமான் சச்சிதானந்த நடனம் செய்து கொண்டு, பக்தர்களின் உள்ளங்களில் பேரின்பத் தேனைப் பெய்து, வேண்டும் வரங்களை தந்தருளிச் சென்று திருச்சிற்றம்பலத்தை அடைவர்.

இவ்வாறு செல்லும் காட்சியே 'தரிசனம்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. பத்து நாள் விழாவில் மிக முக்கியமான நிகழ்ச்சி இதுவேயாம். இதனைப் பலரும் பல மணி நேரம் காத் திருந்து வழிபட்ட பின்பே மதிய உணவு உண்ணச் செல்வர். இக் காட்சியைச் சுமார் நண்பகல் ஒன்றரை மணிக்கெல்லாம் கண்டு களிக்கலாம். பெருமானையும் பெருமாட்டியையும் தாங்கிச் செல் வோர் உடல் துன்பம் நோக்காது ஆர்வ மிகுதியுடன் தாங்கிச் செல்லல் குறிப்பிடத்தக்கது. நடனப் பந்தலில் இறைவனும் இறைவியும் முன் பின்னாக மாறி நடம் செய்கின்ற காட்சியைக் கண்டு அனைவரும் திளைப்பர். மூர்த்தங்கள் நேராகத் தங்கள் இருப்பிடத்தை அடைய பின்னர் அரை மணி நேரத்திற்கெல்லாம் இருப்பிடத்தில் வைத்து தீபாராதனை செய்வர். இரவு யாக சாலை யில் பத்து நாட்களாக வைத்து வழிபாடியற்றிய கலசங்களில் உள்ள நீரைக் கொண்டு வந்து சபையில் உள்ள ஸ்படிகலிங்கத் திற்கு அபிடேகம் செய்தல் மரபு. பின்னர் சுப்பிரமணியர் முன்னிலையில் கொடியிறக்கம் நிகழ்ச்சி (அவரோஹணம்) நடை பெறும். அதன் பின்னர் சுப்பிரமணியர் அஸ்திரராஜர் ஆகிய இருவரும் வீதிவலம் செல்ல ஆசாரியர் திக்குகளுக்கு உணவுப் பலி யிட்டு விழாவை இனிது முடித்தல் வழக்கம்.

விடையாற்றி விழா :

திருவிழாவில் பங்கு பெற்ற மூர்த்திகள் ஒய்வு பெறும் விழாவை 'விடையாற்றி' என்பர். தில்லையில் பதினோரும் நாள் இரவு இவ்விழா நடைபெறுகிறது. ஆனிமாதத்தில் சோமாஸ் கந்தர், சிவானந்தவல்லி, சுப்பிரமணியர் மூவர் மட்டும் முறையே இந்திரவிமானம், பல்லக்குகளில் எழுந்தருளி வருவர். மார்கழி மாதத்தில் மேற்கூறியவாறு மூவர் வருவதுடன் விநாயகரும் சண்டிகேசுரரும் சகடை வண்டியில் வீதிவலம் வருதல் வழக்கத்

தில் உள்ளது. ஆனித் திருவிழாவில் விநயகரும் சண்டிகேசுரரும் வீதிவலம் வாராமைக் காரணம் அறியுமாறில்லை. இறைவன் களிப்புடன் வீதி வலம் வருவது போல் மக்கள் மிகக் களிப்புடன் அன்றிரவு முழுவதும் வீதிவலம் வருதலைக் காணலாம்.

மார்கழி விழாவின் சிறப்பு

மார்கழி மாத விழாக்கள் ஆனிமாத விழாக்கள் போன்று ஒத்திருப்பினும் மார்கழியில் சில விசேடமான நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. பாவை நோன்பிற்கு உரியமாதம் மார்கழியாகும். இம்மாதத்தில் 'மன்றுடைய பெருமானே பரம் பொருள்! என்று ணர்த்திய மாணிக்கவாசகப் பெருந்தகைக்கும் சேர்த்துத் திருவிழா நடைபெறுகிறது. மார்கழி மாதத் திருவிழாவின் பத்து நாட்களி லும் கூத்தன் முன் மாணிக்கவாசகரை நிறுத்தித் திருவெம்பாவை யின் ஒவ்வொரு பாடலையும் ஓதுவார் பாட தனித்தனியே தீபாராதனை நடைபெற்று வருகிறது. திருவிழா முடிந்து வரும் மகநட்சத்திரத்தில் மாணிக்க வாசகருக்குத் தனியே விடையாற்றி விழா நடைபெறும். திருவிழாவின் இடையில் வரும் துவாதசி திதியன்று, முன்னுள் வைகுண்டஏகாதசி இரவு வந்த பஞ்சமூர்த்தி கள் வந்த வாகனங்களுடன் அதிகாலையில் வீதி வலம். வருதலைக் காணவாம். ஏகாதசி விரதம் மேற்கொண்டவர்கள் துவாதசி யன்று இறைவழிபாடு செய்த பின்பே உணவு உண்பர்; அதன் காரணமாகவே இவ்வேற்பாடு அற்றை நாளில் ஏற்பட்டிருத்தல் வேண்டும். மார்கழி மாத விழாவில் மக்கள் மிகுதியும் கூடுவர். தமிழ் நாட்டார் மட்டுமன்றி மேனுட்டாரும் வருகைபுரிகின்றனர். குறிப்பாக இலங்கை நாட்டு பக்தர்கள் ஆண்டுதோறும் கலந்து கொண்டு மகிழ்வெய்திச் செல்கின்றனர். மார்கழித் திருவாதிரை விழாவை அனைவரும் காண்பதற்காக தென்ஆர்க்காடு மாவட்டம் முழுவதும் விடுமுறை விடப்படுகிறது. மார்கழி மாதத்தில் மட்டும் ஆருட்டு (தீர்த்தவாரி) விழா நடைபெற்றதாக அறிய முடிகிறது. இப்போது இந்நிகழ்ச்சி வழக்கத்திலில்லை.

அருள் பெருக

தில்லையில் நடைபெறும் தினப்பூசையையும் திருவிழாக்களை யும் கண்டு மகிழ்ந்து அருள்பெற வந்து முந்துமினே!

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்"

—குமரகுருபரர்

★

தில்லையில் தேரோட்டிய இலைவாணிகன்

மா. சந்திரமூர்த்தி

தில்லையில் விழாக் காலங்களில் வழக்கம் போல் ஓடும் தேர் ஒரு சமயம் ஓடவில்லை. தேர் ஓட வேண்டுமானல் நரபலியிட வேண்டுமென்றும் நரபலிக்கிரையாகுபவன் ஒருத்திக்கு ஒரு மகனுகவும், குற்றம் குறை அற்றவனுகவும் இருக்க வேண்டு மென்றும் அரசனிடம் ஊர்ப் பெரியோர்கள் முறையிட்டனர். மேற் குறித்த தகுதிகள் அனைத்தும் நிறைந்தவனுக வெற்றிலை வணிகன் ஒருவன் தேர்ந்தெடுக்கப் பட்டான். தேர்ந்தெடுக்கப் பட்ட வெற்றிலை வணிகன் தானே தன் தலையை வெட்டிக்கொள்ள ஒப்புக் கொண்டதோடு வெட்டிக் கொள்வதற்கு முன்பு ஒரு வேண்டுகோளும் விதித்தான்.

அதாவது தான் இறந்துபட்ட பின்பு தன் இனத்தவரே தில்லைக் கோயில் இடது சிறகில் குடியேற வேண்டுமென்றும் அப் படிக் குடியிருக்கும்போது இறப்பு ஏற்பட்டால் அக்கோயிலைச் சார்ந்தவர்களே அவனுக்கு இறுதி மரியாதையாக வாய்க்கரிசி, கோடித்துணி, வெற்றிலை, பாக்கு முதலியன கொடுத்து மரியாதை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து கீழ்க் கண்டவாறு தம்மைப் பலியிட்டுக் கொள்ளத் தயாராஞன். தன் காலின் பெரு விரலில் ஒரு வட்டமான வளையத்தை மாட்டிக் கொண்டு அதிலிருந்து கழுத்து வரை நீண்ட இரும்புச்சங்கிலியை இணைத்து சங்கிலி முனையில் துரட்டி என்ற கத்தியைக் கட்டி கழுத்தில் மாட்டிக் கொண்டு தாஞகத் தன் காலை உதைத்து தன் கழுத்தை அறுத்துக் கொண்டு தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்டான். பின்னர் தேர் ஓடியது.

★

நடராஜர் அபிஷேகங்கள்

ஓர் ஆண்டில் நடராஜப் பெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறும். நமக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆதலின், நடராஜப் பெருமானுக்கு ஓராண்டில் நிகழும் ஆறு அபிடேகங்களும் ஒரு நாளில் நடைபெறும் ஆறுகாலப் பூசையைக் குறிப்பன.

1. மார்கழி—திருவாதிரை (விடியல்)
2. மாசி—சுக்கிலபட்ச சதுர்த்தசி (காலசந்தி)
3. சித்திரை—திருவோணம் (உச்சிக் காலம்)

4. ஆனி—உத்திரம் (திருவந்திக்காப்பு)

5. ஆவணி—சுக்கிலபட்ச சதுர்த்தசி (இரண்டாம் காலம்)

6. புரட்டாசி—சுக்கிலபட்ச சதுர்த்தசி (அர்த்தயாமம்)

இந்த ஆறு அபிடேகங்களைக் குறிக்கும் வெண்பா வருமாறு ;

"சித்திரையில் ஓண முதல் சீரானி உத்தரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும்—பத்தி
மாசியரி கன்னிகருவு சதுர்த்தசி மன்னும்
ஈசர் அபி டேகதின மாம்"

★

ஆருத்ரா தரிசன மலர்

இந்நாளில் இதழ்கள் பொங்கல் மலர், தீபாவளி மலர், புத்தாண்டு மலர் என்ற பெயர்களில் சிறப்பு மலர்கள் வெளியிடுவது போல, 1903ஆம் ஆண்டில் விவேகசிந்தாமணி என்ற இதழ் ஆருத்ரா தரிசன மலர் என்னும் பெயரில் சிறப்பு மலர் வெளியிட்டது.

அதிலிருந்து சில பகுதிகளைத் தருகிறோம்:

உ

திருச்சிற்றம்பலம்

நடராஜ தர்பார்

தனுர்மாசம்

திருவாதிரை நக்ஷத்திர

ஆருத்ரா தரிசனராதன பத்திரம்

பரிசன்னிய

தில்லைத்தல பக்தஜன பரிபக்குவார்சினீயப் பிரசாதம்

தில் லைவாழந் தணர்தம் தேசிகனும் தாசன்பார்த்து
எல் லையிலாவானந்த நடம் பார்ப்பான் பாரினின்று
தில் லைவரும் பக்தர்கள் பரிபக்குவர் பலருமுய்யப் பரிவுகூர்ந்து
எல் லையிலாக் கரு ணைநிறை சிவகாமியமை ஏதமறவழங்குக
வென்றேவினளே.

''பிறந்த நாளும் திருவாதிரையும்''

ஒருவர் தப்புவதற்கரியதான ஒரு சங்கடத்தில் அல்லது ஆபத்தில் அகப் பட்டுக் கொண்டு செத்துப் பிழைத்ததாகச் சொல்லும்படி அவ்வளவு அரிதாய் அதினின்றும், மீட்சிப் பெற்றுத் தேறினல் அப்பொழுது அவரைப் பார்த்து ''நீ பிறந்த நாளும் திருவாதிரையும் இன்றைக்குத்தான் உனக்கு'' என்று அவரைச் சேர்ந்தவர்கள் முகமன் சொல்லித் தேற்றுவது உலக வழக்கம். இது ஆத்மார்த்த முணராது மறந்து சாமான்ய ஜனங் களுபயோகித்துவரும் பழமொழிகளில் ஒன்றும். ''பிறந்த நாள்'' என்று இங்கு குறிப்பது ''ஆன்மதரிசன''முண்டாய், ''புனர் ஜனனம்'' என்றும் ''தன் மயத்துவம்'' என்றும் சொல்லும் பிரத் தியகாத்மவுணர்ச்சி பிறந்த காலத்தையன்றி வேறல்ல. திருவா திரை நக்ஷத்திரத்தில் பகவான் பக்தர்களுக்குத் தரிசனமளிக்கிரு ரென்பது ஐதிகமாதலால், இந்த ஸ்வாத்மதரிசன உணர்ச்சியெப் பொழுது உண்டாளுலும் அது அந்தச் சீவன் ''புனர்ஜனன'' மெடுத்த (அதாவது ''ஊனெழிந்து உண்மையனுன'' நாளாம். அந்த நாளே அவனுக்குத் திருவாதிரை நாளுமாம். துவிஜர்கள் (இருபிறப்பாளர்) பூணூல் அணிந்து ப்ரஹ்மசாரி யாச்சிரமம் புகுவதின் அருத்தமும் இதுவேயாம். இந்த அருத்தப்படி சென்ற ஆருத்ரா தரிசனம் இந்த விவேக சிந்தாமணிக்குப் ''பிறந்த நாளும் திருவாதிரையும்'' ஆயிற்று என்பது சொல்வோம். ★

சிதம்பரசிவாலய பூஜா பத்தன்

இரணியவன்மனுர் :

சிதம்பராலயத்திலே செய்யற்பாலனவாகிய பூசை திருவிழா முதலியன செய்தற்பொருட்டு, வேதசிவாகமப் படியே பதஞ்சலி முனிவரைக் கொண்டு ஒரு பத்ததி செய்வித்து அதனை யானை மேலேற்றித் திருக்கோயிலை வலஞ்செய்வித்துக் கனகசபையி னுள்ளே பிரவேசிப்பித்தார். பூசை திருவிழா முதலியவற்றிற்கும் வேண்டும் நிபந்தங்கள் அமைத்தார். ★

விழாக்கள்

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

தில்லையில் திருவானித் திருநாளும், மார்கழித் திருவாதிரைத் திருநாளும் சிறப்பாகக் கோப்பெருஞ்சிங்கன் காலத்து முன்பிருந்தே நடைபெற்று வந்தன (Vol. IV. 223). மாசி மாதத்தில் ஒரு திருவிழா நடந்ததாகத் தெரிகிறது. அதில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பம் செய்யப்பெற்று வந்தது (Vol. IV. 223). ஏனைச் சிவதலங்களில் அம்மைக்கு ஆடிப்பூர விழா நடைபெற்று வருவதுபோல, இங்கு ஐப்பசிப் பூரவிழா நடைபெற்று வருகிறது (360—13). மாசிமக நட்சத்திரத்தன்று நடைபெறும் கடலாட்டு விழாவும் குறிப்பிடப்படுகின்றது. 'திருப்புதியது விழா' என்று ஒன்று காணப்படுகின்றது. அதில் அம்மைக்குப் புதிய ஆடை சாத்தியதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. திருப்புடவையீடு விழா என்றும் அது வழங்கப் பெற்றுப் பின் திருப்புதியதுவிழா என்று வந்திருக்கலாமோ என்று கருத இடமுண்டு (269—13). அன்றி, திருப்பாலி வளத் திருநாள் என்று ஒரு விழா குறிப்பிடப் பட்டுள்ளது. அது ஐப்பசிப்பூரத் திருநாளைக் குறிப்பதாகுமோ? என ஐயந்தருகிறது. இதில் அம்மை நீராடி, வெள்ளணி அணிந்து, பயறு முதலிய நவதானியங்களின் முளையைத் தன் மடியில் தரிக்கும் நாளாதலின் பாலிவளத் திருநாள் எனப்பட்டது போலும். (பாலி—நவதானியமுளை) (Vol. IV. 43), வசந்தத் திருநாள் என்பது பெருமான் வசந்த உற்சவம் கொண்டாடக் குலோத்துங்கன் தோப்புக்கு எழுந்தருளியதாகத் தெரிகிறது (Vol. IV. 43). திருக்கண் சாத்தும் திருநாளும், பெருமான் பரிவார நாயன்மார்களுக்கு, திருவருள் நோக்கம் செய்யும் திருநாளாகும் என அக்கல்வெட்டே குறிப்பிடுகிறது.

இந்த ஒன்பது விழாக்களையுமன்றி 'எதிரிலி சோழன் சிவபாதசேகரன் சித்தத்துணைப் பெருமாள் விழா' என ஒன்று குறிப்பிடப்படுகின்றது. சிவபாதசேகரன் என்பது முதல் ராஜராஜனுக்கு வழங்கிய பெயர். எதிரிலி என்பது முதற்குலோத்துங்கனுக்கு வழங்கிய பெயர். ஆகவே தன்னுட்களில் தன் குல முதல்வனாகிய இராஜராஜன் வரையில் இருந்த சோழமன்னர்கட்குச் சித்தத்துணையாகவே இருந்துவந்த நடராஜப் பெருமானுக்கு நடந்த பெருவிழாக்களையே இது குறிப்பிட்டதாகுமென ஊகிக்கலாம். இதுவன்றித் தைப்பூசத்தில் பாவாடையீட்டுப் பெரிய பூசவிழா ஒன்று நடத்தியதாகவும் தெரிகிறது.

★

நித்திய பூசைத் திருவிழாக்கள்

சிதம்பர சிவாலயத்தில் நாடோறும் நடராசருக்கு ஆறுகாலப் பூசைகள் நடந்து வருகின்றன. அவற்றின் பெயர் விவரங் களாவன:

காலை மணி	6—30	...	திருவனந்தல் (பால் நிவேத்தியம்)
பகல் மணி	8—30	...	முதற்காலம் (காலை சந்தி)
,,	10—30	...	இரண்டாங்காலம்
,,	12—00	...	உச்சிக்காலம்
இரவு மணி	6—00	...	சாயரக்ஷை
,,	8—00	...	இரண்டாங் காலம்
,,	10—00	...	அர்த்தசாமம்

இந்த ஆறு காலங்களிலும் சந்திரமௌலீசுரருக்கு அபிஷேக முதலியவைகளும் நடராசர் சந்நிதியில் சோடசோபசார தீபாரா தனைகளும் நடைபெறும்.

ஐப்பசி மாதத்துப் பூரத்திருவிழாவில் சிவகாமியம்மைக்கும். பங்குனி மாதத்து உத்திரத் திருவிழாவில் பாண்டிநாயகர் கோயில் சுப்பிரமணிய சுவாமிக்கும் கொடியேற்றம் முதலாகப் பத்துநாள் விழா நடைபெறுகிறது.

கார்த்திகை தீபம், தைப்பூசம் முதலிய வேறுசில நாட்களில் ஐம்பெருங் கடவுளர் திருவீதிக்கெழுந்தருளுவர். கந்தர்சட்டி விழாவில் சூரசம்மாரம் நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரதோடத் திலும் திருவாதிரையிலும் இடப வாகனத்தில் சுவாமி எழுந்தருளு வர். வேறு சில உற்சவங்களும் உண்டு. ★

ஐந்து தலங்கள்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்கள். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களாலானது என்பதைத் தொல்காப்பியர்,

> நிலந்தீ நீர்வளி விதம்போடு ஐந்துங்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின் — 1589

எனத் தொல்காப்பிய மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்பது பழமொழி.

ஐம்பூதங்களைப்பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அவையாவன :

மண்	— பிருதிவித்தலம்	— காஞ்சிபுரம்
நீர்	— அப்புத்தலம்	— திருவானைக்கா
தீ	— தேயுத்தலம்	— திருவண்ணுமலை
வளி	— வாயுத்தலம்	— திருக்காளத்தி
வான்	— ஆகாயத்தலம்	— சிதம்பரம்

> கடல்விடம் நுகர்ந்த காசினி லிங்கம்
> காஞ்சிமா நகருறை லிங்கம்
> காவிரி வடபால் வருதிரு ஆனைக்
> காவினில் அப்புலிங் கமதாம்
> வடதிசை அண்ணு மலையினில் லிங்கம்
> வன்னியின் வடிவுகா ளத்தி
> வாயுலிங் கமதாம் சிதம்பர லிங்கம்
> மாசில் ஆகாயலிங் கமதாம்.

— தில்லைக்கலம்பகம் 32.

சிதம்பரமும் காஞ்சியும்

க. வச்சிரவேல் முதலியார்

உலகம், உலக முதல்வனிடத்திலிருந்து அவனது விழைவாற்றலால் படைக்கப் பெற்றது என்பது மதிநுட்பம் நூலோடுடைய சான்றோர் துணிபு. அங்ஙனம், உள்ளது சிறக்கும் என்னும் சற்காரிய முறையில் படைக்கப்பட்ட உலகம், உடம்பும், கருவியும், இடமும், நுகர்ச்சிப் பொருளும் (தனுகரண புவன போகம்) என ஆக்கப்பெற்றிருந்து, கறையுள்ள அறிவும், முறைதழுவாச் செயலும் உள்ள உயிர்களின் அறிவைத் தூய்மை செய்து வளர்த்தற்குக் கருவியாகும். உலகப் படைப்பின் நோக்கம் முடிவில் எல்லா உயிர்களும் தம் பிறப்பு நிலையின் நீங்கி உலக முதல்வனை அணைந்து ஒன்றி இன்புறுவதே ஆகும். இவ்வுலகத்தில் இடமாக நின்று முதல்வனை அறிவிப்பனவே தலங்கள் எனச் சிறப்பிக்கப் பெறுவன. இத்தலங்களில் இறைவன் வடிவாகிய மூர்த்திகளும், அவன் அருள்வடிவாகிய தீர்த்தங்களும் உள்ளன. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு, வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்னும் தாயுமானவர் திருமொழியும், "சென்றுநீம் தீர்த்தங்கள் ஆடினீர்தாமே" என்னும் அப்பரடிகள் திருமொழியும் நினைத்தற்கு உரியவை.

இத்தலங்களுள் சிறந்தவை பலப்பல உள்ளன. இவற்றுள் பஞ்சபூதத் தலங்கள் என எடுத்துக்கொண்டால் சிதம்பரம் இறைவன் ஆகாய வடிவினனாய் உளன் என அறிவித்து, தோற்றமுறை பற்றி முன் நிற்கின்றது; காஞ்சி இறைவன் மண் வடிவாய் உளன் என்பதை அறிவித்துப் பிருதிவித் தலமாய் ஒடுக்கமுறை பற்றி முன்நிற்கின்றது. 'ஆரூர் பிறக்க முத்தி; தில்லை காண முத்தி; காசி இறக்க முத்தி' எனச் சிதம்பரம் எளிதில் முத்தி தரும் தலம் எனப் பேசப்படுவது; இடையருக் காஞ்சி இடையறு காசியினும் மேம்பட்டது எனப் பேசப்பட்டு, முத்தி நகர் ஏழுள் முதன்மையாம் கச்சி நகர் என அகில இந்திய நோக்கில் சிறப்பிக்கப் பெறுவது. காசியில் இறைவன் இடையே நீங்கி இருந்தான் என்பர். அன்றியும் முதலெழுத்து 'கா'; இறுதி 'சி' இடையில் உள்ள எழுத்து இல்லை.

பண்டைக்காலத்தில் எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாய்ச் சமய ஆய்வுக்கு நிலைக்களனாய் விளங்கியது காஞ்சி. இன்றும் சைவ வைணவ நூல் ஆராய்ச்சிக்கு நிலைக்களனாய் இருந்து வருவது. சிதம்பரமும் பொது (இறைவன் விளங்கும் மன்றம்) எனப்படுவதாய், இன்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பெற்று, எக்கலைக்கும்

முதன்மை உடையதாய் விளங்குவது. காஞ்சி பௌத்த சமயம் சார்ந்த சாக்கிய நாயனாரைச் சைவம் சார வைத்தது, திருக்குறிப்புத் தொண்டர் முதலிய அருளாளர்கள் தோன்றிய இடமாய்த் திகழ்கின்றது. சிதம்பரம் மாணிக்கவாசகரால் வாதம்புரிந்த பௌத்தர்கள் மூகராகவும், ஊமைப்பெண் பேசும் ஆற்றல் பெறவும் வைக்கப்பெற்ற அற்புதத் தலம் ஆகும்; திருநீலகண்ட நாயனார் முதலிய அருளாளர் அவதரித்து வாழ்ந்த இடம்.

இங்ஙனம் பலவகை ஒற்றுமையை உடையனவாய் இரண்டு பெரும் தலங்களும் இருப்பினும், இவை இரண்டும் இரண்டு பேருண்மைகளைச் சமய உலகிற்கு அறிவிப்பனவாய் உள்ளன என்பதை நாம் உணர்தல் வேண்டும். சமய உலகத்தில் தலைசிறந்த நூல்கள் வேத ஆகமங்கள் எனச் சான்றோர்களால் வைக்கப்பெற்று நிலவி வருகின்றன. அவற்றுள் வேதம் வேதத்தின் முடிவாகிய உபநிடதம் என்பவை பேருண்மைகளைப் பொதுவாக எடுத்துரைக்கும் நூல்கள் எனவும், ஆகமங்களின் சரியை கிரியாயோக பாதங்கள் வேதங்களின் ஒழிபாகிய சிவதருமங்களை விளக்குவன எனவும், ஆகம ஞானபாதம் உபநிடதங்களின் பொருள் விளக்கம் செய்வன எனவும் கொள்ளப்படுகின்றன. இக் கருத்தை முதற்கண் தமிழ்மொழியில் எடுத்தியம்பிய பெருமை திருமூலருக்கு உண்டு. அவர் "வேத மோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் - ஓதும் பொதுவும் சிறப்பு மென்று உள்ளன - நாதன் உரையவை; - நாடில் இரண்டந்தம் பேதமதென்பர், பெரியோர்க்கு அபேதமே" என அருளிச் செய்துள்ளனர். இக்கருத்தைப் பிரம்ம சூத்திரபாடியத்தில் நீலகண்ட சிவாசாரியரும், பெரிய புராணத்தில் திருப்பாசுர விரிவுரையில் சேக்கிழாரடிகளும், சிவஞான சுவாமிகளும் விளக்கி உள்ளனர். வேதாந்தம் எனப்படும் உபநிடதங்களில் முதல்வனை தியானம் செய்யும் முறைகள் வித்தைகள் என்னும் பெயரால் பல உள்ளன. அவற்றுள் தலை சிறந்த வித்தை தகரவித்தை எனப்படும். இது மாநாரயண உபநிடதத்திலும், சாந்தோக்கியத்திலும், பிருகத் ஆரணியகத்திலும், கைவல்லியகத்திலும் சிறப்பாக எடுத்தோதப்படுகிறது. உடம்பின் நடுஇடமாக உள்ளது நெஞ்சக்கமலம். அந்த நெஞ்சக்கமலத்தில் பரம ஆகாச வடிவமாய் இறைவன் உளன்; அவனை அங்கு உள்ள சோதிச்சுடரின் உச்சியில் இருப்பவனாகத் தியானித்தல் வேண்டும் என்பதுவே இது. இங்கு உடம்பில் உள்ளதாகச் சொல்லப்படும் ஆகாசம் அண்டத்திலும் உள்ளது. பிண்டமாகிய உடம்பில் இடைக்கும் பிங்கலைக்கும் நடுவில் உள்ள சுழுமுனை நாடியும், அண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் இடையில் உள்ள தில்லைச் சிற்றம்பலமும் கருணாநிதியாகிய சிவபிரான் ஆனந்த நடனம் செய்யும் இடம் என்பதைச் சிதம்பரம் குறிக்கிறது. இந்த நடனம் ஐந்

தொழில் (பஞ்ச கிருத்திய) நடனம் எனப் பேசப்பட்டுச் சித்தாந்த நூல்களால் பல வகையில் விளக்கப்படுகின்றது. திருமந்திரம் இந் நடனக் காட்சியில் விளையும் பேரின்பத்தை, 'புளிக்கண்டவர்க்குப் புனலூறுமாபோல் - களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம் - துளிர்க்கும் அருட்கண்ணர் சோர்நெஞ்சுருக்கும் - ஒளிக்குள் ஆனந்தத்து அமுதூறும் உள்ளத்தே' என்னும் பாட்டால் விளக்கு கின்றது. மாணிக்கவாசகரும், "இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய் - அந்தரமே திரிந்துபோய் ஆழ் நகரில் வீழ்வேற்குச் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே" எனக் கூறுகின்றார்.

வேதத்தின் முதன்மையான மந்திரங்கள் இருக்கு வேதம், பத்தாம் மண்டிலம் 129ம் சூக்தம் 6, 7 என்பனவாகக் கொடுக்கப் பட்டுள்ளன. அவை, முறையே, "தேவர்கள் படைப்பின் பின்தான் உளராயினர்; அங்ஙனமாயின் படைப்பு எங்கிருந்து உளதாயிற்று என யார் அறிவார்?" என்னும் வினாவும், "பரம வியோமத்தில் உலக அதிபதியாய் யார் உள்ளாரோ அவர்தாம் அறிவரி; பிறர் அறியார்" என்னும் விடையாகவும் வந்துள்ளன. அம்மந்திரத்தை அடியொற் றியே தகரவித்தை எழுந்துள்ளது. இக்கருத்தைக் குறிக்கவே சேக் கிழார் சுவாமிகள், தில்லைவாழ் அந்தணர் புராணத்தில் இரண்டாவது பாட்டாக, பின்வரும் பாடலை வைத்துள்ளார்:

" கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புற நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி "

இப்பாட்டில் பரவியோமம் என்றது இருக்கு வேதத்தில் கூறப் பட்ட பரவியோமத்தையே குறிப்பதாகும். வியோமம் என்பது ஆகாசம்; அஃது அங்கு அறிவில்லதாகிய பூத ஆகாசத்தைக் குறிக்காமல், சிதாகாசம் எனப்படும் திருவருளாகிய ஞான ஆகாசத் தையே குறிக்கும் என்னும் கருத்துத் தோன்றச் சித்து (ஞானம்) என்னும் அடையைச் சேர்த்து, சித்பர வியோமம் எனவும், அது தமிழ்மொழியில் திருச்சிற்றம்பலம் எனப்படும் என்பார். சித்பரவியோ மமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று' எனவும் அமைத்துள்ள அருமை சிந்தித்து வியந்து போற்றுதற்கு உரியது. இத்தகைய வேதப் பயனாக இருக்கின்ற சித்தாந்தப் பொருளை விளக்கி நிற்பதே சிதம்பரம் ஆகும். இனி, வேதாந்தப் பொருளை ஒழுகலாற்றின் மூலமாக அனுபவமாய்ப் பெறுதற்குரிய வாயில்களைக் காட்டுவதே சிவாகமம் ஆகும். சிவாகமப் பயன் சிவபூஜையே ஆகும், சிவபூஜையை அம்மையே செய்துசெய்து

உலகு உயிர்களுக்கு எல்லாம் உணர்த்திய பெருமையை உடையது காஞ்சித்தலம். இதனையும் சேக்கிழார் பெருமானே திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் பின்வருமாறு விளக்கியிருக்கின்றார்:

"தெள்ளுவாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ளவாறு கேட்டருளினள் உலகைஆளுடையாள்"

"எண்ணிலாகமம்இயம்பிய விறைவர், தாம்விரும்பும்
உண்மையாவது பூசனையென வுரைத்தருள,
அண்ணலார்தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணினல்ல வளாயின பெருந்தவக் கொழுந்து"

இவ்விரு கருத்துக்களையும் தெளிய உணர்ந்த மாதவச் சிவஞான முனிவர் தாம் அருளிச் செய்த காஞ்சிப் புராணத்தில் கடவுள் வாழ்த்தாகச் சபாநாயகரையே முன்னர்க் குறித்துள்ளனர். பின்னர்த்தான் திருவேகம்பநாதர், காமாட்சியம்மையார் துதிகள் வருகின்றன. காஞ்சிப்புராணத்தில், முதற்கண் அவர் செய்துள்ள கடவுள் வாழ்த்து, பின்வருமாறு:

'சங்கேந்து மலர்ச்சுடங்கைப் புக்கேளும் மறைக்கோவுந்
தழல்கால்சூலம், அங்கேந்தும் அம்மானும் தத்த மது தெ ல்
தலைநின்றுற்றச் செய்தோர், பங்கேந்தும் பெருமாட்டி விழிக ிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்—கொங்கேந்து மணிமன்றுள்
குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்"

சங்கை ஏந்திய திருமாலும், வேதனும், சூலத்தை ஏந்திய உருத்திரமூர்த்தியும் தங்களுக்குரிய காத்தல், படைத்தல், அழித்தல் என்னும் செயல்களைச் செய்யுமாறு உள்நின்று இயக்கி, சிவகாமி அம்மை கண்டுகளிக்கவும், வியாக்கிரபாதர், பதஞ்சலியார் என்னும் இரு முனிவர் பணிந்து போற்றவும், நறுமணம் கமழும் மணிமன்றுள் நின்று நடித்தருளும் முதல்வனை உளங்கொண்டு வாழ்வோமாக என்பது இப்பாட்டின் பொருள். இப்புராணம் அரங்கேற்றும்போது அவையினர் திருவேகம்பநாதர் துதியை முன்வையாது கூத்தப் பெருமான் துதியை முன்வைத்தது சரியாகுமா என ஐயுற்றார் எனவும், அப்போது சிவஞான சுவாமிகளின் மாணாக்கராகிய கச்சியப்ப முனிவர் தல ஓதுவாரைத் திருவேகம்பத் தேவாரம் ஓதும்படி ஆணையிட்டார் எனவும், அவர் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லித் தேவாரத்தை தொடங்கினர் எனவும், திருவேகம்பநாதர் தேவாரத்திற்குத் தொடக்கத்தில் ஸ்ரீ பிருதிவி அம்பலம் எனத் தொடங்காது திருச்சிற்றம்பலம் எனத் தொடங்குதல் பொருந்துமோ என வினவி ஐயம்அறுத்தார் எனவும் ஒரு வரலாறு உள்ளது.

இன்னும் காஞ்சிப்புராணத்தில் வேள்விச்சாலையைப் பற்றிக் கூறும்போது தகர வித்தையைப்பற்றிச் சிவஞான சுவாமிகள் குறிப்பிடுகின்றார். வேள்விச்சாலையில் எழுகின்ற சுடர்ச் சிகையில் முதல்வனை ஆவாகித்து அவிசு முதலியவற்றைத் தருதல் இயல்பு. வேள்விச் சாலையை நாராயணனுடைய உடம்பாகவும், அதில் நிறைந்துள்ள புகைப்படலத்தை அவர்தம் நீலமேக உருவமாகவும், தழற்பிழம்பை இதயச்சுடராகவும், அதன் உச்சியில் விளங்கும் பரமான்மாவைச் சிவபெருமானாகவும் சுவாமிகள் குறிக்கின்றார்.

''சேந்தபொற் குண்டத் தோங்குஞ் சிகைத்தழல் மிசைஏ கம்ப
வேந்தைஆ வாகிதிதேத்தும் புகைபொதி வேள்விச்சாலை
ஏய்ந்தகீர்த் தகரவித்தை முறைப்படி இதயக் கஞ்சப்
பூந்தழற் சிகைமேல் ஈசற்போற்றுமா யவனை ஒக்கும்''

என்பது பாட்டு. மகாநாராயண உபநிடத்தில் கூறப்படும் தகர வித்தையில் உபாசிக்கப்படுவோன் சிவபிரானே எனவும், உபாசகனாக உள்ள திருமாலாகிய சிறந்த புருடனே அவ்வுபநிடத்தின் இருடி ஆதலால், அவர் பெயரால் அம்மகோபநிடதம் வழங்கி வருகிறது எனவும் அரதத்தர் சுருதி சூக்தி மாலையில் விளக்கியுள்ளார். இக்கருத்துத் திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயில் அமைப்பாலும் விளக்கப்படுகிறது. இங்ஙனம் சிதம்பரமும் காஞ்சியும் வேதஆகமம் என்னும் முதனூல்களைப்போல, ஒன்றன் கருத்தை மற்றொன்று விளக்குவன ஆக அமைந்துள்ளன.

தில்லையும் திருவண்ணாமலையும்

'சோமலெ'

இவ்விரு தலங்களுக்கும் ஏராளமான தொடர்புகள் உண்டு. இரண்டுமே ஐம்பூதத் தலங்கள். இரண்டுமே தேவாரத்திலும் திருவாசகத்திலும் சிறப்பாகப் போற்றப்பெறுகின்றன. இரண்டுமே புகழ்பெற்ற புராணங்களை உடையன. அருள் வாய்ந்த ஞானச் செல்வர் பலர் தங்கித் தவம் புரிந்து அருள் நெறி பரப்பியுள்ள தலங்களில் இவ்விரண்டும் தலைசிறந்தன.

தமிழ்நாட்டிலுள்ள சிவ தலங்களிலெல்லாம் இறைவனின் கருவறையின் பின்புறத்தில் லிங்கோத்ப மூர்த்தி அமைந்து திருவண்ணுமலையையும், பிராகாரத்தில் தெற்கு நோக்கி நடராசப் பெருமான் திருவுருவம் அமைந்து சிதம்பரத்தையும் நினைவூட்டு கின்றன.

திருவண்ணுமலையில் திருக்கார்த்திகை சிறப்பான விழா. தில்லையில் திருவாதிரை சிறப்பான விழா. திருவண்ணுமலையில் நடைபெறும் தீப தரிசனம் முடிந்து தீபச் சுடர் எடுத்து வழங்குவது திருவாதிரைத் திருநாளில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணுமலையில் ஈசான்ய திக்கில் திருமடம் ஏற்படுத்திக் கொண்ட ஸ்ரீஈசான்யஞான தேசிகர், குகை நமச்சிவாயர், வடலூர் வள்ளலாராகிய சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசர் ஆகிய ஞானியரெல்லாம் திருவண்ணுமலையைப் போலத் தில்லையுடனும் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது அவர்களுடைய வரலாற்ருல் அறியப்பெறும்.

தில்லைப் பெருங்கோயில் திருப்பணிகளைப் போலச் சில நூற் ருண்டுகளாகத் திருவண்ணுமலைத் திருப்பணிகளிலும் ஈடுபட்டிருக்கும் நகரத்தார்கள், மூலட்டான ஈசுவரர் கோயிலைப் புதுப்பித்தபோது, அங்கு ஈசான்ய திக்கில் அண்ணுமலையார்க்கு ஓர் உட்கோயில் அமைத்துள்ளனர் இக்கோயிலும், இப்போது [1979] மூலட்டான ஈசுவரர் திருப்பணியில் புதுப் பொலிவு பெற்றுள்ளது.

சிதம்பரம் கோயில் கல்வெட்டு ஒன்று கி.பி. 1254-இல் கோப்பெருஞ்சிங்கன் 11 ஆம் ஆட்சியாண்டில்ஏற்பட்டது. வடக்கில் மடம் என்ற ஒரு மடம் திருவண்ணுமலையில் ஏற்பட்டதையும் தைப் பூசநாளில் நடராசப் பெருமானுக்கு நைவேத்யம் வழங்க அந்த மடத் திற்குக் கோப்பெருஞ்சிங்கன் முக்கால் வேலியும் ஒரு மாவும் பரப்பள வுள்ள நிலத்தை வழங்கிய செய்தியையும் இக்கல்வெட்டுத் தெரிவிக் கிறது.

திருவண்ணுமலைக்கு 65 கி.மீ. அப்பாலுள்ள மேல்சித்தாமூரிலும் தில்லைக்கு 42 கி.மீ. தொலைவிலுள்ள திருப்பாதிரிப்புலியூரிலும் கால் கொண்டிருந்த சமணம் இவ்விரு தலங்களையும் நெருங்கவில்லை.

திருவண்ணுமலை ஒய்சாள அரசர்கள் முடிசூட்டிக்கொள்ளும் தலைநகராயும், தில்லை சோழ அரசர்கள் முடிசூட்டிக்கொள்ளும் தலை நகராயும் இருந்தன.

தில்லையும் திருவாரூரும்

சோ. சிவபாதசுந்தரம்

எல்லாக் கோயில்களிலும் இறைவன் எழுந்தருளியிருக்கும் கருப்பக்கிருகத்தை மூலஸ்தானம் என்பர். ஆனால் சிதம்பரத்திலும் திருவாரூரிலும் லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தனிக் கோயிலை திருமூலட்டானம் என்ற சிறப்புப் பெயரால் அழைப்பர். இவ்விரு தலங்களிலும் முக்கிய வழிபாட்டுக்கு உரியவர்கள் சிதம்பரத்தில் நடராஜரும் திருவாரூரில் தியாகராஜரும். ஆகையால் மூலவராக, அருவமாகிய லிங்க வடிவத்தில் இருக்கும் கோயிலை, திருமூலட்டானம் என வழங்குகின்றனர்.

சிதம்பரமும் திருவாரூரும் நமது தமிழ்நாட்டின் சரித்திரங்களுக்கு வேண்டிய மிக முக்கியமான கல்வெட்டுச் சாசனங்களைக் காப்பாற்றி வந்திருக்கின்றன. சோழமன்னன் ராஜராஜன் காலத்திலிருந்து பல அரசர்கள் ஆட்சியில் அவ்வப்போது நிகழ்ந்த சில தருமங்கள், கட்டளைகள், வழக்குகள், தீர்ப்புக்கள், ஆணைகள் என்பன இந்தச் சாசனங்களில் அழியாத கல்லெழுத்துக்களாகக் காணப்படுகின்றன.

— வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள
'சேக்கிழார் அடிச்சுவட்டில்' என்ற நூலில்

பேராசிரியர் வெள்ளை வாரணர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை [இந்நூலில் பக்கம் 107]யிலும் தில்லைக்கும் திருவாரூர்க்கும் உள்ள தொடர்புகள் குறிக்கப்பெற்றுள்ளன.

ஆரூர் பிறக்க முத்தி
தில்லை காண முத்தி

பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும்

டாக்டர் அவ்வை நடராசன்

பொன்னம்பலம்

“ கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புற நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி ”

— சேக்கிழார்.

இறைவனுடைய திருக்கோலங்களிலே பொற்புடன் நடஞ்செய் கின்ற அற்புதக் கோலமும் ஒன்ருகும். அஃது இன்ப நடனம் - ஆனந்தக் கூத்து. அது அறிவிலே நிகழும் ஆனந்தம். அதனை ஞான ஆனந்தக் கூத்து என்பர். ‘கருதரிய சிற்சபையில் ஆனந்த நிமிர்த்தடும் கருணைகரக் கடவுளே’ என்கிருர் தாயுமானவர்.

“ அண்ண லார்தமக் களித்தமெய்ஞ்
ஞானமே யானஅம் பலமுந்தம்
உள்நி றைந்தஞா னத்தெழும்
ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும்
பிட்டெழும் களிப்பொடும் கடற்காழிப்
புண்ணி யக்கொழுத் தனையவர்
போற்றுவார் புனிதரா டியபொற்பு ”

என்பது சேக்கிழார் திருவாக்கு. இந்த ஆனந்தக்கூத்து அனைத் துயிர்களுக்கும் ஆனந்தம் அளிப்பது. ‘காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவிற்ற கண்ணிலாக் குழவியைப் போல்’ கிடந்த உயிர்களை, அந்தக் காரிருளினின்றும் எடுப்பதே எடுத்த பொற் பாதத்தின் எழில். அஃது ஐந்தெழுத்தின் திருவுருவம்; ஐந்தொழிலின் வடிவம்.

ஆனந்தக்கூத்து நிகழும் இடம் திருச்சிற்றம்பலம். திருச்சிற்றம் பலம் என்பது சிதம்பரமே. சித் அம்பரம் என்ருல் அறிவொளி என்று பொருள்படும். ஆம்; அது ஆகாயத் தலம். ஆகாயம் ஐம்பூதங் களில் பெரியது; அனைத்திலும் நுண்ணியது; அனைத்தின் உள்ளும்

புறமும் கலந்து நிற்பது. இந்த நுட்பம் கருதியே அதனைச் சிற்றம்பலம் என்றனர். இவ்விடத்துச் சிறுமை நுண்மை கருதியது. இவ்வுண்மை கருதியே, 'புலியூர்ச் சிற்றம்பலத்தே புக்கார்' என்பார் சேக்கிழார். மிக நுண்ணிய அறிவுவெளிக்குள் இறைவன் கலந்து விளங்குகின்றான் என்பது கருத்து.

அயர்வின்றி ஆடிக்கொண்டிருக்கும் அணுவும் அவனன்றி அசையாது. ஆதலின் அவனுடைய திருக்கோலமும் ஆடுகின்ற திருக்கோலமாகிறது. அத்தலத்துள் இன்று ஆடவல்லான் திருக்காட்சியே முதன்மை பெற்றுள்ளது. அந்தக் காட்சியின் மாட்சியே,

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே "

என அப்பரடிகள் உள்ளத்தெழும் உணர்வின்மூலம் பாடச் செய்கின்றது.

இறைவனது உருவத் திருமேனியைப் பாடிய தலமும் இது. திருவாரூர், திருவீழிமிழலைத் தேவாரங்களிலும் உருவத் திருமேனிகள் குறிக்கப்பெறும்.

தத்துவங்களை விடுவித்துக் கலைவகையால் காணும்போதும் அது ஒரு கவின் கலை. உள்ளக்களிப்பின் மய்ப்பொடுகள் ஓங்கி வளர்ந்த நிலை. 'ஆடுகின்றிலை கூத்து' எனவும், 'தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி' எனவும், அருளாசிரியர்கள் திருவருளின் பத்தில் திளைத்தவர்கள் ஆடிப்பாடுதலைச் சுட்டிக் காட்டினர். இந்த ஆடற்கலைக்கே முதல்வன் நம் இறைவன்.

பரத சாத்திரத்தில் சிவபெருமான் ஒருவனுக்கே சிரங்குவித்து வணக்கஞ் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஏனோர்க்கு நெற்றிக்கு நேரே கரங்குவித்தல் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

இறைவன் ஆடும்போது அமிழ்த தாரைகள் சிந்தவே மாலையாக அணிந்திருந்த சிரங்கள் பாட இசை பிறந்ததென்பர். ஆடலும் பாடலும் பயின்றவர்கள் அம்பலத்தில் அரங்கேற்றம் செய்வது மரபு.

" திருநிலைச் சேவடிச் சிலம்பு வாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற்ப படுபறை யார்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்

பாடகம் பதையாது சூடகம் துளங்காது
மேகலை ஒலியாது மென்முலை அசையாது
வார்குழை யாடாது மணக்குழல் அவிழாது
உமையவள் ஒருதிற னாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதத்''

திணைச் சிலப்பதிகாரம் சிறப்பிக்கின்றது.

'' மண்ணுமணி முழவதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவிஆன
கண்ணுதல் வானவன்கனகச் சடைவிரித்தா
வெனவிரித்த கதிர்களெல்லாம்''

எனக் கம்பரும் ஆடற்காட்சியின் அற்புதத்தை நினைவு கூர்கிறார்.

இத்திருக்கூத்து சிதம்பரத்துக்கே உரியதென்பதற்குப் பிறிதொரு காரணமும் உண்டு. சிதம்பரம் இதயக்கோயில். இதயத்தில் இடைவிடாது நிகழும் அருள் அசைவினை இத்திருக்கோலம் நினைவூட்டுகிறது.

வெள்ளியம்பலம்

''வென்றுளே புரன்க ளைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறும்
சென்றுளே அமுத மூற்றும் திருவருள் போற்றி ஏற்றுக்
குன்றுளே இருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடும் மறைச்சிலம் படிகள் போற்றி''

— பரஞ்சோதி முனிவர்

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் நடராசருக்குப் பஞ்ச சபைகள் உள்ளன. முதற் பிராகாரத்தில் கனகசபையும். இரத்தின சபையும், வெள்ளியம் பலத்தில் இரஜதசபையும், நூற்றுக்கால் மண்டபத்தில் தேவசபையும், ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திர சபையும் உள்ளன.

நடராசர் நடத்தும் தாண்டவத்தால் உலகம் இன்பம்காண்கிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களும் ஆடல் இன்பத்தில் பிறந்தன.

'' தோற்றம் முடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தோடு நாடு ''

— உண்மைவிளக்கம் — 35

பெருமாள் டமருகம் ஏந்திய திருக்கையின் மூலம் படைத்தல் தொழிலையும், அமைந்த திருக்கையின் மூலம் காத்தல் தொழிலையும், தீ ஏந்திய திருக்கையின் மூலம் அழித்தல் தொழிலையும், ஊன்றிய திருப்பாதத்தின் மூலம் மறைத்தல் தொழிலையும், தூக்கிய திருவடியின் மூலம் அருளல் தொழிலையும் புரிகின்றார்.

வெள்ளியம்பலம்—அதில் ஒரு மாணிக்கப்பீடம். ஞானப்பேரொளி வடிவினனான சோமசுந்தரக் கடவுள் அம்பலவாணனாகத் தோன்றியது எப்படி? பூதகணங்கள் மொந்தையையும், தண்ணுமையையும் முழக்கின. திருநந்திதேவர் முழவம் தட்டினார். விட்டுணு இடக்கை யார்த்தார். தும்புரு நாரதர் இசை மீட்டினர். பஞ்ச துந்துபிகள் முழங்கின. சரசுவதி சுருதி கூட்டினாள். பிரமன் பாடிக் கொண்டே இசைமழை பொழிந்தார். விண்ணிலுள்ள தேவர்கள் கற்பக மலர்களைச் சொரிந்தனர்.

நடனத் தோற்றம்

சிவ பெருமான் முயலகன்மேல் வலப்பாதத்தை ஊன்றி, இடப் பாதத்தைத் தூக்கிச் சற்றே வளைந்து ஆடலானார். பத்துத் திருக் கரங்களிலும் - வலக் கரங்கள் ஐந்தில் தாக்கும் கரத்தில் சூலம், மற்றவற்றில் தமருகம், பாணம், வாள், மழு என்பனவும்; இடக்கரங்கள் ஐந்தில் வரத ஹஸ்தத்தில் பாம்பும், ஏனையவற்றில் தீ, வில், கேடகம், தண்டு என்பவைகளும் ஏந்தினார். கழுத்தில் திருநீல கண்டமும், திருச்செவிகளில் சங்க குண்டலங்களும் இலங்கின; செஞ்சடையில் கங்கையும் பிறைச்சந்திரனும் பிறங்கின. திருவெண்ணீறணிந்த திருமேனி; ராகயக்ரோபவீதம் [பூணூல்]; மூன்று திருக்கண்கள்; உமாதேவியார் ஒருபுறம் ஒதுங்கி நிற்க அவள் மேல் வைத்த திருநோக்கமும் திருநகையும் விளங்கின; அதிர வீசியாடினார் - யாருக்காக?

திருக்கலியாண விழாவைத் தரிசிக்க வந்த பதஞ்சலி, வியாக்கிரபாதர் இருவரும், சிதம்பரத்தில் நாள்தோறும் இறைவனது திருத் தரிசனம் கண்டாலல்லது உண்ணமாட்டார்கள். அன்றும் அவ்வாறே தரிசித்த பின்னர்தான் உண்போம் என்று பிரார்த்தித்தனர். இவர்கட்காகவே மேற்கூறிய 'பரமானந்தத் தாண்டவம்' ஆடினார் சோமசுந்தரக் கடவுள். அவர்கள் வேண்டுகோளின்படி இன்றும் அவ்வாறே நின்று ஆடி அருள்பாலித்து வருகிறார்.

பாண்டியன் கேட்ட வரம்

ஒரு காலத்தில் இராசசேகர பாண்டியன் மதுரையை ஆண்டு கொண்டிருந்தான். இவன் கரிகாற்பெருவளத்தான் காலத்தவன்,

ஒரு சமயம் சோழ வேந்தனின் அவைக்களப் புலவன் ஒருவன் பாண்டியனின் அவைக்கு வந்து வேந்தனோடு உரையாடலானான். அப்போது அவன் பாண்டியனை நோக்கி, 'உமக்குத் தெரியாத பரதக்கலை எம்வேந்தனுக்குத் தெரியும்' எனப் பெருமிதத்தோடு கூறினான். மானம் மேலிட்ட பாண்டியன் அன்று முதலே தக்க ஆசிரியரைக் கொண்டு பரதக்கலையைப் பயில ஆரம்பித்தான்.

பரத சாத்திரத்தில் 'சிவபெருமான் ஒருவனுக்குத்தான் சிரசின் மேல் கை குவித்து அஞ்சலி செலுத்த வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது. அவனே பரத பாத்திரத்திற்கு நாயகன் ஆதலாலும் முழுமுதற் கடவுள் ஆதலாலும் என்க. மற்றையோருக்கு நெற்றிக்கு நேரே அஞ்சலி செலுத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

இராசசேகரன் பரதம் பயிலுங்கால் தன் கால்கள் நோவுறுவதை அறிந்தான். இத்தகைய வருத்தம் வெள்ளியம்பலத்தில் இடையறுது கூத்தாடும் பெருமானுக்கும் உண்டல்லவோ என்னும் எண்ணம் எழவும் மனம் இரங்கலானான்.

அன்று சிவராத்திரி. இரவு நான்கு சாமமும் விசேட பூசை நிகழ்வித்தான். பின்னர்ப் பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று கண்ணீர் சோரச் சிரசின் மீது கரங்குவித்து, 'எம் பெருமானே! ஊன்றிய திருவடியை எடுத்து வீசித் தூக்கிய திருவடியைக் கீழே ஊன்றி, இன்றைக்கு அடியேன் காணும்படி கால்மாறியாடித் தமியேனுடைய வருத்தம் முழுவதையும் தீர்த்தருள வேண்டும். இல்லையேல் இறந்துபடுவேன்' 'என்று கூறித் தன் உடைவாளை நாட்டி அதன்மேல் குப்புற விழப் புகுந்தான். அடியார்க் கெளியவராகிய சிவபெருமான் தம் அன்பன் விரும்பியவாறே கால் மாறியாடிக் காட்சி தந்தார். இராசசேகரன் மீண்டும் வணங்கி, 'இந்தத் திருநடனம் யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இப்படியே ஆடியருளல் வேண்டும் என்று வேண்டினான். அவ்வாறே பெருமான் அருள் புரிந்து இன்றும் கால்மாறியாடும் கோலத்தில் காட்சி தந்தருளுகின்றார்.

பரமானந்த நடனம்

பத்துத் திருக்கைகளுடன் அம்பலவாணன் நடனம் ஆடுங் காட்சி மதுரையிலுள்ள வெள்ளியம்பலம் தவிர வேறு எங்கணும் காணற்கியலாது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்களுள் 'பரமானந்தத் தாண்டவம்' இதுவே யாகும். இதனைச் சொக்கத் தாண்டவம் என்றும் கூறுவர்.

இறைவன் உயிர்களை ஆட்டுவிக்கும் நட்டுவர். அவர் அசைய வில்லையானுல் அண்ட சராசரங்களும் அசையா. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே' என்னும் அப்பர் தேவாரத்தின் உண்மைப் பொருளை இந்த நடனம் உணர்த்துகின்றது.

''காட்ட வனல் போல் கலந்துயிரை எல்லாம்
ஆட்டுமொரு நட்டுவன்எம் அண்ணல்என எண்ணுய்''

என்பது வாதவூரடிகள் புராணம். எனவே ஆடும் கடவுளே பரத சாத்திரத்துக்குத் தலைவர். அவரே பரதன் எனப்படும் இறைவர். இதனுல் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரியும் நமது தேசத்திற்கும் 'பரதகண்டம்' என்னும் பெயர் உண்டாயிற்று.

இத் திருதாண்டவத்தின் அற்புதத்தை,

''முதிருநீர்ச் சடைமுடி முதல்வநீ முழங்கழல்
அதிரவீசி யாடுவாய் அழகன் நீ புயங்கன்நீ
மதுரன் நீ மணுளன் நீ மதுரையால வாயிலாய்
சதுரன் நீ சதுர்முகன் கபாலம்ஏத்து சம்புவே''

என்னும் தேவாரத்தின் மூலம் திருஞானசம்பந்தர் பாடியிருக்கிருர்.

சிலம்பில் வெள்ளியம்பலம்

சங்கம் மருவிய நூலாகிய சிலப்பதிகாரம் தோன்றிய காலத் திலேயே, மதுரையில் வெள்ளியம்பலம் இருந்ததற்கான தெளிவான சான்று கிடைத்திருக்கிறது. அதாவது மதுரை எரிந்த அன்று இரவு மணிமேகலையின் ஆசிரியராகிய சாத்தனுர் வெள்ளியம்பலத்தில் இரவுப் பொழுதைக் கழித்தார்.

'' அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளி யம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்''

என்பது சாத்தனுர் வாக்கு. மதுரை எரியும்போது பௌத்த சமயத் தினரான சாத்தனுர்க்கும் அடைக்கலம் தந்த பெருமை சைவசமயத் துக்குரிய வெள்ளியம்பலத்துக்கு உண்டு எனின் அக்காலத்திருந்த சமயப் பொறையும், அனலேந்தியாடும் அம்பலக்கூத்தனின் இடமாகிய வெள்ளியம்பலத்தினை, மதுரையை எரித்த அங்கியங் கடவுளால் அணுக முடியவில்லை என்னும் உண்மையும் விளங்கு கின்றன.

தில்லையும் திருவாலங்காடும்

'சோமலெ'

தொண்டை நாட்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில், திருத்தணிகை வட்டத்தில் [அறக்கோணத்திற்கு அருகே] திருவாலங்காடு உளது. இது நடராசருக்கு உரிய சிறப்புத் தலங்கள் ஐந்தனுள் ஒன்று. இங்குள்ள சபை இரத்தின சபை எனப் பெறும். இறைவன் நடராசர் என்றும் இரத்தின சபாபதி என்றும் பெயர் பெற்றுள்ளார்.

இங்கும் நடராசர் கோயில் விமானம் பொன் வேயப்பெற்றுள்ளது. காளியுடன் நடராசர் இங்கும் நடனமாடியதாகக் கூறுவர். இவ்வூரிலும் காளி கோயில் இருக்கிறது.

சுந்தரர் தேவாரம், காரைக்கால் அம்மையார் பதிகம், குமர குருபரர் பாடல் ஆகியவை தில்லைக் கோயிலுக்குப்போல, திருவாலங்காட்டுக்கும் உண்டு.

திருவாதிரைத் தரிசனத்துக்கும் நடராசரின் கவினுறு படிமங்களுக்கும் சோழர் வரலாறு பற்றிய கல்வெட்டுக்களுக்கும் திருவாலங்காடும் தில்லையைப்போலப் புகழ்பெற்று விளங்குகிறது.

திருவாலங்காட்டு ஊர்த்துவ தாண்டவமூர்த்தி ஏனைய தலங்களில் உள்ளது போலன்றி திருவடி செங்குத்தாக உடலைச் சேரத் தூக்கப் பெறவில்லை. திருமாலின் திரிவிக்கிரமமூர்த்திபோல, முன்பக்கம் நீட்டி, முகத்திற்கு நேராகத் தூக்கப் பெற்றிருக்கிறது.

திருவாலங்காட்டுத் தலபுராணம் ஊர்த்துவ தாண்டவத்தை [1] சங்கர தாண்டவம், [2] சண்ட தாண்டவம் என்ற பெயர்களால் கூறும். 'வீறுபாசம் மாற்றி அருள்புரிந்து ஈசன் மலரடிக்கீழ்ப் பேரின்ப வாழ்வு சேர்க்கும்'' என்று இத்தாண்டவத்தைப்பற்றி மேற்படி புராணம் கூறுகிறது.

''ஐப்பசி மாத முழுநிலாவில் திருவாலங்காட்டு நடராசப் பெருமானின் ஊர்த்துவ தாண்டவத்தை வழிபட்டால் நால்வகைப் பேறுகளும் கிடைக்கும்'' [காரணாகமம்] ●

சித்திர சபை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

முன்னுரை :

இறைவன் இன்ப வடிவானவன் என்பதை உணர்த்துவதே ஆடல் வல்லானின் அற்புதத் தோற்றம். அவனுக்கு 'அம்பலம் ஆவது அகில சராசரம்' என்பது திருமூலர் வாக்கு. அண்டபிண்டங் களாகிய பூதங்களின் இயக்கமும், புலன்களின் இயக்கமும் செயற் படும் இந்திரியங்கள் இயங்குவதும் அம்பலத் திருக்கூத்தே என்பர் பெரியோர். அம்பலத்திலிருந்து பஞ்சகிருத்திய நடனமாகிய (ஐந்தொழில்) திருக்கூத்து நடை பெறுகின்றது. அண்டமெல்லாம் இறைவன் மேடையாயினும், ஐந்து திருச் சபைகளில் ஆடிய நடனம் ஓங்கிய சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது. மானிடரின் நடன மேடையை அலங்கரித்து அழகு செய்வது போல், இறைவனின் நடன அரங்கத்தினை அதன் பெருமை துலங்கும்படி பொன், வெள்ளி முதலியனகொண்டு சிறப்பித்தனர். இரட்டைப் புலவர்கள் மிக அழகாக இவ்வைந்து சபைகளையும்,

"குடதிசை யதனில் வருவு குற்ருலம் கோதறு
சித்திர சபையாம்
குற்றமின் குணக்கின் பழையனூர் மன்றம்
குலநவ ரத்நமன் றென்பார்
அடல்விடைப் பாகன் நெல்லையம் பதியில் அம்பலம்
தாம்பிர சபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமாம் அணி
தில்லைச் செம்பொன்னம் பலமே"

— தில்லைக்கலம்பகம். 32

என்று பாடிக் காட்டியுள்ளனர்.

நடாாஜர் தத்துவம்:

பிறப்பறுக்கும் பிஞ்ஞகனை கண்ணுதற் கடவுள் கூத்தியற்றும் பொழுது நடராஜப் பெருமானுகக் காட்சியளிக்கிருர். துடியேந்திய மேல் நோக்கிய வலதுகை படைத்தலையும், பதாகையாகக் கீழ் நோக்கிய வலதுகை காத்தலையும், அக்கினியேந்திய மேல் நோக்கிய இடதுகை அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும் நோக்கிய திருவடி அருளலையும் உணர்த்துகின்றன.

அருகிலே உள்ள மான் மனத்தையும், புலித்தோலாடை அகங் காரத்தையும், சிரசிலே உள்ள கங்கை ஞானத்தையும் சந்திரன் குளிர்ச்சியையும் பிரகாசத்தையும் குறிப்பிடுகின்றன. காலிலே மிதிக் கப்பட்டுள்ள முயலகன்தான் மகாமாயையாம்.

இருப்பிடம்:

ஐவகை மன்று தொருடிய வள்ளல், சித்திர சபையுள் வீற்றி ருக்கும் சிறப்பினைப் பெற்றது திருக்குற்ருலமாகும். வேத சொரூப மான குறும்பலா மரத்தின் நடுவிலே, எல்லாம் வல்ல இறையவனுகிய சிவபெருமான் பிரம விஷ்ணு வடிவாகி அரசு வீற்றிருக்கும் பெருமை யுடையது அத்திருத்தலம். இச்சித்திர சபை குற்லருநாதர் திருக்கோயி லுக்கு வடப்பக்கம் இருக்கிறது. ஐத்தருவிக்குச் செல்லும் வழியில் ரசிக மணி டி. கே. சி. அவர்களின் நினைவு இல்லத்திற்குக் கீழ்ப் புறமாகச் செல்லும் பாதையில் சென்ருல் சித்திரசபை சென்று சேரலாம்.

தோற்றம் :

சிற்ருற்றங் கரையானுன குறும்பலா வீசர் அகத்தியர் காலத் திலியே சிறப்புப் பெற்றிருப்பினும் தனக்குச் சித்திர சபையை அமைத்துக் கொண்டது பிற்காலத்தில்தான். மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர்,பட்டினத்தடிகள் ஆகியோரால் குற்ருலநாதர்சிறப் பிக்கப்பட்டிருப்பினும் சித்திரசபை குறிக்கப்படவில்லை. இரட்டைப் புலவர்கள் பாடலிலும், கந்தபுராணக் கடவுள் வாழ்த்தில், 'ஐவகை மன்று தொருடிய வள்ளல்' என்று குறிக்கப்பட்டிருப்பதாலும், பட்டினத்தடிகள் காலத்திற்குப் பின்னும், இரட்டைப் புலவர்காலத் திற்கு முன்னும் தோன்றி சிறப்புப் பெற்றிருத்தலை உணரலாம்.

சித்திர சபையினைக் காசி கண்ட பராக்கிரம பாண்டியன் தோற்றுவித்தான் என்பர். அக் கைங்கரியம் கொல்லமாண்டு 887இல் நிகழ்ந்தது. 1660—1721 வரை இருந்த பெரிய பட்டம் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவரும், சின்னப்பட்டம் இராஜகோபாலத் தேவருஞ் சேர்ந்து பாண்டியன் ஏற்படுத்திய சித் திரசபைக்குச் செப்போடு வேய்ந்தனர். இவ்வாறு இதன் தோற்றத் தினையும் வளர்ச்சியினையும் திருக்குற்ருலக் குறவஞ்சி தெளிவாக

'நன்னகர் குற்றுலந் தன்னில் எங்கும்
நாட்டு மெண் ணூற்றெண்பத் தேழாண்டு தன்னில்
பன்கை மாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டியனுர் முதற்சிற்றெடு மேய்ந்த
தென்னரும் சித்ர சபையை எங்கள்
சின்னணஞ் சாத்தேவன் செப்போடு மேய்ந்த
முன்ஞளிலே' —குறவஞ்சி 62-3

என்று குறிக்கின்றது.

சித்திர சபைக்குச் செப்போடு வேய்ந்த அன்பர்களே மேலைச் சபை, கீழச்சபை கல் வரிசை தளவரிசைத் திருப்பணி நடத்தினர். ஸ்படிகலிங்கம் அமைத்தனர். சித்திரங்கள் எழுதி வைத்தனர். சுற்றுச் சிகரம் முன் மண்டபம் தெப்பக்குளம் நடு மண்டபம் கோபுரம் செய்து முடித்தனர். எனவே கோயில் சித்திரம் தீட்டிச் சிறப்புப் பெற்றது பதினெட்டாம் நூற்ருண்டில் ஆகும்.

அமைப்பு:

சபைக்கு முன்னர் தெப்பக்குளமும், மத்தியில் உயர்ந்த கோபுரமுள்ள நீராழி மண்டபமும் பாங்குடன் விளங்கும். சபையில் நடராஜப் பெருமான் தேவியாருடன் எழுந்தருளியிருக்கின்ருர். சித்திரசபை முன் வாசல் மேல் சுதையால் வல்லப விநாயகர் சமயக்குரவர், தேவியுடன் சந்திரசேகர், பால சண்முகர் ஆகியோர் அலங்கரிக்கப்பட்டுள்ளனர். தெற்கு வாயிலின் மேல் நடராஜர், சிவகாமியம்மை மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார் முதலியோர் பாங்குடன் அமைக்கப்பட்டுள்ளனர். ஸ்படிகலிங்கமும், அழகிய நாச்சியார் அம்மையும் யந்திர சக்கரங்களுடன் பதிக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு:

தாண்டவங்கள் பல இருப்பினும் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் ஆகியவற்றை நிலைக்களனுகக் கொண்டு கூத்தப்பெருமான் ஐந்து சபைகளில் ஆடியிருக்கின்ருர். இது திருப்புத்தூர்ப் புராணத்தில் விளக்கம் பெற்றுள்ளது,

மாதவர் பரவு மானந்த நடனம் வயங்குறு சந்தியா நடனங்
காதலி நின்றேயர்க் கௌரி தாண்டவமே கவின்

பெறுதிரிபுர நடன

மோதுமா காளி தாண்டவ முனி தாண்டவ மொடு
மூலக சங்கார
மேதகு நடன மேனுமிவை சிவைநாம் விதந்த நன்னும
மென்றுணர்தி.

அத்திரி கூட வெற்பென்றறை திருக் குற்ருலத்திற்
சித்திர சபையிற் செய்யோந் திரிபுர தாண்டவம்
—கௌரிதாண்டவ சருக்கம் 10, 13.

இதனுல் சித்திர சபை திரிபுர தாண்டவம் பெற்ற சிறப்பினையுடையது விளங்கும், இத்திரபுர தாண்டவம் மறைத்தல் தொழிலைக் குறிக்கும்.

மற்றைய சபைகளில் விக்கிரகமாகக் காட்சியளிக்கும் நடராஜப் பெருமான் இங்கு ஓவிய உருவமாயுங் காட்சி தருகிருர். இறைவன் பல திருவுருவங்களும் திருவிளையாடல்களும் ஓவியமாகப் பல நிற வனப்புடன் வரைந்திருப்பது உயர்ந்த கலைத்திறமையைக் காட்டும். (பச்சை மூலிகைகளால் ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.) வெளி மண்டபத்திலுள்ள நான்கு கற்சிலைகள் வெகு திறமையுடன் உயிரோட்டம் விளங்க கலையழகுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இச் சித்திரசபைக்கு ஞான சபை என்ற பெயரும் உண்டு.

'புரந்தனயன் மாலாதி புலவர் மாமுனிவர் காணத்
திரம்பெறு திருக்குற்ருலச் சித்திரப் பொதுவாந் தெய்வ
வரங்கனி லாடப் போந்தான கிலமு மாடல் காண்பான்'
—திருநடச் சருக்கம் 7.

என்று நவிலும் திருக்குற்ருலத் தலபுராணம், அவ்வாட்டத்தைக் காண்பார் முக்தி பெறும் சிறப்பினையுடையது என்பதனையும் கவி நயம்பட

' ஆண்டகையமரர் சயசய வென்ருர்த்திடச் சித்திர
சபைக்கே
தாண்டவம் பணிவார் தமக்கெல்லா முத்தி தகுந் தகுந்
தகுமென நடித்தான்'
—திருநடச் சருக்கம் 18.

எனக் காட்டியுள்ளார்.

கோயில்களின் தனிச் சிறப்பினை அங்கு நடைபெறும் விழாக்களும் நல்குகின்றன. மார்கழி மாதத்தில் திருவாதிரைத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். அன்று இங்கு ஆராதனை நடந்த

பின்பே, ஏட அருவித் துறையானின் திருக்கோயிலுள் திரிகூட மண்டபத்துள் எழுந்தருளி இருக்கும் நடராஜ மூர்த்திக்கு ஆராதனை நடைபெறும். குற்றாலநாதரின் திருக்கோயிலில் நடைபெறும் விழா வின் பொழுது இறைவனும் இறைவியும் சித்திர சபையைச் சுற்றி உலா வருவர்.

இச் சபையில் தினம் இருமுறை முரசு முழங்கப் பெறும்.

புராணச் செய்தி:

புராணங்கள் இடம் பெருத்தலங்களே இல்லையெனும் சிறப்புடை யன நம் திருத்தலங்கள். சித்திர சபையும் தனக்கென ஒரு புராணத் தைக் கொண்டுள்ளது.

உமையம்மை தாளம் கொட்டியவண்ணம் நின்று கூத்தைக் கண்டு ரசிக்கும்படி இறைவன் திருநடனம் புரியுங் காட்சியைக் கண்டு, பிரமதேவன் ஆதி சக்தி சிவபிரானுடைய சொரூபங்களைச் சுவரில் எழுதி வைத்தான். வியாசர் முதலியோர் இதனால் இதனைச் சித்திரசபை யென்று அழைத்தனர் என்று பெயர்க் காரணமும் தருகிறது இப் புராணம். இதனைத் திருக் குற்றாலத் தல புராணம்

ஆதியாம் பரையலது நன்னகர்ச் சிற்பொது நடன
மாருங்காணூர்
காதலாற் சுரர் முனிவர் பலகாலந்தவம் புரிந்து கண்ட
வாற்றுற்
போதினன் முகன மூப்பரை பர மனியந்திரங்கள்
பொறித்தானன்றே
வாதராயணன் முதலோர் சித்திரமன்றெனு நாமம்
வழங்கினரால்'

—திருநடச் சருக்கம் 39.

என்று பாடுகிறது.

இன்றைய நிலை:

1957இல் பிரகாரத்தில் கல் தள வரிசை செப்பனிடப்பட்டுச் செப்போடும் பழுது பார்க்கப்பட்டது. சபைக்குரிய புராணப்பாக்கள் சலவைக் கற்களில் எழுதிச் சுவரில் பதிக்கப் பட்டிருக்கின்றன. சித்திர சபையில் உள்ள ஓவியங்கள் நாளடைவில் நிறம்மங்கியதால்

ஏராளமான பொருட் செலவில் புதிப்பிக்கப்பட்டு 21-6-61 இல் கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது. பிரகார முழுமையும் கல் தள வரிசை திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

இலக்கியங்களில் :

திருவாவடுதுறை ஆதீனத்துத் தொட்டிக்கலே மதுரகவி சுப்பிரமணிய முனிவர் சித்திரசபைத் திருவிருத்தம் பாடியுள்ளார். திருவாவடுதுறையாதீன மகா சந்நிதானங்கள் வருடந்தோறும் ஐப்பசீ மாதத்திற் காலேயில் காவேரி நதியில் நீராடி மீண்டு வருங்காலத்தில் இவ்விருத்தங்களே ஓதி வருகின்ற வழக்கமிருந்தது.

திரிகூட ராசப்பக் கவிராயர் திருக்குற்றுல நாதருலாவில்

'கூடலான் கூடாரைக் கூடலான் முப்புரப்போர்
ஆடலான் சித்திர மன்ருடலான்' —280 என்றும்

'முற்றாவத்
தெய்வ முரசார்க்குஞ் சித்திரப் பூமன்றத்துச்
சைவ முரசார்க்குந் தாண்டவத்தான்' —17 என்றும்

திருக்குற்றுலச் சிலேடை வெண்பாவில்,

'அஞ்சரங் கிற்
சித்திரமா மன்றரியார் செங்கணரி யார்க் கரியார்
குத்திரமா மன்றரியார் குன்று' —17 என்றும்

'ஆடைக்கு
மாதங்க மன்றுரித்தார் மாணிக்கம் வெள்ளி செம் பொன்
மாதங்க மன்றுரித்தார் வாழ்வு' — 25 என்றும்

திருக்குற்றுலக் குறவஞ்சியில்
தேவருக்குக் கரியார் மூவரிற் பெரியார் சித்திர சபையார் (85.1)

சித்திர சபேசர் மேலே சிவசமயப் பத்தியில்லாப் பேயர் போல (120,5)

என்று பலபடவும் புகழ்ந்துள்ளார்.

திருக்குற்றாலத் தலபுராணத்துள் இறைவன் நடனம் நடைபெற்ற காட்சியைத்,

'துடித்திரளமரர் துந்துமித் திரளாஞ் சோபனக் கவுரிபொற்றுளம்
பிடிப்பளாஞ் சுருதி சுருதி யாயிரமாம் பேரிசைவாக்கு நாமகளே
படிப்பளா மயன் மாலிமையவர் பரவிப்பார்ப்பராமகில நாயகனே
நடிப்பனும் பொதுவோர் சித்திரப் பொதுவா நடநவில்
காட்சியார் நாவில்வார்'

(திருநடச் சருக்கம் 19)

என்று ஓவியப்படுத்துகிறார். இறைவனின் நடனத் தோற்றத்தை,

'ஒரு கரந்தனிற் படர்கனல் சுடர்விட வொருகரந்துடியார்ப்ப
விருகரங்களில் வரதமுமபையமு வெவ்வுலக முங் காப்ப
வருள் பிரந் தெழு திருவுளக் கருணையாலகிலமுங் குளிர்தூங்கச்
செருகு கொன்றையங் கண்ணி தேனூற்றிடச் செழுமதி நிலவூற்ற
மங்கையர் மணியிரு விழிகளிப்புற வொருபத மலர் தூக்கிக்
கங்கை வாவிடவொரு பதங் குறளன் மேற்கதிகொடு சதிதாக்கிப்
பங்கையா சனன்றுதி செய் நெடிய மாற்கதிசயம் பரந்தேறச்
சங்கை யேந்திய குழை நிலாப்புயவரைத் தடந்தொறுந்
தவழ்ந்தேற'

(திருநடச் சருக்கம் 10, 11)

என வருணிக்கின்றார்.

ராம. சொ: சொக்கலிங்கச் செட்டியார் தாம்படைத்த 'திருப்புத்தூர் புராணத்துள்' கௌரி தாண்டவ சருக்கத்துள் இறைவனின் சிறப்புறு நடனங்களையும் அவை நடைபெற்ற இடங்களையும் சுட்டும் பொழுது சித்திர சபையுள் திரிபுரதாண்டவ நடனத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

துணைபுரிந்த நூல்கள்

1. திருக்குற்றாலக் குறவஞ்சி — திரிகூடராசப்பக் கவிராயர்
2. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா — திரிகூடராசப்பக் கவிராயர்
3. திருக்குற்றாலத் தல புராணம் — ,,
4. திருக்குற்றால நாதருலா — ,,
5. திருக்குற்றாலம் — பி.ஸ்ரீ.
6. திருக்குற்றாலம் தல வரலாறு — ர. சி. சண்முக நயினார்
7. திருப்புத்தூர் புராணம் — ராம.சொ. சொக்கலிங்கச் செட்டியார்

திருவெண்காடு - ஆதிசிதம்பரம்

என். தியாகராசன் — சு. அகோரம்

தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் பூம்புகாருக்கு அண்மையிலுள்ள திருவெண்காடு என்னும் தலம் ஆதிசிதம்பரமாகக் கருதப்பெறுகிறது. இத்தலத்திலும் நடராசப் பெருமான் ஞான சபையில் ஆனந்த தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிருர். சிதம்பரத்திலுள்ளது போன்றே இங்கும் திருக்கோயிலின் இதய பாகத்தில் சபை அமைந்துள்ளது. சிதம்பரத்திலுள்ள பொற்சபைபோன்ற அதே அமைப்புடன் இங்கும் சபை திகழுகிறது இங்கும் நடராசப் பெருமானுக்கு ஆண்டில் ஆறு அபிடேகங்களும், ஸ்படிக லிங்கத்திற்கு தினம் ஆறு அபிடேகங்களும் நடைபெறுகின்றன. தரிசனங்களும், பிற பூஜை விதி முறைகளும் இரண்டு தலங்களிலும் ஒரே முறையில் அமைந்துள்ளன.

சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் பின்புற வலப்பகுதியில் சிதம்பர ரகசியம் அமைந்துள்ளது. அதேபோல் ஆதிசிதம்பரமாகிய திருவெண்காட்டிலும் சிதம்பர ரகசியம் அமைந்துள்ளது. திருவெண்காட்டில் சுவாமிக்குப் பின்புறத்தில் ரகசியம் அமைந்துள்ளது. இரு இடங்களிலும் சுவாமிக்கு தீபாராதனை முடிந்தபின், ரகசியத்தின் மேலுள்ள திரையை நீக்கிவிட்டு, ரகசியத்திற்குத் தீபாராதனை காட்டுகின்றனர். இறைவன் ஆகாய வடிவில் இருப்பதைக் காட்டுவதே சிதம்பர ரகசியம்.

சிதம்பரத்தில் அம்பலத்தில் நிருதி திசையில் திருமால் பள்ளி கொண்டிருக்கிருர். திருவெண்காட்டில் சுவாமிக்கு நிருதி திசையில் திருமால் நின்றகோலத்தில் உள்ளார்.

சிதம்பரத்தில், பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிரபாதருக்கும் பெருமான் ஆடினுர். திருவெண்காட்டில் சுவேதகேது என்னும் முனிவருக்குப் பெருமான் ஆடியதாகப் புராணம் குறிக்கிறது.

இங்குள்ள நடராசப் பெருமானின் திருமேனி மிகவும் எழில் வாய்ந்தது; தத்துவக் கருத்துக்களை விளக்குவது. பெருமான் அணிந்துள்ள 14 சதங்கைகள், 14 புவனங்களையும், 81 சங்கிலி வளையங்கள் 81 மந்திரங்களையும் உணர்த்தும்.

இவ்விரு தலங்களுக்கும் உள்ள ஒற்றுமையின் காரணமாகத் திருவெண்காட்டை ஆதிசிதம் பரம் என்று கருதுகின்றனர் போலும். சிதம்பரத்தைக் காட்டிலும் திருவெண்காடு காலத்தால் மூத்த தலமாக உள்ளதாலும் அதனை ஆதி சிதம்பரம் என வழங்குகின்றனர் போலும். வியாக்கிரபாதருக்கும் பதஞ்சலிக்கும் மூத்தவர் சுவேதகேது என்பர். மேலும் வான்மீகியார் தம் இராமாயணத்தில் இத்திருவெண்காட்டைக் குறிப்பிடுகிறார். (சுவேதாரண்யத்தில் உருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்ததுபோல, கரன் இராமனுடைய சராக்கினியால் திரிக்கப்பட்டான் எனபது வான்மீகர்வாக்கு) எனவே, சிதம்பரத்தைக் காட்டிலும் பழமையான தலமாகத் திருவெண்காடு இருந்திக்கலாம்.

சிவனும் பார்வதியும் இங்கிருந்து ஆடிக்கொண்டே சிதம்பரம் சென்றனர் என்று பாமரமக்களின் செவிவழிச் செய்தி: எனவே இறைவனின் ஆகாய தத்துவத்தை விளக்கும் 'சிதம்பரமாத்' தலமாகத் திருவெண்காடு ஒரு காலத்தில் திகழ்ந்திருக்கலாம். பிறகு தில்லை பிரசித்தி பெறவே அது சிதம்பரம் என்னும் பெயருக்குரியதாகி இருக்கலாம். அதனால் திருவெண்காட்டை மக்கள் ஆதி சிதம்பரம் என வழங்கத் தலைப்பட்டிருக்கலாம்.

திருவெண்காட்டின் பிற சிறப்புக்கள் பல. அவை விரிப்பின் பெருகும். இத்தலத்தை நால்வரும் பாடியுள்ளனர். சிவஞான போதத்தை அருளிய மெய்கண்டார் பிறந்ததும் இவ்வூரே. திருவெண்காடராகிய பட்டினத்தடிகள் பிறக்கக் காரணமாக இருந்ததும், அவர் சிவதீட்சை பெற்றதும் இவ்வூரே. இத்தலத்திலுள்ள முக்குளத்தின் பெருமையை ஞானசம்பந்தர் முதலிய அருளாளர் பலரும் புகழ்ந்துள்ளனர்.

சிதம்பரமும் உத்தரகோசமங்கையும்

' சோமலெ '

இராமநாதபுரத்துக்கு அருகே உத்தரகோசமங்கை என்னும் தலம் உளது.

"கடவுளுக்கு ஊர் எது?" என்ற வினவுக்கு, உத்தரகோசமங்கையே என்று மணிவாசகர் விடை கூறுகிறார்.

நடராசப் பெருமானுக்கு உத்தரகோசமங்கையில் ஆதிசிதம்பரம் என்ற தனிக்கோயில் இருக்கிறது. மூலவராக நடராசர் கோயில் கொண்டிருப்பது இங்கு மட்டுமே. அறையில் ஆடி பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் காரைக்கால் அம்மையாருக்கும் காட்சி கொடுத்த இடமாதலால் இந்த அறை ஆதிசிதம்பரம் எனப் பெயர் பெறுவதாகவும், பின்னர் இறைவன் இங்கிருந்து சிதம்பரத்துக்குச் சென்று அனைவரும் காண ஆடிய இடம் அம்பலம் என்றும் கூறுவர். அறையில் ஆடி, அம்பலத்தில் ஆடவேண்டும் என்ற பழமொழி ஏற்பட்ட வரலாறு இதுவே.

உத்தரகோசமங்கையிலிருந்து சிதம்பரத்துக்குச் சுரங்கப்பாதை இருந்ததாகவும் இப்போது அடைபட்டிருப்பதாகவும் கூறுவர்.

உத்தரகோசமங்கையிலும் ஆருத்திரா தரிசனம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. உலகிலேயே இங்கு மட்டுமே நடராசர் திருவுருவம் மரகதத்தில் உள்ளது.

அரங்கமும் அம்பலமும்

ரா. கணபதி

வைணவர்கள் 'கோயில்' என்று சொன்னால் அது ஸ்ரீரங்கத்தைத் தான் குறிப்பிடும். சிவநேசர்கள் 'கோயில்' என்று கூறினால் அது சிதம்பரத்தையே குறிப்பிடும். ரங்கத்தைப் பூலோக வைகுண்டம் என்பர். சிதம்பரமோ பூலோக கயிலாசம். அரங்கம் என்பது நடன மேடையைக் குறிக்கும். அம்பலமும் ஆனந்தக்கூத்துக்கான ஆகாய மேடைதான். அரங்கநாதன், சிதம்பரநாதன் இருவருமே பொன் வேய்ந்த விமானத்தின் கீழ் வதிகிறார்கள். இவ்விருவருமே 'ராஜன்' ஒருவன் ரங்கராஜன்; மற்றவன் நடராஜன். தெற்கிலிருந்து வரும் யமதர்மனிடமிருந்து அடியாரைக் காக்கிறேன் என்று சொல்லாமல் சொல்வது போல் ரங்கராஜன், நடராஜன் இருவருமே தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார்கள். அரிதுயில்மூர்த்தி பள்ளிகொள்ளும் ரங்க விமானமும், ஆனந்தக்கூத்தன் ஆடுகின்ற சிற்சபையும் சநாதன சமய சித்தாந்தங்களை விளக்குபவை. ஸ்ரீரங்கநாதனின் இருக்கையை

அடுத்த காயத்ரி மண்டபத்தில் காயத்ரி மகாமந்திரத்தின் இருபத்து நான்கு அட்சரங்களும் இருபத்து நான்கு தூண்களாயின; ரங்க விமானமோ ஓம்காரமே உருவெடுத்தது; இவ்விமானத்தின் பத்து ஸ்தூபிகளே நான்கு வேதமும் ஆறு சாஸ்திரமும் என்றெல்லாம் சொல்வர். ஏழு பிரகாரங்களுக்கு மத்தியில் உள்ள ரங்கநாதப் பெருமான் சரீரத்தின் ஏழு தாதுக்களுக்குள் ஒளிரும் ஆன்மஸ்ரூபன் என்பர். ஸ்ரீமந் நாராயணனுக்குகந்த அஷ்டாட்சரத்தின் ஏழு அட்சரங்கள் பிராகாரங்களாகவும், மீதமுள்ள பிரணவம்விமானமாகவும்ஆயின என்று கூறுவர். இதேபோல் ஆடும் தெய்வத்தின் சந்நிதானத்தில் பஞ்சாட்சரங்களே ஐந்து படியாயின என்று சிவனடியார்கள் நவில்கிறார்கள். நடராஜன் எழுந்தருளும் சிற்சபையை அடுத்த கனக சபையில் பதினெண் புராணங்களும் பதினெட்டுத் தூண்களானதாகவும், சிற்சபையில் ஆகமங்களும் ஆறு சாஸ்திரங்களும் ஸ்தம்ப வரிசைகள் அமைக்க, சதுர்வேதங்களே நான்கு பொன் தூண்களாக நடராஜமூர்த்தியைச் சுற்றி அமைந்துள்ளன என்றும் அறிகிறோம். இடை, பிங்கலை என்ற நாடிகளுக்கு நடுவே உள்ள சுழுமுனை நாடியில் சுவாசத்தைச் செலுத்திப் பாம்பு வடிவாம் குண்டலினி சக்தியை எழுப்பும் யோகத்தை உணர்த்தவே, காவிரியின் இரு பிரிவுகளுக்கிடையே ஆதிசேஷப்பாம்பின் மீது பெருமாள் பள்ளி கொண்டிருக்கிறார்.

சிதம்பரமும் பேரூரும்

தவத்திரு வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகள்
பேரூர்

திருச்சிற்றம்பலக் கோவையாரில் பேரூரும் கூறப்பட்டுள்ளது.

"மேலைச்சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரூர்" என்பர் புலவர் புராண ஆசிரியர் [சாந்தலிங்கப் புராணம் முதல் பாடல்].

" எவர்க்கும் முன்னும் அரசம்பலத்து நின்றாடும் பிரான்" —299

" அண்ணல் மடங்கல் அரசம் பலவன் " —75.

பின்னுள்ள தொடர் இப்பொழுது ''அதளம் பலவன்'' எனப் பாடல் கொள்ளப்பட்டது. இது பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் கருத்து.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூருக்கு வந்து வழிபட்டது பெரிய புராணத்தில்[ஏயர்கோன் களக்காமநாயனர் புராணம் செய். 88-99] கூறப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையில் வழிபட்டபோது பேரூர் நடனக் காட்சியையும் நினைத்துப் பதிகம் பாடினர்.

''மடித்தாடும் அடிமை'' என்னும் தொடக்கத்தையுடைய பதிகத்தில் 'பாரூரும் அரவல்குல்' என்னும் பாடலில்,

''பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ருமன்றே'' எனப் பாடியுள்ளமை காணலாம்.

கச்சியப்ப முனிவர் பேரூர்ப் புராணத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூரில் வழிபட்டதைப் பள்ளுப்படலம் எனும் படலத்தில் பாடி உள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைப் பதிகத்தில் பேரூரைச் சிறப்பித்துப் பாடியது கேட்ட தில்லைவாழந்தணர்கள் பேரூர்க்கு வந்து வழிபாடு செய்தனர். இச்செய்தியை அழகிய திருச்சிற்றம்பலப் படலம் என்னும் பகுதியில் பாடியுள்ளார். தில்லைவாழந்தணர் வழிபட்ட அழகிய திருச்சிற்றம்பலம் என்னும் கோயில் இன்றும் உள்ளது.

சிதம்பரத்தில் இருந்த கனகசபைப் பெரியமுதலிப் பண்டிதர் என்பவரே கொங்கு நாட்டில் வந்து பேரூரும் மற்றும் சுற்றிலுமுள்ள தலங்களிலும் கோயில் பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்தார்கள். இவர்கள் முற்காலத்தில் சோழமன்னர்களாலும் இவர் பரம்பரையினர் பிற்காலத்தில் நாயக்க மன்னர்களாலும் சிறப்பிக்கப் பெற்றனர்.

விவரம் : தென்னிந்தியக் கோயில் சாசனம் பாகம் 3-பகுதி 1-இல் பக்கம்-1175-1183இல் காண்க.

தில்லையும் அங்கம்பாக்கமும்

அ. மு. பரமசிவானந்தம்

என்னை நான் உணராத அந்த இளமைக்காலம்; நான் எங்களூர் ஆரம்பப் பள்ளியில் பயிலத் தொடங்கிய இளமைக்காலம். அப்போது எங்கள் வீட்டின் பின்பக்கத்திலேயே உள்ள அம்பலவாணர் கோயிலுக்கு அடிக்கடி செல்லுவேன். மாலையில் பாலாற்று மணலில் விளையாடிவிட்டு, ஊற்றுநீர்க் கால்வாயில் துப்புரவு செய்துகொண்டு, அப்படியே கோயிலுக்குச் சென்று அம்பலவாணரையும் அன்னை சிவகாமியையும் தரிசனம் செய்துகொண்டு வீடுதிரும்புவது வழக்கம். மாலைவேளை அபிடேக ஆராதனை அனைத்தும் என் பாட்டனாரால் மானியம் விடப்பெற்று நடத்தப்பெறுவதாகும். எனவே ஆராதனை முடியும்மட்டும் இருந்துவருமாறு என் அன்னை பணிப்பார்கள். அந்த மாலை ஆராதனையின் முடிவில் அர்ச்சனை செய்யும்போது. வயது முதிர்ந்த ஐயர் 'சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர சுவாமிநம' என்று கூறிமுடிப்பர். என் பிஞ்சுஉள்ளம் அதைப் பற்றி அன்று பெரிதாக எண்ணுவிட்டாலும், 'அம்பலவாணர்' என்று சொல்லாமல் வேறு பெயரைச் சொல்லுகிறாரே என நினைக்கும். பிறகு சில ஆண்டுகள் கழித்து - சற்றே தெளிவு வந்த பின்-அம்பலவாணர் தாம் சிதம்பரேசர் என்ற உண்மையை உணர்ந்தேன். மேலும் சிதம்பரத்துக்கும் எங்கள் ஊருக்கும் உள்ள தொடர்பினைப் பற்றிப் பெரியோர்கள் சொல்லக் கேட்டறிந்தேன்.

என் ஊரின் சூழலும் கோயில் அமைப்பும் ஆற்றுமணலும் நீரோடையும் என் இளமைக்காலத்தில் அடிக்கடி என்னைக் கோயிலுக்குச் செல்லத் தூண்டும். எங்கள் ஊர் இன்று அங்கம்பாக்கம் என்று இருந்தாலும் அது இரண்டு ஊர்கள் இணைந்த ஒன்று என்றே பெரியவர்கள் சொல்லுவார்கள். ஊரின் மேற்பகுதியே அங்கம்பாக்கம் என்றும் நான் இருக்கும் கீழ்ப் பகுதியாகிய ஒரே தெரு வான்பாக்கம் என்றும் தனியாக இருந்து, பிறகு ஒரு காலத்தில் இணைய 'அங்கவான்பாக்கம்' என்று பெயர் பெற்று, கடைசியில் அங்கம்பாக்கம் என்ற பெயரே நிலைத்துவிட்டது என்பர். சில பழைய ஆவணங்களிலும் 'அங்கவான்பாக்கம்' என்றே இருப்பது அதற்குச்சான்றாகும். மேலும் ஊரில் நடைபெறும் மாரியம்மன் காப்புக் கட்டும்விழாவின் கடைசி நாளுக்கு முன்னர் நடைபெறும் தெருக்கூத்தில் அக்கூத்து நடத்துபவரின் தலைவன் வீடுதோறும் தரும் பரிசை ஏற்று 'இவ்வங்

கம்பாக்கம் வான்பாக்கம் கிராமம்' [என்று சொல்லிப் பிறகு வாழ்த்துவது மரபாக இருந்தது. கோயில்களின் அமைப்புகளும் பிற திட்டங்களும் இந்த இரு ஊர் அமைப்பினை உறுதி செய்கின்றன.

இரண்டு சிவன் கோயில்கள், இரண்டு பெருமாள் கோயில்கள், இரண்டு பிள்ளையார், மாரி, பிடாரி கோயில்கள் தனித்தனியாக இருப்பதோடு, ஊர்த் தொழிலாளர்களும் இரண்டு பிரிவாகவே உள்ளனர். இன்றும் இந்த உண்மைகளைக் காணலாம். வான்பாக்கத்துக்குரியதே கிழக்கே ஊர் எல்லைக்கு வெளியேயுள்ள வாணீஸ்வரர் கோயில். அதை அடுத்தே பெருமாள், பிள்ளையார், பிடாரி, மாரியம்மன் கோயில்களும் உள்ளன. இச்சிவன் கோயில் சோழர் காலத்தியது. ஊர் இரண்டும் இணைந்தபோது, இதிலுள்ள சில சிலாவிக்கிரகங்களை அம்பலவாணர் கோயிலில் கொண்டுவந்து வைத்து ஆண்டவனையும், 'அம்பலவாணீஸ்வரர்' என்றே அழைத்தார்கள். எனினும், ஊரின் பெயரைப்போலவே இறைவன் பெயரும் 'அம்பலவாணர்' எனவே அமைந்துவிட்டது.

கிழக்கே உள்ள வாணீஸ்வரர் கோயிலின் சிதைந்த கற்களின் மேல் நான் நண்பர்களுடன் பல நாட்களில் மாலைப்பொழுதினைக் கழித்ததுண்டு. அப்போது அக்கோயிலின் சுற்றுச் சுவர்களிலுள்ள கல்வெட்டுக்களைப்பற்றி எண்ணியதுண்டு. எனினும் படிக்கத் தெரிவதில்லை. பின் தொல்பொருள் ஆய்வுக்குழுவினர் அவற்றைப் படி எடுத்துள்ளனர் என்பதை அறிந்தேன். அக் கல்வெட்டுக்களைப்பற்றியும் அதில் நேர்ந்த கொடைநலம் பற்றியும் அண்மையில் தினமணி நாளிதழ் [சுடர்] கட்டுரை வெளிவந்ததைப் பலரும் படித்திருப்பர். [அதுவே திரு. சோமலெ அவர்கள் மூலமாக இக்கட்டுரை எழுத வழி செய்தது.]

கல்வெட்டின் வழி இறைவன் 'வாணீச்சுரமுடைய நாயனுர்' என அழைக்கப் பெறுகிருர், இக்கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கென, முதலாம் இராசராசன் காலத்தே ஆடுகள் வழங்கப்பெற்ற கொடையினை விளக்கும் கல்வெட்டினைத் தாங்கிய தூண்கள் நிலைமாறிவிட்டன. இராசராசன் படைத்தலைவனும் தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்று மாளிகையைக் கட்டினவனுமாகிய மும்முடிச்சோழப் பிரமாதிராயன் வழியே பக்கத்தில் உள்ள திருமுக்கூடலில் 'செம்பியன்மாதேவி' பெயரால் அமைந்த இராசராசன் மண்டபத்தைக் கண்ட இப்பிராந்தியத் தலைவன் மும்முடிச்சோழவாணப் பேரரையன் இவ்வாணீச்சுரர் கோயிலுக்கு ஒளி விளக்கு அமைக்க

ஏற்பாடு செய்தான்போலும். பின் இக்கோயில் குலோத்துங்கனால் செப்பம் செய்யப்பெற்று நான்கு ஆண்டுகள் சிறக்க இருந்தது. இவை எல்லாம் கனவாகிக் கழிய இன்று சிறு ஒதுக்கிடமாகக் கேட்பாரற்று இக்கோயில் இருப்பதை எண்ண வருந்த வேண்டியுள்ளது.

அம்பலவாணர் கோயில் இன்றும் சிறந்துள்ளது. பெருங் கோயில்களில் நடைபெறும் அத்தனை விழாக்களும் நித்தியபூசைகளும் [மூன்று காலம்] குறைவின்றி நடைபெறுகின்றன. சித்திரையில் நடைபெறுகின்ற பெருவிழாவாகிய 'பிரம்மோற்சவம்' பல ஆண்டு களுக்கு முன்பே நிறுத்தப்பெற்றது. ஆண்டில் பல ஆயிரங்களுக்கு மேல் வருவாயினை உடைய இக்கோயில் இன்றும் நன்கு பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இனி இக்கோயிலுக்கும் ஊருக்கும் தில்லைக்கும் அம்பலத்துக்கும் உள்ள தொடர்பினை எண்ணிப் பார்க்கலாம். அம்பலவாணரும் சிவகாமியும் இணைந்து தோற்றமளிக்கும் இடங்கள் இவ்விரண்டுமா கும். அம்பலம், வான் என்ற இரு சொற்களும் தில்லை இறைவனைச் சுற்றி அமைந்த வெட்டிவெளியினைக் குறிப்பனவாகும். தில்லை அம் பலமாகிய 'ஆகாய'த்தலத்தினைப்போன்றே, இங்கும் ஊரும் கோயி லும் அந்த அழகிய பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ் வூர்க் கோயிலின் மூலத்தானத்தைச் சுற்றி, ஆகாய நிலை உள்ளமை யினைச் சுட்ட ஆறடி அளவில் பரந்த திறந்த வெளியிருந்தது. ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்தான் [பலர் அதில் தெரியாமல் வீழ்ந்து விடுகிறார்கள் என்ற காரணத்தால்] மூடப்பெற்றது. எனவே தில்லை யைப் போன்றே இதுவும் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய - பிற பூதங் களை உள்ளடக்கிய ஆகாயத்தலமாக விளங்கிற்று - விளங்குகிறது. வான்பாக்கம் என்ற பெயரும் அதை வலியுறுத்துவதாகும்.

இங்குள்ள மூலவருக்குமட்டுமின்றி நடராசருக்கும் தனிச்சிறப்பு உண்டு. தில்லையில் நடக்கும் ஆறு பெரிய அபிடேகங்களைப்போன் றே இங்கும் உரிய நாட்களில் அபிடேகம் நடைபெறும். தில்லையில் அம்பலவனை முன்மண்டபத்தும் ஆயிரக்கால் மண்டபத்தும் எழுந்த ருளிவித்து திருமஞ்சனம் செய்வது போன்றே, இங்கும் வேறு தனி மண்டபத்தும் திருவாதிரையில் பெருமண்டபத்தும் வைத்துத் திருமஞ்சனம் செய்வது இன்றும் வழக்கமாக உள்ளது.

திருவாதிரை நாளில் நடராசர்தம் அபிடேகம் விடியல் நான்கு மணி அளவில் முடிய, அடுத்து அவரை வெள்ளுடையிலும், பின்

செவ்வுடையிலும் அலங்கரித்து, கோயிலை வலம் வந்து, வெட்ட வெளியில் நிறுத்தி வழிபாடாற்றும் வழக்கம் இன்றும் உண்டு. அதன் பொருளினை நான் என் இளமையில் எண்ணிப் பார்க்க இயலாவிடினும் பின் எண்ணிக் கணக்கிட்டதுண்டு. ஆம்! வான வெளியாய் - மோனத்தொளியாய் - அப்பாலுக்கப்பாலாய் உள்ள ஆண்டவன் பெருநிலையினை முதலில் வெள்ளுடையில் வணங்கவும் பின் அதே ஆண்டவன் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு, ஆடல் இயற்றி 'சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மானாய்க் காட்சியளிக்கும் பான்மையினை செவ்வுடையில் வணங்கவும் இந்த முறையினை - வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளார்கள் என உணர்ந்தேன். அம்பலவன் தன்மையினை இவ்வழிபாடு நன்கு காட்டுகிறதன்றோ!

அத்திருவாதிரை நாளில் தில்லையைப் போன்றே இவ்வூரும் விழாக் கோலம் பூண்டு நிற்கும். அனைவரும் தூய உடையும் உள்ளமும் கொண்டவராய் வரிசை வரிசையாகக் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றுவதோடு, தத்தம் தெருவுதொறும் அம்மையையும் அப்பரையும் நிறுத்தி மண்டகப்படி செய்யும்காட்சி இன்றும் கண்கொள்ளாக் காட்சியேயாகும். திருவீதி உலாவின் இறுதியிலே, அம்மனைத் தெருவின் ஒரு கோடியிலும் இறைவனை மற்றொரு கோடியிலும் நிறுத்தி, அம்மன் ஊடல்கொண்டதாகக் காட்டி, இவ்வூடலைத் தீர்க்கும்வாயிலாக 'ஆலாலசுந்தரரை'க் கொண்டு நிறுத்தி, அவர்வழி ஊடல் நீங்கிய அம்மை அப்பர் இருவரும் திருக்கோயிலுக்கும் எழுந்தருளும் காட்சியும் சிறந்ததாகும். சுந்தரருக்கு இறைவன் தூது சென்றதைத் தவறு எனக் காட்டிய ஒரு நாயனுருக்கு இறைவனே பதில் தந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. அப்பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் பிறந்த அதே தொண்டை நாட்டில், அவர் மரபினர் இன்றும் சிறக்க வாழும் அங்கம்பாக்கத்தில், இறைவனைத் தூது அனுப்பியதற்குக் கழுவாயாகச் சுந்தரர் தாமே தூது சென்று அம்மையப்பரை இணைத்துவைக்கும் நிலை சிறக்க அமைகின்றது. இக்காட்சி ஒப்பற்ற உயரிய நற்காட்சியாகும்.

இனி, ஒருவகையில் இவ்வூரினைத் தில்லையொடு இணைக்கும் செவிவழிக் கதையும் உண்டு. தில்லையில் வாழ்ந்த அந்தணர் ஒருவர் மறைய அவர் 'அஸ்தி' யை எடுத்துக்கொணடு, அவர் மகனார் காசிக்குப் புறப்பட்டாராம். வழியில் ஒரு நாள் பொழுது சாய, இவ்வூரில் தங்கினாராம். இரவு கழிந்து மறுநாள் காலையில் கண் விழித்துப் பார்த்தபொழுது, அவருக்கு ஓர் அதிசயம் காத்திருந்ததாம்

ஆம்! புதுப்பானையில் இருந்த எலும்புகள் அனைத்தும் பூக்களாக மாறி மணம்வீசத் தொடங்கியதாம். அதுமட்டுமன்றி, அவர் அதிசய உளத்தொடு, மேலே சென்று இவ்வூர் எல்லையைக் கடக்க, அப்பூக் களும் பிறவும் மறைந்தனவாம். இவை அனைத்தும் இவ்வூர்த் தல விசேடமே என அனைவரும் போற்றிப் புகழ்ந்தார்களாம். தில்லை அந்தணரும் உடனே மேலே செல்வதை நிறுத்தி, இத்தலத்தையே காசியாகக் கருதி இங்கேயே தந்தையாருக்குரிய கடனை முடித்த தோடு தில்லையில் உள்ள அம்பலவாணரையும் சிவகாமி அம்மையையும் இவ்வூரிலே தாபித்து வழிபட்டு வந்தாராம். அங்கம் (எலும்பு) பூத்ததனால் இவ்வூர் அங்கம்பூத்தூர் என வழங்கப்பெற்று, பின் பக்கத்தில் பல பாக்கங்கள் உள்ளமைபோன்று இதுவும் அங்கம் பாக்கம் என மாறிற்று என்று கூறுவர். வான்பாக்கம் அங்கம்பாக்கத் தோடு இணைந்த காலமும் வாணீஸ்வரர் அம்பலவாணீஸ்வரரான காலமும் இதை ஒட்டியதாக இருக்கலாம் எனக் கொள்ள இடமுண் டாகின்றது. மேலும் இவ்வாய்மொழி வெறும் கதையாகக் கொண் டாலும், இதன் வழியே தில்லைக்கும் இவ்வூருக்கும் உள்ள தொடர்பு மறுக்க முடியாததாகும். நான் முன்னரே காட்டியபடி, இதனாலேயே வடமொழிவாணர்கள் தம் தோத்திர முடிவில் இங்கே அம்பல வாணரை. 'சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர்' என்றே கூறி வழிபடு நெறியினை இன்றும் காணலாம்.

மேலும் மற்றொரு கதையும் வழங்கி வந்துள்ளது. இங்குள்ள நடராசர் சிலையே சிதம்பரம் கோயிலிலிருந்தே — யாருக்கும் தெரி யாமல் கொண்டுவரப் பெற்றது என்பர். சிதம்பரம் திருக்கோயி லுக்கு எனச் செய்த இச்சிலையினை இவ்வூர் வேளாளர்கள் பற்றின் காரணமாக எப்படியோ பற்றிக்கொண்டுவர, பிறகு தில்லையில் வேறு சிலை செய்யப்பெற்றதாகவும் கூறுவர். இவை அனைத்தும் உண் மையோ இல்லையோ—இவற்றால் இரு ஊர்களுக்கும் உள்ள தொடர்பு தெளிவாகின்றது உண்மையாகும்.

அம்பலவாணர், சிவகாமி, நடராசர் ஆகிய விக்கிரகங்கள் அழகிய வடிவினைக் கொண்டுள்ளன. மங்காத பொன்னார் மேனியுடன் இன்றும் என்றும் காட்சியளிக்கும் இத்திருவுருவங்களை எப்போதும் கண்டுகொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வு, காணு வோர் யாருக்கும் தோன்றும் என்பது துணிபு.

இவ்வூருக்குத் தலபுராணம் என்று தனியாக ஒன்றும் கிடையாது. 'அங்கபுரத்து அம்பலவாணமாலை' என்று நூறு பாடல்கள் கொண்ட

ஆசிரியர் பெயர் அறியமுடியாத நூல் ஒன்று அச்சிடப் பெற்றிருந்தது. என் இளமையில் இந்நூலின் படியினை நான் கண் டிருக்கிறேன். ஏனோ அன்று அதைக் கட்டிக்காக்கத் தோன்றவில்லை. இன்று தேடினும் கிடைக்கவில்லை. கிடைத்தால் அச்சிடலாம் என எண்ணுகிறேன்.

இவ்வூர் முன்பு தொண்டைமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்திருந்தது. பின் களத்தூர்க் கோட்டத்தைச் சார்ந்த குறும்பறை நாட்டு உட்பிரிவில் இருந்தது. செங்கற்பட்டு மாவட்டம் அமைத்தபோதும் (ஆங்கிலேயர் ஆட்சியில்) இது முதலில் மதுராந்தகம் வட்டத்தில் இருந்து, பின் காஞ்சிபுரம் வட்டத் திற்கு மாற்றப்பெற்று இன்றளவும் அவ்வட்டத்தில் உள்ளது. தூரத்தே இருந்து தரிசிக்கச் சிதம்பரத்தைப் போன்று தூல லிங்கங்களாகிய கோபுரங்கள் பெரும்அளவில் இவ்வூரில் இன்றெனும், பாலாற்றங்கரையில் — தென் பக்கத்தில் ஆற்றின் கரைமேலேயே அழகுற இக்கோயில் அமைய, ஆற்றின் வடகரையினை ஒட்டிச் செல்லும் சாலையிலும் இருப்புப்பாதையிலும் செல்வார் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் சிறந்துள்ளது. இவ்வூரின் வடக்கே பாலாறும் தெற்கே சேயாறும் பாய்ந்தோடி, கிழக்கே ஒரு கல் தொலை வில் திருமுக்கூடலில் கலக்க, இவ்வூர் மடுவும் அவற்றோடு கலந்து முக்கூடல் என்ற பெயரை உண்மையாக்குகின்றது. இந்த நிலையினை எண்ணித்தான் போலும் சோழர்குல மக்களும் அவர் தம் உயர் அதிகாரிகளும் இந்த இரண்டு ஊர்களிலும் ஆலயப்பணிகளையும் அறப்பணிகளையும் செய்தனர் என நினைக்கவேண்டியுள்ளது.

எனவே இவ்வூர் தொன்மைவளம் சான்றதோடு, தெய்வமணம் பரப்பும் வரலாற்றுப் பின்னணியும் கொண்டு தில்லையை ஒத்து விளங் குகிறது. தில்லையைச் சுற்றியுள்ள இயற்கைவளம் இங்கும் உண்டு. வாழை, தென்னந்தோட்டங்களும் அடுத்து வயல்வெளியும், இவ்வயல்வெளிக்கு நீரூட்டும் வாய்க்கால்களும் இங்கு வருவோருக்குச் சோழநாட்டையும் சிறப்பாகத் தில்லையையும் நினைவூட்டும் என்பது உறுதி.

இவ்வாறு 'வடதில்லை' எனப் போற்றத்தக்க இந்த அங்கம் பாக்கம் இயற்கையொடு இறைநலமும் சார்ந்த ஓரூர் என்பதும் தொன்றுதொட்டு வேளாண்மக்கள் வாழ்ந்து வருகின்ற ஊர் என்பதும், தற்போது ஓரளவு ஒளி மழுங்கி இருந்தபோதிலும்

உள்ளவர் ஒன்றுபட்டுச் செயலாற்றின் உயர்ந்து ஓங்கிப் பண்டை நலம் பெறும் வாய்ப்பு உள்ளது என்பதும் அறிந்த உண்மைகளாகும். தில்லையினைப்போன்றே இவ்வூரும் எல்லா நலன்களையும் பெற்றுச் சிறக்க' என்ற வாழ்த்தோடு அமைகின்றேன். ●

தஞ்சை பெரிய கோயிலும் தில்லையும்

தமிழ்நாடு ஆலயப் பாதுகாப்புக் குழுத்தலைவர்,
கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

திருவாரூரும்—தில்லையும் சேர்ந்த சங்கமமான மாடக் கோயில் கட்டினான் மாமன்னன் இராஜராஜன்.

திருவாரூர் இறைவருக்கு விடங்கர் என்றுபெயர். செல்வம் சிறந்த திருக்கோயில் திருவாரூர் திருக்கோயில், எனவே தான் அமைத்த தஞ்சை பெரிய கோயில் செல்வச் சிறப்பில் திருவாரூரைப் போல சிறந்துவிளங்க வேண்டுமென தஞ்சை பெரிய கோயில் நிதிச்சாலைக்கு தஞ்சை விடங்கர் என்று திருப்பெயரிட்டான்.

தில்லை நடராஜர் எல்லாச் செல்வமும் படைத்தவர் அவருக்கு ஏதும் குறையில்லை. வந்து அடிதொழும் அடியார்க்கு வாரி வழங்கும் வள்ளல், எனவே தஞ்சை திருக்கோயில் ஊழியர்களுக்குப் படி அளக்கும் அளவைக்கு ஆடவல்லான் என்று திருப்பெயர் சூட்டினான்.

* * *

தில்லைக்கோயிலில் 18-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் போர்கள் நடந்தன. அப்போது நடராசர் திருவுருவம் தஞ்சை அரசர்களின் பாதுகாப்பில் திருவாரூருக்கு எடுத்துச் செல்லப்பெற்றது. கலி 4874, சாகா 1695 இல் தான் அது மீண்டும் தில்லைக்குக் கொண்டுவரப்பட்டதாக ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது. விவரம் இந் நூலிலுள்ள ஆங்கிலக் கட்டுரையில் 35-ஆம் பக்கத்தில் காண்க.

— பதிப்பாசிரியர்.

செப்பறை

‘ சோமலெ ’

தாமிர சபை என்றும் செப்பறை என்றும் சொல்லப் பெறும் நடராச சபை, திருநெல்வேலியிலிருந்து 13 கி. மீ. தொலைவில் பொருநையாற்றின் கரையிலுள்ள தலம். சோலையும் வயலும் சூழ்ந்த பதி. இறைவன் நடராசர்; இறைவி சிவகாமவல்லி. இவ்விரு பெயர்களின் ஈற்றுச் சொல்லும் சேர்ந்து இராசவல்லிபுரம் என்னும் காரணப் பெயரால் இவ்வூர் விளங்குகிறது. ‘தென் தில்லைமன்று’ என்றும் இவ்வூரைக் கூறுவர்.

ஆனால் நடைமுறையில், செப்பறை என்பது திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள கவினுறு நடராசர் சந்நதியைக் குறிக்கிறது.

திருநெல்வேலி

‘ சோமலெ ’

இத்தலத்தில் சிவபெருமான் ஆடிய தாண்டவத்திற்கு முனி தாண்டவம் அல்லது காளிகா தாண்டவம் என்று பெயர். இது, படைப்புத் தொழிலுக்காக இறைவன் ஆடிய முதல் தாண்டவம் என்றும் இதற்குப் பின்னரே ஏனைய தாண்டவங்கள் எழுந்தன என்றும் கூறுவர். இதனால் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் எட்டாந் திருமுறையில் சிதம்பரம் ஆனந்தத் தாண்டவமூர்த்தியைப் பாடும்போது,

“ தில்லையூர்க் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே ”

என்று பாடினர்.

நெல்லையப்பர் கோயிலில் பல மண்டபங்களில் நடராசர் திருவுருவங்கள் உள்ளன. இவை நன்ருகவும் அமைந்திருக்கின்றன. இவற்றின் சந்தனக்காப்பிட்ட கோலம் காண்பதற்கு தனி சிறந்த காட்சியாகும்.

4 அடி உயரத்தில் நடராசரின் செப்பு உருவம் ஒன்று திருவாவடுதுறை ஆதீனத்தாரால் நெல்லையப்பர் கோயிலில் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளது.

சிதம்பரமும் சைவசமயமும்

தமிழ் நூல்களிலும் வடமொழி நூல்களிலும் தில்லைத் திருக்கோயில்
சிறந்த சிவஸ்தலமாகவே போற்றப்படுகின்றது. பதஞ்சலி முனிவர்,
வியாக்கிரபாதர் ஆகிய பெரியோர்கள் வாழ்ந்த மிகப் பழைய காலத்
திலேயே சிதம்பரம் சைவ ராசதானியாக விளங்கியுளது. :திருமூலர்
காலத்திலேயே தில்லைக்கோயில் சைவர்க்குச் சிறப்புரிமையுடையதாய்
விளங்கி வந்துளது. மூவர் தேவாரங்களும் ஏனைய திருமுறைகளும்
தில்லைத் திருக்கோயிலையே சிவதலங்களெல்லாவற்றிலும் முதன்மை
யுடையதாக வைத்துக் கோயில் என்னும்பெயருடன் போற்றியுள்ளன.
சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர் ஆட்சியிலும் இடைக்
காலத்தில் வந்த பல்லவ மன்னர்கள் ஆட்சியிலும் பிற்காலத்தில் வந்த
விஜயநகர வேந்தர் ஆட்சியிலும் சிதம்பரம் கோயில் நடராஜாவுக்
குரிய திருக்கோயிலாகவே சாசனங்களில் வரையப்பட்டுள்ளது.
இதனைச் சிதம்பரத்திலுள்ள எல்லாக் கல்வெட்டுகளாலும் நன்
குணரலாம். இக்கல்வெட்டுக்கள் யாவும் இத்திருக்கோயிலின் ஆட்சி
யுரிமைகளெல்லாம் சிவனடியார்களாகிய மாகேசுரர்க்கும் தில்லை
வாழந்தணர்களுக்கும் உரியனவென்றே கூறுகின்றன. இவற்றால்,
தில்லைப் பெருங்கோயில் சைவசமயத்தார்க்குச் சிறப்புரிமையுடைய
தென்பது நன்கு விளங்கும். சரித்திரப் பிரசித்தமானதும் சாஸ்திர
சம்பிரதாயத்தோடு ஒத்துவருவதும் ஆகிய இவ்வுரிமையை யாரும்
மறுக்கமுடியாது.

மூர்த்தத்தைச் சிதம்பரம் கோயிலிற் கொண்டுவந்து முதன்முதற்
பிரதிஷ்டை செய்தவன் நந்திவர்ம பல்லவ மன்னனாவன். இச்செய்தி
தில்லைத் திருச்சித்திரக்கூடத்தைப் பற்றித் திருமங்கையாழ்வார்
பாடிய பெரியதிருமொழியால் உய்த்துணரப்படுகின்றது.

"பைம்பொன்னும் முத்தும் மணியுங் கொணர்ந்து
படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த
.........தில்லைத் திருச்சித்திரக்கூடம்" [பெ.தி,3,2,3]

என்று திருமங்கை மன்னன் பாடுதலால் பல்லவவேந்தனால் இக்
கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பது புலனாகின்றது. இவ்
வாறமைந்த கோயிலைச் சித்திரக்கூடம் என்று வழங்குதலால் இது
சிதம்பரம் நடராசர் கோயிலின் புறத்தே திண்ணையளவிலமைந்த
சிறிய இடம் என்று நன்கு விளங்குகிறது. 'சித்திரக்கூடம் தெற்றி

யம்பலம்' என்பது திவாகரம். தெற்றி - திண்ணை. திண்ணையள விலமைந்த சிறிய இடத்திலேயே நந்திவர்ம பல்லவன் பெருமானைப் பிரதிஷ்டை செய்திருந்தான் என்று தெரிகிறது. இம்மன்னன் முதலில் சைவ வைஷ்ணவ மதங்களில் சமநோக்குடையவனாக இருந்து பின் திருமங்கை மன்னனுடைய கூட்டுறவினால் பரம வைஷ்ணவனாக மாறியவன். பரம வைஷ்ணவனாக மாறிய பின்பே தில்லைக்கோயிலின் புறத்தே பெருமானைப் பிரதிஷ்டை செய்தானென்று தெரிகிறது.

இச்சித்திரகூடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமானை முற்காலத்தில் முறைப்படி ஆராதித்து வந்தவர்கள் தில்லைமூவாயிரவர் எனச் சிறப்பித்துப் போற்றப்பெறும் தில்லைவாழந்தணர்களேயாவர். இப்பெருமாள் திருவுருவம் நடராசர் கோயிலைச் சார்ந்த பரிவார தெய்வம் என்ற நிலையிலேயே சைவர்களாகிய தில்லைவாழந்தணர் களால் முறைப்படி பூசை செய்யப்பட்டு வந்ததென்று தெரிகிறது.

" மூவாயிரம் நான்மறையாளர் முறையால் வணங்க
... ...
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்திரக்கூடம்''
[பெ.தி. 3,2,8]

எனத் திருமங்கையாழ்வாரும்,

" தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
அந்தணர்க ளொருமூவா யிரவ ரேத்த
அணிமணியா சனத்திருந்த அம்மான் " [குல.தி. 10-2]

எனக் குலசேகராழ்வாரும் அருளிச் செய்த திருவாக்குகளால் இச் செய்தி வலியுறுதல் காண்க.[1]

குலோத்துங்க சோழனால் தில்லைத்திருக்கோயிலிலிருந்து அப்புறப் படுத்தப்பட்ட கோவிந்தராசர் திருவுருவத்தை இராமாநுஜர் கீழைத் திருப்பதியிற் கொண்டு சேர்த்து அங்கே பிரதிஷ்டை செய்தார் என இராமாநுஜ திவ்யசரிதை கூறுகிறது. 'இவராற் பிரதிஷ்டை பண்ணப் பட்ட திருவுருவம் இன்றும் அங்கேயுள்ளது என்பது இப்போது சிதம்பரத்திலுள்ள கோவிந்தராஜப் பெருமாள் திருவுருவம் விஜயநகர அரசன் அச்சுதராயன் காலத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப் பட்டதென்பதும் வரதராஜ அய்யங்கார் பாடிய பாவத புராணத்தில் திருவரங்கப் படலத்திலுள்ள 63, 99-ம் செய்யுட்களால் நன்குணரப் படும்.

சிறந்த வைஷ்ணவனாகிய கிருஷ்ணதேவராயன் சிதம்பரத்திற் பொன்னம்பலநாதனைச் சேவித்ததைச் சொல்கின்றனே தவிரக் கோவிந்தராசப் பெருமாளைத் தரிசித்ததாகச் சொல்லவில்லை. நடராசப்பெருமானை வணங்கி மலைபோன்று காட்சியளிக்கும் சிதம்பரம் வடக்குக் கோபுரத்தைக் கட்டியவன் இவ்வேந்தன்.

கிருஷ்ணதேவராயனுக்குப்பின் கி. பி. 1529-ல் பட்டத்துக்கு வந்தவன் அவன் தம்பி அச்சுதராயன். 1539-ல் தில்லை நடராசர் கோயிலில் கோவிந்தராசப் பெருமாளை மீண்டும் பிரதிஷ்டை செய்து வைகாநச சூத்திரத்தின்படி பூசை நடக்க 500 பொன் வருவாயுள்ள நான்கு கிராமங்களின் வரிப்பொருளையும் கொடுத்துள்ளான். ஆகவே கி. பி. 1539ம் ஆண்டு முதற்கொண்டுதான் கோவிந்தராஜப் பெருமாள் வழிபாடு வைஷ்ணவ ஆகமமுறைப்படி வைஷ்ணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது.

கி. பி. 1597-ல் நடராசர் கோயில் முதற்பிரகாரத்திலேயே கோவிந்தராஜர்க்கெனத் தனிக்கோயிலை அமைக்க முயன்றனர். இந்நிலையில் தில்லைப் பெருங்கோயிலுக்குப் பண்டுதொட்டு உரிமையாளராயிருந்து வரும் தில்லைவாழந்தணர்களும் தில்லை நகரப் பொது மக்களும் அவனது வன்செயலைத் தடுத்தார்கள். சைவசமயத்தார்க்கேயுரிய நடராசர் கோயிலின் உட்பிரகாரத்தினுள் கோவிந்தராஜப் பெருமானுக்குத் தனிக் கோயில் அமைத்தல் கூடாதென்றும் முன்னிருந்த தெற்றியம்பலமாகிய சிறு இடத்திலேயே பெருமாள் பூசை நடந்தாற்போதுமென்றும் தில்லைவாழந்தணர்களும் பொது மக்களும் எவ்வளவோ கேட்டுப்பார்த்தும் கொண்டமநாயக்கன் அவர்களுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. தில்லைவாழந்தணர்கள் தங்கள் உயிரைக்கொடுத்தேனும் இவ்வன்செயலைத் தடுக்க உறுதிகொண்டு தாங்கள் உயிரோடிருக்கும்வரை நடராசர் கோயில் உட்பிரகாரத்தில் பெருமாள் கோயிலைக் கட்டுவதற்கு இணங்க முடியாதென்றும் சொல்லி தில்லைவாழ் அந்தணர் ஒருவர் பின் ஒருவராகக் கோபுரத்தின் மேலேறிக் கீழே விழுந்து உயிர் துறப்பாராயினர். இவ்வாறு இருபது பேர்வரை இறந்துபோன துன்ப நிலையைக் கண்டும் உளம் நெகிழாத கொண்டமநாயக்கன் கோபுரத்தின் மேலேறித் தற்கொலை செய்ய முந்துபவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளும்படி கி. பி. 1597-ல் உத்தரவிட்டான். அவன் உத்தரவின்படி தில்லைவாழந்தணர் இருவர் சுடப்பட்டு இறந்து போயினர். இவ்வாறு தம்மினத்தவர்க்கு நேர்ந்த துன்பநிலைக்குச் சகியாமல் தில்லைவாழந்தணர் குடும்பத்தைச் சேர்ந்த அம்மை

யொருவர் தமது கழுத்தையறுத்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இவ்வாறு அரசாங்க அதிகாரியின் சமயப் பிடிவாதங் காரணமாகச் சிதம்பரத்தில் இத்துன்பங்களெல்லாம் நிகழ்ந்த காலத்தில் மேலைநாட்டிலிருந்து யாத்திரை காரணமாகத் தமிழ் நாட்டிற் சுற்றுப்பிரயாணஞ்செய்த வெள்ளைக்காரப் பாதிரியாராகிய பிமெண்டா (Jesuit Father N. Pimenta) என்பவர் கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கன் செய்த இக்கொடுங்கோன்மையை நேரிற் கண்டுவருந்தியதுடன் இக்கொடுஞ்செயலைத் தம்முடைய யாத்திரைக் குறிப்பிலும் குறித்துள்ளார்.[2]

கி.பி. 1867-இல் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தில்லைவாழந்தணர்களுக்கு எழுதிக் கொடுத்த உடன்படிக்கையில் தாங்கள் கோவிந்தராஜப் பெருமாளுக்குச் செய்துவரும் நித்திய பூசைகளைத் தவிர வேறு பிரமோற்சவம் நடத்துவதில்லையென ஒப்புக்கொண்டு உறுதி கூறி யுள்ளார்கள். அவ்வுறுதியின் பேரில்தான் இருதிறத்தார்க்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.[2] அது இன்றளவும் ஒழுங்காக அநுஷ்டா னத்தில் இருந்து வருகிறது. இத்தகைய உடன்பாட்டினுல்தான் சிதம்பரந் திருக்கோயிலில் சைவரும் வைஷ்ணரும் அன்பினுல் ஒன்று கூடித் தங்கள் தங்கள் தெய்வத்தை வழிபடும் அமைதி நிலை இன்று வரை சிறப்பாக வளர்ந்து வருகிறது.

1 இவ்வாறே காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் பரிவார தெய்வமாக அமைந்துள்ள திருமாலை நிலாத்திங்கள் துண்டத்தான் எனத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்திருப்பதும் திருமால் பூசையை இன்றளவும் ஆதிசைவக் குருக்கள் மேற்கொண் டிருப்பதும் இங்கு ஒப்புநோக்குவதற்குரியனவாம். — 'சோமலெ'

2. Chidambaram in Vijayanagar Days by Mr. S. R. Balasubramaniam (Journal of the Bombay Historical Society Vol. IV No. 1 PP. 40-54.)

இக்கட்டுரைக்கு ஆதாரம் —

" தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயிலின் பழமையும் திருச்சித்திரகூட அமைப்பும் "

வெளியிட்டோர் : தில்லைத் திருமுறைக் கழகத்தார், சிதம்பரம், 1953.

சிதம்பரம் வட்டத்தில் தேவாரத் தலங்கள்

கோயில் (சிதம்பரம் - தில்லை) :

சிதம்பரம் ரயிலடியிலிருந்து கோயில் $\frac{3}{4}$ கல். தொன்மையில் தில்லைக்காடாக இருந்தபொழுது புலிக்கால் முனிவர் தவம் புரிந்து பூசை செய்த இடம். பின் இரண்ய வர்மன் கோயிலாகக் கட்டினன். உமாபதி சிவனர் இயற்றிய கோயில் புராணத்தில் இக்குறிப்பு உள்ளது. இக்கோயிலில், (1) கூத்தப்பெருமான் இருக்கும் சிற்றம் பலம். (2) அதனை அடுத்து எதிரிலுள்ள பொன்னம்பலம் (கனகசபை), (3) ஊர்த்துவதாண்டவமூர்த்தி கற்சிலையுள்ள நடன (நிருத்த) சபை (இது கொடி மரத்துக்குத் தெற்கில் உள்ளது), (4) பேரம்பலம் (தேவ சபை - வடகிழக்கு மூலையில் உள்ளது -எழுந்தருளும் திருமேனிகள் உள்ள இடம்), (5) ஆயிரக்கால் மண் டபம் (ராஜ சபை என 5 சபைகள் உள்ளன. சிற்றம்பலத்தின் கூரை 21600 தங்க ஓடுகளால் ஆனது. நிமிடத்திற்கு 15 மூச்சு வீதம் ஒரு நாளைக்கு (24 மணி) 21600 மூச்சு ஆகின்றது. இதுவே தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை. உள்ளிருக்கும் கூத்தப் பெருமான் உயிர்க்குயிரானவன். இதயப் பெருவெளியில் நட்டம் புரிபவன். இப்படிப் பல தத்துவ உட்கருத்துக்கள் உண்டு. பொன் னம்பலத்திலிருந்து சிற்றம்பலம் ஏற 5 படிகள் உண்டு. இவை ஐந்தெழுத்துப் படிகள். ஐந்தெழுத்தின் வழி இறை வனைக் காணலாம். படியின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. இந்த யானைகளில் ஒன்று திருக்களிற்றுப்படியார் நூலைத் தில்லைக்கூத்தன் திருவடியில் சேர்த்தது. பல சோழ மன்னர்கள் இந்தப் படிகளில் முடி சூட்டிக் கொண்டதாக வரலாறு. திருமால், பிரமன் இசைக்கருவிகளை ஒலிக்க, இறைவன் என்றும் திருக் கூத்துப் புரிகின்றன். திருநடனம் ஐந்தொழில்களைக் குறிக்கும் (தோற்றம் துடியதனில்) கூத்து நின்றால் உலக இயக்கமும் நிற்கும். அம்மை சிவகாம சுந்தரி, இக் கூத்தினை நம் பிறவிப்பிணி போக்க நம் பொருட்டுக் காண்கிருள் (பாலுண் குழவி — குமர குருபரர்) கூத்தனின் இடது பக்கம் அம்மை; வலது பக்கம் இரகசியம். ஐந்து தலங்களுள் இது ஆகாயத் தலம். இதன் அறிகுறியாக ஆகாயத்திற்குப் பல பொன் வில்வ மாலைகள் தொங்கவிடப் பட்டுள்ளன. திரையை நீக்கிக் காண்பதால், மறை பொருள்

(ரகசியம்) கண்டால் வீடளிக்கும் தலம். காண்பதே பிறவிப் பெரும் பயன். (குனித்த புருவம்- அப்பர்). 'என்று வந்தாய்' என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பை என்றும் யாரும் கண்டு மகிழலாம். திருவிசைப்பா ஆசிரியர்கள் அடி முதல் முடிவரை துய்த்ததைத் திருவிசைப்பாவில் (12-22; 215-225) காணலாம். கூத்தரின் திருவிளையாடல்கள் எண்ணற்றன. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தான். பாற்கடல் உண்ட உபமன்யு கண்ணனுக்குத் திருவடிதீக்கை செய்து ஐந்தெழுத்தை அருளினர். கயிலையில் இவரே முனிகணங்கட்குச் சுந்தரர் வரலாற்றை உரைத் தவர். பாற்கடல் வற்றியதால் திருமால் இங்கு கூத்தனைக் காண்கிறர். கூத்தனையும் திருமாலையும் ஒருங்கே ஓரிடத்தில் நின்று காணலாம். இப்படி வேறு எவ்வூரிலும் காண இயலாது. சேரமான் (கழறிற் றறிவார்) வழிபாட்டில் சிலம்பொலி கேட்கக் காலம் தாழ்ந்த காரணத்தால் சுந்தரரின் தோழமையைக் கூத்தர், சேரமானுக்குத் தந்தார். திருநீலகண்டத்துக் குயவனர், கணம்புல்லர், செங்கட் சோழர், கூற்றுவர் முதலியோர் வீடு பெற்ற இடம். தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதி சிவத்தின் ஏற்றத்தை அறியும்படி அவரால் கொடிக்கவி பாடவைத்த இடம். அவருக்குச் சீட்டெழுதி பெற்றன் சாம்பானுக்கு வீடளித்த இடம். திருவிழாவில் சேந்தனர் திருப்பல் லாண்டு பாடி, தடைப்பட்டதேர் ஓடவைத்து அவர் அருளிய அமுதை உண்ட திருவிளையாடலும், அவன் அடியார்க்கு எளியன் என்பதையும் காட்டும். மாணிக்கவாசகரைக் கொண்டு ஈழநாட்டுப் புத்தர்களை வாதில் வென்று, ஊமைப் பெண்ணைப் பேசவைத்துக் திருச்சாழல் கொண்டார். " பாவை பாடிய வாயால் கோவை பாடு " என்று வேண்டி அவர் பாடும்போது ஏடும் எழுத்தாணியும் கைக்கொண்டெழுதி இறுதியில் 'அழகிய சிற்றம்பலவன்' என்று கைச்சாத்திட்டுச் சிற்சபையில்வைத்தார். வாதவூர் அடிகளையும், திரு நாளைப் போவாரையும் அனைவரும் காணத் தம்திருவடியில் மறைத்து வீடருளினர். நம்பியாண்டார். நம்பிகட்குத் திருமுறைகள் சேமிக்கப் பெற்றிருந்த அறையைக் காட்டியருளி, திருமுறைகளை வெளிப்படுத் தினர். சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டர் புராணத்தை முடிக்கச் செய்தார். திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றச் செய்து சேக்கிழாரையும், அவர் இயற்றிய தொண்டர் வரலாற்று நூலையும் யானைமேலேற்றி அரசன் பின்னிருந்து துணைக்கரத்தால் இணைக் கவரி வீசி, நகர்வலம் வரச்செய்து சைவத்தை வளர்த்தார். இத்தலத்தின் பெருமை, மடித் தாடும் கூத்தனின் கருணை அளந்தறிதல் மன்னுயிர்க்கருமையாம். நடுஇரவு பூசை முடிந்தவுடன் எல்லாக் கோயில்களிலும் உள்ள

சிவகலைகள் இங்குள்ள மூலட்டான லிங்கத்தில் ஒடுங்குவதால், இவர் திருமூலட்ட நாதர் என்ற பெயர் பெறுவார். சிவகாமி அம்மை, பாண்டி நாயகம் (ஆறுமுகம்), முக்குறுணிப்பிள்ளையார், சிவகங்கை முதலியன சிறப்புடையன. இளமையாக்கினர் கோயில் (திருப்புலீச்சுரம்), பதஞ்சலியார் கோயில், தில்லை மாகாளி கோயில், மறைஞான சம்பந்தர் (சிங்காரத் தோப்பு), கொற்றவன் குடியில் உமாபதிசிவம் திருக்கோயில் ஆகியன காணத்தக்கவை. மார்கழித்திருவாதிரை, ஆனி உத்தரம் ஆகிய இவற்றை 10-ஆம் நாளாகக் கொண்ட பெரு விழாக்கள் நடைபெறுகின்றன. 9-ஆம் நாள் காலையில் தில்லைக் கூத்தன் தேர்க்கு எழுந்தருளித் திருவீதிகளில் காட்சி தந்து, இரவு ஆயிரக்கால் மண்டபம் சென்று, விடிவதன்முன் திருமுழுக்கு செய்யப் பெற்று, 10-ஆம்நாள் பகல் சிற்றம்பலத்திற்கு எழுந்தருளும் அருட் காட்சியை அன்பர்களுக்கு வழங்கி, சிற்றம்பலம் நுழைந்து நாள் தோறும் ஆறுகால பூசை கொண்டருள்வது நடைமுறை. நாள் தோறும் ஆறுகால பூசை ஸ்படிக லிங்கத்திற்கும், பகல் 2-ஆம் கால பூசை இரத்தினசபாபதிக்கும் நீராட்டும் வழிபாடும் நடைபெறும். சித்திரைத் திருவோணத்திலும், ஆவணி, புரட்டாசி, மாசி பதினான்காம் பிறை (சதுர்த்தசி) நாளிலும் நடக்கும் 4 திருமுழுக்குகளும் பொன்னம்பலத்தில் நடைபெறும். ஆழ்வார் பாடிய இடத்தைத் தில்லைத்திருச்சித்திரகூடம் என்பர். குலசேகரரும், திருமங்கை மன்னனும் பாடிய பெருமாள். அம்பலத்தாடியார் மடமும், திருப் பாற்கடல் [குருநமச்சிவாயர்] மடமும் மணிவாசகர் வரலாற்றுத் தொடர்பும் உடையன.

1/80. கற்றுங்கு : 864-74; 3/1. ஆடினாய் : 2801-11; 4/22. செஞ்சடை : 4376-86 ; 4/23. பத்தனாய் : 4387-96 : 4/80. பாளையுடைக்கமுகு : 4928-37 ; 4/81. கருநட்டுகண்டனை : 4938-47 : 5/1, அன்னம்பாலிக்கும் : 5229-39 : 5/2. பனைக்கை 5240-49; 6/1. அரியானை : 6244-53 : 6/2. மங்குல்மதி : 625-64 ; 7/90. மடித்தாடு : 8137-46 ; 1/61-9 : 664 ; 2/39 (175)-1 : 1884 (தில்லை அம்பலம்); 2/87. (223)-5 : 2414 (அம்பலம்); 2/94 (230)-9 : 2494 (தில்லை) 3/33 (291)-2 : 3151 (தில்லை); 4/57-4 : 4709 (தில்லை); 4/96-9 : 5099(தில்லை); 5/30 (143)-6 : 5528 (தில்லை); 5/33 (146)-1 : 5554 (தில்லைச் சிற்றம்பலம்) ; 5/65 (178)-5 : 5884 (தில்லை) 5/78 (191)-3 : 6009 (தில்லை) ; 6/5 (218)-3 ; 6289 (தில்லை) ; 6/7 (220)-1 : 6307 (தில்லை) : 6/22 (235)-2 : 6465 (பெரும் பற்றப்புலியூர்) ; 6/51 (264)-5 : 6756 (புலியூர்) : 6/51 (264)-6 : 6757 (பெரும்பற்றப்புலியூர்) ; 6/54 (267)-6 : 6789

(தில்லை) ; 6/70 (283)-1 : 6944 (தில்லை) ; 6/71 (284)-4 : 6958 (பெரும்பற்றப்புலியூர்) ; 6/71 (284)-5 : 6959 (திருக் கோயில்); 6/72 (285)-1 : 6966 (அம்பலம்) ; 6/76 (289)-5 : 7002 (பெரும்பற்றப்புலியூர்); 6/78 (291)-7 : 7024 (அம்பலம்) ; 6/81 (294)-6 : 7053 (தில்லை) ; 6/82 (295)-1 : 7056 (தில்லை) 6/82 (295)-9 : 7064 (தில்லை) 6/86 (299)-4 : 7098 (தில்லை) ; 6/96 (309)-7 : 7189 (தில்லை).

திருவேட்களம் :

சிதம்பரம் ரயிலடிக்குக் கிழக்கே உள்ள அண்ணுமலை நகரின் கிழக்கு எல்லை. அருச்சுனர் பாசுபதம் பெற்ற இடம், அருச்சுனர், பாசுபத கோலமூர்த்தியாக 2 செப்புச் சிலைகள் உள்ளன. பாசுபத விழா வைகாசி விசாகத்தில் நடைபெறுகிறது. சிதம்பரம் நகரத் திலிருந்து அண்ணுமலை நகருக்கு பஸ்வசதி உண்டு. அண்ணுமலைப் பல்கலைக் கழகம் உள்ள ஊர்,

1/39. அந்தமும் ஆதியும் : 415-25 ; 5/42. நன்றுநாள் : 5644-53 ; 6/51 (264)-4 : 6755 ; 6/70 (283)-6 : 6949 ; 6/71 (284)-10 : 6964.

நெல்வாயில் (சிவபுரி) :

கழிப்பாலை :

திதம்பரம் ரயிலடிக்குக் கிழக்கே உள்ள அண்ணுமலை நகர் வழியாகத் தென்கிழக்கில் சென்ருல் ரயிலடியிலிருந்து 2 கல். கொள்ளிட வடகரை காரைமேட்டிலிருந்த கழிப்பாலைக் கோயிலை கொள்ளிடம் அழித்து விட்டது. அதனைச் சிவபுரியில் (நெல் வாயில்) தனிக் கோயிலாகக் கட்டியிருக்கின்றனர். சிவபுரிக்கோயில் வடக் கேயும், கழிப்பாலைக் கோயில் தெற்கேயும் அமைந்துள்ளன. கழிப் பாலைக் கோயில் இலிங்கம் சிறியது; வெண்ணிறமானது பால்வண்ண நாதர் எனும் பெயருடையது. நெல்வாயில் கோயிலின் கருவறையில் அம்மையப்பர் உருவங்கள் உள்ளன.

நெல்வநாயில் : 2/26. புடையினுல் : 1742-52 ;6/7 (220)-9 : 6315,

கழிப்பாலை : 2/21. புனலாடிய : 1688-98 ; 3/44 வெந்த குங்குலிய : 3266-76 ; 4/6. வனபவளவாய் : 4210-19 ; 4/30. நங்கையைப்பாகம் : 4452-61 ; 4/106. நெய்தற்குருகு : 5171-73: 5/40. வண்ணமும் : 5625-33 ; 6/12. ஊனுடுத்தி : 6360-69; 7/23. செடியேன் : 7453-62 ; 1/76-2 : 821 ; 2/39 (175)-1 : 1884; 6/7 (220)-6 : 6312 ; 6/33 (246)-8 : 6580; 6/70 (283)-6 : 6949,

கூடலையாற்றூர்

சிதம்பரத்திலிருந்து கானூர் வழியாக ஸ்ரீ முஷ்ணம் (வைணவத் தலம்) செல்லும் பஸ்ஸில் செல்லலாம். சிதம்பரம் - குமாரகுடி 12 கல். அணைக்கரை - சேத்தியாத் தோப்பு சாலையில் குமாரகுடி உள்ளது. குமாரகுடியிலிருந்து கூடலையாற்றூர் மேற்கே 4 கல். மணிமுத்தாறும் வெள்ளாறும் (நிவா) கூடும் இடமே கூடலையாற்றூர். ஆறு கூடுமிடத்திலிருந்த பழைய கோயில், வெள்ளத்தால் அழிந்ததால் வேறு இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. முதுகுன்றம் செல்லும் சுந்தரரை இவ்வழியாகத்தான் செல்லவேண்டும் என்று சொல்லி. இறைவன் இவ்வூரில் மறைந்தார். இவ்வூர்ப் பாடல் தொறும் இச்செய்தி காண்க.

7/85. வடிவுடை : 8086-95.

நாரையூர் :

சிதம்பரத்திற்குத் தென்மேற்கில் 11 கல். சிதம்பரம்-மன்னார்குடி பஸ்ஸில் போகலாம். சாலையிலிருந்து கோயில் ¾ கல். இவ்வூரில் இருந்த நம்பியாண்டார் நம்பி, பொள்ளாப்பிள்ளையார் (உளியினால் பொள்ளப்படாதது-தான்தோன்றி) அருளினால் சிதம்பரத்திலிருந்த தேவாரத் திருமுறைகளை வெளிப்படுத்தினார். இங்கு உள்ளங்கவரும் நம்பியாண்டார் நம்பிகளுடைய செப்புச் சிலை உண்டு,

2/86. உரையினில் ; 2399-409 ; 3/102. காம்பினைவென்ற : 3890-900; 3/107. கடலிடை : 3945-55 ; 5/55. வீறுதானுடை: 5880-89 ; 6/74. சொல்லானை : 6977-86 : 2/39 (175-1 : 1884 ; 6/7. (220)-1 : 6307 ; 6/51 (264)-8 : 6759 ; 6/70 (283)-10 : 6953 ; 6/71 (284)- : 6958.

ஓமாம்புலியூர் :

கொள்ளிட வடகரை ஊர். சிதம்பரத்தின் தென் மேற்கே 15-வது கல் காட்டுமன்னார்குடி. அங்கிருந்து ஓமாம்புலியூர் தெற்கே 5 கல். மன்னார்குடி வரையில் பஸ் உண்டு. அங்கிருந்து ஓமாம்புலியூருக்கு பஸ்ஸில் செல்ல நல்ல சாலை இருக்கிறது. இதற்குத் தென்கிழக்கே 2½ கல்லில் கானாட்டுமுள்ளூர் (கானாட்டாம்புலியூர்) உளது. இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையே கொள்ளிட வடகரையில் முட்டம் என்ற ஊர் உள்ளது. முட்டத்துக்கு நேர் தென்கரையில் மண்ணிப் படிக்கரை (இலுப்பைப்பட்டு) இருக்கிறது. தோணி வசதியுண்டு. இவ்வூர்த் தேவாரத்தில் அந்தணர் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். தென்முகக் கடவுளின் சிறப்புடைய ஊர். பழைய, சிறிய கோயில்.

3/122. பூங்கொடி : 4111-20 ; 6/88. ஆராரும் : 7112-20 ; 6/70 (283)-10 : 6953 ; 6/71 (284)-4 : 6958.

கானாட்டுமுள்ளூர் (கானாட்டாம்புலியூர்):

சிதம்பரத்திற்குத் தென்மேற்கில் 15-வது கல் காட்டு மன்னார்குடி. அங்கிருந்து தெற்கே ஓமாம்புலியூர். 5 கல். அங்கிருந்து கானாட்டுமுள்ளூர் வடகிழக்கே 2½ கல். இரண்டு ஊருக்கும் இடையே முட்டம் என்ற ஊர் இருக்கிறது. முட்டம், ஓமாம்புலியூர், கொள்ளிட வடகரை ஊர்கள். முட்டத்திற்கும் இலுப்பைப்பட்டு (மண்ணிப்படிக் கரை)க்கும் தோணி வசதி உண்டு. முட்டத்திற்கு வடக்கே 1 கல்லில் கானாட்டுமுள்ளூர் உளது. முட்டத்தின் மேற்கே 1½ கல்லில் ஓமாம் புலியூர் உளது.

74/0 வள்வாயமதி : 7628-38.

கடம்பூர் (மேல் கடம்பூர்) :

காட்டுமன்னார்குடியிலிருந்து தென்மேற்கில் 3 கல். இதன் கிழக்கே 1 கல்லில் கடம்பூர் இளங்கோயில் (வைப்புத்தலம்) இருக்கிறது. கருவறை தேர், சக்கரம், குதிரைகளுடன் சிற்ப முறையில் உள்ள கரக்கோயில்.

2/68. வானமர்திங்களும் : 2600-10 ; 5/19. தளரும்கோள் : 5412-22 ; 5/20. ஒருவராய் : 5423-32 ; 2/39 (175)-7 : 1890; 6/7 (220)-10 : 6316 ; 6/70 (283)-5 ; 6948 : 6/71 (284)-5 : 6 59 (இளங்கோயில்).

[தேவாரத் தலக் குறிப்புகள் (தென்னார்க்காடு) தி. கி. நாராயணசாமி, கடலூர் N. T.]

தில்லை கோவிந்தராஜன் கோயில்

கே. வி. சௌந்தரராஜன்

தில்லையம்பலம் அல்லது சிற்றம்பலம் என்று அழைக்கப்படும் தலம் அதனுடைய சிறப்பால் அதனுள் குடி கொண்ட கூத்தபிரானின் கோயிலைக் குறிக்கும் பெயருடன் ஒன்றி விட்டது நமது தமிழ்ச்சமய வழிபாட்டின் அருமை களிலொன்று. இச் சொல்லைத்தான் சித்ரகூடம் தில்லைத்திருச்சித்ர கூடம் என்று ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் வழங்கியுள்ளார்கள். இதனால் நாம் அறியத்தகுந்த உண்மையாதெனில் சித்ரகூடம் என்னும் தலத்தில் ஆடவல்லானும் அரனும் அரங்கத்தம்மானுக இன்று காட்சி தரும் அரியும் ஒருங்கே கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள் புரிந்து வந்திருக்கிருர்கள் என்பது தான். ஆகவேதான் சித்ர கூடம் என்னும் சொல்லும் சிற்றம்பலம் என்னும் சொல்லும் ஒரே கோயிலைக் குறிப்பதாக நாம் உணர வேண்டிய உண்மை. சொல்லப் போனல் நடராஜனும் நாராயணனும் ஒரே இடத்தில் வழிபடத் தயாராக அமைந்திருப்பது தான் தில்லையின் சிறப்பு. நடராஜரு டைய அண்மையில் தான் நாரணன் இருக்கிருர் என்னும் உணர்வு ஆழ்வாராதியர் பாசுரங்களிலிருந்தே நமக்கு நன்கு வெளிப்படுத் தப் படுகின்றது. “ கானுட மஞ்சைக்களமாட ” என்றெல்லாம் தில்லையில் திருச்சபையில் நடமாடும் அரனை நினைவு படுத்திக் கொண்டே அமைகிறது ஆழ்வார் பாசுரம். இன்று கோவிந்தராஜர் சந்நிதியாக விளங்குவது விஜய நகர மன்னர் அச்சுதராயர் காலத் திய சமயத் தொண்டாக இருப்பினும்,ஆழ்வார்கள் உகந்தபடி திருமால் இங்கு சற்றேறக்குறைய கி. பி. 8ம் நூற்ருண்டின் ஆரம்பத் திலிருந்து இங்கு கோயில் கொண்டுள்ளான் என்று தெரிகிறது. சமயப்பூசல்கள், குறிப்பாக வைணவ சமயத்துக்கும் சைவ சமயத் துக்குமிடையே மலிந்த பிந்தைய சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கன் (12ம் நூற்ருண்டின் ஆரம்பப் பகுதி) காலத்தில் திருமாலின் திருவுருவம் அகற்றப்பட்டு கோயில் களையிழந்து போயிற் றென்ற வரலாறு எவ்வாருயினும் இங்கு சிலமுக்கியமான சான்றுகள் கலைக்கும் சமயத்துக்கும் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த விதத்தில் நமக்குக் கிட்டுகின்றன.

முதலாவதாக பல்லவர் காலத் தொடர்ச்சியிலிருந்தே அரியும் அரனும் சேர்ந்து வணங்கப்படுவது முக்கியமானதொரு

தத்துவமாகும். ஹரிஹரன் என்னும் கூடிய, இணங்கிய சிற்ப வடிவத்தை சிற்பிகள் நம் நாடெங்கும் வடித்த வகையில் பல்லவர் களின் ஆரம்ப காலத்திலும் அதேபோல முதல் பாண்டியர்களின் காலத்திலும் நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிருர்கள். மும்மூர்த் திகளையும் சேர்த்து வணக்கத்துக்குரியதாக வழிபடுவதும் அக்காலத்திய போக்கு. இதை மகாபலிபுரத்தின் சிற்பங்களிலெல்லாம் சிறப்பாகக் கண்டு களிக்கலாம். ஆயினும் கடவுளர்களுக்கு கோயில் அமைத்தகாலத்தில் அவரவர்களுக்கு தனித்திசையும் சாந்நித்யத்தின் எல்லையும் வகுப்பது கோயில் கட்டுமானக் கலையின் மரபுகளில் ஒன்று. அதையொட்டி தில்லையில் திருமால் கிழக்கு நோக்கி அமைந்திருக்கிருர். ஆடவல்லான் தெற்கு நோக்கி உட்புறத்திலிருந்து விளங்குகிருன். திருமாலுக்கு கிழக்குநோக்கும் பாணி பொதுவாக எல்லாக் கோயில்களிலும் நாம் காண்பது. நடராஜருக்குத் தெற்கு நோக்கும் நிலையில் சில முக்கியமான கோட்பாடுகள் அடங்கியிருக் கின்றன. சாதாரணமாக சிவன் கோயில் ஒரு கிராமத்தின் ஈசானிய கோணத்தில் அதாவது வடகிழக்கே, கிழக்கு அல்லது மேற்கு நோக்கி அமையத் தகுந்தது. ஆனல் நடமாடும் கடவுள் ஆனந்த தாண்டவமெனும் அரிய ஐந்தொழில் நிலையை வடிப்பதாலும் தாண்டவ நிலை யோக நிலையாதலாலும் தட்க்ஷிணுர்த்தியும் காலனும் தெற்கு நோக்கியே எப்போதும் அமைவதாலும், நடராஜருக்கு தெற்கு முகமாக அமைப்பை மிகப் பொருத்தத்துடன் அளித்து அக்காலத்திலிருந்து இக்காலம் வரை, நியதி வழுவாமல், தென்னுட்டின் பல ஆயிரக்கணக்கான சிவன் கோயில்களிலும் நடராஜ சபையை வடபுறத்திலிருந்து தெற்கு நோக்கியே அமைத்து வருகின்றனர். ஆகையால் நாரணன் திசையும் நடராஜன் திசையும் ஒன்றுக் கொன்று எதிர்ப்பாக இல்லாமல் நேர்கோண நிலையில் அமைந்து ஒரே காலத்தில் பக்தர்கள் வலது நோக்காக நடராஜரையும் நேர் நோக்காக நாரணனையும் அல்லது இடது நோக்காக அரியையும் நேர்நோக்காக ஆடவல்லானையும் காணமுடியும் வகையில் அமை கிறது. மேலும் சாந்நித்திய எல்லையும் ஒன்றையொன்று தழுவியதாக நிகழ்வதால் தில்லையில் தனிப் பெருங்கடவுளர் ஹரிஹர ஸ்வரூபத்தில் தான் நமக்குக் காட்சியளிக்கிருர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இரண்டாவதாக ஆழ்வார்கள் காலத்தில் இங்கு கோயில் கொண்டமால் வீற்றிருந்த திருக்கோலத்தில் காணப்பட்டதாகத்தான் பாசுரங்கள் பகர்கின்றன. வீற்றிருந்த அம்மானே என்று தான் இக் கடவுள் விளிக்கப் படுகிருர். ஆனல் விஜய நகர் காலத்தில் கிடந்த

திருக் கோலமாக சயன நிலையில் அமைந்தது எங்ஙனம்! இங்குதான் ராமானுஜர் கீழ்த்திருப்பதியில் கோவிந்த ராஜன் என்று அழைக் கப்படும் பள்ளி கொண்ட பெருமானின் கோயிலைக்கட்டி அங்கு பூசனைகள் அமைந்த வழியை பின்பற்றி, இங்கும் கோவிந்தராஜர் என்ற கிடந்த திருக் கோலத்தை விஜய நகர மன்னன் அச்சுதராயன் அமைந்திருக்க வேண்டும். தவிர நமக்கு வைணவப்பதிகளி லெல்லாம், குறிப்பாக அரங்கத்தம்மானின் கோயில்கள் அமைந்த தலங்களில் இப் பெருமானை " குடதிசைச்சிகரம் வைத்து குணதிசை பாதம் நீட்டி. வடதிசை பின்பு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி கடல்நிறக்கடவுள் எந்தை அரவணைத்துயிலும் " மாலகாவே சிறப் பாகத்தெற்குநோக்கியே எங்கும் காண்பித்திருக்கிறார்கள். இதனின்றும் வழுவிய நிலையிலுள்ள பள்ளி கொண்ட பெருமானை தில்லையில் மட்டுமேதான் நாம் இன்று காண்கிறோம். ஆகவே ஆரம்ப காலத்தில் இந்த கோவிந்தராஜனென நாம் வழிபடும் பெருமாள் தெற்கு நோக்காமல் கிழக்கு நோக்கி வீற்றிருந்த பிரானாக ஆழ்வாராதியரால் வழிபடப்பட்டு வந்திருந்தான் என்பது நாம் இசைவு தெரிவிக்கத்தகுந்த சான்று.

இப்போது, திருச்சித்திர கூட மென்னும் சொல்லின் நயத்தைச் சற்று ஆராய்வோம். இது ஒரு தலத்தின் பெயரல்ல. கோயிலின் அமைப்பின் பெயர் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். ஆயினும் சக்கரவர்த்தி திருமகனின் சம்பந்தத்தோடு கூடிய சித்திர கூட மென்னும் விந்திய மலைச் சாரலில் அமைந்த இடத்தின் பெயரை நினைவுபடுத்தும் வகையில் தில்லைத் திருச்சித்ர கூடம் அமைந்த தாகக் கொள்ளலாம் இதைவிட முக்கியமாக இப் பெயர் கிபி முதல் மூன்று நூற்றாண்டுகளிலிருந்தே சங்கஇலக்கியங்களில்கையாளப்பட்டு வந்து கோயில் கட்டிடக் கலைச் செற்றொடராக சித்திரமாடம், கூடம் என்னும் சொற்கள் மூலம் வழங்கி வந்திருப்பது அறியத்தகுந்தது. பண்டைய பாண்டிய மன்னர்களில் மூவரை சங்க இலக்கியங்களில் சித்திர மாடத்துத்துஞ்சி பெருவழுதி கூடாகார்த்துத்துஞ்சிய பெருவழுதி என்றெல்லாம் குறிப்பிடுவது மிகமுக்கியமானது. இதன்படி சித்திரமாடம் என்பது எதையும் சாராமல் ஒரு இடத்தின் நடுவே எழுப்பப்பட்ட மண்டபக் கோயில் வகை, இது போலவே கூடம், நீடம், பஞ்சரம் என்பது மூன்று வகைப் பிரிவுகள் இவற்றை சதுரஸ்ரம், ஆயதாஸ்ரம், விருத்தாயதம் (கஜபிருஷ்டம்) என்று வட மொழி சிற்ப ஆகம நூல்களில் நாம் அறிகிறோம். கூடம் என்பது சதுரமான கட்டிட அமைப்பைக் குறிக்கும் சொல். ஆகவே சித்ரகூடம் என்பது தனித்து நிற்கும்

சதுரவடிவான கட்டிடம் என்று நாம் கொள்ளத்தகுந்தது. இது நடராஜ சபையைக் குறிக்க இயலாது ஏனெனில் அக் கோயில் நீண்ட சதுர வடிவத்தில் சாலை சிகரத்தை அல்லது கூறையைத்தாங்கிய கட்டிடம். இன்று நாம் காணும் கோவிந்த ராஜர் கோயிலும் நீண்ட சதுர நிலைப்படத்துடன், சாலைச் சிகரத்தைக் கொண்டு விளங்கு கிறது. இது சித்திர கூடம் என்னும் சொல்லுக்கு விளக்கமாக அமைய வில்லை. ஆகவே ஆழ்வார் பாசுரங்களில் காணும் வீற்றிருந்த அம்மானுக்குத்தகுந்த கூடமாக விளங்கிய சித்திர கூட மதனுள், பள்ளி கொண்டருளிய பெருமாள், முந்தைய கோயிலின் சிதைவுக்குப் பின், விஜய நகர மன்னரால் திருப்பதி கோவிந்த ராஜனின் பாணியில் எழுப்பப்பட்ட நீண்ட சதுரக்கருவறையில் குடி கொண்டது கடவுளர் களின் தனித்தனி கருவறை அமைப்பிலக்கணத்துக்கு அரியதொரு சிறப்ப இலக்கியமாகத்திகழ்கிறது.

விஜய நகரப்பாணியின் சிறப்பம்சங்களுடன் இன்று விளங்கும் கோவிந்தராஜர் சந்நிதியை இப்போது நாம் விரிவாகக்கவனிப்போம். கோவிந்தராஜன் சந்நிதி முதல் பிராகாரத்தின் தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதற்கு நீண்ட சதுர கருவறையும் அதே போல வடிவமுள்ள முன் மண்டபமும் அதைச் சுற்றிய. உண்ணாழிப் பிரதட்க்ஷிணமும் உண்டு. முன் மண்டபத்தில் நுழையவும், கருவறை யைச் சுற்றிய பின், வெளி முற்றத்துக்குச் செல்லவும் நிலைக்கதவுகள் தென் புறமும் வடபுறமும் அமைந்திருக்கின்றன. கருவறைக்கு மேல் சாலைச்சிகரவடிவில் விமானத்தின் மேல் கூறை உண்டு. கோவிந்த ராஜனின் கருவறைந் தோற்றம் நான்கு கைகளுடன் சங்குசக்ரம் ஏந்தி விளங்குகிறது. உண்ணாழிச் சுற்றில் நரசிம்மர். வேணு கோபாலன், பதஞ்சலி, கருடன், கஜேந்திர வரதர். அனுமன், விஷவக் சேனர் முதலியோரின் சிறு சந்நிதிகளும் ஆழ்வார் பாசுரங் களில் துதிக்கப்பட்ட திருநாமங்களுக் கொத்தவாறு அமைகின்றன. பெருமாளுக்குரிய தாயார் சந்நிதி மகாலக்ஷிமி கோயில் என்ற பெயரில் நடராஜ சபைக்கு மேற்கே அமைகிறது. இதன் அமைப்பிடம் பிரகாரத்தின் தென் மேற்குப் பகுதியில் அமைந்திருப்பது ஆகம விதிகளுக்கு ஒத்ததாக இருக்கிறது. பத்மாஸனத்தில், வீற்றிருந்த கோலத்தில் தாமரையேந்தி, வரத அபய முத்திரைகளுடன் நான்கு கைகளுடைய வடிவில் கருவறைபிம்பம் அமைகிறது. ஏற்கெனவே கூறியபடி கோவிந்த ராஜன் சந்நிதியின் இன்றைய தோற்றம் விஜய நகரமன்னர் அச்சுதராயரின் (கி. பி. 16ஆம் நூற்றாண்டு முற்பகுதி) திருப்பணியாக அமைகிறது. மேலும் திருப்பணிகள் செஞ்சி நாயக்கர் களிலொருவரான கிருஷ்ணப்ப நாயக்கர் காலம் வரை நடை பெற்றிருப்பதற்கு கல்வவட்டு (கி. பி. 1567) சான்று பகர்கின்றது.

திருமங்கையாழ்வாராலும் குலசேகரராலும் பாடல் பெற்ற தலமாக தில்லைத்திருச்சித்திர கூடத்தின் திருமால் சந்நிதி விளங்குவது அதன் தொன்மையையும் அது ஆடும் கடவுளாம் நடராஜரின் சந்நிதியுடனேயே தோன்றியதற்கு ஒத்த வகையில் அமைகிறது. நடராஜரின் கோயிலைப் பரிபாலிக்கும் பூர்வசிகையுள்ள தீக்ஷிதர்களின் வமிசம் குலசேகரரின் ராஜ்யமான கேரளத்திலிருந்துதான் தோன்றியதும் இந்த "மூவாயிர நான் மறையாளர்கள் முறையால் வணங்கும்" கோவிந்தராஜன் நடராஜன் சந்நிதியோடு கூட அருச்சிக்கப்பட்டிருக்கிற உண்மையையும் புலப்படுத்துகிறது, ஆனால் கோவிந்தராஜனின் கிடந்த திருக்கோலம் பிந்தைய காலத்தியது. அதன் முந்தைய நிலை வீற்றிருந்த திருக்கோலத்தில் அமைந்த விஷ்ணுவாக இருந்திருக்க வேண்டும். கேரளத்தில் எப்படி அரியும் அரனும் ஒருமித்து சங்கர நாராயணன் வடிவில் பல கோயில்களில் வணங்கப்படுகிறார்களோ, அதேபோல் வைகானச முறையில் தில்லையிலும் மூவாயிரவர்களால் அரியும் அரனும் ஒருவருக்கொருவர் அருகிலும் அவரவர்களின் தனித்த பாணியிலும் மிக நேர்த்தியான முறையில் இருசந்நிதிகளின் துவஜஸ்தம்பங்களும் கூடும் வகையில் அமைந்தது. உறக்கத்தில் உலகத்தைப் படைக்கும் மாலும், ஆட்டத்தில் மாயையைக் களைந்து அழித்து புதுப்படைப்புக்கான யுகத்தை உருவாக்கும் அரனும் தில்லையில் இவ்விரு கடவுளர்களின் ஒன்றிய கோயிலமைப்பில் காணக்கிட்டுவதால் தில்லை சேர்ந்தால் இல்லை பிறவி என்ற பழமொழி வழக்கில் வந்திருக்கிறது. இது காலத்தில் சோழர்களுகு முந்திய தத்துவம். பல்லவர் ஆட்சியில் சைவமும் வைணவமும் முற்றிலும் பிரியாத நிலையில் ஏற்பட்ட தத்துவம். ஆன்மிக நிலையில் தமிழர்களின் பக்திப் பெருக்கின் மேன்மையைப் பாங்காக நமக்கு விளங்க வைக்கும் தத்துவம்,

அஸ்திர தேவர்

ரத்தின சம்பந்தம்பிள்ளை

சிவபெருமான் பிரதிநிதியாக விளங்குபவர் இவர். இம்மூர்த்தம் ஒரு கம்பத்தின் மீதுள்ள சூலத்தினடியில் அமைக்கப்பட்டிருக்கும். ஆதலின் அஸ்திர தேவர் என்று அழைக்கப்படுகிறார், அஸ்திரத்தின் பால் இருத்தலின் அஸ்திர தேவர் என்று பெயராவதன்றி நிலையாகி இராமல் அடிக்கடி நிலை பெயர்வதாலும் அஸ்திர தேவர் என்னும் பொருளில் அமைவதும் காணக்கிடக்கின்றது. இது எப்பொருளின் அமையினும் அமைக. இம் மூர்த்தி இறைவனின் பிரதிநிதியாக இருந்து திக்குப் பலியிடுதல், தீர்த்தங் கொண்டருளுதல் முதலிய நிகழ்த்துகின்றார் என்பது வெளிப்படை. இம் மூர்த்தியை ஒருவர் தனியே கையிலேந்தி தோளில் சுமக்கும் எளிமையும் உடையவராய் இருத்தலால் அஸ்த ராஜா என்றும் வழங்குகின்றார்.

சித்திரக்கூடத்துச் செங்கண்மால்

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

எம்பெருமானின் திருவடியின் பெருமையினை எல்லாச் சமயங்களும் போற்றிப் புகழும். ஆயினும் வைணவ சமயம் அவ்வாறு புகழ்வதில் ஒரு தனி அற்புதத்தைக் காணலாம். ஆளவந்தார் என்று வைணவர்களால் போற்றப்பெறும் யமுனைத்துறையினர் தம்முடைய 'தோத்திர ரத்தினத்தில்' இதன் பெருமையினை அழகுற ஓதியுள்ளார். தேனையே உணவாகவுடைய வண்டு-மது விரதர்-தேன் நிறைந்த தாமரை மலரில் இருந்துகொண்டிருக்க, அதனை விட்டு, நாவினை நனைப்பதற்கும் போதாமல் இருக்கின்ற தேனையுடைய முள்ளிப் பூவைக் கண்ணாலும் பாராததைப்போன்று, எம்பெருமானுடைய தேனே மலரும் திருவடித்தாமரைகளினுடைய மலரில் மனம் அழுந்தின் ஒருவன் மற்றொரு அற்ப இன்பத்தை விரும்பமாட்டான் என்கின்றார்.[1] அடுத்த சுலோகத்தில் அவனுடைய திருக்கழல் இணையை வணங்குவதாகச் செய்யும் 'அஞ்சலி'யின்[2] பெருமை அளவிறந்ததென்று அருளிச் செய்கின்றார்.

அடையத்தக்க பொருளாக இருக்கும் எம்பெருமான் அவனை அடையும் வழியாகவும் அமைவான். அவனை அடைவதற்கு எம்பெருமாட்டி புருஷகாரமாக (பரிந்துரை செய்பவளாக) அமைவாள். இது வைணவ தத்துவம். இவர்கள் இருவரும் சேதநரைக் கைவிட்டாலும், எம்பெருமானுடைய திருவடிகள் தம்மைப்பற்றினாரைக் கைவிடா; அவைமிக்க உறுதியுடையனவாகும். இதனை

> "பிராட்டியும் அவனும் கைவிடினும் திருவடிகள் விடாது
> திண்கழலாயிருக்கும்"[3]

என்று கூறும் முமுட்சுப்படி. இதனைத் திருவுளங்கொண்டே நம்மாழ்வாரும்,

> "ஈறுஇல
> வண்புகழ் நாரணன்
> திண்கழல் சேரே"[4]

என்று கூறியருளினர்; சேஷபூதனுடைய சொரூபத்தை நோக்கினாலும் அவன் இறங்குந் துறை எம்பெருமானுடைய திருவடிகளேயாகும். இதைப் பிள்ளை உலக ஆசிரியர் ஓர் அழகிய எடுத்துக்காட்டால் விளக்குவர்.

"சேஷிபக்கல் சேஷபூதன் கிழியும் துறை பிரஜை முலையிலே வாய்வைக்குமாம் போலே"[5]

(சேஷி—தலைவன்; சேஷபூதன்—அடியான்; பிரஜை—குழந்தை)

பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் அன்னையின் பிற உறுப்புகள் யாவையும் விட்டுத்தான் உயிர்வாழ்வதற்கு இடமாகவுள்ள அவளுடைய கொங்கையிலே வாய்வைக்கின்றதோ, அங்ஙனமே தலைவனாகிய எம்பெருமானைப் பற்றப்புகும் அடியானும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு தான் உய்வதற்கு இடமாய் உள்ள அவனுடைய திருவடிகளையே பற்றுகின்றான். குழந்தை முலையைப் பற்றுதலும் அடியான் திருவடியைப் பற்றுதலும் அவரவருடைய சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்ததாகும்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் அலைபாய்ந்தவண்ணம் 'தில்லைத் திருச்சித்ரகூடம்' என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படுகின்றோம்.

'சித்திரகூடம்' என்பது விச்சித்திரமான சிகரங்களையுடையதெனப் பொருள்படும் காரணப் பெயர். இஃது இராமபிரான் வனவாசம் செய்த காலத்து அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருந்ததொரு மலை; அதனைப் போலவே இத்தலமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருப்பதுபற்றி அப்பெயரே இதற்கும் இடம் பெற்றதென்பர். இந்தச் செய்தியை நினைத்தவுடன் சீதாப்பிராட்டியுடன் இராமபிரான் சித்திரகூட மலையில் இருந்தபொழுது பிராட்டிக்குப் பெருமான் சித்திரகூடக் காட்சிகளைக் காட்டுவதாக அமைந்த கம்பன் பாடல்களில் ஆழங்கால் படுகின்றோம். திருமணமானவுடன் அயோத்தியை அடைந்து அரக்கர் பாவத்திலும் அல்லவர் இயற்றிய அறத்தாலும் நாடாளும் பொறுப்பை விட்டுக் கானுளச் சென்ற காகுத்தனின் தேன்நிலவுக் காட்சிகளன்றோ இவை? இக்காட்சிகள் ஒவ்வொன்றாக நம் மனத்தில் தோன்றி மறைந்துகொண்டிருக்கும் நிலையில், இந்தத் திருக்கோயிலுக்குப் போகுமாறு "தில்லைத் திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே" என்று ஒரு முறைக்கு ஒன்பது முறையாக ஆற்றுப்படுத்தும் திருமங்கையாழ்வாரின் பாசுர ஒலி நம் சிந்தையில் ஒலித்துக்கொண்டிருக்க நாம் கீழைக்கோபுரவாயிலை அடைகின்றோம். பல மண்டபங்களையும் தாண்டி எம்பெருமான் சந்நிதிக்கு வருகின்றோம்.

இங்கு அர்ச்சாவதார நிலையில் கோயில்கொண்டிருப்பவரே தில்லைக்கோவிந்தராசர்; சித்திரகூடத்துச் செங்கண்மால். இவர் தில்லைச் சிற்றம்பலவனின் திருநடனத்தை அறிதுயில் கொண்ட நிலையில் அனுபவித்து மகிழ்கின்றார். கோயில் என்றால் வைணவர்கள் 'திருவரங்கத்தையும்' சைவர்கள் 'சிதம்பரத்தையும்' குறிப்பது மரபு. இந்தப் பெயர் ஒற்றுமை கருதியே திருஅரங்கத்தில் அறிதுயில் கொண்டுள்ள அரங்கநாதனைப்போல் கோவிந்தராசரும் இங்கு வந்து காலை நீட்டிப் படுத்துக்கொண்டார்போலும். தில்லைச் சிற்றம்பல வனும் மனம் ஒப்பித் தமது பெரிய மாளிகையில் தன் கனகசபைக்கு அருகிலேயே ஒரு பகுதியை ஒதுக்கித்தந்து மகிழ்கின்றனன் போலும். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் ஆனந்தக் கூத்தனைச் சேவிப்பதுபோலவே கோவிந்தராசரையும் சேவிக்கின்றனர். இதனை,

" மூவாயிர நான்மறை யாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே "[6]

என்று திருமங்கையாழ்வாரும்,

" தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த "[7]

என்று குலசேகரப்பெருமாளும் குறிப்பிட்டிருப்பதால் அறியலாம். இவற்றால் ஆழ்வார்கள் காலத்தில் கோவிந்தராசரின் வழிபாடுகள் தில்லை மூவாயிரவரான தீட்சிதர்களிடமே இருந்திருக்கக்கூடும் எனக் கருத இடந்தருகின்றது. சில நூற்றாண்டுகட்குப் பின்னர்தான் (கி.பி.1543ல்) தனிப்பட்ட வழிபாடுகள் ஏற்பட்டனவாக அறியக் கிடக்கின்றது. இந்தக் கோவிந்தராசரைக் குலசேகராழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

குலசேகரர் இராமாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டனர் என்பது எல்லோரும் அறிந்த செய்தியாகும். தசரதச் சக்கரவர்த்தி இராம பிரானைப் பிரிந்த அளவில் "புலம்பிய புலம்பல்தன்னை"[8] இரங்கிப் பேசின பேச்சுக்களின் வடிவமாக ஆழ்வார் அருளிச் செய்த திரு மொழியால் இதனை அறியலாம்.

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய்! குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனம்உருக்கும் வகையே கற்றாய்;
மெல்லணைமேல் முன்துயின்றாய்; இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?
காகுத்தா! கரிய கோவே!''[9]

இதில் தன்னைத் தயரதனாகவும் இராமபிரானைத் தன் மகனாகவும் நினைந்து புலம்பும் பாசுரம் கல்நெஞ்சையும் கரைக்கும் தன்மையதாக அமைந்திருக்கிறது. ஒரு சமயம் இராமாயணக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தபொழுது இராமபிரான் எண்ணிறந்த சேனையோடெதிர்த்த கரதூஷணாதியரை யாதொரு துணையுமின்றி எதிர்த்துப் போருக்குச் சென்றார் என்ற கட்டத்தில் கதை வரும்போது ஆழ்வார் அந்நிகழ்ச்சி அன்றுதான் நடைபெறுவதாக நினைத்து தம் சேனைகளையெல்லாம் போருக்குச் சித்தமாய் முன்செல்லுமாறு பணித்தார் என்றும், சிறந்த சிந்தனையாளராகிய கதை சொன்ன புராணிகர் பகைவர்கள் அனைவரையும் தாம் ஒருவராகவே நின்று போர்செய்து வென்றார் என்றும், ஆழ்வாரும் சேனையைத் திருப்பிக் கொண்டு பயணத்தை நிறுத்தினார் என்றும் வழங்கும் செவிவழிச் செய்தியும் இவரது இராம பக்தியின் உறைப்பினைத் தெளிவுறுத்துகின்றது.

தில்லைக் கோவிந்தராசரை ஆழ்வார் இராமபிரானாகவே காண்கின்றார். அர்ச்சாவதார மூர்த்தியை விபவாவதாரமாகவே கண்டு மகிழ்கின்றார். இராமபிரானது வரலாற்றை வால்மீகி பகவான் பேசியனுபவித்தது போலவே தாமும் பேசி அனுபவிக்கின்றார் ஒரு திருமொழியில். ஆழ்வாரின் மனத்திரையில் இராமபிரான் 'உலகனைத்தும் விளங்கும் சோதி'யாகவும், 'வெங்கதிரோன் குலத்து விளக்காக'வும் 'செங்கண் நெடு கருமுகிலாக'வும், 'விண்முழுதும் உயக் கொண்ட வீரனாக'வும் காட்சி அளிக்கின்றார். அப்பெருமானை 'எங்கள் தனி முதல்வன்' என்றும், 'எம்பெருமான்' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.[10] இராமபிரானின் வாழ்க்கையில் நேரிட்ட ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் ஆழ்வாரின் மனத்திரையில் இடம் பெறுகின்றது. தாடகை வதம், விசுவாமித்திரது வேள்வி காத்தல், வேள்விக்கு இடையறு விளைவித்த சுபாகுவை வானுலகுக் கேற்றல், மாரீசனைக் கடலில் தள்ளுதல்போன்ற நிகழ்ச்சிகள் நினைவிற்கு

வருகின்றன.[11] இவற்றிற்குத் துணையாக அமைந்த கோதண்டத்தை 'எவ்வரு வெஞ் சிலை' என்று போற்றுகின்ருர்.[12] இதனை, "வேறொருத்தராலும் அடக்கியாள வொண்ணுதே காணவே ப்ரதிபட்சம் முடியும்படியான ஸ்ரீ சாரிங்கம்" என்று வியாக்கியானமும் போற்றுகின்றது. 'இராமன் தன்னை இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே' என்று தனது அவாவையும் வெளியிடுகின்ருர். இராமபிரானுக்கு அடியவஞன பரதாழ்வானுக்கு அடிமைபூண் டொழுகின் சத்துருக்னன் போலப் பாகவத தாசஞக வேண்டு மென்பது ஆழ்வாரின் பேரவா. பின்னர், சனகன் கன்யாசுல்கமாக வைத்திருந்த வில்லையிறுத்து மைதிலியை மணத்தல், அயோத்திக்குத் திரும்பும்போது எதிர்வந்துதோன்றின, தான் அவதரித்த க்ஷத்திரிய சாதியினரின் பகையாக இருந்த பரசுராமனைப் பங்கப்படுத்தல்போன்ற செயல்கள் இவர் மனத்திரையில் தோன்றுகின்றன.[13] அடுத்து கைகேயியின்சொற்படி வழிவழியாகவரும் அரசபாரத்தைக் கைவிட்ட நிகழ்ச்சி, குகப்பெருமான் நாவாய் செலுத்தி உதவின செய்தி, பரதாழ்வானுக்கு மாவடியையும் அரச பாரத்தையும் நல்குதல் ஆகிய வற்றில் ஆழங்கால் பட்டு மகிழ்கின்ருர். இராம பிரானும் சீதாப் பிராட்டியும் சித்திரகூடம் மலையில் உலவி வீற்றிருக்கும் காட்சி ஆழ்வாரின் நினைவிற்கு வருகின்றது. இக்காட்சியைப் பிற்பட்டார் கேட்டு அனுபவிக்க முடியுமேயன்ற கண்டு அனுபவிக்கப்பெருமல் கண்விடாய்த்து நிற்கும் குறைதீர எக்காலத்திலும் உள்ளார் அனுபவிப்பதற்காகவே தில்லைத் திருச்சித்ர கூடத்தில் வீற்றிருக் கின்றனன் என்று நினைந்து உள்ளம் நெகிழ்கின்ருர். இக் காட்சியை நேரில் கண்குளிரச் சேவிக்கப்பெறுபவர்கட்கு நித்திய சூரிகளும் சிறிதும் சமமாகார் என்று கருதுகின்றது இவரது பக்தித் திருவுள்ளம்.[14]

இங்ஙனம் எண்ணிய நிலையில் விராதனை விண்ணுக்கேற்றல், அகத்தியரிடமிருந்து இராமபிரான் கொடுத்துவைத்திருந்த பரசுரா மனிடம் பெற்ற வில்லை வாங்குதல், சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தல்.கர-தூடணர் உயிர் வாங்குதல்,மாயமானுகிவந்த மாரீசனை அழித்தல் போன்ற செயதிகளும்;[15] தொடர்ந்து வைதேகியைப் பிரிந்த தால் இராமபிரானுக்கு ஏற்பட்ட வருத்தத்தால் தளர் வெய்துதல், சடாயுவுக்கு வீடுபேறு அளித்தல், சுக்கிரீவனுடன் நட்புக்கொள்ளல், வாலியை வானுலகிற்கு அனுப்புதல், மாருதியால் இலங்கையைச் சுடுவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும்; [16] இவற்றை அடுத்து குரை கடலை அடலம்பால் மறுக எய்தல், சேது அமைத்து இலங்கையை அடைதல், இராக்சதர்களையும் அவர்களுடைய அரசன் இராவணனை

யும் கொன்றழித்து வீடணனுக்கு ஆட்சியை ஈதல் போன்ற நிகழச்சிகளும்; [17] பின்னர் அயோத்திக்கு மீண்டுவந்து ஆட்சியை அடைதல், இராவணனின் தொல்கதையை அகத்தியன் வாயால் கேட்டல், மைதிலி பெற்றெடுத்த தன் மைந்தர்களாக குசலவர்களின் செம்பவளத் திருவாயால் தன் வரலாற்றைக் கேட்டல் போன்ற நிகழ்ச்சிகளும்; [18] சம்புகவதம், அந்தண குமாரனுடைய உயிர் மீட்டல், அகத்தியன் அளித்த மணிமாலையை அணிதல், சத்துருக்கனைக் கொண்டு இலவணசுரனைக் கொல்வித்தல், துருவாசரின் சாபத்தால் இளையபெருமானைத் துறத்தல் போன்ற நிகழ்ச்சிகளும்; [19] தன் சோதிக்கு எழுந்தருள்கின்ற நாளில் முன்னதாக அயோத்தி மக்களையும், பிற உயிர்களையும் வைகுந்தத்திற்குப் போகச் செய்தல், கருடாழ்வான் தாங்க, நித்திய சூரிகளும் முக்தர்களும் எதிர்கொள்ள ஆதி இடமான பரமபதத்திற்கு எழுந்தருளல் போன்ற நிகழ்ச்சிகளும் [20] ஒன்றன்பின் ஒன்றாக வெள்ளித்திரையில் காண்பதுபோல் ஆழ்வாரின் மனத்திரையில் காணப்பெறுகின்றன, தில்லைத் திருச்சித்திரகூடத்தில்எழுந்தருளியிருக்கும் கோவிந்தராசர் இவ்விராமபிரானே என்று கருதி துதித்துய்யுமாறு அறிவுறுத்துகின்றார். இப்பெருமானைத் தலைவணங்கி அஞ்சலி செய்து சேவிக்கப் பெற்றோர் நடமாடுவதால் இந்நிலம் பெரும்பேறு பெற்றது என்றும்; இப்பெருமானின் திருவடிகளைத் தலைமேற்கொள்ளலாகிய அரசினைப் பெற விரும்புவதன்றி அதற்கு மாறாக சுவாதந்திரியம் பாராட்டுகின்ற அரசினை ஒரு பொருளாகத்தான் மதிக்கவில்லை என்றும் எக்களிப்புடன் பேசுகின்றார் தம் பாசுரங்களில். இராமகாதை முழுவதும் சுருக்கமாக நமக்குக் காட்டப்பெறுகின்றது இத்திருப்பாசுரங்களில்.

நடுநாட்டுத் திருப்பதிகளான திருக்கோவலூரையும் திருவயிந்திபுரத்தையும் மங்களாசாசனம் செய்தருளின பின்னர் சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யத் திருவுள்ளம் பற்றிய திருமங்கையாழ்வார் தில்லைத் திருச்சித்ரகூடத்தில் முதன்முதலாக இழிகின்றார். இத்திருப்பதியின் எழிலார்ந்த சூழ்நிலை இவர் மனத்தைக் கவ்வுகின்றது. ''சேமங்கொள் பைம்பூம் பொழில்சூழ்ந்த தில்லைத் திருச்சித்ரகூடம்''[21] என்றும், ''தெய்வப் புனல்சூழ்ந் தழகாய தில்லைத் திருச்சித்ரகூடம்''[22] என்றும் ''சேடுயர் பூம்பொழில் தில்லைச்சித்ரகூடம்'' [23] என்றும் வருணிக்கின்றார். ஊரைச் சூழ்ந்த சோலைகளில் மயில் கூட்டங்கள் ஆடுகின்றன; அவை சோலைகளே ஆடுவதுபோல காட்சி அளிக்கின்றன. தீர்த்தங்கள் மதுவோடு கூடிப் பெருகுவதால் மதுவின் நசையால் வண்டுகள் திரளாக மொய்க்கின்றன. அருகில் வெள்ளாறு (நிவா என்று குறிப்பிடுவர்

ஆழ்வார்) தில்லையை வலங்கொண்டு வருகின்றது. இந்த ஆறு ஆனைக்கொம்புகளையும் சந்தன மரங்களையும் தள்ளிக்கொண்டு பெருக்கெடுத்து வருங்கால் முத்துகளைக் கொழித்துக் கொண்டு வந்து கழனிகளில் தள்ளும்; அந்த முத்துகள் விதைவிதைத்ததுபோல் காட்சி அளிக்கும். அவற்றைக் கயல் கண் கண்டு 'இவை என்னவோ?' என்று வெருவித் தாவித் திரியும்.[24] ஊரோ செம்பொன் மணி மாடங்கள் நிறைந்திருப்பது. நான் மறையாளர்கள் நாடோறும் தீவளர்த்து வைதிகக் கருமங்களைத் தவறாது செய்துவரும் ஊர். இத்திருத்தலத்தில் மூலவர் திருப்பாற்கடல்நாதன்போல் சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவர் திருநாமம் கோவிந்தராசர்; தாயார் கமலவல்லித் தாயார்; விமானம் சாத்வீக விமானம்.

வீடுபேற்றை அவாவும் முமுட்சுகள் ஊண் உண்ணாத நரையும் காற்றையுமே உட்கொண்டு உயிர்காத்துப் புலன்களை ஒடுக்கித் தவம் புரிகின்றனர். சிலர் இளங்காய்களையும் நெடுநாள் உலர்ந்த பழங்களையும் வீசுகின்ற வெப்பமான காற்றையும் உட்கொண்டு ஐந்து தீயூடு நின்று தவம்புரிகின்றனர்.[25] இவர்களைக் கண்டு கழிவிரக்கம் கொண்ட திருமங்கை ஆழ்வார் தில்லைத் திருச்சித்ரகூடம் சென்று சேருமாறு கூறி ஆற்றுப்படுத்துகின்றார்; இத்திருத்தலம் சென்று சேர்ந்தால் பரம புருஷார்த்தம் எளிதாகக் கிடைக்கக் கடவதாயிருக்க 'அரிய வழிகளை மேற்கொள்வது ஏன்?' என்று கேட்கின்றார். ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம செய்யும்போது பல விபவாவதாரப் பெருமான்களை அநுசந்திக்கின்றார்; அவர்களுடைய வீரச் செயல்களிலும் விசித்திரச் செயல்களிலும் ஆழங்கால்படுகின்றார். ஒரு காலத்தில் இந்த வையம் பரந்த கடல் வெள்ளத்தில் மூழ்கிப்போக அப்போழுது மிக்க சினங்கொண்டவராகத் திருவுருவாகி அதைத் தன் கோட்டால் தூக்கிக் கொணர்ந்தவன்;[26] அழகிய வாமன உருவங்கொண்டு மாவலியின் வேள்வி நிலையத்திற்குச் சென்று மூவடி மண் இரந்து பெற்றவன்.[27] இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியர்களைக் கொன்றொழித்த பெருமான்;[28] வருணனின் உதாசீனத்தால் அணைகட்டவாராதது கண்டு அவன் மீது சினங்கொண்டு 'அணைவரும் நடந்தே செல்லும்படி கடலைவற்றச் செய்வேன்' என்று கூறிப் பொங்கி எழுந்து, வருணனைச் சரண் அடையச் செய்து சேது கட்டியவன்;[29] இலங்கை நகரை ஓரம்பால் அழித்தவன்;[30] பிரகலாதன் பொருட்டு நரசிம்ம உருவத்துடன் தோன்றி அவன் தந்தை இரணியனை அழித்தவன்; இத்தகைய[31] எம்பெருமான்தான் சித்ரகூடத்திருப்பவன் என்கின்றார் ஆழ்வார்.

கிருஷ்ணவதாரத்திலும் அதிகமாக இழிந்து அவ்வவதாரத்தில் நிகழ்த்திய பல அற்புதச் செயல்களை நினைந்து போற்றுகின்றார் ஆழ்வார். நப்பின்னைப் பிராட்டிக்கும் பெரியபிராட்டிக்கும் கொழுநன்; குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனைப் பிளந்து கொன்றவன்.[32] இரட்டை மருதமரங்களிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளியவன்; கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாக எடுத்து ஆயர்கட்கும் ஆநிரைகட்கும் வந்த துன்பத்தைக் காத்தவன்; அழகிய பெண்ணுருவங் கொண்டு வந்து நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயன்ற பூதனையின் உயிர் குடித்தவன்; 'அறியாதார்க்கு ஆனாயனாகிப் போய் ஆயப்பாடி உறியார் நறுவெண்ணெய் உண்டு உகந்தவன்'; நப்பின்னை பொருட்டு ஏழு கொல்லேறுகளைத் தொலைத்து திருவாய்ப் பாடியின் தெருவில் கூத்தாடியவன்; குவலயாப்பீடம் என்னும் களிற்றின் கொம்புகளிரண்டையும் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவதுபோல் பிடுங்கி அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அக்களிற்றினையும் அதன் பாகனையும் உயிர் தொலைத்தவன்.[33] இத்தகைய எம்பெருமான் பின்னானார் வணங்கும் சோதியாக, கோவிந்தராசனாக, திருத்தில்லையில் கோயில் கொண்டுள்ளதாக ஆழ்வார் அநுசந்தித்து அனுபவிக்கின்றார். இவரை நாம் இன்று வணங்கி வாயார வாழ்த்துகின்றோம்.

ஆழ்வார் தம் பாசுரங்களில் 'வருகின்றான்', 'வருவான்' என்று அருளிச் செய்திருப்பதால், அவர் இத்திருப்பதிக்கு எழுந்தருளின சமயம் பெருமாளுக்குத் திருவீதிப் புறப்பாடாக இருந்திருக்கலாமென்று சிலர் கருதுவர். இதனை நிலைநிறுத்த,

"கார்முகில் போல்வதோர் மேனி
கையன ஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர் சூழ
ஏழுல கும்தொழு தேத்த
ஒருமகள் ஆயர் மடந்தை
ஒருத்தி நிலமகள் மற்றைத்
திருமக ளோடும் வருவான்
சித்திர கூடத் துள்ளானே."[34]

(கருமுகில்—காளமேகம்; விறல்—ஆற்றலை; ஆயன்மடந்தை—நப்பின்னை (நீளாதேவி); நிலமகள்—பூமிப்பிராட்டியார்; திருமகள்—பெரியபிராட்டியார்)

என்ற பாசுரத்தைக் காட்டலாம். திருமேனி காளமேகம் போன்றுள்ளது. அதற்குப் பொலிவு தருவதுபோல திருக்கைகளிலுள்ள திருவாழி திருச்சங்குகள் ஒளிர்கின்றன. இந்திரனை உள்ளிட்ட தேவர் குழாங்கள் சுற்றிலும் சூழ்ந்து வருகின்றன. மற்றுமுள்ளாரும் தொழுது துதிக்கின்றனர். சீதேவி பூதேவி நீளாதேவி என்ற நாச்சிமார் மூவரும் எம்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். இப்படி விபவம் பொலியப் புறப்பட்டெழுந்தருளா நின்றவன் எம்பெருமான் என்று கண்ணாரக் கண்டு வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார்.

இந்நிலையில் திவ்விய கவி பிள்ளைப்பெருமாளய்யங்காரின் பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

"அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே — கொடிதாய
குத்திர கூடங்கி கொழுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூடம் கருதிச் செல்."[35]

(நெடியான்—திரிவிக்கிரமன்; சூத்திரம்—இழிகுணம்; கூடு—உடல்; அங்கி—நெருப்பு: கொளுந்தாமுன்—எரிந்துவிடுவதற்குமுன்)

இறப்பதற்கு முன்னர் சித்திரகூடம் சென்றால் தில்லைக் கோவிந்தனை வழிபட்டு நற்கதி அடையலாம் என்று தம் நெஞ்சிற்கு நினைவூட்டுகிறார் இப்பாசுரத்தில், கோவிந்தன் என்ற திருநாமம் பசுக்களைக் காத்தவன், உயிர்களை அடிமையாக உடையவன், கதிரவனின் கதிர்களில் தங்கியிருப்பவன், நான் உறையை நான்முகனுக்கு உபதேசித்தவன், வராக அவதாரம் செய்து பூமியை அடைந்தவன் என்ற பொருள்களையெல்லாம் தாங்கி நிற்கின்றது என்பதை நாம் சிந்திக்கின்றோம். மணிவாசகப் பெருமானும் கோவிந்தராசரின் சயனத் திருக்கோலத்தைக் குறிப்பிட்டுள்ளமையும் நம் நினைவிற்கு வருகின்றது.[36]

இந்நிலையில் ஆழ்வார்களின் பாசுரங்களை அவன் சந்நிதியில் ஓதி உளங்கரைகின்றோம். அவர்கள் பெற்ற அனுபவத்தை நாமும் பெற முனைகின்றோம். பின்னர் தீர்த்தம் திருத்துளாய் சடபோகம் சாதிக்கப் பெற்று திருக்கோயிலின் ஓர் அமைதியான இடத்தில் அமர்ந்து இத் திருக்கோயிலைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைச் சிந்திக்கிறோம்.

கோவிந்தராசர் அறிதுயில் கொண்டுள்ள திருக்கோயிலை எட்டாம் நூற்றுண்டில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலை நிறுவிய இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லன் (கி.பி. 717-782) எடுப்பித்தான். 12ஆம் நூற்றுண்டில் அநபாய சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் (கி பி. 1133-1150) சிற்றம்பலத்தைப் பெருக்கி அமைத்ததற் பொருட்டுக் கோவிந்தராசப் பெருமாளை எடுத்துக் கடலில் எறிந்துவிட்டான் என்றும், இராமாநுசர் இந்தத் திருமேனியைக் கைப்பற்றித் திருப்பதியில் பிரதிட்டித்தார் என்றும் கூறுவதற்குச் சான்றுகள் பல உள்ளன. கிருட்டிணதேவராயர் தம்பி அச்சுதராயரது ஆட்சியில் கி. பி. 1539-ல் மீண்டும் இவர் இவரது பழமைத் தானத்தில் பிரதிட்டிக்கப்பெற்று வைகானச முறைப்படி வைணவப் பட்டாச்சாரியார்களால் வழிபாடுகள் செய்துவர நிபந்தங்கள் விடப்பெற்றுள்ளன என்ற செய்தி கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. திருச்சித்ரகூடத்தின் பல பகுதிகளைக் கட்டிய செய்திகள் ஈண்டு குறிப்பிடத்தக்கவை. இராயவேலூரிலிருந்து அரசோச்சிய விசயநகர வமிச அரசர் சீரங்கராயர் இத்திருக்கோயிலை முகமண்டபத்துடன் புதிதாகவே வனைந்து, வழிபாடு செய்யும் வைணவர்கட்கு ஐந்து சிற்றூர்களை இறையிலியாக அளித்தார். செட்டிநாட்டரசர் வள்ளல் அண்ணுமலைச் செட்டியார் இத்திருக் கோயிலின் முன்னணியாகவுள்ள நாற்பது கால் மண்டபத்தை அமைத்தார். இப்போதுள்ள திருச்சித்ரகூடத்தின் அமைப்பு 1934-ல் செட்டிநாட்டரசரின் திருமகனுர் முத்தய்யா செட்டியார் தமது நேர்பார்வையில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அழகுற அமைத்ததாகும்.

வேறு சில செய்திகளும் அறியத்தக்கவை. ஒருசமயம் சைவர்கட்கும் வைணவர்கட்கும் இங்கு நடந்த விவாதங்களைச் செஞ்சியில் அரசுரிமைதாங்கிய கிருட்டிணப்ப நாயக்கர் தீர்த்துவைத்தார் என்றும், ஆங்கில ஆட்சியில் பல விவாதங்கள் நீதித்தலங்களில் விவாதிக்கப்பெற்றன என்றும், இறுதியில் செட்டிநாட்டரசர் வள்ளல் அண்ணுமலைச் செட்டியார் விவாதங்களை முழுதும் சமரசப்படுத்தினுர் என்றும் நினைவு கூர்கின்ருேம். எம்பெருமானைக் கண்டுகளித்த பக்திப் பெருக்குடனும் சில அரிய வரலாற்றுக் செய்திகளுடனும் திருக்கோயிலை விட்டு வெளிவருகின்ருேம்.

1. தோத்திர ரத்தினம்—27.
2. அஞ்சலி—அஞ்ஜலி. கைகளைக் கூப்புவதற்கு அம்ஜலி என்று பெயர். இச்செய்கை (அம்ஜலயதி) எம்பெருமானை நீர்ப் பண்டமாக உருகச் செய்தலால் இதற்கு இப்பெயர் வந்தது. இஃது ஓர் அடையாளமாகும்.
3. முமுட்சுப்படி—146.
4. திருவாய்மொழி 1. 2: 10
5. முமுட்சுப்படி—147.
6. பெரிய திருமொழி 3. 2: 8
7. பெருமாள் திருமொழி 10: 2
8. பெரு. திரு. 10: 11
9. ஷை, 10: 3.
10. பெரு. திரு. 10: 1
11. ஷை, 10: 2
12. ஷை, 10: 3
13. ஷை, 10: 3
14. பெரு. திரு. 10: 4.
15. ஷை, 10: 5
16. ஷை, 10: 6
17. ஷை, 10: 7
18. ஷை, 10: 8
19. ஷை, 10: 9
20. பெரு. திரு. 10. 10
21. ஷை, 3. 2: 5
22. ஷை, 3. 2: 7
23. ஷை, 3. 3: 1
24. பெ. திரு. 3.2:7,8.
25. ஷை, 3. 2: 1, 2.
26. ஷை, 3. 2: 3
27. ஷை, 3. 2: 4
28. ஷை 3. 2: 5
29. ஷை, 3. 2: 6
30. ஷை, 3. 3: 6
31. பெரு. திரு. 3. 3: 8
32. ஷை, 3. 2: 7; 3. 3: 1
33. ஷை, 3. 3: 1—7.
34. பெரு. திரு. 3. 3: 7
35. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி—22
36. திருக்கோவையார்—86

தில்லையில் பௌத்தம்

டாக்டர். எஸ். என். கந்தசாமி

உலக நாடுகளில் பௌத்தம்

மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகைகளையும் நெறிமுறைகளையும் உணர்த்திச் சென்ற ஞானச்செல்வர்களில் புத்தபிரானும் ஒருவராவர். கி. மு. 6ஆம் நூற்றாண்டில் இவரால் உருவாக்கப் பெற்ற புத்த நெறி மூன்று நூற்றாண்டுகட்குப் பின்னர் வந்த மாமன்னன் அசோகனின் பெருமுயற்சியால் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமன்றி அலை கடலுக்கு அப்பாலுள்ள எகிப்து, சிரியா, மாசிடோனியா முதலிய மேலைநாடுகளிலும் பரவியது. இந்தியாவில் தோன்றிய சமய தத்துவங்களில் அயல்நாடுகளிலும் மிகுதியாகப் பரவிய சிறப்புக்கு உரியது பௌத்தமேயாகும். கிழக்கிந்தியத் தீவுகளாகிய மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, தாய்லாந்து, வியட்னும் முதலிய பகுதிகளில் பௌத்தமே கூடுதலாகப் பரவியுள்ள உண்மையை யாவரும் உணர்வர். அன்றியும் மங்கோலியா, கொரியா, சீனு, சப்பான், ரஷ்யா ஆகிய ஏனைய ஆசிய நாடுகளில்கூட பௌத்தத்தின் செல்வாக்கு பரவலாகக் காணப்படுகிறது. இவ்வுண்மையினுல் உலகமக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பேராற்றல் புத்தரின் போதனைகளுக்கு இயல்பாகவே அமைந்துள்ள திறனை உடன்படத்தான் வேண்டும்.

தமிழகத்தில் பௌத்தம்

தமிழகத்தில் பௌத்தம் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் பரவியது. தமிழகத்தின் தலைநகரங்களாகிய காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், உறந்தை, மதுரை, வஞ்சி ஆகிய கோநகரங்களிலும் மலைப்பகுதிகளிலும் சிற்றூர்களிலும்கூட பௌத்தத்தின் பதிவு காணப்படுகிறது, பாண்டி நாட்டில் கிடைத்துள்ள தமிழ்-பிராமி கல்வெட்டுக்களில் பௌத்த நெறியைப் புகட்டும் மகாதேரர்களுக்கு அரசர்களும் அன்பர்களும் கற்படுக்கை முதலிய வசதிகள் அமைத்துக் கொடுத்த வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களைப் பாடிய புலவர்களில் இளம்போதியார், சிறுவெண்தேரையார்,

தேரதரன் முதலியவர்கள் பௌத்தர் சார்பினராகக் கருதுதற்கு உரியர். திருக்குறளிலும் புத்தரின் பொன்மொழிகள் நிரம்ப உள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்களெழுந்த காலங்களில் தமிழகத்தில் பௌத்தம் தழைத்து இருந்தது. கி.பி.400-700 என்ற காலப்பகுதியைப் பௌத்தத்தின் பொற்காலம் என்று அறிஞர்கள் அறுதியிட்டுள்ளனர். இக் காலப் பகுதியின் நடுக் கூற்றில்தான் மணிமேகலை என்னும் மாபெருங்காப்பியம் மலர்ந்திருத்தல்வேண்டும். இக்காலப் பகுதியில்தான் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பௌத்தம் பரவியிருத்தல் வேண்டும். கி.பி. 7ஆம் நூற்றுண்டு முதல் சைவ சமயக் குரவர்களாலும் ஆழ்வார்களாலும் பௌத்த நெறி தாக்குண்டது. பரசமய கோளரி எனப் போற்றப்பெறும் திருஞான சம்பந்தரும் பரகாலன் எனப் போற்றப்பெறும் திருமங்கை மன்னனும் பௌத்தத்தைத் தகர்ப்பதில் முனைப்பாக ஈடுபட்டனர். போதி மங்கையில் சாரி புத்தரின் தலைமையில் திரண்ட பௌத்த அறிஞர் களைச் சம்பந்தர் வாதில் வென்றதாகப் பெரியபுராணம் குறிப்பிடு கின்றது. நாகைப்பட்டினத்தில் இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் சீனம் முதலிய கீழை நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வரும் பௌத்த நெறியைச் சேர்ந்த வணிகர்கள் வழிபடும் பொருட்டு எழுப்பப்பெற்ற புத்தவிகாரையில் ஈழத்துச் சிற்பி தன் கைவண்ணம் தோன்ற உரு வாக்கிய ஐம்பொன் புத்தர் சிலையினை மங்கைமன்னன் களவாடிச் சென்று திருவரங்கத்தில் அழகிய மணவாளனின் திருக்கோயில் பணிக்குச் செலவிட்டதாகக் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன. கூடக்குறைய இக்காலப் பகுதியில்தான் மாணிக்கவாசகர் தில்லையில் பௌத்த அறிஞர்களைச் சொற்போரில் வென்று சைவர்களாக மாற்றி யிருத்தல் கூடும்.

திருமுறைகளும் தில்லையில் பௌத்தமும்

சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாவது பாடலில் புறச் சமயங்களாகிய பௌத்த சமணங்களைக் குறிப்பிட்டு வெறுத்தும் மறுத்தும் சென்றுள்ளார். இக்குறிப்புக்களினுல் இப்பதிகம் பெற்ற ஊர்களிலெல்லாம் இவ்விரண்டு புறச் சமயங்களும் இருந்திருத்தல் கூடுமோ என்ற ஐயம் தோன்றுகின்றது. அஃது எவ்வாருயினும் தில்லையில் பௌத்தம் திகழ்ந்தது என்பதற்கு உரிய சான்றுகள் இவரது பதிகங்களிலும் திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பாக் களிலும் காணபபடுகின்றன.

1. வெற்றரை உழல்வார் துவராடைய வேடத்தா ரவர்கள்
உரைகொள்ளன்மின்
மற்றவர் உலகின் அவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுதேத்தும் சிற்றம்பலம் காதலால்
சுழற்சேவடி கைதொழ
உற்றவர் உலகின் உறுதிகொள வல்லவரே'' 111-1:10

2. பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே'' 1,80:10

இவ்விரண்டு தேவாரப் பாடல்களினுலும் பௌத்த தேரர்கள் துவருட்டப்பெற்ற ஆடையை அணிந்தவர்களென்பதும், தவநோன்புகளை மேற்கொண்டவர்களென்பதும் தெளிவாகப் புலனுகும். இவர்கள் கூறும் அறிவுரைகளை முட்டைக்கட்டுரை (பொருளற்றவை) என்றும் அவற்றை செவிமடுத்தல் தகாது என்றும் உலகின் துயரத்தை மாற்றும் ஆற்றல் அவர்கட்கு இல்லையென்றும் சிவஞானக் கன்றுகிய ஞானசம்பந்தர் சுட்டியுள்ளார். அவர் காலத்திய பௌத்தர்களின் நிலையை இவர் வாய்மொழி காட்டுகிறது என்றே கருதல் வேண்டும். ஏனெனில் மற்ற உயிர்கள் படும் துயரத்தைப் பார்த்துத்தான் துயரப் படும் அருளாளராகிய புத்தரை பரதுக்கதுக்கி என்று வழங்குவர். மேலும் பாலி நூல்களில் சப்ப பூதானு உகம்பி சப்பஹிதானு உகம்பி என்று புத்தர் குறிக்கப் பெறுகிருர். இவ்விரு தொடர்களும் முறையே எல்லா உயிர்கட்கும் இரங்குவோர், எல்லா உயிர்களும் ஏமுற இரங்குவோர் என்னும் பொருள் தருதலாலும் உலகின் அவலத்தைப் போக்குவதே புத்தபிரான் வரையறுத்த சீலங்கள், பாரமிதைகள் முதலியவற்றின் நோக்கமாதலாலும் சம்பந்தர் சாடும் குறை ஆதி புத்தரை அணுகாது. மேற்கண்ட இருபாடல்களிலும், கற்றவர் தொழுதேத்தும் சிற்றம்பலமென்றும், சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய நட்டப்பெருமான் என்றும் பரம்பொருளைச் சுட்டிப் பரவும்படி பணிக்கிருர்.

கி. பி. 9ஆம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவராக எண்ணப் பெறும் திருமாளிகைத் தேவர் சைவர்களுக்குக் கோயிலென்று சிறப்பித்துச் சொல்லத்தக்க தில்லையைக் குறித்துப் பாடிய திருவிசைப் பாக்களில் சமண பௌத்தர்களைப் பற்றியும் பொறித்துச் சென்றுள்ளார். அப்பாடல் பகுதிகளை இவண் காண்போம்.

1. அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
   ஆலின்கீழிருந்தவ ம்பலவா !
   புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
   தொண்டனேற் புணருமாற் புணரே

2. செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
   செல்வச் சிற் றம்பலக் கூத்த !

3. எக்கரைக் குண்ட மிண்ட எத்தரைப் புத்தராதிப்
   பொக்கரைக்காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே

இப்பகுதிகளினுல் தில்லேயில் பௌத்தர்களும் சமணர்களும் இருந்திருத்தல் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

திருவெண்காட்டடிகளின் பரந்த மனப்பான்மை

சைவச் சான்ருேர்கள் பௌத்த சமண நெறிகளே வாய்வலிக்கத் தூற்றியிருத்தலாலும் ஒரோ சில இடங்களில் பொதுமை கருதிப் போற்றியும் உள்ளனர். ஒரு சான்றினே மட்டுமே இவண்காண்போம். திருவெண்காட்டு அடிகளாகிய பட்டினத்துப் பிள்ளேயார், தாம் பாடிய திருவொற்றியூர் ஒருபா வொருபஃது என்னும் அருள் நூலில்,

" ஆதியென்றும் அசோகின வென்றும்
போதியிற் பொலிந்த புராண னென்றும்
இன்னவை முதலா தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை யாகி
அடைபற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே "

என்று அருளிச் செய்தல் எண்ணத்தக்கது. இப்பாடற் பகுதியின் உண்மை உணரும் சைவச் சான்ருேர்கள் பௌத்த சமண நெறிகளே இகழமாட்டார்களென்பது திண்ணம்.

திருவாசகத்தில் பௌத்தம்

மாணிக்கவாசகரின் காலங்குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. மூவர்க்கும் பிற்பட்டவர் என்னும்

கருத்தே பெரும்பான்மையோர் கருத்தாகக் கொள்ளப் பெறினும் முற்பட்டவராகக் கருதுவதற்குரிய சில புதிய சிந்தனைகளையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை. திருவாசகத்தில் வைதிக சமயங்களையும் அவைதிக சமயங்களையும் மாணிக்கவாசகர் சுட்டியுள்ளார்.

1. அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபே ருய்நின்ற விண்ணோர் பகுதி...

2. விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்

3. நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்

4. உலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்

5. உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்

இப்பகுதிகளினால் தம் காலத்தில் நிலவிய சமயங்களை வாதவூரர் குறித்திருப்பதைக் கூர்ந்து நோக்குங்கால் மணிமேகலை காலத்தில் விளங்கிய சமயக் கணக்கர்களின் அறிவு விளையாட்டு நம் மனக்கண் முன்னர்த் தோன்றுகின்றது.

மணிவாசகரின் காலத்தில் சமண சமயத்தைவிட பௌத்தமே மேலோங்கியிருந்தது எனத் தோன்றுகிறது. இரண்டு பாடல்களில் புத்தரைச் சுட்டும் அடிகளார் ஓரிடத்தும் சமணத்தைச் சுட்டாமையும் நம் சிந்தனையைக் கிளரச் செய்கிறது. திருத்தெள்ளேணத்தில்,

“ புத்தன் புரந்திராதியர் அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ ”

என்று வாதவூரர் வழங்குதல் நோக்கத்தக்கது. சிவபரம்பொருளைப் பணிந்து போற்றும் அடியார் திருக்கூட்டத்தில் புத்தரை முதலாவதாக எண்ணிப் போற்றிய வாதவூரரின் மனமாண்பு பாராட்டற்பாலது. போதி சத்துவர்களில் ஒருவராகிய அவலோகிதேசுவரர் என்னும் பௌத்தக் கடவுளிடமிருந்து அகத்தியர் தமிழ் பயின்றார் என்று புத்தமித்திரனார் வீரசோழியத்தின் பாயிரப் பாடலில் குறித்

துள்ளார். சர் சரார்லஸ் எலியட் என்னும் பௌத்தப் பேரறிஞன் அவலோகிதேசுவரர் என்ற சொல் திருட்டிகுரு எனப்பொருள்படும் என்றும் சிவபிராணைக் குறிக்குமென்றும், Hinduism and Buddhism என்னும் தம்பெரு நூலில் உரைத்துள்ளார்.

எனினும் வாதவூரர் திருந்தோணேக்கத்தில்,
" புத்தன் முதலாய புல்லறிவில் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க "

என்று சற்று ஆத்திரத்துடன் சுட்டுகின்றார். ஆத்திரத்தாற் போலும் புத்தம் முதலாய புல்லறிவிற் பல்சமயம் எனச் சுட்டவேண்டியர் மறந்து புத்தன் என்று சொற் பிரயோகம் செய்துவிட்டார். அனைத்து நெறிகளிலும் சைவமேநனிசிறநேந்தாங்கிய நெறியேன்பதில் ஐயமில்லை. ஏனைய நெறிகளில் உள்ள முறைகளைப் பெரிதுபடுத்திக் காட்டி அவற்றில் காணப்படும் பலவாகிய குணங்களை விட்டுவிடுதல் கூடாது.

பிற்காலத்தில் எழுந்த புராண நூல்களில் தில்லையில் வாதவூரர் பௌத்தப் பேரறிஞர்களை வாதுபுரிந்து வென்றார் என்ற செய்தி காணப்படுகிறது. இஃது எந்த அளவில் உண்மையாகும் என்பது ஒருதலையாகத் துணிதற்கில்லை. தம் ஆன்மீக அனுபவங்களையும் அற்புத நிகழ்ச்சிகளையும் சுயசரிதையாகப் பாடிச் சென்றுள்ள மாணிக்கவாசகர் ஓரிடத்தில்கூட பௌத்தர்களோடு வாதம் புரிந்து வென்றதாகச் சுட்டாமல் சென்றது வியப்பாகவே உள்ளது. என்றாலும் திருநீற்றுச் செல்வர்களாய அன்பர்கள் காணும்படி எட்டும் இரண்டும் கூட அறியாத தன்னையும் தகுதிப்படுத்தி, தருக்கம் புரியும் வகையில் பட்டிமண்டபத்தில் இறைவனே ஏற்றிவிட்ட அருஞ் செயலை,

" கட்டறுத் தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண்டும் மறி யேனையே "

எனவரும் திருச்சதகப் பகுதியில் பொறித்துள்ளார். இந்தப்பகுதி மணி மேகலையில்,

" ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின் "

எவைரும் பகுதியை நினைவுபடுத்துகிறது. வாதவூரடிகள் குறிப்பிடும் பல்வேறு சமய வாதிகள் பட்டிமண்டபம் பற்றிய குறிப்புக்கள் மணி மேகலைக் குறிப்புக்களுடன் பெரிதும் ஒத்துள்ளன ஆதலின் மணி மேகலை தொன்றிய காலமாகிய கி. பி 450-550 என்ற காலப் பகுதியை ஒட்டித் திருவாசகம் எழுந்ததோ என்று எண்ணத் தூண்டுகிறது.

பட்டிமண்டபதில் ஏறி வாதவூரர் யாருடன் வாதம் புரிந்தார் என்பது தெரியவில்லை. பெரும்பற்றப் புலியூர் நம்பி தாம் எழுதிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்தில் தில்லையில் தங்கியிருந்தபோது புத்தரை வாதில் வென்றாரென்றும், பரஞ்சோதி முனிவர் இலங்கையிலிருந்து தில்லைக்கு வந்த புத்தர்களை ஏழுநாள் வரையும் வாதுபுரிந்து வென்றும் புத்தநெறியினனாகிய இலங்கை மன்னனின் ஊமை மகளைப் பேசவைத்ததும் சைவத்தை நிலைநாட்டினார் என்றும் தாமெழுதிய திருவிளையாடல் புராணத்தில் குறித்துள்ளனர். இவ்விருவர்க்கும் பின்னர் வந்த கடவுள் மாமுனிவர் தாம் பாடியுள்ள திருவாதவூரடிகள் புராணத்தில் தம் கற்பனை வளத் தினால் இக் கதையினைப் பெருக்கிக் காட்டி, **புத்தரை வாதில் வென்ற சருக்கம்** என்று ஒரு நூல் பகுதியையும் அமைத்து, சுமார் நூறு பாடல்களில் விரித்துரைத்துள்ளார். ஒருவேளை வாதவூரர் காலத் திற்குப் பின்னர் அவர் புத்தரைத் தில்லையில் வென்ற நிகழ்ச்சி நாட்டுப் புறக் கதைகளாக வழங்கி நம்பப் பெற்றுப் பின்னர் புராணம் பாடிய அடியார்களால் வெவ்வேறு வண்ணமும் வடிவமும் பெற்றன என்று எண்ணுதல் கூடும்.

கடவுள் மாமுனிவர் காட்டும் வாதவூரரின் சமயவாகை

கடவுள் மாமுனிவர் புத்தரை வாதில் வென்ற சருக்கத்தில் எடுத் துக்கூறும் பௌத்தக் கருத்துக்களும் அவற்றிற் குரிய மறுப்புரைகளும், பெரியபுராணத்தில் திருஞான சம்பந்தர் புத்தருடன் வாதில் வென்ற தாகக் கூறப்படும் பகுதியினின்றும் சிவஞான சித்தியார் பரபக்கத் தினின்றும் தழுவியுரைக்கப் பெற்றவையேயாகும். பெரும்பாலும் மாற்றுச் சமயங்களை மறுக்கும் சமயிகள் அவற்றை மறுத்தற்குரிய வகையில் அச்சமயக்கருத்துக்களைத் திரித்துக் கூறுவதும் விதண்டை கூறுவதும் அச்சமயத்தலைவரின் கருத்தினை உணர்ந்து மதிக்கும் நாகரிகமின்றி வைதுரைப்பதும் நம் சமய இலக்கியங்களில் பொது வாகக் காண்கிறோம். தருக்கத்தின் இடத்தினை பழிப்புரைகளோ

வெறுப்புரைகளோ நிரப்பிவிடுதல் இயலாது. திருவாதவூரடிகள் புராணமும் இக்கோட்பாட்டிற்கு விலக்கல்ல. தில்லையில் பௌத்தப் பேரறிஞர்களுடன் மணிவாசப் பெருமான் வாதம்புரிவதற்குரிய சூழ் நிலையைக் கவிஞர் எவ்வாறு படைத்துக் காட்டுகிறார் என்பதை முதலில் நோக்குவோம்.

சிவ நேயச் செல்வர் ஒருவர் சோழநாட்டின் வளங்கண்டு தில்லையம்பலவாணனை ஏத்திப் பின்னர் ஈழநாட்டின் திருத்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திரிகோணமலை, கதிர்காமம் முதலிய பதிகளைக் காணும் நோக்கினாற் போலும் இலங்கை சென்றார். சென்று இல்லந்தொறும் பொன்னம்பலம் பொன்னம்பலம் என்னும் பெயரைத் தாரக மந்திரமாகக்கூறி இரந் துண்டு வாழ்ந்தனர். இவர் நிலையினைக் கண்ட தேரர்கள் ஈழமன்னனிடத்தில் எடுத்துரைத்தனர். பின்னர் மன்னன் ஆணையினால் மாதவர்கள் புடைசூழ இருந்த திரு வோலக்கத்திற்குச் சிவனடியார் வரவழைக்கப்பட்டார். மன்னனின் கொலு வீற்றிருக்கையைக் கூறும் கவிஞர்,

" முந்தும் பிடகம் மூன்றுணர்ந்து செயிர்நான் கொழிந்து முதுசீலம்
ஐந்தும் புனைந்து பார்மீதே ஆறைந் தடக்கும் இயல்புடையோன்
கந்தம் கெடுதல் முத்தியெனக் காட்டும் குரவன் உடனிருப்பச்
சந்தம் சிறந்த புயநிருபன் இருந்தான் தானை புடைசூழ "

என்று புனைந்துரைத்தனர். அரசவைபுக்க அரனடியார் சோழ மன்னனின் செங்கோலாட்சிக்கு உட்பட்ட தில்லையின் சிறப்பையும் மன்றவாணனின் மாண்பினையும் சிவ கங்கைத் தீர்த்தத்தின் பெருமையினையும் விரித்துரைத்தனர். முதற்கண் தோன்றிய தெய்வ தலத்தினைத் தில்லைவனம் பெற்றிருப்பதால் மூலத்தானம் என்னும் பெயரும்பெற்றது. உலகிற்கு மையமாகக் கருதப்பெறும் தில்லைமன்றில் உமையம்மைகாண ஈசன் தாண்டவம் புரிந்தருளுதலை,

" அந்தப் பதிமுன் தில்லைவனம் அஃதே புவனம் அனைத்தினுக்கும்
முந்தக் கிளறும் தெய்வதலம் அதனால் மூலத்தானமதாம்
இந்தப் புவிக்கு நாப்பண்என இலங்கும் பொதுவாம் இடமதனில்
சந்தத் தனத்தாள் உமைகாணத் தலைவன் திருத்தாண்
டவம்புரியும் "

எவைரும் பாடலில் சிவனடியார் கூற்ருகக் கடவுள் மாமுனிவர் இனிதெடுத்துரைத்தனர், ஒருகால் பொன்னம்பலமென்று சொல்லின் திருவைந்தெழுத்தினை 21600 முறை செபிப்பதற்கு ஒப்பாகும்என்றும் அரனடியார் கூறினர். இவற்றைக்கேட்ட புத்தகுரு திரிபிடகத்தைச் சொன்ன பகவனைத் தவிர வேறுங்கடவுளுண்டோ என்று வெகுண்டனர். அன்றியும் தில்லைப்பதிக்குச் சென்று அங்குள்ள சைவர்களோடு சொற்போர் புரிந்து புத்தரே உண்மைக் கடவுளென் பதை உறுதிசெய்து பொதுமன்றினைப் போதிப்பெருமானின் பள்ளியாக மாற்றியமைப்பதாகச் சூளுரைத்தார். புத்தகுரு மூன்று நாட்களில் தன் உரையினை நிறைவேற்றுவதாக நினைந்து தில்லையை அடைந்தனர். ஈழவேந்தனுகிய புத்தமன்னனும் தன் ஊமை மகளை உடனழைத்துக் கொண்டு தில்லையை அடைந்தான். திருப்புலீச்ச ரத்தில் ஒருபால் இரத்தின மண்டபத்தில் புத்தகுரு தங்கியதைக் கண்ட சைவர்கள் அவ்விடத்தைவிட்டு அகலுமாறு கூறியும் சைவத்தை மறுத்துப் பௌத்தத்தை நிலைநாட்டவே தாம் அங்கு வந்திருப்பதாகப் புத்தகுரு புகன்றனர். பலகூறியும் பயனற்ற நிலையில் சோழவேந்தனுக்கு ஓலைபோக்கித் தம் இல்லம் சார்ந்தனர். தில்லைவாழ் அந்தணர்களின் கனவில் ஈசன் தில்லையின் எல்லையில் வைகும் வாதவூரர் தருக்க நெறிநின்று புத்தரை வெல்ல வல்லவ ரென்றும் அவைர அணுகி அழைத்து" புத்தருடன் வாதம்புரிந்திட வழிகாட்டியும் மறைந்தனர்.

சைவர்களனைவரும் மணிவாசகப் பெருமானை அணுகித் தம் கோரிக்கையை விண்ணப்பித்தனர். புத்த குருவைக் கண்ணுல் காணவும்தகாது என்ற கருத்தில் அவர் தங்கியிருந்த மணிமண்டபத் திற்கு நடுவே திரையிட்டு வாதம் தொடங்கினர். இவ்வாதினைக் காண நான்மறையாளர், அந்தணர், புராணிகர், அருங்கலை விநோதர்கள் சூழ சோழப் பெருவேந்தனும் ஈழப்பெருவேந்தனும் ஈண்டினர். முதலில் வாதவூரர் புத்த குருவினை நோக்கி புத்தநெறி யினை நிலைநாட்டுமாறு கேட்டனர் அவர்க்கு விடை பகரும் பாங்கில்,

" அண்ணலார் உரைத்தபோதில் ஆங்கவன் வெகுட்சியெய்தி
கண்ணிலா தவற்கு வெய்யோன் கதிரொளி காட்டலாமோ
நண்ணலா எங்கள் நாதன் நற்புகழ் உரைக்கின் நல்நா
எண்ணிலா யிரங்கள் வேண்டும் என்றுபின் னிதுபுகன்றுர்.

அறந்திகழ் பிடக நன்னூல் ஓதியன் புடைய ஞகிப்
பிறங்குபல் யோனி தோறும் பிறந்துயிர்க் குறுதி செய்து

மறந்தரு கோறல் ஆதி நால்வகை யொழித்து மாண்பு
சிறந்துள போதினிழல் சேர்வனெம் மிறைவ னுவான்.

மேவிய கருவிற் சேரும் உருவம் வேதனை குறிப்பு
பாவனை யுடன்மெய்ஞ்ஞானம் பஞ்சகந் தங்கள் கூடி
ஓவில்பல் உணர்வுண் டாகி ஒழிவது பிறவித் துன்பம்
ஆவது பொன்றக் கேடாய் அழிவது முத்தி யென்ருன்."

என்று தம் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் சிலவற்றை வெளியிட்டனர். இவற்றை வாதவூரர் ஒவ்வொன்ருக மறுத்துச் சைவ சமயத்தின் மேன்மையினையும் திருநீற்றின் மாண்பினையும் நிலை நாட்டினுர். அன்றியும் வாதிட்ட பௌத்தர்களின் வாக்கினின்றும் நாமடந்தையை அகலுமாறு ஆணையிட்டார். அவர்களனைவரும் ஊமர்களாயதைக் கண்ட ஈழவேந்தன் மணிவாசகரின் திருவடிகளை வணங்கி, பேசக்கூடிய தேரர்களை ஊமர்களாக்கிய தேவரீர் ஊமை யாகிய தம் மகளைப் பேசும்படி செய்வித்தால் உமக்குத் தொண்டன் ஆவேன் என்று விண்ணப்பித்தான். சிவனருட் செல்வராகிய திருவாதவூரர் அக்கன்னியை அழைத்து நயனதீட்சை செய்து புத்த குரு வினுவிய தருக்க வினுக்களுக்கெல்லாம் தக்க விடைகளைக் கூறுமாறு பணித்தார். வினுவும் விடையுமாய் அமைந்த இக்கருத் துரைகளைத் திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பகுதியில் காணலாம். இத்திறத்தினைக் கடவுள் மாமுனிவர்,

"பற்று நன்குண ராத புத்தர் பகர்ந்ததர்க்கம் அவைக்கெலாம்
கற்றுணர்ந்தவர் போல மன்னிய கன்னி மாறுரை கூறினுள்
மற்று மங்கையர் சாழ லாம்வினை யாடலாக மகிழ்ச்சியால்
உற்ற தன்பொருள் தன்னைவாசக மாக வுண்மைய ரோதினுர்"

என்ற பாடலில் தெளியுறுத்தியுள்ளார். பிறவி ஊமையாகிய தன் மகள் மெய்ப்பொருள் விளக்கங்களைப் பேசிய திறத்தினைக் கண்டு வியந்த ஈழவேந்தன் சிவ சின்னங்கள் தாங்கி அரனடிமறவா அன்ப னுயினுன். சோழவேந்தனும் தில்லைவாழ் நன் மக்களும் பொன்னம் பலத்தைப் போற்றித் திருவாதவூரரை ஏத்தினர். பௌத்தர்கள் அனை வரும் சைவர்களாக மாறித் தில்லைப் பெருமானின் திருவருளைப் பெற்றனர்.

இங்ஙனம் கடவுள் மாமுனிவர் தில்லை மாநகரில் ஈழத்திருந்து வந்த பௌத்தப் பேரறிஞர்கட்கும் மணிவாசகர்கட்கும் நடந்த சொல் லாடலைப் புனைந்துரைத்தனர். பரஞ்சோதியாரின் கற்பனையில் சோழ

மன்னனின் ஊமை மகளைப் பேசவைத்ததாகக் காண்கிறோம். பெரும்பற்றப்புலியூரார் பொதுவாகப் புத்தர்களை வாதவூரர் வென்றார் என்றுதான் அமைத்துள்ளார். ஆயின் கடவுள் மாமுனிவர் சிவஞான முனிவரின் இனிய நண்பராதலின் புறச் சமயமாகிய புத்த நெறியைக் கண்டனம் செய்யும் கருத்தில் சில கற்பனைக் களங்களையும் கதை மாந்தர்களையும் படைத்துக் கொண்டார் என்று கருதுவது பிழையாகாது. தில்லை நகரின் வடபால் காளி கோயிலுக்கு அருகில் திருவாதவூரரின் கோயில் இருத்தலும் வடக்கு வீதியை அடுத்து மணிவாசகரை மதித்து வணங்கும் அம்பலத்தாடி மடம் இருத்தலும் எண்ணுதற்குரியன. ஒருவேளை தில்லையின் புறநகராகிய காளி கோயிலுக்கருகில் சமயவாதம் திகழ்ந்திருத்தலும் கூடும். அந்த இடத்தை ஒட்டியே பள்ளிப்படை என்ற இடம் உள்ளது. பெரும்பாலும் இச்சொல் இடுகாட்டையேகுறிக்கும். இப்பொழுதும் இப்பகுதி இவ்வாறுதான் இலங்கி வந்துள்ளது. ஆயினும் தொடக்க நிலையில் பௌத்தப் பள்ளிகள் கூட இங்கு இருந்திருக்கலாம். இவர்களை வாதத்தில் வென்ற மணிவாசகரின் கோயிலும் இதனருகிலிருத்தல் இங்ஙனம் ஊகிப்பதற்கு இடந்தருகின்றது.

தில்லையில் பௌத்தச் சின்னங்கள்

தில்லையில் பௌத்தச் சின்னங்களாகக் கருதத்தக்கவை சில உள்ளன. வடுகநாதன் திரைப்பட அரங்கத்திற்கு அருகில் குடதிசையை நோக்கியிருக்கும் விநாயகர் வடிவமும் தெற்கு வீதியின் வடதிசையை நோக்கியுள்ள நரமுக விநாகயரின் வடிவமும் தொடக்க நிலையில் புத்தரின் திருவுருவங்களாகஇருந்து பின்னர் மாற்றியமைக்கப் பட்டன என்பதை என் ஆசிரியர்களுள் ஒருவராகிய மதிப்பிற்குரிய திரு. ஈ. எஸ். வரதராச ஐயர் அவர்கள் கூறக்கேட்டதுண்டு. விநாயகன் என்ற பெயர் புத்தபிரானுக்கும் மூத்த பிள்ளையார்க்கும் ஒத்ததாக வடமொழி நிகண்டுகளிலும் தமிழ் நிகண்டுகளிலும் வழங்குவதை நாம் நினைவிற் பதித்தல் வேண்டும். இவ்வாறு விசாகன் என்ற திருப்பெயரும் இளைய பிள்ளையாராகிய முருகவேளுக்கும் புத்தருக்கும உரியனவாகத் திகழ்கின்றன. பழஞ்சாலியர் தெருவில் கூட சில புத்தச் சின்னங்கள் இருந்தனவென்று கேள்வியுற்றதுண்டு. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தில்லையில் புறநகர்ப் பகுதிகளையும் ஐயத்திற்குரிய சில கடவுள் வடிவங்களையும் சிற்பநூல் முறை, ஆய்வு முறை ஆகியவற்றின் வழிநின்று ஆராய்ச்சி மேற்கொள்ளின் தில்லையில் பௌத்தம் நிலைபெற்றிருந்த வாய்மை குறித்த சில புதிய உண்மைகள் புலப்படுதல் கூடும்.

பாசுபதம்

பல்லவர் காலத்தில் பாசுபதத்துறவிகள் சிதம்பரத்தில் குடியேறி யாகம் முதலியன செய்து வந்தனர். இவர்களை **'பசுவேட்டு எரி யோம்பும் சிறப்பர்'** என்று ஞானசம்பந்தர் சுட்டிக் காட்டுகிறுர்.

பாசுபத சைவத்தைப் பற்றிக் கீழ்க்காணும் குறிப்பை, டாக்டர் சித்தலிங்கம் எழுதியனுப்பியிருக்கிறுர்.

பாசுபத சைவம்

மெய்கண்டார் சிவஞானபோதம் இயற்றினுர். அவருடைய மாணவராகிய அருணந்திசிவாசாரியருமு, அவர் தம்மாணவர்களும், சிவஞானபோதத்தை முதல்நூலாகக்கொண்டு நூல்களை இயற்றினர். அவை மெய்கண்டசாத்திரங்கள் எனவும், சித்தாந்தசாத்திரங்கள் எனவும் வழங்கப்படும். அவைகாட்டும் தத்துவப்பொருள் சைவசித் தாந்தம் என்னும் பெயரால் குறிக்கப்படும்.

சைவசித்தாந்தக் கொள்கைகளின் அடிப்படையில் சிவஞான முனிவர், தம்காலத்து வழக்கிலிருந்த சமயங்களை அகம் புறம் என இரண்டாகவும் ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு உட்பிரிவுகளா கவும் வகுத்தார். அவை அகச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், புறச் சமயங்கள்' புறப்புறச்சமயங்கள் எனப்படும்.

அகச் சமயங்களாவன : பாடாணவாதம், பேதவாதம், சிவசம வாதம், சங்கிராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதம், சிவாத்துவிதம், பரிணுமவாதம்.

அகப்புறச் சமயங்களாவன : பாசுபதசைவம், மாவிரதசைவம், காபாலசைவம், வாமசைவம், வைரவசைவம், ஐக்கியவாதசைவ..

புறச் சமயங்கள் :

தருக்கம் (நியாயம், வைசேடிகம் என இருவகைப்படும்.) மீமாம்சை, ஏகான்மவாதம், காங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் ஆகியனவாம்.

புறப்புறச் சமயங்கள் :

உலகாயதம், பௌத்தம், சமணம் முதலியனவாம்.

பாசுபத சைவம் :

அகப்புறச்சமயங்கள் சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்றுக் கொள்ளுகின்றன. எனவேதான் சைவம் என்ற பெயரோடு அழைக்கப்படுகின்றன. சிவபெருமானின் பெயர்களுள் ஒன்ருகிய பசுபதி (உயிர்களுக்குத் தலைவன்) என்பதனையே மிகச்சிறப்பாகப் போற்றுவதால் இது பாசுபத சைவம் எனப் பெயர் பெற்றது. இச் சமயத்தைப் பற்றிய நூல்கள் ஏதும் இப்போது கிடைக்கவில்லை. மாதவர் இயற்றிய சர்வதரிசன சங்கிரகம் என்னும் நூலில் வரும் சிறு குறிப்புக்களைக் கொண்டே அகப்புறச் சமயங்களைப்பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பாசுபத சூத்திரங்கள், ஹரதத்தாசாரியர், நகுலீசர், பாஞ்சராத்திர பாடிய உரைகாரர் முதலியவர்களை இந்த நூல் மேற்கோளாகக் காட்டுகிறது.

இச்சமயம் 'நகுலீச பாசுபதம்' எனவும் வழங்கப்படும். நகுலீசர் என்பவர் வகுத்துத் தந்த நெறியே 'நகுலீச பாசுபதம்' என்று கூறுவார்கள். "லகுளீச பாசுபதம் என்பதே சரியானது. இதுவே இந்தியாவின் கீழ்ப்பகுதிலும் தென்பகுதியிலும் நகுலீச பாசுபதமாக மாறியது" என்று திரு. பி. டி. சீநிவாச ஐயங்கார் (OUTLINES OF INDIAN PHILOSOPHY) கூறுகிருர்.

இச்சமயம் இதிகாச காலத்திலிருந்தே வழக்கில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பல்லவர்கள் காலத்தில் வழக்கில் இருந்தது பற்றித் தகவல்கள் கிடைக்கின்றன. இவர்கள் மமேச்சுரர் எனவும் அழைக்கப் பட்டனர். பசுபதியையும், இலிங்கங்களையும் இச்சமயத்தினர் வழி படுவர். சிவனுடன் பேய்களையும் கானங்களையும் இணைத்து வழிபடும் வழக்கமும் உண்டு. இவர்கள் தம் உடம்பில் சாம்பலையும் களிமண்ணை யும் பூசுவார்கள்; இவர்கள் முகத்திலும், தோளிலும், கொப்பூழிலும்,

மார்பிலும் இலிங்க முத்திரை இடம் பெற்றிருக்கும் கருப்பு உடைகளை அணிவார்கள். சாதி வேறுபாடுகளற்றவர்கள்; தவத்திலும் தியானத்திலும் ஈடுபடுவார்கள். உயர்ந்த பாசுபத விரதம் 'ஞானம்' எனப்படும். சிவன் யோகாசிரியனாக வந்து குரு, ததீசி, அகத்தியர், உபமந்நியு முதலியவர்களுக்கு உபதேசித்தான். அவர்கள் வேறு பலர்க்கு இதனை உபதேசித்தனர்.

தத்துவம் :

ஆன்மாக்கள் எண்ணிறந்தன; நிலை பெற்றன; காரிய காரணக் கூட்டினால் தனித் தனியாகத் தோற்றமளிக்கின்றன. ஆன்மாக்களுக்கு ஆணவ மலம் என்பது ஒன்றில்லை. மாயை, கன்மம் ஆகிய இரண்டு மலங்களே உண்டு. இவ்விரண்டால் கட்டப்பட்டு இன்ப; துன்பங்களை அநுபவிக்கும் ஆன்மா. இன்ப, துன்பத்தில் வெறுப்புத் தோன்றும்போது சரியை, கிரியை முதலியவற்றில் ஈடுபட்டு, சாத்திர நெறிப்படி தீட்சை பெற்றவனை ஈசனுடைய ஞானம் சென்று பற்றும். ஈசன், தனது குணங்களையும் அதிகாரத்தையும் அவனிடம் தந்து, தான் ஓய்வு பெற்று வீற்றிருப்பான்.

ஐவகைப் பொருள்கள் :

1. காரியம், 2. காரணம், 3. யோகம், 4. விதி, 5. துக்காந்தம் எனும் ஐந்து நெறிகளின் வழியே மனிதன் உய்தியை எட்டமுடியும் என்று பாசுபதம் கூறுகிறது. துன்பங்களின் முடிவு மட்டுமே வீட்டுப் பேறு அல்ல. இறைவனின் தெய்விக முழுமையை எட்டுவதே வீட்டுப் பேறும்.

இடைக்காலத்தில், அதாவது பல்லவர் காலத்திலிருந்து பிற்காலச் சோழர் காலம் வரை, இச்சமயம் தமிழகத்தில் பெரிதும் பரவியிருந்தது. காபாலிகர், வாமசைவர், களாமுகர் போன்ற கொடூரமான நெறிகளிலிருந்து மாறுபட்டதாக, மக்கள் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியதாகப் பாசுபத சைவம் விளங்கியது. எனவே இது மக்களிடையே பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிவ நெறி (சைவ சித்தாந்த நெறி உள்பட)க்குச் சிறப்புத் தலங்களாக விளங்கிய காஞ்சி, காளத்தி, திருவண்ணாமலை, திருவானைக்கா, சிதம்பரம் முதலிய ஊர்களில் பாசுபத நெறியினர் வாழ்ந்தனர். அவர்களுக்குரிய மடங்களும் இருந்தன; மடத்தின் தலைவர்கள் இந்நெறியின் கொள்கைகளை விளக்கி வந்தனர்.

சிதம்பரமும் இசுலாமும்

' சோமலெ '

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு முகமதியர்களால் சில தொல்லைகள் தென்னுட்டில் விளைந்த துண்டு. அப்போது 'நவாப் கலகம்' என்று வரலாற்றில் பேர்பெற்ற கலகம் நடந்த காலம். எல்லா உருவங்களையும் அவர்கள் உடைத்து வந்த நேரம் முகலாயர்கள் சிதம்பரத்தின்மீது படையெடுத்து வந்தனர். இவர்கள் வருவதை உணர்ந்த தில்லைவாழந்தணர்களும், ஆயிரத்தெட்டு மடபதிகளும், அகப்பரிவாரங்களும், மெய்காவற் சைவர்களுமாக ஒருங்குகூடி, நடராச வடிவை அப்புறப்படுத்தி விடுவது என்று முடிவுகட்டினுர்கள்.

இவர்களும் கலகக்காரர்களைப்போல் ஆயுதந்தாங்கி, கூத்தனுருவத்தைத் துணியில் சுற்றி மறைத்துத் தூக்கிக்கொண்டு தென்திசை நோக்கி ஓடினுர்கள். இதனை உணர்ந்த முகலாயர்கள் சென்றவிடமெல்லாம் துரத்தினர். கடைசியாக மலையாளக்கரை ஓரமாகச் சென்று மலைக் குகைகளில் ஒளித்துவைப்பது என்று முடிவு கட்டினர். அங்கும் அவர்கள் செல்லவே, சில மெய்காவற்சைவர்கள் துலுக்க வேடந்தாங்கி இவ்வுருவத்தை எடுத்துசென்று ஓர் ஆலமரப் பொந்தில் மறைத்து வைத்துத் திரும்பினர். இச்செய்தி அவர்களுக்கு எட்டிவிடப்போகிறதே என்ற கவலையால், தாம் மேற்கொண்ட மாறு வேடத்தோடேயே கலகக்காரர்களோடு கலந்து உளவறிந்து வந்தனர் இவர்கள் உளவாளிகள் என்பது எப்படியோ கலகக்காரர்களுக்கு எட்டிவிட்டது உடனே அவர்களைக் கொன்றுவிட்டனர்.

இதற்குள் கலகம் முடிந்துவிட்டது. கூத்தப்பெருமான் ஆலமரப் பொந்தையே சிற்றம்பலமாகக்கொண்டு சிலகாலம் விளங்கினுர். அதனுல் அந்த இடம் ஆலப்புழை எனப்படும். அமைதி நிலவியதும் அவ்வூரவர்கள் ஒற்றுமையுடன் மெய் காவற்சைவர்களைக்கொண்டு ஊரம்பலத்தில் கூத்தப்பெருமானை எழுந்தருளிவித்து வழிபட்டு வந்தனர். அவ்வூரே இப்போது அம்பலப்புழை என வழங்குவதாயிற்று என்றும் ஓர் செய்தியுண்டு.

தெற்கு வீதியில் (தெற்குக் கோபுரத்துக்கு எதிரில்) உள்ள அமீர் லாட்ஜ் கட்டிடப் பகுதியே மொகலாயர் காலத்தில் முசுலிம்கள் சிதம்பரத்தில் வந்து தங்கிய பகுதியாகும்.

ஈழநாட்டுத் தமிழர்களும் தில்லைச் சிற்றம்பலமும்

அருள் தியாகராசா

கோயில் என்று அழைக்கப்பெறும் சிதம்பரத்தின் பெருமையை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனுலும் அளவிட்டுக் கூற இயலாது. இத்தலத்தை 'எப்புவனங்களும் நிறைந்த திருப்பதி' என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்ருர்.

ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் சைவப் பேரொளியையும் தமிழ் மொழியின் சிறப்பையும் பரப்புவதற்கே அவதரித்த ஆறுமுக நாவலர் பெருமான் சிதம்பரத்திலே அக்காலத்தில் ஓர் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்துத் தமிழ் மணமும் சிவ மணமும் கமழச் செய்தார். சைவத்தின் நிலைக்களமாய் விளங்கும் பன்னிரு திருமுறைகளுக்கு உரிய மதிப்பையும் இடத்தையும் கொடுக்கத் தயங்கிய தில்லையில் வாழ்ந்த சுமார்த்தர்களை வன்மையாகக் கண்டித்தார். பெரியபுராணத்தை அச்சுவாகனமேற்றி உலா வரச் செய்தார்.

நாவலர் பெருமானின் முன்னேர்களில் ஒருவராகிய ஞானப் பிரகாசர் சிதம்பரத்தில் ஞானப்பிரகாச தீர்த்தம் என்ற ஓர் குளத்தை உண்டாக்கினுர்.

நாவலர் பெருமானைப் பின்பற்றி சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், வண்ணை சுவாமிநாத பண்டிதர், சிவஞான பாடியம் முழுவதையும் அச்சுவாகன மேற்றுவித்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் பல காலம் சிதம்பரத்தில் வாழ்ந்து அரும்பணி புரிந்தனர்.

ஸ்ரீமந் நடராசமூர்த்தியிடம் எல்லையில்லாத பேரன்பு பூண்ட 'யாழ்நூல்' வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் 'நடராச வடிவம்' என்ற நூலை இயற்றியிருக்கிருர்கள்.

ஈழநாட்டில் கலைமகளின் கடாட்சமும் திருமகளின் திருவருளும் சிவபக்தியும் ஒருங்கே பொருந்திய குடும்பத்தில் உதித்தவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். கல்வித்துறையில், சமயத் துறையில், அரசியலில், நிர்வாகத்தில், நாவன்மையில், சிவபூசை செய்வதில், வள்ளற்றன்மையில் சேர். பொன். இராமநாதன் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினுர். சேர். இராமநாதன் தில்லையம்பதியில் ஐந்தொழில் இன்பக்கூத்தியற்றும் ஸ்ரீ நடராசப்

பெருமானிடம் பெரும் பற்றுடையவர். 1905-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்த சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் முதலாண்டு விழாவிற்கு சேர். இராமநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் தம் சொந்தச்செலவில் நிறுவிய சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடராசர் கோயிலைக்கட்டி, அங்கே பயிலும் சைவப் பெண்பிள்ளைகளெல்லாம், நடராசப் பெருமானை நாடோறும் வணங்க வேண்டுமென்று விதித்திருக்கிறார். திராவிட சிற்ப முறைப்படி ஓர் பெரிய சிவாலயத்தைக் கொழும்பு மாநகரில் கருங்கல்லினால் அவர் கட்டியிருக்கிறார். அதனை ஸ்ரீ பொன்னம் பலவாணேசர் கோயில் என்று அழைப்பர்.

சேர் முத்துக்குமாரசாமியின் புதல்வரும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மைத்துனருமாகிய கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசாமி கலையுலகில் சர்வதேசப் புகழ்பெற்றவர். அவர் இந்தியா விலுள்ள புராதனக்கலைகளை ஆராய வேண்டுமென்ற நோக்கத்துடன் முதலில் தென்னிந்தியாவிலுள்ள முக்கிய தலங்களுக்குச் சென்று, சிற்பம் முதலிய கலைகளின் கருவூலங்களாய் அமைந்த ஆலயங்களைத் தரிசித்தார். தமிழிலக்கியங்களைப் பற்றியும் சைவ சாத்திரங் களைப்பற்றியும் ஓரளவு அறிந்துகொண்டார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'சிவநடனம்' (டான்ஸ் ஆஃப் சிவா) என்ற நூல் மிக்க பிரசித்தி வாய்ந்ததாகும். அது அவருடைய கலை ஆராய்ச்சியின் சிகரமாக அமைந்துள்ளது என்று கூறலாம். இந்நூலில் நடராஜ தத்துவம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் அவர் பெற்றிருந்த இந்து சமய ஞானமும் இந்தியக் கலைஞானமும் ஒன்றாகச் சேர்ந்து மிளிர்கின்றன.

ஈழநாட்டிலுள்ளவர்கள், சிதம்பரத் தலத்தைத் தமது கண்ணின் மணிபோல் போற்றும் பண்புடையவர்கள். சிதம்பரத்தில் மானு முதலி மடம், சிவபுரி மடம், புண்ணிய நாச்சி மடம் முதலிய மடங்களை யாத்திரிகர்களின் பொருட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள். மடங்கள் இப்போது நன்றாக பரிபாலிக்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத் திலுள்ள பல சைவப் பெருமக்கள், நிலங்களையும் கட்டிடங்களையும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தரும சாதனம் செய்திருக்கிறார்கள். பல்லாண்டுகளாக, இவற்றிலிருந்து பெற்ற வரும்படியைக் கொண்டு அறக்கட்டளைகள் நடைபெற்று வந்தன. இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக அந்த அறக்கட்டளைகள் முட்டின்றி நடைபெற முடியாத நிலையை எய்தியுள்ளன.

ஈழநாட்டிலுள்ள பலர், தங்கள் பிள்ளைகளுக்கு அம்பலவாணன், நடராசா, சிதம்பரம், கனகசபை, பொன்னம்பலம், சபாநாயகம், சிவசிதம்பரம், சிவகாமி முதலிய பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

ஆறுமுகநாவலரும் சிதம்பரமும்

ச. அம்பிகைபாகன்

" சிதம்பரம் போகாமல் இருப்பேனோ
சென்மத்தை வீணுக்கிக் கெடுப்பேனோ "

என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடி இருப்பது, நந்தனுருக்குச் சிதம்பர தரிசனத்தில் இருந்த ஆர்வத்தை மாத்திரமல்லாமல், சைவர்களாயுள்ளோர் எல்லோரினதும் ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது. சைவர்களாய் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது சிதம்பரத்தைத் தரிசிக்காவிட்டாற் பிறவிப் பயனை அடையாதவர்களாகத் தம்மைக் கருதுவர். இப்படி இவர்கள் கருதுவதற்குக் காரணம் சிதம்பரத்தின் ஒப்பற்ற மகிமையே. நாவலர் அவர்கள் சிதம்பரத்தின் மகிமையைப் பெரியபுராணம் தில்லைவாழந்தணர் புராணத்துக்கு எழுதிய சூசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

சிதம்பரத்தின் மகிமை

"சாந்தோக்கிய உபநிடத்திலே பிரமபுரத்திலுள்ள நகரமாகிய புண்டரிக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாச மத்தியில் விளங்கும் அதிசூக்கும சித்தை அறிதல் வேண்டுமென்று தகரவித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச்சரீரத்தையும், புண்டரிக வீடென்பது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசக்தியையும், அதிசூக்குமசித்தென்றது பரப்பிரமமாகிய சிவத்தையும் என்றறிக. புறத்தும் இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்குந் தில்லைவனம் புண்டரிக வீடெனவும், தில்லை வனத்திலிருக்கும் ஆகாசம் பராசத்தியாகிய திருச்சிற்றம்பலமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ் செய்யும் பரப்பிரம்மசிவம் அதிசூக்குமசித்தெனவும் சொல்லப்படும். இவ்வாகாசம் பூதாகாசம் போற் சடமாகாது சித்தேயாம்; ஆதலால் சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந் தானமாதலால், தில்லைவனமும் சிதம்பரம் எனப் பெயர்பெறும்."

தில்லைவாழ் அந்தணர் பெருமை :

மேலே குறிப்பிடப்பட்ட அதே சூசனத்தில் கூத்தப்பெருமானைப் பூசிக்கும் அந்தணர் பெருமையையும் விளக்கியுள்ளார். அதன்

சாரம் பின்வருமாறு: ஒருமுறை பிரமா, தாம் புரியும் யாகத்துக்கு உதவிசெய்யும்பொருட்டு வியாக்கிரபாத முனிவரின் அனுமதியோடு தில்லை மூவாயிரவரைக் கங்கை நதி தீரத்துக்கு அழைத்துச் சென்றார். உரியகாலத்தில் அவர்கள் திரும்பிவராதபடியால், வியாக்கிரபாத முனிவர் இரணியவன்ம சக்கரவர்த்தியை அழைத்துவரும்படி அனுப்பினார். அப்படி அழைத்து வந்து தில்லை மூவாயிரவரை எண்ணியபொழுது ஒருவர் குறைவதைக் கண்டு சக்கரவர்த்தி திகைத்தார். அப்பொழுது சிவபெருமான் தேவர் முதலிய யாவரும் கேட்பப் பின்வருமாறு கூறினார்: "இவ்விருடிகள் எல்லோரும் எமக்கு ஒப்பாவார்கள்; நாமும் இவ்விருடிகளுக்கு ஒப்பாவோம்; ஆதலால் நம்மை இவர்களுள் ஒருவராகக் கைக்கொள்."

மேற்கூறியவாறு சிதம்பரத்தின் மகிமையை உணர்ந்தே நாவலரவர்கள் அதையே கேந்திரமாக வைத்து சைவத்தை வளர்க்க ஒரு மாபெருந் திட்டம் வகுத்தார்.

நாவலர் கல்விப்பணி

சிதம்பரத்திற்குச் செல்லுமுன் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை, கந்தர்மடம், கோப்பாய், பருத்தித்துறை முதலிய இடங்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தார். ஆனால் சிதம்பரத்தில் நாவலர் அவர்கள் ஒரு சாதாரண வித்தியாசாலையைத் தாபிக்கத் திட்டம் போடவில்லை. அவர்கள் போட்டதிட்டம் சைவப்பிரசாரர்களைப் பயிற்றும் ஒரு தாபனத்துக்கே. இத்தாபனம் கத்தோலிக்கரின் செமினறிகளையும் புரட்டஸ்தாந்தரின் மதச்சாத்திரக் கல்லூரிகளையும் போன்றதாகும்.

நாவலர் அவர்கள் சிதம்பரத்தில் தாபிக்க இருந்த நிறுவனத்துக்கு ஒரு பதினன்கு அம்சத் திட்டம் போட்டார். இத்திட்டத்துக்கு முன்னுரையாக பின்வருமாறு கூறியுள்ளார்: "கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும் வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினலே அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கிவருகிறது". நாவலரவர்கள் மேற்காட்டப்பெறவற்றைக் கூறியதற்குக் காரணம் சைவர்களும் கிறிஸ்தவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றித் தமது சமயத்தை வளர்க்க வேண்டுமென்பதே.

அவர்கள் வகுத்த பதினுன்கு அம்சத் திட்டத்தில் மிக முக்கிய மானவை பின்வருமாறு:

1. சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒரு நிலம் வாங்க வேண்டும்.

2. இந்த நிலத்திலே ஒரு பாடசாலையும், பூசைக்கட்டு சாத்திரக் கட்டு, சமையல் கட்டு என மூன்று கட்டுள்ள ஒரு திருமடமும் கட்டுவிக்கவும் சிவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு நந்தனவனம் வைக்கவும் வேண்டும்.

3. இந்தப் பாடசாலையிலே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பால பாடங்கள், நிகண்டு, திருக்குறள் முதலிய நீதிநூல்கள், சிவ புராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம் வெளிப்படை யாகிய வசனநடையில் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.

4. சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்து, சில பிள்ளைகளுக்கு தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ்வேதத் தைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாய் ஓதவும் பழக்கு விக்கவேண்டும்.

பொருள் திரட்டல்:

இப்படித் திட்டத்தை வகுத்துவிட்டு இதற்கு வேண்டிய பணத் தைக் கணக்கிட்டு எண்பதினுயிரம் ரூபா தேவைப்படுமெனக் கண்டனர். இப்பணத்தைச் சேர்ப்பதற்கு தமிழ்நாட்டிற் பெருமுயற்சி எடுத்தனர். அங்கே போதிய பணஞ் சேராதபடியால் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டாமாண்டில் யாழ்ப்பாணம் வந்து தமது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பருத்தித் துறைச் சித்திவித்தி நாயகர் கோயிலிலும் தமது திட்டத்தை விளக்கிப் பிரசாரஞ் செய்தனர். இப்பிரசாரத்தின் பயனாக யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறையிலுமுள்ள பிரபுக்களும் வர்த்தகர்களும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தனர், மேலும் சில வர்த்தகர்கள் தங்கள் வியாபாரத்திலே மகமை ஏற்படுத்திச் சிதம்பர வித்தியாசாலை நடத்துவதற்குக் கொடுத்தனர்.

தமக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு தாம் வகுத்த பெரிய திட்டத்தை நிறைவேற்ற முடியாதெனக் கண்ட நாவலர் யாழ்ப்பாணத்து நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலைபோன்ற ஒரு வித்தியாசாலையைச் சிதம்பரத்தில் நிறுவினர். இவ்வித்தியாசாலையைக் கட்டுவதற்கு வேண்டிய பனைமரம் முதலிய பொருள்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சென்றார் எனக் கூறப்படுகிறது. இவ்வித்தியாசாலை தமிழ்நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பேருதவிபுரிந்தது. இதற்குத் தலைமையாசிரியர்களாக நாவலர் மாணாக்கர்களான சதாசிவம்பிள்ளை, மட்டுவில் உரையாசிரியர் வேலுப்பிள்ளை முதலியோர் இருந்தனர். உரையாசிரியர் வேலுப்பிள்ளை அவர்களிடம், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றவர்களுள் இப்பொழுது திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக விளங்கும் ச. தண்டபாணி தேசிகர் ஒருவராவர்.

பிற தொண்டுகள் :

நாவலர் அவர்களையும் சிதம்பரத்தையும்பற்றி நினைக்கும்பொழுது அவர்கள் செய்துள்ள மேலும் இரு தொண்டுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஒன்று கோயிற்புராணத்துக்கு உரை எழுதி வெளியிட்டது. மற்றையது சிதம்பரத்தில் தாபிக்கப்பட்ட நால்வர் கோயில். இக்கோயிலில் நால்வர் சிலா விக்கிரகங்களும் சேக்கிழார் விக்கிரகமும் தாபிக்கப்பட்டுள்ளன. இதனால் நால்வர் மீதும் சேக்கிழார்மீதும் நாவலர் அவர்கட்கு இருந்த ஆர்வம் நன்கு விளங்குகிறது.

பதிப்பாசிரியர் குறிப்பு :

ஸ்ரீ மூலட்டான ஈசுவரருக்கு முதல்முதல் பாற்காவடித் தர்மம் நியமித்தவர் ஆறுமுகநாவலரே.

[ஆதாரம் : யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாசபிள்ளை எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரம்]

ஞானப்பிரகாச முனிவர்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, டி.லிட்.

பசுக்கொலைக்கஞ்சிப் பரதேசம் போனவர் ஞானப்பிரகாசர். இலங்கையைப் பறங்கியர் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பறங்கித் தலைவனும் பரிவாரமும் விழுங்குவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு பசு முறைதவறாது கொடுக்க வேண்டுமென்பது தலைவிதி. இக் கொடுங்கோன்மைக்குத் தீர்வு காணப் பரதேசம் சென்றவர் யாழ் திருநெல்வேலி ஞானப்பிரகாசர்.

ஞானப்பிரகாசர் சென்றடைந்த பரதேசம் தேசஸ்மிக்க அம்பர தேசம் சிதம்பரம்.

சிதம்பரத்தில் தேவி சந்நிதியிலே நாற்பது நாள் உபவாசமிருந்து கடுந்தவம் புரிந்தார் ஞானப்பிரகாசர். தேவியின் அநுக்கிரகம் கிடைத்தது. அநுக்கிரகித்தவாறு கௌடதேசம் போய் வேதாகம சமஸ்த சாத்திர பாரங்கதாரயினர் ஞானப்பிரகாசர். அதன்மேல் திருவண்ணாமலை ஆதீனத்தில் காஷாயம் பெற்று முற்றத்துறந்த முனிவர் ஆயினர்.

ஞானப்பிரகாசரின் பெருமையில் ஈடுபட்ட தனவான் ஒருவர் சிதம்பரத்தில் அவர் பெயரால் ஒரு குளம் அமைத்தார். இது ஞானப் பிரகாசர் குளம் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

சமஸ்கிருதத்தில் சிவஞானபோதவிருத்தி, பௌஷ்கராகம விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மகான்மிய சங்கிரகம் என்னும் நூல்களும் தமிழில் சிவஞானசித்தியாருக்கு ஓர் உரையும் ஞானப்பிரகாச முனிவர் அருளியவை.

வடமொழிச் சிவஞானபோதத்து இறுதிச்'சூத்திரத்து இறுதியடி, 'ஏவம் வித்தியாத் சிவஞ்ஞானபோதே சைவார்த்த நிர்ணயம்' என்பது. இதில் சிவஞ்ஞானபோதே என்பதற்கு ஞானப்பிரகாசர் செய்த உரை பெரிதும் சிந்தனைக்குரியது.

உரைகாரர்கள் (இச்) சிவஞானபோதத்தில் என ஒரு சுட்டு வலிந்து வருவித்துக்கொண்டார்கள். ஞானப்பிரகாச முனிவர் அப்படியொரு சுட்டு வருவிக்கவில்லை. ஆகவே முனிவர் கருதும் சிவஞானபோதம் யாதாம்? என்பது விசாரிக்கற்பாலதாம்.

ஞானப்பிரகாச முனிவரின் தவ வலியால் பறங்கியர் ஆட்சி ஒடுங்கியது. அதன்மேல் ஒல்லாந்தர் சிறிதுகாலம் தலைகாட்டினராயினும் அவர் அரசு தேய்பிறையாயது. மறைவிலிருந்த சைவம் தலைநீட்டியது. சைவாலயங்கள் எழுந்தன. அடுத்து,

ஆங்கில அரசு வந்தது; நீதிக்கு இடம் அளித்தது. ஆயினும் பாதிரிகள் தொல்லைகள் எழுந்தன. ஞானப்பிரகாச முனிவர் மரபில் முனிவரின் தவம் திரண்டு உதயம் செய்ததுபோல், ஓர் ஆறுமுக நாவலர் உதயமாயினர். ஞானப்பிரகாச முனிவரின் தேவசக்தி இருந்தவாறு! திருச்சிற்றம்பலம்.

பதிப்பாசிரியர் குறிப்பு:

கட்டுரையில் குறிப்பிடப்பெற்றுள்ள நிகழ்ச்சியின் விளைவாக, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தார் பலர் சிதம்பரத்துக்கு வந்து சிவபுரிப் பகுதியில் ஒரு குடியிருப்பை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் என்று வரலாற்றுப் பேராசிரியர் சி. எஸ். சீனிவாசாச்சாரியார் 1940-இல் எழுதிய ஆய்வுரையில் தெரிவிக்கிருர்

ஞானப்பிரகாசர் சிதம்பரம் அடைந்து பல்லாண்டுகள் அங்கேயே தங்கி, சமயசாத்திர நூல்கள் பலவற்றை வடமொழியில் இயற்றினர். இவர் தங்கியிருந்த மடத்திற்கு அடுத்த நிலத்தில் இருந்த நிதிக் குவையைக் கொண்டு மிகப் பெரிய தொரு திருக்குளமும் அதன் அருகில் திருமடமும் அமைத்தார். இவை 'ஞானப்பிரகாசர் குளம்' என்றும் 'ஞானப்பிரகாசர் மடம்' என்றும் சிதம்பரத்தில் கனகசபை நகர் அருகே இன்றும் நின்று நிலவுகின்றன.

இவர் இயற்றிய பல நூல்களுள், இப்போது கிடைப்பது சித்தியார் சுபக்கவுரை மட்டுமே. இதன் இறுதியில் இவைரப்பற்றி ஒரு பாடல் காணப் பெறுகிறது:

" சொல்லில் நாவில் துரிசறும், சோத்திரத்து
ஒல்லுமேற் சிவஞானம் உதித்திடும்,
செல்லு மெய்அருணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காசன் நவிற்றுரை "

(ஆதாரம்: தமிழ் இலக்கிய வரலாறு: 16ம் நூற்றுண்டு. பாகம் 3, பப: 62-69. ஆசிரியர்: மு. அருணசலம்.)

திருவண்ணமலையில் ஞானப்பிரகாச சுவாமிகள் சில காலம் வாழ்ந்தார். இவர் இயற்றிய 129 சமஸ்கிருத சுலோகங்கள் SIVA YOGA RATNA DE JNANA PRAKASA என்ற பெயரில் தாரா மைக்கேல் என்பவரால் பதிப்பிக்கபெற்றுப் பிரெஞ்சு மொழியில் புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிட்டியூட் ஆப் இண்டாலஜி என்ற நிறுவனத்தாரால் 1976-இல் வெளியிடப்பெற்றுள்ளன.

இந்தியக் கலைகளின் நோக்கங்களும் நடராஜ வடிவத்தின் பெருமையும்

கலாயோகி ஆனந்த குமாரசாமி தரும் விளக்கம்

ச அம்பிகைபாகன்

கலாயோகி அவர்கள் பல்வேறு துறைகளில் உழைத்த போதிலும் அவர்கள் இந்தியக் கலைக்காற்றிய சேவையே அவர்களுக்கு அழியாப்புகழைத் தேடிக் கொடுத்துள்ளது. இந்தியக்கலை தெய்வ அம்சம் பொருந்தியது. யோகநிலை கைவரப்பெற்ற கலைஞர்களால் படைக்கப்பட்டது. அதனை விளக்கி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் பெரியதும் சிறியதுமான பல நூல்களைத் திறம்பட எழுதியுள்ளார். ஒரு செயலைத் திறம்படச் செய்பவரை யோகி என்கிறது கீதை. இவர்கள் திறம்படவும் உள்ளுணர்வோடும் இந்தியக்கலையை விளக்கியுள்ளபடியால் இவர்களைக் கலாயோகி என்று அழைப்பது மிகவும் பொருத்தமானதே.

கலாயோகி அவர்கள் இந்தியக்கலைகளை விளக்கி பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருந்த போதிலும் சிவ நடனத்தைப்பற்றி எழுதியிருப்பதே அவர்கள் படைப்புக்களுக்குச் சிகரமாக விளங்குகிறது. கலாயோகி அவர்கள் பிறந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட முத்திரையில் அவர்கள் படமும் நடராஜ வடிவத்தின் படமும் காணப்படுகின்றன. மேலும் அமெரிக்க அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சேர்ந்து அவர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படம் ஒன்று எடுத்துள்ளனர். அதற்கு சிவநடனம் (DANCE OF SIVA) என்னும் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியக்கலையைப் பற்றிக் கலாயோகி ஆங்கிலத்தில் எழுதியவற்றைத் தமிழிலே கூறுவது மிகக் கடினமான காரியம். எனினும் அவர்களுடைய கருத்துகளில் முக்கியமானவற்றை இங்கு தர முயல்கின்றேன்.

இந்திய தத்துவக் கொள்கைகள் எல்லாவற்றிலும் உபநிடத்தில் கூறப்படும் கோட்பாடு எப்படி ஊடுருவி இருக்கிறதோ அப்படியே இந்தியக் கலைகள் எல்லாவற்றிற்கும் இடையிலும் ஒரு ஒற்றுமையைக் காணலாம். இந்த ஒறுமைப்பாடும் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு கோட்பாட்டை ஆதரமாகக் கொண்டது.

இந்தியாவின் பெருமைக்குக் காரணமென்ன? அது நூல்களிலும் தத்துவக் கொள்கைகளிலும் தங்கியிருக்கவில்லை. அதன் பெருமை ஞானத்தைப்பற்றிக் கூறியிருப்பதிலும் அதனை அடைவதற்குக் காட்டிய வழிகளிலும் தங்கியிருக்கிறது. எல்லா ஞானமும் உண்மைகளும் சாசுவதமானவை. இவற்றை புத்தியைக் கொண்டு அறிய முடியாது அனுபூதி மூலமே இவற்றை உணர்ந்து கொள்ளலாம். இதற்கு உள்ளுணர்வு உதவி செய்யும். இந்த உள்ளுணர்வு கற்பனு வளமும் அதி அற்புத சக்தி வாய்ந்த மேதைகளுக்கு கைவரும். ஓர் ஆப்பிள் விழக்கண்ட சேர் ஐசாக் நியூட்டனுக்கு இப்படி ஒரு உள்ளுணர்வு ஏற்பட்டே ஒரு விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்தார். போதிமர நிழலில் இருந்த புத்தருக்கு இப்படி ஒரு உள்ளுணர்விலேயே பெரும் உண்மைகள் எல்லாம் கைவரப்பெற்றன. வேதங்கள் எல்லாம் ரிஷிகளால் கேட்கப்பட்டவை, காணப்பட்டவை மனிதரால் எழுதப்பட்டவையல்ல.

ஒரு சிறந்த கவிதையோ ஓவியமோ பாடலோ முதலில் கலைஞனுக்கு முழுமையாக மனக்கண்முன் தோன்றுகிறது. ஒரு திறமையான கலைஞன் இப்படி மனக்கண்முன் கண்டவற்றிற்கு முழுமையான உருவத்தைக் கொடுக்கிறன். அரை குறையான ஆற்றல் வாய்ந்தவன் அரை குறையாக உருவம் கொடுக்கிறன். ஒரு கலைஞன் தான் கண்ட காட்சிக்கு உருவம் கொடுக்கும் வரைக்கும் அது நிற்குமோ என்று அஞ்சிக் கொண்டே இருப்பான்.

ஒரு கலைஞனைப்பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது. அவன் ஒரு அலங்கார சித்திரத்தை வரையும் பொழுது அதைப் புதிதாக வரைவதாக கருதுவதில்லை' அவனுக்கு முன்னிருக்கும் கடுதாசியில் தோன்றும் சித்திரத்தை வரைவதாகக் காணப்பட்டது. ஏனெனில் அவன் முதலில் மனக்கண்ணில் கண்டதற்கே உருவம் கொடுக்கிறன். சிறந்த கலைஞனுக்கு இப்படிக்காட்சிகள் வந்துகொண்டிருக்கும் சில வேளைகளில் தெளிவில்லாமல் இருக்கக்கூடும். இவன் மனதைக் கட்டுப்படுத்தி தான் கண்ட காட்சிக்கு உருவம் கொடுக்கும்

வரைக்கும் அதனை மனதில் வைத்திருக்க வேண்டும். இங்குதான் கலைஞனுக்கும் பக்தனுக்குமுள்ள உறவு நன்கு புலப்படுகிறது. மனத்தைப்பற்றி பின்வருமாறு கீதை கூறுகிறது. "மனஞ்சஞ்சலமுடையது கலகத்தைசெய்வது அடக்க முடியாதது அதனை அடக்குவது காற்றை அடக்குவது போன்றது. ஆனல் பழக்கத்தினுலும் வைராக்கியத்தாலும் அடக்க முடியும். மனத்தில் ஏற்படும் தோற்றத்தை இடைவிடாது சிந்தித்தலும் சிந்தையை அடக்குவதும் இந்திய வழிபாட்டின் சிறந்த அம்சங்களாகும். இங்குதான் இஷ்ட தேவதையின் வழிபாடு முக்கிய இடம் பெறுகிறது. சாதாரண மக்கள் எங்கும் காணப்படுவதும் வழிபாட்டுக்கு இலகுவானதுமான கணேச மூர்த்தத்தை வழிபடுகின்றனர். இதனிலும் பார்க்கப் பக்குவமுடையவர்கள் நடராஜரை வழிபடுகின்றனர் நிற்குண உபாசனையில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரம் விக்கிரகங்கள் தேவையில்லை. இக்கடினமான முறையில் ஈடுபடுபவர் மிகச் சிலரே இஷ்ட தேவதையை வழிபடுவோர் முதலில் அத்தெய்வத்தின் தோற்றத்தை வர்ணிக்கும் தியான சுலோகத்தை ஓதுவர் பின்னர் அச்சுலோகத்தில் வர்ணிக்கப்பட்ட தோற்றத்தை மனதில் அமைதியாகச் சிந்திப்பர். இதே போலத்தான் கலைஞனும் தாம் செய்யப் போகும் உருவங்களை மனதிற் தோன்றச் செய்கிறன். இதுபற்றி சுக்கிரநீதி பின்வருமாறு கூறுகிறது " வழிபடுவோருக்கு தியானம் சித்தித்தற் பொருட்டு தெய்வத்திருவுநவ இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆதலின் அத்திருவுருவங்களை இயற்றும் சிற்பிகள் அத்திருவுருவ இலக்கணங்களை தியானிப்பதில் மிகவும் பற்றுடையவர்களாக இருத்தல் வேண்டும். அத்தியான நெறியாலன்றி காட்சி முதலிய வேறு எவ்வழியாலும் அத்திருவுவரு இலக்கணங்கள் அமையா.

இனி, இந்திய சிற்பக்கலைக்கு பாரம்பரியம் எவ்வாறு உதவிய தென்பதைக் கவனிப்பாய். ஆதியில் சிற்பக்கலை சம்பந்தமான சாத்திரங்கள் வாய்மொழி மூலமே கற்பிக்கப்பட்டன. பின்னர் ஞாபகத்தில் எளிதில் வைத்துக் கொள்ள உதவும் முறையில் இவை சிறு சிறு செய்யுள்களாக எழுதப்பட்டன. சில வேளைகளில் இந்தச் செய்யுள்களோடு சிற்பம் சம்பந்தமான வரை படங்களும் வழக்கில் இருந்தன. செய்யுள்களில் சுருக்கமாகக் கூறப்பட்ட விஷயங்களின் விவரங்களை மாணவன் ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்வான். சிற்பம் குலத்தொழிலாக இருந்தபடியால் பெரும்பாலும் தந்தையே மகனுக்கு ஆசிரியனுக இருந்தான். வேலைத்தலமே பாடசாலையாக அமைந்திருந்தது. மாணவன் ஆசிரியருக்கும் பணி செய்வதன் மூலமும் தொண்டாற்றுவதன் மூலமும் அவனைத் திருப்திப்படுத்தி

தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும். வேலைத்தலத்தில் சிற்பிக்கு வேண்டிய நல்லொழுக்கம் கடவுட்பக்தி முதலியனவும் போதிக் கப்படும். ஆசிரியனே இவற்றிற்கு முன் மாதிரியாக விளங்குவான்.

ஒரு சிற்பத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கு முன்கூறிய செய்யுள்களோடு அது சம்மந்தமான பரம்பரையான கதைகள், புரணக்கதைகள், முதலியவற்றின் அறிவும் அவசியம். உதாரணமாக நடராஜ வடிவத்தைச் செய்யப்போகும் சிற்பிக்கு அவ்வடிவம் சம்பந்தமான புராணக்கதையை அறிந்திருப்பது அவசியம். சிவபெருமான் எபபொழுது ஏன் நடனமாடினுர் என்பது கோயிற் புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. தாருகாவனத்து முனிவரின் அகந்தையை அடக்கி அருளும் பொருட்டு சிவபெருமான் தாம் பிக்ஷாடன வடிவங் கொண்டதோடு விஷ்ணுவை மோகினி வடிவம் கொள்ளச் செய்தார். இவ்விருவர்களாலும் மானபங் கமடைந்த முனிவர்கள் சிவபெருமானைக் கொல்லும் பொருட்டு ஒரு யாகத்தைச் செய்தனர். அந்த யாகத்திலிருந்து வெளிவந்த புலியையும், பாம்பையும் அக்கினியையும் துடியையும் சிவபெரு மானைக் கொல்லும்படி ஏவினர். சிவபெருமான் புலியைப் பிடித்து அதன் தோலை தனது சிறுவிரல் நகத்தால் கிழித்துப் போர்வையாகப் போர்த்துக் கொண்டார். பாம்பை மாலையாக அணிந்து கொண்டார். அக்கினியையும், துடியையும் தனது கைகளில் ஏந்திக் கொண்டார். கடைசியாக முயலகனை சிவபெருமான் மீது ஏவினர். சிவபெருமான் அதனைக்காலால் மிதித்து நடனம் செய்யத் தொடங்கினுர். இந்நடனம் சிவபெருமான் செய்யும் பஞ்ச கிருத்தியங்களைப் பிரதி பலிக்கின்றது.

நடராஜ வடிவம் இறைவன் ஆன்மாக்களின் நன்மை கருதி செய்யும் பஞ்ச கிருத்தியங்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பது உண்மை விளக்கம் என்னும் நூலில் நன்கு விளக்கட்டிருக்கின்றது. அதில் ஒரு பாட்டுப் பின் வருமாறு:

> தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு.

உடுக்கேந்திய கையில் படைத்தலையும், அபயகரத்தில் காத்தலையும், அக்கினி யேந்திய கையில் அழித்தலையும், ஊன்றிய பாதத்தில் மறைத்தலையும் தூக்கிய திருவடியில் அருளலையும் காண்பாயாகவென ஆசிரியர் கூறுகிறுர்.

இறைவன் பஞ்சகிருத்தியங்கள் மூலம் ஆன்மாக்களுக்கு ஓய்வாது அருள் செய்கிருன் என்பதைப் பின்வரும் பாட்டு நன்கு விளக்குகிறது.

மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து-நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பாதம்தான்.

உடுக்கேந்திய கையினுல் மாயையை நீக்கி அக்கினி ஏந்திய கையினுல் மன்மமலத்தைச் சுட்டு ஊன்றிய பாதத்திஞல் விடாமல் அமுத்தி தூக்கிய திருவடியினுல் அருளில் நிறுத்தி ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அமுத்துவதே இறைவன் திருக்கூத்தின் உண்மையென மேற்காட்டப்பட்ட பாட்டில் விளக்கப்பட்டுள்ளது.

மேல் விளக்கப்பட்டது போல் திருவுருவங்கள் மூலம் பெரும் தத்துவங்களை விளக்கும் முறையை இந்தியாவை விட வேறெங்கும் காணமுடியாது.

மேற்கோள் நூல்கள்

1. Ananda Coomarasamy,
Remembering and Remembering again and again.
S. Dorai Raja Singam
(A tributeto Kala Yogi Ananda Coomaraswamy in Words and Pictures) A Pre-Centennial Volume.

2. Triveni - (Journal of Indian Renaissance)
Ananda K. Coomaraswamy - Special number Vol. 46.
(July - Sept. 1977)

3. Homage to Ananda Coomaraswamy
A Memorial Volume
Edited Durai Raja Singam 1952

4. Ananda K. Coomaraswamy
By P. S. Sastri
Arnold - Heinama PublishersPt. Ltd.
New Delhi 1974

5. Ananda K. Coomaraswamy
A Critical Appreciation
by - S. Chandrasekhar
Brackil & Son Publishers Pt. Ltd.
Bombay-1977.

6. Kala Yogi Ananda Coomaraswamy
S. Ambikaibakan
(Uarathar Velliyeedu)
Jaffna - 1978.

ஈழத்துச் சிதம்பரம்

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள காரை நகர்ச் சிவன் கோயில், ஈழத்துச் சிதம்பரம் என்று பெயர் பெற்றுள்ளது.

இங்கு, நடராசருக்கு உரிய ஆறு அபிஷேகங்களும் ஒவ்வோர் ஆண்டும் உரிய நாட்களில் சிறப்பாகக் கொண்டப் பெறுகின்றன. மார்கழி மாதத்தில் ஆருத்திரா தரிசனத்தையொட்டி, தேர் விழாவும் நடைபெறுகிறது.

இணுவில் என்னும் ஊரில் சிவகாமியம்மைக்கு, ஆருத்திரா தரிசனத்தன்று திருவிழா உண்டு.

நீர்வேலி கந்தசுவாமி வட்டு மஹாலிங்கர் சேவலப்பட்டி கந்தசுவாமி கோயில்களில் மார்கழித் திருவாதிரையன்று நடராசர் அபிஷேகம் சிறப்பானது.

சிதம்பரம்

செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள செப்பறைச் சாமி மடம் என்ற

சிவஞானத் திருத்தளி

ஸ்ரீ-ல-ஸ்ரீ சபாபதி சுவாமிகள்

செப்பறைச் சிதம்பர சுவாமிகள் என்பார் யாழ்பாணத்திலிருந்து தில்லைக்கு வந்து அம்பலவாணரை வழிபட்டு வரும் நியமமுடைய வராய் இருந்து வந்தார்.

இவர் மாதவச் சிவஞான யோகிகளை நேரில் காணுமையால் அவர் எழுதிய கையெழுத்துப் பிரதியாகிய சிவஞான போதமாபாடி யத்தைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்பால் நாளும் பெற்று அவர் முன்னிலையில் படித்து முடித்தவர். இதனுல் தன் பெயரையும் சிவஞானபோத உரைமுக மாணுக்கர் என்று கைச்சாத்திடுவார். நிரம்பிய புலமையாளர். நூல் மரபாலும் உலகியல் மரபாலும் செந் நெறிபிழைப்பாரை முகங்கொண்டு பாரார். எவரையுமே முகநக நட்புச் செய்யும் வழக்கம் இவர்பால் இலது. இக்காரணத்தாலே இவர் பல நூல்களுக்கும் பலர் கருத்துக்களுக்கும் மாறுகொள் கருத் தினராய் எழுதிய கண்டனத் தாள்கள் பலவாகும். வடமொழியிலும் ஆகமங்களிலும் நல்ல பண்டித்தியமுடையவர். இவர் திட்டை அன்னப்பம்பேட்டை சபாபதித் தாயுமான சுவாமிகள்பால் துறவு பெற்றவர் என்று சொல்லுவர்.

இவர் தில்லைக்கு வந்தபோது தனித்திருந்து சிவபூஜைசெய்யவும் தவம் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட மடமே சிவஞானத்தளி என்னும் பெயரினதாகும். தனதாசிரியர் சிவஞான முனிவர் பெயரால் இம் மடாலயத்தை நிறுவினர். சிற்சில மாதங்கள் திருநெல்வேலியிலும் தங்குவதுண்டு.

ஈழத்துச் சுவாமிநாத பண்டிதர்

இரா. முத்துக்குமாரசுவாமி

யாழ்பாணத்தைச் சார்ந்த சுவாமிநாத பண்டிதர் சைவப் பேரறிஞர்களுள் ஒருவர். சிதம்பரத்தில் 15 ஆண்டுகள் வாழ்ந்தவர். இலங்கை வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளையிடம் முறையாகத் தமிழிலக்கண இலக்கிய சமய நூல்களைக் கற்றவர்.

இலங்கையில் காலி என்னும் துறைமுகத்தில் வியாபாரஞ் செய்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளையை அணுகிப் பெரியபுராணப் பிரசங்கம் அளிக்க அழைத்தனர். அவர் தமக்கு நேரமில்லாது போகவே தம் மாணவரான சுவாமிநாத பண்டிதரைக் காலிக்கு அனுப்பி வைத்தார். பண்டிதரின் சமயப் புலமையையும் சொற்பொழிவாற்றுந் திறனையும் கண்டு வியந்த அவ்வைசியப் பெருமக்கள் இவரைத் தமிழகத்திற்கு அழைத்து வந்தனர். தேவகோட்டையிலும் செட்டி நாட்டு ஊர்கள் பலவற்றிலும் அவர் பெரியபுராணம் படனஞ் செய்தார். பின்னர் தமிழ் நாட்டிலேயே இவர் தங்கிவிட்டார்.

இவர் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில் சபாபதி நாவலரிடமிருந்து சிவஞான பாடியத்தில் சில பாகங்களை வாங்கி அச்சிட்டார். பின்னர் மூவர் தேவாரத்தையும் பல ஏட்டுப் பிரதிகளுடன் ஒப்பு நோக்கி அரியமுறையில் சுத்த பாடமாக்கி அச்சிட்டு வெளியிட்டார்.

'அருட்பா மருட்பா' பூசலில் ஈழத்துக் கதிரைவேற் பிள்ளையுடன் துணை நின்றார். சைவ சமய நூல்களை அச்சிடுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் தம் எஞ்சிய வாழ்நாளைச் செலவிட்டு 1937 இல் மறைவுற்றார்.

யாழ்ப்பாணம் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் கோயில்

18ஆம் நூற்றாண்டில் இக்கோயில் அத்தியடியில் நிறுவப் பெற்றது. மூலத்தானத்தில் உள்ள நர்த்தன விநாயகர் திருவுருவம் தில்லைச் சிதம்பரத்திலிருந்து வரவழைக்கப் பெற்றது. ஆனமையாற்றான், 'நர்த்தன விநாயகர்' எனக் காரணப்பெயர் கொள்ளலாயிற்று. சிற்ப நூல் வல்லுநர் இவ்விக்கிரகத்தின் அமைப்பினைப் பாராட்டியுள்ளனர். இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா தமிழ் வருடப் பிறப்பன்று நடைபெறுவது வழக்கம்.

தில்லைத் திருநடனம்

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா

" கற்பனை கடந்து சோதி கருணையே வடிவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருசிற்றம் பலத்துணின்று
பொற்பிறு நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி. "

சிதம்பர ஸ்தலம்

உரைமன மிறந்து நின்றவொழி தனிக்கடவுள் ஆன்மாக்கள் மீது வைத்த பேரருளினாலே அவ்வருளே வடிவமாகத் தோற்றுவான் என்னும் உண்மையை "நடராஜ வடிவம்" என்னும் வியாசத்தினுள் ஆராய்ந்துணர்ந்தாம். ஆங்கு உருவம் பற்றி யாராய்ந்தாம். "தில்லைத் திருநடனம் " என்னும் இத்தலைப் பெயர்க்கீழ்த் தொழில்பற்றி யாராய் வாம். முதலில் தெரிசித்த முத்திதரும் ஸ்தலமாகிய சிதம்பர ஸ்தலத்தின் மகிமையைப்பற்றிச் சில குறிப்புகள் கூறியப்பாற் செல்வாம். நிலவுலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் வண்ணம், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுள்ளே மிகச் சிறந்த ஸ்தலம் சிதம்பர ஸ்தலமாம். இது முன்னாளில் தில்லைக் காடாகவிருந்த காரணம் பற்றித் தில்லைவனம் எனவும் வழங்கப்படும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும் ஆதிசேஷனுடைய அவதாரமாகிய பதஞ்சலி மகா முனிவரும் தவம் புரிந்து நடராஜ மூர்த்தியைக் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற இடம் இத்தில்லைவன மென்ப. இந்தத் தில்லை வனமானது விராட் புருடனுக்கு நடுநாடியாகிய சுழுமுனை நாடியாக அமைந்தது. இந்த ஸ்தலத்திலே மூலலிங்கத்துக்குத் தெற்கே வேதங் களுங் காணாத நிலைபெற்ற சபையொன்றுண்டு; அச்சபையின் கண்ணே எம்மையாளுடைய ஐயன் எக்காலத்தும் ஆநந்த நிருத்தஞ் செய்தருளுவான். இவ்வுண்மையை,

" நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக்குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணா மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மொன்று மென்றா னென்னையா ளுடைய வையன் "

என்னுங் கோயிற்புராணச் செய்யுள் இறைவனுடைய திருவாக்காக எடுத்துக் கூறும். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒப்புடைய வாதலினலே, பிண்டத்தில் அமைந்திருக்கின்ற இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுணைநாடி யென்னும் இவற்றிற்கு நேரொப்பாக இலங்கை, இமயம், தில்லையாகிய மூன்று தலங்களும் அண்டத்தில் அமைந்திருக்கின்றன. இடைநாடி இலங்கைக்கு நேராகச் செல்லும், பிங்கலைநாடி நன்மைமிக்க இமயமலைக்கு நேராகப் போகும், நாடுதற்கரிய சுழுமுணை நாடி தில்லை வனத்திற்கு நேரே போய்க்கூடும் எனவும், தாம் அத்திருத்தலத்தில் சதா ஆநந்த நிருத்தம் செய்வதாகவும் நடராஜ மூர்த்தி ஆதிசேஷனுக்குக் கூறினர். சுழுமுனை நாடியிற் பிராணனை நிறுத்திய யோகிகளுக்குப் பேரின்பப் பெறும்பேறு வந்து எய்துவதை யொப்பச் சிதம்பர ஸ்தலத்தை யடைந்து தரிசித்த பேருக்கு முத்தி யின்பங் கைகூடுமாதலினல், அண்டத்திலுள்ள சிதம்பரமும் பிண்டத்திலுள்ள சுழுமுனை நாடியும் தம்முள் ஒத்து நடப்பன.

" எண்டரு பூத மைந்து மெய்திய நாடு மூன்று
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனே டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டி னுங் காணலாகும். "

சிற்சபை பிரமபுரம்

சித் + அம்பரம் = சிதம்பரம். அம்பரம் என்னும் மொழி, ஆகாசம். வெளி யெனப் பொருள்படும் இச்சொல் அம்பலம் எனத் திரிவு பட்டும் நடக்கும். சிதம்பரம் சிற்றம்பலமாகும். ஹிருதய கமலத்திலே சிதாகாச வடிவமாகிய பரவெளி யமைந்திருக்கின்றது. இது அனைத்தினுக்கும் ஆதாரம். சாந்தோக்கியோபநிடத்தின் எட்டாவது பிரபாடகத்தின் முதற்காண்டம் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. அக்காண்டத்தை மொழி பெயர்த்துத் தருவாம்.

1. ஓம் பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கின்றது. அவ்வாகாசத்தினுள்ளே யிருக்கிற பொருளைத் தேடியறிதல் வேண்டும்.

2. " பிரமாபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கிறது. அவ்வாகாசத்தினுள்ளே எதனைத் தேடி யறிதல் வேண்டும்? " என (மாணுக்கர்) விசாரிப்பாரெனில்,

3. "புறத்தே யிருக்கிற ஆகாசம் எவ்வளவு விரிவாயிருக்கிறதோ, இருதயத்தினுள்ளே யிருக்கிற ஆகாசமும் அவ்வளவு விரிவாயிருக்கிறது; மண்ணுலகமும், வானுலகமும், காற்றும், நெருப்பும் சூரியனும், சந்திரனும், மின்னற் கொடியும் நக்ஷத்திரக் கூட்டமும் என்று புறத்தே தோன்றுகின்றவும், இனிமேல் தோற்றப்போகின்றனவு மாகிய அனைத்தும் அதனுள்ளே யிருக்கின்றன" என்று (ஆசிரியன்) கூறுவான்,

4. "எல்லாப் பிராணிகளும், எல்லா விருப்பங்களுமாகிய அனைத்தும் (இச்சரீரமாகிய) பிரமபுரத்தினுள்ளிருக்கின்றனவென்றால் வயது முதிர்ந்து உடல் விழும் போது யாதுசம்பவிக்குன்றது?" என (அவர்கள்) விசாரித்தால், அதற்கு மறுமொழி வருமாறு:—

5. "இதனுடைய மூப்பினுல் அது மூப்படைவதில்லை; இதனுடைய மரணத்தினுல் அது மரணமடைவதில்லை. (இருதய கமலத்தினுள்ளிருக்கும் உண்மைப் பொருளாகிய) அதுவே உண்மையானபிரமபுரம். அது தீங்கற்றதாய், மூப்புச் சாக்காடற்றதாய், துன்பமற்றதாய், பசிதாகமற்றதாய், உண்மையை விரும்பி உண்மைத் தீர்மானங்களைக் கைக்கொள்ளும். (இங்குள்ளார் இடந்தேசங்களின் மேற் பற்று வைத்துக் கட்டளைக் கமைந்து நடப்பது போல.)"

6. "இவ்வுலகத்திற் பாடுபட்டுத் தேடிய பொருள் அழிந்து போவது போலப் புண்ணிய பலத்தினுல் வந்த மேலுலக வாழ்க்கையும் அழிந்துபோம். ஆன்மாவாகிய உண்மைப் பொருளை யறியாது இவ்வுலக வாழ்க்கையினின்று நீங்குவோர் மற்ற உலகங்களிலும் பந்தமுற்றவராவார். இவ்வுலக வாழ்க்கையில் ஆன்மஞானத்தையடைந்தவர் எல்லா உலகங்களிலும் பந்தமற்ற வீட்டு நிலையை யடைந்தவராவார்."

மேலே சுருதியுரைத்த ஆகாசமே நிதாகாச மெனப்படுவது,

பஞ்சபூதபரிணமம்

சித்தாகாசம், பூதாகாசம் என வேறு இருவகை ஆகாசங்கள் இருக்கின்றன. நம்முடைய இயல்பினை நோக்கும்போது நாம் ஒருவரில் மூவராயிருக்கின்ற தன்மையை யறிவோம், சீதோஷ்ணங்களால்

வருந்தும் போதும் நோயுற்றபோதும் உடலமே நாமென்று நினைத்துத் துன்புறுவோம். ஞான சாஸ்திரங்களை யாராயும்போது அவற்றின் மேல் கருத்துப் பதியச் சரீரத்தை மறந்து மனமே நாமென்னு மெண்ண முற்றிருப் போம். மனம் மடிந்த சமாதி நிலையில் சிவத்தோடு அத்து விதமாக நின்ற நமது உண்மை நிலையை யறிவோம். மேலே யெடுத்துக் காட்டிய சுருதியினுல் அறிவுறுத்தப்பட்டது அவ்வுண்மை நிலையேயாம் இம்மூன்று நிலைக்கு மொப்பவே மூவகை யாகாசமும் நிலைபெற்று நின்றன. பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும் மூன்று. அவை சுத்தமாயை (மகாமாயை. பரப்பிரகிருதி, விந்து, குண்டலினி, வித்தை, மாயை, பரை, பரவாகீசவரி என்பன பரியாய நாமங்கள்), அசுத்தமாயை (சூக்குமப் பிரகிருதி, மோகினி), பிரகிருதிமாயை (தூலப்பிரகிருதி, மகத்) என்பன. தூலப் பிரகிருதியினுட் சூக்குமப் பிரகிருதியும், சூக்குமப் பிரகிருதியினுள் மகாமாயையும் வியாபித்து நிற்பது போலப் பூதாகாசத்தினுட் சித்தாகாசமும் சித்தாகாசத்தினுட் சிதாகாசமும் வியாபித்து நிற்பன. ஆதலினுல் சிதாகாசமே அனைத்தினுக்கும் ஆதாரமானது. ஆகாசத்தி னின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்பும், அப்பினின்று பிருதுவியுந் தோன்றுவனவென்பது சமய நூலுக்கும் பௌதிக சாஸ்திரத்துக்கும் ஒப்ப முடிந்ததாதலின், பரப் பொருளாகிய பிரபஞ்சத்தோற்றமாக நங்கண் முன்னே தோன்றுகிற மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு மகா பூதங்களும் அருவுருவ வடிவான பூதாகாசத்தினின்று தோன்றினவென்பது புலப் படுகின்றது. ஆகாச (Ether)ப் பரப்பிலே நீரிற் சுழிகள் போற்றோன்றி நின்ற நுண்ணிய மின்னுருக் (Electrons) களின் கூட்டமாகிய அணுக்களா (Atoms) லமைந்தன அனைத்துச் சடப்பொருட்களு மெனத் தற்காலத்து விஞ்ஞான நூலாசிரியருங் கூறுவர். சிதாகாச சித்தாகாசங்களினியல்பை அன்னுரறியார்.

பஞ்சகிருத்தியத் தலைவர்

இனித் தோற்றக் கிரமத்தை யாராயும்போது அதுவும் தூலதிருஷ்டி சூக்குமசிருஷ்டியென இருவகைப் படுமென்றறிவாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களும், மண், நீர், அனல், வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களும் நிரனிரையாக ஒன்றினோடொன்று தொடர்புற்று நிற்பன. அருவுருவமாகிய ஆகாயத்தினின்று உருவ பூதங்களும் வாயு, தேயு, அப்பு, பிருதுவி யென்னுமிவை முறையே தோற்றியது

போல நிஷ்கள சகள வடிவினராகிய சதாசிவ மூர்த்தியினிடத்தினின்று மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்னுஞ் சகள மூர்த்திகள் நால்வரும் முறையே தோற்றுவர். பிருதுவி தத்துவத்தினுள் வியாபித்து நின்ற நிவிர்த்தி கலையை யதிஷ்டித்த பிரமதேவர் உலகங்களைப் படைப்பார்; நாராயண (நீரிற்றோன்றிய) மூர்த்தி உலகங்களைக் காப்பார். அக்கினி நிறத்தினராய் அக்கினி புவனத்திலிருக்கும் உருத்திரர் அழித்தற்றொழிலைச் செய்வார். வாயு புவனத்தினின்ற மகேசுரர் மறைத்தற்றொழிலைச் செய்வார். ஆகாய புவனத்தில் வசிக்கும் சதாசிவர் அநுக்கிரகத் தொழிலைச் செய்வார்.

திரு நடனத்தினாலே பஞ்சகிருத்தியமும் நடைபெறுவன

" அவனன்றி யோரணுவு மசையாது " என்னும் ஆப்தர் வாக்கின்படி பஞ்சகிருத்தியத் தலைவர் பரமபதியாகிய இறைவனுடைய அருட்சத்தியினாலே ஐந்தொழிலும் நிறைவேற்றுவர். அவன் இயக்காவிட்டாற் பஞ்சகிருத்தியங்களும் நடைபெற மாட்டா. முதல்வன் உயிருக்குயிராகி நின்றமையினால் அவன்மேற்பட்ட அடி சர்வ ஜீவகோடிகள் மேலும்பட்டது; அவன் சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் ஞானபாதத்தை யுபதேசித்தபொழுது ஒருகண நேரத்துக்கு யோகநிலையிலிருக்க விண்ணுலகத்துத் தேவரும், மண்ணகத்து மானிடரும் காமப் பற்றின்றியிருந்தனர்; உமாதேவியார் இறைவனது கண்ணிணை மறைக்க எல்லாவுலங்களிலும் இருள் சூழ்ந்துகொண்டது.

" நாயகன் கண்ணை யப்பா ளுயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னுர் "

" கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாருன்
எண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணிணைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்."

" போகியா யிருந்து யிர்க்குப்: போகத்தைப் புரித லோரார்
யோகியா யோகமுத்தி யுதவுத லதுவு மோரார்
வேகிய ஞற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூடரெல்லா மும்பரி னொருவனென்பார் "

" உலகமே யுருவ மாக யோநிக ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்கட் கெல்லா மறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன். "

அரங்கத்திலே புகுந்து நடிக்கின்ற கூத்தற்கு உருவுமுறுப்பும் கரணமும் பயனுந் தொழிலும் அமைந்தவாறே. சிதா காசமாகிய அரங்கத்து நடிக்கும் பரம நாடகனாகிய முதல்வனுக்கும் அசித்துப் பிரபஞ்சம் தூல உருவமாகவும், சித்துப் பிரபஞ்சம் உறுப்புக்க ளாகவும், இச்சை ஞானக்கிரியைகள் கரணமாகவும், உயிர்கட்கு அறிவினையாக்கிவைத்தல் பயனாகவும், பஞ்சகிருத்திய விரிவே தொழிலாகவும் அமைந்து நின்றன.

பஞ்சகிருத்திய வடிவத்தின் இலக்ஷணம்

தோற்றப் பொருளனைத்தினுக்கும் ஆகாசம் ஆதாரமென முன்னர்க் கூறினும். இவ்வாகாசம் ஒலிபற்றி யெழுவது; ஆதலால் இறைவனுடைய கையிலேந்திய டமருகம் ஒலிக்குறிப்பின் வழி வந்த ஆகாசத்துக்கு உற்பத்தித் தானமானது. ஆதலால் அனைத்துப் பொருட்களுக்கும் உற்பத்தித் தான மாயிற்று. 'அஞ்சன்மின்' என்னுங் குறிப்பினைக் காட்டும் அபயகரம் காத்தற்றொழிலைச் செய் கின்றது. கையிலேந்திய அக்கினி சங்காரத் தொழிலைச் செய்வது. முயலகன் ஆணவ வடிவம்; அவனை மிதித்த திருப்பாதம் மறைத் தற்றொழிலைக் காட்டுவது, தூக்கிய திருப்பாதத்தின் நிழலில் இந்த கலியுகத்திற்றானும் திருநாளைப் போவார் நாயனாரென்னும் நந்தனாரும், திருவாதவூரடிகளும் அடைந்தார்கள்.

சிதம்பர ரகசியம்

சிதம்பரத்தில் சிற்சபையிலே, நடராஜ மூர்த்திக்கு வலப்பக்கத் திலே மாசுபடியா ஆகாய மூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் இருக் கின்றது. இம்மூர்த்தம் நாமரூபவிகற்பப் படாதது; ஆதலினால் அனைவராலும் வழிபடற்குரியது.

தில்லைத் திருநடனத்தைக் கண்டு 'தரிசித்த கண்ணினாலே பின்னர்க் காண்பதற்குத் தகுந்த பொருள் வேறு இல்லையாதலால், மைதீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம்மிறைவன் கனகசபையின் கண்ணே எந்நாளும் செய்கின்ற ஆனந்த நடனத்தைக் காண்பதே கண்ணினைப் பெற்ற பயனாகும்.'

" குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த வையகத்தே. "

திருச்சிற்றம்பலம்

சிதம்பரமும் சேக்கிழாரும்

டாக்டர் டி. பி. சித்தலிங்கம்

நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்து பூதங்களால் ஆகியது இவ்வுலகம். உலகிலுள்ள எல்லாப் பொருள்களாகவும் இறைவன் இருக்கின்ருன். ஐந்து பூதங்களாகவும், கதிரவன், நிலா, மனிதன் (உயிர்) ஆகியவையாகவும் இறைவன் விளங்குகின்ருன். இதனை 'அட்டமூர்த்தம்' (எட்டுருவிரவினை என்பது திருமுறை) என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடும். ஐந்து பூதங்களாகச் சிவபெருமான் விளங்குவதைக் குறிக்கும் வகையில், ஐந்து ஊர்களில் சிவலிங்கத்தை அமைத்துள்ளனர். (1) மண் (பிருதுவி) — காஞ்சிபுரம். (2) நீர் (அப்பு) — திருவானைக்கா. (3) தீ (தேயு) — திரு அண்ணுமலை. (4) காற்று (வாயு) — திருக்காளத்தி. (5) வான் (ஆகாயம்) — சிதம்பரம். உலக இயக்கத்துக்காக இறைவன் நடமிடுகின்ருன். 'உலகு ஏழெனத் திசை பத்தெனத் தான் ஒருவனுமே பலவாகி நின்றவா' என்று திருவாசகம் (திருத்தோணேக்கம்) கூறுகிறது. வானவெளிக்குள் எல்லாமே அடங்கியிருக்கின்றன. அவ்வாறே தில்லையுள் எல்லாமே உட்பட்டிருக்கின்றன.

சிதம்பரம் என வழங்கும் இவ்வூர், தில்லை, பொன்னம்பலம், கோயில், சிற்றம்பலம் முதலிய பல பெயர்களைப் பெற்றுள்ளது. ஊர்ப் பெயரே மக்களின் பெயராகவும் அமையும் சிறப்பு இதற்குண்டு. வ. உ. சிதம்பரம் பிள்ளை, கோயில் பிள்ளை, சர் பொன்னம்பலம் ராமநாதன், சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் (துகளறுபோதம் என்னும் நூலின் ஆசிரியர்) முதலிய பெயர்கள் இவற்றைக் குறிக்கும். திருச்சிற்றப்பலம் என்றே வேருேர் ஊர்க்குப் பெயர் வைத்துள்ளனர். புலியூர், பெரும் பற்றப்புலியூர் முதலியன இவ்வூரின் வேறு பெயர்கள்.

தில்லைநாயகம், சிதம்பரநாதன், தில்லையாடி, நடராசன், நடேசன், சபாபதி, இரத்தின சபாபதி, நடனசபாபதி, சபேசன், சிற்சபேசன், அம்பலவாணன், அம்பலத்தாடி, குஞ்சிதபாதன் முதலியன அங்குள்ள இறைவனுக்கு வழங்கும் பெயர்கள். இவை மக்கள் பெயராக வழங்குவது வெளிப்படை. தில்லையாடி என்பதனை ஊர்ப்பெயராகவும் கொண்டுள்ளனர். (தென்னுப்பிரிக்காவில்

காந்தியடிகளுக்குத் துணை நின்றவர்களுள் தில்லையாடி வள்ளியம் மையும் ஒருவர்.) அம்பலத்தாடி மடம் என்பது இன்றும் உள்ள ஒன்று.

திருச்சிற்றம்பலம் ஊர்ப்பெயராக மட்டுமன்றி, இறைவன் பெயராகவும் கொள்ளப்பட்டுள்ளது. திருமுறைகளைப் பாடத் தொடங்கும் முன்பும், பாடி முடித்த பின்பும் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறுதல் மரபு. எல்லாவற்றின் தொடக்கமும் இறுதியும் இறைவனே என்று காட்டுவதற்காக இவ்வாறு கூறப்படுகின்றது.[1]

இனி, சேக்கிழார் சிதம்பரத்தைப்பற்றிக் கூறுவதைக் காணலாம். சிதம்பரம் என்னும் பெயரையே அவர் பயன்படுத்தவில்லை!

பெயர்கள்

தில்லை என்பதே அவருக்குப் பிடித்த பெயராகவுள்ளது. அதனை அழகுபடுத்துவதில் அவர் இன்பம் காண்கிறார்: " எண்ணில் பேர்உல கனைத்தினும் உள்ள எல்லையில் அழகு சொல்லிய எல்லாம் மண்ணில் இப்பதியில் வந்தன " வாம். பெரியபுராணத் தொடக்கமே 'தேனடைந்த மலர்ப்பொழில் தில்லை'[2] என்று மொழிகிறது. " திருத்தில்லை "[3] " ஆனாத சீர்த்தில்லை "[4] " தில்லைத்திருநகர் "[5] " சீர்வளரும் திருத்தில்லை "[6], " பெருந்திருத்தில்லை "[7], " நீடும் திருத்தில்லை "[8] என்றெல்லாம் பாடிப் பரவசமடைகிறார், சேக்கிழார். அவ்வூர் எல்லோராலும் போற்றப்படுவது[9]; என்றும் அழியாத தன்மை உடையது.[10] எல்லாப் புவனங்களும் அதில் அடங்கியிருக் கின்றன.[11] எனவே அது செல்வ மல்கிய மூதூராகும்.[12] செஞ்சொல்லாகிய திருமறையை மொழிகின்ற அந்தணர் நிறைந்த திருநகர் அது.[13] தேவாதி தேவனாகிய சிவபெருமான் விரும்பி மகிழும் பேரூர்.[14] முக்கண்முதல் நடமாடும் திருவூர்.[15] இறைவன் ஞானத்தின் வடிவமானவன் அல்லவா? எனவே அவன் திருநடம் புரியும் ஊர் அறிவின் எல்லையாய திருத்தில்லையாய்[16] மிளிர்கிறது. ஞானம் தோன்றிய பிறகு மும்மலங்கள் அற்றுப்போகின்றன; வீடு பேறு கிடைக்கிறது. " தொழுவார்கள்தம் மும்மைமா மலங்களற வீடருள் தில்லை "[17] என்று இதனைச் சேக்கிழார் பாராட்டுகிறார்.

புலியூர் என்பது இதன் மற்றொரு பெயர். புலிக்காலராகிய வியாக்கிர பாதர் போற்றிய பெருமை உடையது. ஆகையால் புலியூர் என வழங்கப்பட்டது. பெரும்பற்றப்புலியூர் என்றும் வழங்குவர்

பதஞ்சலி என்னும் முனிவரும் இங்கு வந்து வழிபட்டார்.[18] பூங்கிடங்கு சூழ்ந்த புலியூர்[19], 'பெருந்திருமாலயன் போற்றும் பெரும் பற்றப்புலியூர்'[20], 'ஆவியின் விருத்தியான அந்தணர் புலியூர்'[21] 'பொற்பதியாம் பெரும்பற்றப்புலியூர்'[22], 'திருவிற் பொலியும் திருப் புலியூர்'[23], 'பொற்புலியூர்'[24] என்று பாராட்டுகிறார், சேக்கிழார். புலியால் வழிபடப்பெற்ற பெருமானை உடையதால் இவ்வூர் திருப் புலீச்சரம்[25] எனவும் பெயர்பெற்றது.

நகரச் சிறப்பு

பெருமைசேர் பெரும்பற்றப்புலியூரின் வளங்களையும், சிறப்புக் களையும் சேக்கிழார் எடுத்தோதுகின்றார். அக்காலத்தில் அவ்வூர் கடற்கரையில் அமைந்திருந்ததாம்; ஆனால் இன்றில்லை. 'திரை செய் நெடுங்கடலுடுத்த திருத்தில்லை' என்றே பெரியபுராணம் பாடுகிறது[26] கடற்கரையில் அமைந்திருந்தாலும். ஊரைச் சுற்றி ஓர் அகழி இருந்தது; அதில் பல்வேறு மலர்கள் பூத்திருந்தன.[27] ஊரெங்கிலும் பொழில்கள் நிறைந்திருந்தன. அப்பொழில்களில் மலர்கள் பூத்துக் குலுங்கின; அவற்றில் தேன் மிகுந்திருந்தது.[28] ஊரில் நீர்வளம் நிரம்பி யிருந்தது.[29] நீர்வளம் நிறைந்தால் நெல்லும் பிறவும் குவியுமல்லவா? எனவே அது 'செல்வம் பிறிவறியாத் தில்லை'[30]யாக விளங்கியது; 'பொற்பதி' யாகத் திகழ்ந்தது.

அவ்வூர்க்கு நான்கு வாயில்கள் இருந்தன. அவை நிமிர்ந் தோங்கிய நெடுவாயில்கள். அயனுக்கு நான்கு முகங்கள் உண்டு. ஆகவே நான்முகன் என்று பெயர்பெற்றான். தில்லைநகரின் நான்கு வாயில்களும் பிரமனின் நான்கு முகங்களைப் போன்று பொலிந் தனவாம்.[31] அவை அழகால் மட்டும் சிறந்து விளங்கவில்லை; புண்ணியத்தின் விளைவெனவே நின்று பொலிந்தன.[32] "தேவர்குழாம் மல்கும் திருவாயில்கள் " அவை.

'செல்வமல்கிய தில்லை மூதூர்'த் தெருக்களும் புகழ்பெற்றவை. மணி மாடங்கள் நிறைந்தவை; அவை பொன்னாலாகியனபோலத் தோற்றமளிப்பவை.[33] சிவபெருமான் திருவிழாக்காலத்து உலாவரும் சிறப்புப் பெற்றவை; அதனால் அவை 'சிவமே நிலவிய திருவீதி'[34]கள் ஆம். சிவம் நிறைந்த பிறகு அங்கே நல்லதும், நன்மையும் தவிர[35]

வேறென்ன இருக்க இயலும்? மாதவங்களின் பயனை அத்தெருக்களே நல்குகின்றவாம்.[36] ஏன் தெரியுமா? அங்கே மறையின் ஒலி தவிர வேறொன்றும் இல்லை.[37]

தில்லைவாழ் அந்தணர்

அந்நகரத்துக்குப் பெருமை சேர்ப்பன பல. அங்கு வாழும் அந்தணர்களாலும் அவ்வூர் சிறப்படைந்தது. அவர்கள் எண்ணிக்கை மூவாயிரம் ஆகும். 'மும்மை ஆயிரவர்' — தில்லைவாழ் அந்தணர் புராணம். தில்லை "மூவாயிரவர்" என்றே அவர்கள் அழைக்கப்பட்டனர்.[38] 'தில்லைவாழ் அந்தணர்கள்' என்றே அவர்கள் குறிக்கப்பட்டார்கள்.[39] சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுவதற்கு, இறைவன் 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்றே அடியெடுத்துக் கொடுத்தார்.[40] அவர்களுக்கு ஏன் அந்தப் பெருமை? ஊழி முதல்வனாகிய கடவுளை வழிபாடு செய்யும் உரிமை பெற்றவர் என்பதே அதன் காரணமாகும்.[41] தில்லை வாழந்தணர்கள் திருநீறு பூசி, முக்காலமும் எரியோம்புபவர்கள்; இறைவனை மறைகளால் துதித்து, வழிபாடு செய்பவர்கள். 'திருநடம்புரிவார்க்கு ஆளாகும்' செல்வம் நிரம்பியவர்கள்; சிவனிடத்து அன்புகொள்வதே பேறு என நினைப்பவர்கள். ஞானம் நிரம்பியவர்கள். தானமும் தவமும் சிறந்துவிளங்குபவர்கள்; நல்லொழுக்கம் மிகுந்தவர்கள். இவர்களுடைய சிறப்பை, 'தில்லை வாழந்தணர் புராணம்' என்னும் பெரியபுராணப் பகுதி விரிவாக எடுத்துரைக்கிறது. தில்லைவாழந்தணச் சருக்கம் என்னும் பிரிவு, அந்நூலில் தலைப்பகுதியாய் அமைந்துள்ளது.

அம்பலம்

தில்லையின் பெருமையெல்லாம் 'இருவர்க் கரியவர் நடமாடிய திருஎல்லை'[42]யாக இருப்பதால்தான். இறைவன் நடமாடும் இடம் அம்பலம் எனப்படும். வெட்டவெளியைக் குறிக்கும் இவ்விடம் பொன்னோடுகளால் வேயப்பட்டுள்ளது. எனவே 'பொன்னம்பலம்' என்று குறிக்கப்படுகிறது. 'அம்பொன் நீடிய அம்பலம்'[43] 'பொன்னம் பலம்'[44], 'பொன்னின் அம்பலம்'[45], 'அம்பொன் நீடும் அம்பலம்'[46] 'திருவார்ந்த செம்பொன்னின் அம்பலம்'[47], 'பைம்பொன் அம்பலம்.[48] என்றெல்லாம் பாராட்டப்பெறுகிறது.

மன்று, மன்றில்[49], திருமன்று[50], திருமன்றில்[51], மணிமன்று[52], 'ஒளிவளர் கனகமன்று'[53] 'ஏர்வளர் பொற்றிருமன்று'[54] எனவும் அம்பலத்தைக் குறிப்பதுண்டு. 'பொது'[55] என்னும் பெயரும் அதைக் குறிக்க வழங்கப்படுகிறது. 'ஆடகப்பொது,[56] என்றும் சேக்கிழார் குறிப்பிடுகின்ருர்.

அம்பலம் மிகவுயர்ந்து, திங்களைத் தொடுவதுபோல நிற்கிறது.[57] எனவே அப்பேரம்பலம் மேருமலையைப் போலத் தோன்றுகிறது.[58] அதன் மீது இறைவன் நடமிடுவது இயல்பேயல்லவா? உலகமெல்லாம் அதில் அடங்கியிருக்கின்றது.[59] எல்லாவற்றையும் அறிவது ஞானம். பேரம்பலத்தை அறிந்தால் ஞானத்தைப் பெறலாம், ஆகவே அது 'மெய்ஞ்ஞானமேயான அம்பலமாக'[60] ஞானத்தின் வடிவாக விளங்குகிறது. எனவேதான் 'சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலம்'[61] என்றும் குறிக்கப்படுகிறது.

'திருப்பேரம்பலம்'[62] திருநிரம்பியது; ஒளிமிகுந்தது.[63] அண்ட வெளி வெட்டவெளி—பேரம்பலம். அகவெளி—மனமன்று—சிற்றம் பலம். 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்னும் வழக்கும் இதை நிறுவுகின்றது. இறைவன் அண்டமெலாம் அளித்தவர்: வெட்டவெளியில் நின்ருடுபவர்; எனினும் எல்லோரும் அறியும் வண்ணம் உள்வெளியிலும் ஆடுகின்ருர். அது எளிதில் புலனுவ தில்லை. கண்ணுக்குப் புலப்படும் வகையில் சிறிய உருவில் சிறிய வெளியில்—குறிப்புப் பொருளாக (Symbolic) —சிற்றம்பலத்தில் ஆடுகின்ருர்.[64]

திருநடம்

ஆடுகின்ருன் ஐயன் அம்பலத்தில். அந்த நடனத்தை—கூத்தை — பலவாறு போற்றிப் புகழ்கின்ருர் சேக்கிழார் பெருமான். அம்பலத்தில் ஆடுபவர் அம்பலவாணர்; அவரை 'அம்பலவர்' என்று அன்போடு அழைக்கிருர் சேக்கிழார்[65] 'அம்பலத்தாடுவான்'[66] என்றும், 'அம்பலத்து நிருத்தனுர்'[67] 'நடம்புரிவார்[68] 'மன்றுளார்'[69] 'மன்ருடும் ஐயன்'[70] 'மன்ருடி'[71] 'ஆனந்தக்கூத்தர்[72] 'திருத்தில்லை வேந்தர்,[73] 'அற்புதத் தனிக்கூத்தாடும் நாதனுர்'[74] 'தில்லை மன்றுள் ஆடியபெருமான்'[75] என்றெல்லாம் அவர் கூறி மகிழ்கிருர்.

ஐயன் திருநடனத்தை—தனிக்கூத்தை — பெரியபுராணம் பல் வகையால் குறிப்பிடுகிறது. 'ஒருபெருந் தனிக் கூத்து'[76] என்றும், 'திருக்கூத்து'[77] என்றும் 'நீடுபெருந் திருக்கூத்து'[78] என்றும் 'அற்புதக் கூத்து'[79] என்றும் போற்றிப் புகழ்கிறது. ஏன் இறைவன் இந்தத் திருநடனம் ஆடினார்?[80] 'உளங் கனிந்த போதெல்லாம் உவந்துவந்து பாடுவன்' என்பது உண்மையல்லவா? மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும்போது பாடலும் ஆடலும் தோன்று வது மனித இயற்கை. என்றும் இன்பவடிவினனேயான இறைவன் பாடுவதற்கும்[81] ஆடுவதற்கும் கேட்கவா வேண்டும்? 'உண் ணிறைந்தஞானத்தெழும் ஆனந்த ஒருபெருந்தனிக்கூத்து' என்று இதற்குக் காரணம் காட்டுகிறார் சேக்கிழார்.[82] இந்த அற்புதத் திருக்கூத்தை, உமையவள் காணவே ஆடினாராம்.[83] அவள் காண் பதற்காக ஆடினாலும், நோக்கம் உலகமெல்லாம் உய்யவேண்டு மென்பதுதான்.[84] உயிர்கள் வாழ்வதற்குரிய அமுதமாய்—உயிர் மருந்தாய்—இந்த நடனம் திகழ்கிறது; உண்ண உண்ணத் தெவிட்டாத திருவமுதாய்த் தித்திக்கின்றது. 'ஆரா அமுதத் திருநடம்' என்று இதனைப் புகழ்கிறது, பெரியபுராணம்.[85] இந்த நடனம், இறைவனை--அவன் பெருமையை—உண்மையை உணர்த்து கிறது: முதலும் முடிவும், ஒளியும் உணர்வும், பெண்ணும் ஆணும் ஆகி நிற்கும் சிவன், கற்பனை கடந்து நின்ற கடவுள் ஆயினும், தன் அளவற்ற கருணையால் உயிர்கள் உய்யும் பொருட்டு ஆடிய திருக்கூத்தே திருச்சிற்றம்பலத்துத் தனிக்கூத்து.[86]

ஆடிய பாதம்

கூத்தபிரானின் திருநடம் கண்டுகளிக்கத் தக்கது; அவ் வமைப்பே நெஞ்சைக் கவர்ந்து நெகிழ்விப்பது. அவ்வாடலின் உட் பொருளும் நோக்கமும் கண்டு கொண்டால் உயிர் நெக்குருகும். நான்கு நெடிய தோள்கள்; ஒன்றில் மழு; மற்றொன்றில் உடுக்கை; ஒன்று நிமிர்ந்து நின்று 'அஞ்சேல்' என மொழிகிறது; மற்றது வலப்புறம் திரும்பி, எடுத்த பாதத்தைக் காட்டி நிற்கிறது. வலப் பாதம் முயலகனை அழுத்தி நிற்க, இடப்பாதம் தூக்கிய நிலையில் நிற்கிறது. அதனைத் 'தூக்கிய திருவடி' என அழைக்கிறோம். 'குஞ்சிதபாதம்' எனவும் அது பெயர் பெறும். 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்' என்று அதனை அப்பர் வருணிக்கிறார்.[87] சிறப்பெல்லாம் இந்தத் தூக்கிய திருவடிக்குத்தான்!

தில்லைப்பெருங்கூத்து ஐந்தொழில்களை விளக்கி நிற்கிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவையே அவை. துடி(உடுக்கை)யில் படைத்தல் நிகழ்கிறது; அபயகரம் காத்தலைக் குறிக்கிறது; மழு (நெருப்பு) அழித்தலைக் காட்டுகிறது. ஊன்றிய பாதம் மறைத்தலையும் தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன[88]. உயிர்களிடத்தில் கொண்ட கருணையால்தானே இறைவன் ஆடுகிருன்? எனவே அவனது அருளை வேண்டுபவர்கள், அருள் சுரக்கும் அத்திருப்பாத மலரைத்தானே போற்றவேண்டும்? வீசிய இடதுகையும் அந்த திருவடியைத்தானே சுட்டிக்காட்டு கிறது?

'தேடும் பிரமனும் மாலும் தேவரும் முதலாம் யோனிகள் தெளிவொன்ரு ஆடும் கழல் புரி அமுதத் திருநடம்' என்று சேக்கிழார்[89] இந்தக் கூத்தை விளக்குகின்ருர். அந்த அமுதம் உண்டால் தெளிவு பிறக்குமாம். 'அம்பலவர் தேனுந்து மலர்ப் பாதத்தமுதுண்டு தெளிவெய்தி'[90] என்கிருர் அவர். தூக்கிய திருவடியின் அழகை, சிறப்பைச் சேக்கிழார் பலவாறு புகழ்கிருர். அருமறை தொடர்ந்தேத்த அவர் ஆடுகின்ருர்;[91] அது 'மன்றுளாடும் மலர்ப்பாதம்[92]; வேறுவகையாகவும் சொல்லிப் பார்க்கிருர், அது 'மன்றுளாடும் கழல்'[93] என்று, அம்பலத்துள் ஆடுகின்ற கழல்'[94] 'புரவலர் மன்றுவளாடும் பூங்கழல்'[95] 'ஆடகப் பெதுவில் ஆடும் அறைகழல்'[96], 'திருமன்றில் ஆடுகின்ற கழல்'[97] —இவ்வாறெல்லாம் சொல்லியும் நிறைவு ஏற்படவில்லை. இனி, கழல்களில் உள்ள சிலம்பைப் போற்றி செய்கிருர். 'சிலம்பலம்பு சேவடி'[98] என்ருர். சிலம்பு இடைவிடாது பட்டுக் கொண்டிருப்பதனுலே சிவந்துள்ள சேவடிகள் என்று பொருள்படுமோ என்றெண்ணி, 'தில்லைநகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்'[99] என்று கூறி மகிழ்கிருர் சேக்கிழார். ஆடிச்சிவந்தாலும், அழகுச்சிலம்பு பட்டுச் சிவந்தாலும் சேவடிகள் சேவடிகள்தானே! அச்சேவடிகளே உயிர்க்கு உறுதுணையாவன. உடல்பெற வேண்டிய பயனும் அந்தத் திருவடிகளை வணங்குவதுதான்.[100]

மனிதன் அறிவுபடைத்தவன்; கற்பனை சிறந்தவன், கலைநலம் தெரிந்தவன். கற்பனையை விரிக்கிருன்; கலைகளைப் பெருக்குகிருன்; வளர்க்கிருன். எங்கோ ஓரிடத்தில் நின்றுவிடுவான் அல்லவா? அதற்கப்புறமும் கலை இருக்கிறது; மனிதன் அறியவொண்ணுத கலை; அது இறைவன் தூக்கிய திருவடியிலே சென்று நிலைக்கிறது. 'அ[illegible]

கலையின் பொருட்கெல்லை ஆடும் கழலே' என அறுதியிட்டுக் கூறுகிருர் சேக்கிழார்.[101]

கூத்தாடும் பிரானே நம் தலைவன்; நம்மை ஆட்கொள்பவன். இதுவே உண்மை என்பது சேக்கிழாரின் முடிந்த முடிபு.[102] அந்த நடனத்தைக் காணும் பேறே பெறுதற்கரிய பேறு; அதுவே பேரின்பம்.[103] 'அம்பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி சூடு' வாரே அடியவர்கள்.[104] மிகச் சிறந்த இன்பமாக, பெறற்கரியதாக அவர்கள் கருதுவது 'அண்டர்பிரான் எடுத்த திருவடி நீழல்'[105] ஒன்றேயாகும். வேறேதும் அவர்களுக்குப் பொருட்டில்லை. அந்தத் திருவடியைக் கண்டு களிகூர்வார்கள்; கண்களைத் தவிர வேறு பொறிகளோ புலன்களோ செயல்படுவல்லை; மனம் ஒன்றிவிடுகிறது; சாத்துவிகமே இயல்பாக அமைகிறது; அந்தப் பெருங்கூத்தினைக் கண்ட பெருமகிழ்ச்சியில் உள்ளமும்உயிரும் மலர்ந்து நிற்பார்கள்.[106] அந்த நிலையில் கைகள் தலைமீது குவியும்; கண்கள் நீர்பொழியும்; உயிரும் உட்கருவிகளும் உருகும். உடல் தாழ்ந்து வீழ்ந்து எழுந்து உய்திபெறும்.[107]

திருவம்பலத்தின் திருப்படிகளும் சிறப்புப் பெற்றவை. 'வேதம் படியும் திருப்படிகள்' அவை.[108] எனவே அவை தொண்டர் மனத்தில் இடம்பெற்றன.[109] அத்திருப்படிகளும் தூக்கிய திருவடியும் நம் நெஞ்சில் இடங்கொண்டு நம்மையும் உய்விக்குமாக!

திருச்சிற்றம்பலம்

குறிப்புகள்:

1. "அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த, திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம்" —பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம். 104
2. பாயிரம், 2.
3. திருநாளைப்போவார் புராணம், 20; ஏயர்கோன்கலிக்காமர் புராணம், 166.
4. திருநாவுக்கரசர் புராணம், 156
5. — ஷை — 161.
6. ஏயர்கோன் கலிக்காமர், 167
7. திருஞானசம்பந்தர் புராணம், 154.
8. — ஷை —168.
9. "பரவு திருத்தில்லை"—ஷை—142,

10. 'நீடுவாழ்தில்லை' — ஷை — 174.
11. திருநாவுக்கரசர் புராணம், 179.
12. திருஞானசம்பந்தர் புராணம், 156; 171
13. திருநாவுக்கரசர் புராணம், 161.
14. கணம்புல்ல நாயனுர், 3.
15. கோச்செங்கட்சோழர் புராணம், 15.
16. கழறிற்றறிவார் நாயனுர் புராணம், 61.
17. திருமலைச்சிறப்பு, 3.
18. திருஞானசம்பந்தர் புராணம், 169
19. ஷை, 1140.
20. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 110
21. திருமூலநாயனுர் புராணம், 6.
22. கழறிற்றறிவார் நாயனுர் புராணம், 52.
23. தடுத்தாட்கொண்ட புராணம், 81.
24. கணம்புல்ல நாயனுர் புராணம், 4; திருநீலகண்ட நாயனுர் புராணம் 37.
25. திருஞானசம்பந்தர் புராணம், 1135.
26. ஷை. 169
27. தேனுரும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் — திருநாவுக்கரசர் புராணம், 156.
28. 'வாவிசூழ் தில்லை மூதூர்' — திருஞானசம்பந்தர் புராணம், 110
29. ஷை, 171.
30. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 116.
31. தடுத்தாட்கொண்ட புராணம், 92.
32. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 112.
33. ஷை,
34. திருநாவுக்கரசர் புராணம், 162.
35. திருஞானசம்பந்தர் புராணம், 1138.
36. ஷை, 165
37. ஷை, 1137
38. 'அணிதில்லை முண்டத்திரு நீற்று மூவாயிரவர்களும்' —திருஞானசம்பந்தர் புராணம், 170.
39. ஷை, 171; ஷை, 1136; கூற்றுவநாயனுர் புராணம், 4-5: திருநாளைப்போவார் புராணம், 28,34,35.
40. தடுத்தாட்கொண்ட புராணம், 199.
41. 'ஊழி முதல்வர்க் குரிமைத் தொழில்சிறப்பால் வாழி திருத்தில்லை வாழ்அந்தணர்' — திருஞானசம்பந்தர் புராணம், 162.

42. திருநாவுக்கரசர் புராணம், 157.
43. இளையான்குடிமாற நாயனுர் புராணம், 1.
44. திருநாவுக்கரசர் புராணம், 175.
45. திருஞானசம்பந்தர் புராணம், 175.
46. கூற்றுவநாயனுர் புராணம். 7.
47. கோச்செங்கட்சோழ நாயனுர் புராணம், 16.
48. கழறிற்றறிவார் புராணம், 59.
49. திருநாளைப்போவார் புராணம், 26; புகழ்ச்சோழநாயனுர் புராணம், 37.
50. ஷை, 20
51. ஷை, 34.
52. கணம்புல்ல நாயனுர் புராணம், 4.
53. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 113.
54. ஷை, 167.
55. 'உடையார் நடநவில் கனகப்பொது' — திருநாவுக்கரசர் புராணம், 165.
56. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 104.
57. திருஞானசம்பந்தர் புராணம், 158.
58. ஷை, 173.
59. 'உலகுவிளக்கும் திருப்பே ரம்பலம்' — கழறிற்றறிவார் புராணம் 54
60. திருஞானசம்பந்தர் புராணம், 160.
61. தில்லைவாழந்தணர் புராணம், 2.
62. பாயிரம், 8.
63. திருநாவுக்கரசர் புராணம், 166.
64. 'அலகில் அண்டம் அளித்தவர் நின்ருடும் திருச்சிற்றம்பலம் — கழறிற்றறிவார் புராணம், 54
65. திருநாளைப்போவார் புராணம், 29, 30.
66. பாயிரம், 1.
67. திருநாவுக்கரசர் புராணம், 174.
68. திருஞானசம்பந்தர் புராணம், 142.
69. ஷை, 212.
70. ஷை, 166.
71. தடுத்தாட்கொண்ட புராணம், 48.
72. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 111.
73. கோச்செங்கட் சோழர் புராணம், 17.
74. திருநீலகண்டநாயனுர் புராணம், 1.
75. மெய்ப்பொருள் நாயனுர் புராணம், 4.

76. திருஞானசம்பந்தர் புராணம், 160.
77. ஷை, 177.
78. ஷை, 303.
79. திருமூலநாயனுர் புராணம், 6.
80. பாண்டரங்கம், காபாலம், கொடுகொட்டி முதலிய கூத்துக் களைச் சிவபெருமான் ஆடியதும் அப்போது உமையம்மை உடன் இருந்தது மாகிய செய்திகளைக் கலித்தொகை, சிலப் பதிகாரம் முதலிய நூல்களிற் காணலாம். 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்' என்னும் நூலில், சந்தியா தாண்டவம், ஆனந்த தாண்டவம் முதலியவற்றை மயிலை· சீனி வேங்கடசாமி விளக்கியுள்ளார். தில்லை நடனத்தின் கருப்பொருளாகச் சேக்கிழார் கூறியவை மட்டுமே இங்கே தரப்படுகின்றன.
81. 'பாடினர் சாமவேதம்' — திருஞான சம்பந்தர் தேவாரம் 4.27.2
82. திருஞானசம்பந்தர் புராணம், 160.
83. "இடமருங்குதனி நாயகி காண ஏழ்பெரும்புவனம் உய்ய எடுத்து நடநவின்றருள்" — தடுத்தாட்கொண்ட புராணம், 95; 'அணங்குதனி கண்டருள அம்பலத்தே ஆடுகின்ற குணங்கடந்த தனிக்கூத்தர் — திருஞானசம்பந்தர், 1139.
84. ஷை.
85. கூற்றுவநாயனுர் புராணம், 7.
86. தில்லைவாழ் அந்தணர் புராணம், 1. 2.
87. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமா நிலத்தே.
88. உண்மை விளக்கம், 35. இந்த நடனம் ஐந்தெழுத்தையும் குறிக்கும் என்று அந்நூல் கூறுகிறது. ஷை, 32.
89. திருநாவுக்கரசர் புராணம், 166.
90. மேற்படி, 101.
91. திருஞானசம்பந்தர் புராணம், 158.
92. பத்தராய்ப் பணிவார் புராணம், 7.
93. கூற்றுவநாயனுர் புராணம், 5.
94. திருநாவுக்கரசர் புராணம், 179.
95. மெய்ப்பொருள் நாயனுர் புராணம், 22.

96. ஏயர்கோன் கலிக்காமர் புராணம், 104.

97. திருநாளைப் போவார் புராணம், 34.

98. புகழ்ச் சோழ நாயனுர் புராணம், 40.

99. கணம்புல்ல நாயனுர் புராணம், 4.

100. அம்பலத்தே ஆடுகின்ற...மலர்ச்சடையார் அடிவணங்கி, ஊனுலும் உயிராலும் உள்ள பயன் கொளநினைந்து — திருநாவுக்கரசர் புராணம், 156,

101. சண்டேசுரநாயனுர் புராணம், 15.

102. நடமேபுரியும் சேவடியார் நம்மை உடையார் எனும் மெய்ம்மை — மேற்படி, 16.

103. 'உன் திருநடம் கும்பிட்டு, மண்ணில் வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்' — தடுத்தாட்கொண்ட புராணம், 107.

104. இளையான்குடிமாற நாயனுர் புராணம், 106.

105. திருஞானசம்பந்தர் புராணம், 395.

106. தடுத்தாட்கொண்ட புராணம், 106.

107. திருநாவுக்கரசர் புராணம், 167.

108. கழறிற்றறிவார் நாயனுர் புராணம், 59.

109. 'தொண்டர்மனம் பிரியாத திருப்படி' — திருஞானசம்பந்தர் புராணம், 1140.

சிதம்பரத்தில் சேக்கிழார்

அருள்மொழித்தேவர் என்ற சேக்கிழார் மந்திரிப் பதவி பெற்றிருந்த வாய்ப்பில் சிவஸ்தலங்கள் எல்லாவற்றுக்கும்போய் கோயில் வரலாறு, அடியார் வரலாறு எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்துவைத் தாராகையால், சிவனடியார் வரலாற்றை பக்திரசம் பிறக்கத்தக்கதாக விளக்க முடிந்தது. அதனைச் செவிமடுத்த அநபாயச் சோழன், மெய்ம்மறந்து அனுபவித்து, " இந்த அற்புதமான அடியார் சரிதங்களையெல்லாம் இலக்கிய நயம்பட ஒரு பெருங்காப்பியமாக அருளினல் தமிழ் மக்கள், சிறப்பாகச் சைவ நன்மக்கள், படித்து ரசிக்க வாய்ப் பளிக்கும். இலக்கிய விற்பன்னராகிய தாங்களே அதைச் செய்ய வேண்டும் " என்று கேட்டுக் கொண்டான். அருள்மொழித் தேவராகிய சேக்கிழார் மகிழ்ந்து அந்த அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்டு பெரிய புராணம் என்ற பெருங்காப்பியத்தைப்பாடினுர்.

அநபாயச் சோழனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சேக்கிழார் அரசனின் பொருளுதவி பெற்று, நேரே சிதம்பரத்துக்கு வந்து, வணங்கி, தாம் ஒப்புக்கொண்ட காப்பியத்தைப் பாட அதற்கு மங்கலமான முதல் அடி எப்படி உதயமாகும் என்று சிந்தித்த போது, இறைவனே முன்வந்து, உலகெலாம் என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கச் சொன்னதாக உமாபதி சிவாசாரியார் தெரிவிக்கிருர். அதன்படியே சேக்கிழார் "உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன் " என்று தொடங்கும் காப்புச் செய்யுள் செய்து, சிதம்பரம் பொற்றுமரை வாவிக்குப் பக்கத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து, அற்புதமான தமது பெரியபுராணத்தைப்பாடி முடித்தார். இந்தப் புராணத்தில் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தர மூர்த்தியையே பாட்டுடைத் தலைவனுக வைத்தார்.

திருக்கயிலாயத்திலே ஒருநாள் வியாக்கிரபாத முனிவருடைய புத்திரராகிய உபமன்ய முனிவரோடு மற்றும் பல முனிவர்கள் அமர்ந் திருந்த சமயத்தில் திடீரென அங்கு என்றுமில்லாத வகையில் ஒரு பெரிய சோதி தோன்றியது. அதைக்கண்ட முனிவர்கள் ஆச்சரியப் பட்டிருக்க, உபமன்ய முனிவர் ஆனந்த பரவசத்தராக எழுந்து நின்று அந்த சோதியைப் பார்த்து, சிரசின்மீது கைகளை எடுத்து வணங்

சோ. சிவபாதசுந்தரம்

கினர். "சிவபிரானையன்றி வேறு ஒன்றையும் வணங்கியறியாத தாங்கள் இந்த சோதியை வணங்கும் காரணமென்ன?" என்று முனிவர்கள் உபமன்யரை வினவ அவர், "பூலோகத்துக்குப் போன ஆலாலசுந்தரர் அங்கே தமது திருவிளையாடல்களை முடித்துக் கொண்டு மறுபடியும் இங்கே கயிலாயத்துக்கு எழுந்தருளி வருகிறார்" என்று சொன்னதும் முனிவர்கள் அந்த வரலாற்றைக் கேட்க, உபமன்யர் பின்வருமாறு சொன்னார் :

" ஆலாலசுந்தரர் முன்காலத்தில் இங்கே கயிலாயத்தில் சிவபெருமானுக்கும் புஷ்பமாலை தொடுத்துச் சாத்துதலும், விபூதி பாத்திரம் தாங்குதலுமாகிய திருத்தொண்டு பூண்டவர். அந்தச் சமயத்தில் இங்கே உமாதேவியாருக்குத் தொண்டு செய்த சேடியர் கமலினி அநிந்தை என்ற அழகிகளை மோகித்த காரணத்தால் பூமியில் நம்பி ஆரூரான் என்ற பெயரில் பிறந்து, இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டு, மீண்டும் இங்கு அந்தச் சுந்தரர் எழுந்தருளி வரும் காட்சிதான் இது" என்று சொல்லி வணங்கவும் மற்றைய முனிவர்களும் வணங்கினார்கள் என்ற ஒரு பின்நோக்குக் காட்சியுடன் ஆரம்பிக்கிறது சேக்கிழாரின் பெரியபுராணக் காப்பியம். சோழரின் ராஜபீடமாகிய திருவாரூர்ப் பெருமையைச் சொல்லி, திருநாவலூரில் சுந்தரர் பிறந்து வளர்ந்து, திருமணத்தின்போது தடுத்தாட் கொள்ளப்பட்டு, பின்னர் தேவாரம் பாடித் தலயாத்திரை செய்த வரலாற்றுடன், மற்றைய அறுபத்திரண்டு தனி அடியார் வரலாற்றையும், தொகை அடியார் பலர் வரலாற்றையும் சொல்லி, முடிவில் சுந்தரமூர்த்தி முத்தியடைந்தது வரை சேக்கிழார் தமது காப்பியத்தில் விளக்குகிறார்.

சிதரம்பத்தில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து பெரிய புராணத்தைப் பாடி வருகையில் காப்பியம் எப்பொழுது முற்றுப் பெறும் என்று அநபாயச் சோழன் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தான். காப்பியம் பாடி முடிந்தவுடன் சோழ மகாராஜா தாமே நேரில் சென்று தமது பட்டத்து யானையில் சேக்கிழாரையும் பெரியபுராணக் காப்பிய ஏட்டையும் அமர்த்தி, புலவர் பின்னால் தாம் உட்கார்ந்து சாமரம் வீசி ஊர்வலம் வந்தான்.

மந்திரிப் பதவி பெற்றிருந்த சேக்கிழார், பதவியைத் துறந்து, சிதம்பரத்தில்தான் வீற்றிருந்து இறைபணி செய்துவந்தார். அநபாயச் சோழன் அருவக்கு 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பட்டம் சூட்டி வாழ்த்திவிட்டு, சேக்கிழாரின் தம்பியாகிய பாலறுவாயரை குன்றத் தூரிலிருந்து வரவழைத்து அமைச்சர் பதவிகொடுத்துப் பெருமைப் படுத்தினான்.

THE NATARAJA TEMPLE AT CHIDAMBARAM AND ITS INSCRIPTIONS

By

P. R. SRINIVASAN

Sri P. R. Srinivasan is a Retired Chief Epigraphist of the Government of India,: now settled at 1080/1, Chamarajapuram. Mysore-4. Born at Pullur near Devakottai in Chettinad on 27—6 --1920, he studied B. A. (Hons) Sanskrit in the Annamalai University and took his M, A. Degree in 1945, First Class First Rank. In 1946, he was appointed Curator, Madras Museum in which capacity he came into close contact with with Prof. K.A. Nilakanta Sastri, Prof. Ayyappan, Prof. T. N. Ramachandran, Mr. Sivaramamurthi and others. He Joined the Epigraphy Department in Ootacamund in 1960 and retired in 1976 in the same office at Mysore (where it was shifted in 1966) as its Chief. He was Editor, EPIGRAPHICA INDICA and other publications. He was VISITING PROFESSOR, IOWA UNIVERSITY, U. S. A. in 1967-68. He was also Adviser to the Tamil Encyclopaedia and Editor of the TRANSACTIONS OF THE ARCHAEOLOGICAL SOCIETY OF SOUTHERN INDIA. His published books include:

நாம் கண்ட தெய்வங்கள். இந்தியக் கட்டிடக் கலையும் சிற்பமும். தென்னிந்திய வெண்கலச் சிலைகள். தென்னிந்தியக் கட்டிடக் கலையின் ஆரம்பகாலம். தென்னிந்தியாவில் பௌத்தம். சென்னை மியூசியத்தில் பௌத்த கலைப்பொருள்கள், நடராஜர் தததுவமும் சிலைகளும்.

Koyil, in Tamil Saiva works means "the temple" of Nataraja at Chidambaram, as Koyil in Tamil Vaishnava works means "the temple" of Rangaraja at Srirangam. In Tamil Lord Nataraja is called Adavallan, the king of dancing.

Philosophically, this term means the lord who dances the cosmic dance by which he creates, controls and consumes the universe. Rangaraja on the contrary, is the lord of the stage or Attavallan (i. e., stage-manager) who, paradoxically, sleeps on the serpent couch. Philosophically the term means one who causes the universe to continue in action while he himself is asleep. This is what is spoken of by Rangaraja in his incarnation as Krishna in the **Gita** as **bhramayan sarvabhutani yantrarudena mayaya.** In South India, the rules of temple building prescribe that the temples to both Siva and Vishnu must be built in a village or in a small area, or even within a large temple-complex[1]. Accordingly one will find temples or shrines to both these deities in almost all the villages. At Madurai, there are the Sundaresvara (Siva) temple and the Kudal Alagar (Vishnu) temple, on the Srirangam island, there are the Rangaraja (Vishnu) temple, on the west and the Jambukesvara (Siva) temple on tha east and there are the Kumbhesvara (Siva) and the Sarangapani (Vishnu) temples at Kumbhakonam. At Chidambaram, shrines to Nataraja and Rangaraja (here called Govindaraja) are found side by side. Philosophically the twin principles of consumption while awake, and activity and existence while asleep and inactive, are seen to be enshrined in this temple. This temple, though ranking in importance and largeness second only to the temples at Srirangam and Madurai is very important from the point of view of Saivism and South Indian history.

The place-name Chidambaram which is Tamilised into Chirrambalam (i.e., clothed in chit, or consciousness). **Chit** is invisible and on this account that the **akasa** (i. e., ether) **linga** is believed to be installed in the **Chit-sabha**, the innermost shrine of the temple. The **linga** at Chidambaram is one of five such **iingas**, one for each of the five elements, in different temples in South India.

Although unknown to Sangam literature Chidambaram, the holy place, is very old. It is frequently mentioned by the Saiva hymnists (7th to 10th centuries) for whom it is already a famous shrine. In religious works and inscriptions it was variously known by the Tamil names **Chirrambalam,** "the little

hall or temple,", **Tillai**, doubtless after a sacred grove or forest of Tillai trees (Excoecaria Agallocha), **Ponnambalam,** "the golden hall" and **Perumbarrappuliyur**, or "town of the tiger with great teeth (?)". The Vishnu shrine is mentioned by Tirumangai Alvar (8th century) as well as by the later Kulasekhara; to these Vaishnava Alvars, the holy place is known as **Tiruchitrakutam** or **Tiruchitrakutam of Tillai**. The use of the name **Tillai** by the devotees of both sects is significant. A poem attributed to Manikka Vasagar, a Saiva poet who belongs to the end of the hymnist period, describes the shrines of Vishnu and Siva as being very close together in the temple and so they have remained to this day.[2]

Dabhra-sabha, (i. e., the little temple) is another name for Chidambaram. **Hema-sabha** or **Kanaka sabah** (i. e., the golden temple or hall) and **Chit-sabha** are used to designate both the whole temple, and more specifically, the two small pavilions placed side by side in the innermost enclosure and which constitute the holy of holies. The term Perambalam (i. e., the great temple) in use as early as the 12th century appears to refer to the innermost **Prakara** of the temple as it stands today.

The Saiva saint Appar of the seventh century refers to the dance **Pandaranga** performed by Siva at **Tillai**. The **Tirukkovaiyar** of Manikkavasagar refers to the dancing image at Chidambaram. Umapati-sivacharya (14th century) in the **Koyirpuranam** refers to the legend of Siva causing the discomfiture of the **Rishis** at **Tillai**. The legends connecting Patanjali and Vyaghrapada with Chidambaram have **Puranic** associations which are of still later periods.

In spite of the fact that this place became so very much sanctified from such an early period as the 7th century definite evidences in the form of inscriptions bearing upon the history of the temple are available only from the 11th century.

As regards the association of historical personages with this temple, Sundaramurti-nayanar, the Saiva hymmist of the 9th century, refers to a Pallava king devoted to Siva of this place.

The Vaishnava hymmist Tirrumangai Alwar refers to another Pallava king who had made donations to the Vishnu shrine at the temple. From an inscription of about the 12th century we know that a Pallava king named Simhavarman of ancient time who having suffered from leprosy, visited this place and bathed in the temple tank when his disease disappeared. Who this Simhavarman was it is difficult to say.

Of the early Chola kings, who had held the god Nataraja or Adavallan of Tillai as their family deity, Aditya I (871-907 A. D.) is, according to some scholars[3], said to have gilded the shrine of the god; but there is better evidence to show that his son Parantaka I (907-955 A. D.) had done this as per the Leyden and the Tiruvalangadu plates[4]. This is supported by literary works like the **Tiruvisaippa** of Parantaka's son Gandaraditya (**Koyil**, verse 8) and the Vikramacholan-ula of Ottakkuttar (lines 31-32). Rajaraja I, the great, was a devotee of this god[5]. This is supported by the occurence of bas-relief sculptures representing Siva performing the **karanas** of the Bharata's **Natyasastra** discovered in his Brihadisvara temple at Tanjavur. The discovery at Chidambaram of the **Devaram** hymns by Nambi Andar Nambi is generally attributed to this king's time[6]. Though the successors of Rajaraja I must have continued to be the patrons of the temple of Chidambaram epigraphical evidence for this is meagre till we come to the reign of Kulottunga I (1070-1120 A.D.). The twelfth and the last book of the Tamil Saiva canon, Sekkilar's **Periyapuranam** is said to have been composed in the 1000-pillared **mandapa** at Chidambaram during the reign of Kulottunga II (1133-1150 A.D.).

The reason for the paucity of early records at this temple seems to be that it was frequently rebuilt and renovated theextensive renovation undertaken by the Nattukkottai Nagarathars being the latest in the series. This is the same case with the Sundaresvara temple of Madurai. On the contrary, the Rangaraa temple at Srirangam possesses not less than 700 inscriptions ranging in date from the time of Parantaka I to the modern perood. There are more than 300[8] inscriptions in the Nataraja temple.

Interestingly a good number of them occur on the entryways of the four **gopuras** and the walls of the second **Prakara**. It is noteworthy that the **Chitsabha** part of the temple does not contain any record, in spite of the fact that architecturally it shows early features. It is interesting that none of these inscriptions refers to the foundation of the **sanctum sanctorum**, although a few on the **gopuras** and the **Prakara** walls tell us about their constructions etc. These ancient records belong to various royal dynasties like the Cholas, the Pandyas, the later Pallavas, and the Vijayanagara rulers. Of the Chola inscriptions except for a fragmentary record supposed to be of the founder of the dynasty Vijayalaya[9] (C. 846-871 A. D.), a couple of loose slabs with records of Parakesari[10] and a similar record of the time of Rajaraja I (985-1016 A, D)[1] the rest belong to the period of Kulottunga I (1070-1120 A. D.)and after. The texts of the record copied from this temple have not been fully published so far, except for a few of them. So, we have to be content with knowing their details given in the **Annual Reports on South-Indian Epigraphy** or **Indian Epigraphy** published by the Epigraphy Branch of the Archaeological Survey of India.

The Chola records number about 75. Some of them belong to the time of Kulottunga I. One of them (No. 115 of 1888; **Ep. Ind**., Vol. V, p. 103) on the east wall of the 2nd **prakara** refers to his victory over the Five Pandyas. An inscription of the 38th and 46th years from Nidur of which a copy is said to have been engraved in our temple, but which is not found, mentions the building in the latter year of some structures by a feudatory of the king. A record of his time (No. 119 of 1888) on the outer side of the north wall of the same **prakara** dated in the 44th year (1114 A. D.), registers some gifts to the temple by Rajarajan Kundavai, the younger sister of the king. Another sister named Madhurantaki Alvar donated some land for a flower garden and for the creation of a **matha** for feeding Mahesvaras (No. 117 of 1888). Two more inscriptions of his time viz., 46th (No. 291 of 1913) and 47th years (No. 290 of 1913) exist here. No, B 317 of 1958-59 is engraved on the east wall

of the second **Prakara** and is dated in the 45th year of the reign of the king, the particulars of the date being equivalent of 1115 A. D., February 1. This record does not mention anything about the construction and other similar activities relating to the temple but registers a cash endowment by Kon Rajadhirajan **alias** Rajendrasola-Ananthapalan of Ilangarkudi in Peravur-nadu for a flower garden and for feeding devotees in a **matha** called Tillaivalandanar-**matha**. A Kulottunga's general named Naralokavira who was a staunch devotee of the god Nataraja of Chidambaram is said to have done several things in the temple of the god. They included the thatching of the roof of the Perambalam with sheets of copper and the construction of 100-pillared **mandapa**, the **prakara** wall around the sanctum with two **gopuras**, the Sivakami Amman shrine, etc. This is known from a record found at Chidambaram.[12]

To Vikramochola (1118-1136 A D.), the son and successor of Kulottunga I, belong two or three inscriptions. Of these No. 304 and 314 of 1958-59, of the 7th and 10th year respectively are grants of land or tax to the temple. But the latter[13] contains the important information that the king visited Chidambaram. This king's tenth year historical introduction mentions that he did several works at Chidambaram using the contributions received from the conquered chiefs[14]. All the items are said to have been completed on the 15th April 1128[15]. These deeds included the building of the **prakara** around the **Chirrambalam**, thatching with sheets of gold of gateway, the hall, and the **balipitha**-shrine, etc. The above-mentioned **prakara** was called in those days as Vikramacholan-tirumaligai[16] In the 100-pillared **mandapa** of the temple 12 pillars bear the label **Vikramacholantirumandapam** which shows that this structure was also built by him.[17] These and other structures are stated in his inscription as having been done by his general Naralokaviran[18]. Thus "it seems probable that Vikramachola's buildings and gifts in Chidambaram were meant to complete an extensive remodelling of the temple, a remodelling begun by Naralokavira in the closing years of Kulottunga I's reign and

that this chieftain had much to do with the planning and execution of Vikramachola's projects in the holy city".[19]

Vikramachola's son and successor, Kulottunga II (1113-1146 A.D.) had his coronation at Chidambaram[20], and he is said to have "vastly improved and beautified" the city of Chidambaram[21]. He was a great devotee of the god Nataraja, and due to this, he is said to have removed the idol of the lying figure of Vishnu as Govindaraja.[22] The greatest achievement of this king is the part he played in inducing the great poet Sekkilar to write for him the holy book of **Tiruttondar-purana** or **Periyapuranam**, containing 4253 stanzas for which the god himself gave the first word **ulagelam** and which was written in the 1000-pillared **mandapa** of the temple. In spite of this, it is surprising that no inscription of his time has so far been discovered here. Several deeds of his connected with the beautification of the city, enlargement of the temple, and building of new and important additional structures in it are known chiefly from the works of his court poet Ottakkuttan. Of these the **Kulottunga-solan-ula**, "gives an elaborate account of the remodelling of the Chidambaram temple carried out by Kulottunga, ... including the construction of **gopurams** with seven tiers and the shrine of the goddess ... various parts of the temple and the city are also said to have been covered with gold"[23]. The poet's **Rajaraja-solan ula** and **Takkayagap-parani** record these facts more briefly. It is likely that several of these works started in his father's time were completed by Kulottunga II[24].

By the time of Kulottunga II the temple had had all its adjuncts except perhaps the outermost **prakara** wall and some of the **gopuras**. The reign of Rajaraja II, (1146-1173 A. D.), the son of Kulottunga II, is not marked by any records in this temple. This is also a surprising thing especially when we know through the poet of his time viz., Ottakkuttar that he was much devoted to the god Nataraja of Tillai[25]. Rajadhiraja II. (1163-1178 A. D.), the successor of Rajaraja II, was not the

latter's son. He was for a number of years assisting the latter before he began to rule independently. This ruler's period was mostly occupied with wars. Hence there was little time for him to engage himself in any construction activities in the temple at Chidambaram. In spite of this, two inscriptions (Nos, 559 and 560 of 1962-63), seem to belong to his time. Both of them are on slabs paved into the floor on the northern side of third **prakara** of the Nataraja temple. Of these No. 559, refers to an image of Tirujnanasambandhappillaiyar in the temple of Abhimuktisvaram-udaiyar, situated to the west of the (temple of) god Tillai-Vitankar in Perumbarrappuliyur. The other record refers to a gift for a lamp.

Kulottunga III (1178-1218 A. D)., the son of Rajaraja II, who succeeded Rajadhiraja II in 1178 A. D. was a great devotee of the god Nataraja. His rule extended over a long period of 40 years. His inscription in the temple of Kampaharesvara at Tribhuvanam (No. 190 of 1907) refers to this fact. Besides the same inscription, while enumerating the building activities refers to several things he did at Chidambaram, including the building of the **mandapa** in front of the shrine of Sabhapati (i. e., Nataraja), the **gopura** in the temple of Sivakami Amman, and the gilding of the **harmya** of the **prakara**[26]. Naturally a number of inscriptions of his time are available in the temple[27]. Almost all of them refer to some grant or the other for raising a garden or for providing for some **matha** like the **patanjalidevan tirumatha** mentioned in No. 333 of **A.R.Ep.**, 1958-59.

Tne reign of Rajaraja III (1216-1256 A D.) witnessed a lot of political trouble caused by the Pandyas on the one hand and the later Pallava chief Kopperunjinga on the other. In spite of this, he is known to have continued the royal patronage to the temple of Chidambaram. This is evidenced by the presence of a large number of inscriptions[28] of his time in the temple. But almost all of them register grants of land or cash for the raising of gardens etc. The rule of Rajendra III (1246-1279 A. D.)

the son and successor of Rajaraja III, was the last of the Chola dynsty. His reign-period saw gradually the eclipse of the dynasty. The Pandyas of Madurai conquered the Cholas and annexed the Chola kingdom to theirs. In this troubled time, Rajendra III was naturally more interested in trying to preserve his waning authorlty than in undertaking any building activity in Chidambaram or any other place. But a single inscription of his time (No. 334 of 1958-59) has been met with here though its contents are of little consequence.

From the time of Rajadhiraja II, the Chola kingdom was threatened by the Pandyas who were becoming gradually strong. The hostilities between the Cholas and the Pandyas continued in the 1: th century at the later half of which, the latter became supreme in the whole of South India. Three or four rulers of this dynasty are known to be associated with the temple of Nataraja, as they were also devotees of the lord. They included Maravarman Kulasekhara[29], Maravarman Vikrma[30], Maravarman Vira[31] and Jatavarman Sundara[32] as known from their inscriptions. Besides, inscriptions of three other rulers viz., Tribhuvanachakravarthi Konerinmaikondan Sundara[33], Tribhuvanachakravarti Konerinmaikondan[34] and Tribhuvanachakravarti Kulasekhara[35]. All these three rulers, or one or two of them, seem to be identical with one or the other of the above mentioned kings. Most of the records of these kings too contain information relating to the granting of land and tax, amounts for certain worship and offerings in the temple and for raising of gardens. Some of the records of these kings are engraved on the eastern and western **gopuras** of the temple under study. The inscription No. 338 of 1913 refers to Sundara-Pandya I, who had covered the Nataraja temple with gold and had performed the **tulabhara** ceremony in the temple[36]. The record No. 277 of 1913 belonging to the 13th year of Konerinmikondan Sundara-pandya perhaps identical with the same Jatavarman Sundara-pandya I, is of interest. It registers the foundation of a village and its details may be of interest. "The village granted was called Vikrama-pandya-chaturvedimangalam,

evidently after the name of an unknown brother or father (**nayanar**) of Sundara - pandyesvara similarly disignated. The village was intended to accommodate primarily 108 Brahmanas among whom were many well-versed in **vedas** and **sastras** and able to expound the same. Four **velis** of land were purchased for the village site and included within it the temple premises, the house - sites of the 108 Brahmanas mentioned above, of men who werc in charge of village library (**Sarasvati-bhandarattar**) and of other village servants (**panimakkal**). In purchasing the land with its trees, wells, paths, channels (?), embankments indicating land-divisions (**bhagasraya**) and all other benefits, the rights and privileges of the old tenants and title-holders were completely bought up. The right of way was secured for the Brahmanas to walk to the tank Kavarkulam every day for the purpose of performing the **sandhyavandana** prayers. Land for grazing the cattle was also provided for. Also for the maintenanace of the 108 Brahman families and others, were acquired $117\frac{3}{4}$-velis of land in the village of Rajasikhamaninallur alias Puliyangudi. The Brahmanas evidently received each a full **veli** of land. The following other **vrittis** were also settled:—teachers of **Vedas**, 3, teachers of **Sutras**, 1, two doctors, $\frac{1}{2}$, **ambadayas** (?), $\frac{1}{2}$, village accountant, $\frac{1}{2}$, drummer, $\frac{1}{4}$, potter, $\frac{1}{4}$, blackmith, $\frac{1}{4}$, carpenter, $\frac{1}{2}$, goldsmith. $\frac{1}{4}$ **irankolli**, $\frac{3}{8}$, barber $\frac{3}{8}$, washerman, $\frac{1}{4}$, village watch-man (**padi-kappan**), $\frac{3}{4}$, and the village servant, (**vettiyan**), $\frac{1}{8}$ Of the **natta** land outside the **agrahara** "Brahman" quarter, three parts were set apart for **Vellan-kaniyalar** and the grazing grounds, irrigation channels, uncultivable waste, embankments (?) of fields and pathways, included in thc village site were made over (to the donors) as per customary law. All taxes were excused but it was stipulated that from the 14th year of the king 500 **kalam** of superior paddy, was to be measured out every year to the temple at Chidambaram for conducting the **sandhi** of Ellandalaiyana-Perumal"[37]. The mention made of the library in this record is of interest. Probably the same library is referred to in a couple of other records (Nos. 168-69 of

1961-62). They "speak of some arrangements made for the organisation and administration of **Sarasvati-bhandara** (library) on the orders of Pallavadaraiyan. As the inscriptions are damaged only glimpses into the details of the records are available. The **Sarasvati-bhandara** seems to have been originally formed by Svamideva, and it was sought to be expanded. The records furnish a list of twenty scholars proficient in different branches of learning also were probably employed to copy down texts in Sanskrit and Tamil which when written down, were compared and checked. These details show the interest evinced in those times to maintain libraries with arrangements to copy important works. The work **Siddhantaratnakara** mentioned as one of the books in the library is evidently the same as the work of the same name said to have been composed by Somesvara or Isvarasiva, son of Udaiyar Svamidevar Srlkanthasiva".[38] The inscription No. 366 of 1913 belonging to the 29th year of the king Maravarman Tribhuvanachakravarti Kulasekharadeva, engraved in the west **gopura** of the temple, registers an order of Kalingarayan, providing for offerings to the god Kulottunga-sola-Vinayaka-Pillai, who is enshrined on the south side of the seven-storeyed **gopura** of Rajakkal-tambiran-tirumaligai.

